# கதாரத்னம்.

அறிவுக் குணவான

கதைகளடங்கியிருக்கின்றன.

OFFICE OF THE REGISTRAR [illegible] REGISTERED 2[illegible] MAR 191[illegible] MA[illegible]RAS

மதராஸ்

கதாரத்னாகரம் ஆபீஸில்

வெளியிடப்பட்டது.

1916.

[Copy Right.]

160725

இனாம்! மூன்று புத்தகங்கள் இனாம்!!

# வித்தியாநந்தர்.

~~~

## ...ன நடை நாவல்.

இவ் வினிய நவீனகம் படிப்பதற்கு வெகு இனிமையானது. விதிவழியாகத்தானே விதரணையாகச் சென்ற வித்தியாநந்தரின் நல்லொழுக்கத்தின் வெற்றியை ஒவ்வொருவரும் வாசிக்கவேண்டும். இதில் பொறுமை, சாந்தம் அடக்கம், நல்லொழுக்கம், நட்பு, கற்பு, முதலிய அரிய பெரிய விஷயங்கள். தத்ரூபமாய் காட்டப்பட் டிருக்கின்றன. வாசிக்கப் புகுவோர் புத்தகத்தை முடிக்கா முன்னர் திருப்தி யடையாரென்பது திண்ணம்.

இவ்வருமையும் பெருமையும் வாய்ந்த இச்சிறந்த புத்தகத்தின் விசேஷ குண மென்னையெனில், படிப்போருக்கு ஆங்காங்கு பக்தியையும், வியப்பையும்; மனோற்சாகத்தையும், ஆச்சரியத்தையும், கடைசியாக மடைதிறந்த வெள்ளம்போல் மகிழ்ச்சியையும் உண்டாக்கும். படாடோபமான விளம்பரத்தோடு வெளிவந்துலாவும் சில கற்பனைக் கதைகளைப்போல் இப்புத்தகத்தையும் கருதிவிடக்கூடாது. நலமே மிகுந்து குணமே சிறந்துள்ளது.

இப்புத்தகத்தை நாவல்களுக்கெல்லாம் மேலானதென்றே சொல்வது மிகையாகும். எப்படி யெனில் வித்வத்தில் சிறந்தும் வர்த்தகம் செய்வதில் திலமகன் திருமுகத்திலிட்ட திலகம்போல் விளங்கும் வணிக சிரோமணி யொருவர் இப்புத்தகத்தை வாசித்து மிகச்சந்தோஷித்து தன் வாடிக்கைக்காரர்களுக்குக் கொடுக்க ஏராளமாய் வாங்கியிருக்கிறார். இன்னும் இப்புத்தகத்தை அநேகமாய் பிரியப்பட்டு வாங்கிவருவதே இதன் மேலானகுணத்தை நன்கு விளக்கும்.

400 பக்கங்கள் கொண்டது, அழகான பைண்டுடன் சுத்தமான பதிப்பின் சுந்தரமும் கொண்டொளிர்கின்றது தபாற்செலவு உட்பட விலை ரூ. 1—4.

### இனாம் புத்தகங்கள்.

மேற்கண்ட புத்தகம் வாங்குவோருக்கு, வித்வான் நமசிவாய முதலியாரவர்கள் அயற்றிய 1 நளன், 2 குசேலன், 3 கம்பரும் சோழனும் இம் மூன்று புத்தகங்களும் சேர்த்துக் கொடுக்கப்படும்.

**அமிர்தம் அண்டு கோ.,**
தபால் பெட்டி 222,
மதராஸ்

THE SWADESAMITRAN POWER PRESS MADRAS

JL
O31m211,N15

உ

# சின்மய சிகாமணி.

ஓர் நூதன
தமிழ் நாவல்:

மதராஸ்
சுதாரத்னாகரம் ஆபீஸில்
வெளியிடப்பட்டது.
1916.

[Copy Right.]
~~~

# கதாரத்நாகரம்.

ஓர் மாதாந்தரப் பத்திரிகை.

---

வேடிக்கையும் விநோத

முமானகதைகளும்,

அறிவுக் குணவான

அற்புதமான நாவல்

களும், வெளியாகின்

றன.

வருட சந்தா ரூ. 1 8 0.

மாதிரி காப்பி இனாம்.

---

கதாரத்நாகரம் ஆபீஸ்,

162, பவழக்காரத் தெரு,

மதராஸ்.

THE SWADESAMITRAN POWER PRESS, MADRAS.

OFFICE ... MADRAS

ஸ்ரீ

கடவுள் துணை.

# கதாரத்நாகரம்

" கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி "

| | | |
|---|---|---|
| Vol 1 | MARCH 1915 | No 1 |
| தொகுதி—1 | 1915-ம் ஹு மார்ச்சு மீ | பகுதி—1 |

## தாய்நாட்டுச் சிறப்பும் அரசர் பெருமையும்

இப்பூமண்டலத்திலுள்ள நவகண்டங்களிலும் மேன்மையுற்றுப் பரதகண்டமென்று பெயர் பெற்ற இவ்விந்தியா தேசமானது புண்ணிய பூமியென்று ஒவ்வொருவரும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். பூர்வ ஜன்மத்தில் புண்ணியஞ் செய்திருந்தாலன்றி இந்தியாவில் பிறப்பதரிது. பரதக்கண்டமே ஞானத்துக்கு இருப்பிடம். தபோதனர்களாகிய மஹாரிஷிகள் அலைந்து திரிந்த இடம் இந்த இந்தியாதான். ஆத்மஞானம் இத்தேசத்தில்தான் முதன்முதலாக உண்டாயிற்று. இவ்வளவு சிறப்புள்ளதும் நிலமகள் திருமுகத்திலிட்ட திலகம்போல் விளங்கும் நமது தாய்நாடாகிய இந்தியா தேசத்தை சக்கரவர்த்தியாயிருந்து அரசு புரிய ஜயவீர ஜார்ஜ் மஹா மன்னர் சொல்லுதற்கரிய எவ்வளவு புண்ணியம் பூர்வத்தில் செய்திருக்கவேண்டும்! இவரன்றோ காணக்கூடிய தெய்வம்! இவர் எடுத்த காரியங்களும் தொடுத்த உபகாரமும் கைகூடாமற் போமா! நமது மன்னர்க்கு ஜயத்தையும் தீர்க்காயுளையும் எல்லாம் வல்ல இறைவன் அருளுவாராக!

# நமது பத்திரிகை

நமது ‘கதாரத்னகரம்’ என்ற பத்திரிகை நீடித்து இனிது நடைபெறும் வண்ணம் தகுந்த ஆகாரத்தைத் தேடுவதற்காக இவ்வளவு காலம் தாமதப்பட்டு வெளியாயிற்று. காலந்தோறும் புதிய பத்திரிகைகள் தோன்றி மறைவது போல் நமது பத்திரிகையையும் கருதிவிடாதிருக்கக் கோருகிறோம். ஏனெனில் சென்ற நாலுமாதமாக விளம்பரம் செய்ததில் சுமார் 500 சந்தாதார்கள் முன் பணம் அனுப்பியிருக்கிறார்கள். இன்னும் 1000-க்கு மேல் மாதிரிப்பத்திரிகையைப் பார்வையிட்டு வருஷ சந்தா அனுப்புவதாய் கடிதம் எழுதியிருக்கிறார்கள். இக்காரணங்கொண்டு இப்பத்திரிகை 2000 பிரதிகள் அச்சிடப்பட்டிருக்கிறது.

இப்பத்திரிகையில் வருகிற விஷயங்கள் தனிப்புத்தக ரூபமாகக்கூடியதால் பூர்த்தியாகும் ஒவ்வொன்றையும் புத்தகமாகச்செய்து கொள்ளலாம். பொங்குந் தமிழ்க் கடலில் ஆழ்ந்து கிடக்கும் அறிவுக்குணவான அரும்பெரும் விஷயங்களும், சம்ஸ்கிருதம் ஹிந்தி முதலிய பாஷைகளினின்றும் மொழி பெயர்த்த செவிக்கினிய கதைகளும் வெளிவரும்.

இப் பத்திரிகையில் முதலாவது சேர்க்கப்பட்டிருக்கும் தீர்த்த மகிமையும் மூர்த்திதெரிசன மேன்மையும் இரண்டாவதான சின்மய சிகாமணி என்பதும் இனி வரும் பத்திரிகைகளில் அதிகமாய் பக்கங்கள் சேர்க்கப்படும். அவைகளைச் சேர்த்துக் கடைசியில் புத்தகமாகச் செய்துகொள்ளலாம்.

J L
031 m21, N15 160925
N151

# விசேஷ வர்தமானங்கள்.

**நமது கதாரத்னகரம்:** பத்திரிகைக்கு ஒரு வருஷ சந்தா தொகை ரூபா 1—8—0 செலுத்துவோருக்கு ஸ்ரீமதி திருஷ்ணிகா என்னும் நாடகமாவது அல்லது குணசுந்தரி என்னும் நாவலாவது இனாமாய் அனுப்பப்படும்.

---

**கதாரத்னகரம் ஆபீசில்:** ஜனோபகாரமாயும் தமிழ் பாஷை அபிவிருத்தியாகும் பொருட்டும் தமிழ் பாஷையில் கிடைக்கக்கூடிய சாஸ்திரங்கள், புராணங்கள், கதைகள், நாவல்கள், நாடகங்கள் முதலிய அநேக புத்தகங்கள் விற்பனைக்குத் தயாராயிருக்கின்றன. வேண்டியவர்கள் இப்பத்திரிகையின் கடைசிப்பக்கங்களில்காண்க.

---

**நமது ஜார்ஜ் மஹா மன்னர்க்கு:** நடந்துவரும் யுத்தத்தில் ஜெயம் உண்டாகவேண்டுமென்று கடவுளைப் பிரார்த்திக்க மதராஸ் சைனாபசாரிலுள்ள (192 Esplanade) சில வியாபாரிகள் தங்கள் கடைகளை பிரதிமாதம் கடைசி ஆதிவாரந்தோறும் பூட்டி வைக்கிறார்கள். இவ்விதமாகவே ஒவ்வொரு ஊரிலுள்ள பெரிய வியாபாரிகள் செய்து வருவது நலம்.

---

**மெட்ராஸ் (மதராஸ்) பார்லிமெண்டு:** என்னும் பெயர் பூண்ட ஓர் சபை யேற்பட்டிருக்கிறது. இச்சபைக்கு அன்னிபெஸண்டு அம்மையார் காரியதரிசியாயும், மந்திரியாயும் ஏற்பட்டிருக்கிறார். இன்னும் சென்னையிலுள்ள சில புத்திமான்கள் கல்வி, தொழில் முதலிய ஒவ்வொரு விஷயத்தையும் அபிவிருத்தி செய்யக்கருதி அங்கத்தனராய்ச் சேர்ந்திருக்கிறார்கள்.

---

**தற்காலத்தில் நாவல் புத்தகங்கள்:** நூதனப்பெயரோடு வெளிவருகின்றன. சிலர் காலப்போக்குக்கென்று வாங்கி வாசிக்கிறார்கள். நற்புத்தியுண்டாகவும், உலகானுபவத்தை யறியவும் நல்லொழுக்கம் மேற் கொள்ளவும், மனதுக்கு உற்சாகத்தை யுண்டாக்கவும் சில நாவல்களை நாடுகிறார்கள். நாம் சில நாவல்களை வாசித்து சிறந்த புத்தகங்களைப்பற்றி இப்பத்திரிகை வாயிலாய் வெளியிட உத்தேசித்திருக்கிறோம்.

---

**வியாதிக்கு அநேக காரணங்கள்:** இருந்தாலும், அவைகளில் முக்கியமானவைகள் 6. (1) மிகுதியாய் ஜலத்தைப் பருகுதல். (2) நேரந்தவறி உண்ணல். (3) பகற்பொழுதில் நித்திரைசெய்தல் (4) இரவில் அதிக நேரம் விழித்திருத்தல் (5-6.) மலஜலத்தை அடக்குதல். இக்காரணங்களினால் தேகத்திலுள்ள கருவிகள் தத்தம் வேலைசெய்வதற்கில்லை இதனால் மனிதர் தேகப்பருமனின்றி பலஹீனராயிருக்கிறார்கள்.

---

**ஐரோப்பிய யுத்தம்:** சில மாதங்களாய் இடைவிடாது நடந்துகொண்டிருப்பதன் காரணமாய் இச் சென்னையில் அநேக பொருள்கள் ஒன்றுக்குக் கால்வீதம் அதிக விலைக்கு விற்கப்பட்டு வருகின்றன. இப்படியிருக்க வர்த்தகர்களோ வியாபாரம் நன்றாய் நடக்கவில்லை யென்று உத்தியோகத்திலிருக்கும் குமஸ்தா முதலானவர்களுக்கு சம்பளத்தைக் குறைக்க வேண்டுமென்று சொல்லுகிறார்கள் சிலர் குறைத்து விட்டார்கள். இப்படிச் செய்து விட்டால் உத்தியோகஸ்தர்கள் அதிக கஷ்டத்துக் குட்படு

வார்கள்' என்று சொல்லவேண்டுவ தில்லை.

---

ப்ரான்ஸிலும் பெல்ஜியத்திலும் சண்டை: உக்ரமாகவே நடந்து வருகின்றது. ஆனால் அங்கு தீவிரமான சண்டை யாரம்பமாவதற்கு இன்னும் சில மாதங்கள் செல்லும் "மே மாதம் சண்டை தொடங்கும்" என்று லார்ட் கிச்சனர் கூறுவதன் கருத்து இதுவே போலும். பிரிட்டிஷ் ப்ரெஞ்சு ஆகாயவிமானங்கள் நல்லவேலை செய்கின்றன. பிரிட்டிஷ் ஆகாயப்படைகள் ஆகாயத்திலும் நல்லவேலை செய்யக் கூடுமென்பதைக் காட்டிவிட்டன. "அலைகளை ஆள்கின்றது" என்று, புகழப்படும் பிரிட்டன் இனி ஆகாயத்திலும் ஆட்சி செலுத்துவதில் வன்மையுடைய தென்று கொண்டாடப்படும்.

---

ராஜப்பிரதிநிதி: இம்மாதம் 4-ந் தேதி வியாழக்கிழமைகாலமே ராஜப்பிரதிநிதி இப்போது ஹார்டிஞ்ச் பாலம் என்று பேர் கொடுக்கப்பட்டிருக்கிற ஸாரா பாலத்தை (Sara Bridge)த் திறந்து வைத்துவிட்டுக் கல்கட்டா போய்ச்சேர்ந்து அன்று மாலை லார்ட் ரிப்பன் உருவச்சிலையையும் லார்ட் மிண்டோ உருவச்சிலையையும் கல்கட்டா மைதானத்தில் திறந்து வைத்தார். பிறகு விக்டோரியா ஞாபகச்சின்ன மாளிகையைப் போய்ப் பார்த்தார். அவர் பரத்வான் மகாராஜாவுக்கும், மூர்ஷிடாபாத் நவாப்புக்கும், கல்கட்டா யூனிவர்ஸிடி வைஸ் சான்ஸலர் டாக்டர் சர்வாதிகாரிக்கும் பாரகப்பூரில் பேட்டி கொடுத்துப் பேசினார். அவர் கல்கட்டா யூனிவர்ஸிடி கான்வோகேஷனைசேரியிலிருந்து நடத்துவார்.

---

டாக்டர் மில்லரின் உருவப்படம் லேடி பெண்ட்லண்டால் திறந்து வைக்கப்பட்டது: ஸெனெட் ஹாலில் பலபேர்களின் மத்தியில் டாக்டர் மில்லரின் உருவப்படம் லேடி பெண்ட்லண்டால் திறந்துவைக்கப்பட்டது. அச்சமயம் H. E. லார்டு பெண்ட்லண்டு அக்கிராசனம் வகித்தார். டாக்டர் மில்லருடைய உருவப் படத்திற்கு அவருடைய நண்பர்களும் அவருடைய க்ஷேமத்தைக் கோருகிறவர்களும் பண உதவி செய்தார்கள். அப்பொழுது கவுன்ஸில் மெம்பர் ஆனரெபில் மிஸ்டர் P. S. சிவஸ்வாமி அய்யர், ஆனரெபில் ஸர்ஜான் வாலிஸ், ஆனரெபில் மிஸ்டர் J. H. ஸ்டோன், முதலில் பலர் வந்திருந்தார்கள். ராவ் சாகேஹப் T. ராமகிருஷ்ண பிள்ளை, டாக்டர் மில்லர் சென்னையில் உழைத்த உழைப்பைப் பற்றியும், அவருக்குத் தம் பழைய மாணவர்களின் மீதுள்ள அன்பு, நேசம் முதலியவைகளைப் பற்றியும், நீண்டதோர் உபந்யாசஞ் செய்தார் அதன் பிறகு H. E. கவர்னர், டாக்டர் மில்லரைப்பற்றி பின்வருமாறு பேசினார்:—சென்னை ராஜதானியைச் சேர்ந்த ஜில்லாக்களில் எங்கும், டாக்டர் மில்லரிடம் படித்த மாணவர்கள் இருந்து வருகிறார்கள் அவர்களில் சிலர் சென்னை சட்டசபை மெம்பர்களாயும் சிலர் நீதி ஸ்தலங்களில் ஜட்ஜுகளாயும் கலெக்டர்களாயும் வேறு பலர் பல இலாக்காகளில்சேர்ந்து கீர்த்தி பெற்றவர்களாயும் விளங்கி வருகிறார்கள்.

அதன் பிறகு கவர்னர், டாக்டர் மில்லரின் உருவப்படத்தைத் திறந்துவைக்கும்படி லேடி பெண்ட்லண்டைக் கேட்டுக்கொண்டார். லேடி பெண்ட்லண்டின்பெற்றோர்கள். டாக்டர் மில்லரின் பழைய நண்பர்கள் என்பதை கவர்னர் வெளியிட்டார். அந்த உருவப்படம் டாக்டர் மில்லரின் உருவத்தை ஒரு மயிரிழையும் பிசகாமல் ஒத்திருப்பதைக்கண்டு சந்தோஷங்கொண்டார்கள். ஆனரெபில் ரெவரெண்டு J. பிட்டன் டிரிக்கு கவர்னர் தம்பதிகளுக்கு வந்தனஞ் சொல்ல சபை கலைந்தது.



உ

ஓம் பரப்பிரம்மணே நம:

# தீர்த்த மகிமையும் மூர்த்தி தெரிசன மேன்மையும்

"எப்போ தகத்து நினைவார்க் கிடரில்லை
கைப்போத கத்தின் கழல்"

சூரிய பகவான் தனது கிரணங்களைப் பரப்பி சிறந்த பிரகாசத்தைத் தரத்தகுந்த நேரத்திற்கு முன் அருணோதய காலத்தில் வழக்கம்போல் நித்திரையை விட்டெழுந்த ரத்னாகரர் காலையிலியற்றும் வேலையைக் கிரமப் படிக்கு முறைமையாய் நடத்திப் பெருமை சேர் சபையில் அருமையாயமைத்த சித்திரமிலங்கும் உத்தமாசனத்தில் பக்தியோடிறையாம் கடவுளை ஸ்மரித்துப் பண்புடனமர்ந்திருந்தார்.

இவரிவ்வாறு தமதாசனத்தமர்ந்து கருத்தி லெம்பெருமானுடைய திருவடியைச் சிந்தித்து அடியேன் உலகுபகாரமாகவும் யானும் தன்யனாகக் கூடியதாயுமுள்ள சற்கருமம் புரியக் கருணை செய்யவேண்டுமென்று இரங்கிய மனத்தராயிருந்தார்.

இவரிவ்வாறு பரோபகார சிந்தையுடையவராயிருந்துகொண்டிருக்க நமது சுதாரத்னாகரம் என்னும் பத்திரிகைக்குச் சதா காலமும் சந்தா நேயர்களாகச் சேர்ந்திருப்பவர் பலரும் சேரப் பிரியமுற்று எதிர் பார்த்திருப்பவர் பலரும் இனிச் சேர விருப்பங்கொள்பவர் பலரும் இவைகளல்லாதவர் சிலருமாக கூட்டங் கூட்டமாக வந்து குவிந்தனர். இப்படி யேகோபித்து வருபவர்களை ரத்னாகரர் கண்டு

"அன்பின் வழிய துயிர் நிலை யஃதிலார்க்
கென்புதோல் போர்த்த வுடம்பு"

என்ற வாக்கியத்தில் அன்பின் வழிய துயிர்நிலை; அதாவது அன்போடு பொருந்திய உடலே உயிருள்ள வுடம்பாகும் என்றதைக் [illegible]ட நமது ரத்னாகரர் தற்காலத்தில் சிலர் தற்புகழ்தல், டம்பம், [illegible]துக்கள் நிந்தை, தர்ம மற்ற சிந்தையுடைய தமோகுணப் பிரபுக்கள்—மேலே சொன்ன நாயனார் திருவாக்கில்

அஃதிலார்க் கென்பு தோல்போர்த்த வுடம்பு (என்று சொன்னவாறு) அதாவது அன்பில்லாதார்க்குள்ள உடம்பானது எலும்பைத்

தோலினாலே போர்க்கப் பட்டால் எப்படியோ அது போன்ற உயிரற்ற பிணம்போன்ற உடம்பாகையால் அதைக்கொண்டு நடைப் பிணம்போல் திரிபவர் போலில்லாமல், அன்போடு அகமகிழ்ந்து முகமலர்ந்து இன் சொல்லுடன் எதிர் சென்று அவணுற்ற பலரையும் தனித்தனி முகமன் கூறி அவரவர்களுக்குத் தகுந்தபடி, வந்தனோபசாரஞ் செய்யக் கூடியவர்களுக்கு வந்தனோபசாரமும், ஆசீர்வதிக்கவேண்டியவர்களுக்கு ஆசீர்வாதமும் செய்து அனைவோரையும் அமரச் செய்தனர். அப்படியே யெல்லோரும் புளகாங்கிதமுற்று அதிக சந்தோஷத்தோடு சற்று மௌனமாய் அவரவர்களும் தங்கள் தங்களிஷ்ட தெய்வத்தையும் சற்குருவையும் நினைத்து ஸ்துதி செய்துகொண்டு எதிர் வீற்றிருக்கும் ரத்னாகரருடைய முகத்தை நோக்கிய வண்ணமாகவே யிருந்தனர். ரத்னாகரரும் அங்கு கூடியிருக்கும் சபையோர்களைப் பார்த்த வண்ணமாகவே யிருந்தார். இத்தருணத்தில் சபையி லுள்ளவர்களில் ஒருவர் எழுந்து அங்குள்ள யாவரையும் பார்த்துப் பின்வருமாறு சொல்லுகிறார்:—

சபையி லமர்ந்துள்ள பெரியோர்காள்! இன்றையதினம் இவ்விடத்தில் நாம் யாவரும் ஒருங்கு கூடும்படிச் செய்த நம் ஜெகதீசனுடைய திருவடிகளை நாமெல்லோரும் யேகோபித்து ஸ்துதி செய்வோமாக.

நம: பார்வதீபதயே நம:

கோவிந்த நாம சங்கீர்த்தனம்

கண்ணியம் நிறைந்த புண்ணியவான்களே! கருணையா லீசன் நிருமிதமாக்கிய ஜீவகோடிகள் எறும்புகடையாய் யானை முதலாயுள்ள எண்பத்து நான்கு லட்சம் என்பது யாவரு மறிந்ததே. இதில் ஒவ்வொரு ஜீவராசியும் தம் தம் சுகத்தை நாடியே ஜீவிக்கின்றதென்பது செவ்வனே விளங்குகின்றது; ஆனால் அவைகளுள் மானுடராகிய நம்முள் சுகத்தை விரும்புதல் மாத்திரமேயல்லாது சுகமின்னதென் றறிந்து அதை யடையக்கூடிய முயற்சி செய்து அடைந்தவர் பெரும்பாலும் இல்லையென்றே சொல்வதற்காகும். ஏனென்றால் ஜீவகோடிகளோ அனந்தம்; அவைகள் ஒவ்வொன்றும் செய்தொழில்களோ அனந்தம்; ஆகையால் அவைகளியற்றிய கர்மானுசாரப்படிக்குப் பிறப்பும் புத்தியும் அமைந்து முன்வினைக்கீடான கர்மத்தில் பிரவேசித்து விவேகசூனியமாய் சுகமல்லாத வொன்றைச் சுகமென நினைத்து ரமிக்கின்றன. பசையென்



பது கிஞ்சிற்றுமில்லாத வெள்ளெலும்பைக் கண்டு நாயானது அதிக ஆவலுடன் எடுத்துக்கடித்து அதில் சுவையுளதென்றும், பிறர் பார்த்தால் எவரேனுங்கைக்கொள்வரோவென நினைத்துத் தனியிடத்தில் கொண்டுபோய் வைத்தும் இன்னுமோ அதுபோல மானுடராகிய நாமும் சுகமல்லாததில் ரமிக்கின்றோம்.

ஒருவன் நினைக்கிறான்—நாம் இது சமையம் நல்ல திடமான காத்திரதேகம் படைத்து, திவ்யாலங்கிருத புருடனாயிருந்து தீரனென்று நாலுபேர் சொல்லப் பெருமை வாய்ந்த செயலோடிருந்தும் சுகம் என்பது கொஞ்சங்கூடக் கிட்டவில்லையே; இந்தக் கிரகத்தில் வயோதிகர்களாகிய மாதா பிதாக்களுடனும், வேங்கையை நிகர்த்த இல்லாளுடனும், வியாதியை யொத்த தாயாதிகளுடனும், காலனைப் போன்ற பாலர்களுடனும் கூடியிருந்து கஷ்டப்படுவதைப் பார்க்கிலும் இவர்களைத் துறந்துசென்று எங்காகிலும் தனியேயிருந்து கொண்டு சமையல்முதலிய பணிகளுக்கு ஓர்ஆளையேற்படுத்தி வைத்தும், யௌவனமுள்ள ஓர்பொதுமகளிரைச் சேர்த்து இன்ப நுகர்ந்தும், காலத்தைக் கடத்தி நம் வாணாளைப் போக்கிக் கொள்வதற்கில்லாமல் இவர்கள் மத்தியிலிருந்து கொண்டு நாம் சுகம் சுகம் என்றால் எப்படிக்கிட்டும்? ஒருக்காலும் கிட்டாதாகையால் நாம்இனி இங்கிருக்கக்கூடாதென நினைத்து தனக்கு வேண்டியதிரவியங்களைக் கைக்கொண்டு மனதுக்கிசைந்த விடஞ்சென்று எண்ணியவாறு செய்துகொள்கிறான். கொஞ்சகாலத்தில் முன்னிருந்த கஷ்டத்தைவிடப் பதின்மடங்கு துக்கத்தை அனுபவிக்க நேர்ந்து சுகமடையாது போகிறான்.

இன்னொருவன் நினைக்கிறான்—நமக்கோ தாய் தகப்பன் பெண்சாதி பிள்ளைகள் ஒன்றுங்கிடையாது. தனியன்—திரவிய முதலிய பொருள்களில்லாத தரித்திரன். தினம் கூலிவேலை செய்து கையினால் சமையல் செய்து சாப்பிட்டுக் கொண்டு கஷ்டப்பட்டுக் கொண்டிருக்க வேண்டியதிருக்கிறது. நம்வாணாளோ இவ்வளவு காலமிருக்கு மென்றில்லை. இவ்வாறிருக்க நாம் ஏன் கஷ்டப்படுதல்வேண்டும்; ஏதோ காலையில் எழுந்து செய்யவேண்டிய நித்தியகடனை முடித்துக் கொண்டு கையில் திருவோடேந்தி 4 வீட்டில் போய் 'பிட்சாந்தேகி' என்று பிச்சைவாங்கிப் புசித்து நல்ல காற்றுள்ள மரத்தினடியிற் போய்ப்படுத்துறங்கி யெழுந்து நாலு தேசமும் போய்ப்பார்த்து உள்ள நாளைச் சுகமாய்க் கழித்தல் நலமல்லவா? பிச்சையெடுப்பது

சிறுமையாகுமென்றால் ஒருபோதும் அவை சிறுமையன்று. ஔவையருளியபடி 'சங்கரனும் ஐயமெடுத்துண்டான்' என்றால் நம்போலியர்களுக்கு அதினால் யாதுகுறைவுளது ஒரு குறைவுமில்லையென்று எண்ணி, அவ்வாறு நடந்தும் அதிலும் கஷ்டத்தையே அனுபவிக்கிறான். எப்படியெனில் நித்திரையினின்றெழுந்தால் இன்று எங்கு போகலாம் யாரிடம் பிச்சை கேட்கலாம் தினம் இம்மாதிரி இருக்க இடமில்லாமல் திரிவதினால் உடம்பு வலியும் சௌகரியக்குறைவும் ஏற்படுகிறதே! பிச்சைக்குப் போகாவிட்டாலும் பசி வேதனை கொல்லுகிறது. போனாலும் பிச்சை தினம் அகப்படுவது கஷ்டமாயிருக்கிறது. இதற்கென் செய்வது என்று அதிக கஷ்டத்துக்குட்பட்டு சுகமென்பதைக் கைவிட்டு தட்டுக்கெட்டுத் தடுமாறித் திரிகின்றனன். இப்படியே திருடுகிறவனும் வியாபாரஞ் செய்பவனும் வேந்தனும் வேலைக்காரனும் கிரகஸ்தனும் இன்னும் எவ்வித முயற்சி செய்பவனும், ஞானியொருவனைத் தவிர மற்றெல்லோரும் தம் தம் மனதுக்கியைந்தவாறு நடந்து அவரவர்கள் செய்வதே சுகமெனக்கருதிச் சுகமல்லாதவொன்றைக் கடைப்பிடித்துக்கொண்டொழுகி நன்மையில் நின்றுந் தவறுகிறார்கள். இப்படித் தவறுகிறவர்கள் தனக்குத் தெரியாததொன்றைத் தெரிந்தவர்பால் வினவித் தெரிந்துகொண்டு நடக்கவெண்ணா தொழிகின்றனர். இவர்கட்குத் தெரியாததொன்றைத் தெரிந்தவர்பால் கேட்பதென்றால் வெட்கமென்பது முன் வந்து நிற்கிறது. இவனிடம் நாம் கேட்பதென்பது எவ்வளவு இழிவான காரியம்—பிரத்தியார் பார்த்தால் ஏளனம் செய்வார்களே நமக்கு மதிப்பு யாதுளது. நாமேயேன் தெரிந்துக் கொள்ளக் கூடாது என்றெண்ணி, யானை பார்த்த குருடர்களுக்குச் சமானமாகவே காலத்தை வீணில் கழித்து விடுகிறார்கள்; வேறு சிலர் பூர்வக்ஞானம் பெற்றவர் போன்று அன்றெழுதியவன் அழித்தெழுத மாட்டான்—எல்லாம் உள்ளபடி நடக்கும்—நம் செயலால் யாதுளது—எல்லாம் அவர் செயலே—அவனன்றி யோரணுவு மசைந்திடாது—கடவுளை நம்பினோர் கைவிடப்படார்—என்றும், மரம் வைத்த நாயன் தண்ணீர் வார்ப்பான்—என்றும் சொல்லித் திரிகிறார்கள். கையாலேலாத சில சோம்பேறிப் பிரபுக்கள் இரப்போர்க்கு வெண்சோறு பஞ்சமா-வென்று சொல்லிக்கொண்டு 'மனம்போன போக்கெல்லாம் போகவேண்டாம்' என்று பாட்டியார் சொன்னதை இவளொரு பெண் இவள் சொல்லியதைப் புருடனாகிய நாம் கேட்பதா வென்பதுபோல மனம்போனபடிக்கெல்லாம் நடக்கிறார்கள்; வேறு சிலர் கண்டதே காட்சி கொண்டதே கோலமெனக் கொண்டு திரிகிறார்கள். இப்படிப் பலர் பலவிதமாய் முயற்சி யற்றுச் சுகத்தை யடையாதவர்களாக விருக்கிறார்கள். ஆனால் எல்லோர்க்கும் பிரீதி சுகத்தின்பேரிலேயே யிருக்கிறது. சுகத்தை விரும்பாதார் ஒருவருமில்லை. சுகத்தை விரும்பிய ஒவ்வொருவரும் அதை அடையப் பெரியோர்களால் நடத்திக் காண்பிக்கப்பட்ட மார்க்கங்கள் பல விருக்கின்றன. அதில் யாதாவதொரு மார்க்கத்தைக் கடைப்பிடித்து அம்மார்க்கத்தைத் நாயனார் கூறியபடி



"ஒழுக்கம் விழுப்பந்தரலா னொழுக்க
முயிரினு மோம்பப்படும்"

அதாவது ஆசாரமானது உயிரினுஞ் சிறந்ததென்பது பொருள். உயிர்போலச் சிறந்த பொருள் யாதொன்றுமில்லை. அப்படியானாலும் அவ்வுயிர் நல்வினை தீவினை இரண்டிற்குங் காரணமாய் நின்று இன்பதுன்பங்களை வருவித்துக்கொள்கிறது. ஒழுக்கமோ அவ்வாறாகாமல் இன்பத்தை யுண்டாக்குதற்கே காரணமானதால் உயிரைப்பார்க்கிலுஞ் சிறந்ததாயிருக்கிறது. ஆகைபால் ஒழுக்கத்துடன் அனுஷ்டித்து அதற்கு வேண்டிய சாதனாதிகளைத் தெரிந்துகொண்டிருக்கிற பெரியோர் அல்லது குருவினிடம் சாஸ்திரமூலமாய்த்தெரிந்துகொண்டு சிரத்தையுடன் பழகிவரும் பக்ஷத்தில் எம்மார்க்கத்திலும் பேற்றை அதாவது அடையவேண்டிய சுகத்தை அடைந்து விடலாம்.

எந்த மார்க்கத்திலும் ஒழுக்கமென்பது இல்லையானால் அதாவது பெரியோர்களால் ஏற்படுத்தப்பட்டிருக்கிற வரம்புமீறினால் சுகமென்பது லவலேசமுங்கிட்ட மாட்டாது. ஒருவர் மச்ச[illegible] [illegible] ஒருவர் இல்லாளுடன் கிரகஸ்தாச்சிரமத்திலிருந்தும், ஒருவர் அடியா[illegible]ராய் தகப்பனுக்குப் பணிவிடை செய்தும், ஒருவர் அடியார்களுக்கு அன்ன மிட்டும், ஒருவர் பகவானுடைய நாமத்தை மறவாதபடி சொல்லிக்கொண்டிருந்தும், ஒருவர் பகவானுக்குத் தொண்டு புரிந்தும், ஒருவர் ராஜரீகஞ் செய்தும், ஒருவர் பகவானை நேசித்தும், ஒருவர் பூஜித்தும் ஒருவர் உபாசித்தும் பலனை யுபதேசித்தும், பக்தியைச்செய்து சுகத்தையடைந்திருக்கிறார்கள். இவைகளை எல்லாம் பக்தர்களிடத்திலும் நாயன்மார்களிடத்திலும் முன்னோர்களால்ஏற்படுத்தப்பட்டிருக்கிற புராண

இதிகாசங்களில் பரக்கக் காணலாம். இதை இங்குள்ள யாவரு மறியாததொன்றை யெடுத்துச் சொல்ல வந்தவனல்ல, யான். யாவருமறிந்த விஷயங்களையே நினைப்பூட்டும் வண்ணம் சிறிது எடுத்துக் கூறுதற்குத் துணிந்தனன். இதுகாறும் இங்குள்ள யாவர்களுடைய அபிப்பிராயத்துக்கும் விரோதமாக ஏதோ சிலதை உளறிக் காலத்தை வீணாக்கியதைப்பற்றிய பெரிய பிழையை யாவரும் சிறியேன் பேரில் கிருபை கூர்ந்து பொறுக்க மிகவும் வணக்கத்தோடு கேட்டுக்கொள்கிறேன். மனதிற் குறித்து வந்ததை நிறைவேறுதற்குத் தடையாக இவன் எது வெதையோ சொல்லிக்கொண்டிருக்கிறானென்று சிலருக்கு வெறுப்புண்டாகலாமாகையால் இனி சீக்கிரத்தில் என்னுடைய சிறிய விண்ணப்பத்தை சுருக்கிக் கூறிவிட்டு நிறுத்திக் கொள்கிறேன்.

இதோ நமது முன்பாக வீற்றிருக்கும் ரத்னாகரருடைய திருவாக்கால் நாம் கேட்கவேண்டிய விஷயங்கள் யாவையுந் தெளிவாகக் கேட்க விருப்புற்று நாம் எல்லோரும் இங்கு வந்து கூடியிருப்பதால் நம்மெல்லோருடைய மனதிலும் ஏற்பட்டிருக்கிற குறையை நிவர்த்திப்பதின் பொருட்டு ரத்னாகரர் தமது திருவாக்கினால் தீர்த்த மகிமையும், மூர்த்தி தெரிசன மேன்மையும்'' என்ற விஷயத்தை எடுத்துச்சாங்கோபசாங்கமாய் செவ்வனே விளக்கிக் கூறுவர். அதை நாம் யாவரும் ஒரே மனத்தராயிருந்து செவியுறக் கேட்டு அதின் மகிமையைத் தெரிந்துகொண்டு அவர் புகன்றவாறு அனுஷ்டித்து அதின் மூலமாய் சுகப்பிராப்தியுண்டாகுமாறு நடந்துகொள்ளல் வேண்டுமென்பதாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

தவிரவும் நமது ரத்னாகரர் எல்லோரிடத்தும் மிகுந்த அன்புடையவர். அவர் அன்பே ஓருருவெடுத்து வந்தார்போன்றவர். அவருடைய வாக்கிலிருந்து வெளிவருஞ் சொற்களோ மிகவும் இனிய மதுரமான சொற்கள். அவ்வினிய சொற்களினாலே அவர்மனத்தின் தன்மை இத்தகையதென யாவரு மறிந்துகொள்ளலாம். அவர் சாதாரணமாய்ப்பேசும் இனிய மொழிகளானது கேட்பவர் மனதைப் பண்படுத்து மென்றால் அவரால் விசேஷ நன்மை பயக்கும் காரியங்களை யெடுத்துச் சொல்லி நாமெல்லோருங் கேட்பதானால் அதின் பயனை நாமெவ்வளவினதென்று சொல்லத்தகும். இதுபற்றியன்றோ நாயனாரும்



"அகனமர்ந் தீதலி னன்றே முகனமர்ந்
தின்சொல னாகப் பெறின்"

அதாவது ஒருவன் முகமலர்ந் தினிய சொற்களைச் சொல்லுவானாகில் அது பிறருக்கு அகமலர்ந்து அவருக்கு வேண்டிய பொருளைக் கொடுத்தலினும் இனிதாம் என்று கூறியபடி நாமும் இவர்பால் 'தீர்த்த மகிமையும் மூர்த்தி தெரிசன மேன்மையும்' என்ற அரிய பெரிய விஷயத்தைக் கேட்பின் அதனாலடையக்கூடிய பெரும் பயனை யென்னென்று சொல்லலாம். இம்மட்டில் என்னுடைய விண்ணப்பத்தை நிறுத்திவிடுகிறேன் என்றார். (இவர் உட்காரவும் கரகோஷம் உண்டாயிற்று.)

பிறகு ரத்னாகரர் எழுந்து சபையோரைப் பார்த்து அறிவில் முதிர்ந்த ஐயன்மீர்! பெருமையிலுயர்ந்த பெரியோர்காள்! கல்வி கேள்விகளிற் சிறந்த கண்ணியர்காள்! நல்விவேகம் துற்ற புண்ணியர்காள்! அறம் வழுவாதியற்றும் அன்பர்காள்! ஸ்திர பக்தி வாய்ந்த செல்வர்காள்! சிறியேனை யொரு பொருட்டென மதித்து தீர்த்தமகிமையும் மூர்த்தி தெரிசன மேன்மையும் என்ற பெரியதோர் விஷயத்தை என்பேரில் பாரமாய் ஏற்றிக்கூறும்படிக்கு ஆஞ்ஞாபித்த கட்டளையைச் சிரசில் வகித்து சிவபெருமான் அருட்கிருபையாலும் குருநாதனுடைய அநுக்கிரகத்தினாலும் தங்களெல்லோருடைய தெரிசனபலத்தாலும் சிறியேன் எல்லாமறிந்த வல்லவர்களாகிய தங்கள் முன்னிலையில் என்னுடைய சற்குருநாதர் மேகம்போற் பொழிந்த உபதேசப் பிரவாகத்தில் கந்தை போன்ற வென் சிந்தையிற்றங்கிய வளவு இங்குரைக்கின்றேன். சிறியேனின் சிற்றறிவிற் கெட்டியவாறு செப்புதலிற் பிழையுளதேல் பெரியோர் பொறுக்க!

உலகில் பிரமாவினால் சிருஷ்டிக்கப்பட்ட ஜன்மங்கள் யாவற்றினும் சிறந்தது மனுஷிய ஜன்மமே. இம்மனுஷிய ஜன்மங் கிடைப்பதும் வெகு துர்லபம். இவை அநேக கோடி காலஞ்செய்த புண்ணிய கருமத்தின் பலனாகக் கிடைக்கக் கூடியது. சாமான்னியமாகக் கிடைக்கக்கூடியதல்ல. இதைப்பற்றி நம் தாயுமான சுவாமிகளும் ஓரிடத்தில்

எண்ணரிய பிறவிதனின் மானுடப்பிறவிதா
னியாதினும் மரிதரிது காண்
இப்பிறவிதப்பினா லெப்பிறவி வாய்க்குமோ
வேது வருமோ வறிகிலேன்

என்றும், நமது ஔவைப்பிராட்டி 'அரிது அரிது மானுடராய்ப் பிறத்தலரிது' என்றும் கூறியிருக்கின்றனர். ஏன் இம்மனுஷிய ஜென்ம மட்டும் அவ்வளவு மேன்மையென்றும் இது கிடைப்பது துர்லபமென்றுங் கேட்டால், இம்மனுஷிய சரீரத்தில்தான் நாம் அடையக்கூடியவை யாவையும் அடையலாம். மற்றெந்தச் சரீரத்திலும் அடைவதற்கியலாது; ஆகையாலிப்பிறவி கிடைத்தற்கரியது தான். கிடைத்தற்கரிய சரீரத்தைப் பெற்று அடையக்கூடிய பதவியை யடையாமல் வீணில் வாணாளை வீண் போக்குவதானால் அது மிகுந்த அறியாமையாகும்.

அவ்விதம் வாணாளை வீணாளாக்காமல் இப்பிறவி தப்பினாலெப் பிறவி வாய்க்குமோ வேது வருமோ வறிகிலேன் என்று ஷேடி சுவாமிகளே கூறியிருப்பதைக் கவனித்து செய்யவேண்டியவற்றைச் செய்து அடையக்கூடியதை அடைந்து விடுவது அவசியமானதால், நாம் ஒவ்வொருவரும் யார் யாருக்கு எது வெதிலிச்சை ஜனிக்கின்றதோ அந்த மார்க்கத்திலிருந்தே அவரவர்களுடைய குருவினிடத்திற் கற்கவேண்டியதைக் கற்று அவராஞ்ஞைப்படிக்கு எந்த நிலையில் நின்று அனுஷ்டித்து வருவோமோ அந்த நிலையிலே நின்று தவறாமல் அனுஷ்டித்துப் பேரானந்தப் பெருவாழ்வைப் பெற்றுப் பெருமை யடைவோமாக. அவ்விதஞ் செய்யாமல் வீணில் ஜீவித்து நரகவாதனைக் குட்பட்டு கஷ்டப்பட்டுக் கடைத்தேறுதற்கில்லாமல் கீழ்ப்போன ஜன்மங்களிற் பிரவேசித்தற்கு ஏதுவையுண்டாக்குவோமானால் அப்பேர்ப்பட்டவனுடைய கதி அதோ கதிதான். சரீரத்தைப்போஷிப்பதே நமது கடமையென நினைந்து சாண் வயிறை நிரப்புந்தொழிலை மேற்கொண்டிருப்போமாயின் அதுவும் நிரம்பாது. நாமும் சுகமடையப்போவதொருக்காலுமில்லை. இது நிச்சயம்; ஆனால் சரீர போஷணை கூடாதென முற்றிலும் சொல்ல வரவில்லை; அதுவே தொழிலாயும் தான் உஜ்ஜீவிப்பதற்கான வழியை நாடாமலுமிருப்பது கூடாதென இங்ஙனங் கூற வந்தனன்.

நாம் பேறு பெறுவதென்றால் அநேக மார்க்கங்களிருக்கின்றன. அதில் எந்தமார்க்கத்திற் பிரவேசித் தொழுகினாலும் பெறலாம். ஆனால் முக்கியமாய் ஞானமார்க்கமொன்றினால் தான் நேரே அதிசீக்கிரத்திலடையலாம். மற்ற மார்க்கங்களோ வெனில் நேரே முத்தியைச் சித்திக்கும்படி செய்ய வாற்றலற்றனவாம். பின் எவ்வித பலனை



மற்ற மார்க்கங்களளிக்குமெனில் ஞான மார்க்கமொன்றைத் தவிர மற்ற மார்க்கங்களெல்லாம் அநேக சித்திகளையும் உயர் பதவிகளையும் இம்மையிலின்பங்களையும் மறுமையில் போகத்தையும் கொடுத்து உயர் பிறப்பையளித்து சித்த சுத்தியுண்டாக்கி அதின் மூலமாய் விசாரம் பிறந்து பெரியோர் பாலடுத்து சிரவணஞ்செய்து மனனநிதித்தியாசன வாயிலாய் ஞானத்தை யடைவிக்கும். இந்த ஞானமே மோக்ஷத்துக்கு ஏதுவாகும். பொதுவாக எம்மார்க்கமும் நன்றே! ஞானமார்க்கத்தில் பிரவேசிப்பதென்றால் சுலபமல்ல. அநேக கோடி காலம் அநேககோடி ஜென்மங்கள் எடுத்து அவ்வவைகளிலும் நற்கருமம்புரிந்து புண்ணிய மிகுதியால் இம்மார்க்கத்திற் பிரவேசித்தற்கு இவனுடைய உள்ளமானது செல்லும். அவ்விதம் அவ்வழிசெல்வதற் கரிது. இதுபற்றியே கைவல்யக்காரரும்.

'நாதன விவேகியுள்ளம் நுழையாது
நுழையுமாகில்'

என்று கூறினர் ஆனாலும் மனுஷிய ஜென்மமெடுத்த நாம் ஒவ்வொருவரும் எந்தமார்க்கத்தை யனுசரித்தாவது முத்தியை யடைய வேண்டும். ஏனென்றால் இக்காயம் நீர் மேற்குமிழியை நிகர்த்தது. இது இந்த க்ஷணத்தில் தான் அழியுமென்று சொல்வதற்கில்லை. அடுத்தாற்போல் மனுஷிய ஜென்மமே நமக்குக் கிடைக்குமென்றும் எண்ணுவதற்கில்லை ஆகையால், இச்சன்மத்திலேயே நாம் பெறக்கூடியவற்றைப்பெற்று அடையக்கூடியதை அடைந்துவிட வேண்டும். நற்கருமம் புரிந்து புண்ணியத்தை யடையப் பல வழிகளிருக்கின்றன. அதில் இப்போது இந்தச்சபையிலிருப்போர்களால் ஆஞ்ஞாபித்தபிரகாரம் தீர்த்தமகிமையும் மூர்த்தி தெரிசன மேன்மையும் என்ற விஷயத்தைப் பற்றி யென் புல்லறிவுக் கியன்றவளவு கூறி வருகின்றேன். இங்குள்ள யாவரும் தங்கள் மனதைப் பஞ்சேந்திரிய வாயிலாய் விஷயங்களிற் பிரவர்த்திக்கச் செய்யாமல் ஒருமுகப்படுத்தி சுரோத்திரேந்திரியத்திலிருத்தி மிக்க அன்போடு ஆவலுடன் கேட்டு ஆனந்தித்து அங்ஙனே அனுபவித்தற்கும் முயற்சி செய்து அனுபவித்தல்வேண்டுமாய்க் கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள். அப்படியில்லாமல் ஒரு பக்கம் ஏற்று மறுபக்கம் வழிந்தோடும் புனல் போன்று இவ்விடம் உட்கார்ந்து கேட்கும் வரையில் இந்தப்படியே நாம் நடக்கவேண்டும் இனி வீண்காலங் கடத்திக் கொண்டிருப்பது தகுதியன்று எனப்பலவாறு எண்ணிக் கொண்டிருந்து விட்டு, எழு

ந்து போகும்போது கையைத் தட்டிப் போட்டு காதில் கேட்டதைக் கொட்டிப் போட்டுப் போய் விடுவது சரியன்று. கேட்டவளவு அனுபவத்துக்கு வராது போயினும் நூற்றில் ஒருபங்கேனுந் தவறாது கடைப் பிடித்தொழுகி எம்பெருமானுடைய கருணைக்குப் பாத்திரராகக்கடவோமாக;

தீர்த்தம் என்பதும் மூர்த்தி என்பதும் சாமானியமானதொன்றல்ல அவைகளை நாமடையவேண்டுமென்றால் எளிதிற்கிடைக்கமாட்டாது. இதுபற்றியன்றோ நாயனாரும்

தவமுந்த வமுடையார்க் காகுமவமதனை
யஃதிலார் மேற்கொள்வது

அதாவது முற்பிறப்பிற்றவஞ் செய்துள்ளவர்க்கே இப்பிறப்பிற் பலிதமாகுமெனக்கூறி யுள்ளாராகையால் அவை லகுவில் கிடைக்கமாட்டா. தீர்த்தங்களும் மூர்த்திகளும் அருளே திருமேனியாகவுருக்கொண்டு வந்த (இவ்வுலகத்தில் சகல ஜனங்களும் கடைத்தேறும் வண்ணம்) பெரியோர்களால் ஏற்படுத்தப்பட்டனவாகையால் அதின் மகிமையை இவ்வளவினதெனக் கூறுதற்கு நாம் சக்தரல்லவாயினும் தெரிந்தவளவு கூறிவருகின்றேன். இங்கு கூறுவதில்,

“ எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு ”

எனத் தெய்வப் புலமைத் திருவள்ளுவநாயனார் திருவாக்கின்படி பிறர் சொல்லுவதில் உண்மைப்பொருளை யறிவதே அறிவாகுமாகையால், தாங்களெல்லோரும் நான் சொல்வதில் நீரைப் பிரித்துப் பாலையுண்ணும் அன்னம்போன்று அசாரத்தை நீக்கிச் சாரத்தைக் கைக்கொண்டு கடைத்தேறுதல் வேண்டும். தீர்த்தமாடல் மூர்த்தி தெரிசித்தல் என்பவைகளில்,

“ உற்ற நோய் நோன்ற லுயிர்க் குருகண் செய்யாமை
யற்றே தவத்திற் குரு ”

அதாவது திரிகால ஸ்நானம், தேவரிஷி பிதிர் இவர்களுக்குத் தர்ப்பணஞ் செய்தல், சுகப் பிரயோசனத்தில் விருப்ப மில்லாமை, சம்சர்க்கமில்லாமை முதலான யாவும் மேற் கூறியதில் அந்தர்ப்பாவமா யமைந்துளதாகையால், சகல சற்குணமும் பொருந்திய சற்பாத்திர சம்பன்னனாய்ச் சாலோக சாமீப சாரூப சாயுச்சிய மென்னும் பதவிகளுக்கெல்லா மேம்பட்டும் தனக் கிணை யொன்றில்லாத [illegible] எந்த நிலையோ அப்பேர்ப்பட்ட பேரானந்தப் பெருவாழ்வைத் தரும் இந்த தீர்த்தமகிமை மூர்த்தி தெரிசனம் என்ற இரண்டும். ஆகையால் இப்போது அதை அனுசரித்த பெரியோர்களின் சரிதத்தை யெடுத்துச் சொல்லிக்கொண்டு வருகிறேன். எல்லோரும் கவனமாய்க் கேட்க வேண்டுமாய்க் கடையினேன் பிரார்த்தனை செய்து கொள்கிறேன்.

உ

# தீர்த்த மகிமையும் மூர்த்தி தெரிசன மேன்மையும்.

## கங்கை முத்தியடைந்த சரித்திரம்.

ஒப்பற்ற தண்டகாரண்ய வாசிகளாய் விளங்கும் நிருமேதனென்றும் பருச்சேபனென்றும் திருப்பெயர் புனைந்த இரண்டு முனிவர்கள் வானப்பிரஸ்தாச்சிரமம் பூண்டு நல்லொழுக்கம் பெற்று வசித்து வந்தார்கள். அவர்கள் ஒரு சமையம் உலகத்திலுற்ற புண்ணிய தீர்த்தங்கள் யாவற்றிலும் போய் ஸ்நானம் பண்ண வெண்ணங்கொண்டு ஆரண்யத்தை விட்டுப்புறப்பட்டு நடந்தார்கள். அக்காலை அம்முனிவரர்கள் காதில்பட நீங்கள் எத்தலத்தினுமிக்க மேன்மை பொருந்திய மாயூர நகரஞ்சென்று அங்கு மேவும் மாதேவனையும் மயிலுருவம் பெற்றுப் பூசித்து வரம்பெற்று அவர் பால் விளங்கும் அஞ்சனாயகியம்மையையும் போற்றி மாட்சிமை தங்கிய இடபதீர்த்தத்தில் மூழ்குதலே எல்லாப் புண்ணிய தீர்த்தங்களிலும் மூழ்கினதை யொக்கும் என்று ஆகாயவாக்குப் பிறந்தது. அது தெரிந்தவிருவரும் தங்களுள்ளத் தளவில்லாத மகிழ்ச்சி யெய்தி சீக்கிரமாக அந்த மாயூரம் போய்ச்சேரும் மார்க்கத்தைத் தெரிந்துகொண்டு அவ்வழியைப்பற்றி குதூகலத்துடன் நடந்து சென்றனர். செல்லுங்காலையிலோர் நாள் கொடிய சிந்தையுடைய பேய் ஒன்று அவர்களைப்பிடித்துத் தின்னவெண்ணங்கொண்டு அவர்களிடம் நண்ணியது. அப்பேயைக் கண்ட அவர்கள் வெருவி அது தங்களை யணுகாதிருக்க ஹுங்காரம் செய்தனர். அதன் பலனால் அப்பேய்க்கு ஓரறிவு அங்குரித்தது. நல்லறிவு பெற்ற வப்பேய் அம்முனிவரர்களது திருவடியிற்றாழ்ந்து ஐயன்மீர் என் வரலாற்றைத் தெரிவிக்கிறேன் சற்றுக் கவனமாய்க் கேளுங்கள்; நானே முன்பு வேதியர் குலத்திற் பிறந்தேன் கங்கையென்னும் பேரும் பெற்றேன். என் பிதா எனக்கு வயது ஏழு நிறைந்தவுடன் ஒரு மறையவனுக்குக் கன்னிகாதானம் செய்து கொடுத்தார். பன்னிரண்டு வயதில்

எனது கொழுநன் மரணமடைந்தான். விதவையான நான் வெறுப்படையாமல் பொருள் தேடுவதில் ஆசையுற்றேன். என் கிரகத்துக்கு வருபவர் உயர்ந்தவரானாலும் தாழ்ந்தவரானாலும் ஜாதிபேதம் பாராமல் பணம் வாங்கிக்கொண்டு அவர்களுக்கு அன்னமிடுந்தொழிலை வகித்து நடத்தினேன். அநேகம் பொருளைச் சம்பாதித்தேன். காசில்லாதவர்களுக்கு ஒரு பிடி சோறுங் கொடுக்க மனமிசைய மாட்டேன். இவ்வாறு பொருள் சம்பாதித்தும் தரும விஷயத்தில் ஓர் எட்டுணையாவது கொடுத்திலேன். தேனீயைப் போலப் பொருளைச் சேகரித்து வைத்து விட்டு எண்பதாவது வயதில் மரண மடைந்தேன். நான் செய்த தீவினையால் இந்தப் பேயுடம்பு பெற்றேன். தவமுனிவர்களே தங்களுடைய தரிசன விசேடத்தால் நல்லறிவுதித்து நின்றேன் என்று கூறி இனியும் இப்பாவந் தொலையும் மார்க்கம் பணித்தருளவேண்டுமென்று பிரார்த்தித்தது. முனிவரரும் அகமகிழ்ந்து இரக்கமெய்தி அப்பேயை நோக்கி நீயும் எம்மோடு வந்து சேர் என்று கூறினர். பேயுங் களித்த அன்பினோடு அம்முனிவரர் பின் சென்றது. மூவரும் நாடற்கரிய மாயூரம் சென்றதும் முனிவரர் பேயை நோக்கி நீ யிந்த இடப தீர்த்தத்தில் மூழ்கெனச் செப்பினர். அவர் பணித்தவாறே யப்பேயும் மூழ்கிற்று. மூழ்கினவுடனே பேயுருவமாறித் தேவருடம்பு பெற்று மாயூரவள்ளலைப் போற்றி தேவலோகங் காணி கொண்டமர்ந்து வாழ்ந்தது. அவ்விரண்டு முனிவரரும் வியப்புற்று உமாதேவியை இடப்பாகத்து வைத்தமரும் பெம்மான் அருளை வியந்து செப்புதற்கரிய பெரும்பயனளிக்கும் அவ்வற் புதப்புனலில் மூழ்கி நற்றவமுற்றோர் பெறும் பெருவாழ்வைப் பாகப் பிராட்டியொடும் போற்றிப் பூசித்து ஆங்கு பல நாள் வசித்தார்கள். இவ்வாறு அநேகநாள் தம்மடி டாவும் முனிவரர்களது பூசைக்கு மனமுவந்து மாயூரவள்ளற் பெருமானும் கருணையங் கடலாகிய அஞ்சனாயகி யம்மையும் இனிது சுரக்கும் பேரருளினாலே நின்மல முத்தி பெற்றுக் குலவுமானந்த வாழ்க்கையுற்று வீற்றிருந்தார்கள்.

திருச்சிற்றம்பலம்.

உ

# சின்மய சிகாமணி.

தேகாலயத்திற் சிதாகாச தேவதையை
யாகாய சாந்தி மலராலே—யேகாந்த
மந்திரத்தாற் பூசை செய்யும் மாதவரை யாதரித்துச்
சந்ததம்வாழ் வார்க்கார் சரி.

சிறந்த மலர்கள் சொரிந்து நறுமணம் பரிமளிக்கும் சௌமிய வன மத்தியில் இருதயாலயச்சாரலில் சின்மயமான குகையில் வசிக்கும் அறிவானந்த சாதுவின் முன்பு இரண்டுசிஷ்யர்கள் அவரைப் பலவாறு துதித்து அடிபணிந் தெழுந்து நின்று இருகரங் கூப்பி பின் வருமாறு கூறுவதாயினர் :—

சுவாமின்! தங்களுடைய தயவுக் கெதிர் நோக்கி அநேககாலமாய்த் திருத் தொண்டு பூண்டொழுகித் தங்கள்பாதசேவை செய்து வரும் எங்கள் கலி தீருவ தெப்போதோ யாங்களறிகிலோம். தங்களுடைய கருணையானது எங்களைப் பரிசுத்தமாக்குவதற்கு இன்னும் எங்களிடம் யாது குறையுளதோ; குறையுளதெனினும் அதை நிவர்த்தித்து எங்களைத் தன்யர்க ளாக்குதற்கான வாற்ற லுடையீராதலால் சிறுவரின்மீது கிருபை புரிந்து நாங்கள் கடைத்தேறும் வழியைக் கடாக்ஷித்தருளல் வேண்டும் என்பதாய் மனங்கரைந்து வேண்டினர்.

இவர்கள் தம் முன் குறையிரந்து கூறும் மொழிகளைச் செவியுறக் கேட்ட சாதுவானவர் மிகவும் பரிதாபமுடையவராய்த் தன்னுடைய பார்வையை அவர்கள்மேல் செலுத்தி அவர்கள் நிற்கும் நிலையையும் ஆவலான தீவிர வைராக்கிய சித்தத்தையும் தெளிந்த புத்தியையும் பார்த்து மிக ஆச்சரியப்பட்டவராய் இதுகாறும் இவர்கள் நம்மிடம் வந்து யாதொன்றும் தங்கள் வாயைத்திறந்து கேட்டவர்களன்று. நாமிடும் ஒவ்வொரு கட்டளையையும் வெகு பயபக்தியோடு செய்யக் கூடியவர்கள். நாம் கட்டளை யிடுமுன் தானாக யாதேனுமொன்றைச் செய்யவாவது கேட்கவாவது முன் வராதவர்கள். அப்பேர்ப்பட்ட இவர்க ளிருவரும் இன்றைய தினம் வலிய நம்மிடம் வந்து குறையிரந்தனர். இதை நோக்குமிடத்து ஏதோ ஓர் விசேஷமுளதாகவே தோற்றுகிறது என்று தனக்குளாலோசித்து சரி, இவர்களுடைய பூர்வ கர்மமும் இவர்களுக்கிப்போ தேற்பட்ட

ஆயுஸும் எவ்வாறிருக்கிறதென்பதைப் பார்க்கலாமென்று இருந்த
இடத்தே சட்டென்று நிஷ்டைகூடி ஞான திருஷ்டியால் நோக்கினர்.
அப்போது இவர்களுடைய கர்மானுஸாரத்தை யறிந்தவராயினர்.
அறிந்துகொண்டு பின்வருமாறு தனக்குள்ளேயே சொல்லிக்கொள்
கிறார்.

ஆஹா! உலகில் ஜீவர்கள் பலருக்கும் சரீர வீழ்ச்சி சமை
யம் ஒர்விதத் தெளிவு பிறந்து அச்சமயம் நல்ல ஞானத்துடன் பேசு
வர் சாந்தமுறுவர் என்று பெரியோர்கள் கூறுவர். அதுபோ
லிவர்களுந் தங்கள் சரீர வீழ்ச்சியின் சமயமாகிய இத்தருணம்
என்றுங் கூறாத வார்த்தைகளை இன்று கூறுவதாயினர். இவர்க
ளுடைய மரணகாலஞ் சமீபித்திருப்பதை நாமுங் கவனிக்காதிருந்து
விட்டோம். இன்னுங் கொஞ்சகாலத்திலிவர்களுக்கு ஞானோப
தேசஞ் செய்யவேண்டுமென் றுத்தேசித்த நமதெண்ணத்துக்குப்
பாத்திரராகாதபடிக்கு இவர்களுடைய கர்மம் தடைப்படுத்தி விட்
டது. இடையூறுண்டான போதினும் பரவாயில்லை. பின் சன்மம்
உத்தமமானதாயும் அதில் அடையவேண்டுவதை அடைவிக்கக்
கூடிய பிராப்தமிருப்பதால் அந்தச் சமயம் இவர்களுக்கு நாம் உப
தேசிக்கலாம். இந்த விபரங்களை யிவர்கட்கு இது சமையம் தெரி
விப்பதுங்கூடாது என்று தம்மனதினிலெண்ணி அடுத்தாப்போல்
அரைமணி நேரத்துக்கெல்லாம் நடக்கப்போகிற விருத்தாந்தங்
களை யறிந்தவராய் அவர்களைப் பார்த்து மிகுந்த கருணையோடு
சிஷ்யர்காள் நானிப்போது சொல்வதைச் சற்று கவனியுங்கள்.
அதாவது அதிகாரிகளின் பக்குவா பக்குவங்களை யறிந்து குரு
வானவர் சிஷ்யர்களுக்கு உபதேசிப்பர், அதிகாரி தீவிரதரனாக
இருப்பானேயாகில் அவனுக்கு ஒரே மொழியாற் காட்டாமற் காட்டி
டுவர். அந்தக் காலமும் அவரறிவர். அவர் காட்டாமற் காட்டிய
ஒரு மொழியை பக்குவனாயுள்ள சிஷ்யனுங்கேட்காமற் கேட்டுத்
தெரிந்து அதை அடைந்து கிருதார்த்தனாவன். அப்படி யிருக்கிறது
மகான்கள் அநுஷ்டித்து வந்திருக்கிற வழிகள். நீங்களோ அவசரப்
பட்டு விட்டீர்கள். இதுவும் உங்களுடைய சுயேச்சையல்ல. நீங்
கள் கேட்டுக்கொண்டதைப்பற்றி நானும் சந்தோஷப்படுகிறேன்.
இப்போது அநுஷ்டானத்திற்கு காலமாகின்றதால் சந்திர புஷ்கர
ணியிற் போய் ஸ்நான முதலியவை செய்து அநுஷ்டானத்தை
முடித்துக்கொள்ளுங்கள் என்று கூறினர்.



இங்கே இவர் சிஷ்யர்களை அநுஷ்டானத்தைமுடித்துக்கொண்டு
வாருங்கள் என்று சொல்லும் வழக்கமுடையவர் இப்போது முடித்
துக்கொள்ளுங்கள் என்று மாத்திரம் சொல்லியது யாதுகாரண
மெனின்; இப்போது இவர்களுக்கு வருமாபத்தினின்று மீட்டி இவர்
களுக்குபதேசிப்போமாயின் இவர்களிருவர்கள்தான் பயன்பெறுவர்.
இவர்களிருவர் மட்டும் பயனடைவதைப் பார்க்கினும் இனி இவர்
களோடு இன்னும் நேகர் நன்மையடையுங்காலம் சமீபத்திருப்பதை
யுணர்ந்தவராதலால் அவ்வாறு கூறினர். தவிரவும் ஊழ் அவ்விதமே
அமைந்துளது. அதை வெல்வது மரிது. இதுப்ற்றியன்றோ துவாபர
யுகவந்தத்தில் பாரதயுத்தம் நடக்கிற சமையம் பதினான்காம் நாள்
யுத்தத்தில் அருச்சுன குமாரன் அபிமன்யு தான் யுத்தசன்னத்தனாய்
புறப்பட்டு ரணகளஞ் செல்லுஞ் சமயம் தருமரிடம் விடைபெற்றுச்
செல்லும் வழக்கப்படி போய்க் கேட்க, தருமர் எப்போதும் போர்க்
களஞ் சென்று யாவரையும் ஜெயித்து ஜெயம் பெற்று மீண்டு வா
வென வாழ்த்துபவர் அன்றையதினம் விதியினனுஸாரமாய்த் தம்
முடைய மதியை விதிக்கு ளொளித்துச் சொல்லியதாவது—அப்பா
புத்திரா! இன்றையதினம் ரணகளத்தில் எதிர்த்து வரும் வீரர்
கள் யாவரையுஞ் செயித்து நமது கீர்த்தியை நிலைக்கும்படிச் செய்
சீக்கிரம்போ வென்று மாத்திரம் புகன்றனர். அது போல் அநேக
வீரர்களை மாய்த்து ஜெயமடைந்துங் கடைசியில் மீண்டு வாராமல்
மாண்டனன். அத்தன்மையாய் இங்கே அறிவானந்த சாதுவென
னுங் குருவானவர் இரண்டு சிஷர்களையும் அனுப்பினர்.

இருவரும் குருவின் வாக்கியத்தைச் செவியுறக்கேட்டு அதிக
சந்தோஷ சித்தராக அநுஷ்டானத்திற்கு வேண்டியவைகளை யெடு
த்துக்கொண்டு நமக்கு குருவின் அனுக்கிரகம் இன்று சபலமாகு
மென வெண்ணிக்கொண்டு மிகவும் சிரத்தையோடு அதி சீக்கிர
மாகப் புறப்பட்டு சந்திரபுஷ்கரணிபோய்ச் சேர்ந்து விதிப்படி ஸ்நா
னஞ்செய்து அநுஷ்டானத்தையுங்காலந்தவறாது முடித்துக்கொண்டு
இருவரும் நதியைவிட்டு ஆச்சிரமத்திற்கு திரும்பிவர நதியின்
கரைமீதேறி ஒருவர் முன்னும் ஒருவர் சற்றுப் பின்னும் வருகின்
றனர். முன் போனவர் கரையேறி யிறங்கினர். பின்னால் வருகிற
வர் இன்னும் கரை உச்சிக்குச் சற்றுக் கீழேயே வந்துகொண்டிருக்
கிறார். ஒருவரை யொருவர் பார்க்கக் கூடாதபடிக்கு கரை மறைத்
திருக்கிறது. இந்தச் சந்தர்ப்பத்தில் முன் போனவர் குருநாதர்

உன் பாதார விந்தமே கெதி செத்தேன் செத்தேனென்று ஓலமிட்டு
உயிரைத் துறந்தனர். இதைக்கேட்ட மற்றொருவர் விரைந்து
சென்று உச்சிக்கரை மீதேறி நோக்கச் சிநேகிதன் தலை சிதறியும்
உடல் முண்டமாயுமிறந்து கிடக்கக்கண்டார். அவரும் ஆ! வென்ற
லறிக்கொண்டு ஐயோ ஐயோ வென்று மல்லாந்தபடியே கரையின்
உச்சிமீது வீழ்ந்து தன் மார்பில் பட்டிருக்கிற அம்பைக் கையினால்
பிடித்த படியே குரு நாதா குரு நாதா தங்களை யண்டிய எங்களிரு
வர்க்கும் இக்கதி வரலாமா! மகா தேவா! சம்போ சங்கரா!
கங்காதரா! பராபரா ஆபத்பாந்தவா! கருணாகரா! காலகாலா!
இந்த வேளை வந்து உதவி செய்யலாகாதா! ஐயோ! ஐயோ!
ஜீவன் போய்விடும்போ லிருக்கிறதே! சற்குருநாதா குருநாதா
குருநாதா குரு குரு வென உயிர் நீங்கினர். திக்கற்ற பிணம்போல்
இருவரும் மாண்டு கிடப்பதைப் பார்க்க மிகவும் பரிதாபகரமே!

சுந்தர மிகுந்து கந்தபரிமளத்தைத்தருஞ் சந்தனச்சோலையும்,
மந்தாரை பிச்சி முல்லை முதலிய மலர்கள் புஷ்பித்தலங்காரந்தரும்
நந்தவனங்களும், தெங்கு கமுகு கூந்தற்பனை முதலியன வரிசை
வரிசையாய் அமைத்திருக்கின்ற சருவினங்களும், வாழை மரங்களி
னாலே கோட்டை யமைக்கப்பட் டிருப்பது போன்ற தோட்டங்
களும், தாழை யிருபுறமுஞ்செறிந்து விளங்கும் நீரோட்டங்களும்,
மயில் குயில் மாடப்புறா கவுதாரி,வான்கோழிகுக்குடம்,வாத்து முத
லிய பக்ஷிசாதிகள் தம்தம்பேடைகளுடன் உலாவிக்கொண்டு சப்திக்
கின்ற இனியசுரலோசைகளும் நிறைந்து பிரகாசிக்கிறதும், தாந்திமி
தத்தத்தோவென நிர்த்தனஞ் செய்யும்மாதர்கள் பலர் வாழுங் காந்த
னபுரியென்னும் பட்டணத்தை ராஜ்யபரிபாலனம் புரிந்து செங்கோ
லேந்துஞ் சிங்கேனுகிய சாந்தகுணசம்பன்னன் என்னும் அரசன்
ஓர்தினம் அதிகாலையில் அதாவது, சூரியோதயத்து முன் ஐந்து
நாழிகையளவில் நித்திரையினின்றும் நீங்கி காலை உபாதியை நீக்கிக்
கொண்டு தந்த சுத்திசெய்து கொண்டிருக்குஞ் சமையத்தில் ஓர்
இரைச்சல் காதுசெவிடுபட்டிடுமாறு கேட்டது. அதை[illegible]
யுற்ற மன்னன் சட்டென்றெழுந்து வாய்கைகால் முதலியன சுத்தஞ்
செய்துகொண்டு, நெற்றியில் எம்பெருமானுடைய விபூதியை உத்
தூளனமாகவிட்டுக்கொண்டு விரைந்து கொலுமண்டபம் வந்தனன்.
இதற்குள் மந்திரியுஞ் சேனாதிபதியும் அந்தச் சத்தங்கேட்டவுடன்
இருப்பது முப்பது குதிரை வீரர்களுடன் வந்து சேர்ந்தனர். இவர்



கள் யாவரும் ஒன்று கூடி இவ்வளவு பெரிய ஆரவாரம் யாது கார
ணத்தாலுண்டாயது இதை சீக்கிரமறிந்து வாருங்களென அரசனு
ஞ்ஞாபிக்க, மந்திரியேவுதலின் பேரில் இரண்டு மூன்று ஒற்றர்கள்
விரைந்து சென்றனர். இதற்குள் அநேக மனுஷியர்கள் வெகு வேக
மாயும் பெருங் கூச்சலுடனும் அழுதுபுலம்பிக்கொண்டு ஒருவர்பின்
னொருவராக அரண்மனையை நோக்கி ஓடிவருகிறார்கள். வருகிறவர்
களை ஒற்றர்கள்மறித்து,சங்கதி யென்னவெனக்கேட்டதை லட்சியஞ்
செய்யாது ஓடோடியும்வந்து கொலுமண்டபவாயலில் குவிந்தனர்.
அங்கு தயாராக வந்திருக்கும் அரசர் மந்திரி சேனாதிவீரர்கள் முத
லியவர்கள் முன்பாகநிலத்திற்படிந்து வீழ்ந்துவணங்கி சங்கதியென்ன
தென்று சொல்ல நாவெழாது விரைந்து வந்தகளைப்பினால் தேம்பித்
தேம்பி வாயைத்திறக்கிறார்களே யொழிய காரணமுரைத்தவர்க
ளல்லர். மந்திரியிவர்களை எவ்வளவு தேற்றியும் தேறுதற்கில்லை விப
ரமுந் தெரியவில்லை. சத்தமும் இருக்க இருக்க சாஸ்தியாகவே
கேட்கிறது. ஜனங்களும் அரண்மனையை நோக்கி ஓடிவந்துகொண்
டிருக்கின்றனர். ஜனங்களெல்லாம் இப்படிப் பரிதபிக்கிறதைப்
பார்த்த அரசன் மந்திரி முதலிய யாவரும் நெஞ்சயர்ந்து
கை கால் நடுக்குற்று வாய்குழறி சங்கதியென்ன தென்பது தெரி
யாமல் அங்குற்ற யாவரும். (கங்காதராமாண்டாயோ வென்று
கண்ணன் அழுததைப்பார்த்து அரசனும் அந்தப்புரத்திலும் கடை
சியாக ஊர்முழுவதும் அழுதுதீர்த்த கதையாக) அழவாரம்பித்து
விட்டார்கள். இதற்குள் காரணம் அறிந்து வரப்போன ஒற்றர்களி
லொருவன் ஓடோடியும் வந்து அரசனடிபணிந்து அரசே நகர்ப்
புறத்து வாழைத்தோட்டங்களில் ஓர் காட்டானை மதங்கொண்டு புகு
ந்து அழித்ததல்லாமல் நகரினுட் புகுந்தும் சில வீடுகளைத் தகர்த்து
எதிர் வந்த பலர்களையுங்கொன்று திரிகின்றது. அதினால் இவ்வ
ளவு அல்லோல கல்லோலமாக ஜனங்கள் பரிதவிக்கின்றனர் என்று
சொல்லி வாய்பொத்தி நின்றனன். இதைக்கேட்டவரசன் இன்னது
செய்வதென்பதைத் தெரிவிக்கச்சக்தியற்று நிற்பதையறிந்து மந்திரி
[illegible]னை சேனாவீரர்களுக்கெச்சரித்து யானையைக் கொன்று
[illegible]வேண்டுமென்று அவர்களை முன்னாடி அனுப்பி விட்டுத் தானும்
[illegible]தபாணியாகப் புறப்பட்டான். இதைப்பார்த்த அரசனும் அவ்
விதமே சித்தமாக, இதற்குள் அநேக சைனியங்களுந் தயாராய்
வந்து சேர்ந்தன. யாவரும் ஒன்று கூடிப் புறப்பட்டார்கள். முன்

போன குதிரை வீரர்கள் யானையை மறித்து கையிலிருக்கிற ஈட்டி
களினால் குத்தவே யானையும் வெகு கோபத்தோடு வந்த குதிரை
வீரர்களைச் சட்டை பண்ணாது எதிர்த்து குதிரைகளைத் தனது
துதிக்கையால் வாரித் தரையில் மோதி அநேகரகதி யாக்கியது.
இதற்குள் பொழுதுவிடியாமல் சற்றுஇருண்டிருந்ததால் அநேகதீவ
ர்த்திகளைக் கொளுத்திக்கொண்டு அரசனும் படையுடன் வந்து
சேர்ந்தனன். படைகள் வருகிற ஆர்ப்பாட்டத்தையும் தீவர்த்திகள்
கணக்கில்லாது அக்கினியைக் கக்கிக்கொண்டு வருவதையும் பார்த்த
யானை நகரை விட்டு வெளிக்கிளம்பிப் போக எத்தனித்து எதிர்ப்
படும் பாலர்கள் பெண்கள் ஆண்கள் முதலானவர்களையும் கையினா
லிழுத்துக் காலின் கீழ் வைத்து நசுக்கிக்கொண்டு விரைவாய்ச்
சென்று, போகும் வழியிலகப்படுவர்களிற் சிலரை மிதித்தும் சில
ரைக் கொம்பினாற் குத்தி மாய்த்தும், சிலர்கள் தலைமயிரைப் பிடித்
திழுத்துக் கீழே தள்ளியும், சிலரை வாரித்தூக்கி அப்புற மெறிந்
தும், சிலரைத் தூக்கி தரையிலடித்துக்கொன்றும், இவ்வாறு யாவ
ரையுஞ் சின்னாபின்னமாக்கி ஆரண்யத்தை நோக்கி அதிவேகமாய்ச்
சென்றது. அரசனுடைய ஏவுதலின்படி சேனா வீரர்களும் அதை
விடாது பின்பற்றி யெப்படியாவது இதைக்கொல்லாது விடுவதில்லை
யென்றே கோபித்துத் தங்கள் தங்கள் கையிலிருக்கிற ஆயுதங்களி
னால் எறிந்தும் குத்தியும் அடித்தும் இடித்தும் பற்களைக் கடித்துக்
கோபாவேசராய் மீசைகள் துடிக்கப் படபடத்துத் துடி துடித்
துக் களிற்றைப் பின்பற்றி யாவரு மொரே முகமாய் அதனைப் பல
விதத்திலும் புண்படுத்தினர். யானையுஞ் சகிக்காது சீறி முன்னை
விட மதம் அதிகமாய் மீறி சேனைக்குட் புகுந்து இரண்டு கொம்
பினால் கீறி மாறி மாறி அடித்து வேசாறி வந்தது. இவர்களு
மதை விடாது, துதிக்கைக் குட்படாது, மறுபடி நகர்க்குட்
சென்றிடாது, வனத்தையே நாடவிடுத்து, கனத்ததான பழு
வெடுத்துக் கையாலதனை யெறிந்து, துய்யகோடுகள் முறிந்து
நையவே யதனைப் புடைத்து தலை கொய்யவேணுமென்ற மனஞ்
சடைத்துப் போகாது தைரியமாகப் பின்னே யோடிச்சாடி யாவருங்
கூடி வீரக்கூத்தாடி விடாதே விடாதே யெனப்பாடி விரட்டும்போது
யானையும் அஞ்சாது, வீறிட்டு வனத்தையே நேரிட்டுச் சென்று,
அடர்ந்த செடிகளுட் புகுந்து மறைந்து, அதி வேகமாய் நடந்து
செல்லும் மார்க்கத்தின் பக்கங்களிலுள்ள மரஞ் செடி கொடி யிவை



களை யொடித்துப் போட்டுக்கொண்டே போயிற்று. இவர்களும்
அது போன வழியாகவே அநேகர் பின்பற்றிச் சென்றனர். குதி
ரை வீரர்களிற் பலர் வேறு குறுக்குவழியாக முன்னே போய் மறித்
தனர். யானையும் இவர்களைக் கண்டு ஓட இவர்களும் அதைவிடாது
பின்செல்ல இப்படியே வனமத்தியில் அதிகதூரம் சென்றனர். இச்
சமயத்தில் கீழ்த்திசைக் கடலில் ஏழுபரியுடைய தேரோன் இவர்கள்
அதிக நேரமாய் யானையோடு அமர் புரிந்து களைத்துப் பலங் குன்றி
இளைத்துப்போயினர், இனி நாம் இவர்கட்கு உதவி செய்யா திருப்
பது தகுதியன்று என்று இக்ஷணமே சென்று அவர்கட் குதவி
செய்வதே நன்று என்றெண்ணி இவர்க ளிருக்குமிடம் நண்ணிப்
பிரகாசத்தைப் பண்ணிப் பக்கத்துணையாக வருகிறேன் பயப்படாதே
யுங்க ளினி யென்று அவர்களுக் கபயஸ்தங் தந்ததுபோல் தனது
கைபோன்ற ஆயிரங் கிரணங்களையும் பரப்பிக்கொண்டு சூரியனும்
உதயகிரியிற் றோன்றினன். அந்த நேரம் யானையும் திரும்பிப்
பார்க்க சூரியனைக் கண்டு இதேது இதுவரைவந்த தீவர்த்திகளைப்
பார்க்கினும் எவ்வளவோ பெரிய தீவர்த்திகளைக் கொளுத்திக்கொண்
டும் அநேக கைகளை நீட்டிக்கொண்டும் ஏதோ ஒரு பெரிய சைனி
யங்கள் வருகின்றதே இனி நாம் இவர்களிடமிருந்து தப்புவதரிது.
நாமின்றைக்கிறப்பது நிச்சயம் என்று மனத்தி லெண்ணிக் கண்க
ளில் நீர் ததும்ப, கானக மத்தியில் கனவேகத்துடன் போய்க்கொண்
டிருக்கையில் சந்திர புஷ்கரணி யென்னும் நதிக்கரையைக் கண்டு
ஆகா! இந் நதியைக்கடந்து அக்கரை சென்றிடுவோமாயின் சேனை
கள் நம்மைப் பின் றொடர்ந்துவரச் சாத்தியப்படாது நின்றிடுவர்;
நாம் அந்தக் கரையி லிருக்கும் அடர்ந்த வனத்திற் போய் நமது
எதேச்சையா யிருந்து வாழலாம் என்னும் மிகுந்த களிப்புடன் ஆர
வாரித்துக் குதித்துக் கும்மாளமிட்டு வீரிட்டுக்கொண்டு விரைந்து
சென்றது. இதை யறிந்த சேனைகள் ஏது இந்த யானை நதியை
நோக்கி வெகு வேகமாய்ப் போய்க்கொண் டிருக்கின்றது. சற்று
நேரத்தில் நதியி லிறங்கி அந்தப்பக்கம் சென்றால் அதைப் பின்
சென்று போய் கொல்வதற்காகாது. ஏனென்றால், சந்திரபுஷ்கரணி
மிகவும் ஆழமுள்ளது. அதை நம்மாற் கடத்தற் கியலாது. ஆகை
யால் யானை அதைக் கடந்து செல்வதற்குள் கொன்றிட வேண்
டும் என்பதாய் யாவரும் ஒரே மனத்தராய் சமீபத்திற் சென்று
அவரவர்கள் ஆயுதங்களை வேகமா யெறிந்தனர். அரசன் றன்

கையில் வைத்திருக்கும் வில்லை நாணேற்றி அம்பு தொடுத்தான். ஒன்றன் பின் ஒன்றாய் அம்புகளும், பிண்டி, பாலம் ஈட்டி, வளைதடி, சுக்குமாந்தடி, எறி ஈட்டி, சூலம், வேல், முசலம், முதலியன போய் யானையின் முதுகிலும் காலிலும் துதிக்கையிலும் மத்தகத்திலும் வயிற்றிலும் பட்டுப் பெருங் கஷ்டத்தை யுண்டு பண்ணிற்றென்றாலும் அதையெல்லாம் சட்டை பண்ணாமல் நாம் எப்படியும் நதியைக் கடப்பதே முக்கிய மென்று ஓட அரசன் விடும் அம்பு மாரி அதின் மேற் பொழிய, அத்தருணம் யானை நதிக்கரையேற அரசன் மிகக் கடுமையாய் அம்பொன்றேவ யானை தன் முன் வருகிற மனிதன் சத்துருவானென வெண்ணி அவனைத் துதிக்கையால் காலைப்பிடித்து அந்த விடத்தில் அமைக்கப்பட்ட படிக்கல்லில் மோதியடித்தது. தலைசிதறியது. அரசன் எய்த அம்பும் குறி தப்பி சற்று உயரச்சென்று நதிக்கரை உச்சியின்மேல் ஏறும் மனிதனுடைய மார்பிற்பட்டு வீழ்த்திற்று. இச்சமையம் ஆவென்று பெருந்தொனி யொன்று அண்டகடாகம் வெடித்திடும் படி கேட்டது. யானை மெய்மறந்து நின்றது. அதற்கு முன்னால் முற்றத்துறந்த ஒருமுனிவர் தோன்றினார். சைனியங்களெல்லாம் அங்கு வந்து சூழ்ந்தது. யாவரும் வாயைத் திறந்து பேசுவதற்கில்லை. யானையும் அடியெடுத்து வைப்பதற்கில்லாமல் அப்படியே நின்ற நிலையில் நின்றது. முனிவர் பக்கத்தில் பிணங்கள் இரண்டு கிடக்கிற பரிதாபத்தையும் யானை நிற்கும் நிலையையும் சைனியங்கள் சூழ்ந்த காட்சியையும் ஒரு பிணத்தின் மார்பில்பட்டிருக்கிற அம்பையும் பார்த்து கோபக்குறிபோடு அம்முனிவர் அரசனை நோக்கினார். அரசன் முனிவர்வதனத்தையும் தன்னுடைய அம்பினால் ஒருவர் மாண்டு கிடப்பதையும் பார்த்து மெய்விதிர்த்து கைகால்நடுக்கமெய்தி நெஞ்சு படபடத்து மூர்ச்சை யுற்றவனாய் முனிவர் பாதத்தில் வீழ்ந்தனன். தன்னுடன் வந்த சைனியங்கள் பலரும் நின்ற நின்றபடியே தரையில் விழுந்து நமஸ்கரித்த வண்ணமாகவே யிருந்தனர்.

நாவலிஸ்டு **M. A.** நெல்லையப்பர்

# கதாரத்நாகரம் ஆபிஸில்

புராணம், இதிகாசம், கதை, நாவல், நாடகம் முதலிய தமிழ்ப்புத்தகங்கள் விற்பனைக்குத் தயாரா யிருக்கின்றன, ஒவ்வொரு புத்தகத்துக்கும் வி. பி. தபாற் செலவு பிரத்தியேகம். மலே நாடு ஆப்பிரிக்கா முதலிய வெளிநாடுகளி லிருப்போர் ஒரு ரூபாய் விலையுள்ள புத்தகத்துக்கு 4 அணா வீதம் தபாற்செலவையும் சேர்த்து மணியார்டராய் அல்லது போஸ்டல் ஆர்டராய் அனுப்பவேண்டும். சிங்கப்பூர், பினாங்கு, மலாகா (Stratis Settlements.) முதலிய விடங்களில் உள்ளவர்கள் வி. பி. மூலமாய் ஏற்றுக்கொள்ளலாம்:

## ஸ்ரீமத் பாகவதம்.

முதல் ஸ்கந்தம் முதல் நாலு ஸ்கந்தம் வரையில், மூலசுலோகம், ஸ்ரீதரீய வியாக்யானம், தமிழ் மொழி பெயர்ப்பு.
1200 பக்கங்கள் கொண்டது, உயர்ந்த காலிகோவினால் பயிண்டு செய்யப்பட்டு கில்டு அக்ஷரத்துடன் கூடியது. விலை ரூபா 6 0 0

## ஸ்ரீமத் பாகவதம் தசமஸ்கந்தம்.

ஸ்ரீமத் பாகவதமானது சதுர்வித புருஷார்த்தங்களுள் பிரதானமான மோக்ஷ சாம்பிராஜ்யப் பேறு பெறுவதற்கு இன்றியமையாத சாதனமாகிய பகவத் பக்தி புகட்டத்தக்க அறிய நூலென்பது யாவரும் அறிந்த விஷயம். இத்தகைய கிரந்தம் தமிழ் சம்ஸ்கிருதாபிமானிகளாகிய நம்மவர் ஒவ்வொருவர் கிருகத்திலு மிருப்பது அவசியம். ஸ்ரீதரீய வியாக்கியானத்துடன் மூல சுலோகம், அந்த மூலத்துக்கேற்பத் தமிழ் மொழி பெயர்ப்புடன் அச்சிட்டு தசமஸ்கந்தம் தயாராயிருக்கிறது. ராயல், சயிஸில் 1200 பக்கங்கள் கொண்டது. விலை ரூபா 6 0 0

## ஆனந்த ராமாயணம்.

இது வால்மீகி மகாரிஷியால் வடமொழியில் இயற்றப்பட்டது. இதில் வால்மீகி ராமாயணத்தில் இல்லாத அநேக விஷயங்கள் அடங்கியுள்ளன. ஸ்ரீராம ஜனனமும், வளர்ப்பும், சீதாதேவியினுடைய ஜனனமும், அத்தேவிக்குப் பல பெயர் வந்ததற்கு காரணமும் விளக்கியிருப்பது படிப்பதற்கு வெகு இனிமையாயிருக்கும். ஆனந்த ராமாயணமென்ற இதன் பெயருக்கொத்தபடி

படிப்போர் மனதிற்கு உற்சாகத்தையும், ஆனந்தத்தையும் உண்டாக்கு மென்பதில் தடையில்லை, உயர்ந்த காலிகோ பயிண்டு செய்யப்பட்டுள்ளது.

விலை ரூபா 5 0 0

## அத்யாத்ம ராமாயணம்.

ஸ்ரீய: பதியாகிய நாராயணன், ஸ்ரீராமனாக வதரித்து துஷ்ட நிக்ரஹ சிஷ்ட பரிபாலனஞ்செய்த சரித்திரத்தைக் கூறும் இந்த அத்யாத்ம ராமாயணம் பார்வதி தேவியாருக்கு பரமசிவனால் உபதேசிக்கப்பட்டது. இதில் ஸீதா ராமர்களின் சரித்திரத்தை வியாஜீகரித்து ஆத்மஸ்வரூபம் கூறப்பட்டிருக்கிறது. அத்யாத்ம ராமாயணம் என்னும் பெயரே இதனுடைய அளவற்ற மகிமையை வெளியிடுகிறது. உலகில் மதிப்பேறிய ஒவ்வொரு கிரந்தமும் புண்ணிய புருஷர்களின் சரித்திரத்தைக் கூறும் வியாஜமாய் படனசிரவணஞ் செய்கிறவர்களுக்குச் சித்த சுத்தியையும் அதன் மூலமாக ஞானத்தையும், ஞானத்தாலடையும் மோக்ஷத்தையு மளிக்கிறது; அவ்வித கிரந்தங்களில் இந்த அத்யாத்ம ராமாயணத்தை முதன்மையாகச் சொல்லலாம்.

கலியுகத்தில் கொடும்பாவம் செய்தவர்களுக்கு பரகதிகிடைக்கும் மார்க்கம் எந்த நூலில் கூறப்பட்டதென்று வினவிய நாரதருக்கு பிரமதேவர் இந்த அத்யாத்ம ராமாயணம் ஒன்றே அப்பரகதி செல்லு மார்க்கத்தைக்கூறுகிறதென்று சொல்லியிருக்கிறார். இவ்வித மஹிமை வாய்ந்த இந்த அத்யாத்ம ராமாயணம் ஏழுகாண்டங்களுள்ளது. இது தகுந்த ஸம்ஸ்கிருத பண்டிதரைக்கொண்டு தமிழில் மொழி பெயர்க்கப்பட்டு, தமிழில் வேதாந்த சாஸ்திரங் கற்றவரால் பரிசோதிக்கப்பட்டு, பண்டிதரேயன்றி பாமரரும், படித்துப் பயன் பெருமாறு எளிய தமிழில் எழுதப்பட்டுள்ளது. கிளோஸ்காகிதத்தில் முத்துக்கள்போன்ற அழகான அக்ஷரங்களில் பிழையறப் பரிசோதித்து அச்சிட்டிருக்கிறது.

இதில் இங்கிலீஷ் தமிழ்முகவுரை (By M. R. Ry. Dewan Bahadur A. Krishnaswami Aiyengar Avl. Retired Duputy Commr of Salt, Abkari, and Customs Dept.) யும், பிரம்மாண்ட புராணத்திலுள்ள அத்யாத்ம ராமாயணப் பிரபாவமும், விஷய அட்டவணையும், கடின பதங்களுக்குக் குறிப்புரை (foot notes) களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. உயர்ந்த காலிகோ பயிண்டுடன் கூடியது.

விலை ரூ. 2 8 0

## வசீகரி.

இனிய தமிழ்நாவல். இவ்வரிய நாவல் பிரக்யாதிபெற்ற ஆங்கிலேய வித்வசிரோமணிகளி லொருவராகிய மிஸ்ஸெஸ் ஹென்றிவுட் என்னும் மாதினால் கதா ரூபமாய் வரையப்பட்டுள்ள புஸ்தகங்களுள் சிறந்ததாகிய ஈஸ்ட்லின் என்னும் நாவலை யொட்டி எழுதப்பட்டது. இஃது சிற்றின்ப விஷயங்களை மட்டும் வெகுவாய் விரித்துக் காட்டி ஆத்மாவுக்கு நிஷ்பிரயோஜனமாய்ப் போகும் சில நூற்களைப் போன்றதன்று. இது விசேஷமாய் பெண்கள் தம் கற்பழிதலாலடையும் கஷ்டங்களை யெடுத்துக் காட்டி யுள்ளது. சிற்றின்ப விஷயங்களில் உழன்று திரியும் ஆண் பெண் உருவமெடுத்த ஆன்மகோடி ஞானத்துக்கும் பொருந்திய நூலெனக் கொள்வதே முறை. இக்கதையின் சாராம்சம் கற்பழிதலால் வரும் கஷ்டங்கள் மாத்திரமன்று; வீண்பெருமை, டம்பம், அளவுக்குமிஞ்சிய செலவு, ஆவல், அடாதகாரியத்தில் தலையிடல் ஆகிய இவற்றால் நேரிடும் கஷ்டங்களும் அடங்கி யிருக்கின்றன. இப்புத்தகம் கிரவுன் அளவில் 350 பக்கங்களுக்குமே லுள்ளது.

விலை ரூ. 1 0 0



---

# இனிய தமிழ் நாவல்கள்.

| | ரூ. | அ. | | ரூ. | அ. |
|---|---|---|---|---|---|
| தேவலோக கிரிமினல் கேஸ். | 1 | 8 | வெண்டாமரையாள் ... | 1 | 0 |
| வேதாந்த கிரிமினல் கேஸ் ... | 1 | 8 | வீரவர்மன் வெற்றி | | |
| தனபாலன் (2 பாகங்களும்) | 1 | 8 | 1-வது பாகம் ... | 1 | 0 |
| அயாஷா (2 பாகங்களும்) ... | 1 | 8 | 2-வது பாகம் ... | 1 | 0 |
| கமலாக்ஷி ... | 1 | 8 | அந்தப்புரரகசியம் ... | 0 | 14 |
| விஜயசுந்தரம் ... | 1 | 8 | கமலலோசனி ... | 0 | 12 |
| வித்யாநந்தர் ... | 1 | 4 | சத்தியவல்லி ... | 0 | 12 |
| ஞானாம்பிகை ... | 1 | 4 | சாரஸநேத்ரி ... | 0 | 12 |
| வசீகரி ... | 1 | 0 | ஐவன்ஹோ ... | 0 | 12 |
| வரத சுந்தரம் அலலது துப் | | | சுந்தரி மனோகரன் ... | 0 | 12 |
| பறியும் இரண்டு நக்ஷத்தி | | | சுமுகன் ... | 0 | 12 |
| ரங்கள் ... | 1 | 0 | ஞானகாந்தி ... | 0 | 12 |
| மதிகெட்ட மனைவி ... | 1 | 0 | பிரேமகாந்தன் ... | 0 | 12 |
| சந்திரோதயம் ... | 1 | 0 | பிரேமகலாவதீயம் ... | 0 | 12 |
| மதனகாந்தி ... | 1 | 0 | மீனாக்ஷி சுந்தரன் ... | 0 | 12 |
| மதனபூஷணம் ... | 1 | 0 | திக்கற்ற இருகுழந்தைகள் ... | 0 | 12 |
| ஞானசம்பந்தன் ... | 1 | 0 | சித்திரரேகை ... | 0 | 12 |
| காமேந்திரன் ஞானலோசனி | 1 | 0 | பத்மரேகை ... | 0 | 12 |
| சீதாராம் ... | 1 | 0 | லீலா ... | 0 | 12 |
| சுசீலா ... | 1 | 0 | இந்திரஜித்தன் ... | 0 | 12 |
| திரிலோக மோகனாங்கி ... | 1 | 0 | ஆனந்த சுந்தரி ... | 0 | 12 |
| தீர்க்கேச நந்தினி ... | 1 | 0 | கன்னியின் முத்தம் | | |
| மங்கம்மாள் அல்லது மது | | | 1-வது பாகம் ... | 0 | 12 |
| ரைக்கரசி ... | 1 | 0 | 2-வது பாகம் ... | 0 | 12 |
| மனோரஞ்சிதம் ... | 1 | 0 | சுந்தரன் ... | 0 | 12 |
| பிருதுவீராஜன் ... | 1 | 0 | ராஜாம்பாள் ... | 0 | 12 |
| ஜெயசீலன் ... | 1 | 0 | சந்திர காந்தா ... | 0 | 12 |
| [illegible]க்ஷி ... | 1 | 0 | மோகன சுந்தரம் ... | 0 | 12 |
| [illegible]தாம்பை ... | 1 | 0 | ஆனந்த கிருஷ்ணன் ... | 0 | 12 |
| பழமொழித் தொகுதி ... | 1 | 0 | அநுமான்லிங் ... | 0 | 12 |
| லண்டன் திருடர் | | | பனங்குளம் ... | 0 | 12 |
| (முதற் பாகம்) ... | 1 | 0 | ஸ்ரீமதி ... | 0 | 12 |
| ஷை இரண்டாம்பாகம் ... | 1 | 4 | கிருஷ்ணவேணி ... | 0 | 12 |



**FOUNTAIN PENS.**

உலகப் பிரசித்தமான
"பிளாக்பர்ட்"
என்னும்
பவுண்டன் பேனா.

சந்தேக மில்லாமல் சுளுவான விலையும் அதிக திருப்தியைக் கொடுக்கக் கூடியதுமா யிருக்கிறது.

விலை ரூபா 3-12-0.

இங்கிலாந்து விலை ஐந்து ஷில்லிங்கா யிருந்த போதிலும் அமிர்தம் அண்டு கம்பெனியார் இதை ரூபா 3-12-0-க்கு விற்கிறார்கள்.

பிளாக்பர்ட் பேனாவோடு கொடுக்கப்படும் நிப் சரியான பொன் நிப். மைக்கூடாய் பெரியது. மொத்தையாய் மை விழுந்து கனப் படுத்தாதபடி சரியானபடி சமமாய் இங்கு பாயத்தகுந்த ஏற்பாடுள்ளது.

நூற்றுக் கணக்கான பேனாவிலிருந்து தெரிந்தெடுக்கலாம். ஆயிரம் கணக்காய் மற்றவர்களுக்கு திருப்தி செய்தது போலவே உமக்கும் திருப்தியைக்கொடுக்க உத்தரவாதம் பண்ணுகிறோம்.

சந்தாதாரர்களுக்கு
மாத்திரம் விலை ரூ. 3.

அமிர்தம் & கோ,
தபால்பெட்டி, 222.
மதராஸ்.

**AMIRTAM & CO.,**
Post Box, 222, Madras.



## KATHARATNAKARAM.

An illustrated Tamil Monthly Largest circulation in India, Burma, Ceylon, Straits, Malay States, Fiji Islands, and South Africa.

**Subscription.**

| | | | | |
|---|---|---|---|---|
| Inland Yearly | Rs. | 1 | 8 | 0 |
| Foreign ,, | ,, | 2 | 0 | 0 |

**Rates of Advertisement.**

| | | | | |
|---|---|---|---|---|
| one page per Month | Rs. | 3 | 0 | 0 |
| Half a page ,, | | 2 | 0 | 0 |

**MANAGER,**
**Katharatnakaram Office,**
MADRAS.


### ஓர் வேண்டுகோள்.

இப் பத்திரிகையைக் கண்ணுறுவோர் விளம்பரக்காரர்களுக்கு கடிதம் எழுதும்போதெல்லாம் கதாரத்நாகரம் பத்திரிகையில் கண்டதாய் எழுதக் கோருகிறோம். ப—ர்.


### இனாம் இனாம்!

தேகாரோக்கியத்தைப் பற்றிக் கவலை யுள்ள ஒவ்வொருவரும் விலாசத்தை விபரமா யெழுதி அனுப்பினால் நாலணா விலையுள்ள "இன்பரகஸ்யம்" என்னும் சிறந்த புத்தகம இனாமாய் அ[illegible]ப்படும். இப் புத்தகத்தில் [illegible]லற வாழ்வில் கவனிக்கவேண்டிய அற்புதமான விஷயங்கள் வெளியிடப்பட்டிருக்கின்றன.

அமிர்தம் அண்டு கோ.
தபால் பெட்டி 222, மதராஸ்.


# ஸ்ரீ வேணுகான ரகஸ்யம்.

ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவானவர், ருக்மணி, சத்தியபாமை சமேதராய் துவாரகையில் வசித்துவரு நாளில் பகவான் தனித்திருந்து புல்லாங்குழலை ஊதி ஆனந்த மடைந்து கொண்டிருந்தார். இதைப் பார்த்த தேவிகள் இருவர்க்கும் மனத்தில் ஓர் சந்தேகம் தோன்றியது. அஃதென்னவெனில் முத்தங்கொடுத்து கொஞ்சி விளையாட நாங்களிருக்கும்போது புல்லாங்குழலையேன் கையில் வைத்துக் கொண்டு சந்தோஷப்படுகிறார் என்பதை நினைத்து ஒருவர்க்கொருவர் பேசிக்கொண்டிருந்தார்கள். இப்படி யிருக்கும்போது திரிலோக சஞ்சாரியாகிய நாரத மகா முனிவர் அங்கே விஜயஞ் செய்தார். இருவரும் உடனே எழுந்து நமஸ்கரித்து ஓர் ஆசனத்தில் அமரச்செய்தனர். நாரத பகவானும் அவர்களுடைய உள்ளக் கருத்தை யறிந்து, உங்கள் முகம் ஆழ்ந்த யோசனையோடிருப்பதாய்ப் புலப்படுகிறதே, எனக்குச் சொல்லலாமோவென்றார். அதற்கு ருக்மணி ஸ்வாமி! தாங்க ளறியாததொன்றில்லை. ஆயினும் உண்மையைச் சொல்லுகிறோம் எங்கள் சந்தேகத்தை நிவர்த்திசெய்ய வேண்டுமென்று பணிவாய்ச் சொன்னாள். அதற்கு முனிவரும் எனக்குத் தெரிந்தவரை சொல்லுகிறேன் என்றார். இதைக் கேட்டதும் ருக்மணி தேவியும் பகவானே! ஸ்ரீ கிருஷ்ண பகவான் சதாகாலமும் புல்லாங்குழலை வைத்துக் கொண்டு சுகானந்த மென்று நினைத்திருக்கிறாரே அந்தப் புல்லாங்குழல் எங்களைவிட சிலாக்கியமா அதனுடைய மர்மம் இன்னதெனச் சொல்ல வேண்டுகிறோம் என்றாள். அதற்கு ரிஷி சிரேஷ்டரான நாரதரும் அவர்களை நோக்கி அந்தப் பரம ரகஸ்யத்தை உங்களுக்குச் சொல்லுகிறேன். அந்தப் புல்லாங்குழல் உங்களைவிட மேன்மையானது, அதிக பாக்கியத்தைச் செய்தது. பகவானிடத்தில் மிகுந்த பக்தியுள்ளது. அது விஷயத்தை விரிவாய்ச் சொல்லுகிறேன் கவனமாய்க் கேளுங்கள் என்று சொல்ல ஆரம்பித்தார்.

ஸ்ரீ காசி க்ஷேத்திரத்திலே கலா சமுத்ரத்தை வாரியுண்ட விஸ்வநாத சாஸ்திரி யென்ற ஒரு பிராமணர் இருந்தார். இவர் சமஸ்தானத்தில் பிரதான சமஸ்கிருத பண்டிதர். இவருக்கு அருமையாய் ஒரு ஆண் குழந்தை பிறந்தது. அதற்கு கவிரத்னம் என்று திருநாமம் சூட்டி நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்த்து வந்தார். ஐந்து வயதாகியதும் அக்ஷராப்யாசஞ் செய்துவைத்து அந்நாளை வெகு சிறப்பாகக் கொண்டாடினார்கள்.

குழந்தைக்குக் கவிரத்னம் என்று பெயரிட்டிருந்தாலும் மந்தபுத்தியுடையது. இதனால் பிதாவானவர் அதிகாலையில் எழுப்பி கற்பிப்பது மேலெனக் கருதி அப்படியே செய்துவந்தார்.

ஸ்ரீ காசிமாநகரைப் பாராதவர் வெகு சொற்பமேயானாலும், அப்பெயரைக் கேளாதார் இரார் எனச் சொல்லலாம். திவ்ய க்ஷேத்ரங்களிலொன்று. விசாலமான வீதிகள், மாடமாளிகைகள் கூடகோபுர முதலிய கட்டடங்கள் ஆகாயத்தை அளாவியிருப்பதால் சாதாரணமாய் நிமிர்

| | ரூ. | அ. | | ரூ. | அ. |
|---|---|---|---|---|---|
| ராமலிங்கசுவாமி அருட்பா ... | 3 | 0 | இந்துபாகசாஸ்திரம் ... | 2 | 0 |
| பேரகராதி 20th Century Tamil Dictionary | 6 | 0 | சுந்தரமூர்த்தி தேவாரம் மூலமும், உரையும் ... | 3 | 0 |
| பழமொழி அகராதி ... | 2 | 0 | மனமோகனமாணிக்கம் ... | 1 | 4 |
| பக்தவிஜயம்உயர்ந்தபதிப்பு... | 3 | 0 | அம்பாலிகை ... | 0 | 12 |
| அராபிநைட்கதை படங்களுடன் ... | 2 | 8 | சச்சிதாநந்த சிவம் ... | 0 | 12 |
| கதாரத்னவளி ... | 2 | 8 | கம்பராமாயணம் செய்யுள் (2 வால்யம்) ... | 6 | 0 |
| குடும்ப சம்ரக்ஷணி ... | 2 | 0 | தக்காணத்து பூர்வகால கதைகள் ... | 0 | 8 |
| சூதசம்ஹித சாராமிருத வசனம் ... | 1 | 0 | தக்காணத்து மத்யகால கதைகள் ... | 0 | 8 |
| தேசாபிமானிகள்சரித்திரம்... | 0 | 12 | வேதாந்தப்பிரதீபம் ... | 0 | 10 |
| தியாகராஜ கீர்த்தனை ... | 1 | 4 | திரவியகுண ரத்னகரம் ... | 1 | 0 |
| மூவர்தேவாரம்பண்முறை ... | 3 | 0 | கந்தபுராணச்சுருக்கம்வசனம். | 0 | 8 |
| பக்தமாலா வசனம் ... | 3 | 8 | | | |

சில புத்தகங்களே அச்சிடப்பட்டன] ஸ்ரீ [தீவிரப்படுங்கள்! தீவிரப்படுங்கள்!

பாண்டுரங்காய நம:

# சர்வ மத சம்மதம்

## ஸ்ரீ மாந் கோயில் தேவராஜ ஸ்வாமி விரசித

# பக்த விஜயம்.

மஹாராஷ்ட்ர பாஷையிலிருந்த இந்த தாசர்களின் சரித்திரங்களை தஞ்சாவூரில் பிரக்யாதி பெற்றிருந்த துளஸி அய்யர் என்பவர் முதல் முதலில், திராவிடத்தில் காவ்ய ரூபமாக எழுதினார். அதை அநுசரித்து, எமது ஆசாரியராகி ஸ்ரீமாந்- கோயில்- தநால- தேவராஜ ஸ்வாமி என்பவர், தெலுங்கு பாஷையில் வசனமாக அநேக பகவத்கீதா வாக்யங்களுடனும் ஆசார்யர்கள் அருளிய அர்த்த விசேஷங்களுடனும், பிரமாணங்களுடனும், ஸ்தோத்திரங்களுடனும் எழுதி இருக்கின்றனர். இப்போது நாங்கள், அதை அநுசரித்தே, தமிழில், இனிய வசன நடையில் சந்தர்ப்பத்திற் குகந்தவாறு நாலாயிரம், பாகவதம், பாரதம், அஷ்டப் பிரபந்தம், குறள்முதலிய பல சிறந்தநூல்களிலிருந்து மேற்கொள்களைச் சேர்த்து நல்ல காகிதத்தில், முத்துப்போன்ற எழுத்துக்களால், எழுத்துப்பிழைகளின்றித் திருத்தமாய் அச்சிட்டு இருக்கின்றோம்.

இந்தப் புத்தகத்தில் அமைக்கப்பட்டுள்ள ஆப்டோன் பொட்டோப் படங்களைப்பார்க்கும்போது, அந்தந்த மூர்த்திகளை நேரில் தரிசித்ததுபோலவே இருக்கும். ஆகையால் இந்தப் புத்தகத்தை யாவரும் வாங்கி வாசித்து ஆனந்தித்து பகவத் பக்தர்களாக வேண்டுமென்று பகவானைப்பிரார்த்திக்கின்றோம். புத்தகத்தைப் பிரித்துப் பார்க்கும்போதே ஆனந்தம் உண்டாகும்.

விலை ரூபா 3-0-0 தபாற் செலவு 5. அணா.



நோயுங் கிடையாது. எரிகிறதுமில்லை.

விலையுயர்ந்த வஸ்துக்களால்

தயார் செய்யப்பட்ட

# ரோம சங்காரி
# மஹாராஜா ஸோப்பு.

ரிஜிஸ்டர் நெ. 37 பாருங்கள்.

இந்த சோப்பின் மேன்மையான குணங்களைப் பற்றி இராஜாக்களும் ஜமீன்தாரிகளும் சுகமாக இதை உபயோகப்படுத்திக்கொண்டு வருகிறார்கள். இதன் முக்கியமான குணங்கள் யாதெனில், ரோமத்தை நீக்கவேண்டிய இடத்தில் ஜலத்தினால் சுத்தம் செய்து இந்த சோப்பை 5 நிமிஷகாலம் தேய்த்துவிட்டு பிறகு துணியினால் துடைத்துவிட்டால் அந்த இடம் மிருதுவாய்விடும். நோயும் எரிச்சலும் உண்டாகிறதில்லை.

ஒருதரம் உபயோகித்தவர் இதர சோப்பை உபயோகிக்க மாட்டார்கள்.

விலை 3 கேக்கு உள்ள பெட்டி 1-க்கு ரூபா 1-0-0 தபால் சார்ஜ் அணா 0-4-0 3. பெட்டிகளுக்கு ரூபா 2-10-0

## அழகான புட்டி பரிமள மிகுந்த செண்டுகள்.

| | | | |
|---|---|---|---|
| செண்டு ஆட்டோ மோஹினி ஒரு டிராம் புட்டி | 0 | 12 | 0 |
| டை ½ அவுன்ஸ் | 2 | 0 | 0 |
| ஆபீஸ் மல்லியப்பூ ஒரு புட்டி | 1 | 4 | 0 |
| ஆபீஸ் குல்பகார் டை | 2 | 0 | 0 |
| ஒட்டோ டில்லாரம் டை | 1 | 8 | 0 |
| கஸ்தம்பா அத்தர் | 1 | 0 | 0 |
| ஆபீஸ் ரோஸ் | 1 | 0 | 0 |
| ஆபீஸ் கஸ்தூரி | 1 | 4 | 0 |

மேற்கண்ட பாட்டில்கள் அழகான ஜெர்மன் டியூபில் பாக்பண்ணியிருக்கிறது. பரிமளவாசனை தரத்தக்கது.

வேண்டியவர்களுக்கு காட்லாக் இனாமாய் அனுப்பப்படும்.

R.V. பண்டிட் அண்டு கம்பெனி.

நெ 6 பந்தர் தெருவு, மதராஸ்.

# எல்லோருக்கும் முக்கியமானது.

கீழ்க்கண்ட எங்கள் விலாசத்திற்கு எழுதினால் உங்களுக்குச் சென்னைப் பட்டணத்திலிருந்து எந்த விதமான சாமான்கள் வேண்டியிருந்த பொழுதிலும் வாங்கி அனுப்புவோம். எங்களிடத்தில் மிகவும் உயர்ந்த சாமானாய் குறைந்த விலைக்கு அகப்படுகிறவைகள் பின்வருமாறு.

1. நாற்காலி மேஜை முதலிய சாமான்கள்
2. பென்ஸில், பேனா, புஸ்தகம் முதலிய ஸ்டேஷனரி சாமான்கள்.
3. கியாதிபெற்ற பேடன்ட் மருந்துகள்
4. மருந்துகளெல்லாவற்றிலும் உயர்ந்ததும் தலைவலி, ஜலதோஷம், படை, சிரங்கு, காயம் முதலியவைகளை கொஞ்ச நேரத்தில் ஸ்வஸ்தப்படுத்துகின்ற Elizir Balm "எலிச்ஸர் பாம்" புட்டி 1-க்கு விலை அணா 6 தான். டஜன் ரூபா 4-0-0



5. சிறந்த ஹார்மோனியங்கள் ரூபா 17 8 0
6. ஸ்ருதி பெட்டி ரூ 7 முதற்கொண்டு
7. ஹார்மோனியம்வாசிக்க உபாத்தியாய ரில்லாமல் தானாகவே சொல்லிக் கொடுக்கும் (Harmonium Self Iustructors) புஸ்தகம் (தமிழில்) ரூபா 2—0—0

பவுன்டன் பேனாக்கள் 14-காரட் தங்கநிப் உடையவைகள் ரூபா 1—8—0 முதற்கொண்டு

குழந்தைகள் கைவண்டிகள் ரூபா 18 முதற்கொண்டு

மூன்று சக்கிரமுள்ள சைகில்கள் ரூபா 15 முதற்கொண்டு

ஸ்டவ்கள் (சுகமாய் சமைக்கலாம்) ரூபா 5 12 0 முதற்கொண்டு

புது பிரிட்டிஷ் மேக்கர் பைஸிகில்கள் ரூபா 55 முதற்கொண்டு

எங்களிடம் நல்ல மாதிரியான பல ரகங்கள் ஷர்டிங் துணிகள் (Shirting Cloths) இருக்கின்றன. கழுத்து அளவு எழுதினால் மகாராவில் ஷர்ட் தயார் செய்து அனுப்பப்படும். ஒரு தடவை வாங்கிப்பாருங்கள்.

ரிப்ளை கார்டாவது அரையணா ஸ்டாம்பாவது அனுப்பப்பட்டால் ஒவ்வொரு கடிதத்துக்கும் சீக்கிரத்தில் பதிலளிக்கப்படும்.

**MADRAS STORES SUPPLYING AGENCY,**
**15, BRODWAY, MADRAS.**

*Telegraphic Address:* EVERYTHING,


PRINTED AT THE SWADESAMITRAN POWER PRESS MADRAS.


இனாம்! இனாம்!! இனாம்!!!

# கதாரத்நாகரம்.

மனதை மகிழ்விக்கும்
ஓர்
மாதாந்தரப் பத்திரிகை.

இப்பத்திரிகையில் இனிய கதைகளும் அறிவுக்குணவான அற்புத விஷயங்களும் வெளியாகும். இப்பத்திரிகைக்கு ஒரு வருஷ சந்தா தொகை ரூ. 1—8—0 செலுத்துவோருக்கு கீழ்க்கண்ட புத்தகங்களில் ஒன்று இனாமாய்க் கொடுக்கப்படும்.

| மிருகதிருஷ்ணிகா. | குணசுந்தரி |
|---|---|
| இந்த நாடகம் டுவல்த் நைட் என்னும் ஆங்கில நாடகத்திலிருந்து தமிழில் மொழி பெயர்க்கப்பட்டது. நல்ல கடுதாசியில் அச்சிடப்பட்டிருக்கிறது. | அல்லது இல்லற போக்கிஷம். இப்புத்தகத்தில் இல்லறத்துக்கு வேண்டிய அரும் பெரும் பாக்கியங்கள் பொதிந்து கிடக்கின்றன. |

மானேஜர்,
"கதாரத்நாகரம் ஆபீஸ்"
162, 163, பவழக்காரத்தெரு, சென்னை.

## ஆட்டோவீனஸ்

என்னும் சென்டானது அல்லி, அசோகு, நீலோர்பலம் பாரிஜாதம், செண்பக மென்னும் பல திவ்விய புஷ்பங்களின் வாசனையுடன் பல ஐரோப்பா கண்டத்திலுள்ள அருமையான நறுமணம் வீசும் மலர்களின் சாரத்தால் உபயோகிப்பவர்களின் மனதை யுற்சாகப் படுத்துவதுடன் அருகிலுள்ளவர்களுக்கும் ஆனந்தத்தைக் கொடுத்து மற்ற செண்டுகளை விட மேன்மை யுடையதாகவிருக்கும். இது எங்களால் சீமையி லிருந்து நேரில் வரவழைக்கப்பட்டது.

அழகான திருகலையுடைய நிக்கல் புட்டி 1-க்கு ரூபா 0—10—0

வீனஸ் அண்டு கம்பெனி,
இங்கிலீஷ் மருந்து வியாபாரி,
157, 158, பிராட்வே, சென்னை.

# ஸ்ரீ பக்தமாலா வசனம்.

## வட இந்திய பக்திமான்கள் சரித்திரம்.

வடதேசத்தில் மஹீபதிபாவா என்னும் மகானொருவர் பக்த விஜயம், சந்த விஜயம், சந்தலீலாமிருதம், பக்த லீலாமிருதம் எனப் பெயர்வாய்ந்த பக்த சரித்திரங்களை. மகாராஷ்டிர பாஷையிலும் தமிழிலும் வல்லவரான ஸ்ரீமான் வே. பாலகிருஷ்ண முதலியார் என்னும் பக்திமானொருவரால் நம் தமிழ் நாட்டுக்குப் பயன்படும் வண்ணம் தமிழில் அவற்றை மொழிபெயர்த்து நல்ல காகிதத்தில் எழுத்துப் பிழைகளன்றி திருத்தமாய் அச்சிட்டு இருக்கின்றோம். இதனை வாசிப்பதினால் தெய்வ பக்தி, அடியார் பக்தி, வைராக்கியம், நல்லொழுக்கம் முதலியன இருபாலர்க்கும் செவ்வன உண்டாகும் இது டிம்மி 760 பக்கங்கொண்ட பெரிய கிரந்தமாகும். இதில் 183 பக்தர்களின் சரித்திரங்கள் அடங்கி யிருக்கின்றன. ஆகையால் இந்த நோட்டீசைக் கண்ணுறும் கனதனவான்கள் சிறுவர் சிறுமியர் யாவரும் இந்தப் புத்தகத்தை வாங்கி வாசித்து மகா பாதகங்களையும் போக்கி நல்லறிவு கொடுத்துப் பரம கருணாநிதியின் கருணைக்குப் பாத்திரமாக்கும் பக்தர்களின் திவ்ய சரித்திரங்களை யோதிப் பயன்பெற முன்வருவார்களென்று இறைவன் திருவடியைப் பிரார்த்திக்கின்றோம். விலை ரூபா **3-8-0.** தபால்சார்ஜ் பிரத்தியேகம்.

மானேஜர் :

கதாரத்னாகரம் ஆபீஸ்,
162, 163, பவழக்காரத் தெரு,
சென்னை.

---

# TAMIL BOOKS.

## BOOKS SUITABLE FOR SCHOOL AND HOME READING.

### கதை புத்தகங்கள்.

| | | | |
|---|---|---|---|
| கனகாங்கி ... ... | 0 4 0 | பீஷ்மன் ... ... | 0 1 6 |
| ஸரஸ்தி ... ... | 0 2 0 | இட்டார்க்குஇட்டபயன் | 0 1 0 |
| ஸுலோசனை ... ... | 0 2 0 | ஊக்கமே உயிர்த்துணை | 0 1 0 |
| விசித்திர வைத்தியன் ... | 0 2 0 | மீனாக்ஷி, நக்கீரன் Each | 0 1 0 |
| எறும்பின் அனுபவங்கள் | 0 2 0 | பப்பண்ணன் ... ... | 0 1 0 |
| கௌசல்யா கல்யாணம் | 0 2 0 | கண்களின் பயன் ... | 0 1 0 |

சற்குரு.—இது மாணவர்களுக்கும் உபாத்தியாயர்களுக்கும் உபயோகமாகும் ஓர் தமிழ்ப்பத்திரிகை. வருஷசந்தா ரூபா 1.

**N. வெங்கடராயலு அண்டு ஸன்,**
87, ராமசாமிதெரு, மதராஸ்.

ஸ்ரீ
கடவுள் துணை.

# கதாரத்னாகரம்

" கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி "

| Vol 1<br>தொகுதி—1 | APRIL 1915<br>1915-ம் வருஷம் ஏப்ரல் மீ | No 2<br>பகுதி—2 |
|---|---|---|

## விசேஷ வர்த்தமானங்கள்.

விருந்துகளில் ராஜ வாழ்த்துக் கூறும்போது, ஒயினுக்குப் பதிலாக தண்ணீரைக் குடிக்கலாமென்று லண்டனில் 7-உ யன்று அறிவிக்கப்பட்டது. [விருந்துகளில் மற்ற வாழ்த்துதல்களுக்கு முன் ராஜ வாழ்த்துக் கூறுவது வழக்கம். அப்போது எல்லோரும் சிறிது ஒயின் குடிப்பார்கள்]

---

திருநெல்வேலிஜில்லா ஸ்ரீவைகுண்டத்திலிருக்கும் சுப்பிரமணிய பிள்ளை என்பவர் 70-ஆயிரம் பெறுமான தமது ஆஸ்தி முழுவதையும் அவ்வூரிலுள்ள கார்னேஷன் ஹைஸ்கூலுக்கு சில தினங்கட்கு முன் உயில் எழுதி வைத்துவிட்டாரென்று தெரிகிறது. இவ்வித நன்கொடை பாராட்டத் தக்கதே.

---

வருஷமொன்றுக்கு இங்கிலாந்தில் விற்பனையாகும் சாராயத்தின் மதிப்பு 16-கோடி பவுன் பெறுமான முள்ளதாம். அதனால் கவர்ன்மெண்டுக்கு $3\frac{1}{2}$-கோடி பவுன்போலலாபம் கிடைக்கிறதாம். இவ்வளவையும் இழந்தாவது குடியை நிறுத்திவிடவேண்டுமென்று பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் முயல்கின்றனர்.

சென்னை ஆநந்தாஸ்ரம சாது மஹா சங்கத்தின் ஆறாவது வருட மஹோற்சவம் வெகுசிறப்பாய் ஏப்ரல் 1, 2, 3, 4 தேதிகளில் நடந்தேறியது. அநேகசாதுக்கள் விஜயம் செய்திருந்தார்கள். பரலோக சாதனமான விஷயங்களைச் சுருதி, யுக்தி அனுபவானுசாரமாக உபந்நியாசஞ் செய்தார்கள். சம்சார பந்தத்தில் இருக்கும் நம்மவர்களுக்கு, இவ்விதம் சாதுசங்கம் ஏற்பட்டு சாதுக்கள் பலர்கூடி நற்புத்தி புகட்டி வருவது பூர்வ ஜென்மத்தில் செய்த புண்ணியமே யன்றிவேறல்ல. இதனால் அநேகர் மேம்பாடுடையவராவரென்பது திண்ணம். இவ்விதம் ஒவ்வொரு ஊரிலும் கிளைச்சங்கம் ஏற்பட்ட பிரதி ஆதிவாரந்தோறும் மோட்ச சாதனமான விஷயங்களை உபந்நியசித்து வருவது பரோபகாரமாயிருக்கும்.

---

எதிர்காலம் நல்லகாலம். இனி வருங்காலம் மிக நல்ல காலமென்று பலர் கூறுகின்றார்கள். தாமஸ் அல்வா எடிஸன் என்பவர் கூறும் தீர்க்கதரிசனத்தைப் படிப்பவர்களுக்கு அந்த நல்லகாலம் எப்பொழுது வருமென்று

ஆசை மிகுதியால் வாயூறுமலிராது. அல்வா எடிஸன் கூறுவதாவது:—

இனி மிக விரைவில் வரும் எதிர்காலத்தில் இதுவரை நேராத பிரமாதமான மாறுதல்கள் உண்டாம். தங்கத்தைச் சிருஷ்டிக்கும் யுக்தியை மனிதன் கண்டுபிடித்து விடுவான். (அப்பொழுது எங்கும் மங்களமான தங்கம் பித்தளை போன்று தாராளமாகக் கிடைக்கும்.) எங்கும் மின்சாரம் (காந்தம் உபயோகமாகும். ரயில் வண்டிகளும் கப்பல்களும் இப்பொழுது மின்சாரத்தால் ஓடுவதுபோய் சகல வேலைகளும் காந்தசக்தியால் நடைபெறும். கட்டடம் கட்டுவதிலும், சாமான்கள் செய்வதிலும், மரங்கள் உபயோகப் படுவதுபோய் இரும்பே உபயோகப்படும். புஸ்தகங்களும் பத்திரிகைகளும் காகிதத்தில் அச்சிடப்படாமல் நிக்கல் லோகத்தில் அச்சிடப் படும். தரித்திரம் உலகத்தில் தரித்திராமல் அடியோடு ஒழிந்துபோம். எல்லாரும் சௌக்யமாய் இன்புற்று வாழ்வார்கள்.

---

**பணம் இருந்தால் தைரியமும் இருக்கும்:**—ஒருவன் தைரியமாய் ஒரு விஷயத்தில் துணிவதற்கும், ஒருவனை எதிர்த்துக்கொண்டு வல்லமை பேசுவதற்கும் அவனுடைய பணமே காரணம் தன்னை ஒருவன் அடித்துவிட்டாலோ—தானும் அடித்துக் கோர்ட்டேறி வழக்கு தொடுக்கவும் பணம் இருந்தால்தான் தைரியம் பிறக்கும். பம்பாய் இருப்புப்பாதையில் ஒரு வக்கீல் பிரயாணம் செய்தார். அவருக்குப் பணத்துக்கென்ன குறைவா? ஆகவே வழக்கப்படி அவர் தைரியசாலியாகவே இருந்தார். அத்துடன் சட்ட ஞானமும் தெரிந்தவர். இவர் ஏறியிருந்த வண்டியில் ஏற்கெனவே அதிக ஜனங்கள் இருந்தும் மறுபடியும் ஜனங்களை ஏற்றினார்கள். இந்த வக்கீல் ஆக்ஷேபித்தும் பயன்படவில்லை. வண்டியும் புறப்பட்டு விட்டது. உடனே வக்கீல் சங்கிலியை இழுத்தார். வண்டி நின்றதும் கார்டு ஓடிவந்தார். ஏன் சங்கிலியை இழுத்தீர் என்று கேட்க, ஜனங்களின் நெருக்கம் சகிக்க முடியவில்லை.' ஜனங்களிற் சிலரை வேறொரு வண்டியில் ஏற்றுமென்றார். கார்ட் பேசாமல் சென்றுவிட வண்டியும் புறப்பட்டது. உடனே இவர் மறுபடியும் சங்கிலியை இழுத்தார். உடனே வண்டியும் நின்று கார்டு வந்து இனிமேல் இப்படி நிறுத்தினால் பிராஸிகூஷன் செய்யப்படுமென்று எச்சரித்து விட்டுச் சென்றார். வண்டியும் புறப்பட்டது. மூன்றாவது தடவையும் வக்கீல் சங்கிலியைப் பிடித்திழுத்து வண்டியை நிறுத்தி ஜனங்களிற் சிலரை வேறொரு வண்டிக்கு ஏற்றச் சொல்லவே கார்டும் அப்படி செய்துவிட்டுச் சென்றார். கோர்ட்டுக்குப் போய்ச் செலவழிக்கப் பணம் உண்டானால் யாரையுமே எதிர்த்துக்கொள்ளலாம். எல்லா மகிமையும் பணத்திலிருக்கிறது. பணம் பாதாள மட்டும் பாயுமென்ற பழமொழி பொய்யல்லவே!! (தி-அ.)

---

**ஓர் இந்து வீரருக்கு நடந்த விமரிசையான வரவேற்பு.** ப்ரான்சுப் போர் முகத்தில் வீரதீரத்துடன் போர் புரிந்து விக்டோரியா க்ராஸ் என்னும் கௌரவப் பதக்கம் பெற்ற தர்வான் சிங்கு நியோசி என்பவர் சென்றமாதம் 8-ந்தேதி மாலை 4 மணிக்கு ஸ்ரீநகர் (கார்வால்) வந்து சேர்ந்தார். ஜார்ஜ் சக்ரவர்த்தியாரது திருக்கரத்தால் வீரப்பதக்கம் அளிக்கப்பட்ட இந்தத்தீர இந்தியர் அவ்வூருக்கு வந்ததினம் ஒரு திருவிழாப்போல் கொண்டாடப் பட்டது. அவ்வூரிலுள்ள பெரிய உத்யோகஸ்தர்கள், பிரமுகர்கள், பொது ஜனங்கள். அனைவரும் ராமனேஸ்வரம் என்னும் இடம்வரை சென்று அவரை ராஜோபசாரத்துடன் வரவேற்றார்கள். அச்சமயம் அங்குள்ள கவிராயர்களும் போயிருந்தனர். டிப்டி கலெக்டர் லாலா மூரேம்லால் என்பவர் தமது பரிவார சகிதம் சென்று அவரையுத்த வீரருக்குரிய மரியாதைகளுடன்வரவேற்றனர். பள்ளிச்சிறுவர்கள் பிரிட்டிஷ் கொடிகளைப் பிடித்துக்கொண்டு களியாடினர். பள்ளிச்சிறுவர்கள் அனைவரும் அவருக்கு வந்தனஞ்செய்தனர். பின் தர்வான் சிங்கு டிப்டி கலெக்டருடன் கடைவீதி வழியாகச் சென்றார். மாதர்கள் வீடுகளின் மேடைகளினின்று அவர் மீது புஷ்பமாரி பெய்தனர். ஜனங்கள் அவரைக் கூட்டங் கூட்டமாக வந்து பார்த்தனர். டிப்டி கலெக்டர் தங்கியிருந்த இடஞ் சென்றபின் ஒரு மகாமகோபாத்யாயரும் ஒரு சாஸ்திரியாரும் அவரைப்புகழ்ந்துபேசினார்கள். தர்வான் சிங் சக்ரவர்த்தியாருக்காகவும் தேசத்திற்காகவும் ஊழியஞ் செய்தமை அவருக்கும் (அவரது தாய் நாடான) இந்துஸ்தானம் முழுமைக்குமே பெருங்கீர்த்தியையும்கௌரவத்தையும் உண்டாக்கி யிருக்கிறதென்று அவர்கள் கூறினார்கள். பின் தர்வான் சிங்குதமக்குவிக்டோரியாக்ராஸ்கிடைத்த விவரத்தைப்பற்றி விரித்துக்கூறினார்.



---

# விநோத கதைகள்.

---

**நண்பர்களே!** நீங்கள் ஒரு கடிதத்தில் பென்ஸலால் இரண்டுஅங்குலமுள்ள ஒரு கோடு போடுங்கள். அந்தக் கோட்டை எவ்விதத்தும் தொடாமல் சிறியதாக்கி அனுப்பும் சந்தாநேயர்களில் முதல் ஐந்துபேருக்கு ஒரு நாவல் இனாமாய்க் கொடுக்கப்படும்.

---

விதர்ப்ப நாட்டை அரசுபுரிந்த மன்னருக்கு யூகமுள்ள மந்திரி வேண்டுமென்று தண்டோரா செய்திருந்தார். இவ்வுயர்ந்த பதவியை விரும்பிய வித்தியாபட்டம் பெற்ற அநேகர் அரசனிடம் சென்றிருந்தார்கள். அரசன் ஓரறையில் உட்கார்ந்து கொண்டு ஒவ்வொருவராய் வர உத்தரவு செய்தார். மன்னன் தனக்கெதிரில் ஒரு அச்சில் வார்க்கப்பட்ட இரண்டு பொம்மைகளை வைத்து, ஒன்றுக்கொன்றுள்ள வித்தியாசத்தையும் விலை மதிப்பையும் தெரிவிக்கும் படி வருபவர்களுக்கெல்லாம் தெரிவித்தார். பேசுந்திறமைவாய்ந்தவர்களும் கல்விக்கடலை வாரியுண்டவர்களும் வித்தியாசத்தைக் கண்டுபிடிக்க முடியாது திகைத்துச் சென்றார்கள். மாதம் ஐந்து கடந்தும் உண்மையை அறிந்தவ ரொருவருமிலர். கடைசியில் ஒரு அனுபவமுள்ளவிருத்தாப்பியர், இரண்டு பொம்மைகளையும் கையிலெடுத்து வைத்துக் கொண்டு அரசனை நோக்கி ஒரு ஊசியும் நூலும் கேட்டு வாங்கினார் ஒரு பொம்மையின் காதுகளைப் பார்த்தார். அதில் துவாரம் காணப்பட்டது. பொம்மையின் ஒரு பக்கத்துக் காதில் ஊசியைவிட அது சுலபமாக மறுகாது வழியாய்வந்து விட்டது. உடனே அந்தப் பொம்மையை பிரயோசன மற்றதென்று சொன்னார். இரண்டாவது பொம்மையின்ஒருபக்கத்துச்செவியில் ஊசியை விட்டார். அது மறுகாது வழியாக வெளியே வந்து விடாமல் வயிற்றுக்குள் விழுந்துவிட்டது. திரும்பவும் எடுத்து விடக்கருதிக்குலுக்கிப் பார்த்தார். வெளியே வரவில்லை. அந்தப் பொம்மையையெடுத்து, இதற்கு எவ்வளவு விலையானாலும் வாங்கலாம். இதுதான் சிறந்தது என்றார். உடனே அரசன் அவர் சாமர்த்தியத்தைப் பார்த்து மகிழ்ந்து மந்திரி உத்தியோகத்தைக் கொடுத்தார். ஒரு விஷயத்தை ஒரு செவியில் கேட்டு மறு செவியால் விட்டு விடுவது முதற் பொம்மையின் தாத்பரியம். ஒரு விஷயத்தைக் கேட்டதம் வெளிவிடாமல் மனதில் ஆலோசித்து சமயோசிதமாய்நடந்து கொள்வதேயாகும் இரண்டாவது பொம்மையின் தாத்பரியம்.

---

**ஆரியரத்தினங்களே:** நீங்கள் உங்களுடைய சொந்த பிரஜையைச் சங்கோசப் படுத்தாது சுகமணம் பரிமளிக்கச் சித்தமாயிருங்கள் காமக்குரோத

லோபமோகமத மார்ச்சரிய மென்னுந் திருடர்களாகிய மேகங்கள் வந்து குவிந்து அறிவென்னுஞ் சூரியப்பிரகாசத்தை மறைத்துவிட்டு உங்களிடம் மிருக்கும் சத்துவகுண நிதியைக் கவர்ந்து கொண்டு போய் விடுவர். அந்நிதியை யிழந்து விடுவீர்களானால் ஞான மென்னும் மரக்கலம் செய்து முடிக்கச் சாத்தியமாகாது. மரக்கல மன்றியில் இச்சமுசாகரத்தைக் கடந்துமுத்தி யென்னுங் கரையை கண்டடையமாட்டீர். ஆகையால் நீங்கள் அந்த அறுபகைவர்களாகிய மேகங்களை நெருங்க வொட்டாத படிக்கு பெரியோர் நேச மென்னும் பெருங்காற்றினால் சிதற வடியுங்கள் பிழைத்திடுவீர்.

---

**பிரியமான பெரியோர்க்களே!** நீங்கள் உங்களிடத்தி லிருக்கிற பெருந்தன்மையை யெப்படி யடைந்தீர்களோ அதுபோலவே ஏழைச் சிறுவர் களாகிய நாங்களடைய விரும்புகிறோம். திருப்தியாய்க் கொடுக்கச் சித்தம் வையுங்கள்.

---

**புருடர்களுக்குப் பாதிசரீரம் போன்ற புண்ணிய வதியாகிய பெண்மணிகாள்!** நீங்கள் உங்களுடைய இருப்பிடம் போய்ச் சேர்வதற்காகக் கடவுள் உங்கள் பாற் கொடுத்த உத்தமமான புருட தெய்வத்தை வைத்து நன்றாய்ப் பூசித்து வருகிறீர்களா? அதை வைத்துப் பூஜித்தால் தான் உங்களுடைய பாக்கியத்தை நீங்கள் அடைவீர்கள். அந்தத்தெய்வத்தினிடத் திலேயே உங்களுடைய மனஞ் சென்று கொண்டிருக் கட்டும், உங்களுடைய இந்திரியங்களெல்லாம் அவரிடத்திலே பிரவர்த்திக் கட்டும். உங்களுடைய வாணாளெல்லாம் அவருக்கு சிசுருஷை செய்வதிலேயே கழித்து விடுங்கள். உண்மையில் நீங்கள் அவரைவிசுவாசித்துப் பூஜித்துவரின் உங்களுடைய பிறவியென்னும் பிணி நீங்கிச் சுகத்தை யடைவீர்கள். அப்படிச் செய்யத் தவறுவீர்களானால் உங்கள் பிணியொரு நாளும்விலகாது. கஷ்டத்தை யடைவீர்கள். இதை யறிந்து பிழையுங்கள்.

---

**பிரியமானவர்களே!** நீங்கள் நன்மையை யடையவேண்டும் என்றவெண்ண மிருப்பின் பிறரை நேசியுங்கள். அவர்கள் உங்களிடம் எப்படி நடந்து கொள்ள வேண்டுமென்று நினைக்கிறீர்களோ அதுபோல் நீங்களும் அவர்களிடம் நடந்து கொள்ளுங்கள்.

---

**உயர்வான மனுஷிய ஜென்மம் வாய்ந்தவர்களே!** நீங்கள் சுகமனுபவிக்க வேண்டுமென்ற இச்சையுடையோரானால் துக்கத்தினின்றும் விலகி நில்லுங்கள். தண்ணீரென்றால் தாகந் தீருமா? ஔஷதமென்று சொன்னால் பிணிநீங்குமா? அவைகளை உட்கொண்டாலல்லவோ தாகமும் பிணியுந் தானே விலகும். அதுபோல் நீங்கள் சுகமே நீயிங்குவா துக்கமே யிங்கு நில்லாதே யென்று சொல்லிக்கொண்டிருந்தாற் போதாது. அதற்கான வழியை யனுசரித்து நடந்து கொண்டீர்களானால் சுகத்தை யனுபவிக்கலாம்

---

. ஒரு சிப்பாய் தான் ஒரு சண்டையில் எதிரியினுடைய காலை வெட்டினதாக ஒருவனிடத்தில் வீரம் பேசினான். அடுத்திருந்தவன் அவனைப் பார்த்து 'எதிரியினுடைய தலையைவெட்டாமல் காலைவெட்டின காரணம் என்ன?' என்று கேட்டான். அதற்கு அந்தசிப்பாய் நான் என்ன செய்வேன்? எதிரியினுடைய தலையை வேறொருவன் முன்னமே வெட்டிக் கொண்டு போய் விட்டான்; பிறகுநான் காலை வெட்டினேன்' என்றான்.

---

ஒரு பணக்காரன் தன் தகப்பனுக்கு ஓட்டிலே கஞ்சி வார்த்து மிகவும் எளிமை செய்துவந்தான். அவன்பிள்ளை அதைப்பார்த்து அந்த ஓட்டை எடுத்து



ஒளித்து வைத்து விட்டான். பிறகு அந்தப்பணக்காரன் தன் தகப்பனை 'ஓடு எங்கே?' என்றுகேட்டு அடித்தான். அடுத்திருந்த பிள்ளை 'அப்பா! என் பாட்டனை அடியாதே. நானே அந்த ஓட்டையெடுத்து ஒளித்துவைத்தேன். ஏனென்றால், நான் பெரியவனானபின்பு உனக்குவேறே ஓடு சம்பாதிக்க மாட்டேன்' என்றான். அதுகேட்டுப் பணக்காரன் வெட்கமுற்று அன்று முதல் தன் தகப்பனைச் சரியாக உபசரித்துப் போஷித்துச் சௌக்கியமாக வைத்திருந்தான்.

---

ஒருவனுடைய தோட்டத்தில் தென்னை மரத்தில் இருந்த தேங்காய்களைத்திருட எண்ணி ஒரு திருடன் அதன்மேல் ஏறினான். மரத்துக்காரன் சந்தடி அறிந்து வீட்டிலிருந்து அதட்டிக்கொண்டே ஓடி வருகையில் திருடன் அதையறிந்து மரத்திலிருந்து இறங்கி விட்டான். மரக்காரன் அவனைப்பார்த்து 'அடா! என் மரத்தின் மேல் ஏறினாய்?' என்றான். அதற்கு அவன் 'அண்ணே நான் கன்றுக்குட்டிக்குப் புல்லுப்பிடுங்க ஏறினேன்' என்றான். மரக்காரன் 'ஆ! என்ன விந்தை!! தென்னை மரத்தில் புல் இருக்குமா?' என்றான். திருடன் இல்லாமையால் தான் இறங்கி வருகிறேன். இது தெரியாதா? என்று பரிகாசம் பண்ணிக்கொண்டே போய் விட்டான்.

---

ஒரு மாப்பிள்ளை தனக்குத் தோழப்பிள்ளையாக ஒருவனைக் கூட்டிக்கொண்டு மாமியார் வீட்டுக்குப் போனான். அவன் தனக்குத் தலைப்பாகைத் தவிர மற்ற வஸ்திரங்களெல்லாம் இரவலாகையால் 'மாமியார் வீட்டில் இதை சொல்லாதே' யென்று தோழனுக்கு எச்சரித்திருந்தான். இவர்கள் போய் உட்கார்ந்தவுடனே மாமியாரும் மாமனாரும் தோழப்பிள்ளையைப் பார்த்து 'தம்பி! யோகக்ஷேமம் எப்படி?' என்று கேட்டார்கள். இவன் 'மாப்பிள்ளைக்குப் பாகை மாத்திரம் சொந்தந்தான். மற்றைத்துணிகளைக் குறித்து என்னைக் கேளாதேயுங்கள்' என்றான். மாப்பிள்ளை அவமான மடைந்தான்.

---

ஒரு புலவர், விகடகவி யொருவன் தான் பாடினதாகச் சொல்லும் ஒரு கவியைக்கேட்டு அவனை நோக்கி கம்ப ராமாயணத்தி லிருந்து இச்செய்யுளைத் திருடிக்கொண்டாய்' என்று குறை கூறினார். அவன் 'நான் திருடவேயில்லை' என்றான். அவர் அக்கவி அந்நூலி லிருப்பதாகக்காட்டினார். அவன் 'நான் அந்தக் கவியைக் கம்ப ராமாயணத்திலிருந்து திருடி எடுத்துக்கொண் டிருப்பேனானால் பிறகு அந்தச் செய்யுள் அந்த நூலில் எப்படி யிருக்கக்கூடும்? ஆகையால் நான் திருடிக்கொள்ளவில்லை யென்பதற்கு அது அந்நூலிலிருப்பதே சாக்ஷி' என்று மெய்ப்பித்தான்.

---

ஒரு உபாத்தியாயன் தன் வகுப்புப் பிள்ளைகளுக்குப் பாலை நிலத்தைப் பற்றிச் சொல்லவேண்டி வந்தபோது, 'பாலை நிலமாவது ஒன்றும் முளைத்திராத இடம்' என்று சொல்லி, 'இப்போது நீங்கள் தெரிந்துகொண்டதை நான் அறியும்படி அதற்கு ஒரு உதாரணம் சொல்லவேண்டும்' என்றான். ஒரு பிள்ளை எழுந்திருந்து அப்படிப் பட்ட நிலம் என்னுடைய அப்பன் தலைதான் ஸார். அவர்க்குத் தலையில் ஒரு மயிராவது முளைத்ததை நான் இது வரையில் பார்த்ததேயில்லை. ஆதலால் அது 'பாலைநிலம்' என்றான்.

---

**குழந்தைகளைச் சீரழியாமற் பராமரித்தல்:--** பெரும்பாலோர் தமது குழந்தைகளுடைய வீணெண்ணங்களையும் சாபல்யங்களையும் அதிகமாய் அபிமானித்து அளவு மீறி அவற்றைப்பாராட்டுவதால்அவற்றின்

தன்மைகளை மிகவுஞ் சீரழியச் செய்கின்றன; அக்குழந்தைகள் தன்னடக்கம்பெற்று இதரர்களுக்கு உபாதையுண்டு பண்ணுமல் அமைதியுடனிருக்கப் பழகுவதற்கும் பெற்றோர் தடையுண்டுபண்ணுகின்றனர். ஒருகுழந்தை அழத்தொடங்கினுல், அதை அநாவசியகமாக அதிகமாய்ப் பாராட்டுவதால், அக்குழந்தைகளின் குணம் கெட்டுப்போகிறது. குழந்தை அழுதால் அதன் உடம்பை நன்ருகப் பரீக்ஷித்து, ஏதாவது சரீரத்தில்கோளாறு நேரிட்டிருக்கிறதா வென்று கவனித்துப்பாருங்கள்; ஒருவிதமான கோளாறும் ஏற்பட்டிரா விட்டால், அக்குழந்தையை அப்படியே அழும்படி விட்டுவைப்பதே நலம். முதலில் சில நாட்கள் குழந்தை அழும்போது, சும்மா இருந்தால் அதை ஒருவரும் பாராட்டுவதில்லை யென்பதை அறிந்துகொண்டு அதுதானே மறுபடியும் தூங்கிவிடும். அவ்விதமின்றி, குழந்தை அழும்போதெல்லாம் உடனே அதை யெடுத்துத் தாலாட்டி, தொட்டிலாட்டி, வேறு விளையாட்டுகளையும் காட்டிவருவீர்களானுல், அநாவசியகமாக உங்களால் செய்யப்படும் அவ்வித கொஞ்சல் குலாவல்களை அனுபவிக்க வேண்டுமென்று அது எப்பொழுதும் அழுகையையே ஒரு தந்திரமாகக்கொள்ளும். இவ்வாறு துர்வழக்கத்திற்கு உட்பட்ட குழந்தைகள், தம் தாய்களை அடிமைபோல்செய்து, அவர்கள்செய்யவேண்டிய வீட்டு வேலைகளில் பெரும்பான்மையும் கெட்டுப்போவதற்குக் காரணமாகவும் ஆகின்றன. குழந்தையினிடம் அநாவசியமாக ஏதேனும் ஒருவிஷயத்தில் அபிமானம்வைத்து அதன் வீண்பிடிவாதத்தைப்பாராட்டுவீர்களானுல், பிறகு காலளவில்அநேகவிஷயங்களில் அதன் பிடிவாதம் முற்றி மாற்றக் கூடாததாய் விடுமென்பது நிச்சயம். குழந்தைகளை எப்பொழுதும் பிறந்தது முதற்கொண்டே தொட்டிலில் விட்டு ஆட்டாமலும், அருகில் ஒருவரும் இராமலும் நித்திரைசெய்யப் பழக்கவேண்டும் தொட்டில் முதலியவை எவ்விதத்திலும் அவசியமானவையல்ல —வைத்தியகலா நிதி.

---

வாழைப் பழம் வெகு சிறந்த உணவு: இந்தியாவின் மேற்கு சமுத்திரக் கரைகளில் வருஷந்தோறும் வாழை அதிகமாகப் பயிராக்கப்பட்டு வந்தும், அதன் பழங்கள் உணவு வகைகளுள் உத்தமமானவை யென்பதை மட்டும் அறிந்தவர் வெகு சொற்பம். மிகப் புகழ்பெற்ற ஒரு ஆங்கில வைத்தியர் இக்கனிகளில் இயற்கையில் சேர்ந்துள்ள பௌதிக பதார்த்தங்களைப் பரிசோதனை செய்து பார்த்ததில் அவர் இவ்வாறு அபிப்பிராயப்படுகின்றார்: இப்பழம் நன்ருகப்போஷிக்குங் குணமுடைய வெகு சிறந்த உணவென்று நிச்சயிக்கப்பட்டது. இது மிக எளிதில் ஜீர்ணமாகக் கூடியது; மற்ற உணவுப் பொருட்களைப் பார்க்கினும் வெகு சீக்கிரத்திலும் ஜீர்ணமாய் விடுகிறது.

| ஜீர்ணமாவதற்கான நேரம் பொரித்த | |
|---|---|
| மாட்டிறைச்சி | 3-மணி 20-நிமிஷம் |
| ஸாதாரண ரொட்டி | 2-மணி 30-நிமிஷம் |
| சீமையிலந்தை (ஆபிள்) | 2-மணி 30-நிமிஷம் |
| வாழைப்பழம் | 1-மணி 45-நிமிஷம் |

வாழைக்கனியின்மேல் ஆவரணமாயுள்ள அதன் தோல் மிகவும் கனமாயிருப்பதால் அப்பழத்தில் வெளியிலிருந்து எத்தோஷமும் சம்பந்திக்க முடியாது; ஆகவே தோலை நீக்கியவுடனே அதனுள் ஏதாவது மலினமான பதார்த்தங்கள் சேர்ந்திருக்குமென்கிற பயமில்லாமலே அதை வெகு ருசியுடன் புசிக்கலாம்; கொட்டை கோதுகளும் அதிலில்லாததால் உணவுக்கு எவ்விதத்திலும் ஏற்றது வாழைப்பழமே யென்று நிச்சயிக்கலாம்.

# இரண்டாவது அத்தியாயம்.

“ ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினுந் தான்முந் துறும் ”.

ஊழைப் பார்க்கினும் வலிமையுடைய பொருள்கள் வேறென்றில்லை யென்பது நமது தெய்வப்புலமைத் திருவள்ளுவ நாயனர் செப்பிய இக்கவிக்கு உதாரணமாகப் பின்வருங் கதையினுல் நாம் தெரிந்துகொள்ளலாம்.

உலக காரணரும் பரப்பிரமசொரூபருமாகிய பரமான்மாவானவர், நால்வகைத் தோற்றம், எழுவகைப் பிறப்பு, எண்பத்து நான்கு நூறுபிரம் யோனிபேதங்களாயுள்ள ஆன்மாக்களுக்குத் தனுகரணபுவன போகங்களைக் கொடுத்துப் புசிப்பித்து, கன்மவொப்பில் பாசபந்தங்களைப்போக்கி முத்தியிற் சேர்க்கு நிமித்தம் சிருஷ்டி, திதி, சங்காரம், என்னும் முத்தொழிலை நடத்துவர், அச்சிருஷ்டி கர்த்தாவாகிய பிரமதேவனது சிருஷ்டிக்குட்பட்ட தேசங்கள் பலவற்றினுஞ் சிறந்த நாவலந்தீவினில் செய்யாளுறைவிடம் ஐயாவெனப் புகலும் திவ்ய கருணுகர மங்கலமென்னுந் திருநகரொன்றில் வாழ்ந்து, தேசமெங்குங் கீர்த்தி வாய்ந்து சில தேசங்கட்கு அதிபதியாகிச் செழிப்புடன் முறை தவறுது செங்கோல் செலுத்தி வருகின்ற ஜீவாதார சிகாமணி யென்பவர் தனக்கு மிக நெருங்கிய சுற்றத்தினரும் பல தேசங்களுக்கு அதிபதியாயுமிருக்கின்ற மத்திர தேசத்தரசனுகிய மதனரஞ்சித மோகன மகாராஜனுடைய புத்திரி கற்பக சிந்தாமணி யென்னுங் கன்னிகையை முறைப்படி மணமியற்றி மாதவம்பலவியற்றி ஆதரவோடு சிதான்றிருவருள் பெற்று அந்த யாதவ குலத்து மாதவனருளால் பூதலம்போற்றுங் காதலனுகிய புத்திரனைப்பெற்று பெரியோர்களால் விற்பன விவேகனென்று நாமமிடப்பட்டு புண்ணியங்கள் பலவியற்றிக் கண்ணியமாக யாவரும் கண்ணியே மகிழ இனிது வாழ்ந்திருக்கிற காலத்தில் பாலனுக்கு வயது நாலதாயிற்று. இத்தருணம் கற்பகசிந்தாமணி யென்னுமரசி கர்ப்பவதியாயினள். ஒவ்வொரு மாதங்களிலுஞ் செய்யவேண்டிய கிரியைகளைக் குறைவில்லாதபடி செய்து மாதம் பத்தும்

பூரணமாகிப் பூவையே யளந்த தேவையே போற்றித் தேவைபான படி சேவைகள் செய்து கோவையே யனைய பாவையாளெனும்படி பகர்வதற்குரிய ஓர் பெண்ணைப் பண்புடனீன்றனள்.

ஈன்றவப்பெண்ணின் சான்ற நல்வடிவமோ ஆன்றோர்களாலும் ஆயிரம் சிரப்படைத்த ஆதிசேடனுந் தன்னுடைய நாவிரண்டாயிரத்தாலும் வர்ணித்துச் சொல்வதற்குச் சாத்தியமாகாதெனின், ஒரு சிறியநாவையுடைய யானோ வெடுத்துரைப்பதற்காகும்! ஆகாது. செப்புதற்கரிதே. ஒப்புவமை வேண்டு மெனில் இப்புவி தன்னிலும் இன்னுமற்ற எப்புவிதன்னிலு முன்னில் தப்பிதமில்லாத பெண் இவள் போன்றிருப்பளெனச் செப்புதற்கில்லை. இப்பெண் சிறுகுழந்தைப் பருவத்திலேயே இவ்வளவு அழகு வாய்ந்து பார்ப்பவர்களுடைய மனமலர் பறித்திடுபவளானல் யௌவன மங்கையானல் எவ்வண்ணமாவளோ வெனப்பலருங்கொண்டாடிப் புகழ்வதற்காயினள். இவ்வருமை வாய்ந்த சிறுமி விற்பன விவேகனென்னும் அரசிளங்குமாரனுக்குப் பின்னேன்றினவளாதலால், இவளுக்கு சற்சன நங்கையென்னுஞ் சிறந்த பெயரிட்டுப் பெரியோர்கள் புகழ்ந்தனர். இப்பெண் மகவைத் தாய் தந்தையர் முதலிய யாவர்களும் மிக்க களிப்புடன் காப்பாற்றிச் செழிப்புடன் சீராட்டி, மேன்மையாய்ப் பாராட்டி, இனிமையாய்த் தாராட்டி, காலந்தவறாதூரோட்டி, ஈக்கள் வந்து மொய்க்காமலும், எறும்பு கடியாமலும், வெய்யில் படாமலும், காற்றுவீசாமலும், பனி அடாமலும், மார்பிலும் தோளிலும் வயிற்றிலுமணைத்து, தாய் முலையூட்டி, மூக்குச்சிந்தி, நாசியூதி, செவிபுருவி, விழிகளுக்கு அஞ்சனந்தீட்டி, பல பணிகளும்பூட்டி, கன்னங்கிள்ளி, உச்சிமோந்து, கண்ணோடுகண்ணும், வாயோடுவாயும், முகத்தோடு முகமும் வைத்துக் கொஞ்சிக்குலாவி, முத்தங்கொடுத்து அருந்தனம் போற் பாவித்துப் பொற்றொட்டி விட்டு,

ராரிரரோ ராராரோ ராரிரரோ ராராரோ

நீயாரோ நான்யாரோ நேசமிகச் செய்துவிட்டோம்
தாயாரோ தந்தையரோ நீ சகோதரியோ யானறியேன் ரா

யார்யாரோ முற்பிறப்பில் நாம் யாராயிருந்தோமோ
சீராகத் தாய்மகவாய்ச் செனித்தோமே இப்பிறப்பில் ரா

அருஞ்சுகம்போலென் வயிற்றில் ஆரணங்கே நீ பிறந்தாய்
கொஞ்சுங் குலக்கொழுந்தே கோகிலமே கண்வளராய் ரா



கண்ணுண் மணியே கற்புக் களஞ்சியமே
பெண்ணிற் பெருமணியே பேரின்பப்பேரமுதே ரா

ரத்தினமே முத்தே யென் ரதியே சரஸ்வதியே
புத்திரியாய் வந்துதித்த பூவையே நீ நித்திரை போ ரா

அன்னமே நீ யுறங்கு இந்த அழகான தொட்டிலிலே
சொர்ணமே நீ யுறங்கு சுவர்ணமணித் தொட்டிலிலே ரா

முத்து பவழமுடன் முழுநீலம் வைரமணி
வைத்து அழுத்தியுள்ள மாகதத்தொட்டிலிலே ரா

ஆலிலைமேற் பள்ளிகொண்ட அரிவிஷ்ணு சுவாமிகள்போல்
நீலவிழி ரத்தினமே என் பாலகி நீ நித்திரை போ ரா

சுந்தரமே போலொளிருஞ் சுவர்ணமணி யொளியே
தந்திரமா யென் வயிற்றில் தானுதித்த கண்மணியே ரா

மன்னர் மகளாய் இங்கு வந்துதித்த பொற்கொடியே
உன்னை யொரு மன்னன் உவந்துமணஞ்செய்திடுவான் ரா

அரசர்க்கரசியென அனைவர்களுந் தான் மகிழ
சரசவுல்லாசமதாய்த்தன் கணவரோடிருப்பாய் ரா

உல்லாசமாயிருந்து உயர்ந்த தவமியற்றி
பல்லோர்கள் போற்றப் பாலகனைப் பெற்றெடுப்பாய் ரா

பெற்றெடுத்த பாலனுக்குப் பிரியமுள்ள தாயாகி
குற்றங்களைந்துமிகக் குணமாய் வளர்த்திடுவாய் ரா

குணமாய்வளர்பாலன் குடும்பம் பெருகிவர
மணமொன்று செய்து மகிழ்ச்சியடைவாயே ரா

பாலனுக்குப் பாலன்வரப் பார்த்துமனமகிழ
ஞாலமதிலுன்பேரன் நரைப்பாட்டியென்பானே ரா

பாட்டியென்று உன்னைப் பரிகாசஞ்செய்பாலன்
தாட்டிகமாய்வந்து தாரணியை யாண்டிடுவான் ரா

ஆண்டிடும்போதனக்கு அரிகிருஷ்ணர் தானும் வந்து
வேண்டும்வரந்தருவார் வேணவரந்தான் பெறுவாய் ரா

தந்தை தொழுவில் நின்று தான்வருதும் வேளையிது
வந்து பசியாற வுண்டி வகைகள் பல செய்யவேணும் ரா

சந்தோஷமாய்த் தூங்கு சடுதியிலுன்போகவேணும்
உந்தாதை வாராமுன் னுறங்குறங்கு கண்மயிலே ரா

அம்மம்மாவென்றுமிக அபயங்கள் போடாதே
சும்மா படுத்துறங்கு சொகுசான சுந்தரமே ரா

உறங்கிவிழிப்பாயானல் ஒரு பொம்மை நான்தருவேன்
அறங்கினில் வைத்தாடுதற்கு அழகுமிக வாய்ந்திடுமே ரா

பாலகிருஷ்ணன் போன்ற பாங்கான பொம்மையது
நீலவிழிமாதரசே நீ பார்த்ததைப்போலே ரா

மாப்பிள்ளை வேணுமென்று மையல் மிகவாகி
தோப்பினிற் சென்றுந் தன் றோழியிடஞ் சொல்லிடுவாய் ரா

ஆலிலைமேற்பள்ளிகொள்ளு மரிகிருஷ்ண சுவாமியைப்போல்
நீலவிழி ரத்தினமே என் பாலகி நீ நித்திரைபோ ரா

தத்தத்தா வென்று சொல்லி சத்தமிட்டுக் கூவாமல்
சுத்தசுழுத்தியினிற் சுகமாக நித்திரைபோ ரா

பப்பப்பா வென்று சும்மா படித்தழுதையானுக்கால்
அப்பப்பா பூனை வந்து அது தூக்கிப் போய்விடுமே ரா

கண்விழித்து வாய் புலம்பிக் காலிரண்டுந் தானுதறிக்
கொண்டுதுயில் கொள்ளாமல் கோதை வம்பு செய்யாதே ரா

கோச்சு வண்டி கொண்டு நம்ம கோட்டை வெளிவாசலிலே
பூச்சாண்டி வந்திருப்பான் நீ பேசாமற் றூங்கிவிடு ரா

பேசாதுறங்கிறையா பிரம்படிகள் வாங்கிறையா
நீ சாதுபோலுறங்கி நித்திரைபோ ரத்தினமே ரா

தித்திக்குஞ் செங்கரும்பே திகட்டாக் கனிரசமே
முத்திக்கு வித்தே யென் மொய்குழலே கண்வளராய் ரா

என்று தாராட்டிச் சீராட்டி நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்த்துவந்தனர்.

இவ்வளவு பிரியமும் அன்பும் பாராட்டி ஆதரிப்பதாற்றான் மாதாவைப் பற்றி அவ்வளவு சிலாகித்து யாவருங் கூறுகின்றனர். இதுபற்றியே ஒட்டுடன்பற்றின்றி உலகத்தைத்துறந்த நமது பட்டினத் தடிகளும்,

“ஐயிரண்டு திங்களா வங்கமெலா நொந்து பெற்றுப் பையலென்ற போதே பரிந்தெடுத்துச் செய்யவிரு கைப்புறத்தி லேந்திக் கனகமுலை தந்தாள்” என்றும் ‘நொந்து சுமந்து பெற்று நோவாமலேந்தி முலை தந்து வளர்த்தெடுத்துத் தாழாமே யந்தி பகல் கையிலே கொண்டென்னைக் காப்பாற்றுந் தாய்” என்றும் “வட்டிலிலுந்தொட்டிலிலும் மார்மேலுந்தோண்மேலும் கட்டிலிலும் வைத்தென்னைக் காதலித்து முட்டச் சிறகிலிட்டுக் காப்பாற்றிச் சீராட்டுந் தாய்” என்றும் சொல்லி, தனக்குள் எல்லாப் பற்றுக்களையுமொழித்தும் தாய்மேல் வைத்த அன்பையொழிக்காமல் அதிக நாளாக அந்தரங்கமாய் வைத்திருந்து தாய் உயிர் பிரிந்தபின்பு வாரி



வாரிப்பொழிந்தனர். இவர் கட்குத் தாய் தந்தையர் பேரிலுற்ற அன்பைப்போற் பிள்ளைகளிடமும் உண்டு. இதுபற்றியே ‘கடந்த ஞானியுங் கடப் பரோமக்கண்மேற் காதல்’ எனப் பெரியார் மொழிந்திருக்கின்றனர். ஆகையால் முற்றத்துறந்த முனிவர்களு மிவ்வா சைக்குட் படுவரென்றால் எல்லாப்பற்றுக்களையுமுடைய ராஜதம்பதிகள் குழந்தைகளிடம் அன்பு வைத்திருப்பது ஆச்சரியமன்று.

இங்கே குழந்தை சற்சன நங்கைக்கு வயது மூன்றரைக்கு மேலாயிற்று. மூத்த குமாரன் விற்பன விவேகன் பிறந்த தினத்திலேயே முதன் மந்திரிக்கும் அற்புதமான ஓர் ஆண் குழந்தை பிறந்து அதற்குப் பெரியோர்களால் சின்மயசிகாமணி யெனப்பெயரிடப் பட்டுச்செழிப்புடன் வளர்ந்து வந்தது. இப்படியிருக்கிற நாளில் ஓர் நாள் மந்திரி குமாரன் தன் தகப்பனிடம் வந்து பிதாவே, நீர், தினந் தினம் வெளியே போய் அதிக நேரஞ்சென்று திரும்பி வருகின்றீரே எங்கு போய் வருகின்றீர் ? அதை நான் தெரிந்துகொள்ள அதிக ஆவலுடையவனா யிருக்கின்றேன் சற்றுதெரிவிக்கவேணுமென்று கேட்க, மந்திரி சொல்கிறார்.

பி.—பாலா நீ இதுவரை இதைப்பற்றி யொன்றுங் கேட்டதில்லையே . இன்றைக்கேது கேட்பதற்கு முன் வந்தனை.

ம.—ஐயா நான் கேட்டது குற்றமோ ?

பி.—கண்மணி குற்றமொன்றுமில்லை. இது வரை ஒன்றுங்கேட்காது இப்போது திடீரெனக் கேட்டனையே என்று தான் கேட்கிறேன் நீ கேட்டது எனக்குச் சந்தோஷமே.

ம.—ஐயா நான் இதைப்பற்றிக் கேட்க அடிக்கடி எண்ணுவேன். சிறுபிள்ளையானதால் சீக்கிரம் மறதியுண்டாகி கேட்கத்தவறி விடுகிறேன். இன்றைக்கென்னமோ ஞாபகம் வந்தது உடனே கேட்டுவிட்டேன்.

பி.—கண்மணி ! நான் இவ்வூர் அரசனிடத்தில் மந்திரியாக இருக்கின்றேனாகையால் அங்கு தினம் போய் வருகின்றேன்.

ம.—பிதாவே அரசனென்றால் யார் அவர், எப்படியிருப்பார், எங்கிருக்கின்றனர் ? அவரிடம் மந்திரியாக இருக்கின்றேனென்றீரே மந்திரியென்றால் என்ன ? இது வெல்லாம் நன்றாய்ப் புலப்படுமாறு தெரிவிக்கவேண்டும்.

பி.—புத்திரா நீ கேட்ட கேள்விகள் மிகவும் நன்றாயிருக்கிறது. அதை உனக்கு விபரமாய்க்கூறுவேன். அதற்கு இப்போது சமையமல்ல இன்னொரு சமயம் சொல்கிறேன். அரச சமூகத்தில் அவசரமான வேலைகளிருப்பதால் நான் போய் வருகிறேன்.

ம.—பிதாவே அப்படியானால் இன்னொரு சமயம் அவசியம் சொல்ல வேண்டும். மறந்துவிடக்கூடாது போய் வாருங்கள்.

மந்திரியானவர் இவ்விதமாகத் தன் புத்திரனிடத்திற் சொல்லிக்கொண்டு சீக்கிரம் புறப்பட்டு அரசனுடைய கொலுக்கூடம் வந்து சேர்ந்தார். இங்கே அரசர் அன்றையதினம் கொலுமண்டபம்வர தன்தேகத்திற்குக்கொஞ்சம் சௌகரியக் குறைவிருந்ததால் வராதிருந்தனர். இதைப் பணியாளர் மூலமாய்த் தெரிந்துகொண்டு அரசனுடைய உத்தரவின் பேரில் அவர் சயனித்திருக்கும் அறைக்குட் சென்று வாசலில் நிற்கும் பணிப்பெண் மூலமாயத் தன் வரவைத் தெரிவித்து உட்சென்றனர். அங்கு அரசர் சற்று பலஹீனமாய்ப் படுத்துக்கொண்டிருக்கப் பக்கத்தில் தன் புத்திரன் விற்பன விவேகனும் இரண்டுவேலைக்காரிகளும் நின்றுகொண்டிருந்தனர். மந்திரியைப்பார்த்ததும் இரண்டுபெண்களும் அடுத்த அறைக்குட்சென்றனர். ஏனென்றால் மந்திரி அரசரிடத்தில் கொலுமண்டபத்தைத் தவிர வேறு இடங்களில் சந்தித்தால் ரகசிய சமாசாரமிருக்குமென்று மற்றவர்கள் விலகிப்போவது வழக்கம். அரசனுடைய கட்டளையும் அவ்விதமேயிருந்தது. ஆகையால் இருவரும் பக்கத்தறைக்குட் சென்றனர். அவ்வேளையில் அரசபுத்திரன், இந்த இருவர்களும் வருகிற இவரைப் பார்த்து விலகிச்சென்றனரே, நாமும் போய்விடலாம் என்று சற்று தூரம் அதாவது இரண்டு மூன்றடி விலகி, மறுபடியும் வருகிற இவர் யார் நாம் ராசனுடைய புத்திரனாச்சே ஏன் இங்கிருக்கக்கூடாது இருந்து இவரைத் தெரிந்துகொள்ளலாமே யென மயங்கி நின்றதை யறிந்தமன்னர், குழந்தாய்! நீ யிங்கு வா, இவர் நமது மந்திரியல்லவா சும்மா வந்து உட்காரு, வாவென வழைத்தார். உடனே குமரன் சந்தோஷமாகி முகமலர்ச்சியுடன் அரசன் பக்கத்தில் வர, இதற்குள் மந்திரியும் இதை அறிந்தவராய் விரைவிற் சென்று குழந்தையைத் தூக்கி முத்தமிட்டு ஏன் என்னைப் பாத்துத் திகைத்தனை, என்னை யறியாயாவென்று சொல்லிக் கையில் வைத்துக்கொண்டே அரசனைப்பார்த்து உடம்புக்கென்னவென்று கேட்டார். அரசனும் படுக்கையினின்று



மெழுந்து சாய்ந்து கொண்டு உட்கார்ந்தார். அரசனுடைய விருப்பத்தின் மேல் மந்திரியும் உட்கார்ந்து குழந்தையைத் தன் மடியின் மீது வைத்துக்கொண்டு பேசிக்கொண்டிருந்தனர். இந்தச் சமயம் மந்திரி மடிமீதிருந்த ராஜகுமாரன் மந்திரியைப் பார்த்து,

கு.—உங்கள் வீட்டில் என்னைப்போல் தம்பி யிருக்கிறானா?

ம.—ஆ ஹா! உன்னைப்போலவே தம்பி ஒருவன் இருக்கிறான்.

கு.—நான் பார்க்கலாமா?

ம.—நன்றாய்ப் பார்க்கலாம்.

கு.—எப்போது பார்க்கிறது?

ம.—நாளைக் காலையில் அழைத்து வருகிறேன் பார்க்கலாம்.

கு.—ஏன் இன்றைக்குப் பார்க்கக்கூடாதோ?

ம.—இன்றைக்கு வேண்டுமானாலும் பார்க்கலாம் சாயந்திரம் அழைத்துக்கொண்டு வருகிறேன்.

கு.—நான் வருகிறேன் இப்போதே போகலாமே!

அ.—அப்பா, மந்திரிக்குக் கொஞ்சம் வேலையிருக்கிறது. நீ பார்க்க வேண்டுமானால் சாயந்திரம் அழைத்துவரச் செய்கிறேன் நீ பார்க்கலாம்.

கு.—இல்லை, ஐபா சீக்கிரம் பார்க்க ஆசையாயிருக்கிறது.

அ.—அப்புறம் பாரேன் உன் ஆசை தீரும்படி சாயந்திரம்.

கு.—அப்புறம் நான் மறந்து போய்விடுவேனே.

அ.—மறந்துபோனால் நினைவு வந்தபோது பார்க்கிறது.

கு.—சும்மா சொன்னேன் ஒருபோதும் மறக்கமாட்டேன்.

அ.—மறக்காதிருந்தாற் சரி.

கு.—அவன் இத்தனை நாளும் என்னைப் பார்க்க வரவில்லையே.

அ.—நீ இவ்வளவு நாளும் பாராதிருந்ததுபோல் அவனுமிருக்கிறான்.

கு.—ஊம் அங்கே தம்பி இருக்கிறானென்று தெரியாது.

அ.—அவனுக்குமப்படித்தான் இங்கே நீ யிருக்கிறாயென்று தெரிந்திருக்காது.

கு.—அவனுக்கு இந்த மாதிரி காப்பு, சங்கிலி, தண்டை இவையெல்லாம் போட்டிருக்கிறதா?

அ.—உனக்குப் போட்டிருப்பதைப்போல் அவனுக்கும் போட்டுத் தானிருக்கும்.

கு.—உனக்குத் தெரியாதோ அவனுக்குப் போட்டிருப்பது ?

ம.—அவனுக்கு ஒன்றும் போடவில்லை.

கு.—ஏன் ஒன்றும் போடவில்லை ?

ம.—அவன் இதுவெல்லாம் ஒன்றும் வேண்டாமென்று சொல்கிறான்.

கு.—ஏன் வேண்டாமென்று சொல்கிறான் ?

அ.—அவனைப் பார்த்துக் கேட்டால் சொல்லுவான்.

ம.—அவனுக்குக் கொஞ்ச நாள் போட்டிருந்தது பேசத் தெரிவதற்கு முன்பு. பிற்பாடு இதெல்லாம் வேண்டியதில்லை யென்று கழற்றி யெறிந்துவிட்டான்.

கு.—எதற்காகக் கழற்றி யெறிந்துவிட்டான் ?

ம.—அவன் ஒரு நாள் என்னைப்பார்த்து இவைகளெல்லாம் என்உடம்போடு சேர்ந்திருக்க வில்லையே. இது நான் பிறக்கும்போது கூடவே பிறந்ததா இல்லையானால் இடையில் நீங்கள் இம்மாதிரி செய்தீர்களா வென்றான். அதற்கு நான் குழந்தாய் இவையெல்லாம் உன்னோடு பிறக்கவில்லை. மத்தியில் நாங்கள் செய்து அணிந்தோமென்று சொன்னேன். அப்படியானால் இடையில் வந்தது கடைக்கு உதவாது இது வேண்டியதில்லை. இப்போதே கழற்றிவிடவேண்டுமென்று உபத்திரவித்தான். உடனே கழற்றி விட்டோம்.

கு.—இப்போது ஒன்றுமே போடவில்லையோ ?

ம.—ஆம் ஒன்றுமே போடவில்லை.

கு.—(கொஞ்சமாழ்ந்து யோசித்தவனாய் முகத்தைக் காட்டிப் பின்) அவன் படிக்கிறானா யில்லையா ?

ம.—இல்லை. கொஞ்ச நாள் படிக்கப்போனான் அப்புறம் நின்று விட்டான்.

கு.—ஏன் நின்று விட்டான். எல்லாம் படித்தாயிற்றோ ?

ம.—அவனுக்கு எந்த வாத்தியாயர்களும் பிடிக்கவில்லை.

கு.—ஏன் பிடித்தமில்லை, வாத்தியாயர்கள் அடிக்கிறார்களா ?

ம.—அடிப்பதில்லை ஏதாவது சொல்லிக்கொடுத்தால் இதற்குப் பொருள்யாது என்று உபாத்தியாயரைக் கேட்பான். அதற்



கவர்கள் பொருள் சொல்வதற்குத்தெரியாது விழிப்பார். இவன் ஐயா நீங்கள் போய் வாருங்கள் நான் பிற்பாடு படித்துக் கொள்வேன் என்று சொல்லி அனுப்பிவிடுவான்.

கு.—அதைப்பற்றி நீங்களொன்றுஞ் சொல்வதில்லையோ ?

ம.—நானும் இரண்டொரு தடவை நீ ஏன் வருகிற உபாத்தியாயர்களிடங் கற்றுக் கொள்ளாமல் அவர்களை என்ன வென்னமோ கேட்டுவிட்டு அனுப்பிவிடுகிறாயே என்று கேட்டதற்கு, அவன் ஐயா நான் படிக்கிறதற்கு அதிக ஆவலுடையவனாக இருக்கிறேன். உபாத்தியாயர்களோ நன்றாய்ப்படித்துக் கேட்பதற்குப் பொருள்சரியாய்ச் சொல்லுகிறவர்களாய்க் காணேன். ஏதாவ தொன்றைச்சொல்லுகிறார்கள். அதற்குப்பொருள் யாதென்றால் திகைக்கிறார்கள். அவர்களிடம் நான்கற்றுக்கொள்வது எப்படி என்று சொல்லுகிறான். யாரிடங்கற்றுக்கொள்ள நீ இஷ்டப்படுகிறாய் என்று கேட்டால், எவரைப்பார்த்த மாத்திரத்தில் என்னுடையமனஞ் சந்துஷ்டியடைந்து என்கரங்கள்தானே கைகூப்பித்தொழுதுகண்ணீர் ததும்பக் கரைந்து நாவானதுஸ்தோத்திரிக்குமோ அவர்தானெனக்குநந்தகுருவாவர். அப்படிப்பட்டவரையல்லாது வேறொருவரிடம் நான் கற்பதில்லையென்றுசொல்லுகிறான்.

இதைக்கேட்ட அரசிளங்குமாரன் ஏதோ கனவு காண்பவனைப் போற் சற்று நேரம் பிரமித்துப் பெருமூச்சு விட்டுக்கொண்டு அப்படியா, இப்போது அவனுக்கு வயசு எத்தனையாயிற்று? எனக்குப் பெரியவனா சிறியவனா ?

ம.—நீங்கள் இருவருஞ் சரிவயதுள்ளவர்கள் தான்; அவன் ஒரு நாளைக்கு முன்னும் நீ ஒரு நாளைக்குப் பின்னும் பிறந்தீர்கள்.

அ.—என்ன கேட்கும்போதே பிரமித்துப் பெருமூச்சு விடுகின்றாயே காரணமென்ன ?

கு.—காரணமொன்றுமில்லை. நானும் அப்படிப்பட்ட குருவையே அடையவேணுமென்று தான்.

அ.—அப்படியானால் நீ இப்போது படிக்கப்போகிறதில்லையோ ?

கு.—ஏது இனி அப்படிப்பட்ட குருவைத் தவிர வேறொருவரிடமும் படிக்கப்போகிறதில்லை.

அ.—நீ அவனைப்போல் உபாத்தியாயர்களிடங் கேள்வி கேட்டு அத

ற்கு அவர்கள் பதில் சொல்லாம லிருந்தாலல்லவா அப்படி யிருக்க வேண்டும். இப்போது அப்படி நீ கேட்டதற்கு அவர்கள் பதில் தெரியாமலிருந்ததாக ஒன்றும் ஏற்படவில்லையே.

கு.— ஏற்படாவிட்டாலும் பரவாயில்லை. நான் இனிப் படிக்கிறதில்லை.

இவ்விதங் குழந்தை கூறவும், இராஜனுடைய மனதில் மந்திரியாலல்லவா நம் குழந்தை படிக்கப்போவதும் நின்றுவிட்டது. கல்வியில்லாவிட்டால் விவேகம் எப்படியுண்டாகும். ராஜ்ய பரிபாலனம் பண்ணுவது எங்ஙனம்? கல்வியென்னும் சூரியப்பிரகாசம் இல்லாவிட்டால் மூடமென்னும் இருள் வந்து சூழ்ந்து கொள்ளுமே. மூடவரசர் எப்படியும் பூமியை யிழந்துவிடுவரே. தவிரவும்,

"கல்வியே யாவர்க்கு மொளிகொண்ட வடிவமாங்
கல்வியே புதையலாகுங்
கல்வியே பரதேச கமனவின மாகுமக்
கல்வியே துணையதாகுங்
கல்வியே திசைகொண்ட கனகீர்த்தியைத் தருங்
கல்வியே பெருமை யாக்குங்
கல்வியே வேண்டு நற் போகங்களைத் தருங்
கல்வியே யின்பமாக்குங்
கல்வியே நிலை கொண்ட கற்பகத் தருவதாங்
கல்வியே செல்வமாகுங்
கல்வியே யரசராற் பூசை செய்விக்குமக்
கல்வியே கடவுளாகுங்
கல்விக்கு நிகரான பொருளொன்று மிம்மையிற்
கருதிடினு மில்லை யில்லை
கல்லானைத்தொன்று மில்லானடக்குமிரு
காற்பசுவதென்பர் மாதோ."

வெனப் பெரியோர் கூறி யிருக்கின்றனரே. நிலையான கல்விப் பொருளைக் கைவிடில் நிலையில்லாத மற்றப் பொருள்களெப்படி நிலைக்குமென்று பலவாறெண்ணி நம்பேரில் வருத்தங்கொள்கின்றனரோ வென்னவோ வெனச் சித்தம் நைந்தவராய் இனியாது வருமோ ஒருவேளை இக்குழந்தை பிடித்தபடியாய் படிக்காமலே யிருந்துவிட்டால் "கல்லாத மூடரைக் காணவு மாகாது கல்லாத மூடர் சொற் கேட்கக் கடனன்று" என வரசனுங் குழந்தையைக் கைவிட்டுவிடுவரோ யாதாகுமோவென்று கருதி மந்திரி, அக்குழந்தையைப் பார்த்துக் கண்மணி! நீ யிப்போது சொல்லிய வார்த்தையானது பெரி



யோர்கள் செவிக் கின்பத்தைத் தரவல்ல தல்ல. நீயோ இந்த அரசாட்சியை உன் தகப்பனாரிடத்திற் பெற்று அவர்க் குற்ற இந்தப் பெரும்பாரத்தைத் தாங்குதற்கான தீரன். இதைப் பரிபாலித்து வருவதற் கவசியமானது கல்வி. அந்தக் கல்வியென்னுங் களஞ்சியத்தை ஒரு போதுங் குறைந்து விடாமல் நிரப்புதல்வேண்டும். ஆகையால் அரசசெல்வமே நீயெங்களுடைய வார்த்தையைத் தட்டிவிடாமற் கல்வியைக் கற்று வரவேண்டுமென்று கருத்தில் வருத்தமடைந்து சொல்லினர். அரசனும் மந்திரியுடைய கருத்தைத் தெரிந்துகொண்டு குழந்தையைப்பார்த்து, அப்பா! கண்மணி நீ படிக்கப்போகிறதில்லை யென்று சொல்லியதைக் கேட்ட நமது மந்திரி யெவ்வளவு வருத்தங்கொள்கிறார் பார்த்தனையா, அப்படி வருத்தம் நைக்கும்படி செய்யலாமா, அவரை யென்னைப்போலவே நினைத்துக்கொள். உனக்கு வேண்டிய உபகாரங்கள் செய்வதில்அவர் தான்மிகுந்த பிரியமுள்ளவர். அவரால்தான் இந்த ராஜ்யமும் நாமும் பெரும்புகழ்பெற்றிருப்பது. நானும் அவருடைய அபிப்பிராயத்தைத் தவிர்த்து யாதொன்றுஞ் செய்யமாட்டேன். அவரை முன்னிட்டே யெல்லாக்காரியத்தையும் நடப்பிப்பேன்; ஆகையால் நீ அவருடைய வார்த்தைக்கு மாறு சொல்லாமல் நடந்துகொள்ளவேணும். நான் சொல்வதிலுனக்கு நம்பிக்கை யில்லாவிடினும் உன்னுடைய மாதாவிடங் கேட்டுத் தெரிந்துகொள். இப்போது நேரமாயிற்று போய் சாப்பிட்டுவிட்டுப் பள்ளிக்கூடம் போய் வாவெனப்பகர்ந்தார்.

இதைச் செவியுற்ற பாலன் சற்று நிதானித்து ஏது இவர்களிருவரும் நமக்காக மனச் சஞ்சலமுறுவர்போலிருக்கிறது. இதுசமயம் நாம் தடுத்து ஒன்றுஞ் சொல்லக்கூடாது என்றெண்ணி, ஐயா தங்களிருவர் வார்த்தையையும் நான் தட்டவில்லை. படிக்கச்செல்கிறேன், அண்ணாவைப் பார்க்கிறது எந்தச்சமயம் என்றான். உடனே மந்திரி நீ போய் சாப்பிட்டு பள்ளிக்கூடம் போய்வா அவனைச் சாயங்காலம் அழைத்து வருகிறேன் என்று சொல்லிவிட்டு அரசனிடம் பேசவேண்டிய காரியங்களைப் பேச வாரம்பித்தார். குழந்தையும் போய்வருகிறேனென்று விடைபெற்றுச்சென்று அமுதுண்டு பள்ளிக்குச்சென்றனன். மந்திரியும் அரசனிடஞ் சிலசமாசாரங்களைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்து பின்பு கொலுமண்டபம் சென்று செய்யவேண்டியவைகளைச் செய்து முடித்து விட்டு வீட்டிற்குச் சென்றனர்.

சி.—அம்மா எனது பிதாவானவர் யாது காரணம்பற்றி இன்றைக்கு அரசசமுகஞ் சென்றவர் இவ்வளவு நேரமாகியும் வாரா திருக்கிறார்.

தா.—ஏதோ அவசரமான வேலைக ளிருக்கலாம்.

சி.—அப்படி யென்ன அவசரமான வேலை?

தா.—ஏதோ யிருப்பதால்தான் இன்று இன்னும் வரவில்லை.

சி.—இதற்குமுன் இப்படி எப்பொழுதாவது தாமதித்து வருவரோ?

தா.—அடிக்கடி இவ்விதமாக நேருவதுண்டு. அரசனுடைய காரியங்கள் எவ்வளவோ யிருக்கும். இவர்களோ முதல் மந்திரி. எல்லாம் இவர்களால் தான் அநேகமாய் முடியவேண்டியதிருக்கும். அதனால் ஏறக்குறைய வந்து விடுவர்.

சி.—என்றைக்காவது வாராமலு மிருந்து விடுவரோ?

தா.—எங்கேயாவது வேறு கிராமங்களுக்கு அன்னிய தேசங்கட்கு ராஜகாரியமாய்ச் சென்றிருந்தால் அன்று வாரார். அப்படி யல்லாமல் இங்கேயே யிருந்தால் எப்படியும் வருவர்.

சி.—நான் ஒரு நாளும் இவ்வளவு நாழிகை கழித்து வரப்பார்த்திலனே?

தா.—நீ சிறு பிள்ளையானதால் அதைக் கவனித்திருக்கமாட்டாய். கவனித்திருந்தால் தெரியும்.

சி.—இன்று கவனிக்காமலா கேட்கிறேன்?

தா.—கவனித்திருந்தால்தான் தெரியும் என்று முன்னே சொன்னேனே. காலையில் அரண்மனைக்கேகுந் தருவாயில் ஏதோ கேட்டாய். அதற்கவர்கள் இன்னொரு சமயம் சொல்வதாய்ப் போயினர். அதைக்கேட்கவேணுமென்ற அவாவானது உன்னுடைய மனதிலிருப்பதால்தான் வரவை யெதிர்பார்த்துக்கொண்டிருக்கின்றனை.

சி.—ஆம் அம்மா அதற்காகத்தான் எதிர் பார்க்கிறேன். இப்போதே வந்துவிடுவார்க ளல்லவா?

தா.—வந்திடுவர். ஆனால் இன்று இவ்வளவு நேரஞ் சென்று உன்னுடைய பிதா வருவதினால் அவர்களுக்குக் கொஞ்சம் சிரமமிருக்கலாம். நீ அவர்களை இன்று எதையாவது கேட்டுத் துன்பமிழைக்கவேண்டாம்.



சி.—நான் ஏன் துன்ப மிழைக்கப்போகிறேன். இந்த அரசருடைய தன்மையைப்பற்றிக் கேட்கலாமென் றெண்ணிக்கொண் டிருக்கிறேனே தவிர வேறு ஒன்றும் நான் துன்ப மிழைக்கேன்.

தா.—அதுதான் இன்று வேண்டாமென்று சொல்வது.

சி.—அதினால் கெடுதி யாதுளது?

தா.—கெடுதி ஒன்றும் வாராது. அதிக நேரஞ் சென்று வருவதால் கொஞ்சஞ் சிரம மிருக்கலாம்; அதைப் பரிகாரஞ் செய்து கொள்வதற்கு நீ ஒன்றுங் கேளா திருந்தால் அநுகூலம்.

சி.—அப்படியானால் நான் என்ன செய்யவேண்டும் அவர்கட்கு?

தா.—நீ அவர்களுக் கொன்றுஞ் செய்ய வேண்டுவதில்லை. உன்னுடைய பசியை நிவர்த்தித்துக்கொண்டு பேசாது தூங்கி யெழுந்தாயானால் நாளைக் காலையில் கேட்டுக்கொள்ளலாம். இதுதான் நீ செய்யவேண்டியது.

சி.—நான் வேண்டுமானால் கொஞ்சம் அமுது புசிக்கிறேன். நித்திரை வரமாட்டாதே யென்ன செய்வேன்?

தா.—ஏன் நித்திரை வாராது? நன்றாய் வயிறு நிரம்பப்புசித்துப் பஞ்சணையிற் சென்று படுத்துக்கொண்டு மனதில் ஒன்றும் நினைக்காமல் நிம்மதியா யிருந்தால் நித்திரை வந்துவிடும்.

சி.—அப்படியானால் எனக்கு அமுது படை. நான் உண்டு உறங்கி விழிக்கிறேன் பிதாவருமுன்.

தா.—உனது பிதா வருமுன்னடியே உறங்கி விழித்திடுவாயா?

சி.—இல்லை. பிதா வருமுன் சாப்பிட்டு நித்திரை செய்கிறேன். எழுந்துகொள்வது காலையிலேதான் இப்போ தல்ல.

தா.—ஆனால் உட்கார். அமுது படைக்கிறேன் என்று பொற்கலத்தில் பாலுடன் அறுசுவை உண்டிகளும் பரிமாறிப் புசிக்கச்செய்து பஞ்சணையைத் தயாரித்துப்படுத்துக் கொள்ளெனச் சொல்ல, பாலன் போய் சயனித்துக்கொண்டான். அரசனது அந்தப்புரத்தில் பின்பு தாயும் தன்பத்தாவுடைய வரவையெதிர்பார்த்துக் கொண்டிருந்தாள்.

# மூன்றாவது அத்தியாயம்.

கற்.—கண்மணீ என்ன உன் முகம் வாடிய தன்மையைக் காட்டுகிறதே.

விற்.—அப்படிக் கொன்று மில்லையம்மா.

கற்.—இல்லையென்று நீ சொல்லிவிட்டால்நான் ஒப்புக்கொள்வேனா? அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சங்கடுத்தது காட்டு முகம் என நாயனார் கூறியபடிக்கு உன் முகம் காட்டுகிறதே ஏதாவது. குறைவிருந்தால் சொல்லிவிடு.

விற்.—அப்படிக் குறைவொன்று மில்லையம்மா.

கற்.—பின் ஏன் நீ வாட்டத்துடனிருக்கிறாய்

விற்.—அம்மா இன்று என்னுடைய தகப்பனாரண்டை வந்திருந்த நமது மந்திரியிருக்கிறாரே....

கற்.—அவர் ஏதாவது உன்னைக் கடிந்து பேசினாரா என்ன? அப்படிப் பேசப்பட்டவரல்லவே. நிரம்ப நல்லவராச்சுதே.

விற்.—சொல்லுமுன் அவசரப்படுகிறாயே.

கற்.—அவசரப்படவில்லை சொல்லிவா. நிதானயாய்க் கேட்கிறேன்.

விற்.—அவர் வீட்டிலே ஒரு அண்ணாயிருக்கிறானாம். அவனை யழைத்து வருகிறேனென்று சொன்னார். இன்னும் வரக்காணேன். அதுதான் முகவாட்டத்தைக் கொடுக்கின்றது. அவனை நான் எப்போது பார்ப்பேன், வீடுதெரிந்தாலும் போய்ப்பார்த்து வருவேன் அது தெரியாது தோழிமோகன முத்தையும் சேவகன் ரத்தின சிங்குவையும் அழைத்துப்பார்த்தேன். அவர்கள் ஐயா உத்தரவில்லாமற் போகப்படாதென்று சொலலிவிட்டார்கள். அப்புறம் நான் என்னசெய்வேன்! மந்திரிசொல்லியதிலிருந்து அதுவே யேக்கமாயிருக்கிறது. நீயாகிலும் ஒருவரை என் கூட அனுப்பிவைத்தால் நான் போய்ப்பார்த்து வந்திடுவேன் அனுப்புகிறாயா? இல்லையானால் அவனையாவது இங்கு அழைத்து வரச்செய்.

கற்.—இதற்குத் தானா இவ்வளவு இலேசத்தை யடைந்தனை? மந்திரி வீட்டிலிருக்கிற அண்ணாவைப் பார்க்கவேண்டுமானால் அழைத்துவரச்சொன்னாற் போச்சுது. இதற்காக இவ்வளவு வருத்தமடையலாமா, முகம் எவ்வளவு சிறுத்துப்போயிற்று. உன் பிதா பார்த்தால் என்னை யல்லவா கோபிப்பர்.

விற்.—அவர்களுங் கூடவிருந்து தான் என்னைப்போய்ப் பார்க்கவிடாமற் செய்தது. இல்லையானால் நான் அப்போதே போய்ப் பார்த்திருப்பேன்.

கற்.—இப்போது என்ன கெட்டுப்போயிற்று நாளைக்காலையில் ஒரு ஆளனுப்பிக் கூட்டிவரச்செய்தால் கூட்டிவந்திடுகிறான். அப்புறம் பாரேன் உன்னுடைய ஆசை தீரும்படியாக. இல்லையானால் நீயே போய்ப் பார்க்கவேணுமானாலுங்கூட நம் மதனமனோன்மணியைக் கூட அனுப்பிவிக்கிறேன் போய்வா, இப்போதெழுந்து சாப்பிடவா எழுந்திரு.

விற்.—இல்லையம்மா மந்திரி கூட்டி வருவதாய்ப் போனவர் கூட்டிவராமல் ஏமாற்றிவிட்டனரே.

கற்.—மந்திரி உன்னை யேமாற்றமாட்டார். அவர் உன் பேரில் மிகுந்த பிரியமுள்ளவர். அவர் இன்னும் இங்கேயே கொலுமண்டபத்திலிருக்கிறார். உன்னுடைய பிதா கொலுவுக்குப் போகாததால் ஏதோ அதிக வேலைகளிருப்பதுபோல் தெரிகிறது. வீட்டுக்குப் போயிருந்தால் கூட்டிவந்திருப்பர்.

விற்.—அப்படியானால் நானங்கு சென்று அவர் வீட்டுக்குப் புறப்படும்போது கூடவே போய்ப்பார்த்துவரட்டுமா?

கர.—இன்று அஸ்தமித்துப் போய்விட்டபடியால் இனி போவது சரியன்று. காலையிலெழுந்து போகலாம் ஒரு வேளை அவரே முன்னுதாகக் கூட்டி வந்தாலும் வந்திடுவர். அவர் நிரம்ப ஞாபகமுள்ளவர்.

விற்.—அவரைப்பற்றி நமது பிதாவும் காலையில் நிரம்பச் சொல்லிப் புகழ்ந்தனர். அவரும் என்னோடு அன்பாயிருந்தார் என்னைப் பார்த்தவுடனே அப்படியே வாரி மார்போடணைத்து முத்தமிட்டார் அவருடைய மடியிலேயே அதிக நேரம் உட்கார்ந்திருந்தேன். நான் படிக்கப்போகமாட்டேனென்று சொன்னதைக் கேட்டவுடன் நிரம்பப் பரிதாபமுற்றனர். நான் போய்ப் படிக்கிறேன் என்று சொல்லியபின்புதான் சந்தோஷமடைந்தனர்.

கற்.—இருக்கலாம் நம் ராஜ்யத்தில் அவர்தான் நீண்ட காலமாய் முதன் மந்திரி வேலை பார்த்து வருகிறார். உன் பிதாவும் அவரும் நிரம்ப நேச முடையவர்கள். உன்னுடைய பிதா அரசரென்பது உலகொப்புக்கே யல்லாமல் ராஜகாரியத்தை நிர்வகிப்பதும் சரியாய் நடத்துவதும் அவர்தான்.

விற்.—அம்மா இனி அவரை நன்றாய்த் தெரிந்துகொண்டேன்.

கற்.—அமுது படைத்தாய்விட்டது எழுந்து வா.

விற்.—இதோ வருகிறேன்.

என்று எழுந்துவந்து போஜன மருந்தி, தாய் அலங்கரித்துக் கொடுத்த சப்ரமஞ்சத்திற் சயனித்து நித்திரை செய்தனன். கற்பக சிந்தாமணி என்னும் அரசியும் தன் பத்தாவுக்கு வேண்டுவனவற்றை யெல்லாஞ் சித்தமாக்கி வைத்துக்கொண்டு தோழிகளால் அரசனை அழைப்பித்து அறுசுவை யன்னம் வட்டித்து அருந்தியபின் அவருக்கு வேண்டிய பணிகள் பலவு மியற்றித் தானும் போஜன முட்கொண்டு பள்ளி யறை சென்றனள்.

அ.—பெண்ணே குழந்தை தூங்கிவிட்டானோ?

கற்.—முன்னமேயே தூங்கிவிட்டான்; ஏன்?

அ.—இல்லை தூங்கிவிட்டானோ வென்று கேட்டேன்.

கற்.—தூங்கினான்.

அ.—என்ன தூங்கினா னென்று ஒருவிதமாகச் சொல்கிறாயே?

கற்.—விதமொன்றுமில்லை. மந்திரி தன்மகனை யழைத்து வருவதாகச் சொன்னாராம் வரவில்லையே யென்று வாடின முகத்துடன் அதிக நேரம் சாப்பிடாது உட்கார்ந்திருந்தான்.

அ.—அப்புறம் சாப்பிட்டானோ இல்லையா?

கற்.—சாப்பிட்டான் எவ்வளவோ சமாதானத்தின் பேரில்.

அ.—ஆமாம் காலையிலேயே பார்க்கவேணுமென்று துரிதப்பட்டான். நான்தான் அப்புறம் பார்க்கலா மென்று சொன்னேன்.

கற்.—அதுவுங்கூடச் சொல்லிக்கொண்டான். படிக்கவும் போக மாட்டேனென்று சொன்னானும் மந்திரி நிரம்ப வருத்தப்பட்டு கட்டாயம் படிக்கப் போகவேணுமென்று சொன்னதினால் போனே னென்றான்.

## குதிரைகள் முத்தி யடைந்த சரித்திரம்.

பொன்னுலகமும் புகழும்படியான கீர்த்தி யடைந்து விளங்கா
நின்ற அயோத்திமா நகரில், மனுவங்கிசத் துதித்து நீதி தவறாது
அரசாட்சி புரிந்துவந்த திலீப மகாராஜனிடத்தில், உடம்பு முழு
தும் வெளுத்து, செவிக ளிரண்டுமட்டுங் கறுத்து விளங்கிய இரண்டு
குதிரைக ளிருந்தன. அக் குதிரைகள் தன் வச மிருந்த மகிமை
யால், அந்த அரசன் எட்டுத் திசைகளையும் வென்று உலக மெங்கும்
புகழக் கீர்த்தி யடைந்து, மற்றைய மன்னர்க ளெல்லாம் தன்னடி
பணிந்து வணங்க, துஷ்ட நிக்ரஹ சிஷ்ட பரிபாலனம் பண்ணி,
செங்கோல் முறை பிறழாது ஆட்சி புரிந்து, மன்னுயி ரனைத்துந் தன்
னுயிர்போலப் பாவித்துப் பாதுகாத்துவந்தான். அக்குதிரைகளையும்
நல்லநிலைமையிற் இரட்சித்து வந்தான். இவ்வாறு நடந்துவரும்நாளில்
ஓர் நாள் அக்குதிரைகளில் ஒன்று மற்றொன்றை நோக்கி ஏ மித்து
ருவே! நான் முற்பிறப்பில் ஒரு வணிகனாய்ப்பிறந்திருந்தேன், இப்
போது அரசாளும் இந்தமன்னனும், மார்பில் முப்புரிநூல் பூண்ட
மறையவனா யிருந்தான். அம்மறையவனிடத்தில் நான் அநேகம்பொன்
கடனாக வாங்கினேன். அக்கடனை நான் கொடுத்துத் தீர்க்கவில்லை.
அந்தப் பாவத்தால் பத்துப்பிறப்பு எருமைக்கிடாவாகப் பிறந்து
அவற்கு உழைத்தேன். உழைத்தும் தீர்ந்தபாடில்லை. ஆகையினாலே
இப்பரிஜென்ம மெடுத்து இப்போதும் உழைத்து வருகிறேன். இனி
யெப்போதுதான் இது தீருமோ நான் அறிகிலேன் என்று கூறி
விசன முற்றது. இதைக் கேட்ட மற்றொரு குதிரை யென்வரலாற்
றைக் கூறுகிறேன் கேள், நானும் முன்னம் ஓர் சூத்திரனா
யவதரித் திருந்தேன். இப்பார்வேந்தனும் ஒரு பிராமணனாகப் பிறந்
திருந்தான், இவனிடத்துச் சொல்லுதற்கரிய பொருள் கடன்
பட்டேன், அதிற்பாதி யாவது கொடுத்துத் தொலைக்கவில்லை.
அதற்கீடாகப் பத்துரு யானையாகப் பிறந்து உழைத்தேன். இன்ன
மும் இக்குதிரையாக வந்து உழைக்கிறேன். என்விதி யிவ்வாறென்று
கூறி அதுவும் அழுதது. கிலேச மற்ற மனத்தினையுடைய திலீப
மகாராஜன் சகல உயிர்களும் பேசப்பட்ட பாஷையை யறியும் சக்தி
வாய்ந்தவனாதலால், அக்குதிரைகளிரண்டும் ஒன்றுக்கொன்று ஜென்

மாந்தர புண்ணிய வசத்தாற் பேசிக்கொண் டிருந்ததைக்கேட்டு ஆச்
சரியப்பட்டு மனமிரங்கி, யிதற்கென் செய்யக்கடவோ மென்றேங்கி
தனது குலகுருவாகிய வசிஷ்டமகரிஷியினது பாதாரவிந்தங்களில்
சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து, குதிரைகளின் விருத்தாந்தத்தைத்
தெரிவித்தான். சந்தேகமறக் கலைகள் பலவும்பயின்ற அம்முனிவரும்
ஓமன்னு கடன் தீர்தலே பெரிய புண்ணியமாகும். இக்குதிரைகளி
ரண்டும் இன்றைக்கே தலங்களில் சிறந்த மாயூரத்தை யடைந்து,
அங்குள்ள இடபதீர்த்தத்தில் முழுகினால், அவைகளின் பாவந்
தொலையும்; இது நிச்சயமே. அதைத் தொலைக்கவேண்டிய பொறுப்
பும் உன்னதேயாகும் என்றுரைத்தார். இதைக்கேட்ட மன்னனும்
மற்றொன்றையும் நாடாதவனாய் அப்புரவி யிரண்டையும் கைப்பற்றிக்
கொண்டு புறப்பட்டு அநேக காவதந்தாண்டி மாயூர நகரம்போய்ச்
சேர்ந்தான்; ஆங்கு துலங்கும் காவிரி நதிக்கரையை மேவி அத
னிடம் விளங்கும் இடபதீர்த்தத் துறையை யடுத்து, அத்
தீர்த்தப்புனலில், அக்குதிரை யிரண்டினையும் மூழ்கச்செய்தான்.

உடனே அக்குதிரைகளிரண்டும் தமதுருவமாறி, யாருமதி
சயிப்பத் தேவகணங்க ளுருக்கொண்டு நின்றன. இந்திரனுக்குச்
சமானமான நரேந்திரனும் அவைகளைக் கண்டு சந்தோஷங்கொண்
டான்; தேவ வுருக்கொண்ட பரிகளும் மாயூர நாதர் திருக்கோயி
லுக்குச் சென்று, அங்கு அஞ்சனாகியம்மையுடன் எழுந்தருளியிருக்
கும் கருணாநிதியாகிய சிவபெருமானை வலம் வந்து போற்றி நின்
றன. அப்பரமன் திருவருளால், அப்பரிகளிரண்டும் தேவர்கள்பூமாரி
பொழியச் சிவலோகஞ் சேர்ந்து வாழ்ந்தன. திலீப மகாராஜன்,
அக்குதிரைகளுக்கு, இரண விமோசனம் செய்த இடபதீர்த்தத்தின்
பெருமையும், அவைகளுக்குச் சிவலோகமளித்த எம்பெருமானது
கருணையையுங்கண்டு, அடங்காத மகிழ்ச்சிகொண்டு, தானும் அப்
புனலிற் படிந்து, பற்றற்றவர்க்கருளும் பரமபதியைத் தரிசித்து,
அயோத்திமா நகரையடைந்து, தனது குலகுருவாகிய வசிஷ்டமுனி
வருக் கறிவித்து, மனமகிழ்ச்சியுடன் இனிது வாழ்ந்திருந்தான்.

திருச்சிற்றம்பலம்.



## நரியும் குரங்கும் முத்தியடைந்த சரித்திரம்.

நீர்வளத்தாலும், நிலவளத்தாலும் சீரும் சிறப்பும் வாய்ந்து
விளங்காநின்ற அவந்தி நகரில் வாழும் இரண்டு சூத்திரர்கள் ஒரு
வருக்கொருவர் மிகுந்த நட்புடன் வாழ்ந்தனர். பலநாள் அவ்விதம்
வாழ்ந்தபின்னர், கால வசத்தால் எமனுலகடைந்தனர். உறவுற்ற
இருவரில் ஒருவன் பிறகு பூமியினிடத்து நரியாகவும், மற்றொருவன்
குரங்காகவும் வந்து பிறந்தார்கள். அக்குரங்கும் நரியும் சின்னாள்
சென்று ஓரிடத்தில் வந்து கூடின. கொம்பில் வசிக்கும்
வானரம், தரையில் நிற்கும் நரியைப்பார்த்து ஓ சம்புவே!
நீ யென்ன பாவஞ் செய்து இந்த ஜென்மம் அடைந்திங்குற்று
யென்று கேட்டது; நரி குரங்கைப் பார்த்து ஏ மந்தியே!
நான். முற்பிறப்பில் ஓர் மறையவனுக்குப் பொருள் தருவதாக
வாக்குக் கொடுத்து, அதன்படி கொடாத குற்றத்திற்காக
இவ்வுருப் பெற்றுழல்கின்றேன். மேலும் பிணத்தைப் பிடுங்
கித்தின்று ஜீவித்தும் வருகின்றேன். நீ யிவ்வுருப் பெற்ற
காரணம் யாது? அதை நன்கு விளங்கக் கூறென்று கேட்டது.
வானரம், ஏ சம்புவே! நான் முற்பவத்தில், பரதிரவியங்கவர்ந்து
அதனைக்கொண்டு ஜீவித்து வந்தேன்; ஆனது பற்றி இந்த வானர
ஜென்ம மெடுத்துத்திரிகின்றேன் என்றது. இவ்வாறு அவ்விரண்டும்
துக்கத்துடன் பேசிக்கொண்டு மனம் நொந்து அலமந்து நிற்கும்
சமயத்தில், அவைகளின் பூர்வ புண்ணிய பலனே உருவெடுத்து
வந்ததுபோல, முனி சிரேஷ்டராகிய காசிப முனிவர் ஆங்கு வந்து
தோன்றினர். கொம்பினின்று குரங்கும், தரையினின்று நரியும்
படுகின்ற துயரத்தைக் கண்ணுற்றனர். முனிவர், அவைகள் உள்
ளந்தடுமாறி நிற்பதைக்கண்டு, மனம் சகிக்காதவராகி யிரக்கமுற்று,
அவைகளை நோக்கி, உங்கள் தீவினை யொழிய நீங்களிருவீரும்
என்னைத் தொடர்ந்து வாருங்களென்று கூறி, தான் முன்னே சென்
றனர். குரங்கும் கிளையை விட்டுக் கீழிறங்கி, நரியுடன்கூடி அவ்
விரண்டும் முனிவர் பின்னே சென்றன. முனிவர் அவைகளை யழை
த்துக்கொண்டு, ஒப்பற்ற மாயூர நகரஞ் சென்று, அங்குற்ற இடப
தீர்த்தத் தருகணைந்து, உங்களை வருத்தும் வினைதீர நீங்களிருவரும்

இத் தீர்த்தத்தில் முழுகுங்கள் என்றுரைத்தனர். நரியும் குரங்கும் முனிவர் கூறிய படியே மூழ்கின. மூழ்கினவுடனே அவைகளுக்குற்ற தீவினையைப் போக்கித் தேவவுருக்கொண்டு கிளம்பின. முனிவர் திருவடியிற் றாழ்ந்தன; அவரைப் பலவாறு புகழ்ந்தன. மீண்டும், மாயூரநாதனையும் அஞ்சனாயகி யம்மையையும் வாயார வாழ்த்தி மனதாரத் துதித்து, அவர்களது திருவடித் தாமரைகளைத் தொழுது நின்றன. அக்காலையில் மாயூரேசன் திருவருளால் வானத்தின்மீது வந்த விமானத்தின்மேலேறி யாவரு மதிசயிப்பத் தேவலோகஞ் சென்று வாழ்ந்தன.

திருச்சிற்றம்பலம்.

## தீர்க்க சங்கை முத்தி யடைந்த சரித்திரம்,

பூவுலகிற் சொல்லொணாத சிறப்பு வாய்ந்து விளங்கும் அயோத்திமாநகரத்தை யாண்ட தசரதகுமாரரான ஸ்ரீராமமூர்த்தி அதிவீரர்களான இராவணாதி ராக்ஷசர்களைச் செயித்து, தனது நகரத்தையடைந்து தனது தம்பிமார்களாகிய இலக்குவன், பரதன், சத்துருக்கன் இம்மூவரும் புடைசூழ அரசாட்சிபுரிந்துவரும் நாளில், அஸ்வமேதயாகம் ஒன்றியற்றினார். அந்த வேள்வியைக் காணும் பொருட்டு அட்டகோண் முனிவராதிப் புங்கவர் யாவரும் வந்து சேர்ந்தார்கள். அப்போது ரோமசமுனிவரும் அங்கு வந்தடைந்தார். அவரைக் கண்ட இராமனாதியாவருந் தொழுதார்கள். பின்பு ரோமசமுனிவர், அவ்விடத்துற்ற அட்டகோண் முனிவரைப்பணிந்தார். அவர் தன்னை வணங்கி ரோமச முனிவரைப்பார்த்து, நீர் நூறு கற்பங்கண்ட விருத்தாப்பிய முனிவரர், யானோ நும்மாயுளிற் பாதியாகிய அன்பது கற்பம்கண்டவன்; ஆகையாலென்னை வணங்குவது தகாது என மொழிந்தார். அதைக்கேட்ட ரோமசமுனிவர், வயது முதிர்ந்ததினாலே பெருமையுண்டாகுமா? நீரோவேண்டிய வரத்தைக் கொடுக்கும் மாயூர க்ஷேத்திரத்துற்ற இடபதீர்த்தத்தில் வருடந்தோறும் விருப்புடன் ஆடல் செய்பவர். ஆனதுபற்றி நீரே பெருமையிற் சிறந்தவர். அந்த இடபதீர்த்த பிரபாவத்தை, முன்பு நிகழ்ந்த ஓர் சரித்திரத்தைக்கொண்டு தெரிந்து கொள்ளலாம். திராவிட தேசவாசியாகிய விட்டுணுசாமி யென்னும் மறையவன்



நற்குணம் வாய்ந்தவன், தராதலமெல்லாம் புகழப்பட்டவன். அவன் மனைவி யிரேசையென்று சொல்லப்பட்டவள். அவள்டால் அவனுக்கு இத்த குமாரர்கள், அரி, கவி, சிவன் என்னும் மூவர், அம்மூவரில் மூத்தோனாகிய அரியின் மேன்மையை யறிந்து அவனுக்கு விவாகம் செய்துவைத்தான் அம்மறையவன். அதுகண்டமற்ற இரண்டு குமாரர்களும், உழவுத்தொழிலில் மேன்மை யடைந்தவராகித் தனது முன்னோனை, வேண்டாதவராய் வெளிப்படும்படிச் செய்தனர். அரியும் தனது மனைவியை மாதுலன் வீட்டுக் கனுப்பிவிட்டுத் தான் புறப்பட்டு, மாயூர நகரம் சென்று, துலாமாதத்தில் இடபதீர்த்தத்தில் மூழ்கி யென் மனோரதத்தை முடித்துக்கொண்டு திரும்புவேன் என்று கூறிச் சென்றான். அநேக காதவழி நடந்து சென்று சித்திர கூடம் சேர்ந்தான். ஆங்கு பசியினால் வருந்தித் துன்புற்றான். அப்பசியைத் தீர்க்க முயன்றான். இத்தருணத்தில் அப்பிராமணன் தனக்கு முன்னே தோன்றிய புகையைக் கண்டு, அவ்விடத்தில் யாராவது வசிக்கவேண்டுமென்றெண்ணங்கொண்டவனா யாங்கு மேவினான். அவன் வரவைக்கண்ட ஓர் அரக்கி, மனமுவந்து ஓர் பிராமணப் பெண்ணாகி, விறகுதேடவந்தவள்போலக் குறிப்புக்காட்டி நடித்தாள். பிராமணன் அப்பார்ப்பினியை நோக்கி அம்மா! நான் பசியால் வாடி நின்றேன் அப்பசிதீர வுன்னாலியன்ற வரை யமுது கொடுக்க வல்லவியோ வென்று கேட்டான். பிராமணப் பெண்வடிவங்கொண்ட அவ்வரக்கி, இப்பிராமணன் நாமிச்சித்தபடியே யுரையாடினான். நல்ல காரியமாயிற்று, என்று மனதிற் சிந்தித்துக்கொண்டு, பரிவுடன் அவனை யழைத்துவந்து, அவன் பசியார அன்னமிட்டு, ஐயரே படுத்து நித்திரை செய்யுமென்று கூறி, ஓர் பாய் தலையணையையுங் கொடுத்தாள். மறையவன், வழிநடந்து வந்த சிரமத்தாலே களைப்படைந்து படுத்துறங்கினான். அத்தருணத்தில் கொடிய பாவியாகிய அரக்கி, அவ்விருபிறப்பாளனைக் கொல்ல நினைத்தாள். மாயூரஞ்சென்று, இடபதீர்த்தத்தில் நீராடி, ஆங்குறையும் வள்ளலைப் போற்றி எனதல்லலைத் தொலைப்பேன் என்று சங்கற்பித்துக்கொண்டு வந்த மறையவனுக்கு நேர்ந்த ஆபத்தை யறிந்த மாயூரநாதன் திருவருளால், "ஓ அரக்கி நீ யிந்த மறையோனைக் கோறல் புரியாதே, அவற்கு நின்பிறப்பை யுரைக்கில் இரக்கமற்றவுன்னுடைய உருவம் நீங்க, அவனுனக்குக் கிருபை

புரிவன்'' என்று உரத்த சத்தத்தோடு ஆகாயத்தில் நின்று ஓர் வாக்
கெழுந்தது. அதனால் அந்த அந்தணனும் விழித்துக்கொண்டான்.
அதையுணர்ந்த அந்த அரக்கி, தன் சுயரூபத்தோடு மறையவன்
முன்னணுகி வணங்கி நின்றாள். பிராமணனும், அச்சமெய்தி அக்
கொடிய அரக்கியை நோக்கி, நீயார்? என்பால் உனக்கென்ன காரி
யம் என்று கேட்டான். அவ்வரக்கியும் மெய்நடுங்கி, ஓ புனிதனே!
"என்பெயர் தீர்க்கசங்கை; யான் முற்பிறப்பில், ஒப்பற்றுவிளங்கும்
யமுனா நதி தீரத்தில் வசிக்கும், இராமன் என்னும் பெயர் பூண்ட
மறையவனீன்ற புதல்வி; அப்போது என்னமம் வேங்கடி; எனது
தந்தை தனது குலத்துக்கேற்ற கிருஷ்ணன் என்னும் பிராமணப்பிரம
சாரிக்கு என்னைவிவாகஞ்செய்துகொடுத்தார். அவனும் என்னோடு
கூடி இல்வாழ்க்கையை நடத்தும்போது, நான் அவ்வாழ்க்கையை
மதித்திலேன். எனது மாமன் மாமியாரையும் தினந்தோறும் வைது
போராட்டம் செய்வேன். மற்ற யாரையும் சிற்றத்துடன் வாதாடு
வேன். இப்படியாக என் துஷ்டத்தனத்தை யறிந்த நகரமாக்கள்
என் புருடனையும் என்னையும் அக்குடும்பத்தைவிட்டு நீக்கித் தனி
யாகக் குடித்தனம் புரியுமாறு வைத்தார்கள். அப்போதும்
என்புருடனை நான்மதித்து வணங்கிப் பேணமாட்டேன். கொடு
மையேசெய்து உபத்திரிப்பேன், தினம்ஒன்றுக்கு நான்மட்டும் பதக்
கரிசிவடித் துண்பேன்; எனது கொடியநடைக்கஞ்சி யெனது புருட
னும் உயிர்துறந்து மாண்டான். யானும்விதவையாகினேன். பேயு
றங்கும் நடுச்சாமத்தினும் நானுறங்கேன். எனதிச் சைப்படி
திரிந்து பணம் சம்பாதிப்பேன். இவ்வாறு பலநாள் யானார்ச்சித்த
பொருளை யெல்லாம் திருடர்கள் கைக்கொண்டார்கள். யானே
வெறுங்கையளாகி யுணவுக்கு வழியற்று, உடம்புவருந்தி ஆவிதுறந்
தேன். எமலோக மடைந்து தருமராஜனால் தண்டிக்கப்பட்டு பல
நாள் கொடிய நரகவாசஞ் செய்து, பின்பு பிணம் பிடுங்கித் தின்னும்
இவ்வரக்கி வடிவம் பெற்றேன். இப்பாவந்தொலைய நீர் ஓர் வழி
காட்டியருள வேண்டும்'' என்று வேண்டிக்கொண்டாள். மறையவ
னும், அரக்கி கூறியதைக் கேட்டு மனமிரங்கி, அக்கொடியாளை
நோக்கி, நீ யென் பின்வந்தால் உன்கவலையை யொழிப்பேன் என்று
கூறித் தான் எழுந்துசென்றான். தீர்க்கசங்கை யென்னும் அரக்கியும்
அவனைப் பின்தொடர்ந்து சென்றாள். மறையவன் மாயூரஞ்
சென்று இடபதீர்த்தக் கரை யடைந்து பின் திரும்பிப் பார்த்



தான். தன்னைத் தொடர்ந்துவரும் அரக்கியைக் கண்டான். கண்
டதும் அவளைப் பார்த்து, நீ யிந்தத் தீர்த்தப் புனலில் மூழ்குவா
யானா லுன் பிறவி நீங்கும் என்று செப்பினான். அவ்வரக்கியும்,
பிராமணன் உரைத்த வார்த்தையைத் தலைமேற்கொண்டு, உருகிய
மனத்தோடு அப்புண்ணிய நீரில் மூழ்கினாள். மூழ்கலோடும்
இழிவுற்ற தனது தேகம் நீங்கித் தேவ சரீரம் பெற்று விளங்கி
னாள். கரைமேனின்ற அந்தணனைத் தொழுது வணங்கினாள்.
பின்பு மாயூர நாதர் திருவடியையும், அஞ்சனாயகியம்மை பொற்
பதத்தையும், களிந்த சிந்தையுடன் போற்றிப் பணிந்தாள். பணித
லும் அப்பரமனருளால், ஒளிவீசாநின்ற விமானமொன்று ஆகா
யத்திடை தோன்ற, அதிலேறி சுவர்க்கலோகம் போய்ச் சேர்ந்
தாள். வேதியனும், வியப்புற்று அத்தீர்த்தமாடி ஆதி மூர்த்தியை
யும், அம்பிகையையும் பணிந்து, கருதியவனைத்தும் பெற்றுத் தன்
நகரமுற்று, மாதுலனில்லம் வாழும் மனைவியை யழைத்து, அவ
ளோடு களிப்புற வினிது வாழ்ந்தான். அத்தகைய இடபதீர்த்தத்
தில்வருடந்தோறும் விதிப்படி நீராடிவரும், நீரே யுத்தமமான
முனிவராவீர்; நும்மையொப்பவ ரெவருமில்லை. ஆகையாலும்மைப்
பல காலும் பணிந்திடுவேனென்று செப்பினார். இச்சரிதங்கேட்ட
இராமனாதி யாவரும் ஆனந்தமடைந்தார்கள்.

திருச்சிற்றம்பலம்.

## ஆலய தெரிசனமும், தர்மமும்.

## யோகவித்தமன் சரித்திரம்,

உலகத்திலுற்ற ஆன்ம கோடிகள் செய்யும் பாபத்தைப்போக்
கிச் சுகத்தைக் கொடுக்கும் புண்ணிய தீர்த்தங்களில் கண்ணியம்
பொருந்திய கோதாவரி நதி தீரத்திலுள்ள ஓர் சிற்றூரில் மறையவர்
குலத் துதித்த யோகவித்தமன் என்னும் வேதிய னொருவ னிருந்
தான். அவன் மிக்க சாது. தர்ம சிந்தையுள்ளவன். தவஞ் செய்வ
தில் விருப்பமுள்ளவன். உலகத்திலுற்ற யாவராலும் புகழப்பட்ட
வன். இத்தகைய குணவானா யிருந்த போதிலும், முற்பிறப்பிற்
செய்த தீவினைப் பயனால் யாவராலு மிகழப்பட்ட கொடிய நடை

யையுடைய சண்டியென்னும் நாமம்பெற்ற ஓர் பெண், அவனுக்கு மனைவியாக வந்து நேர்ந்தாள். அவள் கொடிசூரியாக விருந்த போதிலும், அவளுடன் கூடியில்லறம் நடத்தி அவள் பால் அநேகம் புத்திரரையும் பெற்றான். மிக்க தரித்திரத்தையு முற்றான். நற்குணம் எள்ளளவேனு மில்லாத சண்டியென்னும் மனைவியாலும், அவள் பாலுதித்த துர்க்குண சீலரான புதல்வர்களாலும், சகிப்பதற் கரிய துயரக்கடலில் மூழ்கினான். அதினின்று கரையேறும் வழியைத் தேடமுயன்றான். தான் தனிமையான ஓரிடத்தி லிருந்துகொண்டு ஏகாக்ர சித்தனாய், ஹா! "கொடிது கொடிது வறுமைகொடிது; அதனினுங் கொடிது இளமையில் வறுமை; அதனினுங்கொடிது அறிவிலாப்புதல்வர்; அதனினுங்கொடிது. அன்பிலாப் பெண்டிர்; அதனினுங்கொடிது இன்புற அவர் கையிலுண்பது" என்று சிந்தித்தான். நாமோ இப்போது தரித்திர திசையை யடைந்திருக்கிறோம். 'மிடியுறில் முளைப்பதென்'? ஆகையால் முதலில் அவ் வறுமையை யொழிக்க வழி தேடவேண்டுவது அவசியமெனத் தனக்குள் தீர்மானித்தான். தீவினையின் வசத்தால் இவ் வறுமை நோய் நம்மிடம் வந்தணுகியது. இதனை யொழிக்க நல்வினை புரிவதே தகுதி. அதாவது அரிய தவத்தைச் செய்து அதன் பயனால் இவ்வறுமையை அடியோடு ஒழித்துவிடுவதே தக்க வழியெனத் தேறினான். உடனே இல்லக் கிழத்தியையும், மக்களையும் வீட்டிலிருத்திவிட்டுத் தான் தனியாகப் புறப்பட்டு, இமயமலைச் சாரலையடைந்து, அங்குற்ற ஓர் வனத்திற்றங்கி, பத்மாசனத்திற் பொருந்தி, வாயுவை ரேசக பூரகம் செய்து கும்பித்து மேலெழுப்பி, அன்னாகாரத்தை நீக்கி, பிரம தேவனை நோக்கி, அரிய தவத்தைப் புரிவானானான். அத் தபாக்னி தேவலோகத்தை முட்ட, அங்குள்ள தேவர்கள் இச்செய்தியைச் சரஸ்வதி நாயகனுக் கறிவித்தார்கள். தாமரை மலரில் வசிக்கும் இரணிய கருப்பன், உடனே வனத்திற்றவஞ் செய்யும் மறை வல்லோனிடமேகினான். இதனை யுணர்ந்த இருபிறப்பாளன், பொருக்கென வெழுந்து, பிரமன் திருவடியில் சாஷ்டாங்கமாக விழுந்து நமஸ்கரித்தெழுந்து தோத்திரம் புரிந்து நின்றான். விரிஞ்சன், தன்னடி பரவி நின்ற மறையோனை நோக்கி, ஏ தபோசிரேஷ்ட! உன் தவத்தை மெச்சினோம். நீ வேண்டிய வரம் யாது? அதனைக்கேள் தருகிறோம் என்றான். மறையாளனாகிய யோகவித்தமனும், திசைமுகன் பாதத்தில் விழுந்து நமஸ்கரித்து ஐயா! யானோ

நாவலிஸ்டு M. A. நெல்லையப்பர்

# கதாரத்நாகரம் ஆபீஸில்

புராணம், இதிகாசம், கதை, நாவல், நாடகம் முதலிய தமிழ்ப்புத்த
கங்கள் விற்பனைக்குத் தயாரா யிருக்கின்றன, ஒவ்வொரு புத்தகத்
துக்கும் வி. பி. தபாற் செலவு பிரத்தியேகம். மலே நாடு
ஆப்பிரிக்கா முதலிய வெளிநாடுகளி லிருப்போர் ஒரு ரூபாய் விலை
யுள்ள புத்தகத்துக்கு 4 அணா வீதம் தபாற்செலவையும் சேர்த்து
மணியார்டராய் அல்லது போஸ்டல் ஆர்டராய் அனுப்பவேண்டும்.
சிங்கப்பூர், பினாங்கு, மலாகா (Stratis Settlements.) முதலிய
விடங்களில் உள்ளவர்கள் வி. பி. மூலமாய் ஏற்றுக்கொள்ளலாம்.

## ஸ்ரீமத் பாகவதம்.

முதல் ஸ்கந்தம் முதல் நாலு ஸ்கந்தம் வரையில், மூலசுலோகம், ஸ்ரீதரீய வியாக்யானம், தமிழ் மொழி பெயர்ப்பு.

1200 பக்கங்கள் கொண்டது, உயர்ந்த காலிகோவினால் பயிண்டு செய்யப்பட்டு கில்டு அக்ஷரத்துடன் கூடியது. விலை ரூபா 6 0 0

## ஸ்ரீமத் பாகவதம் தசமஸ்கந்தம்.

ஸ்ரீமத் பாகவதமானது சதுர்வித புருஷார்த்தங்களுள் பிரதானமான மோக்ஷ சாம்பிராஜ்யப் பேறு பெறுவதற்கு இன்றியமையாத சாதனமாகிய பகவத் பக்தி புகட்டத்தக்க அறிய நூலென்பது யாவரும் அறிந்த விஷயம். இத்தகைய கிரந்தம் தமிழ் சம்ஸ்கிருதாபிமானிகளாகிய நம்மவர் ஒவ்வொருவர் கிருகத்திலு மிருப்பது அவசியம். ஸ்ரீதரீய வியாக்கியானத்துடன் மூல சுலோகம், அந்த மூலத்துக்கேற்பத் தமிழ் மொழி பெயர்ப்புடன் அச்சிட்டு தசமஸ்கந்தம் தயாராயிருக்கிறது. ராயல் சயிஸில் 1200 பக்கங்கள் கொண்டது. விலை ரூபா 6 0 0

## ஆனந்த ராமாயணம்.

இது வால்மீகி மகாரிஷியால் வடமொழியில் இயற்றப்பட்டது. இதில் வால்மீகி ராமாயணத்தில் இல்லாத அநேக விஷயங்கள் அடங்கியுள்ளன. ஸ்ரீராம ஜனனமும், வளர்ப்பும், சீதாதேவியினுடைய ஜனனமும், அத்தேவிக்குப் பல பெயர் வந்ததற்கு காரணமும் விளக்கியிருப்பது படிப்பதற்கு வெகு இனிமையாயிருக்கும். ஆனந்த ராமாயணமென்ற இதன் பெயருக்கொத்தபடி

படிப்போர் மனதிற்கு உற்சாகத்தையும், ஆனந்தத்தையும் உண்டாக்கு மென்பதில் தடையில்லை, உயர்ந்த காலிகோ பயிண்டு செய்யப்பட்டுள்ளது.

விலை ரூபா 5 0 0

## அத்யாத்ம ராமாயணம்.

ஸ்ரீய: பதியாகிய நாராயணன், ஸ்ரீராமனாக வதரித்து துஷ்ட நிக்ரஹ சிஷ்ட பரிபாலனஞ்செய்த சரித்திரத்தைக் கூறும் இந்த அத்யாத்ம ராமாயணம் பார்வதி.தேவியாருக்கு பரமசிவனால் உபதேசிக்கப்பட்டது. இதில் வர்தா ராமர்களின் சரித்திரத்தை வியாஜீகரித்து ஆத்மஸ்வரூபம் கூறப்பட்டிருக்கிறது. அத்யாத்ம ராமாயணம் என்னும் பெயரே இதனுடைய அளவற்ற மகிமையை வெளியிடுகிறது. உலகில் மதிப்பேறிய ஒவ்வொரு கிரந்தமும் புண்ணிய புருஷர்களின் சரித்திரத்தைக் கூறும் வியாஜமாய் படனசிரவணஞ் செய்கிறவர்களுக்குச் சித்த சுத்தியையும் அதன் மூலமாக ஞானத்தையும், ஞானத்தாலடையும் மோக்ஷத்தையு மளிக்கிறது; அவ்வித கிரந்தங்களில் இந்த அத்யாத்ம ராமாயணத்தை முதன்மையாகச் சொல்லலாம்.

கலியுகத்தில் கொடும்பாவம் செய்தவர்களுக்கு ப்ரகதிகிடைக்கும் மார்க்கம் எந்த நூலில் கூறப்பட்டதென்று வினவிய நாரதருக்கு பிரமதேவர் இந்த அத்யாத்ம ராமாயணம் ஒன்றே அப்பரகதி செல்லு மார்க்கத்தைக்கூறுகிறதென்று சொல்லியிருக்கிறார். இவ்வித மகிமை வாய்ந்த இந்த அத்யாத்ம ராமாயணம் எழுகாண்டங்க ளுள்ளது. இது தகுந்த ஸம்ஸ்கிருத பண்டிதரைக்கொண்டு தமிழில் மொழி பெயர்க்கப்பட்டு, தமிழில் வேதாந்த சாஸ்திரங் கற்றவரால் பரிசோதிக்கப்பட்டு, பண்டிதரேயன்றி பாமரரும், படித்துப் பயன் பெறுமாறு எளிய தமிழில் எழுதப்பட்டுள்ளது. கிளேஸ்காகிதத்தில் முத்துக்கள்போன்ற அழகான அக்ஷரங்களில் பிழையறப் பரிசோதித்து அச்சிட் டிருக்கிறது.

இதில் இங்கிலீஷ் தமிழ்முகவுரை (By M. R. Ry. Dewan Bahadur A. Krishnaswami Aiyengar Avl. Retired Duputy Commr of Salt, Abkari, and Customs Dept.) யும், பிரம்மாண்ட புராணத்திலுள்ள அத்யாத்ம ராமாயணப் பிரபாவமும், விஷய அட்டவணையும், கடின பதங்களுக்குக் குறிப்புரை (foot notes) களும் சேர்க்கப்பட் டிருக்கின்றன. உயர்ந்த [illegible] கோ பயிண்டுடன் கூடியது.

விலை ரூ. 2 [illegible]

## வசீகரி.

இனிய தமிழ்நாவல். இவ்வரிய நாவல் பிரக்யாதிபெற்ற ஆங்கிலேய வித்வசிரோமணிகளி லொருவராகிய மிஸ்ஸெஸ் ஹென்றிவுட் என்னும் மாதினால் கதா ரூபமாய் வரையப்பட்டுள்ள புஸ்தகங்களுள் சிறந்ததாகிய ஈஸ்ட்லின் என்னும் நாவலை யொட்டி எழுதப்பட்டது. இஃது சிற்றின்ப விஷயங்களை மட்டும் வெகுவாய் விரித்துக் காட்டி ஆத்மாவுக்கு நிஷ்பிரயோஜனமாய்ப் போகும் சில நூற்களைப் போன்றதன்று. இது விசேஷமாய் பெண்கள் தம் கற்பழிதலை



டையும் கஷ்டங்களை யெடுத்துக் காட்டி யுள்ளது. சிற்றின்ப விஷயங்களில் உழன்று திரியும் ஆண் பெண் உருவமெடுத்த ஆன்மகோடி ஞானத்துக்கும் பொருந்திய நூலெனக் கொள்வதே முறை. இக்கதையின் சாராம்சம் கற்பழிதலால் வரும் கஷ்டங்கள் மாத்திரமன்று; வீண்பெருமை, டம்பம், அளவுக்குமிஞ்சிய செலவு, ஆவல், அடாதகாரியத்தில் தலையிடல் ஆகிய இவற்றால் நேரிடும் கஷ்டங்களும் அடங்கி யிருக்கின்றன. இப்புத்தகம் கிரவுன் அளவில் 850 பக்கங்களுக்குமே லுள்ளது. விலை ரூ. 1 0 0

---

## இனிய தமிழ் நாவல்கள்.

| | ரூ. | அ. |
|---|---|---|
| தேவலோக கிரிமினல் கேஸ். | 1 | 8 |
| வேதாந்த கிரிமினல் கேஸ் ... | 1 | 8 |
| தனபாலன் (2 பாகங்களும்) | 1 | 8 |
| அயாஷா (2 பாகங்களும்) ... | 1 | 8 |
| கமலாக்ஷி ... | 1 | 8 |
| விஜயசுந்தரம் ... | 1 | 8 |
| வித்யாநந்தர் ... | 1 | 4 |
| ஞானாம்பிகை ... | 1 | 4 |
| வசீகரி ... | 1 | 0 |
| வரத சுந்தரம் அல்லது துப்பறியும் இரண்டு சகோதிரங்கள் ... | 1 | 0 |
| மதிகெட்ட மனைவி ... | 1 | 0 |
| சந்திரோதயம் ... | 1 | 0 |
| மதனகாந்தி ... | 1 | 0 |
| மதனபூஷணம் ... | 1 | 0 |
| ஞானசம்பந்தன் ... | 1 | 0 |
| காமேந்திரன் ஞானலோசனி | 1 | 0 |
| சீதாராம் ... | 1 | 0 |
| சுசீலா ... | 1 | 0 |
| திரிலோக மோகனாங்கி ... | 1 | 0 |
| தர்க்கேசநந்தினி ... | 1 | 0 |
| மங்கம்மாள் அல்லது மதுரைக்கரசி ... | 1 | 0 |
| மனோரஞ்சிதம் ... | 1 | 0 |
| பிருதிவிராஜன் ... | 1 | 0 |
| [illegible]பசீலன் ... | 1 | 0 |
| [illegible]ஷி ... | 1 | 0 |
| [illegible]ம்பை ... | 1 | 0 |
| [illegible]மொழித் தொகுதி ... | 1 | 0 |
| லண்டன் திருடர் (முதற் பாகம்) ... | 1 | 0 |
| ஷை இரண்டாம்பாகம் ... | 1 | 4 |

| | ரூ. | அ. |
|---|---|---|
| வெண்டாமரையாள் ... | 1 | 0 |
| வீரவர்மன் வெற்றி | | |
| 1-வது பாகம் ... | 1 | 0 |
| 2-வது பாகம் ... | 1 | 0 |
| அந்தப்புரரகசியம் ... | 0 | 14 |
| கமலலோசனி ... | 0 | 12 |
| சத்தியவல்லி ... | 0 | 12 |
| சாரஸநேத்ரி ... | 0 | 12 |
| ஐவன்ஹோ ... | 0 | 12 |
| சுந்தரி மனோகரன் ... | 0 | 12 |
| சுமுகன் ... | 0 | 12 |
| ஞானகாந்தி ... | 0 | 12 |
| பிரேமகாந்தன் ... | 0 | 12 |
| பிரேமகலாவதியம் ... | 0 | 12 |
| மீனாக்ஷி சுந்தரன் ... | 0 | 12 |
| திக்கற்ற இருகுழந்தைகள் ... | 0 | 12 |
| சித்திரரேகை ... | 0 | 12 |
| பத்மரேகை ... | 0 | 12 |
| லீலா ... | 0 | 12 |
| இந்திரஜித்தன் ... | 0 | 12 |
| ஆனந்த சுந்தரி ... | 0 | 12 |
| கன்னியின் முத்தம் | | |
| 1-வது பாகம் ... | 0 | 12 |
| 2-வது பாகம் ... | 0 | 12 |
| சுந்தரன் ... | 0 | 12 |
| ராஜாம்பாள் ... | 0 | 12 |
| சந்திர காந்தா ... | 0 | 12 |
| மோகன சுந்தரம் ... | 0 | 12 |
| ஆனந்த கிருஷ்ணன் ... | 0 | 12 |
| அநுமான்லிங் ... | 0 | 12 |
| பனங்குளம் ... | 0 | 12 |
| ஸ்ரீமதி ... | 0 | 12 |
| கிருஷ்ணவேணி ... | 0 | 12 |

| | ரூ. | அ. |
|---|---|---|
| தேவிசந்திரப்ரபா ... | 0 | 10 |
| பத்மாஸனி ... | 0 | 10 |
| குலசேகரன் ... | 0 | 10 |
| லீலாவதி ... | 0 | 10 |
| புருஷோத்தமன் ... | 0 | 10 |
| மாலிகா பூஷனி ... | 0 | 10 |
| பத்மநாபன் ... | 0 | 10 |
| கமலினி ... | 0 | 10 |
| ரோஜா ... | 0 | 10 |
| விஜயலெக்ஷ்மி ... | 0 | 10 |
| சற்குணசந்திரன் ... | 0 | 10 |
| சத்தியசீலன் ... | 0 | 10 |
| கோமளம் குமரியானது ... | 0 | 8 |
| மனோரமா ... | 0 | 8 |
| தலையணைமந்திரஉபதேசம் ... | 0 | 8 |
| குணசுந்தரன் ... | 0 | 8 |
| ஞானசுந்தரம் ... | 0 | 8 |
| லலிதாங்கி ... | 0 | 8 |
| தீனதயாளு ... | 0 | 8 |
| சாரதாம்பாள் ... | 0 | 8 |
| வத்ஸலா ... | 0 | 8 |
| சந்திரசேகரன் ... | 0 | 8 |
| ஆனந்தமடம் ... | 0 | 8 |
| உமா ... | 0 | 8 |
| காமாக்ஷி ... | 0 | 8 |
| அழகுசுந்தரி ... | 0 | 8 |
| ராஜேஸ்வரி ... | 0 | 8 |
| குணசுந்தரி ... | 0 | 8 |
| மங்களாம்பாள் ... | 0 | 8 |
| சுகதேவி ... | 0 | 8 |
| சுகுண ரஞ்சினி ... | 0 | 8 |
| மோகன ராணி ... | 0 | 8 |
| கமலமதி ... | 0 | 8 |
| நன்றியறியாமகன் ... | 0 | 8 |
| பவானந்தர் ... | 0 | 8 |
| லக்ஷ்மி ... | 0 | 8 |
| ஜெயலக்ஷ்மி ... | 0 | 8 |
| கோமளம்காஞ்சியாத்திரை ... | 0 | 8 |
| ஷேக்ஸ்பியர் நாடகக் கதைகள் ... | 0 | 6 |
| தசகுமார சரித்திரம் 1-வது பாகம் ... | 0 | 6 |
| ஞானம்பாள் ... | 0 | 6 |
| கற்புக்கரசி ... | 0 | 6 |
| புத்திமானே பல்வான் ... | 0 | 6 |
| பவழக்கொடி ... | 0 | 6 |
| காந்தாமணி ... | 0 | 6 |
| சந்திரானனா ... | 0 | 5 |
| சிந்தாமணி ... | 0 | 5 |
| மோகனா ... | 0 | 5 |
| கருணாகரன் ... | 0 | 4 |
| சம்பந்த மூர்த்தி ... | 0 | 4 |
| வசந்தசேனை ... | 0 | 4 |
| பரதன் ... | 0 | 4 |
| யோகினி ஜாலக்கதைகள் ... | 0 | 4 |
| சாரதாநந்தர் ... | 0 | 4 |
| சின்னதம்பி ... | 0 | 4 |
| புவன சுந்தரி ... | 0 | 4 |
| பிரபாவதி ... | 0 | 4 |
| சூக்ஷ்மதரிசி ... | 0 | 4 |
| சாகுந்தலம் ... | 0 | 4 |
| கண்மணி ... | 0 | 3 |
| கிரிஸெல்டா ... | 0 | 8 |
| மாயவினோதகதை ... | 0 | 4 |
| தேவராஜு ... | 0 | 6 |
| ஜியார்ஜ் சக்கரவர்த்தி ... | 0 | 8 |

## தமிழ் நாடகங்கள்.

[கதைப்போல் வசன நடையில் எழுதப்பட்டவை.]

| | ரூ. | அ. |
|---|---|---|
| போஜசரித்திரம் (உயர்ந்த பதிப்பு) ... | 2 | 8 |
| அமலாதித்யன் ... | 1 | 0 |
| பானுமதி ... | 0 | 12 |
| கண்ணகி ... | 0 | 12 |
| லீலாவதி சுலோசனா ... | 0 | 12 |
| மனோஹரன் ... | 0 | 12 |
| கள்வர் தலைவன் ... | 0 | 12 |
| சத்ருஜித் ... | 0 | 12 |
| காதலர் கண்கள் .. | 0 | 12 |
| இரண்டு நண்பர்கள் ... | 0 | 12 |
| விரும்பியவிதமே ... | 0 | 12 |
| ரத்னவளி ... | 0 | 12 |
| வாணீபுரவணிகன் ... | 0 | 12 |
| மகபதி ... | 0 | 12 |
| லதாங்கி லலிதாங்கி ... | 0 | 12 |
| பாமாவிஜயம் ... | 0 | 12 |
| ரத்னவிமானம் ... | 0 | 14 |
| தாருகாசவம் ... | 0 | 14 |



| | ரூ. | அ. |
|---|---|---|
| சாளாகினி விஜயம் ... | 0 | 14 |
| ஜானகி பரிணயம் ... | 0 | 12 |
| புஷ்பாகரன் ... | 0 | 10 |
| சாரங்கதரன் ... | 0 | 8 |
| யயாதி ... | 0 | 8 |
| காலவரிஷி ... | 0 | 8 |
| பேயல்ல பெண்மணியே ... | 0 | 8 |
| மார்க்கண்டேயர் ... | 0 | 8 |
| பொன் விலங்குகள் ... | 0 | 8 |
| நற்குல தெய்வம் .. | 0 | 8 |
| வேதாள உலகம் ... | 0 | 8 |
| வனஜாக்ஷி ... | 0 | 8 |
| மாளவிகாக்கினி மித்திரம் ... | 0 | 8 |
| மாயாவதி ... | 0 | 8 |
| பங்கஜாக்ஷி ... | 0 | 8 |
| விக்ரமோர்வசீயம் ... | 0 | 8 |
| ஸ்திரீவசீகரம் ... | 0 | 8 |
| வல்லி பரிணயம் ... | 0 | 8 |
| யுத்த லோலன் ... | 0 | 8 |
| வாசந்திகா ... | 0 | 8 |
| தமயந்தி ... | 0 | 8 |
| சபலை ... | 0 | 8 |
| பீஷ்மர் பிரம்மசரியம் ... | 0 | 8 |
| சந்திரஹாஸன் ... | 0 | 8 |
| தாரணி ... | 0 | 8 |
| சுதர்மகலாவதியம் ... | 0 | 6 |
| லோபி ... | 0 | 6 |

## இதர புஸ்தகங்கள்

| | ரூ. | அ. |
|---|---|---|
| நளோபாக்யானம் ... | 0 | 12 |
| பிரபோத சந்திரோதயம் (வசனம்) ... | 1 | 0 |
| ஷை நாடகம் ... | 0 | 10 |
| 12 நீதிக்கதைகள் ... | 0 | 10 |
| இயற்கை அற்புதங்கள் ... | 0 | 8 |
| புத்தர் சரித்திரம் ... | 0 | 8 |
| காதம்பரி (2 பாகங்களும்) ... | 1 | 12 |
| மிருச்சகடி ... | 0 | 4 |
| விநோதரசமஞ்சரி ... | 1 | 2 |
| [illegible]யார் ... | 1 | 2 |
| இந்து பைபிள் ... | 1 | 12 |
| [illegible]ருக்ஷம் ... | 1 | 12 |
| [illegible]கலகம் ... | 1 | 8 |
| பதிவிரதைகள் சரித்திரம் ... | 0 | 12 |
| சங்கரவிஜயம் ... | 1 | 0 |
| பகவத்கீதை ... | 0 | 12 |
| பிரபஞ்ச உற்பத்தி ... | 2 | 0 |
| ஜீவவர்க்க போதினி 3 பாகமும் ... | 1 | 10 |
| காளிதாஸர் சரித்திரம் ... | 1 | 0 |
| இந்து ஸ்திரி ரத்னங்கள் (படத்துடன்) ... | 0 | 8 |
| பட்டணத்தார் புராணம் ... | 1 | 10 |
| நைடதம் ... | 2 | 0 |
| திருக்குறள் உரையுடன் ... | 2 | 0 |
| வில்லிப்புத்தூரார் பாரதம் ... | 3 | 0 |
| நாலாயிரப் பிரபந்தம் ... | 3 | 0 |
| ஸ்ரீ விருத்திப் பிரபாகரம் ... | 4 | 0 |
| பஞ்சதசப் பிரகரணம் ... | 1 | 0 |
| பிரபுலிங்கலீலை வசனம் ... | 0 | 12 |
| தாயுமானவர் பாடல் (அரும்பத உரை) ... | 1 | 0 |
| குசேலோபாக்யானம் ... | 3 | 0 |
| பக்தலீலாமிருத வசனம் ... | 3 | 0 |
| விவேகாநந்த விஜயம் ... | 1 | 4 |
| ராமகிருஷ்ண விஜயம் ... | 1 | 4 |
| திருமந்திரம் (அரும்பத உரை) ... | 3 | 8 |
| பச்சையப்ப முதலியார் சரித்திரம் ... | 0 | 10 |
| பாரதம் 4 வால்யம் கிக்கு கடிதம் ... | 8 | 8 |
| கம்பராமாயண வசனம் 2-வால்யம் .. | 6 | 0 |
| ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் பால காண்டம் (பண்டிட்நடேசசாஸ்திரியார் பதிப்பு.) ... | 1 | 12 |
| ஷை அயோத்யாகாண்டம் ... | 3 | 0 |
| ஷை ஆரணிய காண்டம் ... | 1 | 12 |
| ஷை கிஷ்கிந்தா காண்டம் ... | 1 | 12 |
| ஷை சுந்தர காண்டம் ... | 1 | 12 |
| ஷை யுத்த காண்டம் ... | 3 | 0 |
| பெரிய புராணம் வசனம் படத்துடன் ... | 2 | 0 |
| திருவிளையாடற் புராணவசனம் | 2 | 0 |
| அருணாசல புராணம் ... | 0 | 22 |
| அரிச்சந்திர புராணம் ... | 1 | 4 |
| சுந்தரமூர்த்திதேவாரப்பதிகங்கள் | 0 | 6 |
| கல்லாடம் மூலமும் உரையும் | 3 | 0 |

| | ரூ. | அ. |
|---|---|---|
| ராமலிங்கசுவாமி அருட்பா ... | 3 | 0 |
| பேரகராதி 20th Century Tamil Dictionary | 6 | 0 |
| பழமொழி அகராதி ... | 2 | 0 |
| பக்தவிஜயம்உயர்ந்தபதிப்பு... | 3 | 0 |
| அராபிரைட்கதை படங்களுடன் ... | 2 | 8 |
| கதாரத்னவளி ... | 2 | 8 |
| குடும்ப சம்ரக்ஷணி ... | 2 | 0 |
| சூதசம்ஹித சாராமிருத வசனம் ... | 1 | 0 |
| தேசாபிமானிகள்சரித்திரம்... | 0 | 12 |
| தியாகராஜ கீர்த்தனை ... | 1 | 4 |
| மூவர்தேவாரம்பண்முறை ... | 3 | 0 |
| பக்தமாலா வசனம் ... | 3 | 8 |

| | ரூ. | அ. |
|---|---|---|
| இந்துபாகசாஸ்திரம் ... | 2 | 0 |
| சுந்தரமூர்த்தி தேவாரம் மூலமும், உரையும் ... | 3 | 0 |
| மனமோகனமாணிக்கம் ... | 1 | 4 |
| அம்பாலிகை ... | 0 | 12 |
| சச்சிதாநந்த சிவம் ... | 0 | 12 |
| கம்பராமாயணம் செய்யுள் (2 வால்யம்) ... | 6 | 0 |
| தக்காணத்து பூர்வகால கதைகள் ... | 0 | 8 |
| தக்காணத்து மத்யகால கதைகள் ... | 0 | 8 |
| வேதாந்தப்பிரதீபம ... | 0 | 10 |
| திரவியகுண ரத்னகரம் ... | 1 | 0 |
| கந்தபுராணச்சுருக்கம்வசனம். | 0 | 8 |

சில புத்தகங்களே அச்சிடப்பட்டன] ஸ்ரீ [தீவிரப்படுங்கள்! தீவிரப்படுங்கள்!

பாண்டுரங்காய நம:

## ஸர்வ மத சம்மதம்

ஸ்ரீ மாந் கோயில் தேவராஜ ஸ்வாமி விரசித

# பக்த விஜயம்.

மஹாராஷ்ட்ர பாஷையிலிருந்த இந்த தாசர்களின் சரித்திரங்களை தஞ்சாவூரில் பிரக்கியாதி பெற்றிருந்த துளஸி அய்யர் என்பவர் முதல் முதலில், திராவிடத்தில் காவ்ய ரூபமாக எழுதினார். அதை அநுசரித்து, எமது ஆசாரியராகி ஸ்ரீமாந்- கோயில்- தநால- தேவராஜ ஸ்வாமி என்பவர், தெலுங்கு பாஷையில் வசனமாக அநேக பகவத்கீதா வாக்யங்களுடனும் ஆசார்யர்கள் அருளிய அர்த்த விசேஷங்களுடனும், பிரமாணங்களுடனும், ஸ்தோத்திரங்களுடனும் எழுதி இருக்கின்றனர். இப்போது நாங்கள், அதை அநுசரித்தே, தமிழில், இனிய வசன நடையில் சந்தர்ப்பத்திற் குகந்தவாறு நாலாயிரம், பாகவதம், பாரதம், அஷ்டப் பிரபந்தம், குறள்முதலிய பல சிறந்தநூல்களிலிருந்து மேற்கோள்களைச் சேர்த்து நல்ல காகிதத்தில், முத்துப்போன்ற எழுத்துக்களால், எழுத்துப்பிழைகளின்றித் திருத்தமாய் அச்சிட்டு இருக்கின்றோம்.

இந்தப் புத்தகத்தில் அமைக்கப்பட்டுள்ள ஆப்டோன் பொட்டோப் படங்களைப்பார்க்கும்போது, அந்தந்த மூர்த்திகளை நேரில் தரிசித்ததுபோலவே இருக்கும். ஆகையால் இந்தப் புத்தகத்தை யாவரும் வாங்கி வாசித்து ஆனந்தித்து பகவத் பக்தர்களாக வேண்டுமென்று பகவானைப்பிரார்த்திக்கின்றோம். புத்தகத்தைப் பிரித்துப் பார்க்கும்போதே ஆனந்தம் உண்டாகும்.

விலை ரூபா 3-0-0 தபாற் செலவு 5. அணா.



நோயும் இடையாது. எரிகிறதுமில்லை.

விலையுயர்ந்த வஸ்துக்களால் தயார் செய்யப்பட்ட

## ரோம சங்காரி மஹாராஜா ஸோப்பு.

ரிஜிஸ்டர் நெ. 37 பருங்கள்.

இந்த சோப்பின் மேன்மையான குணங்களைப் பற்றி இராஜாக்களும் ஜமீன்தாரிகளும் சுகமாக இதை உபயோகப்படுத்திக்கொண்டு வருகிறார்கள் இதன் முக்கியமான குணங்கள் யாதெனில் ரோமத்தை நீக்கவேண்டிய இடத்தில் ஜலத்தினால் சுத்தம் செய்து இந்த சோப்பை 5 நிமிஷகாலம் தேய்த்துவிட்டு பிறகு துணியினால் துடைத்துவிட்டால் அந்த இடம் மிருதுவாய்விடும். நோயும் எரிச்சலும் உண்டாகிறதில்லை.

ஒருதரம் உபயோகித்தவர் இதர சோப்பை உபயோகிக்க மாட்டார்கள்.

விலை 3 கேக்கு உள்ள பெட்டி 1-க்கு ரூபா 1-0-0 தபால் சார்ஜ் அணா 0-4-0 3. பெட்டிகளுக்கு ரூபா 2-10-0

## அழகான புட்டி பரிமளமிகுந்த செண்டுகள்.

| | | | | |
|---|---|---|---|---|
| | | 0 | 12 | 0 |
| செண்டு ஆட்டோ மோஹினி ஒரு டிராம் புட்டி | | 2 | 0 | 0 |
| ஷை ½ அவுன்ஸ் | | 1 | 4 | 0 |
| ஆபீஸ் மல்லியப்பூ ஒரு புட்டி | | 2 | 0 | 0 |
| ஆபீஸ் குல்பகார் | ஷை | 1 | 8 | 0 |
| ஒட்டோ டில்லாரம் | ஷை | 1 | 0 | 0 |
| க்ஷம்பா அத்தர் | | 1 | 0 | 0 |
| ஆபீஸ் ரோஸ் | | 1 | 4 | 0 |
| ஆபீஸ் கஸ்தூரி | | | | |

மேற்கண்ட பாட்டில்கள் அழகான ஜெர்மன் டியூபில் பாக்பண்ணியிருக்கிறது. பரிமளவாசனை தரத்தக்கது.

வேண்டியவர்களுக்கு காட்லாக் இனாமாய் அனுப்பப்படும்.

R. V. பண்டிட் அண்டு கம்பெனி.
நெ 6 பந்தர் தெருவு, மதராஸ்.

# எல்லோருக்கும் முக்கியமானது.

கீழ்க்கண்ட எங்கள் விலாசத்திற்கு எழுதினால் உங்களுக்குச் சென்னைப் பட்டணத்திலிருந்து எந்த விதமான சாமான்கள் வேண்டியிருந்த பொழுதிலும் வாங்கி அனுப்புவோம். எங்களிடத்தில் மிகவும் உயர்ந்த சாமானும் குறைந்த விலைக்கு அகப்படுகிறவைகள் பின்வருமாறு.

1. நாற்காலி மேஜை முதலிய சாமான்கள்
2. பென்ஸில், பேனா, புஸ்தகம் முதலிய ஸ்டேஷனரி சாமான்கள்.
3. கியாதிபெற்ற பேடன்ட் மருந்துகள்
4. மருந்துகளெல்லாவற்றிலும் உயர்ந்தது தலைவலி, ஜலதோஷம், படை, சிரங்கு, காயம் முதலியவைகளை கொஞ்ச நேரத்தில் ஸ்வஸ்தப்படுத்துகின்ற Elizir Balm "எலிச்ஸர் பாம்" புட்டி 1-க்கு விலை அணா 6 தான். டஜன் ரூபா 4-0-0



5. சிறந்த ஹார்மோனியங்கள் ரூபா 17 0
6. ஸ்ருதி பெட்டி ரூ 7 முதற்கொண்டு
7. ஹார்மோனியம்வாசிக்க உபாத்தியாயரில்லாமல் தானாகவே சொல்லிக் கொடுக்கும் (Harmonium Self Instructors) புஸ்தகம் (தமிழில்) ரூபா 2—0—0

பவுன்டன் பேனாக்கள் 14-கரட் தங்கநிப் உடையவைகள் ரூபா 1—8—0 முதற்கொண்டு

குழந்தைகள் கைவண்டிகள் ரூபா 28 முதற்கொண்டு

மூன்று சக்கிரமுள்ள ஸைகில்கள் ரூபா 15 முதற்கொண்டு

ஸ்டவ்கள் (சுகமாய் சமைக்கலாம்) ரூபா 5 12 0 முதற்கொண்டு

புது பிரிட்டிஷ் மேக்ர் பைஸிகில்கள் ரூபா 55 முதற்கொண்டு

எங்களிடம் நல்ல மாதிரியான பல ரகங்கள் ஷர்டிங் துணிகள் (Shirting Cloths) இருக்கின்றன கழுத்து அளவு எழுதினால் மதராஸில் ஷர்ட் தயார் செய்து அனுப்பப்படும் ஒரு தடவை வாங்கிப்பாருங்கள்.

ரிப்ளை கார்டாவது அரையணா ஸ்டாம்பாவது அனுப்பப்பட்டால் ஒவ்வொரு கடிதத்துக்கு சீக்கிரத்தில் பதிலளிக்கப்படும்.

**MADRAS STORES SUPPLYING AGENCY,**

*Telegraphic Address:* EVERYTHING, **15, BRODWAY, MADRAS.**

PRINTD AT THE SWADESAMITRAN POWER PRESS MADRAS.

இனாம்! இனாம்!! இனாம்!!!

# கதாரத்நாகரம்

மனதை மகிழ்விக்கும்

ஓர்

மாதாந்தரப் பத்திரிகை.

OFFICE OF THE REGISTRAR OF ... MADRAS.

இப்பத்திரிகையில் இனிய கதைகளும் அறிவுக்குணமான அற்புத விஷயங்களும் வெளியாகும். இப்பத்திரிகைக்கு ஒரு வருஷ சந்தா தொகை ரூ. 1—8—0 செலுத்துவோருக்கு கீழ்க்கண்ட புத்தகங்களில் ஒன்று இனாமாய்க் கொடுக்கப்படும்.

| மிருகதிருஷ்ணிகா. | குணசுந்தரி |
| --- | --- |
| இந்த நாடகம் டுவல்த் நைட் என்னும் ஆங்கில நாடகத்திலிருந்து தமிழில் மொழி பெயர்க்கப்பட்டது. நல்ல கடுதாசியில் அச்சிடப்பட்டிருக்கிறது. | அல்லது இல்லற பொக்கிஷம். இப்புத்தகத்தில் இல்லறத்துக்கு வேண்டிய அரும் பெரும் பாக்கியங்கள் பொதிந்து கிடக்கின்றன. |

மானேஜர்,

"கதாரத்நாகரம் ஆபீஸ்"

162, 163, பவழக்காரத்தெரு, சென்னை.

## ஆட்டோவீனஸ்

என்னும் சென்டானது அல்லி, அசோகு, நிலோற்பலம் பாரிஜாதம், செண்பக மென்னும் பல திவ்விய புஷ்பங்களின் வாசனையுடன் ஐரோப்பா கண்டத்திலுள்ள அருமையான நறுமணம் வீசும் பல மலர்களின் சாரத்தால் உபயோகிப்பவர்களின் மனதை யுற்சாகப்படுத்துவதுடன் அருகிலுள்ளவர்களுக்கும் ஆனந்தத்தைக் கொடுத்து மற்ற சென்டுகளைவிட மேன்மை புடையதாகவிருக்கும். இது எங்களால் சீமையி லிருந்து நேரில் வரவழைக்கப்பட்டது.

அழகான திருகலையுடைய நிக்கல் புட்டி 1-க்கு ரூபா 0—10—0

வீனஸ் அண்டு கம்பெனி,

இங்கிலீஷ் மருந்து வியாபாரி,

157, 158, பிராட்வே, சென்னை.

# ஸ்ரீ பக்தமாலா வசனம்.

## வட இந்திய பக்திமான்கள் சரித்திரம்.

வடதேசத்தில் மஹீபதிபாவா என்னும் மகானொருவர் பக்த விஜயம், சந்த விஜயம், சந்தலீலாமிருதம், பக்த லீலாமிருதம் எனப் பெயர்வாய்ந்த பக்த சரித்திரங்களை மகாராஷ்டிர பாஷையிலும் தமிழிலும் வல்லவரான ஸ்ரீமான் வே. பாலகிருஷ்ண முதலியார் என்னும் பக்திமானொருவரால் நம் தமிழ் நாட்டுக்குப் பயன்படும் வண்ணம் தமிழில் அவற்றை மொழிபெயர்த்து நல்ல காகிதத்தில் எழுத்துப் பிழைகளன்றி திருத்தமாய் அச்சிட்டு இருக்கின்றோம். இதனை வாசி பதினால் தெய்வ பக்தி, அடியார் பக்தி, வைராக்கியம், நல்லொழுக்கம் முதலியன இருபாலர்க்கும் செவ்வனே உண்டாகும் இது டிம்மி 760 பக்கங்கொண்ட பெரிய கிரந்தமாகும். இதில் 183 பக்தர்களின் சரித்திரங்கள் அடங்கி யிருக்கின்றன. ஆகையால் இந்த நோட்டீசைக் கண்ணுறும் கனதனவான்கள் சிறுவர் கிழவியர் யாவரும் இந்தப் புத்தகத்தை வாங்கி வாசித்து மகா பாதகங்களையும் போக்கி நல்லறிவு கொடுத்துப் பரம கருணாநிதியின் கருணைக்குப் பாத்திரமாக்கும் பக்தர்களின் திவ்ய சரித்திரங்களை யோதிப் பயன்பெற முன்வருவார்களென்று இறைவன் திருவடியைப் பிரார்த்திக்கின்றோம். விலை ரூபா **3-0-0.** தபால்சார்ஜ் பிரத்தியேகம்.

மானேஜர்:

கதாரத்னாகரம் ஆபீஸ்,
162, 163, பவழக்காரத் தெரு,
சென்னை.

---

# TAMIL BOOKS.

## BOOKS SUITABLE FOR SCHOOL AND HOME READING.

### கதை புத்தகங்கள்.

| | | | |
|---|---|---|---|
| கனகாங்கி ... ... | 0 4 0 | பீஷ்மன் ... ... | 0 1 6 |
| சாரஸ்வதி ... ... | 0 2 0 | இட்டார்க்குஇட்டபயன் | 0 1 0 |
| ஸுலோசனை ... ... | 0 2 0 | ஊக்கமே உயிர்த்துணை | 0 1 0 |
| விசித்திர வைத்தியன் ... | 0 2 0 | மீனாக்ஷி, நக்கீரன் Each | 0 1 0 |
| எறும்பின் அநுபவங்கள் | 0 2 0 | பப்பண்ணன் ... ... | 0 1 0 |
| கௌசல்லியா கல்யாணம் | 0 2 0 | கண்களின் பயன் ... | 0 1 0 |

சற்குரு.—இது மாணவர்களுக்கும் உபாத்தியாயர்களுக்கும் உபயோகமாகும் ஓர் தமிழ்ப்பத்திரிகை. வருஷசந்தா ரூபா 1.

**N. வெங்கடராயலு அண்டு ஸன்,**
87, ராமசாமிதெரு, மதராஸ்.

---

# CONFECTION OF ROSE.

## (Specially prepared for this season.)

## "குல்கந்து"

இது மிகவும் வாசனையுள்ள இனித்த தின்பதார்த்தம். அசல் ரோஜா புஷ்பத்திற் செய்தது. இது சரீரத்திலுள்ள உஷ்ணம் (Internal heat) மலபந்தம் (C‹ nstipation) இவைகளுக்குச் சாப்பிடக்கூடியது. சாதாரணமானவர்கள் சாப்பிடுவதால் அவ்வியாதிகள் தடுக்கப்படுகின்றன. முக்கியமாய்க் கோடைகாலத்தில் ஒவ்வொருவரும் சாப்பிட்டு வரவேண்டிய ஆகாரமும் ஔஷதமுங்கூட. சாப்பிடும் அளவு முதலிய விபரங்கள் டின்னில் ஒட்டப்பட்டிருக்கும்.

தினப்படி நூற்றுக்கணக்கான பார்ஸல்கள் இந்தியாவெங்கும் போய்க்கொண்டிருக்கிறது.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| விலை:— | 10 | ராத்தல் டின் | 1-க்கு | ரூ. | 4 | 0 | 0 |
| ,, | 5 | ராத்தல் டின் | 1 ... | ,, | 2 | 4 | 0 |
| ,, | 4 | ராத்தல் டின் | 1 ... | ,, | 1 | 14 | 0 |
| ,, | 3 | ராத்தல் டின் | 1 ... | ,, | 1 | 7 | 0 |
| ,, | 2 | ராத்தல் டின் | 1 ... | ,, | 1 | 0 | 0 |
| ,, | 1 | ராத்தல் டின் | 1 ... | ,, | 0 | 8 | 0 |

---

# விஜய காருண்யம்.

## A Tamil Romance

BY

**Mr. A. Balakrishnan, B. A:**

இஃதோர் தமிழ் நாவல். இதன்கண் அழகின் ஆர்வமும், உண்மைக்
காதலின் வலியும், உயர் நட்பின் சிறப்பும், உலக அநுபவத்தின் பயனும்,
தீமையின் எழ்மையும், வஞ்சகத்தின் இழிவும் வீரச் செய்கைகளின் அருமை
யும், இடம்பொருள் ஏவலால் மனிதனுக்கு அவனறியாது உண்டாகிற பெரு
மையுஞ் சிறுமையும் பெரிதும் அழகமைந்த நடையில்வரையப் பட்டிருக்கின்
றன. கதா நாயகனான விஜயத்தின் நன்னெறி நிற்றலும், அவனதன்பிற்கு
ரிய காருண்யத்தின் மெய்க்காதலும் எவரும் வியக்கத் தக்கவை. மகாதேவ
ரின் பெருங்குணமும் விரிந்த மனமும் குறுகிய உள்ளத்தினரைத் தம் இழிவை
உணரச்செய்யும். காணாமற்போன குழந்தை மீண்டும் அநேக வருஷங்கழித்து
வெளிவருவது படிப்பவர்க் காச்சரியத்தையும் உள்ளக் கிளர்ச்சியையும் உண்
டாக்கும். மற்றும் கள்வர் வாழுங் குறிஞ்சி நிலச்சிறப்பும் மலைக்குகைகளின்
நிலைமையும் படித்துணர் தற்பாலன. நமதுஜனசமூகத்தில் நாகரிகமுதிர்ச்சி
யினாலாய பலநீதிகளும் கொள்கைகளும் ஒருங்கே இப்புஸ்தகத்தில் விளங்கும்.
தமிழ் நாட்டார்க்குமிகவும் பயன் படுமென்றே பிரசுரஞ் செய்யப் பட்டது.
**விலை அணா**12.

மானேஜர்:

கதாரத்னாகரம் ஆபீஸ்,
162. 163, பவழக்காரத் தெரு,
சென்னை.

# சுந்தராங்கி.

ஓர் நூதனத் தமிழ் நாடகம் விலை ரூ. 1-0-0

வடுவூர் K. துரைசாமி அய்யங்கார் பி. ஏ. அவர்களால் எழுதப்பட்டு, சைதாப்பேட்டை டீச்சர்ஸ் காலேஜ் புரொபெஸர் T. A. ராமையா M. A. L. T. அவர்களால் முகவுரை எழுதப்பெற்றது. இது வெகு விநோதமான நாடகம். இனிய சுலபமான தமிழ் நடையில் எழுதப் பெற்றதும், நவரசம் நிறைந்ததுமான அரிய புஸ்தகம். சுமார் 300 பக்கங்களைக் கொண்டது. இதன் அருமை பெருமைகள் இதைப் படித்துப்பார்த்த பின்னரே நன்று புலப்படும். இதில் வெகு அலங்காரமான விருத்தங்களும், காவடிச்சிந்து, திருப்புகழ், இந்துஸ்தானி, கர்னாடக கீர்த்தனை, ஜாவளிகள், இங்கிலீஷ் நோட் முதலிய பல நல்ல வர்ணமெட்டில் எழுதப்பெற்ற ஏராளமான பாட்டுகளும் நிறைந்திருப்பதுடன், முதல் பக்கத்திலிருந்து கடைசிவரையில் படிப்போரின் மனதைத் தானே கவர்ந்து செல்லக்கூடிய இன்பம் நிறைந்ததாயுமிருக்கின்றது. இந்த அரிய புஸ்தகத்தைப் போல இதுவரையில் ஓர் நாடகமாவது எழுதப்பட்டதில்லை யென்பது உறுதி. புருஷர், பெண்டிர், சிறுவர், முதலிய யாவரும் அவசியம் படித்தறியவேண்டிய பல அருமையான விஷயங்கள் இதில் அடங்கி யிருக்கின்றன.

விலாசம் :—

**M. A.** நெல்லையப்ப முதலியார்,

பவழக்காரத்தெரு,

மதராஸ்.


ஸ்ரீ

கடவுள் துணை.

# சுதாரத்னாகரம்.

" கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி "


| Vol 1<br>தொகுதி—1 | MAY 1915<br>1915-ம் வருஷம் மே மீ | No 3<br>பகுதி—3 |
|---|---|---|


## விசேஷ வர்த்தமானங்கள்.

**காஷ்மீர் மகா ராஜாவின் தருமம்** காஷ்மீர் ஜம்மு நாடுகளின் மகாராஜா ஜம்முநகரில்ஒரு பெரியசத்திரம்கட்டுகிறார். அங்குக் காலை 8 மணிமுதல் மாலை 8-மணி வரை வேதங்கள் தக்க பண்டிதர்களால் மாணவர்களுக்குக் கற்பிக்கப்படும். அங்குஒருபுத்தகசாலையுமுண்டு. அதில் சம்ஸ்கிருதப் புஸ்தகங்களெல்லாம் இருக்கும். அதனையடுத்து ஒரு கோசாலையும் சத்திரமொன்றும்கட்டப்படும்.

———

ராமமூர்த்தி கலியுக வீமசேனனென்னும் ராமமூர்த்தி இப்பொழுது பம்பாய் மாகாணத்திலுள்ள போர்பந்தர் சமஸ்தானத்தில் அச்சமஸ்தானத்தின் விருந்தினராயிருக்கிறார். அவர் அங்குப் பலவிதமான வேடிக்கைகளைக் காட்டிவருகிறார் ; தமக்குக் கிடைத்த பணத்தில் ஒரு பகுதியை யுத்தநிதிக்குக் கொடுத்து வருகின்றார் ; இன்னுஞ் சில தினங்களில் ஆமதபாத்துக்குச்செல்வார்.

———

**ஒரு** நல்ல **சமாச்சாரம்** ருஷிய **ஸார் சக்ரவர்த்தியார்** லெம்பார்க் **நகரத்துக்கு விஜயஞ்** செய்தனரென்**றும், அங்குள்ள ஸ்லாவ் ஜனங்கள்** அவரை அளவற்ற **ஆரவாரத்துடன்** வரவேற்று மகிழ்ச்சி கொண்டாடினரென்றும் சென்ற சனிக்கிழமைத் தந்தியொன்று கூறுகின்றது, இது மிகுந்த நல்லசமாச்சாரமே. சிறைச்சாலையிலுள்ளவர்களை விடுவிப்பவர் போன்றும், அந்நியரிடத்து அகப்பட்டு அடிமையாய்க் கஷ்டமடைந்து வருபவர்களை விடுவிக்கும்பரோபகாரி போன்றும், ஆஸ்ட்ரியரின் அநியாய ஆட்சிக்குட் பட்டு பலவிதக் கஷ்டங்களை அநுபவித்து வரும் போல் ஜாதியாருக்குச் சுதந்தரம் அளிப்பதாக ருஷிய சக்கரவர்த்தியார் வாக்களித்திருக்கிறார். அதனால் ஆஸ்டிரிய கலீஷியாவிலுள்ள லெம்பார்க் நகரத்துக்கு ஸார் சக்கரவர்த்தியர் விஜயஞ் செய்தபொழுது அந்நகரத்தார் அவரை ரக்ஷகராகப் பாவித்துச் சந்தோஷித்து வரவேற்றனர். கூட்டைவிட்டு வெளிப்படும் புதியபறவைக் குஞ்சுகள்போலப் போல் ஜாதியார் சந்தோஷமடைந்திருக்கின்றனர். ஜெர்மன் கொடுமைகளிலிருந்து உலகத்தாரை நிவிர்த்திக்குமாறு பிரிட்டிஷார் கங்கணங் கட்டி யெழுந்திருக்கின்றனர். அவர்களுக்குத் துணையாக எழுந்துள்ள ருஷியர் அந்நோக்கங்களை யிப்பொழுதே நிறைவேற்றத் தொடங்கி விட்டனர்.

**இங்கிலீஷ் பத்ரிகைகளின் செலவாக்கு.** லண்டனில் நடைபெறும் டெயிலிமெயில் என்னும் தினப்பத்திரிகை தினந்தோறும் 10லட்சம் பிரதிக்கு மேலும், டெயிலி மிரரும் 8லட்சத்துக்கு மேலும், டிட்பிட்ஸ் என்னும் வாரப்பத்திரிகை 8லட்சத்துக்கு மேலும், லண்டன் ஒப்பீனியன் என்னும் வாரப்பத்திரிகை 2½ லட்சத்திற்கு மேலும் செலவாகின்றனவாம். இந்தியாவில் கல்கத்தாவில் நடைபெறும் ஸ்டேட்ஸ்மா னென்னும் தினப்பத்திரிகை 18000 பிரதிக்கு மேலும் செலவாகின்றதாம். இது தான் இந்தியாவில் மிகுதியாகச் செலவாகும் பத்திரிகை. இந்தியாவின் ஜனத்தொகை 33கோடி! இங்கிலாந்தின் ஜனத்தொகையோ 4½ கோடியாம். ஜனத்தொகை மிகுதியாயுள்ள இந்தியாவில் பத்திரிகாபிமானிகள் குறைவாயிருப்பதற்குக் காரணம் இங்குக் கல்வியறிவில்லாதவர் பெரும்பான்மையோராக விருக்கின்றனர் என்று ஊகிக்கவேண்டியிருக்கின்றது. கல்வியறிவுள்ள இந்துக்களுள் பெரும்பான்மையோர் பிறதேசத்தாரைப் போன்று கைத்தொழில் வியாபார வாயில்களாக மேன்மையடைய வேண்டுமென்னும் நோக்கமும், அத்துறைகளிற் பிரவேசிக்க வேண்டுமென்னும் முயற்சியுஞ் செய்யாது சோம்பித் திரிபவர்களாயிருக்கின்றார்களெனுந் தெரிகின்றது.

---

**காஷ்மீர் மகாராஜாவின் பெருங்குணம்.** சில தினங்களுக்கு முன் ஹரித்வாரத்தில் ஸர்வ பாரதவர்ஷ மகா சம்மிளான் என்னும் பெருஞ்சபை கூடிய பொழுது இந்தியாவின் பல பாகங்களிலிருந்துவந்த பதினாயிரக் கணக்கான ஜனங்கள் கூடியிருந்தனர். அப்பொழுது சங்கராசாரி சுவாமிகள் தமக்குரிய பீடத்தில்வீற்றிருந்தனர். அக்கூட்டத்திற்குத் தலைமைவகித்த தர்பங்கா மகாராஜ ராமேஸ்வர சிங் தமது அக்ராசனர் ஸ்தானத்துக் குரிய உயர்ந்த ஸ்தானத்தில் வீற்றிருக்கும்போது அங்கிருந்த காஷ்மீர் மகாராஜாவைத் தம்முடன் வீற்றிருக்கும்படி வேண்டிக் கொண்டார். உடனே காஷ்மீர் மகாராஜா குவித்த கரங்களுடன் க்ஷத்ரியனாயுள்ள பிராமண மகாராஜாவுடன் ஒரே ஆசனத்தில் வீற்றிருத்தல் பொருத்தமாகாதென்று கூறி விட்டாராம். வர்ணாசிரம தர்மத்தில் இவ்வளவு பக்தி சிரத்தையுள்ள காஷ்மீர் மகாராஜாவின் பெருங் குணத்தை அங்குக் கூடியிருந்தவர்களெல்லாங் கண்டு ஆச்சரியமடைந்தனராம்.

தர்பங்கா என்பது பீரார் மாகாணத்திலுள்ள ஒரு மிகச் சிறிய ராஜ்யமாகும். காஷ்மீரோ தர்பங்காவைவிடப் பல மடங்கு பெரிய ராஜ்யமாகும். ஜம்முவென்னும் ராஜ்யத்தையும் காஷ்மீர் மகாராஜாவே ஆளுகின்றார். விஸ்திரணத்திலும் பொருளாதாரத்திலும் ஒப்பிடுவதாயின் காஷ்மீர் கரியென்றும் தர்பங்கா நரியென்றும் கூறலாம். அவ்வாறிருந்தும் பிராமணவிஸ்வாசமிகுந்த காஷ்மீர் மகாராஜாவின் செயல் பெரிதும் புகழ்ந்து கொண்டாடத் தக்கதாம்.

---

## கடமை யென்பதென்ன?

கடமை யென்பதென்ன வென்றால், ஒவ்வொருவரும் ஒவ்வொரு மாதிரியாயும் மறுமொழி சொல்லுவார்கள். முகம்மதியன், கோரானில் கூறியிருக்கும் வண்ணம் செய்வதே கடமை யென்பான்? ஹிந்து, வேதத்தில் கூறியபடி செய்வதே கடமை யென்பான். கிறிஸ்துவன், விவிலிய நூலிற் சொல்லியிருப்பதைப்போல் அனுஷ்டிப்பதே கடமை யென்பான். ஆதலின், கடமையென்பது அவரவர்களுடைய தேசம், மதம், ஆசாரம் இவைகட்குத் தக்கபடி வேறுபடுகிறது. ஒரு காரியம் நேரும்போது அதைச் செய்யவும் சில வேளைகளில் தவிர்க்கவும் நமக்கு விருப்பமுண்டா



கிறது ஒரு காலத்தில் நன்மையாகக் காணப்படும் ஒருகாரியம் மற்றொரு சமயத்தில் தீமையாகத் தோன்றுகிறது. உதாரணமாக, நித்திரை செய்வோனை எழுப்புவது கூடாதென்பது சிலருடைய கொள்கை. ஓர் வீடு தீப்பற்றி யெரியும்போது அதற்குள் தூங்குகிறவனை எழுப்பாமல் எப்படியிருக்கலாம்? அவனை எழுப்பாவிட்டால் அவன் மாண்டு போவான். ஆதலின் நமது கடமை என்னவென்பதைஅதிகமாய் விசாரிக்கத் தொடங்காமல் சுளுவில் அறியக் கூடிய வழி யொன்றுண்டு. நமது மனச்சாக்ஷிக்கு எது செய்யலாமென்று தோன்றுகிறதோ, அதுதான் "நம்முடைய கடமை" எக்காரியத்தைச் செய்தால் ஈசுவரனுக்குப் பிரயமாயிருக்குமோ அக்காரியத்தைச் செய்வதே நமது கடமை. ஒருவருக்கு நன்மை செய்வதைப் போன்ற புண்ணியமும் தீமை செய்வதைப் போன்ற பாவமும் கிடையாது.

---

## கோபத்தை ஜெயிப்பதெப்படி?

ஸ்ரீ வித்யாரண்யஸ்வாமியென்பவர்கள் தாம் செய்துள்ள ஜீவன் முக்தி பிரகரணம் என்னும் கிரந்தத்தில் முமுக்ஷுக்கள் (மோக்ஷத்தையடைய எத்தனப்படுகிறவர்கள்) கோபத்தைக் கொல்லும் வழியைக் கூறியிருக்கிறார்கள்.

உனக்கு யாரிடமாவது கோபமுண்டானால் உடனே உன்னுடைய மனதை நோக்கி அடியில் வருமாறு சில கேள்விகளைப்போடு. "ஏமனமே! உனக்கு தீங்கு செய்கிறவர்களிடம் உனக்குக் கோபம் உண்டானால் கோபத்தினிடம் உனக்குஏன் கோபம் வரவில்லை? ஏனெனில் கோபம் மிகுந்த கேட்டை விளைவிக்கிறது. அது தர்மார்த்த காம மோக்ஷ மென்னும் சதுர்வித புருஷார்த்தங்களையும் மனுஷ்யன் அடைவதற்குத் தடைசெய்கிறது. ஆதலின், கோபத்தைப் போல் மனுஷ்யனுக்குக் கொடுமையுள்ள சத்துரு வேறொன்றில்லை." இப்படியாக நீ யோசித்துப் பார்த்தால் கோபத்தினிடம் உனக்கு மிகுந்த கோபமுண்டாகும்! கோபத்தை ஜயித்தவனே மோக்ஷத்தை யடைவான். ஒருவரை நிந்திக்கவும் அடிக்கவும் தொடும்படியான அத்தனைக் கோபம் ஒரு மனுஷ்யனுக் குண்டானால் உடனே அவன் செய்த தருமமும் அவனுக்குண்டான கீர்த்தியும் குலைந்து போகின்றன! இவ்வளவு தூரம் கோபம் விர்த்தியடையா விட்டால் மனசையாவது எரித்து விடுகிறது. இங்கேயும் அங்கேயும் இவ்வளவு துன்பத்தை விளைக்கும் கொடிய குணமாகிய கோபத்தை நல்லவர்கள் எப்படிக் கொள்ளலாம்?

பிறகு உன்பேரில் கோபங்கொள்ளும் போது நீ, நான் ஒரு தப்பிதமும் செய்யவில்லையே! என்று நினைத்து, அவர்களிடம் கோபம் கொள்ளுகிறாய். அது கூடாது நீ இன்னும் ஸ்தூல, சூக்ஷ்ம, காரணமாகிய மூன்று சரீரங்களையும்விட்டு ஞானத்தை அடையாமலிருப்பது உன்பேரில் குற்றமல்லவா? நம்மை கோபிப்பவர்களை நாம் நமக்கு உற்ற நண்பர்களாகப் பாவிக்கவேண்டும் அவர்கள் நமது பேரில் கோபம் கொள்வதால் நம்முடைய குற்றங்களை அறிவித்து நமது வைராக்கியத்தைப் பலப்படுத்துகின்றனர். நமக்கு இவ்வளவு உபகாரம் செய்யவேண்டிய ஸமாதான நிலைமையிலிருந்த தங்கள் மனதைக் கோபத்தால் சுட்டெரிக்கும் அவர்களிடம் நாம் மிக்க நன்றி பாராட்ட வேண்டாமா.

---

## நித்திரை.

வைகறைத்துயிலெழு, என்று பள்ளிக்கூடத்திற் படிக்கும் போதே, முதலிற் படித்திருக்கிறோம். ஆனால் நாம் அதுபோல அனேகமாக நடப்பதே கிடையாது. சிலர் தங்கள் இஷ்டம்போல, கும்பகர்ணாவதாரம் என்று பிறர் சொல்லும்படி, காலை 10மணி

வரையிலும் தூங்குகின்றார்கள். அத்தகையார் நித்திரையால் உண்டாகும் தீங்கினை அறியவில்லை என்று சொல்ல வேண்டும். சாதாரணமாக எல்லோரும், தூங்கவேண்டிய காலத்திற் கிரட்டையாத் தூங்குகின்றனர். ஒரு மனிதனுக்கு, 24மணிநேரத்துள் நான்கு மணி நேரமே தூங்குவதற்குப் போதுமான காலமாகும். அக்கால அளவிற்குமேல் தூங்குவது, தேகத்தில் பலவித ரோகங்களை வா எனக் கூவி அழைப்பதுபோல ஆகும். அனேகமாக, இதைத் தடுத்துக் கொள்ளப் பிரகாசமான விளக்கு வெளிச்சத்தில் தூங்கவேண்டும். அப்படித் தூங்கினால், அவ்வெளிச்சமே நம்மைச் சீக்கிரத்தில் எழுப்பிவிடும்.

அதிகமாக நித்திரை போவதால், மூளையினுடைய சக்தியே அடியுடன் கெட்டுப் போகிறதால் சாதாரணமாக ஏழு, எட்டுமணிநேரம் தூங்குபவர்க்கே, பலவிதமான நோய்கள் உண்டாகின்றன என்று ஆயுர்வேத நிபுணர்கள் அபிப்பிராயப் படுகிறார்கள். மிஸ்டர் எடிசன் என்னும் ஆங்கிலர் ஒருவர் தமது குறிப்புப் புத்தகத்தில், தாம் நான்குமணி நேரத்துக்குமேல் தூங்கியதில்லை யென்றும், இதுவரையில் ஒருவிதமான கனவையும் கண்டதில்லை யென்றும், தேகஅசௌக்யம் இதுவரையில் ஏற்படவில்லை என்றும் எழுதியிருக்கிறார். இவ்வுலகில் இயற்கைக்கு விரோதமாக நீண்ட நேரம் வரையில் தூங்குவதைவிடத் தீமையைத் தரத்தக்கது ஒன்றும் இல்லை என்பது அவருடைய அபிப்பிராயம்.

மனிதன் வெளிச்சத்தில் வேலை செய்து, இருட்டில், உறங்குகின்றான் என்பது மிஸ்டர் எடிசன் கொள்கை. வெளிச்சமே இருக்கும் பக்ஷத்தில் உறக்கம் வருதல் தடைபடுமாம். அதனால் ஒருவன் விளக்கு வெளிச்சத்தில் நித்திரை போவானாகில், அதனால் அவனுக்குப் பலன் உண்டென்கிறார். மனிதர் இருட்டில் தூங்குவது எதுபற்றி என்றால், இருட்டில் அவன் வேலை செய்யக் கூடாமையே. வேலையிருந்தாலும், வெளிச்சம் இருந்தாலும் அதிகமாகத் தூக்கம் வராது. என்றாலும் சாப்பாடு அதிகமாகச் சாப்பிடுவோர்க்கு உறக்கம் அதிகம் என்றும் அவர் ஒப்புக் கொள்கிறார். ஆகவே அதிக சாப்பாடு ஒருவன் உட்கொள்வதும் கூடாது. இதுபற்றியே ஔவையும், மீதூண் விரும்பேல் என்று எழுதியிருக்கிறாள். இவ்விரண்டையும் ஒருவன் கவனித்து நடந்தால், அவனுடைய ஆயுள் விருத்தியாகும் என்பதற்குத் தடையில்லை.

---

## விநோதக் கதைகள்.

ஒருவன் தன் பிள்ளையைப்பார்த்து, என்னடா ஒரு வேலையும் செய்யாது திரிந்து வருகிறாயே என்றதற்கு, அப்பிள்ளை, நான் சும்மா திரிந்துகொண்டு வருகின்றேன்! சாப்பிட வில்லையா, தூங்கவில்லையா, இவை எல்லாம் வேலைகள் அல்லவா என்று கேட்டான். அதற்குத் தகப்பன் சிரித்த போது, பிள்ளை இப்போதுதான் உங்களுக்கு நான் வேலைசெய்வது தெரிந்து சந்தோஷப்படுகிறீரா? இது வரையில் ஞாபகம் இல்லைபோலும் என்று பெருமையோடு சொல்லிக் கொண்டான்.

---

கலியாணவாசலில், ஓமகுண்டத்தில் தீ வளர்ப்பதைக் கண்ட ஒருவன், தன் பக்கத்திலிருந்த மற்றொருவனைப் பார்த்து, இது என் தீ வளர்த்துவது என்று கேட்க, அவன் குறும்புத்தனமாய்க் கலியாணமாப்பிள்ளையை அதில் தூக்கிப்போட என்றான். அதைக் கேட்டவன் சபையில் உட்கார்ந்திருந்த தன் தகப்பனைப் பார்த்து, அப்பா நீங்கள் எனக்குக் கலியாணம் செய்யப் போகிறதாகச் சொன்னீரே, அது வேண்டவேவேண்டாம். நான் நெருப்பில் விழமாட்டேன் என்று கதறினான்.



வறுமை நோயால் மிகவும் மெலிவுற்றேன். அந்நலிவுதீர்ந்துதிரு
வினைக்கம் பெறக்கிருபை கூர்ந்துஇரக்ஷிக்க வேண்டுமென்று பிரார்த்
தித்தான். பிரமதேவனும் முறுவல்பூத்து, நீ கோரியவண்ணம்
பெருந்திருவளித்தோம். அச் செல்வத்தை யாவர்க்கு மளித்து,
நீயும் உண்டுடுத்தி வாழென்று கூறிமறைந்தான். கரவற்றமறை
யோன் அவ்வரத்தைப் பெற்றுக் களிப்புற்ற மனத்தனாகித் தன்னில்
லம் நாடிச்சென்றான். அங்குற்றபுதல்வர்களும் மனைவியும் இவனைக்
கண்டு ஆநந்தசாகரத்தில் மூழ்கி, தேனிருக்கும் மலரைக்கண்டுகளிக்
கும் வண்டெனச் சூழ்ந்து மொய்த்தார்கள். அந்தணனும் தான்
பெற்றவரத்தை யாவருமறிய வெடுத்துக்கூறி, யன்னவர்களுடன்
இனிது வாழ்ந்திருந்தான். அந்நாளுள், ஓர் நாளோர் புண்
ணிய காலம் வந்துநேர, அத்தினத்தில் தீர்த்தமாட மிகவிருப்
பத்தோடு அம்மறையவன், கோதாவரி நதிக்கேகினான். அச்
சமயம் அந்நதியின் கரை, உட்பக்கத்திலிடிந்து விழுந்தது
அதனால் ஓர் உரத்த சத்தமுண்டாயது. அதைக்கேட்டு, அஃதின்ன
தென்று தெரிந்துகொள்ள, அவ்வொலி நிகழ்ந்த விடத்துக்குச்
சென்றான். அக்கரையில் ஓர் செம்பொன் மலை எதிர்ப்பட்டாற்போல,
எடுப்பதற்கரிய பைம்பொன் வைப்பொன்று தன்னெதிரில் காணக்
கண்டான். கண்டதும் அடங்காத மகிழ்ச்சி பூண்டு ஆங்குற்றன
யாவையுங் கைக்கொண்டு, அதிக சிரமத்தோடு அகங்கொண்டு வந்து
சேர்த்தான். கனவினிலும் பொன்னைக் கண்ணுற்காணாத புதல்வர்க
ளோடு சண்டியும் தனதக மகிழ்ந்து, அந்தணனைக்கட்டித் தழுவித்
துதித்தாள். வரையறையற்ற செல்வம்பெற்ற மறையவன், தன்னிடம்
வருபவர்யாவருக்கும், அறுசுவையோடுகூடிய அன்னமளித்து, அவர்
கள் வேண்டுவன கொடுத்து, உள்ளங்களிக்கச் செய்தனுப்புந்தருமத்
தைச் செய்ய முயன்றான். கடிய சுபாவத்தை யுடைய சிகண்டி,
அச்செய்கைக் குடன்படாதவளாகி மறுத்தாள். கொடிய செய்கை
களையுடைய புதல்வர்களுந் தம் தாயின் மனதிற் குட்பட்டவர்க
ளானார்கள். இதை யறிந்த பிராமணன், கடவுளின் கிருபையால்
நாம் அளப்பருஞ் செல்வத்தைப் பெற்றோம்; பெற்றும், யாருமித
முற நடவோமாகில், அச்செல்வம் பெற்றதனால் பயனென்னவென்று
மனம் புழுங்கி, ஆகம் வெயர்த்து மூர்ச்சித்துக் கீழே வீழ்ந்தான்.
பின்னுந் தேர்ந்தெழுந்து, தன் மனதுக்குள் தானே, பின்வருமாறு
சிந்திக்கலானான். காலடி பதினான்கு கொண்ட கோலாலளக்க

வரும், ஒன்பதினுயிரங் குழிகொண்ட நிலத்தைத் தானஞ் செய்தல் கோகன்ன தானம் என்னப்படும். அத்தானத்தின் பலத்தால், அந்நிலத்து விளைந்த நெல் எத்தனையுளவோ அத்தனை வருஷம் வரை, புத்தமுத மருந்துந் தேவர்வாழ் சுவர்க்கத்தில், அத்தானங் கொடுத்தோன் சென்று வாழ்வன். மற்றினியுரைப்பதென்ன? மேலும், மேன்மையைக் கொடுக்கும் கல்வி பயிலாதவன், நோயற்ற சரீரத்தைப் பெறமாட்டான்; நன்மார்க்கமுடைய சாதுக்களின் நட்புப்பெறாதவன்; தான் சொன்ன வார்த்தைக் கடங்கி நடக்கும் மனைவிமக்களை யடையமாட்டான். இத்தன்மையுடையவன், பூமியின் கண்பிறந்து திரிவானேனும் அவனைப் பிரேதமென்றே சாற்றத் தகும். ஒருவன், தன்மனை நாடிவரும் விருந்தினனை மகிழ்ந்தமு தூட்டானாகில், இல்லற தருமமென்பது என்னாகும்? காண்பதற் கரிய மறையோராதிய மஹான்கள் வந்தால், அவர்களை அவமானஞ் செய்யும் இச்சண்டியை யொழித்து நிற்பது நமக்கெக்காலம் கைகூடும்? உலகத்திலுள்ள யாவரும் நகைக்கும்படி, அலகைக் கொத்த இல்லாளைக்கூடி வாழ்வதிலும், ஆவியைப் போக்கும் மார்க்கம் எதனாலேனும் உயிர் துறப்பது நன்றாம். துர்மரணத்தா லுண்டாகுந் துன்பம் எதுவும் அவனை வந்தணுகாது. மறையை யோதி அதன்பால் அன்புமிகுந்து அதிற் கூறிய வழியை யனு சரித்து நடக்கும் பெரியோரை யவமதிப்பது வீண்போகுமா? குற்றமற்ற பெரியோரை யவமதித்த குற்றத்தாலன்றோ, பெறுதற் கரிய இந்திர பதவியைப்பெற்ற நகுட மகாராஜனும், பெரும்பாம் பாகிப் பூமியில் வீழ்ந்தான். என்றிவ்வாறு பலவுமெண்ணி, இந்த நன்றியற்ற மனைவி மக்களுடன் சேர்ந்து ஒப்புரவாகக்கூடி யிருந் தால் தனக்குக்கிடைப்பது நரகமே யன்றி சுவர்க்கமென்பது கிட்டாது. இது நிச்சயம் ஆகையால் தன்னுயிர்க்குத் துணையாகும் உறுதியே செய்வது கருத்தெனத் தீர்மானித்தான். இதன் பின்னர், அக்கொடிய துஷ்டையாகிய சண்டியையும், அதிக துஷ்டர்களாகிய புதல்வர்களையும் வெறுத்து நீக்கி, வேண்டிய மட்டும் திரவியத்தைக் கையிலெடுத்துக் கொண்டு பரிசுத்தமான அப்பிராமணன் கோதாவரி நதியைக் கடந்து தென்றிசை நோக்கி நடந்தான். நடக்கும்போது, சாஸ்திரங் கூறியவாறு தருமங்களைச் செய்வோமென்றால், அத்தருமம் சற்பாத்திர தானமா யிருத்தல் வேண்டும். சற்பாத்திரர் பரமேஸ்வரனுக் கன்பு பூண்ட அடியார்



களே. அத்தகைய அடியார்களுக்குக் கொடுப்பதும் பெருமை. பொருந்திய திவ்விய ஸ்தலமா யிருக்கின்றது; அப்பேர்க்கொத்த ஸ்தலம் எதுவென்று எதனால் நான் அறிவேன் என்று மறையவன் சிந்தித்தான். இவ்வித சிந்தனையுடன் செல்லும் யோகவித்தமனுக் குப் பரமசிவத்தி னருளால் ஆகாயத்தினின்று * "ஓ, பதிக! மேன் மை தங்கிய மாயூரம்சென்று நீ யெண்ணியபடி யாவற்றையும் செய்" என்று ஓர் வாக்குப் பிறந்தது. அவ்வாக்கைக் கேட்டு முடிவில் லாத வுவகை யுற்று, அவன் முன்னமே அந்த மாயூரஸ்தலம் மற்ற ஸ்தலங்களிலுஞ் சிறந்ததென்று நான் கேள்விப்பட் டிருக்கிறேன். மேலும் அருள்வாக்கும் அதையே கூறிற்று. இதைப்பற்றி யோசிப் பதென்ன? கௌரி முதலானோர் விரும்புவதும் அத்தலமே என் றிவ்வாறு உளத்தில் முடிவுசெய்துக்கொண்டு, அநேக ஆரண்ணியம், மலை, நதி, நாடு, நகரமெல்லாங் கடந்து ஒப்பற்ற மாயூர நகரம் போய்ச் சேர்ந்தான். அத்தலம் சேர்ந்த மறையவன், பிறை சூடிய முக்கட் பிரானது திரு முன்னாகத் துலங்கும் தீர்த்தத்தில் ஸ்நான விதிப்படி சங்கற்ப முதலியன செய்துகொண்டு தீர்த்தமாடி திரு வெண்ணீறணிந்து, நித்திய கருமங்களை முடித்தபின்னர், மறையோ ராதிவேத வித்துக்கள், இறைவனடியை யெப்போதும் மறவாது சிந் திக்கும் சிவனடியார்கள் முதலியபலருக்கும் பின்வருமாறு தருமங்க ளைச் செய்யலானான். நீர்வளம் நிலவளம் பொருந்திய பூமியைச் சில ருக்குக்கொடுத்தான். இளங்கன்றோடு கூடிய பசுவைப் பலருக் கீய்ந் தான்.

உத்தமமான பிரமசாரிகளுக்கு மணம் முடித்துக்கொள்ளும்படி செம்பொன்தானம் சிலர்க்குச்செய்தான். குடியிருப்புக்கு வசதியற்ற ஆதிமறையோர் பலருக்குப் புதுவீடுகட்டிக் கிரகதானம் கொடுத் தான். வேண்டினோர்க்கு அறுசுவையோடுகூடிய வமுது வகைகள் சமைப்பித்து, வயிறாரவுண்ணும்படி யினிய முகமனோடு அன்ன தானமும் நடத்தினான். அடியார்கள் விரும்பிய மற்றவைகளையும் மனத்திருப்தியாகும்படி கொடுத்தான். இவ்விதமாகப் பலதான மும் செய்தபின்னர், பொய், பொறாமை முதலியவைகளை யொழித்து தரும சிந்தையும், சிவனேசமுங் குடிகொண்ட மனத்தினனாகிய அந் தணன், மாயூரநாதன் மலர்த்தாள் போற்ற விரும்பி, பலத்தைத் தரி

* பதிகன் = பாட்டைசாரி.

சித்தவுடன் போக்கும் மேலக் கோபுரவாயில் நண்ணி, அங்கு பணிந் தெழுந்து திருக்கோயிலினுட்புகுந்து வலம் வந்து சந்நிதி முன்படைந்து வள்ளலாகிய அண்ணலைத்தரிசித்தான், துன்பந்தீர்ந்தான், இன்ப மடைந்தான். பிறகு அந்நியமில்லாத அஞ்சனாயகி முன்சென்று, மனமுருகி யுரோமஞ்சிலிர்ப்ப, ஆனந்தம் மேலிட்டு, சிரமேற்கைகூப் பிக் கும்பிட்டுக் கூத்துமாடி, சகல வுயிர்களையும் பெற்ற தாயின் உபயசரணாவிந்தங்களைப் புகழ்ந்துபாடி நமஸ்கரித்துத் தோத் திரித்து வணங்கி நின்றான். பிறகு கோயிலைவிட்டு வெளியே வந்து ஓரிடத்தமர்ந்து வைகினான். பின்னரும் அத்தலத்திடையே வசிக்க ஆசைகொண்டான். அவ்விதமாகவே பன்னாளங்கு வசித்தான். அப் போது மாயூரநாதன் கிருபை கூர்ந்து திருவருள் பாலிக்க, அந்த யோக வித்தமன் முத்தியடைந்தான். அவன் தருமத்தைச்செய்து மாயூரத்தில் வசித்து சிவனைத் தரிசித்து வந்த காரணத்தால், அவ னிட முற்பவித்த பிள்ளைகளும், அவன் மனையாளும் சுவர்க்கலோக மருவி வாழ்ந்தார்கள்.

திருச்சிற்றம்பலம்.

## முக்கிய கவனிப்பு.

இந்த அருமையான சரித்திரம், சிவபுராணம் பத்தினுள் பிர மாண்டம், ஆக்கினேயம் இவ்விரண்டு புராணங்களுள் கூறப்படும் மாயூர மான்மியம் என்னும் வடமொழியிலிருந்து, மஹா வித்வான் மீனாக்ஷி சுந்தரம்பிள்ளை யவர்களால் தென்மொழியில் பாடப்பட்ட மாயூரப் புராணத்தில் கூறப்பட்டுள்ளது. இதனால் நாம் தெரிந்து கொள்வது யாதெனில்:—இச்சரித்திர நாயகனாகிய யோகவித்தமன், ஆதியில் தரித்திர திசையை யடைந்தபோது, அத்தரித்திரத்தை யொழிக்க, யாசகத் தொழிலையாவது வாணிகத் தொழிலையாவது சேவகா விருத்தியையாவது முயலவில்லை. தவஞ் செய்தே இந்த வறுமையை யொழிப்பேன் என்று தவம் செய்து நிதியைப் பெற் றான். ஆனதினாலே, நாமும் எவ்வித காரியம் ஆகவேண்டியதிருந் தாலும் கடவுளை நோக்கிப் பிரார்த்திப்பதே முதன்மையென்பதும், அப்படிப் பெற்ற செல்வத்தை, அது ஒருவரிடத்தும் நில்லாதென்ப தை யுணர்ந்து தருமஞ் செய்யக் கருதியதைக்கொண்டு நாமும் தரு மஞ்செய்ய வேண்டுமென்பதேயாம்.



துகடீர் பெருஞ் செல்வந்தோன்றியக் காற்றொட்டுப்
பகடுநடந்த கூழ்பல்லாரோ டுண்க
அகடுற யார் மாட்டு நில்லாது செல்வஞ்
சகடக்காற்போல வரும்

என்று நாலடியாரிற் கூறிய பாட்டும் இதற்குத் திருஷ்டாந்த மாகும். மேலும், அத்தருமத்துக்கு விக்கினஞ்செய்த மனைவியையும் மக்களையுந் துறந்ததைக் கொண்டு, நமக்கடங்கி நடக்காத பெண் டிர், புதல்வர் இவர்களைவிட்டு விலக வேண்டுவ தவசிய மென்பதும்;

பத்தாவுக் கேற்ற பதிவிரதையுண்டானா
லெத்தானும் கூடியிருக்கலாம்—சற்றேனு
மேறுமாறாக விருப்பளேயாமாகிற்
கூறாமற் சந்நியாசங்கொள்.

என்று ஔவையார் கூறியதும் இதுவேயாகும். இஃதன்றி, அவர் உதவியில்லாதமனைவி, மக்கள் இவர்களை விட்டு விலகுவதில், அவர் களாவது நாமாவது துக்கப்பட வேண்டுவதில்லை. ஏனெனில், யோகவித்தமன் செய்த தரும பலத்தால், அம் மனைவி, மக்களும் சுவர்க்க மடைந்தார்கள். தானும் பதவி யடைந்தான். ஆகையினால் நாம் சுகமாகவே விலகலா மென்பதும்; யோகவித்த மன், தலம், தீர்த்தம், மூர்த்தி யிந்த மூன்றிடத்திலும் முறையே வசித்தும், விசுவாசித்தும், பத்திசெய்தும் வந்ததைக் கொண்டு, விண்ணவரும் நண்ணுதற்கரிய பதவியைப் பெற்றான். ஆகையால், நாமும் எம்பெருமான் எழுந்தருளியிருக்கும் திவ்விய ஸ்தலங்களுக் குச் சென்று அங்குள்ள புண்ணிய தீர்த்தங்களில் ஸ்நானம் பண்ணி, நம்மையாண்டருளும் வள்ளலை அன்போடுவணங்கி, அதன் பலனால் இகபர சௌக்கியங்களை யடைய வேண்டு மென்பது மேயாகும். இதனையே தாயுமான சுவாமிகள்.

மூர்த்திதலந்தீர்த்த முறையாய்த் தொடங்கினர்க்கு
வார்த்தை சொல்லச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே.

என்று திருவாய்மலர்ந்தருளினார்.

திருச்சிற்றம்பலம்

## ஸ்தல வாசமும் ஈசன் பூசை மகத்துவமும்.

## நாதசன்மன்-அனவித்தை முத்தி யடைந்த சரித்திரம்.

கடல் சூழ்ந்த காசினியில் தெய்வத்தன்மை பொருந்திய வேத மோதும் பிராமண குலத்தோர் வசிக்கும் திருமறைக் காடென்னும் பதியில், அந்தணர் குலத்துதித்த நாதசன்மன் என்னும் பெயர் பூண்ட மறையவர் ஒருவ ரிருந்தார். அவர் வேத சாஸ்திரங்களைக் கற்றுணர்ந்து, மெய்யில் விபூதி உருத்திராக்கமணிந்து பஞ்சாட்சரத்தைச் செபிப்பதோடுகூட, மறை கூறும் யாகங்களையும் செய்து வந்தார். அவருடைய மனைவி அனவித்தை யென்னும் பெயருடையவள். நற்குணம் வாய்ந்தவள். கற்பு நெறி தவறாதவள். கொழுநனைப் பேணுதலே எல்லாத் தவத்தினுஞ் சிறந்ததென்று துணிந்து அப்பணியில் சிரத்தையோடு மனமுவந்து செய்யுங் கருத்துடையவள். அத்தகைய குணம் வாய்ந்த இல்லாளைத் துணையாகக்கொண்டு நாதசன்மர் இல்லற தர்மத்தையும் குறையாது நடத்தி வந்தார். இவரும் இவர் மனைவியரும் ஏகோபித்து யாகாதி கிருத்திய முதலிய புண்ணியங்களை யில்லறத்தி லிருந்துகொண்டே நடத்தி வந்தமையால் இருவரும் மண்ணுலகை நீத்துக் கைலாசத்திடை வசிக்கும் சாலோக பதவியை யடைந்தனர். அப்பதவியி லநேக நாள் கழிந்தபின்னர், நாதசன்மர் மகமேருவை வில்லாக வளைத்த பரமசிவத்தின் திருவடியிற் கலக்கும் சாயுச்சிய பதமடையக் கருதினர். அப்போது அம்மறையவர் அமரருய்ய ஆலத்தை யுண்டு கண்டங்கறுத்த சிவபெருமான் பொற் பதத்தைப் பணிந்து, ஓ தேவ தேவ! நாயடியேன் என் மனைவியோடு நின் மலரடியிற்கலக்கும் பேற்றை யருளவேண்டுமென்று பிரார்த்தித்தார். நெற்றியிற் கண்படைத்த அப்பரமனும் அவர் விண்ணப்பித்ததைத் திருவுளங்கொண்டருளி, ஏ நாதசன்மா நீ நமதடிக்கலக்கும் பதவியை விரும்புவாயாகில் பூதலத்துற்று ஆங்கு விசேட தலத்தை யணுகி, நம் குறி நிர்மாணித்து விதிப்படி அர்ச்சித்து, நமதடிக் கலக்கும் சாயுச்சியத்தைப் பெறுவாயாக என்று வரங்கொடுத்தார். மறையவர், பராசத்தி கண்டுகளிக்க அம்பலமே யிடமாக நின்று தாண்டவம் புரியும்



ஆண்டவனது திருவடியிற்றாழ்ந்து விடைபெற்றுக்கொண்டு கைலையைவிட்டு நீங்கித் தன்னில்லாளுடன் பூவுலகம் வந்தடைந்தார்.

மண்ணுலகத்தை நண்ணிப் பன்னியொடு வந்த பிராமணோத்தமர், பண்சுமந்தமறை நாடுதற்கரிதாகிய அண்ணல் திருக்கோயில்கொண்டெழுந்தருளி யிருக்குந் தலங்களுள், எண்ணுதற்கரிய பேரின்பத்தைக் கொடுக்கக்கூடிய தலம் எதுவென்று ஆராய்ந்து, அலைபுரண்டு கரை கடந்து, அகில், சந்தனம், புஷ்பம், மணிமுதலியவைகளை வாரிக்கொண்டு, அன்னையரில்லத்து வசிக்கும் பெண்கள் தனது புருடன் வீட்டுக்குப்போகக் குறித்திருக்கும் நாளில், கண்ணில் கண்டனவெல்லாந் தனக்கு வேண்டுமென எண்ணங்கொண்டு எடுத்துச் செல்வதுபோல, சமுத்திர ராஜனை யடைய விருப்புற்றுச் செல்லும் மணிமுத்தாநதிசூழ்ந்தவிருத்தாசலமே தகுதியுடையதெனத் தேர்ந்து, அந்நகரம் வந்து சேர்ந்தார். அங்கு அவர் தன்னில்லாளுடன் முத்தாற்றில் படிந்தெழுந்து விபூதி ருத்திராக்கமணிந்து, விருத்தாசலேஸ்வரனையும், பெரிய நாயகியம்மையையும், தினந்தோறும் தவறாது வழிபட்டுவந்தார். இவ்விதமாகப் பல நாள் வழிபடுவதை யுணர்ந்த விருத்தகிரிநாதர், அப்பிராமணர் முன் தோன்றி, நீ திருவையாறு சென்று வழிபடெனக் கட்டளையிட்டார். மறையவர் அம்மொழி சிரமேற்கொண்டு பஞ்சநதி சூழும் திருவையாற்றுக்குத் தன் பத்தினியுடன் சென்று, காவிரி நதியில் மூழ்கி நித்தியகருமங்களை முடித்துக்கொண்டு, ஆலயத்துக்குட் சென்று, மூன்றாம் பிறையைச் சடையிற்றரித்த ஐயாறப்பனையும், அறம்வளர்த்த நாயகியையும், மனமுவப்பத் தாழ்ந்து, ஆராத அன்பினொடு வழிபடலாயினர். ஆன்மாக்களை மலத்தினின்று விடுத்துப் பேரின்பத்தை யடுத்துய்யும்படிச் செய்யும் பரம கருணாநிதியாகிய பஞ்சநதேஸ்வரனையும், பல்லுயிரும் வாழக் கிருபை கூர்ந்து அறம் வளர்த்த கருணைச்செல்வியையும், பல்காலும் போற்றி வழிபடும் பார்ப்பனர், பார்ப்பனத்தி இவ்விருவர்களுடைய அன்பு மிகுந்த வழிபாட்டைக் கண்டு மெச்சி, ஐயாறப்பர் அவர்கள்முன் ஓர் நாள் பிரசன்னமாகி என்னிடத் தன்பார்ந்த தொண்டைப் பலநாட் புரிந்த ஏ வேதிய! உனக்கு வேண்டியது என்ன? அதைச் சொல் அவ்வாறே நாமுவந்தளிப்போமென்றார். பிராமணனும், பரம கருணாநிதியே; நாயடியேன் சிறந்த கங்கா நதியினுஞ் சிறப்பு வாய்ந்து விளங்கும் தீர்த்தத்தில்

முழுகி யெனது பிதிரக் கரையேறச் சிரார்த்தம் செய்து, பிரயாகை முதலிய க்ஷேத்திரத்தைவிட மேற்பட்ட தலங்களில் சப்தமாதர்கள் பணிந்தேத்திய விடங்களைப் பணிந்து, சிவஞான மடைந்து, சிவலிங்க ஸ்தாபனஞ் செய்து எனது பவந் தொலையக் கசிந்த அன்பினோடு ஆராதித்து நின தடிக் கலக்கும் நித்தியானந்தப் பெருவாழ்வை யெனது பத்தினியோடு பெறக் கிருபை புரியவேண்டும் என்றார். மாதேவனும், ஏ தவசிலனே! நீ யெண்ணியபடி யாவற்றையும் ஒருங்கே பெறக்கூடிய தலம் இஃதல்ல; சொல்லற் கரிய மாயூரத் தலமொன்றே எல்லாவற்றையுந் தரக்கூடியது; சந்தேக மில்லை; நாமும் நமதிச்சையால் உன்னுடன் கூட வருகின்றோம். நீயும் நம் பின் வரக்கடவா யென்றார். தவசியும் ஐயனிட்ட கட்டளைப்படி நடப்பேனென்று மனமுவந்து அக்கணமே யெழுந்தார்; அவர் மனைவியரும் பின்தொடர்ந்தார்; ஐயாறப்பரும், அறம்வளர்த்த நாயகியோடு முன்னே நடந்து மாயூரப்பதியின் மேற்குத் திக்கை யடைந்தார். அடைந்ததும், அட்டமூர்த்தியாகிய பரமன், பிராமணனை நோக்கி, இதுவே மாயூரத்தலம்; நீ நின்மனைவியொடு இடபதீர்த்தத்தில் நீராடி, தென்மாயூர மேவி சிரார்த்தம் புரிந்து, சத்த புரத்தையுங்கண்டு வணங்கி வழிபட்டு, உத்தரமாயூரத்தில் உபதேசம் பெற்று, தெட்சணமாயூரஞ்சென்று, சிவலிங்கத்தைவைத்துப்பூசித்து முத்தனாகி நமதுதிருவடி நிழலிற்கலந்து வாழ்தி யென்று வரமளித்தார். அவ்வரம்பெற்ற மறையவர் பரமர் திருவடியிற்றாழ்ந்து, ஐயனே திருவையாற்றில் அமர்ந் திருப்பதுபோல இத் தலத்திலு மெழுந்தருளியிருக்கவேண்டுமென வேண்டிக்கொள்ள, பெருமானும் உனது விருப்பப்படியே யிங்கு வசிக்கிறோம் என்றுகூறினார். தவசிரேஷ்டர் தம் மனைவியோடு பரமன் திருவடியிற் பணிந் தெழுந்து, காவிரியாற்றின் இடப தீர்த்தத்தில் விதிப்படி யிருவரும் மூழ்கி, தெற்கு மாயூரத்தில் எழுந்தருளி யிருக்கும் அகிலாண்ட நாயகனையும், அஞ்சனாயகியையும் பணிந்து போற்றி, அத் தலத்தி லாற்ற மூலமரத்து நீழலிற் பிதிர் தேவதைகளை யுன்னி சிரார்த்தம், பிண்டம் முதலியன செய்து மனக்களிப்போ டங்கிருந்தார். பிறகு இல்லாளுடன் புறப்பட்டு அபிராமி பூசித்த தான்றோன்றி மாடம், மகேஸ்வரி பூசித்த கருணபுரம், கவுமாரி பூசித்த கஞ்சாறு, வயிணவி பூசித்த பசுபதீச்சரம், வாராகி பூசித்த சத்திபுரி, இந்திராணிபூசித்த தருமபுரம், இந்த ஆறு தலங்களுக்கும் சென்று,



அ.—மந்திரியும் இப்போதுதான் வீட்டுக்குப் போயினர். இன்றைக்கு அதிக வேலைகளிருந்தன. அதையெல்லா முடித்துவிட்டுப் போக இவ்வளவு நேரமாயிற்று. போகும்போது சொல்லிக்கொண்டுதான்போனார்.

கற்.—என்ன சொல்லிக்கொண்டு போனார்?

அ.—குழந்தைக்கு என்பேரில் மிகுந்த வருத்தமிருக்கும். நாளைக் காலையில் பையனை அழைத்துவருகிறேன் என்று சொல்லிப் போனதாகச்சொல்லிவைக்க வேண்டுமென்று.

கற்.—நம் குழந்தைக்கு அந்தக் குழந்தையிருப்பது இது வரை தெரியாது. தெரிந்திருந்தால் முன்னமேயே பார்க்க வேண்டுமென்று சொல்லியிருப்பான்.

அ.—நம் வீட்டில் உன்னைப்போலவே ஒரு தம்பி யிருக்கிறானென்று மந்திரி சொன்னதுதான் நம் குழந்தைக்கு என்ன ஆனந்த முண்டாயது வென்று நினைக்கின்றனை. வெகு சந்தோஷம். அதைப்பார்த்த எனக்கு இருந்த தலைநோவெல்லாம் எங்கேயோ பறந்தோடிற்று.

கற்.—சிறு பிள்ளைகளென்றால் அப்படித்தானிருக்கும்.

அ.—சிறு பிள்ளைகளா அப்படியா நினைத்திருக்கிறாய். அப்படிக்கு சிறு பிள்ளைக ளென்று மெதுவாக நினையாதே. ஏதோ தெய்வாம்சம்போலிருக்கிறது.

கற்.—மந்திரிபுத்திரனைப் பார்த்திருக் கிறீர்களோ?

அ.—இதுவரையில் பார்த்ததில்லை நேரில்.

கற்.—பின் எப்படித் தெரிந்துகொண்டீர்கள்?

அ.—கேள்வியினால் தெரிகிறது. நாளைக்காலையில் வருவான்பாரு.

கற்.—விதையொன்று போடச்சுரையொன்று முளைக்குமா?

அ.—கரும்பு நாட்டினாற் கரும்பே யுண்டாயினும் அதுமுத்தை யுடைய கரும்பாய் விளைந்தால் எப்படியிருக்கும்!

கற்.—அதுபோலென்று சொல்கிறீர்களா?

அ.—அதற்குச் சந்தேகமுங்கூடவா!

கற்.—சந்தேகமேன் அப்படியிருப்பது எல்லோருக்கும் புகழ்ச்சிதான்.

அ.—புகழ்ச்சி யென்று ஒருதரமா சொல்வது?

கற்.—பலதரஞ் சொல்லவேண்டியதுதான். ஆனாலதை நாமேசொல்லிக்கொள்கிறதா உலகோரல்லவா சொல்லவேண்டும்?

அ.—அதுசரி ஒருஅத்தாட்சியாய் சொன்னேன்.

கற்.—சரி எல்லாம் நாளைப் பேசிக்கொள்ளலாம். தங்களுக்குத் தேகபலஹீனமாயிருக்கிற இன்று அதிக நேரம் விழித்திருக்கவோ பேசவோ கூடாது நித்திரை செய்யுங்கள்.

என்று சொல்லிவிட்டு இருவரும் படுத்து நித்திரைபோயினர். அங்கே மந்திரியானவர் அரசரிடம் விடை பெற்றுத் தன்னுடைய கிரகத்திற்குப் போய் அநுஷ்டானதிகிரியைகளை முடித்துக்கொண்டு இஷ்டதெய்வமாகிய விக்னேஸ்வரருடைய ஆலயஞ்சென்று சுவாமி தெரிசனஞ் செய்து கொண்டு திரும்பி வந்து மனைவியின் உபசாரத்துடன் சிவார்ப்பணமாகப் புசித்துச் சற்று நேரம் மேல்மாடியின் பேரில் உலாத்திக்கொண்டிருந்து பின் சயனவறைக்குச் சென்றனர். அதற்குள் இவருடைய பத்தினியும் போஜனமருந்திச் செய்யவேண்டிய பணிகள் யாவுங்குறைவற வியற்றித் தன் கணவரிடம் வந்து இருவரும் பின் வருமாறு சம்பாஷித்தனர்கள்.

தே.—அன்பரே ஏது இன்று இவ்வளவு நேரமாயிற்று வருவதற்கு?

ம.—பெண்ணே இன்று நான் கொலுமண்டபஞ் சென்று அதிக நேரம் வரை காத்திருந்தும் அரசர் வாராததால் அவரிடஞ் சென்றேன்.

தே.—ஏன் அரசர் வாராதிருந்தனர் காரணம் யாது? உடம்புக்கேதாவது அசௌகரியமேற்பட்டதோ!

ம.—ஆம் ஆம் அதினால்தான் இவ்வளவு நேரமாயிற்று.

தே.—என்ன அப்படி திடீரென அசௌகரியமேற்படலாச்சுது.

ம.—காரணமென்ன நேற்றுத் தயிலமிட்டுக்கொண்டவர் இரவில் பாலன்ன முண்டனர் போலும் அதினாற் கொஞ்சந் தலைவலியிருந்தது வேறு ஒன்றுமில்லை.

தே.—இப்போது வரும்போது பார்த்து வந்தீர்களா?

ம.—பார்த்துவிட்டுத் தான் புறப்பட்டு வந்தேன் சௌகரியமாயிருக்கிறார்.



தே.—நமது சிகாமணி தங்கள் வரவை யெதிர் பார்த்து இதுவரையில் சாப்பிடாதபடிக்கிருந்து விட்டு என்னுடைய கட்டாயத்தின்பேரில் சற்று நேரத்திற்குமுன் தான் கொஞ்சம் புசித்து நித்திரை செய்கிறான்.

ம.—இவ்வளவு நேரமாகவா விழித்திருந்தான் சாப்பிட்டுப்படுத்துக் கொள்ளாது—

தே.—ஆம் ஆம். தங்களிடம் ஏதோ கேட்கவேண்டுமென்று சொல்லிக்கொண்டான்.

ம.—அதுதான் நான்போகும்போது இன்னொரு சமயஞ் சொல்கிறேனென்று சொல்லிப்போனேனே.

தே.—இன்னொரு சமயம் என்றதை இன்றைக்கே திரும்ப வந்தவுடன் சொல்வார்களென வெண்ணிக்கொண்டான் போலும்.

ம.—இருக்கலாம். இவனைப்பற்றி அங்கே அரச புத்திரனிடம் உன்னைப்போலொரு தம்பி எங்கள் வீட்டிலிருக்கிறானென்று, அந்தக் குழந்தை யென்னைப்போல் உங்கள் வீட்டில் தம்பி யிருக்கானோவென்று கேட்டதற்குச் சொன்னேன் சொன்னேனோ இல்லையோ அவனுக்கு அடங்காத சந்தோஷம் வந்து இப்போதே அவனைப் பார்க்க வேண்டுங் கூட்டிவா யில்லையானால் நான் வருகிறேன் போவோம் என்று நிரம்ப வருத்தமுற்றான்.

தே.—அப்புறம் அழைத்து வருகிறதுதானே கூடாதென்று சொல்லிவிட்டீர்கள்.

ம.—இல்லை. அப்புறம் எவ்வளவோ சமாதானம் பண்ணி கட்டாயம் அழைத்து வருகிறேனென்று சொல்லி வைத்தேன்.

தே.—பாவம் குழந்தை நினைத்துக்கொண்டே யிருக்குமே அழைத்து வருவார்களென்று.

ம.—நினைத்துக்கொண்டுதானிருக்கும். அவசரமான வேலைகளிருந்ததால் இங்கு வரமுடியாமற் போயிற்று. இப்போதென்ன முழுகிப்போயிற்று காலையி லழைத்துப் போகிறேன்.

தே.—காலையி லழைத்துப் போவீர்களென்று தெரியாமலா விருக்கிறேன். நீங்கள் கூட்டியாபோக வேண்டும்? சங்கதிமட்டும் நமது சிகாமணி காதிற்படட்டும் அப்புறம் அவனிங்கு நிற்கிறானாவென்று பார்க்கலாம்.

ம.—அது வாஸ்தவந்தான். சிறு குழந்தை அடிக்கடி அங்கு செல்வானென்றுதானே இதுவரை அவனுக்குச் சங்கதி தெரிவிக்காதிருந்தது அதை நீ தெரிந்து கொள்ளவில்லையோ.

தே.—தெரியாமலென்ன தெரியும். அவனும் சிறு குழந்தையானதினாற் போய் வழக்கம் பண்ணக் கூடாதுதான். வழக்கம் பண்ணிவிட்டால் தனியே போக ஆரம்பித்துவிடுவான். வழியில் இடைஞ்சல் முதலியவை ஏற்பட்டால் தப்பித்துக் கொள்வதற்கு வகை யறியான். ஆகையால் காட்டா திருந்தது நலந்தான். இனி அப்படி யிருக்க முடியுமோ காட்டித்தான் தீரும்.

ம.—ஆஹா! இதற்கு ஆக்ஷேபம் கூடவா. அவசியம் கூட்டிப் போய்த் தீரவேண்டும்.

தே.—காலையில் சிகாமணியை அழைத்துப் போய்க் காண்பிவித்துத் திரும்பி வரும்போது அந்தக் குழந்தையையும் கூடவே அழைத்து வாருங்கள்.

ம.—நா மழைக்கவாவேண்டும் தானே வருவானே.

தே.—இன்று தங்களுக்குச் சிரம மதிகமெனவெண்ணுகிறேன். நீங்கள் சீக்கிரம் நித்திரை செய்யச் செல்லுங்கள்.

ம.—ஆமாம் எனக்குமின்று அலுப்பதிகந்தான். படுக்கை தயாராச் சுதோ

தே.—ஆஹா! அதை முன்னமேயே தயார் செய்திருக்கிறேன். நீங்கள் செல்வதற்குத் தடை யாதொன்று மில்லை.

ம.—இன்று மட்டுமா. நா மிருவருஞ் சதி பதியா யென்றைய தின மிணைக்கப்பட்டோமோ அன்று முதலல்லவா நடந்தேறி வருகிறது.

தே.—ஊம் நான் தங்களுக்கு அப்படி யென்ன விசேஷமாக நடந்து கொண்டேன். ஒன்றுங் கிடையா தப்படி.

ம.—நீ அதை யெப்படிக் கூறுவாய் நீ செய்கிறதை நீயே சொல்வாயா அப்படிச் சொல்லிக்கொண்டா லது தற்புகழ்ச லல்லவா இது உனக்குத்தான் தெரியுமே சூத்திரம்.

தே.—நான் பெண்ணாகப் பிறந்தவள் என்ன சூத்திரத்தைக் கவனித்தேன்.

ம.—நன்னூலில் சொல்லியிருக்கிறதைப் பார்த்திராவிடிற் கேட்டாவதிருக்கமாட்டாயா?



தே.—நான் கேட்டது கிடையாது. இப்போது திருவாய்மலர்ந்தருளினீர்களானால் செவியாரக் கேட்டுக்கொள்ளுவேன்.

ம.—
தோன்றா தோற்றித் துறை பல முடிப்பினும்
தான்றற் புகழ்தல் தகுதியன்றே

எனக் கூறியதை யறியாயோ

தே.—அறியாமலென்ன அறிந்த போதினும் எனக்குத் தங்கள் வாக்கினாற் கேட்கப்பிரியம்.

ம.—உலகிற் பெரும்பாலும் பிள்ளைகளின் மொழியையும் கிள்ளையின் மொழிகளையுங் கேட்பதற்குப் பிரியங்கொள்ளுவர். நீ அதை விடுத் தென் சொற் கேட்க யாது காரணம்?

தே.—காரணமில்லாமலா கூறுவேன். காரணத்தோடே தான் கூறினேன்.

ம.—அக்காரணம் யானறியேனே நீ எப்படியோ தெரிந்துகொண்டிருக்கின்றனை.

தே.—எல்லாம் அவ்விடத்துப் பாக்கியந்தான்

ம.—சரி உன் மனதி லெக்காரணங் கொண்டனையோ அதையாவது சொல்.

தே.—காரணமா எல்லாம் நீங்களறிவீர்கள் நான் சொல்வதென்ன.

ம.—உன் வாக்கிலிருந்து வரவேணுமென்று எனக்குப் பிரியமிருக்கிறதால் வாயைத்திற.

தே.—என்வாய் கால்வாய்தான்.

ம.—அட கால்வாயாயிருந்தாலுஞ் சரி அல்லது அதிற் செல்லுய் நாவாயா (கப்பலா) யிருந்தாலுஞ் சரி நீ வாய் திறந்து கூவாய். மணந்த பூவாய் இப்போதாவா செய்யாதேவா சொல்லீவாய் ஏபாவாய்.

தே.—போதும் போதும் பெரிய சமுசாரிகள் கிரகத்தில் நவதானியங்கொட்டிவைக்கும் மண்பாண்ட மடுக்கினாற் போன்று ஒன்றின்மே லொன்றாக அடுக்குகிறீர்களே.

ம.—எனக்கு அடுக்குகிற வழக்கமானால் உருட்டுகிற வழக்கம் உனக்கோ?

தே.—இல்லை. அதுவுந் தங்கள் பங்கிலிருப்பின் எனக்குச் சந்தோஷமே.

ம.—அப்படியெண்ணமில்லாமலா சில பெண்கள் கணவருடன் கத்திக்கொண்டு கரிப் பாத்திரமுங் கையுமா யலையவிடுகிறே னென்று சபதங் கூறுகின்றனர்.

தே.—அப்படியானால் நானவர்களைச் சேர்ந்தவளா?

ம.—சேராமல் உனக்கு அவயவங்கள் இரட்டித் திருக்கிறதோ.

தே.—எனக்கு இராட்டித்ததானா லங்குமவ்வித மேற்படவேணுமே.

ம.—போதும் போதும் தமிழை வளர்க்காதே.

தே.—நானொன்றும் வளர்க்கவில்லை. தாங்கள் விடுகிற தண்ணீரால் தானாக வளர்ந்திடுது.

ம.—நான் தண்ணீர் விட்டாலும் அதை அப்புற மிப்புறமோடாமல் இருக்கச் செய்தது நீ யல்லவோ?

தே.—நீங்கள் சேருள்ள விடத்திற் கொட்டியதால் நான் அணைகட்ட நேர்ந்தது. கற்பாறை போன்ற தரையிற் கொட்டியிருக்க வேணும்.

ம.—அப்படியானாலுன் அபிப்பிராயம் கற்பாறை போன்ற அவ்வளவு சாதுரியமான மூடப் பெண்களிடத்திற் பேசினால் பேசுவதற்குப்பதில் சொல்லாமல் மரப்பாவை போலிருப்பாள். நானோ எல்லாங் கற்றுணர்ந்த எந்தலாகிய தோற்பாவை யென்கிறாய் அப்படித்தானே.

தே.—தோற்பாவையாயினுஞ் சரி அல்லது மலப்பாவையாயினுஞ் சரிதான் தாங்கள் எந்தப் பாவையோ தெரியவில்லை.

ம.—பெண்ணே அது வெல்லாஞ் சரிதான்.

தே.—அது வெல்லாஞ் சரிதானென்று விதுவெல்லாந் தப்போ?

ம.—என்ன வாயைத்திறக்கவிடேனென்கிறாயே.

தே.—அப்படி யிங்கே கை கொண்டு பொத்துவா ரொருவருமில்லை.

ம.—நான் சொல்வதைச் சரியாய்க் கேட்டுப் பேசு

தே.—கடவுள் நல்ல காதைத்தான் தந்திருக்கிறார் செவிடல்ல.

ம.—வாயை மூடிக்கொண்டேன்.

தே.—அப்படி யதட்ட வருவாரிங்கு யாதொருவருமில்லை பயப்பட வேண்டாம் நான் அணையிருக்கிறேன் (பேசவில்லை) ஊமையா பேசாதிருக்கிறீர்களே, தங்களுக்கும் மந்திரி யலுவல் கொடுத் தனரே அரசர், அவர் புத்திசாலிதான்.



ம.—(சிரித்தனர் சிரித்துவிட்டு) உலகம் எப்படியும் பலவிதம் பேசும். நீயும் தருணம் பார்த்துத்தான் பேசுகிறாய். மற்ற வேளைகளில் ஒரு வார்த்தை பேச எவ்வளவோ பொருள் கேட்பாய் (இவளும் பார்த்து சிரித்துவிட்டு)

தேவி.—நீங்கள் கேட்ட காரணம் அதுதான். அதுவும் தங்கள் வாக்கிலிருந்தே வரவேணுமென் றபிப்பிராயம்.

ம.—அதுதானென்றால் விளங்கவில்லையே.

தேவி.—நினைத் துணர்ந்தால் மனத்திற் றோன்றும்.

ம.—எதைநினைப்பது, எதை உணர்வது?

தே.—கிடைத்தவற்றையும் பெரியோர் கூறினவற்றையும்.

ம.—எங்கெல்லாமோ புகுந்து செல்கின்றனையே.

தே.—நாதா சந்தேகம் வேண்டாம். தம்மோடு மஞ்சத்தினிடமே உட்கார்ந் திருக்கிறேன். மறைவாகச் செல்லவில்லை.

ம.—நீ சொல்வது சரி, சரீரம் இங்குதா னிருக்கிறது. நான் காமாலை நேத்திரனல்லன். உன் மனஞ் செல்வதாய்ப் புகன்றேனே யல்லது வேறல்ல.

தே.—நாதா! வெகு அழகா யிருக்கிறது தங்களுடைய வாக்கியம்.

ம.—என்னுடைய வாக்கியத்தில் யாது குறை கண்டனை கூறு பார்க்கலாம்.

தே.—பிராணேசா! உலகோர் தம்தம் மனஞ் சென்ற வழி யெல்லாம் பின்பற்றக்கூடாதெனப் பெரியோர்—மனம் போனபோக்கெல்லாம் போகவேண்டாமென்று கூறியிருக்க, தாங்கள் தங்கள் மனம் போன வழியிலுஞ் செல்வது கடந்து பிறராகிய என் மனம் போகும் மார்க்கத்திலும் பின்பற்றுகின்றீர்களே இது சரியா?

ம.—இது ஒரு குற்றமோ.

தே.—அல்லவோ!

ம;—சரி சரி இனி நான் வாய் திறக்கேன்.

தே.—திறக்காதிருக்க யார் விடுகிறார்?

ம.—அதுவும் அப்படியா?

தே.—அப்படியோ எப்படியோ நீங்களே யோசித்துக் கொள்ளுங்கள்.

ம.—எல்லாம் என்னிடத் திருந்தே முன் சொன்ன காரணம் வெளிவரட்டுமென்ற எண்ணங் கொண் டிருக்கின்றனை அவ்வளவுதானே உன் கோரிக்கை என்ன சொல்கிறாய் ?

தே.—என்ன நான் சொல்வது அவ்வளவுதான்.

ம—சரி நானே சொல்லிவிடுகிறேன்.

> " நேசனைக் காணவிடத்தே நெஞ்சாரவே துதித்தல்
> ஆசானை யெப்பொழுதுமப்படியே—நேச
> மனையாளை மஞ்சத்தில் மைந்தர்களை நெஞ்சில்
> வினையாளை வேலைமுடிவில் "

என்றபடி நீ என்னிடம் இதுகாறும் இவ்வளவு நிரம்பப் பேசியதற்குக் காரணம் இந்தக் காலந்தானே.

தே—ஆம்! இந்தச் சமயந் தவிர வேறு காலங்களில் பேச நாமுன் வருவோமோ, வந்தால் ருசிக்குமோ?

ம.—ஊம்—நீயும் ஒரு கை வைத்திருக்கின்றனை சமயத்துக்கு.

தே.—என் இன்னொன்று எங்கே போயிற்று. தங்களுக்குச் சந்தேகந்தோன்றினும் இதோ (கையிரண்டையும் மந்திரி கன்னத்தில் வைத்து) பாருங்கள் இரண்டிருக்கிறது தெரிந்துகொள்ளுங்கள் நன்றாய்.

ம.—போதும் போதும் இவ்வளவு நேரமும் உன்னோடு வார்த்தையாடிக்கொண்டு கரும்பனைய தூக்கத்தைக் கைவிட்டு குரங்கு போன்ற சேஷ்டையோடு உறவாடியதற்கு இந்த இரண்டு அடி ஒன்றன்பின் ஒன்றில்லாமல் ஒரே சமயத்திற் கிடைத்தது. இனி புத்தி வந்தது தெரிந்துகொண்டேன்.

தே.—ஆஹா உலகில் சாகலம் பெண்களிடத்திற்றான் அதிகம் என்பார்கள். அது வெறுஞ்சொல். தாங்கள் செய்கிறதைப் பார்த்தால் தங்களிடமே கற்றுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

ம.—பெண்ணே தூக்கம் வருகிறது. அதற்கு இடையூறு விளைக்காதே.

தே.—நாதா தாங்கள் தூக்கத்திற்கு நான் என்றாவது இடையூறு செய்ததுண்டா ?

ஸ்ரீ

கடவுள் துணை.

# சுதாரத்னாக...

...THE REGISTRAR OF BOOKS REGISTERED 6-DEC 1915 MADRAS.

" கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி "

Vol 1 தொகுதி—1 | JUNE & JULY 1915. 1915-ம் வரு ஜூன் ஜூலை மீ | No 4, 5. பகுதி—4, 5

## விசேஷ வர்த்தமானங்கள்.

சந்தா நேயர்களுக்கு:—கடவுள் கிருபையால் சந்தா நேயர்கள் அதிகமாய் சேர்ந்திருக்கிறபடியால் நேயர்கள் கடிதம் எழுதும்போ தெல்லாம் சந்தாதார் என்றும் அவரவர்கள் விலாசத்திற்குப் பக்கத்தி லிருக்கும் நம்பரையும் குறித் தெழுதினால், வருகிற கடிதங்களுக்கு உடனே பதி லெழுத அனுகூலமாயிருக்கும்.

சந்தா நேயர்களுக்கு:—நாம் திடீரென்று வெளியூர்களுக்குப் போய் வர நேர்ந்தது. அதை முன்னிட்டுப் போகுமுன்பே, மே, ஜூன் இவ்விரு மாதப் பத்திரிகைகளும் குறிப்பிட்ட காலந்தவறாமல் வெளியாகி விடும்படியான ஏற்பாடுகளைச் செய்து விட்டுப் போனோம்.

அப்படி முன்னெச் சரிக்கையாயிருந்தும் சில அசந்தர்ப் பங்களால், மே மாதம் சஞ்சிகை காலப்பிற்பாடாகவும், ஜூன் சஞ்சிகை இந்த ஜூலை சஞ்சிகையுடனும் சேர்த்து வெளியாக நேர்ந்தது.

இனி காலந்தவறாது வெளியாகும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்:

இது விஷயமாய் இரண்டொருவர் எழுதிய கடிதங்களுக்கும் இதுவே பதிலாகும். (ப-ர்)

ஸர். ரவிந்திர நாத் தாகூர்:—டாக்டர் ரவீந்திர நாத் தாகூருக்குக் கிடைத்துள்ள ஸர் பட்டத்தை அவர் இங்கிலாந்திற்குச் சென்று பெற்றுக்கொள்ள வேண்டுமாம். அவருடைய பிரயாண முதலிய செலவை யாவர் கொடுப்பரோ!

---

குடியர்களின் கட்டுப்பாடு:—திருவாங்கூர் சமஸ்தானத்தைச் சேர்ந்த பெரு மாத்துரையில் வசிக்கும் கிறஸ்துவர்கள் எல்லோரும் ஒரு சபை கூடி இனிநாங்கள் சாராயங் குடிப்பதில்லையென்று மன உறுதியோடு தீர்மானஞ் செய்து கொண்டார்கள்: தீர்மானப்படி நடப்பார்களாயின் அவர்கள் க்ஷேமமடைவார்கள். இவ்வாறே சென்னை ராஜதானி முழுவதும் ஒரு தீர்மானஞ் செய்து கொள்ளுமாயின், அது சென்னை ராஜதானியை மிகுந்த செழிப்படையச் செய்யும்.

---

காசி பிராமண ஸமாஜ ரக்ஷித சபை:—இந்தச் சபையார் சில தினங்களுக்கு முன் ஒருகூட்டம் கூடினர். ஸம்ஸ்கிருத பாஷையில் தர்க்கம், வியாகரணம், வேதாந்தம், வானசாஸ்திரம், ஆயுர்வேத முதலிய வற்றிலும் உலகத்தின் பூர்விகசரித்திரம், தற்கால சரித்திரம், பூகோள சாஸ்திரமு

லிய வற்றிலும் பரீட்சைகள் நடத்தத் தீர்மானித்திருக்கிறார்கள். இந்தியாவில் பல இடங்களிலிருந்து பரீட்சைக்குவரும் மாணவர்களுக்குப் பதக்கங்கள் அளிக்குமாறு அநேக ராஜாக்களும் மகாராஜாக்களும் முன் வந்துள்ளார்கள். சரித்திர நூல்களும் ஸமஸ்கிருதத்தில் இல்லாமையால் அந்நூல்களை 6 மாத காலத்திற்குள் வெளிப்படுத்துமாறு மகாமண்டல . அச்சுக் கூடத்தார் ஒப்புக் கொண்டிருக்கிறார்களாம்.

---

**சிங்கப்பூரில் ராஜத் துரோகஞ் செய்தவர் தூக்கிடப்பட்டார்:**—சிங்கப்பூரில் சில மாதங்களுக்கு முன் கலகம் நேர்ந்த பொழுது அதற்கு உடந்தையா யிருந்ததுடன் இங்கிலீஷ் காரருக்கு விரோதமாகப் பகைவருக்கு உதவியாகவு மிருந்த கே. இஸ்மால் மன்சூர் என்பவர் சென்ற வாரத்தில் தூக்கிடப் பட்டார். தூக்கிடப் படு முன் அவர் தமது குற்றங்களையெல்லாம் ஒப்புக்கொண்டு சில விஷயங்களைத் தெரிவித்தாராம். எனது செல்வமும் செல்வாக்கும் மதிப்பை உண்டு பண்ணியதுடன் பகைவரிடமிருந்து எனக்கு உதவிகிடைக்குமென்று சாதாரண ஜனங்களை நம்புமாறும் செய்தன. அவர்களின் உதவியால் யான் பகைவருடன் சமாச்சாரப் போக்குவரவு நடத்திவந்தேன். சிங்கப்பூரிலிருந்து ஜனங்களைக் கொண்டு போகாவாறு பகைவரது போர்க் கப்பல்கள் இரண்டைத் தருவிக்கச் சிலாது உதவியை நாடுமாறு சென்ற டிசம்பர்மாதம் 28-ந்தேதி ரங்கூனிலுள்ள எனது புத்திரனுக்கு ஒரு கடிதம் எழுதியது வாஸ்தவம். பின் அதனை மாற்றிவிடுமாறு ஒரு முயற்சி செய்தேன்; அதற்குள் அதிகாரிகள் எனது விஷயங்களை அறிந்து கொண்டனர் என்று மான்சூர் கூறினார். அவர்தாம் கண்மூடித் தனமாகச் செய்த வேலையைப் பற்றி விசனத்துடன் தமக்கு விதித்த தண்டனை நியாயமான தென்றும் தகுதியான தென்றும் ஒப்புக் கொண்டாராம்.

---

## விநோதக் கூற்று.

ஒருவன் தன் சிநேகிதனைப் பார்த்து, என்ன வியாபாரம் செய்தால் நல்ல லாபம் கிடைக்கும் என்று கேட்டதற்கு, சிநேகிதன் "இப்போதும் பட்டன் வேலையைக் கெடுக்க மயிர்பிடுங்கிச் சோப்பும், வண்ணான் வயிற்றை அடக்க வாஷிங்கம்பெனியும் சென்னையில் ஏற்பட்டிருப்பது போல, பொய்ச்சாக்ஷி சொல்வோர் ஜீவனத்தைப்பிடுங்க, பொய்ச் சாக்ஷிகம்பெனி என்று ஒரு கம்பெனி ஏற்படுத்தினால் நல்ல லாபம் கிடைக்கும்" என்றுபதில் சொல்லினன்.

---

வெளிநாடுகளுக்கு ஆட்களை ஏற்றும் ஒரு கங்காணி, இப்போது நடக்கும் சண்டைக்கு ஆள்களைச் சேர்க்கத் தனக்கு எவராவது உத்தரவு கொடுத்தால் நல்ல லாபம் அடையலாம் என்று ஒரு திண்ணைமேல் உட்கார்ந்து தனக்குள் சொல்லிக் கொண்டான்.

---

ஒரு உபாத்தியாயர் தன் மாணாக்கனைப் பார்த்து, அடே நான் கேட்கும் கேள்விக்கு பதில் சொல்லப் போகிறாயா இல்லையா என்று கேட்டதற்கு, மாணாக்கன் சொல்கிறேன் சுவாமி என்றான்.

உபா—புளி என்பது என்ன? சொல்.

மாணாக்—இது தெரியாதா! புளி என்பது சர்க்கரையைப் போல் காரமாய் இருக்கும். இது ஒரு கேள்வியா? என்றான்.

அதைக் கேட்டிருந்த மற்றொரு மாணவன், ஐயா அவன் எட்டிக் கொட்டை என்று எண்ணிக் காரமாய் இருப்பது என்று அவசரத்தில் சொல்லி விட்டான் என்று கெட்டிக்காரன் போல பதில் கூறினான்.

---


இனும்! இனும்!! இனும்!!!

# க தா ர த் ன க ர ம்.

மனதை மகிழ்விக்கும்
ஓர்
மாதாந்தரப் பத்திரிகை.

இப்பத்திரிகையில் இனியகதைகளும் அறிவுக்குணவான அற்புத விஷயங்களும் வெளியாகும். இப்பத்திரிகைக்கு ஒரு வருஷ சந்தா தொகை ரூ. 1—8—0 செலுத்துவோருக்கு மிருக திருஷ்ணிகா அல்லது குணசுந்தரி இனாமாய்க்கொடுக்கப்படும். வெளி நாடுகளுக்கு சந்தா ரூபா 2-0-0

**மிருகதிருஷ்ணிகா.**
இந்த நாடகம் டுவல்த்நைட் என்னும் ஆங்கிலநாடகத்திலிருந்து தமிழில் மொழி பெயர்க்கப்பட்டது. நல்ல கடுதாசியில் அச்சிடப்பட்டிருக்கிறது.

**குணசுந்தரி**
அல்லது இல்லற போக்கிஷம்.
இப் புத்தகத்தில் இல்லறத்துக்கு வேண்டிய அரும்பெரும் பாக்கியங்கள் பொதிந்து கிடக்கின்றன.

" கதாரத்னாகரம் ஆபீஸ் "
162, 163, பவழக்காரத்தெரு, சென்னை.

# வசீகரி.

இனிய தமிழ் நாவல். இவ்வரிய நாவல் பிரக்யாதிபெற்ற ஆங்கிலேய வித்வசிரோமணிகளி லொருவராகிய மிஸ்ஸெஸ் ஹென்றிவுட் என்னும் மாதினால் வரையப்பட்டுள்ள புஸ்தகங்களுள் சிறந்ததாகிய ஈஸ்ட்லின் என்னும் நாவலை யொட்டி எழுதப்பட்டது. இஃது சிற்றின்ப விஷயங்களை மட்டும் வெகுவாய் விரித்துக் காட்டி ஆத்மாவுக்கு நிஷ்பிரயோஜனமாய்ப் போகும் சில நூற்களைப் போன்றதன்று. இது விசேஷமாய் பெண்கள் தம் கற்பழிதலாலடையும் கஷ்டங்களை யெடுத்துக் காட்டி யுள்ளது. சிற்றின்ப விஷயங்களில் உழன்று திரியும் ஆண் பெண் உருவமெடுத்த ஆன்மகோடி ஞானத்துக் கதா ரூபமாய்க் கும் பொருந்திய நூலெனக் கொள்வதே முறை. இக்கதையின் சாராம்சம் கற்பழிதலால் வரும் கஷ்டங்கள் மாத்திரமன்று; வீண்பெருமை, டம்பம், அளவுக்குமிஞ்சிய செலவு, ஆவல், அடாதகாரியத்தில் தலையிடல் ஆகிய இவற்றால் நேரிடும் கஷ்டங்களும் அடங்கி யிருக்கின்றன. இப்புத்தகம் கிரவுன் அளவில் 350 பக்கங்களுக்குமே லுள்ளது. விலை ரூ. 1 0 0

அமிர்தம் அன் கோ,
தபால் பெட்டி, 222, மதராஸ்.

**SEND FOR THIS FREE BOOK.**

இனம்! இனம்!! இனம்!!!

# ஆயுர்வேத மகத்துவம்.

இரண்டணா விலையுள்ள இப்புத்தகத்தை பொது நலன்கருதி இலவசமாய்க் கொடுக்கத் தீர்மானித்து விட்டோம். இதில் ஆயுர்வேத உற்பத்தி, சாராம்சம், மாறுதலடைந்த காரணம், ஜனசமூகத்துக் குண்டாகும் அனுகுணம் முதலியவைகளை நன்கே நாட்டி உயர்ந்த கிளேஸ் கடிதத்தில் அச்சிட்டிருக்கிறோம். அரையணா ஸ்டாம்பு அனுப்புவோருக்கு மறுதபாலில் அனுப்பப்படும்.

AMIRTAM & Co,
Post Box 222,
MADRAS.

அமிர்தம் அன்கோ,
தபால் பெட்டி 222,
மதராஸ்.

திருநெல்வேலி ஜில்லாவுக்கு சோல் ஏஜண்டு:—

K. அரியநாயக முதலியார்.

ஆழ்வார்குறிச்சி.

டாகவேண்டும். மனமும்மமது சுவாச நடை இருதயத் துடிப்பாகிய நாடி நடை இவைகள் ஒன்றாயிருப்பதால் முன்சொன்ன சுவாச அப்பியாசம் அவசியமாயிருக்கிறது. சுவாசாப்பியாசங்களிலும் பலபிரிவுக ளிருக்கின்றன. நமது முன்னோர் காலைமாலை கடவுளை வணங்கும் சந்தியாவந்தன முதலிய மந்திரங்களோடு பிராணயாமம் என்னும் ஒருவகை சுவாசாப்பியாசத்தையும் கலந்து வைத்திருக்கிறார்கள்.

சாதாரணமாகவோ கருவிகள் மூலமாகவோ, செய்யும். தேகாப்பியாசங்களெல்லாம் மன அமைதியுடனிருந்து செய்யும் சுவாசாப்பியாசத்திற்கு இணையாகா தென்பது வெளியாகிறது. தேகாப்பியாசத்துக்கு ஒவ்வொருவரும் மேற்கண்டுள்ள விஷயங்களை அப்பியாசித்து வந்தாலே போது மென்று நினைக்கின்றோம்.

வை. மி.

---

"ஓப்ஸ்" கன்பெக்ஷன் ஆப் ரோஸ்:—சென்னை, மெஸர்ஸ் ஒப்பி ஸமித் கம்பெனியாரனுப்பிய டப்பி யொன்றை வரப் பெற்றோம். அவர்கள் விளம்பரப் படுத்தியபடி அது மலச்சிக்கலை நீக்குவதாயும் நாவறட்சியை யகற்றுவதாயுமிருக்கிறது.

---

"ஓப்ஸ் ஆர்மிவெல்" மெஸர்ஸ் ஓபி. ஸ்மித் அண்டுகோ வால் ஏற்படுத்தப்பட்டு வருகிற ஒப்ஸ் ஆர்மிவெல் என்னும் குழாய் கிணறுகள் சிரேஷ்டமானவைகள். திருச்சிராப்பள்ளி முனிசிபற் சபைப் பிரிவிலுள்ள பட்டினமாக விருந்தும் ஜலத்திற்காகப் பத்து இருபது பெண்கள் வரை குழாயண்டையில் வெகு நேரம் குடத்தை வைத்துக் காத்துக் கொண்டிருக்க, மேற்படி கம்பெனியார் மூலம் ஏற்படுத்திக்கொண்ட வீட்டார்களும் அத்தெருவாரும் அதனால் மிகவும் சௌகரியமாய் வசிக்கிறார்கள். அவ்வளவு ஜலசல்சமிப்புண்டாயிருக்கிறது. ஒரு புது வாழ்வைத் தரும் வரப்பிரசாதமா யிருக்கிறது. இதை நாம் நேரிற்கண்டறிந்து சொல்லுகிறோம். (ப-ர்)

---

500 ரூபாய் வெகுமதி:—காலஞ் சென்ற ஆனரபில் மிஸ்டர் கோகலேயின் ஜீவிய சரித்திரத்தைக் கிரமமாக வெழுது பவர்க்கு 500 ரூபாய் வெகுமதியளிக்கப்படும். அச்சரித்திரத்தை ஆனரபில் மிஸ்டர் சுரேந்திரநாத் பானர்ஜியும், ஸர். நாராயண சந்திர வர்க்கரும் அடங்கிய ஒரு கமிட்டியார் சோதனை செய்வார்கள்.

---

பிளேக்கைத் தடுக்கும் ஒரு புது மருந்து:—பிராமணர் செய்யும் ஓமப்புகை படுபவர்க்குப் பிளேக்கு மிகுதியாக வருவதில்லையாம். பிளேக் கண்டிருப்பவர்க்கு ஓமப்புகை படுமாறு செய்துவந்தால், அந்நோய் தணிந்து போமாம். ஓமப்புகை பிளேக்கிருமியைக் கொல்வதற்குத் தக்க மருந்தாயிருக்கின்றதாம்.

---

எம்டனுக்கு ஞாபகச் சின்னம் சென்னை நகரவாசிகள் எம்டன் என்னும் ஜெர்மன் போர்க்கப்பலை மறந்திருக்க மாட்டார்கள். அதன் ஞாபகம் எப்பொழுதும் இருக்குமாறு சென்னை ஐக்கோர்ட் சுற்றுச் சுவரில் கடற்கரையை நோக்கி, எந்தஇடத்தில் எம்டன் குண்டுகளில் ஒன்று விழுந்ததோ அந்த இடத்தை அதிகாரிகள் பழுதுபார்க்கும் பொழுது அதில் ஒரு கருங்கல்லில் "1914-ம் வருஷம் செப்டம்பர் மாதம் 22-ந்தேதியிரவு எம்டன் என்னும் ஜெர்மன் போர்க் கப்பல் சென்னை நகரத்தைப் பீரங்கியால் தாக்கிய பொழுது இந்த இடத்தில் அதன் குண்டொன்று வந்துவிழுந்து இந்தச் சுற்றுச் சுவரைப் பழுதாக்கியது" என்று செதுக்கப் பட்டிருக்கிறது. சென்னைக்கு வந்து பயமுறுத்திய எம்டனுக்கு இஃதொரு ஞாபகச் சின்னம் போலாம்.

# எமது அபிப்பிராயம்.

பிரசித்தி பெற்றுவரும் சுகானந்த மாத்திரைகள் மிகவும் பரிசுத்தமான கைகண்ட ஔஷதம். தேகத்துக்குக் கெடுதி செய்யக்கூடிய எவ்வித லோகமாவது சரக்காவது சேர்க்கப் படவில்லை. மாத்திரைகளை உபயோகித்தால் நற்குணத்தைத் தவிர வேறெதுவும் பின் தொடர்வதற் கில்லை. இக போகங்களை அளிக்கவல்ல இவ் விந்தியா தேசத்து மூலிகைகளைக் கொண்டு, இந்தியர்களால் கைபடாமல் இயந்திரங்களில், பார்வைக்கு இங்கிதமாயும் தயார் செய்யப் பட்டிருக்கிறது. எவரும் கஷ்டமின்றி லகுவில் உபயோகிக்கத் தக்கது. இம் மருந்தை வாலிபர் முதற் கொண்டு வயோதிகர் வரை உபயோகித்து பயனை யடையலாம். தேகத்தை திடகாத்திர மாக்கத்தக்க நல்ல மருந்து. தேகம் கட்டு விட்டு தளர்ந்துபோன ஸ்திரீ புருஷர்களும் உபயோகித்து உண்மையை யறிந்து இம்மருந்துக்கு வேறொன்றும் நிகரில்லையெனஜெயப் பிரதாபத்தையடைந்திருக்கிறது.

**ஒரு கடிதம்.**

(2—5—1915.)

தாங்கள் எழுதி யிருந்தது போல் தினந்தோறும் சுகானந்த மாத்திரைகளை உபயோகித்து வருகிறேன். என் தேகம் முன்னிலும் வன்மையுடைய தாகவே யிருக்கிறது. பலஹீனத்தை நீக்கி சுறுசுறுப்பைக் கொடுத் திருக்கிறது. இந்த ஒரு மருந்தில்தான் உபயோகித்த வுடன் குணத்தைக் கண்டேன். நல்ல சுகத்தை அடைவதற்கு தங்கள் சுகானந்த மாத்திரைகளே சிலாக்கியம். தயவுசெய்து இன்னும் ஒரு புட்டி மாத்திரை வி. பி. யில் அனுப்பக் கோருகிறேன்.

தங்க ளன்புள்ள

தங்க ளன்புள்ள

K. வேதமூர்த்திமுதலியார்.

சோழவந்தான்.

உபயோகித்தவர்,

50-மாத்திரை கொண்ட புட்டி 1-க்கு விலை ரூபா 1 0 0

திருநெல்வேலி ஜில்லாவுக்கு ஏஜண்டு:—

K. அரியநாயக முதலியார்.

ஆழ்வார்தூரிச்சி.


# உன் நிலையிலிருந்து உயர்வதற்கு வழிகள்.

அதிகாலையில் நித்திரை விட்டெழுந்து அவசிய கருமங்களை முடித்துக்கொண்டு சுத்தமானதும் வெளிக்காற்றுலாவக் கூடியதுமான ஓரறையில் சுகாசனம் அல்லது கமலாசனத்தில் (கமலாசன மென்பது உட்கார்ந்து இடதுகாலை வலது கெண்டைக்கால்மீதும் வலது பாதத்தை இடது கெண்டைக்கால் மீதும் படியும்படி பின்னிக் கொள்வது; சுகாசன மென்பது இடதுகால் தொடைமீது வலது காலை மடக்கிப் போட்டு உட்காருவது) இருந்து, இடுப்பை நிமிர்த்தி மார்பை முன்னுக்குத் தள்ளி நிமிர்ந்து உட்கார்ந்து மனத்திலுள்ள மற்ற விஷயங்களை யெல்லாம் நீக்கிவிட்டு இவ்வுலகத்தையும் அதில் உன்னையும் படைத்து காத்துவரும் கடவுள் ஒருவரிருக்கிறாரென்பதை உறுதியாய் நம்பி பயத்தையும், கவலையையும், சந்தேகத்தையும் விட்டு, தைரியத்தையும், சந்தோஷத்தையும், நிச்சயத்தையும் உடையவனுயிருந்து, நாசிமுனையில் உன்னுடைய சுவாசம் நடைபெறுவதைக் கவனிக்க வேண்டும். 10 நிமிஷம் கவனித்தால் அதிவேகமாக நடைபெறும் சுவாசம் மெதுவாய் நடக்கும். நாவில் உமிழ்நீர் பெருகும். உனக்கு ஓர் சுகந்தோன்றும். அவ்விதம் அரை மணி காலைமாலை இரண்டு வேளைகளிலும் அப்பியாசம் செய்.

## தேகாப்பியாசம்.

சுவரின் ஓரத்தில் உன்னுடைய தலையின் பின்புறம் புஜத்தின் பின்புறம் குதிகால்களின் பின்புறம் இவைகள் சுவரில் படும்படியாக நிமிர்ந்து நில். பிறகு உன் தலையை உயர்த்தி தாழ்வாயின் முன்பக்கத்தை கழுத்தின் பின்பக்கமாக எவ்வளவு தூரம் நிமிர்க்கமுடியுமோ அவ்வளவு தூரம் நிமிர்த்தி, கைகள் இரண்டுதொடைகளையும் சேர்ந்திருக்கும்படி தொங்கவிடு. மார்பை முன்னுக்குத்தள்ளி வயிற்றை உள்ளடக்கு. புஜங்களை அசைக்காதே, இதுதான் உன்தேகமிருக்க வேண்டிய சரியான நிலை.

அந்நிலையில் நிற்கும்போது உன் தேகத்திலுள்ள தசைநார்கள் வலிவுற்றிருப்பதைக் காண்பாய். மேலும் உன்னுடைய மார்பு புஜங்களை பின்னுக்குத் தள்ளுவதால் வயிற்றின் மேல்புறத்திலுள்ள தசைகள் முன்னுக்கு வராமல் சுருங்கி விலா எலும்புகள் மேல்தூக்கப்பட்டு முன்னுக்கு வருவதையும் காண்பாய். மேற்சொன்ன இரண்டும் நன்றாய்த் தெரியும் வரையில் சுவரின் பக்கத்தில் நின்று முன் சொல்லியபடி பழகு.

தேகத்தின் தசைகளையும் நரம்புகளையும் விசையுடனிருக்கச் செய்யவும் மார்பை முன்னுக்குத் தள்ளச் செய்யவும் கற்றுக்கொண்டால் சுவரின் உதவிவேண்டுவதில்லை.

மேற்சொன்ன இரண்டு விஷயங்களையும் தெரிந்து கொண்டபின் நீ செய்யவேண்டிய தென்ன?

நீ எந்தச் சமயத்தில் எந்தவிடத்தில் நிற்க நேரிட்டாலும் சரி அவ்விடத்தில் மேற்சொன்ன மாதிரியே தாழ்வாய்க் கட்டையை உள்ளுக்கிழுத்து தலையை நிமிர்த்தி புஜங்களைத் தளர்த்தித் தொங்கவிட்டு வயிற்றின் தசைகளை உள்ளுக்கிழுத்து மார்பை முன்னுக்குத் தள்ளி நிற்கவேண்டும்.

## உட்கார்ந்திருந்தபடி அப்பியாசம்.

ஒரு நாற்காலியில் உட்கார்ந்து முன் சொல்லியமாதிரி சரியான நிலையில்

தேகத்தை நிமிர்த்தி கால்களை உட்பக் கமிழுக்கவும் நீ நாற்காலி, பெஞ்சு, ஸ்டூல் முதலியவைகளில் எதில் உட்கார்ந்தாலும் சரி. கீழே தரையில் உட்கார்ந்தாலும் சரி, சரியாய் நிமிர்ந்தநிலையில் தேகமிருக்கவேண்டும்.

நடக்கையில் அப்பியாசம்.

பக்ஷிகள், மிருகங்கள் தம் தம் தேக அமைப்புக்குத் தக்கபடி நன்றாய் நடக்கின்றன. மனிதர்கள் தான் சரியாய் நடப்பதில்லை. ஆதலால் நடக்கும்போது தேகத்தை சரியான நிலையில் நிமிர்த்தி மெதுவாகவும் நன்றாகவும் சுவாசித்துக் கொண்டு, ஒரே வேகத்தில் நடக்கவேண்டும். அப்போது இடுப்பை முன்பக்கம்வளைத்தும் குதிகால் பூமியில்படும்போது முழங்காலை நீட்டியும் கைகளை வீசியும் நடக்கவேண்டும். இவ்விதம் பழகிக் கொண்டால் வெகுதூரம் நடக்கலாம். சோர்வுண்டாகாது. தசைநார்கள் வலிவடையும்.

குறிப்பு:—மேற் சொல்லியபடியே நிமிர்ந்த நிலையில் நிற்கும்போதும் உட்கார்ந்திருக்கும்போதும் நடக்கும்போதும் ஓடும்போதும் தேகமிருக்கவேண்டும். சில சமயங்களில் நீ அந்நிலையை மறந்து விட்டு முதுகை வளைத்துக் கொண்டிருக்கலாம். அச்சமயத்தில் அப்பியாசம் ஞாபகத்திற்கு வந்தால் அந்தக்ஷணமே உன் தேகத்தை சரியானநிலையில் கொண்டுவா. சிறிது காலம் கொஞ்சம் கஷ்டத்துடனும் ஞாபகத்துடனும் உன் தேகத்தை நிமிர்ந்த நிலையிலிருக்கும்படி செய்தால் பிறகு அது உனக்கு இயற்கையாய் விடும். அதனால் கிடைக்கும் பலன்கள் அனந்தம்.

படுக்கையில் அப்பியாசம்.

படுக்கைக்குப் போகும்போதுஜலே பாதையை நிவர்த்திசெய்து விட்டு ஜனனேந்திரியத்தையும், முகம், கை, கால்களையும் குளிர்ந்த ஜலத்தால் நன்றாய்க் கழுவிக்கொண்டு தண்ணீர் குடித்துவிட்டு கொஞ்சநேரமிருந்து இடதுபக்கமாக படுத்து மேற்படி முதல் அப்பியாசத்தில் சொன்னபடி கடவுளை தியானித்து சுவாச போக்குவரவில் கவனம்வை.

சுவாசிக்கும் அப்பியாசம்.

உட்கார்ந்து இடுப்பு எலும்பின் மேல் இரண்டு கைகளையும் வைத்து பின்பக்கம் பெருவிரலும் முன்பக்கம் மற்ற விரல்களும் இருக்கும்படி ஊன்றிக்கொண்டு பல்லை இருக்கிக்கொள்ளாமல் வாயை மூடிக்கொண்டு மெது வாய் மூச்சை மூக்கால் நிறைய இழுத்து வாயால் விடவும்.

நடக்கும்போது சுவாசித்தல்.

மெதுவாக நடக்கும்போது நான்கு அல்லது ஐந்தடி நடக்கும் வரை மூச்சை இழுத்து ஐந்தடிதூரம் அடக்கி ஐந்தடிதூரம் விடவும். இவைகளை நாளடைவில் அதிகப் படுத்திக் கொள்ளலாம். காற்றை இழுத்து அடைத்துக்கொண்டு வயிற்றை உள்ளுக் கிழுத்து வெளிக்குத் தள்ளுவதால் குடல் சம்பந்தமான நோய்கள் நீங்கும்.

தேகாப்பியா சத்திற்கும் மனோப்பியாசத்திற்கும் நெருங்கிய சம்பந்தமிருக்க வேண்டும்.

தேகாப்பியாசத்தைப் பற்றி பலபேர் பலவிதமாக எழுதியிருக்கிறார்கள் ஒவ்வொருவருடைய அப்பியாசமும் விசேஷமாகத்தான் சொல்லுகிறார்கள் ஆனால் இவைகளில் நாம் முக்கியமாய் கவனிக்க வேண்டியது ஒன்றுண்டு. தேகத்தின் தசைநார்களை மட்டும் பலப்படுத்தி பெருக்கச் செய்து மனிதர்க்கு இயற்கையாகிய மிருகத்தன்மை மேலிடச் செய்[illegible]மலிருக்க வேண்டும் எப்[illegible] மனோசக்திக்கு தேகசக்தி மீ[illegible]யிருக்கக்கூடாது. உலகத்தில் அ[illegible] பெரிய காரியங்களைச் செய்தவர்கள் மனோசக்தியை உடையவர்களே ஆதலால் நமது அப்பியாசம் தேகதிடமும் மனோதிடமும் உண்டாக்கக் கூடியதாயிருக்க வேண்டும் மனோதிடம் மனோசார்ந்த மடைவதாலுண்



அங்கு எழுந்தருளியிருக்கும் கண்ணுதற்பிரானையும், வதாம்பிகை
யையும் தரிசித்துக் கொண்டு கடைசியாக உத்தர மாயூரமென்று
கூறும் வள்ளலார் கோயிலை யடைந்து, எம்பெருமானையும், பெரிய
நாயகியம்மையையும் தரிசித்து, தக்ஷிணாமூர்த்தி சந்நிதி யடைந்து,
நந்திக்கு உபதேசம் பண்ணின ஆசிரியர் பொற் கழலிற் றாழ்ந்து,
கண்ணீரும் கம்பலையுமாக, மயிர்சிலிர்ப்ப நின்று அடியேனுக்கு
உபதேசம் புரிந்தருள வேண்டுமென்று பிரார்த்தித்தார். குருநாத
னும், மனமகிழ்ந்து அருணோக்கம் புரிந்து, குருவடிவங் கொண்
டெழுந்தருளி வந்து இரைதேர் கொக்கொத்து இரவும் பகலும்
தன்னையே நாடும் பரம பக்தனாகிய மறையவனையும், அவர் பத்தினி
யையும் அருகிருத்தி, ஐம்பொறிகளென்னும் வேடர் வலையிற்பட்டு,
தன்னையும் தலைவனையும் அறியாமல் மயங்குவது நீங்குமாறு, பதிபசு
பாசம் என்னும் மூன்றின் இயல்பை, பொது, சிறப்பெனும் இரு
வகையில் பகுத்துரைத்து, மலவலியைக்கெடுத்துத் திருவருள் கூடும்
வழியைக்காட்டி, கோழி, ஆமை, மீன் இவைகள் தங்கள் முட்டை
யை முறையே தீண்டியும், கருதியும், நோக்கியும் தம்வண்ணமாகச்
செய்யுமாறு போல, அவ்விருவரையும் பரிசித்துச், சிந்தித்தும்,
பார்த்தும் தன் வண்ணமாக்கித் தன்னொடு கலக்கும் பேரின்பவாழ்வு
பெறக் கிருபை புரிந்தனன். மறையவரும் ஆங்கு அவ்வுபதேசத்
தைப் பெற்றுத் தன் மனைவியோடு, தெற்கு மாயூரத்துற்ற திருக்
கோயிலுள்ளணைந்து, மாயூர நாதனையும் அஞ்சனாயகியம்மையையும்
தினந்தோறும் போற்றித் தொழுது, ஐயனே யென் கருத்து முடி
யும் நாள் எந்நாளோ வென்று மனமுருக்கத்துடன் வழிபாடுசெய்து
வந்தார். இவ்விதமாகப் பலநாள் ஆராதனை செய்துவர, உமாதேவி
யை யொரு பாகத்தடைந்த பரமன், அப்பிராமணர் முன் தோன்றி
ஏ மறையோய்! நீ நம் சந்நிதியினிடப்புறத்தே ஒரு சிவலிங்கமும்,
உனது மனைவி நமது இடப்புறத்தில் மேவும் அஞ்சனாயகியின் வலப்
புறத்தே ஒரு சிவலிங்கமும் ஸ்தாபித்து, இருவீரும் நன்மலர்
கொண்டு பூசித்து வருவீர்களானால், வானவரும் அணுகுதற்கரிய
பதமுத்தி சில நாளில் நாமீவோ மென்றருள் செய்தார். இவ்விதம்
[illegible]ளித்த சிவபெருமான் திருவடியிற் பணிந்து அப்பிராமணர் ஒ
அண்ணலே! அடியேனுக்கு இன்னும் ஓர்வரமளித்தருள வேண்டும்;
அஃதென்னெனின், உம்மைத் தரிசிக்க வரும் அடியார்கள் என்
பெயர்கொண்டு விளங்கும் சிவலிங்கத்தையும் தரிசித்துச் செல்லும்

படிச்செய்வதே யென்று விண்ணப்பித்து வணங்கினர். அச்சமயம் அனவித்தையும் புவன நாதன் திருவடியிற் பணிந்தெழுந்து கை கூப்பி நின்று ஓ கருணை நிதே! என்பெயர் கொண்டு விளங்குஞ் சிவ லிங்கத்தையும், உலக மாதாவைத் தரிசிக்கவரும் பக்தர்கள் கண்டு தரிசித்துக் களிக்குமாறு திருவருள் புரிய வேண்டுமென்று பரவினள். அருள் சுரக்கும் கண்ணுதற்பிரான், அவ்விருவர்விருப் பப்படியே வரமளித்து, அவர்களை நோக்கி, ஓ புனிதர்காள்! எங் களைத் தரிசிக்கவரும் அடியர் குழாங்கள், உங்கள் பேருறும் சிவ லிங்கங்களைக் கண்டு தரிசிக்காது போவார்களாகில் அவர்கள் எங்கள் தரிசன பலனடையாது போவார்களென்று பின்னுமோர் வரமளித்து மறைந்தார். அவ்விருவர்களும், இறைவனருளிய படியே அந்த விடங்களில் சிவலிங்கத்தை ஸ்தாபித்து முறைப்படி யர்ச்சித்து வந்தார்கள். சின்னாள் கழிந்தபின் ஓர் நாள் அவர்கள் பூசை முடிவுபெற்றதும், அவ்வவர்கள் பூசைசெய்த இலிங்கத்துட் பரமனருளாற் போய்ப் புகுந்தார்கள். இதனைக்கண்ட மண்ணவர் களும் அதிசயித்தார்கள். விண்ணவர்களும் பூமாரிபொழிந்தார்கள். நாதசன்மனெனும் மாதவரும், அவர் மனைவி அனவித்தை யென் பவரும் விண்ணவரும் நண்ணுதற்கரிய சிவானந்த போகத்தி லமர்ந்தார்கள்.

திருச்சிற்றம்பலம்.

## முக்கிய கவனிப்பு.

இந்தச் சரித்திரத்தினால் நாம் அறிந்துகொள்வது யாதெனில்:- நாதசன்மன் என்னும் மறையவரும் அவர் மனைவி அனவித்தையும் இல்லறத்தி லிருந்துகொண்டே யாகாதிகிருத்தியங்களையும், இல்லற தருமங்களையும் ஏகோபித்து நடத்தி வந்ததனால், கைலாசத்தில் சாலோகபதவியை யடைந்து சில நாள் சென்றதும் சாயுச்சிய பதவியை விரும்பினபோது, கறைமிடற்றண்ணல் அவர்களை நோக்கி, நீங்கள் பூதலத்துக்குப்போய், அங்குள்ள புண்ணிய தலத்தில் சிவலிங்கத்தை வைத்துப் பூசித்து, அப்பதவி பெறக்கட வீர்களென்று வரமளித்தபடியால், இப்பாதகண்டத்திலுள்ள திவ் விய க்ஷேத்திரம் அக்கைலையைவிட மேன்மை பெற்றதென்பது தெளிவாக விளங்குகிறது. மேலும் அத்திவ்ய தலங்கள் காசிமுதல்



கன்னியாகுமரி வரையில் பலவுளவாயினும், அவைகளிற் சில மேன் மைபொருந்தியன. அம்மேன்மைபொருந்திய தலத்தில் வசிப் பது, அதிலுள்ள ஆலயங்களைத் தரிசிப்பது, அத்தலத்தில் ஆரா தனைக்குரிய விக்கிரகங்களில் ஒன்றைவைத்துப் பூசிப்பது இம் மூன்றும் மற்றெல்லாவற்றினுஞ் சிறந்ததென வெளிப்படுகிறது. "தில்லையைக் காணக் காசியிலிறக்கச் சிறக்குமாரூர் தனிற் பிறக்க" என்று புராண வாசகமிருப்பதால், புண்ணியத்தலங் களிற் பிறக்கவாவது, அல்லது இறக்கவாவது நம்மால் முடி யாது போனபோதிலும், விசேட தலத்தில் வசிக்கவாவது அதி லுற்ற ஆலயத்தைத் தரிசிக்கவாவது நம்மால் முடியாது போகு மா? மேலும் அத்தலத்தில் ஒரு குறியை நியமித்துப் பூசிக்கவா வது நம்மால் கூடாமற் போகுமா? இதை நாம் நன்கு கவனிக்க வேண்டும். நம்மவர்களிற் சிலர், பிறக்கத்தான் முடியாது இறக்க முடியாதாவென்று ஆசங்கிக்கக் கூடும். அதுவும் முடியாதென்பது பின்வரும் இதிகாசத்தினால் நிரூபிக்கலாம். அஃதி யாதெனில், "தெங்கணதேசத்தை யாண்ட' ஓர் அரசன் தனது சபையிலுள்ள சோதிட சாஸ்திர வல்லோரால், தான் இன்னும் இரண்டு வருடத் துக்குள் தன்னாட்டிற் சப்பாத்திக்கள்ளி நடுவிற் றள்ளுண்ணப்பட்டு, நீச ஸ்திரீயின் கையில் கஞ்சிவாங்கிச் சாப்பிட்டபிறகு நிரியாண திசையை யடையப்போவதாகக் கூறப்பட்டதைக் கேட்டு, தன்னர சாட்சியைத் தனது குமாரனிடத்தில் ஒப்புவித்துவிட்டு, காசிக்ஷேத் திரம் சென்று அங்கு வசித்துவந்தான். அப்படி வசித்துவரும் போது அவனுக்குக் காலமுடிவு வர, எமதூதர்கள் இருவர் அவனைக் கைப்பற்ற வந்தார்கள். வந்தவர்கள் அவனிருக்கும் தலத்தை யுத் தேசித்து, இவனை யெப்படி மிகுந்த தூரமுடைய தெங்கண நாட் டுக்குக் கொண்டுபோகிற தென்று தங்களுக்குள் ஆலோசிக்கலானார் கள். அவர்களில் ஒருவன் ஹா, இதற்கென்ன யோசனை; நான் ஒரு திவ்விய குதிரை ரூபமெடுக்கிறேன்; நீ குதிரை நடத்தும் பாகனுரு வருவெடு; ஒரு நிமிடத்தில் இவனை அந்த இடத்துக்குக் கொண்டு போய்ச் சேர்க்கிறேனென்று கூறி யொரு பஞ்ச கல்லியாணிக் குதிரையாக வுருவெடுத்து நின்றான். மற்றொருவன் பாகனுருவு வெடுத்து அக்குதிரையின் வாலடியிற் கடிவாளத்தைப் போட்டுக் குதிரைக்குப் பின்புறமாக அதின்மேலேறி, அக்குதிரையைப் பின் னாகவே நடத்த, அவ்வரச னிருக்கும் தெருவில் முயன்றான்.

அரசன் அக்குதிரையின் இலட்சணங்களைக் கண்டு ஆச்சரியமுற்று, இத்தகைய குதிரையை நடத்த வழி தெரியாமல், யாரோ ஓர் நீர்மூடன் அசுவத்தின் வால் புறத்தில் கடிவாளத்தை மாட்டி அக் குதிரையைப் பின்பக்கம் நடத்த முயலுகிறானே யிது என்ன விந்தையா யிருக்கிற தென்று கருதி, அக்குதிரைப் பாகனைத் தன்னருகில் வரவழைத்து, ஓ பாகனே! ஏன் அப்படிச் செய்கிறாய். அதெப்படி பின்புறம் நடக்கும்; அக்கடிவாளத்தை முன்புறமாக வாயிற்போட்டு, நீயும் அதன்மீது முன்புறமாகத் திரும்பியுட்கார்ந்து நடத்து, அப்போது அது சலீசாய் நடக்கும் என்று கூறினான். பாகன் அரசன் கூறியபடி நடத்தத் தெரியாதவன் போல் பாசாங்கு காட்டி, குதிரையின் விலாப்புறத்தில் திரும்பியுட்கார்ந்து நடத்த முயன்றான். இதைப்பார்த்த அரசன் கோபமிகுத்து, அக் குதிரையைத் தன்னருகில் கொண்டு வரும்படி சொன்னான். அப்படியே பாகன் குதிரையைக் கொண்டுவந்து நிறுத்தினான். அரசன் கடிவாளத்தை யெடுத்து குதிரையின் வாயில் போட்டு, தான் அதன் மீது ஏறி நடத்திக் காட்டலா மென்று கருதி, அங்கவடியின்மீது காலைவைத்துக் குதிரையின் மீது தாவினான். அக்குதிரை அவ்வரசனைத் தூக்கிக் கொண்டு அத்தெருவிற் கொஞ்சதூரம் போவது போற்குறிப்புக் காட்டி நடந்து, குபீலென்று மேனோக்கியெழுந்து அந்தரமார்க்கமாகச் சென்று, தெங்கண நாட்டின் எல்லையின் புறத்துள்ள ஒரு சப்பாத்திக் காட்டின் நடுவிற் கொண்டு போய்த் தள்ளிவிட்டது. அக்கள்ளி நடுவில் விழுந்த மன்னன், முள்ளினால் குத்துப்பட்டுத் தேகமெங்கும் இரத்தம் கசியப்புரண்டு, எழுந்து வருவதற்கு வழியில்லாமல் அக்கள்ளிக் காட்டினிடையே கிடந்தலறினான். அருகே பண்ணையில் வேலைசெய்யப் போந்த மள்ளர்களுக்குக் கஞ்சி கொண்டு செல்லும் மள்ள ஸ்திரீகள், கள்ளியிற் கிடந்தலறுபவனுடைய சத்தத்தைக் கேட்டு, கஞ்சிக் கலயத்தைக் கீழே யிறக்கி வைத்துவிட்டு, நாலைந்து பேர் ஒன்றாய்க்கூடி அவ்விடத்துக்குப் போக வழியுண்டுபண்ணி, ஆங்குச் சென்று மதிமயங்கிக் கிடக்கும் அரசனைக்கண்டு, ஹா; இதென்னடீ பாவமாயிருக்கிறது, யாரோ ஒரு ஆண்டை போலிருக்கிறதே, இதற்கென்னடீ செய்கிறது என்றாள் ஒருத்தி; மற்றொருத்தி ஹா நன்றாய்ச் சொன்னே, ஆபத்துக்குப் பாபமில்லை; அக்கடி, அந்த வழிக்கரையில் கொண்டுபோய்ப் போட்டு விட்டாவது போவோ மென்றாள். பிறகு எல்லாரும்



ஒருங்குகூடி அரசனைத் தூக்கிக்கொண்டு வந்து, ஜனங்கள் நடக்கும் கொடிவழிப் பாதையில் போட்டார்கள். அதன் பின்னர் அவன் மீதிருந்த கள்ளி முள்ளுகளைப் பிடுங்கி முந்தானையால் கொஞ்சம் வீசினார்கள். மன்னவன் கொஞ்சங்களை தெளிந்து, அவர்களை நோக்கித் தனக்குத் தாகமுங் களைப்பு மிருக்கிறதாகச் சயிக்கினை காட்டினான். அவர்களில் ஒருத்தி, தன்னிட மிருந்த தினைக்கஞ்சியில் கொஞ்சம் ஓர் கலயத்தில் வார்த்துக் குடிக்கக் கொடுத்தாள். அதைக்குடித்த அரையன் களைதீர்ந்து, "தினைப்பயத்தஞ் சோற்றாலே செல்காலமறிந்திருந்தும்—வினைப்பயனை வெல்வதரிது" என்று கூறினான். உடனே எமபடாள் அவனுயிரைக் கொண்டு போனார்கள். இக்கதையினால் ஒருவனிஷ்டப்படி யிறப்பதும் முடியாத காரியம். இன்னும் சிலர், எக்காரியமும் விதிப்படி நடக்கும். நம்மால் செய்யக் கூடியது ஒன்றுமில்லை. நமக்கெப்படி தலவாசம் செய்வதும் தேவபூசை செய்வதுங்கை கூடும், விதியிருந்தால் அது தனக்குத் தானே வந்து சேரும்.

விதியினால் வருவதல்லால் வேதத்தோர் தங்கண்
மதியினால் வாழ்வதொன்றில்லை—புவி தோறுஞ்
சங்கரனுமைய மெடுத்துண்டான் தடங்கடல்சூழ்
மங்கையுடன் காடுறைந்தான் மால்.

என்று ஒளவையாரும் பாடியிருக்கிறாரே யென்று சொல்லுவார்கள். ஆனால் அது அப்படியல்ல. விதியின் வல்லமையை நோக்குமிடத்து, விதி பெரியது. அதை யனுபவித்தே தீரவேண்டு மென்றதை யெடுத்துக்காட்ட அச்செய்யுள் கூறினதே யல்லாது, நாம் நல்வழியில் முயற்சி செய்வது கூடா தென்பதல்ல. மேலும் அந்த ஒளவையாரே.

வினைப்பயனை வெல்வதற்கு வேதமுதலா
யனைத்தாயநூ லகத்துமில்லை—நினைப்பதெனக்
கண்ணுறுவதல்லாற் கவலைபடே னெஞ்சமே
விண்ணுறு வார்க்கில்லைவிதி.

என்று கூறியிருக்கிறார். இதன்கருத்து—வேதம் முதலாயுள்ள எவ்வகைத்தாய நூல்களிலும், வினைப்பயனை வெல்வதற்கு, நினைப்பு அது எனக்காண்பதல்லாது வேறு மார்க்கமில்லை. (விண்ணுறுவார்க்கில்லைவிதி) சிதாகாயம் பற்றிக் கடவுளை வழிபடுவோர்க்கு

விதியில்லை யென்பதாம். ஆகையால் விதிப்படி நடக்கு மென்பதை முற்றிலும் விட்டுவிட வேண்டும்.

மேலும் வள்ளுவ நாயனார்.

ஊழையு முட்பக்கங்காணுவ ரோய்வின்றித்
தாழா துஞற்றுபவர்.

என்றும்

தெய்வத்தா லாகாதெனினு முயற்சி
மெய்வருந்தக் கூலிதரும்

என்றும் கூறி யிருப்பதால் நாம் அவசியம் கடவுளை வழிபடும் விஷயத்தில் பின் வாங்காமல் முற்படவேண்டும், இதல்லாமலும், மிருகண்ட முனிவர் ஈசனை வழிப்பட்டு பதினாறு வயதுள்ள மார்க்கண்டேய முனிவரைப் புத்திரனாகப் பெற்றார். அப் புத்திரனுக்குப் பதினாறு வயது சமீபித்தபோது ஐயோ சற்புத்திரனை வாய்ந்த இப் புதல்வனுக்கு வயது மட்டு மில்லாமற் போயிற்றே யென்று அம் முனிவரும் அவர் பத்தினியும் வருத்த மடைந்தார்கள். தாய் தந்தையர் துன்ப முறுவதைக் கண்ட மார்க்கண்டேயர் அவர்களைப் பார்த்து நீங்கள் துன்பத்தை யொழியுங்கள்; நான் ஈஸ்வரனைத் திவ்ய ஸ்தலங்கள் தோறுஞ் சென்று சேவித்துப் பூசித்து எனக் கேற்பட்ட வயது கண்டத்தை மாற்றி யுங்களுக்குத் திருப்தி யுண்டாகச் செய்கிறேன் என்று கூறி, அவர்களிடத்தில் விடை பெற்றுக்கொண்டு புறப்பட்டு புண்ணிய ஸ்தலங்கள் சென்று, அங்குள்ள கடவுளை வணங்கிப் பூசித்துவந்தார். கடைசியில் திருக்கடையூர் என்னும் க்ஷேத்திரத்தில் மகா தேவனைப் பூசிக்கும் சமயத்தில் அவருக் கேற்பட்ட வயதினளவு முடிவு பெற்றது. அதைக் கண்ட எமன் அவரிடம் வந்து அவரையும் அவர் பூசித்த சிவலிங்கத்தையும் சேர்த்து தனது பாசத்தால் கட்டி யிழுக்க, பரமன் அச் சிவலிங்கத்தினிடமிருந்து தோன்றி, அந்தகனை யுதைத்து தனது பத்தனை மார்க்கண்டேயரைக் காப்பாற்றி என்றும் சிரஞ்சீவியா யிருக்க அவருக்கு வரமளித்தார். இதையறிந்த மிருகண்ட முனிவரும் அவர் பத்தினியும் இன்பக் கடலி லாழ்ந்தார்கள். மேற்கூறிப் போந்தவைகளைக் கொண்டு நாமும் எச் சாதிய ராயினும், எம் மதத்தின ராயினும், தத்தம் வருணத்துக்கும், தத்தம் மதத்தினுக்கும் உரியபடி, கடவுளைப்பூசித்தே தீரவேண்டும். புலால் உண்பவர் கடவுளைப்பூசிப்பதற்குரியரோ யல்லர். ஆனால், இப்போது இதில் கவனிக்கவேண்டி



யது ஒன்று. அதாவது—கடவுளைப் பூசிக்கும் மார்க்கம் இன்னதென்று தெரிந்து கொள்வதே.

கடவுள் பூசை - அகப்பூசை (அந்தரியாக பூசை) புறப்பூசை (புறம்பே பூசிக்கும் பூசை) என இருவகைப்படும். அகப்பூசையாவது:—இருதயம், நாபி, புருவநடு என்னும் மூன்றினுள், இருதயம் பூசைத்தானமாகவும், நாபி ஓமத்தானமாகவும், புருவநடு தியானத்தானமாகவும் கற்பித்துக்கொண்டு, ஆன்மதத்துவம் இருபத்து நான்கினுள் (பூதம்–5, ஞானேந்திரியம்-5, கன்மேந்திரியம்-5· அந்தக்கரணம். 4) நாபியில் பிருதிவிதத்துவம் கிழங்காகவும் ஏனைய அப்பு முதலிய இருபத்து மூன்று தத்துவங்களும் அவ்வுந்தியினின்று தோன்றி எட்டுவிரல் அளவையுள்ள நாளவடிவாகவும்; காலம், நியதி, கலை, வித்தை, அராகம், புருடன், மாயை யென்னும் வித்தியாதத்துவங்கள் ஏழும் (சிவதத்துவத்தில் - சுத்தவித்தை-ஈசுவரம் - சதாசிவம்-சத்தி-சிவம்) சுத்த வித்தையும் ஆக எட்டுதத்துவங்களும் எட்டிதழ் வடிவாகவும், அந்த எட்டு இதழ் வடிவங்களும் முறையே பிரணவாதி பஞ்சாட்சரங்களாகிய எட்டு அட்சரங்களையுடையதாகவும்; சிவதத்துவத்தில்-சுத்தவித்தை நீங்கலாக ஈசுவரம்-சதாசிவம் என்னும் இரண்டுதத்துவமும் அறுபத்து நான்கு கேசர வடிவமாகவும் ; சத்திதத்துவம் அக்கேசரங்களுக் குள்ளாகிய பொகுட்டு வடிவமாகவும், அப்பொகுட்டிற் காணப்படும் ஐம்பத்தொரு பீசவடிவமாகவுமுடைய இருதய கமலத்தில் சிவன்மூர்த்திமானாய் விளங்குவன். இத்தகைய ஆன்ம சொரூபமாகிய சிவத்தை (பிருதிவி, அப்பு, தேயு, வாய்வு, ஆகாசம், சூரியன், சந்திரன், இயமானன் (சிவன்) ஆகிய அட்டமூர்த்தங்கள்) சந்தனம், புட்பம், தூபம், தீபம், திருமஞ்சனம், திருவமுது முதலிய பூசாதிரவியங்களனைத்தும் மனத்தாற் கற்பித்துக்கொண்டு சிந்தைதனில் பூசிக்க வேண்டும். இது உலகத்துக் கமலம்போல வெண்ணாது, கண்முதலாகக் கீழ் நோக்கித் தோன்றிய ஓர் திவ்விய கமலமெனக் கொள்ளல் வேண்டும். உந்தியினின்று தோன்றி மேனோக்கி யெழுந்த கமல மொட்டானது மேனோக்கி மலராது உள்ளாகத் தலைவளைந்து மேலெழும்பி மலர்ந்ததாகப் பாவிப்பதனால் கண்முதலாகக் கீழ்நோக்கித் தோன்றிய ஓர் திவ்விய கமல மெனப்படும். இவ்விதம் ஆத்ம சந்நிதானத்தில் கடவுளை ஞானமார்க்கமாகப் பூசிப்பது அந்தரியாக பூசையாகும்.

இந்த அந்தரியாக பூசையும், சிவோகம்பாவனையும், அஞ்செழுத்தோது முறையும் ஞானத்துக்குச் சிறந்த சாதனங்களாகும். சிவோகம் பாவனை = உள்ளததே இறைவன் நின்ற கலப்பினை நோக்கி அது நான் எனப் பாவித்தலாம். (அவனே தானேயாகிய வந்நெறி—யேகனாகி யிறை பணிநிற்க—மலமாயை தன்னொடு வல்வினை யின்றே) (சிவஞானபோதம்)

புறப்பூசையாவது :—சுத்தியான ஓரிடத்தில் பூசைதானம் ஏற்படுத்திக் கொண்டு, சந்தனம், புட்பம், தூபம், தீபம், திருவமுது முதலியன சேகரித்த பின்பு கடவுளின் (25) உருவங்களில் ஏதாவதொன்றை ஆத்மார்த்த பூசைக்குரிய மூர்த்தமாக வேற்படுத்தி, அந்த மூர்த்திக்கு ஆகமவிதிப்படி அபிஷேகித்து ஈசனை அதில் ஆவாகனம்பண்ணி பஞ்ச ஆவாணத்திலும் பூசித்து, தூப தீப ஆராதனைகள் செய்து திவ்விய அமுதுகொண்டு நிவேதித்து, தோத்திரித்து வணங்கி வழிபடுவதாகும். இவ்வாராதனைக்கு பாணலிங்கம், ஸ்படிக லிங்கம் மிகச் சிறந்தனவாம். வைணவம் முதலிய மற்ற மதத்தினரும் தத்தம் மதத்திற்குரிய அர்ச்சனாவதார மூர்த்தியைப் பூசை பண்ணிப் பரவுதல் இகபர சுகங்களையடைய இன்றியமையாத சாதன மாகும்.

திருச்சிற்றம்பலம்.

அரையணா ஸ்டாம்பு வைத்து
உங்கள் விலாசத்தை
எழுதியனுப்புங்கள்
உடனே 2-அணா விலையுள்ள
ஆயுர்வேத மகத்துவத்தை இனாமாய்
அனுப்புகிறோம்.
விலர்சம்,
தபால் பெட்டி 222, மதராஸ்.



ம.—செய்யமாட்டா யென்றுதான் கேட்டுக்கொள்கிறேன்.

தே.—உலகத்தில் பெண்கள் பெரும்பான்மையும் புருஷர்கள் கோக்க மறியாதபடிக்கு அவர்களை தான் கொண்ட கோரிக்கைக்கோ அல்லது விளையாட்டாகவோ துன்ப மிழைக்கின்றனர் சிலர் புருஷன் படுத்து நித்திரை வருந் தறுவாயில் ஸ்திரீயானவள் சத்தமிட்டோ அல்லது பரிசித்தோ நித்திரைக்குப் பங்கம் விளைவிக்கின்றனர். அந்தச்சமயம் புருஷன் எவ்வளவு சொல்லியபோதிலுங் கேட்காமல் தனது எண்ணம்போல் பரிகாசஞ்செய்வர் எனக் கேட்டிருக்கின்றேன். அவர்களைப்போலென என்னை நினைக்கவேண்டாம். சுகமாய்த் தூங்கி யெழுந்திருங்கள் நாதா! பாதம் வருடலாமோ அதுவுங் கூடாதா (வென்று சொல்லிக் கொண்டே வருடினாள்.)

ம.—அது உன்னுடைய இஷ்டமே.

தே.—வெளிக்கு மட்டும் என்னுடையது. அந்தரங்கத்தில் தங்களுடைய இஷ்டமே.

ம.—எவ்விதமாயினுஞ் சரியே.

கணவன் தூங்கும் வரை பாதம் வருடிப் பின் தானும் வழக்கம் போற் சயனித்துக்கொண்டனள். எங்கும் சந்துஷ்டி யில்லாது நிச்சப்தமாக கல்வி யில்லாத இருதயத்துக்குச் சமமாய் கால சக்ரம் சுழன்றன.

## நான்காவது அத்தியாயம்

சந்திர புஷ்கரணிக்கரையில் நிற்கிற முனிவர் பாதத்தில் வீழ்ந்து கிடக்கிற சேனைகளையும் அரசனையும் யானையையும் பார்த்து முனிவோடு ஹே மதங்கொண்ட வாரணமே! நீ இதற்கெல்லாம் காரணமே ஹே வெறிகொண்ட வேழமே! நீ இவ்வண்ணம் புரிந்த தெக்காளமே ஹே குஞ்சரமே! உன்னாலல்லவோ சிதறியது என் சிஷ்யனின் சிரமே, ஒரு குற்றமுஞ் செய்யாத இவனை இவ்வண்ணம் கல்லின்மேல் மோதியடித்துத்தலையை உடைத்து ஆவிபிரித்தனையே. உன்னை யெவ்வித கஷ்டத்திற் குட்படுத்தினும் இதற்கிணையாகாவே நீ உன்னைத் தூக்கி யிடுக்கண் செய்தவரை முடுக்கித் துன்பஞ்

செய்யாத் தீங்கிழைக்காப் பாலனைக் கொன்றனையே ஹே துஷ்ட மிருகமே பிடிசாபம். நீ இன்றுமுதல் பூதசரீரம் பெற்று கண்ட பிராணிகட் கெல்லாம் ஹிம்சை தந்து உன்னைத்துரத்தி வந்த சேனா சைனியங்களையும் அரசனையுங் கொன்று இன்னும் அநேகர்களுக்கு இடைஞ்சலியற்றிப் பலர்களையுங் கொன்று சிலகாலஞ் சென்று ஒரு பெண்ணின் பேரில் வைத்த பிரியத்தால் உனக்கு அழிவுகாலங்கிட்டி நீ இப்போது எவனை உன் துதிக்கையால்வாரி படிக்கல்லில் மோதி தலை சிதற அடித்துக் கொன்றனையோ அவனுடைய கையால் உன்னுடைய சிரம் பிழக்கப்பட்டு உயிர் நீங்குவாய். சீ! எழுந்து திரும்பிப் பாராதே பிசாசே எனக்கடு கடுத்துரைத்தனர்.

பின் பூமியில் மரம்போல் விழுந்து பணிந்து கிடக்கும் அரசன் பாற்றிரும்பி ஹே விவேகசூனியா! மூர்க்கா! ஹே துஷ்ட அரசனே! உனக்கு விவேக மென்பது கொஞ்சங்கூட இல்லை. ஹே மூடா! நீ செய்யும் நீதி இதுதானா! துஷ்டநிக்ரஹ மென்பது இந்த யானையினிடங்காட்டினையே இவைதானா! சிஷ்டபரிபாலனம் என்பது நிரபராதியாகிய என் சிஷ்யன் மார்பில் பிரயோகித்தாயே அம்பை. இதுதானா! ஹே மதியற்றமன்னா! ஒரு ஜீவனை இவ்வளவு சேனைகளோடு துரத்தி ஹிம்சித்தனையே உன்நாட்டைக் கடந்து இந்த யானையானது காட்டில் புகுந்ததே அப்போதாகிலும் நீ உன் சேனையுடன் திரும்பி நகர் போய்ச் சேராமல் அஹங்கரித்து விடாது வெகுதூரம் வந்து இவ்வித பாவச்செய்கை புரிந்தனையே!

நீ எண்ணி வந்தபடி காரியம் முடிந்ததா ஏ துஷ்டா! இனி நீ உன் தலை மேலேறிய இப்பழி பாவங்களை எவ்வாறு நீக்குவாய் ஹே வேந்தே! எண்ணித் துணிவது கருமம் எனத் தெரியாயா! கேடு வரும் பின்னே மதிகெட்டு வருமுன்னே யென்பதற்கிணங்க நடந்து கொண்டனையே. ஹே புத்தியற்ற பூவேந்தே! வில்லிலிருந்து விடுபட்ட அம்பானது குறியின் மேற்படுவது நிஜமே போல நீ செய்த பழியான காரிய வில்லிலிருந்து புறப்பட்டு விட்ட பாவமென்னும் அம்பானது நரக மென்னுந் துக்கமாகிய குறியிற் படாது விடாதே. இதற்கு யாது செய்ய நினைக்கின்றாய்? ஹே பழிப்புற்ற பார்வேந்தே! நீ அரசனாக இருந்து இவ்விழிவான காரியஞ் செய்தகால பிடிசாபம் எனமுனிந்து ஹே அறிவற்ற வரசே! நீ எங்க யானையைத் துரத்தி இம்சை செய்து வந்து ஏது பாவமு மறியாப் பாலர்களிருவரின் பிராணனைப் போக்கடித் தனையோ அந்த யானையானது என்னுடைய சாபத்தால் பூதஜென்மம் வாய்ந்து வனத்திற் சஞ்சாரம் பண்ணப் போவதால் அதினாலேயே உனக்கும் உன்னுடன் பின்வந்த சைனியங்களுக்கும் முடிவுகாலம் நேரிடும் போ வெனப்புகல, அரசன் முனிவர் பாதத்தை கெட்டியாய்ப் பிடித்துக் கொண்டு சுவாமின்! அடியேன் பிழையைப் பொறுத்து என்னை யாட்கொள்ளல் வேண்டும். என் பேரில் முனிவுகொண்டால் நான் ஏழை எப்படி உய்வேன். கிருபை செய்யும் எனப் பலவாறு துதித்து வேண்டிக் கொள்ள, முனிவரும் அரசே நான் கூறியபடி, நடந்தேதீரும். ஆனால் நீயும் உன்சேனைகளும் ஓர் புண்ணிய விசேஷத்தால் உங்களுக்குற்ற சாபவிமோசனமாகி நற்கதியடைவீர்கள். இனி இவ்வித குற்றங்கட்குட்படாது கவனமாயிருந்து அரசு செலுத்துவாய் சீக்கிரம் உன்னாடு போய்ச் சேர் எனச் சொல்ல, முனிவரிடம் விடை பெற்றுச் சென்றனன். முனிவரும் சிஷ்யர்க ளிருவருடைய சரீரத்தை விதிப்படி அடக்கஞ் செய்தனர். பின்பு அவர்களிருவரும் அரச புத்திரனும் மந்திரி புத்திரனுமாகச் சனித்து சகல கலைகளு முணர்ந்து உலகோரேற்ற வாழ்ந்து என்பால் வந்துசேர வெனச் சங்கற்பித்து விட்டு தனதாச்ரமஞ்சென்று நிஷ்டாபரராய் மேல் நடக்க வேண்டிய காரியத்துக்காக யாக்கையில வசித்தனர்.



* * * *

ஆஹா என்ன கோரம்! என்ன ரூபம்! என்ன வீரம்! எனக்கே என்னைப் பார்க்கப் பயம் தோற்றுகிறதே. பிறர் காணில் ஏன் பயங் கொள்ளார். என்னுடைய சரீரத்திற் கிணையாக அஷ்ட குலபர்வதத்தையுங் கூறவொண்ணாதுபோ லிருக்கிறதே! என்னைப் பார்க்க எமனுங் திகிலடைவா னெனச் சொல்லத் தடையில்லை. நான் செய்த பாக்கியமே பாக்கியம். எவர்களுக்குண்டிந்தச் சிலாக்கியம்! இனிநமக்கு இப் பூலோகத்தில் யாவர் யெதிரிக ளிருக்கிறார்கள், ஒருவரும் இல்லை. நம்மை இம்சித்த அரசனையும் அவன் சேனைகளையும் கொடிப்பொழுதில் துவம்சம் பண்ணிவிடலாம். எனக்கோ எல்லாவித சாமர்த்தியமும் வாய்ந்திருக்கிறது. நினைத்தபடி ரூபங் கொள்ளச் சக்தியும் பெற்றவனாயினேன். இனி என்னுடைய யதேஷ்டப் பிரகாரம் வனங்களிற் சஞ்சரித்து முன் வரும் பிராணிகளைப் பக்ஷணஞ் செய்து பருத்த என் திரேகத்தை வாடாதிருக்கச் செய்திடுவேன்

என்னுடைய கால்களிரண்டும் இரண்டு மகமேரு போன்று இலங்குகிறது. கைகளோ நெடிதோங்கி வளர்ந்த விந்திய பர்வதத்துக்கொப்பாக விருக்கிறது. வயிறோ எழுகடலுண்ட கும்போதரனுக்குங்கூட இம்மாதிரி யிருக்காதெனச் சொல்வதற்காகும். என்னுடைய பற்களையும் கண்களையும் செவிகளையும் பார்ப்பவர் மனமருண்டு உடனேபிராணனை யிழப்பார்போ லிருக்கிறது. என்னுடைய மூக்கின் துவாரமோ இவ்வளவானதெனச் சொல்வதற்கில்லை. இவ்வித ஆச்சரியமான காத்திரத்தை நாம் அடைந்துவிட்டோம். இனி சற்றேனும் பயமில்லாமல் எங்குஞ் சஞ்சாரம் பண்ணலாம், எனத் தனக்குள் தானே எண்ணி எங்குஞ் சஞ்சாரம் பண்ணி மதோன்மத்தமாய் உக்கிர நராந்தகனெனப் பெயரிட்டுக் கொண்டு பேருக்கியைந்தபடி நரர்களுக்கெல்லாம் எமனாக விருந்துகொண்டு வனங்களிற் சஞ்சரித்தான். ஓர்நாள் அதிகமாக செடிகளடர்ந்து நெருங்கிய மலைகள் சூழ்ந்த வனத்தில் மிக உன்னதமான ஓர் குன்றின்மேல் உட்கார்ந்துகொண்டு நான்கு பக்கமும் பார்த்து இதுவே நாம் இருந்து வாழ்வதற்கு தகுதியானதும் வசதி யுள்ளதுமான இடம். இங்கேயே விசித்திரமான மாடமாளிகைக ளியற்றிக்கொண்டு வசிக்கலாம் என்று, தன் மனதில் இந்த இடத்தில் திரிலோகத்துக்கும் இதற்கு நிகரில்லை யென்று சொல்லும்படியான ஓர் மாளிகையும் அதன் பக்கத்தில் குளம் ஒன்றும் இதைச் சுற்றிலும் பலவித மலர்களைத்தரும் பூஞ் சோலைகளும் இவைகளைப் பிறர் கண்டு உட்செல்லாதபடிக்குக் காக்கும் மதில் கோட்டையும் நான் உட்கார்ந்திருக்கும் குன்றின் அடிப்பக்கத்தில் சுரங்கம் ஒன்று நான் வசிக்கும்படியாய் மிகவும் விசாலமாகவும் அதற்குச் செல்ல இக்குன்று வெடித்து இரு பிளவாகி உட்செல்லும்படி பாதையும் உண்டாகவென நினைத்தது. அதின்படியே அந்த நிமிஷத்தில் தோன்றிற்று,

அதில் வசித்துக்கொண்டு நாட்டிலுங் காட்டிலுமாக உலாவி அநேக ரிஷீஸ்வரர்களையும் மனிதர் விலங்கு பறவை முதலிய ஜீவராசிகளை யெல்லாம் பங்கப்படுத்தி தனக் கிரையாக்கி பக்ஷித்து கோரப்பற்களையுடைய வியாக்கிரம பராக்கிரமமுள்ள உக்கிர நராந்தகன் என்னு மிப் பூதம் தனக்கு நிகரொன் றில்லாது சுயேச்சையாய்த் திரிந்து கொண் டிருந்தது.

இப்படி யிருக்கிற காலத்தில் பூதம் ஓர் நாள் இரவு சுமார் 9½-



மணிக்கு வனத்தைவிட்டு வெளிக்கிளம்பி நாட்டிற் புகுந்து ஓர் பட்டணத்திற் பிரவேசிக்கையில் அங்கு ஒரு தெருவில் தருமநேசர் என்னுந் தனவந்தர் வீட்டில் ராமாயணம் பாராயணம் பண்ணிக்கொண்டிருந்ததையும் அங்கு விசேஷமாக ஜனங்கள் கூடிக்கொண்டு அன்பாய்க் கேட்டு ஆனந்த பரவசர்களா யிருப்பதையும் பார்த்து சற்று செவி சாய்த்துக் கேட்டுக்கொண் டிருந்தது. அந்தச் சமயத்தில் புராணிகர் கும்பகருணப் படலத்தில் கும்பகருணன் தூக்கத்தையும் அவனை எழுப்புவதைப் பற்றியும் வர்ணித்து வர்ணித்து வெகு அழகாய்ச் சொல்லிவருவதோடு அவனுடைய மூக்கின் சுவாசத்தால் அங்கு எதிர் நின்ற ராக்ஷஸர்களும் யானை குதிரை முதலிய மிருகங்களுடன் இழுக்கப்பட்டு யாவரும் ஒருமிக்க கும்பகர்ணனுடைய நாசிக்குட்புகுந்து மறுபடி அவனால் வெளிவிடப்பட்ட மூச்சுக் காற்றால் வெளியி லெறியப்பட்டு அனைவரும் தட்டுக் கெட்டுத் தடுமாறி ஒருவர்மே லொருவராய் விழுந்து தத்தளித்து மறுபடி சுவாசிக்கப் பட்டகாற்றால் யாவரும் உட்புகுந்தார்கள் என்று சொல்லி நிறுத்தினார். நிறுத்தினாரோ இல்லையோ இதைக் கேட்டு நின்ற இந்தப் பூதமானது ஆஹா! அந்தக் கும்பகர்ணன் அவ்வளவு பராக்கிரமம் வாய்ந்தவனா; அவனைப் பார்க்கிலும் நான் இளைத்தவனா! இதை ஒரு கை பார்க்கலாம். இங்கே கூடியிருக்கிறவர்கள் புராணிகர் சொல்லியதை சொல்மாத் திரமாய்க் கேட்டார்களே தவிர அதுபோல் இவர்கள் நுழைந்து பார்த்தவர்களல்ல. நாம் இவர்களுக்கு நுழைந்து பார்க்கும் அனுபவத்தைக் காட்டிவிடுவோம் என நினைத்து அவ்வீட்டின் வாயலில் நின்றுகொண்டு தன்னுடைய சரீரத்தை அந்த வீட்டைப் பார்க்கிலும் பருமனாக்கிக்கொண்டு முகத்தை வாசல் பக்கந் திருப்பி ஒரு தரம் மூச்சை வெளிவிட்டான். அவை ஊழிற் காற்றுக்குச் சமமாய்ச் சென்று அங்குள்ள யாவரையும் அலைமலைக்கச் செய்தது. யாவருங் கண்டு திக்பிரமை கொண்டு திடீரெனப் புயல் காற்றுத் தோன்றவேண்டிய காரணம் என்னவெனத் திகைத்து நின்றனர். அங்கிருந்த தீபமும் அணைக்கப்பட்டுப் போயிருந்ததால் அருகிலிருந்தவர் பக்கத்திலிருந்த நெருப்புப் பெட்டியைக் கையிலெடுத்து விளக்கை யேற்றும்பொருட்டு முயன்றனர். இதற்குள் இன்னொரு காற்று வந்து அங்குள்ளவரனைவரையும் அப்படியே யிழுத்து இப் பூதத்தின் வயிற்றுக்குட் செலுத்தியது. இதை

யெல்லாம் இவர்களனைவரும் இப் பூதத்தின் செய்கை யென அறிந்திலர். இதன் வயிற்றுக்குட் சென்றும் தனவந்தர் வீட்டிலிருப்பதாகவே இவர்களுடைய எண்ணமும் இருந்துகொண் டிருக்கிறது. ஆகையால் நெருப்புக் குச்சியை எடுத்த கனவான் சட்டென்று விளக்கை யேற்றினார்.

அப்போது ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக்கொண்டு பலவாறு பேசினர், உடனே புராணிகர் கோவிந்தநாம சங்கீர்த்தனம் சொன்னார். அதை யாவரும் ஒரே முகமாய்ச் சொல்லி அமர்ந்தனர். இவர்களெல்லோரையும் பார்த்து புராணிகர் சபையோர்களே! இப்போதுவந்த காற்றானது தெய்வ சங்கற்பமென்றே நினைக்க வேண்டும்; ஏனென்றால் நாம் இப்போது சொல்லி வந்த கட்டமானது கும்பகர்ணன் மூச்சுக்காற்றால் அங்குற்றோ ரனைவரும் இம்சையுற்றனர் என்ற விஷயமாகையால் அதை யனுசரித்தே தெய்வ சங்கற்பமும் நடந்தேறியது. இனிமேல் நடந்த விஷயங்களைச் சொல்லி வருகிறேன்; எல்லோருங் கவனமாய்க் கேட்டானந்தமடைவீர்களெனச் சொல்லி, கதையை ஆரம்பித்தார்.

பூதமோ தம்முள் இதர கிரகத்தில் நடந்த ராமாயணப் பிரசங்கம் இப்போது என்னுடைய உதரக்கிரகத்தில் நடந்தேறுகிறது. இதுவும் ஓர் ஆச்சரியந்தான் என வெண்ணி கதை நடந்துகொண் டிருக்கட்டும் நாமும் நடந்துகொண் டிருப்போமென நினைத்து அவ் வீதிவிட்டு வேறுவீதி வழியாய் சென்றுகொண் டிருக்கையில் இதின் செவியில் தாள மத்தளவோசை ஒன்று கேட்க அவ்வோசை வருகிற இடத்தை நோக்கி வந்துகொண் டிருந்தது. வருகிறபோது அங்கே நகரின் புறத்தில் ஓர் மைதானமான பூமியில் உன்னதமான கொட்டகை யொன்றியற்றி அதில் ககன விலாச சபையோரால் ராம நாடகம் நடித்துக்காட்ட அதை வெகு ஜனங்கள் பார்த்துச் சந்தோஷமுற் றிருக்கிறதையும் இன்று கடைசி நாளானதால் ராமர் பட்டாபிஷேக வைபவம் நடந்தேறுவதையும் பார்த்த பூதம் ஆஹா! இதுவும் ஓர் விந்தைதான். இதையும் ஒருதரம் பார்க்கலா மென்றெண்ணி, எல்லாம் முடிந்து வெளியேறி வரட்டுமென்று கொட்டகை வாயலில் நின்று தன்னுடைய சரீரத்தை பெரிதாக்கி அப்பட்டணம் போன்று ரதவீதிகளும் வீடுகளும் மற்றவைகளாகவுமாக்கிக்கொண்டு தன் வாயை கொட்டகையின் பெரிய வாசல் மாதிரி



செய்துகொண்டு ஆவெனத் திறந்த வண்ணமாக வாயிலோடு வாயிலாய் நின்றுகொண் டிருந்தது. அங்கே பட்டாபிஷேகமெல்லாம் நிறைவேறி அந்தக் கோலத்துடனே வேஷக்காரர் கேட்டிருந்தவர் யாவரும் வீதிவலம் வரவேண்டுமென்று நினைத்து ஸ்ரீராம மங்களம் பாடிக்கொண்டு எழுந்து பேரிரைச்சலோடு பிரயாணமானார்கள். முன்னாக ராம, லட்சுமண, பரத, சத்ருக்க, சீதா, சமேதனாகவும் மற்றவர் பின்தொடர்ந்து வரவும் இப்படி ஏகோபித்துவந்து பெரிய வாசல் வழியாக பூதத்தின் வாயிற்சென்று வீதி வழியாகச் செல்கின்றனர். அப்படி செல்கிற மார்க்கத்தில் தனவந்தர் வீட்டண்டை போய்ச் சேரவும் அங்கு நடக்கிற ராமாயணப் பிரசங்கம் இவர்கள் காதில்விழ அதைச் செவியுற்றுக் கேட்டனர். அச்சமயத்தில் கும்பகர்ணனுக்கும் ராமருக்கும் சண்டை நடக்கிறதாகவும் ராமர் விடுத்த அம்பினால் கும்பகர்ணன் கரமும் காலுந்துண்டாகி முண்டமாக விழுந்து வானர சைனியங்களை தானொரு குளவிக் கல்போலவும் பூமி ஒரு அம்மிபோலவுமிருந்து அரைத்து துவம்சஞ்செய்கிறான். அந்த வேளையில் ராமர் அவனுடைய தலையைத் துண்டித்து உயிர் நீங்கும்படிக்குத் தன்னுடைய கையிலிருக்கிற கோதண்டத்தில் ராம பாணத்தை வைத்துக் குறிபார்த்து தொடுத்துவிட்டார் என்று புராணிகர் சொல்லி நிறுத்தினாரோ வில்லையோ இதைக் கேட்டுக்கொண் டிருந்த ராமர் வேஷந்தரித்தவர் தன்கையிற் பிடித்த வில்லில் வைத் திருந்த மூங்கிற்கழியால் செய்து வர்ண மிழைக்கப்பட் டிருந்த அம்பை தானே ராமனாக ஆவேஷமுற்று வெகு முடுக்காக நாணைக் காதளவு இழுத்து விட்டுவிட்டான். புராணிகரைப் பார்த்துவிட்ட பாணமானது உண்மையில் கும்பகர்ணன்மேல் பிரயோகித்த தசரத புத்திரர் கையிலிருந்து புறப்பட்ட அம்புபோலவே சரேலென்று கிளம்பி எங்கும் பிரகாசத்தைத் தந்துகொண்டு சென்றது. இதை புராணிகர் முதலிய அங்குள்ளோ ரனைவரும் சாக்ஷாத் ராமரே தன் சைனியத்தோடு இங்கு வந்துவிட்டனர் போலுமென் றெண்ணி அதிக ஆச்சரிய பரவசராய் ராமராம வென்னுஞ் சத்தத்தோடு சட்டென் றெழுந்து தலைமேற் கரங்களைக் கூப்பிக்கொண்டு துதித்தனர். இப்படி யெல்லோரும் ராமநாமத்தை வாயாற் சொல்லிக்கொண்டு அவருடைய நினைப்பைத் தவிர வேறு வழியிற் சிந்தை செல்லாதிருந்ததால் கருணையே வடிவா யமைந்த எம்பெருமானுடைய

கிருபை பரிபூரணமாக முன்னின்று எய்த அம்பு பூதத்தின் வயிற்றைக் கிழித்துக்கொண்டு சென்றது. அதனால் பூதம் அண்ட மதிர்ந்திட பெருஞ் சத்தமொன்றிட்டு அடியற்ற மரம்போல் மூர்ச்சையடைந்து விழுந்தது, இப் பெருஞ் சத்தங் கேட்ட புராணிகர் முதலிய பலரும் மெய் நடுங்கி அலறிக்கொண்டு இதுவென்ன காரணமோ, இன்று வெட்டப் பூதம் புறப்பட்டமாதிரியா யிருக்கிறதே யென்று யாவரும் வெளிக்கிளம்ப வாரம்பித்தார்கள். வீட்டின் வாசல் தெரியவில்லை. இங்குமங்குந் தட்டழிந்து தடுமாறி ஒருவர் மேலொருவர் விழுந்து கா கூ வென்று கதறிக்கொண்டு கடைசியாக அம்பாற் றுளைக்கப்பட்ட வழியைக் கண்டு அதன் வழியாக புற்றிலிருந்து ஈசல் புறப்பட்டமாதிரியாக இந்தப் பூதத்தின் வயிற்றுக்குள்ளிருந்து யாவரும் புறப்பட்டு வெளிவந்தனர்.

வெளிவந்து யாவரும் இது என்னவென்று பார்க்கிறபோது இது ஒரு பூத சரீரமெனத் தெரிந்து இதற்குள் நாம் எப்படிப்புகுந்தோம் என்று திகைத்து ஒன்றும் புலப்படாதவர்களாய் எல்லாம் ஸ்ரீராமபிரான் செயலென வெண்ணி இனி இங்கு தாமதித்தால் பூதம் மூர்ச்சை தெளிந்து எழுந்துவிட்டால் நம்முடைய பிராணனுக்கே ஹானி நேரிடுமென்று ஒருவர் போனவழி யொருவர்போகாமல் மூலைக்கொருவராகப் பிழைத்தோம் பிழைத்தோ மென்று ஓடினார்கள். இப்படி ஒருவர் கூடப் பாக்கி யில்லாமல் பூதத்தின் வயிற்றை விட்டு வெளிக் கிளம்பியவுடனே பூதத்திற்கு மூர்ச்சை தெளிந்து எழுந்து பார்க்க தனக்குப் பசி அகோரமாயிருந்ததால் ஏதடா இவ்வளவு பசி நாம் எவ்வளவோ பேரை வயிற்றிற் புகுத்தினோமே அப்படி யிருக்க பசியே யுண்டாயிற்றென்று தன் கையால் வயிற்றைத் தடவிப் பார்த்தது. பார்த்ததும் தன் கை கிழிந்த வழியாக வயிற்றுக்குட் சென்றது. உடனே இதேது வயிறு கிழிந்திருக்கிறதே காரணம் என்ன உள்ளே யுள்ளவர்களெல்லாம் வெளிக்கிளம்பிவிட்டனரோ வென்று பார்க்கும்போது ஒருவர்கூட இல்லாமற் போய்விட்டதாய்த் தெரிந்து இம்மாதிரி நம் வயிற்றைக் கிழித்தவர்கள் யார், அவர்களை எளிதில் விடப் போகிறேனோ ஆகா வெனப் பேரிரைச்சலிட்டுப் பார்க்கும்போதும் ஒருவர்கூட கண்ணுக்குப் புலப்படாதபடியால் கண்களில் நெருப்புப் பொறி பறக்க மீசைகள் படபடெனத் துடிக்க பற்கள் நெறுநெறெனக் கடிக்க அட்டகாசம் பண்ணிக்கொண்டு கிழிந்த வயிற்றை செம்மை பண்ணிக்கொண்டு கையிலகப்பட்ட ஆடு மாடு முதலிய மிருகங்களையும் பாலர் ஸ்திரீ முதலிய சிலர்களையும் வாரி வாயிற் போட்டு மென்று தின்று கொண்டு பசியை ஒருவாறு தணித்து வனத்தை நாடி நகரைக் கடந்து அங்கோர் குளக்கரையிற்போய் தாகத்தைத் தீர்த்துக்கொண்டு சற்று இளைப்பாறி இவ்விதம் யோசிக்கலாயிற்று.



ஆஹா! நாம் பகவானுடைய தன்மை இப்பேர்க்கொத்தவையென வுணராமல் அவருடைய நாமத்தைச் சொல்லிக்கொண் டிருக்கும் அவருடைய பக்தர்களை ஹிம்சித்ததினாலல்லவா நமக்கு இவ்வித ஆபத்து வந்து நேர்ந்தது. இனி நாம் பகவானுடைய நாமபாராயணர்களிடமாவது அவருடைய பக்தர்களிடமாவது குரோதஞ் செய்வது கூடாது. அவரை நினைக்காமல் காலத்தை வீணாய்க் கழிக்கின்ற க்சடர்களை யல்லாது மற்றவர்களைத் தொடேன் எனச் சொல்லிக்கொண்டு தன் இருப்பிடமாகிய வனத்தை நோக்கிச் சென்று எதிர்ப்படும் பிராணிகளைக்கொன்று மென்று தின்று, இன்று நம் காலம் நன்று என்று, விரைவிற குன்றிருக்குந் திக்கை நோக்கிச் சென்று அதை அடுத்துச் சலனம் விடுத்து மலையை யடுத்து அதனுட் புகுந்து படுத்து குறட்டைத் தொடுத்து நித்திரை கொடுத்து அயர்ந்தது.

## ஐந்தாவது அத்தியாயம்.

அகடிதகடனா சாமர்த்தியம் வாய்ந்த அநிர்வசநீய மாயையின் சக்திக்குட்பட்ட பொருள்கள் பலவும் மூன்றுதன்மைத்தாகவே வழங்கப்பட்டு வியவகாரம் செல்கின்றன. இதில் முத்தன்மையாவது ஒவ்வொன்றும் நல்லது எனவும் கெட்டது எனவும் இவ்விரண்டுஞ் சேர்ந்ததன்மையன எனவுமாம்.

எப்படியெனில் சிறிது கூறுவாம். காலம்நல்லகாலம் கெட்டகாலம் உபேக்ஷாகாலம் உத்தமம் மத்திமம் அதர்மம் என்னும் வழக்கு ஜாதிகுணம் தொழில் முதலிய பலவினும் தொடர்ந்தே நடைபெறுகின்றன. காலத்தில் இரவி உதிக்கு முன்5-நாழிகை முதல் மிகவும் உத்கிருஷ்டம், இக்காலம் பிரமாமுதல் தாவரமீறாகச் சொல்லப்பட்ட சகல ஜீவராசிகளுக்கும் பிரியமாயும் ஆனந்த மளிக்க வல்

லதாயும் இருக்கிறது. இது சூரியனுதிக்கும் வரையுளதாய் அப்புறம் வரவரக் குறைந்து வேறு தன்மையடைகிறது. இந்த உஷாக் காலத்தில் ஜீவர்கள் மகிழ்வோடிருப்பதால்தான் யாவும் கர்த்தவாகிய கடவுளை நினைந்து கனிந்திடுகிறது. அதாவது அன்போடு துதிக்கிறது. இவ்வித உத்தமமான அதிகாலையில் கருணாகரமங்கலமென்னும் நகரில் வீதிகள் தோறும் குக்குடங்கள் நின்று கொக்கொக்கோவென கூவிப் பகவானை யழைத்து குறையிரந்திடுகின்றன. பகவானைத் தொழுதற்கான வேளையாயிற்று, யாவருமெழுந்து கொள்ளுங்கள் என்று அக்காலத்தைக் குறித்திடுகின்றன. கரிக்குருவிகள் தம்தம் பேடுகளைக் கூவிக் கடவுளைத் தொழுதல் செய்வது போல் காட்டுகின்றன. காகங்கள் கா கா வெனக்கத்தி தம்மினங்களைக்கூட்டுவித்துக் கரைந்து கடவுளைத் தொழுகின்றவைபோற் காணப்பட்டது. இன்னமும் அங்கங்குள்ள மரங்களிலுள்ள பக்ஷிஜாதிகளும் பேடைகளோடு களித்துக் குலாவிநின்று ஒலி செய்கின்றன. ஆலயங்கடோறும் மேளங்களும் சங்கங்களும் முழக்கஞ் செய்கின்றன.

அந்தணர் வீதியில் வேதபாராயணர்கள் இனிய குரலொலிகளால் வேதங்களைப்பாராயணஞ்செய்கின்றனர். சில வீதிகளில் நட்டுவர்கள் தம் தம் தொழில்களில் பழக்கஞ் செய்து கொண்டிருந்தனர். பலவிடங்களில் பக்திமான்கள் பலர் இறைவனை யேத்தித் தேவார திருவாசகங்களையும் தாயுமானவர்பாடல்களையும் திருவருட்பாக்களையும் செவிக்கின்பமாகப் பாடிக்கொண்டிருந்தனர். பலவீடுகளில் பாலர்களோடு மாதா பிதாக்கள் மகிழ்ச்சியுடன் அவர்களின் மழலை மொழிகளைக்கேட்டு பரவசராக விருந்தனர். அருமையோடு அவாவினால் கூண்டுகளிலடைத்து வளர்த்து வருகிற மைனா கிளி கௌதாரி முதலிய பக்ஷிகள் தம்மை வளர்க்கிற எஜமானி எஜமானர்களைக் கூவி யழைத்து இசைபாடுகின்றன. குளிர்ந்த ஜலம் நிறைந்த தடாகங்களைச் சூழ்ந்திருக்கின்ற தருக்களில் வசிக்கும் குயிலினங்கள் தமது இனிய குரலொலியால் யாவர் மனமுங்கரையக் கூவுகின்றன. மயிலினங்கள் தனது சிறகை விரித்து தன் பேடைகள் காண நடனமிடுகின்றன. இவ்விதம் சகல ஜீவராசிகளும் ஆனந்திக்கக்கூடிய இவ்விடியற்கால நேரத்தில் அரண்மனையில் கொலுமண்டபத்தில் கொலுமேளம் மிக ரம்மியமாய் முழங்கிற்று. இச்சத்தங் கேட்ட அரசன் முதலிய யாவரும் நித்திரையை விட்டெழுந்தனர்



எழுந்து அவரவர்களும் மலசலவிசர்ச்சன தந்தசுத்திமுதலிய கிரியைகளை முடித்துக்கொண்டு பகவன் நாமத்தைச் சொல்லி பஜனை பண்ணிக்கொண்டிருந்தனர். இத்தருணம் விற்பன விவேகன் நித்திரை தெளிந்தெழுந்து பின்வருமாறு கூறினன்.

அம்மா அம்மா மந்திரிவீட்டு அண்ணா வந்து என் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டு தம்பி தம்பி என்ன இவ்வளவு நேரந்தூங்குகின்றாயே எழுந்திருக்கவில்லையா நான் வந்து மிகவும் நேரமாகக் காத்திருக்கின்றேனே, நீ என்னை நினைக்கவே யில்லையே, என்மீது வைத்த அன்பை யிழந்தனைபோலும். நானே வலியவந்தழைத்தும் பதில் பேசாது இருக்கின்றாயே. உனக்கு என்மீது யாது கோபம், நான் உனக்கு யாதொரு தீங்குமிழைத்தவனல்லனே; சரி நீ அரசன் நான் உனக்குள் வேலைபார்க்கிறவன் நானுனக்குச் சமமாவனா, என்னோடு பேசவேண்டுமென்று உனக்கென்ன அவசியம்! என்மீது பிரியம் இல்லாது போயினும் அப்பிரியங் கொள்ளாதிருந்தாற்போதுமானது. நான் போய்வருகிறேன் என்று சட்டென்றெழுந்து கதவைத்திறந்து கொண்டு ஓடுகிறான். நான் திடீரென்றெழுந்து அண்ணா அண்ணா வென்று அலறிக்கொண்டு வேகமாக ஓடினேன். வாசலண்டை படியில் காலிடறிக்கீழே விழுந்தேன்; கண்ணை விழித்துப்பார்த்தேன் ஒன்றையுங்காணோம். படுக்கையிலேதானிருக்கப் பார்த்தேன். அண்ணா ஓடிவிட்டானே நீ யாவது அவனை இருக்கும்படி செய்யாமல் சும்மா விருந்தனையே, நான் அங்கே போயாவது பார்த்து அழைத்துக்கொண்டு வருகிறேன். யாரையாவது கூட அனுப்பிவை யென்றான்.

அதற்கவள் கண்மணி நீ மனதில் நினைத்துக்கொண்டே படுத்திருக்கின்றனை, அதனால் இவ்விதம் கனவுகண்டனை, இது உண்மையன்று இப்படியே காண்பது மனிதர்கட்குண்டான இயற்கையே இதுபற்றி மனதில் ஆயாசங் கொள்ளவேண்டாம், நீ எழுந்து ஸ்நானம் பண்ணிப் பசியை நிவர்த்தித்துக்கொண்டு இருந்தாயானால் அதற்குள் மந்திரி குமாரரை அழைத்து வரும்படி செய்கிறேன் என்றாள், அதற்குக் குழந்தை அம்மா நான் அண்ணாவைப்போய் பார்த்து அவனை அழைத்துக்கொண்டு வந்துதான் பசியாறுவேன்; ஆகையால் யாரையாவது கூட அனுப்பென்று சொல்ல, சரி உன் பிரியம் போற்செய் இதோ மதனமனோன்மணி வருகிறாள் அழைத்

-தூக்கொண்டு போ. மனோன்மணியைக் கூவி, குழந்தை மந்திரி மகனைப் பார்க்கவேண்டுமாம், கூட அழைத்துப்போய் பார்த்து வாருங்கள் என்றாள், ஆஹா அப்படியே. அரசிளஞ் செல்வமே போகலாம் வா என்றழைத்தாள்.

விற்பனவிவேகன்.—பாட்டி நான் நடந்து வருகிறேன்.

மனோன்மணி.—கண்மணி வேண்டாம் கால் நோகும். தூக்கிச் செல்கிறேன்.

விற்.—பாட்டி எனக்கு கால் வலிக்காது உனக்கு முன்பாகவே குடு குடு வென ஓடிவருகிறேன்.

மனோ.—வீதியில் வண்டிகள் குதிரைகள் வரும் நீ ஓடினால் அபாய முண்டாகும் வேண்டாம் எடுத்துக் கொள்கிறேன்.

விற்.—உனக்கு பயித்தியம் நீ கிழவி யாச்சுதே. இடுப்புவலிக்காதா?

மனோ.— எனக்கு எடுத்து வழக்கமானதால் இடுப்பு நோவாது.

விற்.—இல்லை பாட்டி நான் விளையாடிக் கொண்டே நடந்து வருகிறேன்.

மனோ.—வேண் ாம் நான் சொல்வதைக் கேள் நீ சிறுபிள்ளை, ஒன்றுந்தெரியாது, எடுத்துச் செல்கின்றேன் வா.

விற்.—ஓகோ குழந்தையை நடத்திக் கூட்டிப்போனாளென்று அம்மா கோபிப்பாளென்று நினைக்கிறாயா? அப்படிப் பயம் வேண்டியதில்லை. நான் சொல்லிக் கொள்கிறேன்.

மனோ.—அதற்காகவல்ல, கால்நோகுமே யென்று தான் சொல்கிறேன்.

விற்.—நான் மெல்ல நடந்து வருகிறேன் (ஓடுகிறான்.)

மனோ.—ஓடாதே மெள்ள நட.

விற்.—(சிரித்துக்கொண்டு) பாட்டி நடந்து வா ஏன் விரைவாய் என்னோடு தொடர்ந்து நடக்க உன்னால் முடியவில்லை?

மனோ.—எப்படி யிருந்தாலும் நீ ஆண்பிள்ளை. நான் பெண்தானே. அதிலும் வயது சென்ற கிழவி. எப்படி யென்னால் உன்னோடு கூடத்தொடர்ந்து நடக்க முடியும முடியாது தான்.

விற்.—நீ என் கையைப் பிடித்துக்கொள் சீக்கிரம் அழைத்துப் போகிறேன்.

மனோ —சரி பிடித்துக் கொள்கிறேன்.



விற்.—பாட்டி அண்ணா வீடு எங்கே, ரொம்பதூரமோ, இன்னும் எவ்வளவு தூரமிருக்கும்?

மனோ.—ஏன் கால் நோகுதா?

விற்.—இல்லை இல்லை. சீக்கிரம் பார்க்க வேண்டுமென்று தான் கேட்கிறேன்.

மனோ.—நமது கோட்டை வாசலைக் கடந்து விட்டால் அப்புறம் பக்கந்தான்.

விற்.—அப்படி யானால் கோட்டை வாசல் தூரமோ?

மனோ.—கொஞ்சந் தூரமாகத்தா னிருக்கும்.

விற்.—கால் வலிக்குமோ?

மனோ.—வலிக்காது.

விற்.—வலித்தால் நீ எடுத்துக் கொள்வாயா?

மனோ.—நான் எடுக்கமாட்டேன்.

விற்.—ஏன் ?

மனோ —என்க்கு இடுப்பு வலிக்கும்.

விற்.—பிறகு நடக்கத்தான் வேண்டுமோ?

மனோ.—ஆம் ஆம் நடக்கத்தான் வேண்டும்.

விற்.—சரி நடக்கிறேன்.

மனோ.—நட விரைவாய்.

விற்.—பாட்டி இந்த மரநிழலில் கொஞ்சநேரம் உட்கார்ந்து போகலாமே?

மனோ.—கால் நோகிறதோ உட்காருவதற்கு.

விற்.— கால் நோவுண்டானாற்றானா உட்காரவேண்டும்?

மனோ. — ஆமா நோவில்லாவிடில் ஏன் உட்காரவேணும்.

விற்.—அப்படியானால் எனக்கு கால் கொஞ்சம் நோகிறது?

மனோ.—நீ ஆண்பிள்ளை யாச்சுதே கால் எப்படி நோகும்.

விற்.—ஆண்பிள்ளை யானால் நோகாதோ. நீ முன்னால் என்ன சொன்னாய்?

மனோ.—நான் என்ன சொன்னேன்.

விற்.—எனக்கு நோகாதென்று சொன்னாயே.

மனோ.—நான் சும்மா சொன்னேன். ஆனால் நான் இப்போது உன்னை எடுத்துக்கொள்ள வேண்டுமோ?

விற்.—இந்த விடத்தில் சற்று இளைப்பாறி; பின் என்னை யெடுத்துச் செல்.

மனோ.—ஆனால் சரி உட்காரு.

(என இருவரும் உட்கார்ந்தனர்.) இவர்க ளிங்கு மரத்தடியில் உட்கார்ந்திருக்க அங்கே மந்திரிவீட்டில் மந்திரி குழந்தை சின்மய சிகாமணியும் அதிகாலையி லெழுந்து பிதாவைக் கண்டு தந்தையே இரவு அதிக நேரமாகத்தங்கள் வரவை யெதிர்பார்த் திருந்து அப்புறம் தூங்கினேன் என்றான்.

மந்திரி.—குழந்தாய் யாதுகாரணம்பற்றி அதிகநேரம் விழித்திருந்தாய்? சீக்கிரம் நித்திரை செய்யாமல்

சின்மய சிகாமணி.—பிதாவே நான் நேற்றுக் கேட்டதற்குப் பதில் அப்புறம் சொல்கிறேனென்று சொல்லிப் போனீர்களே, அதற்காகத்தான்.

ம.—இதற்காகவா நித்திரையை விட்டு விழித்திருக்கவேண்டும்?

சின்.—பிதா அதைக் கேட்கவேண்டுமென விருப்பம் அதிகரித்தது.

ம.—சரி அதை உனக்கு நன்றாய்த் தெரிய வுரைக்கின்றேன். இப்போது நீ பசியாற்றிக்கொள். நா மிருவரும் அரண்மனைக்குப் போவோம். அங்கே அரசனின் குழந்தை ஒருவ னிருக்கிறான். அவன் உன்னைப் பார்க்கவேண்டுமென்று அழைத்துவரச்சொன்னான் போகலாம் வா.

சின்.—தந்தையே அங்கிருக்கிற குழந்தைக்கு எத்தனை வயது?

ம.—குழந்தாய் உனக்கு ஒருநாளைக்குப் பின்னால் பிறந்தவன். உனக்குத் தம்பி.

சின்.—அப்படியானால் இதுவரை எனக்கு ஏன் சொல்லவில்லை?

ம.—சொன்னால் அடிக்கடி அங்கு செல்வாயென்று சொல்லவில்லை.

சின்.—அடிக்கடி சென்றாலென்ன?

ம.—நீ சிறு குழந்தை யானதால் வழியில் துன்பங்கள் நேரும் என்று சொல்லவில்லை.

சின்.—ஆனால் இப்போதே போகலாம் வாருங்கள்.



ம.—போகலாம் பசியாற்றிக்கொள்.

சின்.—அப்புறம் வந்து சாப்பிடலாம். போவோம் வாருங்கள்.

ம.—போனால் நேரமாகும் சாப்பிட்டுக்கொள்.

சின்.—அங்கே ஒன்றுங் கொடுக்கமாட்டார்களோ?

ம.—கொடுப்பார்கள்.

சின்.—பின் அங்கு போய்ச் சாப்பிடலாமே?

ம.—அங்கே சௌகரிய மெப்படியோ இங்கேயே சாப்பிட்டுப் போகலாம் வா.

என்று அழைத்துப் போய் பலவகை பலகாரங்களை யுண்டு பசியாறிப் பாலிற்றேன் பெய்துபருகி இருவரும் புறப்பட்டு வீதிவழி சென்று கோட்டை வாயலைக் கடந்து உட்பிரவேசித்துச் சென்றனர். இவர்கள் கோட்டை வாயிலைக் கடந்து உட்பிரவேசிக்கவும் சிகாமணியின் முகம் இவன் அறியாமல் மலர்ந்து சரீரம் புளகாங்கிதங் கொண்டது. காலிரண்டும் விரைந்து சென்றன. இவனுடைய உள்ளத்தில் என்று மில்லாத ஆனந்தம் பொங்கிற்று. தன்னையறியாமல் சந்தோஷம் வர, தந்தையின் முன்னாகவே போய்க் கொண்டிருக்கிறான். அங்கே சற்று தூரத்தில் மரத்தினடியில் இளைப்பாறும் மன்னன் மகன் மனதில் மந்திரிமகனைப் பார்க்கவேண்டு மென்ற எண்ணம் தடித்து நின்றதால் கோட்டைவாயிற் பக்கமாகவே மனமுங்கண்ணுஞ் சென்று கொண்டிருந்தன. இப்படி யிருக்கிற சமயத்தில், இவனுடைய கண்ணுக்கு ஓர் பிரகாசந் தோன்றிற்று. அதுவே சிகாமணியின் அன்பின் சரீரம். மேகத்தால் மறைந்த சந்திரன் மேகம் நீங்கியவளவில் எவ்வாறு தோற்றுமோ அவ்வாறு தோன்றவும் இவனுடைய மனதைக் கண்டோடு ஊசியைக் காந்தம் வலிப்பதுபோல் சிகாமணியின் தோற்றம் வலித்தது. உடனே அரசபுத்திரன் எழுந்ததும் ஆனந்த மேலிட்டால் கூத்தாடுகின்றான். ஆஹா என் அன்பா வென் றலறினான். இத்தனை நாளா யெங்கு சென்றிருந்தாய் என்றான். என்னைவிட்டு நீ எப்படிப் பிரிந்தாய் என்றான். ஏ நேசனே, மிருபாசனே, விசுவாசனே; பிரகாசனே, குருதாசனே மலநாசனே யென்று ஆடிப்பாடி ஓடி சிகாமணியை நாடி ஆவைக்காணும் கன்றேபோலவும் தண்ணீர் கண்டதாக முள்ளவன் போலவும் அவாவுடன் அன்பனிடம் செல்ல, இதைப்பார்த்த சிகாமணி கன்றை நோக்கும் பசுவைப் போலவும் மேகம் நோக்கின மஞ்ஞை போலவும்

இரவிகாணும் தாமரைபோலவும், சந்திரனைக்காணும் அரக்காம்பல்போலவும் அன்பனை இன்பமோடு பார்த்து அவன் ஓடிவருவதைக் கண்டு தானும் எதிராக வோடி இருவரும் கூடி ஒருவரை யொருவர் மார்புறத் தழுவி கையொடு கையும் முகமொடு முகமும் இருவர் சரீரமும் ஒரு சரீரமென்று பார்ப்பவர் கூறும்படியாகத் தழுவி ஒருவரை யொருவர் என்னன்பே இன்பே அழகியமணியே ஆனந்தப் பெருக்கே முத்தே கரும்பே முக்கனி ரசமே முனிவர்கள் காணும் முழுமுத லொளியே இத்தனை காலமும் ஏன் மறந்திருந்தோம். எந்தையைப் பிரிந்து ஏங்கி வந்தனம். அய்யனைப் பிரிந்து அநேக நாளாச்சே என்று நாம் காண இறை யருள் கூடும் என ஏங்கி, அடிக்கடி மார்போடு மார்பு தழுவி, ஆனந்த மேலீட்டால் மெய்மறந்து மனங்கரைந்து தழுவிபடியே ஸ்தம்பம்போல் நின்றனர். இதைக் கண்ணுற்ற மந்திரியும் மதன மனோன்மணியும் மிகுந்த ஆச்சரியங்கொண்டு இது ஓர் அற்புதமென விண்டு அருகிற் சென்று அவர்களைக் கூவி யழைத்து கண்மணிகாள் வாருங்கள் போவோம். அரண்மனையில் அன்னையும் பிதாவும் இன்னமும் குழந்தையைக் காணோமென் றேக்குறுவர். அதிக நேரமாய் விட்டது; இருவருங் கையை விட்டிடுங்கள். சீக்கிரம் போகலாம் வாருங்கள் என்று இருவரையும் விலக்க அவர்களிருவரும் சற்று விலகி மறுபடியும் அன்பு மேலீட்டால் கிழிந்த நீர் பொருந்தியதேபோல் ஆவலோடு தழுவிக்கொண்டனர். இப்படிப் பலதரம் மந்திரியும் மனோன்மணியும் விலக்க, அவர்கள் மறுபடி மறுபடி அணைத்துக் கட்டிக்கொள்ள மாய்கை வலியால் வரவர அன்பு தளர்ந்து சரீரத்தை அதிக்கிரமித்திருந்தது குறைந்து மனதில் உரைந்து நிறைந்து உவப்புடன் இருவரும் வழியைக் கூடி அந்தப்புறத்தை நாடி, அரசியைத் தேடி, அன்பாய் ஓடி ஆடிப்பாடி, விவேகன் அன்னையைக் கண்டு அம்மாவென விண்டு, இதோ வந்தேன் அண்ணாவைக் கூட்டிக்கொண்டு என்று கைகளைச் சப்பாணி தட்டிக்கொண்டு, கா[illegible] சதங்கை கலீரென பாலின் மொழி பளீர் பளீரெனப் பகர்[illegible] பக்ஷமுட னகர்ந்து பக்கத்தில் நின்றனன். இதைக் கண்ணுற்ற அரசியும் பாலனைப் பார்த்து அவ னிற்குங் கோலத்தைக் கண்டு அகமகிழ்வு கொண்டு மிகுந்த அவாவுடன் சிகாமணியைத் தூக்கிக் கொஞ்சிக் குலாவி முத்தமுட்டு, மஞ்சத்தில் உட்கார்ந்து மடிமேல் ஒருபுறம் வைத்து மறுபுறம் விவேகனை வைத்து, முதி



கைத் தடவி இருவரையும் இருகையா லணைத்து சிகாமணியைப் பார்த்து, கண்மணி உன் தம்பி யழைக்க வந்தாயோ! தமையனென் றின்பந் தந்தாயோ! இது காறுமவனை மறந்தாயோ! இப்போது கண்டு சிறந்தாயோ! வெனபலவாறு புகழ்ந்து பக்ஷமுடன் மகிழ்ந்து பாலர்களைப் பார்த்து, இருவிழிதனிலுறை மணிகாள் எழுந்திருங்கள் இனிய சுவைதரும் கனிகளும் மதுரமிகுந்த பலகாரங்களும் எடுத்து வந்து தருகிறேன். இருவரும் புசியுங்களெனச் சொல்லி எழுந்து போய், பொற்றட்டதனில் பற்பலவிதமுள்ள நற்பலகாரங்கள் வைத்துக்கொண்டு வந்து முன்வைத்து, குழந்தைகளா அருந்துங்கள் என அரச குமாரன் ஆவலுடன் அதிரசமொன்றை அங்கையிலெடுத்து அண்ணா நீ இதைக் கண்ணால் பார். மதுரம் அதிகமாம் அதிரசமென்னும் பக்ஷணந்தன்னை இக்ஷணந்தின்னுவென்று சிகாமணி வாயிற் கொடுக்க வாங்கியுண்டனன். இவ்விதம் இருபாலர்களும் வயிறாரப் பக்ஷணம் புசித்து பாலுடன் தேன்கலந்து பருகிவிட்டு பண்புடன் விளையாடிக் களித்தனர். இவர்களிருவரும் இப்போது தான் சிநேகித்தவர்கள் போலில்லாமல் பூர்வ வாசனையால் நெடுநாட் பழகியவரே போல் பாவனை காட்டினர். இதைக் கண்ட அங்குள்ள அரசியும் தாதிகள் முதலிய யாவருங்கண்டு பேரானந்தங் கொண்டனர். இத்தருணம் விவேகன் சிகாமணியை நோக்கி, அண்ணா நாம் இங்குள்ள வேடிக்கை விநோதங்களையும் மாடமாளிகை கூடகோபுரம் இவைகளையும் பார்த்து வருவோமென்று எழுந்து, ஒவ்வொரு இடங்களையுங் கண்டு அங்கங்குள்ள அற்புதத்தைப் பார்த்து ஆனந்தித்து அரசர் கொலுமண்டபம் போய்ச் சேர்ந்தனர். அங்கு அரசர் கொலுவிலிருந்து தேசவிசாரணை செய்துகொண் டிருப்பதை இருவரும் பார்த்து சிகாமணி விவேகனைப் பார்த்து தம்பி இதென்ன இங்கு ஏகமாகக் கூடிக்கொண் டிருக்கின்றனர் என்று கேட்டான். விவேகனும் அண்ணா இங்கே நம்மிருவருடைய பிதாக்களு மிருக்கின்றனர். இவர்களெல்லாம் நமது வேலைக்காரர்களும் குடிகளுமாகக் கூடியிருக்கின்றனர். அதோபார் உன்னதமாக விளங்கிக் கொண்டிருக்கின்ற இரண்டு மேடையில் நமது பிதாக்கள் உட்கார்ந்திருக்கின்றனர். ஆம் ஆம் அங்கே நாம் போகலாம் வாவென்று இருவருங் கை கோர்த்துக் கொண்டு ஓடோடியும் போய் அரசன் முன்னின்று அய்யா இதோபார் அண்ணா, நான் கூட்டி வந்தேன் என்று விவேகன் கூறினான். அதைக்கண்டு அரசர் மிகவானந்

தங் கொண்டனர். சபையிலுள்ளோர் யாவருங்கண்டு கரகோஷஞ் செய்து ஆர்ப்பரித்தனர். விவேகன் பிதாவைப் பார்த்து, எந்தையே! எங்களுக்கிருக்க இடமுண்டோ! வென்றான். அரசன் ஆஹா உங்களுக்கிருக்க இடம் முன்னமேயே தயார் செய்திருக்கிறேன் என்றார். விவேகன் எங்கேயென அரசன் தன்னிரு தொடையையுங் காட்ட பாலர் இருவரும் பரமசந்தோஷமாய்த் துரிதமாயோடி அரசனிரு தொடையினுமமர்ந்தனர். அவர்களை அரசன் இருகையாலும் அணைத்து முத்தமிட்டு ஆனந்தப் பரவசத்தோடு குழந்தைகாள்! பசியாற்றினீரோ வென வினவ விவேகன் ஆம் பசியாறித்தான் வந்தனம் என்றான். இதற்குள் அரசன் மந்திரி வதனம் நோக்கி, அவர் உள்ளத்தின் கிளர்ச்சியை யறிந்தவராய் நம்போலும் மந்திரிக்கும் அவாவானது குழந்தைகளை மடிமீதிருந்த விருக்குமல்லவா வென வெண்ணி, பாலர்களைப் பார்த்து, கண்ணின் மணிகாள்! எங்களுக்கெல்லாம் ஒரே சிம்மாதனம் தங்களுக்கு இரு சிம்மாதனம் அமைக்கப்பட்டிருக்கின்றன வென பாலர் இன்னொன்றெங்கே என்று கேட்டனர். அரசர் மந்திரியின் தொடையைச் சுட்டிக் காட்ட, குழந்தைகள் சட்டென்றெழுந்துபோய் மந்திரியின் தொடையில் உட்கார்ந்தனர். மந்திரியும் இரு பாலர்களையும் அன்போடு அரவணைத்து ஆனந்தக் கடலில் மூழ்கினன். அன்று அரச காரியம் யாவும் விடுத்து இரு குழந்தைகளையுங் கண்டு அங்குள்ள யாவருங் களித்திருந்தனர். சற்று நேரத்திற் கெல்லாம் கொலு கலைந்து அவரவ ரிருப்பிடம் போயினர். அரசனும் குழந்தைகளோடு அந்தப்புரம் போக மந்திரியை வழியனுப்பிக் கொண்டு திரும்பினர். அத்தருணம் சிகாமணியைப் பார்த்து மந்திரி குழந்தாய் வீட்டுக்கு வரவில்லையா வென, சிகாமணியும் நான் வரவில்லை நீ போ வென்று சொல்லிவிட்டு அரசருடன் சென்றான். மந்திரியும் சரி இருவென்று சொல்லி வீடு போய்ச் சேர்ந்தனன். அரசர் குழந்தைகளோடு அந்தப்புரம் சென்று போஜனம் அருந்தி அரும் புதல்வர்களோடு அவர்களின் சொல்லைக் கண்டு களித்திருந்தனர். இவ்விதம் சில நாட்களாக மிகுந்த களிப்புடன் வளர்ந்துவருகிற காலத்தில், தகுந்த குருவைக்கொண்டு பாலர்களுக்கு நான்கு வேதம், ஆறு சாஸ்திரம், பதினெண் புராணம், இருபத்தெட்டு ஆகமம், முப்பத்திரண்டு அறம் அறுபத்தினாலு கலைக்கியானங்களும், ஆனை யேற்றம், குதிரை யேற்றம், வில்வித்தை முதலிய யாவையுங் கற்பித்து தனக்குத்தானே நிகர் எனச் சொல்



137

லும்படி சமஸ்தமுங் கற்றுவிளங்கினர். இங்கே சிகாமணி முன் எவர்கள் வந்து கல்வி கற்றுக்கொடுத்த போதிலும் அவர்களிடங் கற்றுக் கொள்ளாது அவர்களைக் கேள்வி கேட்டு கேள்விக்குப் பதில் சொல்வதற் காற்றாது போய்விடுவர்; ஆனதினால் ஒருவரிடமும் கற்றுக் கொள்வ தில்லையென் றிருந்தவன் இப்போது எப்படிக் கற்றுக் கொண்டனன் என நினைக்கலாம். சிகாமணி தான் கல்வி விஷயமாய் நடந்துகொண்டதை மந்திரியால் அரச புத்திரன் தெரிந்து தானும் அவ்விதமே படிக்கப் போவதில்லையெனச் சொன்னா னென்பதை அறிந்தவனாகையாலும், பெரியோ ரெதை யனுஷ்டிக்கிறார்களோ அதையே மற்றவர் அனுஷ்டிக்கிறபடியால், மற்றவர்களுக்காகவாவது, தான் அநுஷ்டிக்க வேண்டுமென்பது பெரியோர்களின் கொள்கையாதலாலும், விவேகனைப் போலவே மற்றவர்களும் எண்ணுவர் எனவெண்ணி தான் வித்தைகளை யெல்லாங் குருமூலமாய்க்கற்றுக் கொண்டனன். பிறரை யுத்தேசித்து இவர்கள் இருவரும் ஒரு நாள் காலையிலெழுந்து இந்நகர் வீதிகளைப் போய் பார்த்து வரவெண்ணி ஒவ்வொரு வீதிகளிலுஞ் சென்று அங்கங்குள்ள விவகாரங்கள் யாவையுங் கவனித்துத் திரும்புகையில் கோட்டை வாயவின் பக்கமாகவுள்ள தர்ம சத்திரத்தையும் அங்கு கூட்டங் கூட்டமாக வரும் பிச்சைக்காரர்களையுங் கண்டு அவ்விடத்தில் கொஞ்ச நேரம் நின்று பார்த்துக்கொண் டிருந்தனர். அங்கு வருபவரில் சிலர் இளைத்தவர்களாயும் சிலர் ரோகிகளாயும் சிலர் அங்கஹீனர்களாயும் இவ்வாறு பல வறியார்களைக் கண்டு விற்பன விவேகன் சிகாமணியைப் பார்த்து பின் வருமாறு வினவினான்.

வி.—அண்ணா கடவுள் சிருஷ்டிக்குட்பட்ட ஜீவகோடியில் மனுஷிய ஜென்மம் உத்தமமா யிருந்தும் இம்மனுஷிய ஜென்மத்தில் பலவாறு கஷ்டங்களைப் பலர் அனுபவித்ததற்கு யாதுகாரணம். இதோ நம்முன்பாக வந்து போகிற பிச்சைக்காரரை நோக்குங்கால் ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமான கஷ்டங்களை அனுபவிக்கின்றனராய்த் தோற்றுகிறதே இதன் காரண மின்னதென விவரிக்க வேண்டும்.

சி.—தம்பி உலகில் ஜீவகோடிகளுள் இம்மனுஷிய ஜன்மம் உத்கிருஷ்டந்தான். இவை புண்ணிய மிகுதியாற் கிடைக்கவேண்டும். கிடைத்த போதினும் சுகமோ அல்லது துக்கமோ இவை அவரவர் செய்கை என்ற முன்வினைக்கீடாக பிராப்த

மாகிறது; ஆகையால் அவரவர்களும் பூர்வ கர்மபலன்களை அநுபவிக்கிறார்கள்.

வி.—கடவுள் காருண்ய மூர்த்தி யல்லவோ!

சி—ஆம் ஆம் காருண்ய மூர்த்தி யென்பதிற் றடையில்லை.

வி.—அப்படியானால் இதோ யௌவன பருவமுள்ள ஓர் புருடன் வயோதிகளைப் போற்கோலூன்றிக் குன்றிய தேகத்துடன் முடவன் போல் நடைகுன்றி மிகுந்த துயரடைந்து செல்கின்றனனே இவனிடத்திற் கடவுள் காருண்யம் எங்கே தோற்றுகிறது;

சி.—தம்பி இவனிடத்திற் கடவுளுடைய காருண்யந் தெரிவில்லையா. நான் தெறிவிக்கிறேன்பார்.

கையைத் தட்டிக் கொண்டு இங்கேவந்து போ வெனக்கையாற் சமிக்ஞை செய்தனன். இதைப் பார்த்த அம்மனிதன் ஏதோ பிரபுவின் குழந்தைகளா யிருக்கிறார்கள். நம்மை யாதோ கொடுப்பதற்காக அழைப்பதாய்த் தெரிகிறதெனக் கிட்ட வந்தனன், அவனைப் பார்த்து,

சி.—அப்பா நீ எங்கேயிருக்கிறது

பிச்சைக்காரன்.—சுவாமி நான்ஏழை. எனக்கேது இருப்பிடம், எங்காவது நாலுபேரிடம் யாசித்துக் அதைக் கொண்டு ஜீவிக்கிறேன் எந்த விடத்திலாவது தங்கி காலத்தை கழிக்கிறேன்.

சி.—ஏன் உன்னுடைய சரீரம் இவ்வளவு கேவலஸ்திதியாயும் மிகுந்த துயரத்துடனு மிருக்கின்றனை?

பி.—சுவாமி நான் என்ன சொல்வேன்! என்னமோ முன் ஜென்மத்தில் யாதுபாவஞ் செய்தேனோ, யாருக்குத் தீங்கிழைத்தேனோ கடவுள் இவ்வித துன்பத்திற் காளாக்கினார்.

சி.—தம்பி பார்த்தாயா இவனிடத்தில் கடவுள் கிருபையை.

வி.—ஆம் ஆம் இவன் விளைக்கிடாக துன்பத்தைக் கொடுத்திருக்கின்றார். இதுசரி இவனிடத்தில் அவருடைய தயை எங்ஙனுளது.

சி.—தம்பி அது தோன்ற வில்லையா காட்டுகிறேன்.

சி.—அப்பா இக்கஷ்டத்தை எப்படியாவது நிவர்த்திக்க உபாயந் தேடிக்கொள்ளக் கூடாதா?



பி.—சுவாமி நான் என்ன உபாயந்தேடப் போகிறேன். எல்லாம் அவன் பேரில் பாரத்தைப் போட்டு நீயே தஞ்சம் என்று அவனையே நினைத்துக்கொண்டிருக்கின்றேன். எப்படி விடினுஞ் சரி.

சி.—தம்பி இப்போ தென்ன நினைக்கின்றனை.

வி.—அண்ணா இவன்படுகிற கஷ்டத்தால் கடவுளை நினைக்கிறதாய்த் தெரிகிறது. இதினால் கடவுள் காருண்யந். தோற்றுகிறதோ.

சி.—ஊம் தெரியவில்லையா இன்னுங் காட்டுகிறேன். (பிச்சைக்காரனைப் பார்த்து) அப்பா நீ இந்த வியாதியோடு எவ்வளவு காலம் கஷ்டப்படுகிறாய்?

பி.—சுவாமி எனக்கு இக்கஷ்டம் வந்து மூன்று நான்கு வருடங்களாயிற்று.

சி.—அதற்கு முன் என்ன முயற்சியோ டிருந்தனை?

பி.—சுவாமி நான் சிறுவயதிலேயே அதாவது ஐந்து ஆறு வயதில் தாய் தகப்பனை இழந்தேன். இருந்த வீடு நிலங்களை கடன் காரர் எடுத்துக் கொண்டு விட்டனர். நான் என் பாட்டியால் போஷிக்கப்பட்டேன். அவள் காலமானாள். அப்புறம் பராமரிப்பாரொருவருமில்லை. யதேச்சையாய்த் திரிந்துகொண்டு துஷ்டர் கூட்டுறவால் கெட்டலைந்து கடைசியில் இவ்வித மானேன்.

சி.—சரி நீ இனிமேல் இந்த வியாதி கடவுள் செயலால் தீர்ந்துவிடில் யாது செய்ய விரும்புகிறாய்.

பி.—சுவாமி அப்படியானால் இது வரை கஷ்டப்பட்டது தெரியாதா, எனக்குப் புத்தி வந்தது வென்று நன்னடக்கையாய் ஏதாவதொரு தொழிலை செய்து கொண்டு இவ்விதம் நாம் பயன் பெற்றது கடவுள் கிருபையா லல்லவா வென் றெண்ணி அவரை யிடைவிடாது நினைத்துக்கொண்டு காலத்தை கழித்தால் அப்புறம் அவன் செயல் இதுவே என் துணிபு.

சி.—என்ன தம்பி இப்போ தெப்படி?

வி.—அண்ணா இப்போதுதான் நன்றாய்த் தெரியவந்தது.

சி.—எவ்விதம் தெரிந்துகொண்டனை.

வி.—அண்ணா இவன் பூர்வ கர்மத்தால் கடவுள் இத் துன்பத்தைக் கொடுத்து தன்னை நினைக்கும்படி செய்ததோடு இவனுடைய

அந்தக் கரணத்தில் அந்தர்க்கதமா யிருந்துகொண்டு இவன் முன்னதியற்றிய துர் நடத்தையை நினைக்கும்படியும், அதனா லல்லவா இத் துன்பம் நேரிட்டதெனவும், இனி அவ்விதம் இழிவான செய்கையைச் செய்யக்கூடாது, நன்மையாய் நடத்தல்வேண்டும் என்றும், இவனுடைய அறிவுக் கறிவா யிருந்து தன்னுடைய கருணையைக் காட்டுகிறார்.

சி.—தம்பி இப்படியே ஒவ்வொரு ஜீவர்களிடத்துந் தன்னுடைய கருணையை ஈசுரன் விளக்கிக் காட்டுகிறார் எனத் தெரிந்து கொள்ளவேண்டும்.

வி.—அண்ணா இவை தங்களுடைய யுக்தியோ. அல்லது பெரியோர் களனுபவமோ அல்லது சாஸ்திரங்களில் விதித்துளதோ ?

சி.—தம்பி இவை வேத சம்மதமே இவைபோலும் பெரியோர்களின் நிக்ஷயமும் உலகோர் அனுபவமும் உள.

வி.—அண்ணா இதுபற்றி பெரியோர் கூறிய வாக்கிய முண்டானால் அறிய விரும்புகிறேன்

சி.—தம்பி இது தருமசாஸ்திரங்களிற் விரிந்துகிடக்கின்றன. தவிர கைவல்யத்தில் நாம் படிக்கவில்லையா.

அதை மறந்து விட்டாய் போலும்.

வி.—அண்ணா படித்தது ஞாபகத்துக்கு வரவில்லையே.

சி.—வரவில்லையா சொல்கிறேன். அதில் சிஷ்யன் குருவை நோக்கி ஈசுரனிடத்து வைஷம்மிய தோஷங் கூடுமோ வென வினவ அதற்கு குரு விடை பகர்ந்தனர் எப்படி யென்றால்,

"நல மெய்யையனே யெல்லவர்க் குந்தெய்வ நாயகன் பொதுவானால்
சிலரை வாழ்வித்தல் சிலரொடு கோபித்தல் செய்வதேனென்றாயேல்
குலவுமக்களைத் தந்தைபோற் சிட்டரைக் குளிர்ந்து துட்டரைக் காய்வன்
கலைகளல்வழி வரச் செயுந் தண்டமுங் கருணையென் றறிவாயே"

என்ற கவி ஞாபகத்துக்கு வரவில்லையா.

வி.—ஆம் அண்ணா இப்போதுதான் ஞாபகம் வந்தது. சரி இவன் வீணில் காத்துக் கொண்டு நிற்கிறான்.

சி.—இவனை நின்றதற்காக எதாவது கொடுத்துப் போகச் சொல்

வி.—சரி அப்படியே, அப்பா நீ அங்கு சென்று நான் சொன்னதாகச் சொல்லி ஒரு ரூபாய் வாங்கிப்போ.



பிரபூ நமஸ்காரம் கடவுள் உங்களுக்கு மென்மேலும் நன்மையைச் செய்வர் என்று அங்கு சத்திரத்திற் சென்று அய்யா, அதோ நிற்கிற குழந்தை தங்களிடம் ஒரு ரூபாய் வாங்கிப் போம்படி சொல்லினர். மணியகாரர் திரும்பிப் பார்க்க விவேகன் ஒருரூபாய் கொடுவென சைகை செய்தான் அதை யறிந்து பிச்சைக் காரன்கையில் ரூபா யொன்றைக் கொடுத் தனுப்பினான்.

சி.—தம்பி பார்த்தாயா இந்தப் பிச்சைக்காரனுடைய அதிர்ஷ்டத்தின் குறைவை.

வி.—அண்ணா குறைவொன்றுமில்லையே மற்ற பிச்சைக்காரர்களுக்கு காலணாத்தானே கொடுத்தனுப்புகிறார்கள்.

சி.—அது சரி நீ நினைத்தால் அவனை ஐஸ்வரியவானாக்கி விடலாமல்லவா அவனுடைய அதிர்ஷ்டக் குறைவுதானே உன்னுடைய மனதில் ஒரு ரூபாய் கொடுக்கும்படி உதித்தது.

வி.—அண்ணா வாஸ்தவமே அவரவர் கர்மத்துக் கேற்றபடி தான் பலன் கிடைக்கும் போலிருக்கிறது.

சி.—தம்பி நாம் வந்து அதிக நேரமாயிற்று நம்மைத் தேடுவர் போகலாம் வா.

ஆஹா போவோம் என இருவருஞ் சென்று உண்டுகளித்திருந்தனர். சில நாள் கழித்து ஓர் நாள் சாயந்திரம் சுமார் நாலு மணிக்கு இருவரும் அரண்மனையை விட்டு வெளிப்புறப்பட்டுக் கடைவீதி வழியாகப் போய்க்கொண்டிருக்கையில் நடுத்தெருவில் இருவர் நின்று பின்வருமாறு பேசிக்கொண்டிருந்தனர் அதை இருவரும் செவியுற்றனர்.

ஐயா, இந்தப் புடவை யெங்கே யெடுத்தீர்கள்.

ஐயா, இது அதோ தங்கக்கிளிட்டெழுத்திற் போர்டு போட்டிருக்கிற பொய்யா மொழிப் புன்னைவனஞ் செட்டியார் கடையில் எடுத்தேன்.

"சரிதான் என்ன விலையோ.

"விலையா விலைதான் ஜாஸ்திவாங்கி விட்டார்கள்.

"எவ்வளவு இருபத்தைந்து ரூபாயும் காலணாவும்.

"சரிதான் இருபத்தைந்து தான் காலணா தருமத்திற்காக உங்களுக்கு நல்ல விலைதான்.

என்ன, எப்படித் தங்களுக்குத் தெரியும்.

நான் இரண்டுநாளுக்குமுன் என்னுடைய சிநேகிதர் ஒருவருக்கு இதே சேலை அந்தக் கடையிலேயே எடுத்துக் கொடுத்தேன். முப்பத்தியொரு ரூபாய் நாலணு வாங்கிவிட்டார். நம்பி மோசம் போயினேன்.

(மனதில் சந்தோஷத்தோடு நமக்கு ஆறு ரூபாய் நாலணு குறைத்துக் கொடுத்திருக்கிறு ரென்றெண்ணி) அய்யா அவர் எங்களுக்கு நிரம்ப வேண்டியவர். நாங்களும் எங்கள் பாட்டனுர் காலமுதற்கொண்டு ஒரு முழத் துணிகூட வேறே கடையில் எடுக்கிறதில்லை. போனுல் வேண்டியதை எடுத்து முன்னுல் வைக்கவேண்டியது. கொள்முதல் பட்டிப்படி ரூபாய் ஒண்ணுக்கு கால் ரூபாய் லாபமாக சிட்டை போட்டுக் கொடுப்பார்; அதுபோல் ரூபாயைக் கொடுத்துவிட்டு எடுத்துவருவோம் என்றுர்.

"பட்டி காட்டினுரோ.

"ஆஹா.

"அசல்எவ்வளவு.

"இருபது ரூபாய் அசல் ஐந்து ரூபாய் லாபம்.

"எனக்கு இருபத்தைந்து ரூபாய் அசல் என்று பட்டியுங் காட்டினுரே.

என்னமோ தினுசு வேறு யிருக்கலாம்.

இல்லை யில்லை இதே தினுசு இதே நம்பர் கொஞ்சங்கூட வித்தியாசமில்லை.

என்னமோ எடுத்தாய்விட்டது. ரூபாயுங் கொடுத்தாய்விட்டது. இனிப் பேசி யாவதென்ன.

இல்லை ஐயா, அவர் அப்படி ஒருவர்க் கொருமாதிரி மற்றொருவர்க் கொருமாதிரி கொடுப்பது சரியல்ல பாருங்கோ.

ஆமாமா அவரே கொடுத்தாரா குமஸ்தாக்கள் கொடுத்தார்களா ?

அவரே நேரில் கொடுத்தனர்.

சரிதான் எனக்கு எங்கள் பந்துக்களில் ஒருவர் அங்கே குமஸ்தாவாக விருக்கிறுர். அவர் நமக்குத் தாய் மாமன் மச்சினி வயிற்றுப் பிள்ளை; போனுல் அவரிடந்தான் கேட்கிறது. உள்ளதுபோற்

இனும்! இனும்!! இனும்!!!

# கதாரத்னுகரம்.

மனதை மகிழ்விக்கும்
ஓர்
மாதாந்தரப் பத்திரிகை.

இப்பத்திரிகையில் இனியகதைகளும் அறிவுக்குணவான அற்புத விஷயங்களும் வெளியாகும். இப்பத்திரிகைக்கு ஒரு வருஷ சந்தா தொகை ரூ. 1—8—0 செலுத்துவோருக்கு மிருக திருஷ்ணிகா அல்லது குணசுந்தரி இனுமாய்க்கொடுக்கப்படும். வெளி நாடுகளுக்கு சந்தா ரூபா 2-0-0

மிருகதிருஷ்ணிகா.
இந்த நாடகம்லேவல்த்தைட் என்னும் ஆங்கிலநாடகத்திலிருந்து தமிழில் மொழி பெயர்க்கப்பட்டது. நல்ல கடுதாசியில் அச்சிடப்பட்டிருக்கிறது.

குணசுந்தரி
அல்லது இல்லற பொக்கிஷம்.
இப் புத்தகத்தில் இல்லறத்துக்கு வேண்டிய அரும்பெரும் பாக்கியங்கள் பொதிந்து கிடக்கின்றன.

" கதாரத்னுகரம் ஆபீஸ் "
162, 163, பவழக்காரத்தெரு, சென்னை.

MADRAS. 1915

160925

# வசீகரி.

இனிய தமிழ் நாவல். இவ்வரிய நாவல் பிரக்யாதிபெற்ற ஆங்கிலேய வித்வ
சிரோமணிகளி லொருவராகிய மிஸ்ஸெஸ் ஹென்றிவுட் என்னும் மாதினுல்
கதா ரூபமாய் வரையப்பட்டுள்ள புஸ்தகங்களுள் சிறந்ததாகிய ஈஸ்ட்லின் என்
னும் நாவலை யொட்டி எழுதப்பட்டது. இஃது சிற்றின்ப விஷயங்களை மட்
டும் வெகுவாய் விரித்துக் காட்டி ஆத்மாவுக்கு நிஷ்பிரயோஜனமாய்ப் போகும்
சில நூற்களைப் போன்றதன்று. இது விசேஷமாய் பெண்கள் தம் கற்பழிதலா
லடையும் கஷ்டங்களை யெடுத்துக் காட்டி யுள்ளது. சிற்றின்ப விஷயங்களில்
உழன்று திரியும் ஆண் பெண் உருவமெடுத்த ஆண்மகோடி ஞானத்து
கும் பொருந்திய நூலெனக் கொள்வதே முறை. இக்கதையின் சாராம்சம் க
யழிதலால் வரும் கஷ்டங்கள் மாத்திரமன்று; வீண்பெருமை, டம்பம், அ
[illegible]ிய செலவு, ஆவல், அடாதகாரியத்தில் தலையிடல் ஆகிய இவற்று
[illegible]ஷ்டங்களும் அடங்கி யிருக்கின்றன. இப்புத்தகம் கிரவுன் அளவி
[illegible] க்களுக்குமே லுள்ளது. விலை ரூ. 1 0 0

அமிர்தம் அன் கோ,
தபால் பெட்டி 222, மதராஸ்.

**SEND FOR THIS FREE BOOK.**

இனாம்! இனாம்!! இனாம்!!!

# ஆயுர்வேத

# மகத்துவம்.

இரண்டணா விலையுள்ள இப்புத்தகத்தை பொது நலங்கருதி இலவசமாய்க் கொடுக்கத் தீர்மானித்து விட்டோம். இதில் ஆயுர்வேத உற்பத்தி, சாராம்சம், மாறுதலடைந்த காரணம், ஜனசமூகத்துக் குண்டாகும் அனுகுணம் முதலியவைகளை ஒருங்கே திரட்டி உயர்ந்த கிளேஸ் கடிதத்தில் அச்சிட்டிருக்கிறோம். அரையணா ஸ்டாம்பு அனுப்புவோருக்கு மறுதபாலில் அனுப்பப்படும்.

| | |
|---|---|
| AMIRTAM & Co,<br>Post Box 222,<br>MADRAS. | அமிர்தம் அன்கோ,<br>தபால் பெட்டி 222,<br>மதராஸ் |

திருநெல்வேலி ஜில்லாவுக்கு சோல் எஜண்டு:—

**K.** அரியநாயக முதலியார்.

ஆழ்வார்குறிச்சி.

ஸ்ரீ

கடவுள் துணை.

# கதாரத்நாகரம்.

"கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி"

| | | |
|---|---|---|
| Vol 1.<br>தொகுதி—1 | AUGUST, 1915.<br>1915-ம் ௵ ஆகஸ்டு ௴ | No. 6.<br>பகுதி—6. |

## விசேஷ வர்த்தமானங்கள்.

இமயமலையின் முடியை யெட்ட முயற்சிப்பவர்:—உத்தர துருவத்தை யெட்டிப் பார்த்தாரென்று சொல்லப்படும் டாக்டர் குக் என்பவர் இமயமலையின் முடியை யெட்டிப் பார்க்க வேண்டுமென்று முயற்சி செய்து வருகின்றார் இவர் இமயமலை முடியைக் காண, அதன்மீ தேறும்போது' இவரோடுகூட 'ஸினி மடோகிராப் படமெடுக்கும் ஒருவர் செல்லுவார்.

—

இங்கிலாந்தில் ஒரு வேளாளஜாதி மாணவர்:—உத்தம பாளையம், தொண்டைமண்டல வேளாள ஜாதியைச் சேர்ந்த ஸ்ரீமான் பொன்னம்பல முதலியாரின் குமாரர் P. தியாகராஜ முதலியார் ஆக்ஸ்போர்ட் யூனிவர்சிட்டியில் பி. எப். பரிட்சையில் தேறியிருக்கின்றார். இவர் 1909-௵ வருடத்தில் 14 வயதில் இங்கிலாந்திற்குக் கல்விக்காக அனுப்பப்பட்டனர். இவர்க்கிப்போது வயது 20. இவர் இந்திய சிவில் சர்விஸ் பரிட்சைக்குச் செல்ல உத்தேசித் திருக்கின்றார். ஆங்கில யூனிவர்சிட்டியில் பி. எப். பரிட்சை செய்த தொண்டைமண்டல ஜாதியாருள் இவர்தான் முதலாவதாவர்.

—

ஒரு சப்மாஜிஸ்டிரேட்மீது மனு:—பெரியகுளம் சப் மாஜிஸ்ட்டிரேட் மிஸ்டர் என். சுப்பிரமணிய அய்யர் மிஸ்டர் டி. பி. நாகசுப்பிரமணிய அய்யரென்னும் ஒரு வக்கீலைக் கோர்ட்டில் 'நீர் புத்தி யில்லாமல் உளறுகின்றீர்; உமக்கு இவ்விடத்தில் வேலையில்லாவிட்டால் நீர் கோர்ட்டைவிட்டு வெளியே போகலாம்" என் றவமதித்துப் பேசினா ரென்று அங்குள்ள வக்கீல்சங்கத்தார் ஒரு கூட்டங்கூடி மேற்படி மாஜிஸ்டிரேட்டின் நடத்தையைக் கண்டித்துப் பேசி, சென்னைக் கவர்ன்மெண்டின் முக்கிய செக்ரெடரிக்கு ஒரு மஹஜ ரெழுதி யனுப்பி யிருக்கின்றனரென்று தெரிகின்றது,

—

தலைமயிர் வியாபாரம்:—விசாகப் பட்டணத்திற்குச் சமீபத்தில் சிம்மாசல மென்று ஒரு க்ஷேத்திரமிருக்கின்றது. அவ்வூர் மலைமீதுள்ள நரசிம்ம சுவாமி கோயிலுக்குப் பெரும்பான்மையும் வடதேசத்திலிருந்து இலட்சக் கணக்காகப் பக்தர்கள் வந்து தமது பிரார்த்தனைகளைச் செலுத்தி வருகின்றனர். அங்கு திருப்பதி, பழனி முதலிய ஸ்தலங்களில் பக்தர்கள் மொட்டை யடித்துக் கொள்வதுபோலப் பக்தர்கள் மொட்டையடித்துக் கொள்

ருகின்றனர். அங்கிப்போது 2-டன் நிறையுள்ள (மக்கள்) தலைமயிரை ஓர் ஐரோப்பிய வியாபாரக் கம்பெனியார் 2050-ரூபாய் கொடுத்து வாங்கியிருக்கின்றனர். அதனை அவர்கள் இனி எவ்வளவு ரூபாய்க்கு விற்பார்களோ? ஒன்றுக்கும் உதவாதது உலகத்திலுண்டோ? இல்லையன்றோ? அறிவிருந்தால் எதனையும் சீர்செய்து பணஞ் சம்பாதித்தல் கூடும்.

---

**யுத்த வருஷப் பூர்த்திக் கொண்டாட்டம்:**—இம்மாதம் 4-ந்தேதி உலக முற்றும் பெருங் கிளர்ச்சியோடிருக்கும். இந்தத்தேதியிற்றான் சென்றவருடத்தில் யுத்தம் ஆரம்பமானது. யுத்தம் நேச ராஜாங்கத்தாருக்குச் சாதகமாக முடிவுபெறவேண்டுமென்று 4-ந்தேதியன்று உலக முற்றும் பெருங் கூட்டங்களும், தேவாலயங்களில் தேவோபாசனைகளும் நடைபெறும். உலக க்ஷேமத்தை யுத்தேசித்து, ஆஸ்டிரிய ஜெர்மானியரைத் தவிர, உலகத்திலுள்ள ஜனங்களெல்லாம் செய்யும் பிரார்த்தனைக்கு கருணையங் கடலாகிய கடவுள் கருணை செய்யாதிருக்கமாட்டார். கடவுளாணையை மீறி நடந்துவந்த உலகத்தார் ஒரு வருஷகாலமாக அடைந்துவருங் கஷ்ட நஷ்டங்களை ஏற்றனவாமென்று கருதி அவர் ஜனங்களுடைய கவலையையும், கலக்கத்தையும் ஒழிக்கக் கருணை பாலிப்பார். உலகம் சாந்தி பெறுமாறு நாமெல்லாம் மனமொழி மெய்களொத்து ஈசுவரனைப் பஜிப்போமாக.

---

**சென்னையில் சில்லரை வியாபாரம்:**—கெட்டும் பட்டணம் போவென்று சொல்வதுண்டு. பட்டணமென்றால் சென்னப் பட்டணமல்ல; ஆனால் வியாபாரம் மிகுதியாயும் ஜனத்தொகை அதிகமுமுள்ள இடத்திற்குப் பட்டணமென்று சொல்லப்படும். சென்னை சைனாபசாரில்சிலர் வழிப்போக்கரிடம் நின்று வியாபாரம் செய்கிறார்கள். ஒரு அணாவுக்கு வாங்கிய பொன்கிலிட்டு பொத்தான்களை சுமார் எட்டணாவென்றும் அதற்கே ஒரு ரூபாயென்றும் ஆளைப்பார்த்து விலை சொல்வார்கள். சற்றேறவிரும்பினதாகத் தெரிந்தாலும் பின்தொடர்வார்கள். கடைசியாக எவ்வளவுதான் குறைத்துக் கேட்டபோதிலும் ஒரு அணாவுக்கு மேற்பட்டே கேட்பார்கள். என்ன விலைக்குக் கேட்டபோதிலும் "வாங்கிப் போட்டே போய்யா, பொருளைப்பார்த்துக் கேளையா' என்றுசினமுடன் சொல்லி கொஞ்சதூரம் கேட்டவரோடு சென்று கொடுத்து விடுவதுவழக்கம். நின்று விற்பவர்களிடம் வாங்குகிறவர்களெல்லாம் வெளியூர் ஜனங்கள். இப்படி வாங்குவதைவிட கடைகளில் வாங்குவதே மேலாகும்.

---

**ஆயிரரூபாய் வித்தியாசம்:**—"நடந்தகால் சீதேவி, இருந்தகால்மூதேவி, என்றதோர் பழமொழியுண்டு. வருஷம் ஒன்றுக்கு ரூ 3000, வரும்படியுள்ள சொத்துக்கள் இருசகோதரர்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்தன. இரண்டாவது சகோதரன் வீட்டைவிட்டகலாது வேலைக்காரர்களை யேற்படுத்தி அதிகாரம்செய்து வருமானத்தைப் பெற்றான். மூத்தவன் இளையவனுக்குள்ளது போல் வேலைக்காரர்களை அமைத்திருந்தபோதிலும் அடிக்கடி நிலங்களை நேரில் பார்வையிட்டும், சிலசமயங்களில் வேலைக்காரர்களைப் போல் வேலைசெய்ய முயலுவான். இப்படிச் செய்துவந்ததினாலும் வேலைக்காரர்களைச் சந்தோஷப்படுத்தி வேலைவாங்கி, அடிக்கடிநேரில் பார்வையிட்டு வந்ததாலும்வருஷமொன்றுக்கு ஆயிரரூபாய் வழக்கத்துக்கு மேல் அதிகமாய்க் கிடைத்தது. இதைக் கேள்வியுற்ற தம்பி எப்படி ஆயிர ரூபாய் அதிகம் கிடைத்ததென்று கேட்டான். ஏனென்றால் இருவருக்



கும் ஒரே அளவுள்ள சொத்துக்கள். மூத்தவன் தம்பியை நோக்கி, இருப்பதற்கும் நடப்பதற்கும், உள்ளவித்தியாசம் ஆயிரரூபாய் என்றான். இப்படியே வர்த்தகமும் உழைப்புக்கும் மேல் விசாரணைக்கும் தக்கவாறுவிர்த்தியாகிறது.

---

**கடிதம் எழுதல்:**—ஒருவருக்கொருவர் கடித மூலமாய் விஷயங்களைத் தெரிந்துகொள்வது சர்வ சாதாரணமாயிருக்கிறது. கடித மெழுதுவதிலும் பல விதங்களிருக்கின்றன. வர்த்தக முறை தெரிந்தவர்கள் கடிதங்களை ஒழுங்காய் எழுதுகிறார்கள். பொது ஜனங்கள், வர்த்தகர்கள் அல்லது கம்பெனிகளுக்கு பொருளை விரும்பியாவது (காட்லாக்) விலை ஜாபிதா வேண்டுமென்றாவது கடிதமெழுதிக்கொண்டிருக்கிறார்கள். இப்படி யெழுதிக்கொண்டிருக்கிற கடிதங்களில் தமது ஊரின் பெயர், தேதிமுதலியவைகளை எழுதாது விடுகின்றனர். இன்னும் சிலரோ தங்கள் விலாசத்தை யெழுத மறந்தோ அல்லது எக்காரணத்தாலோ விட்டு விடுகிறார்கள். இவைகள் ஒருவித மிருக்க கையெழுத்திடுவது வெகு விநோதமாயிருக்கிறது. பாதி பெயர் தெரியும்படிக்கும் பாதிபெயர் தெரியாமலிருக்கும்படிக்கும் கிறுக்கிவிடுகிறார்கள். இப்படிக் கையெழுத்தைக் கிறுக்குவது அவர்களுக்கு அனுகூலமென்றெண்ணியிருந்தாலும், தங்கள் பெயரோடு விலாசத்தையும் எழுதினால் நலமாயிருக்கும். நாம் தினந்தோறும் பார்வையிடும் நூற்றுக்கணக்கான கடிதங்களில் அநேக கடிதங்களில் கையெழு[illegible] தெரிந்துகொள்வதுதான் கஷ்[illegible] காலதாமதமும் ஏற்படுகிறது. [illegible] விலாசத்தை எழுதி யிருந்தால் இவ்வளவு தூரம் சிரமப்படவேண்டியதில்லை. தமது கையெழுத்தைப்போல் மற்றவர் போட்டுவிடக் கூடாதென்பதே முக்கிய கருத்தாகும் சிலர் கடிதம் எழுதும்போது. "என் விலாசம் உங்களிடமிருக்கிறது" "என்விலாசம் உங்களுக்குத் தெரியும்" என்று எழுதிவிடுகிறார்கள். உறவினரல்லாத வியாபார ஸ்தலம், பத்திரிகை யாபீஸ் முதலான விடங்களுக்கு ஒவ்வொரு கடிதத்திலும் விலாசத்தை விபரமாய் எழுதவேண்டும்.

---

## மூன்றுகனிகள்.

(ஒரு பரிதாபமான கதை.)

சில நூற்றாண்டுகளுக்குமுன் பாக்டாட் நகரத்தில் ஒரு வர்த்தகன் இருந்தான். அவன் மனைவி மிகவும் அழகானவள். புருஷன் மீது அவள்குறை கூறுவதேயில்லை. அவனைச்சகல விஷயங்களிலும் சந்தோஷப்படுத்தி அவனை இன்பமாக வாழச்செய்வதே அவள் தனது கடமையாகக்கொண்டிருந்தாள். அவனும் தனது மனைவியை மிகவும் பிரியத்துடன் நேசித்து வந்தான். அவள் சொன்ன விஷயம் எதனையும் அவன் தட்டுவதில்லை.

இவ்வாறு அந்த வர்த்தகனும் மனைவியும், இருதலைப்புள்ளின் ஓர் உயிர்போல, இன்பமாக வாழ்ந்து வரும்பொழுது மனைவி திடீரென்றுவியாதியடைந்தாள். வர்த்தகன் அவளை மிகுந்த கவலையுடன் கவனித்து வந்தான். அவள்விரைவில் சுகமடைவதற்குவேண்டிய முயற்சிகளை யெல்லாம் சிரத்தையுடன் செய்தான். ஒரு நாள் "வர்த்தகனின் மனைவி அவனிடம் எனக்குச் சில ஆப்பில்பழங்கள் வேண்டும்; நீண்டநாளாக எனக்கு அந்தப் பழங்களின்மேல் ஆசையிருந்துகொண்டிருக்கிறது. சீக்கிரமாக அவை எனக்குக் கிடைக்காவிட்டால் எனக்கு ஆபத்து நேரிடும் போலத்தோன்றுகிறது என்று சொன்னாள். உடனே வர்த்தகன் அவ்வூரில் உள்ள சந்தைகள் எங்கும் தேடினான்; கடைகள் எங்கும் விசாரித்தான் அவன் ஒரு

பழத்திற்கு ஒரு பவுன்கொடுக்கத் தயாராயிருந்தும் அங்கு ஒன்றும் கிடைக்கவில்லை. பின் தெய்வச் செயலாக ஷை வர்த்தகன் ஒரு வயது சென்ற தோட்டக்காரனைக்கண்டான். அவன் "நீர் நாடெங்கும் தேடினாலும் அந்தப்பழம் கிடைப்பது அரிது; ஆனால் பஸ்ரா நகரத்திலுள்ள "கலிப்" தோட்டத்தில் மட்டும் அது கிடைக்கும்" என்று சொன்னான். இதனைக்கேட்டவுடன் தனது அருமை மனைவியின் விருப்பத்தை எவ்வாறாவது நிறைவேற்ற வேண்டுமென்று கருதிய ஷை வர்த்தகன் ஒரு தேசாந்திரிபோல வேஷந்தரித்து தனது மனைவியிடம் விடைபெற்றுக்கொண்டு பஸ்ராவுக்குப் புறப்பட்டான். வர்த்தகன் மிகவும் விரைவாகச் சென்று பஸ்ரா நகரம் போய்ச் சேர்ந்தான். உடனே அங்குள்ள தோட்டத்திற்குச் சென்றான். அங்கே அபூர்வமாக மூன்று ஆப்பில் பழங்கள் தான் கிடைத்தன. அப்பழங்களை ஒவ்வொன்றுக்கு ஒரு பவுண்டு வீதம்மூன்று பவுன் கொடுத்து வாங்கிக்கொண்டு பதினைந்து தினங்களுக்குள் திரும்பி விட்டான். அவன் வீட்டுக்கு வந்தவுடன் தனது மனைவியிடம் ஷை பழங்களைக்கொடுத்தான்: அவளது ஆவல் முன்னரே போய்விட்டது.

ஆனாலும் அவள் அப்பழங்களை வாங்கித் தனது சமீபத்தில் வைத்திருந்தாள். பின்னும் அவள் வியாதி தீராமலே யிருந்தது. அதனால் அவளைச் சௌக்கியப் படுத்துவதற்கு இன்ன வழி யென்று அறியாது சும்மாவிருந்தான்.

இவ்வாறு சில நாள் கழிந்தன. ஒரு நாள் வர்த்தகன் கடைவீதியிலுள்ள தன் கடையில் உட்கார்ந்து கொண்டிருந்தான். அப்பொழுது சகல பொருள்களும் விற்கும் அவ்வீதியில் அவலக்ஷணமிருந்தவனும், ஒல்லியாய்வளர்ந்தவனும் கன்னங்கரேலென்று கறுத்தவனுமான ஓர் அடிமை தன்கையில் ஓர் ஆப்பிள் பழத்துடன் போவதைக் கண்டான். அது அவன் நீண்டதூரம் பிரயாணஞ்செய்து பஸ்ராவிலிருந்து கொண்டுவந்த மூன்று பழங்களில் ஒன்றாயிருந்தது. உடனே வர்த்தகன் அந்த அடிமையை அழைத்து அப்பா! இந்தப்பழம் உனக்கு எங்கே கிடைத்தது? என்று கேட்டான். அடிமையானவன் புன்னகையுடன் இந்தக் கனியை எனது காதலி எனக்குக் கொடுத்தாள். இன்று காலையில் யான் அவளிடம் போயிருந்தேன். அப்பொழுது அவளிடம் மூன்று ஆப்பிள் பழங்கள் இருந்ததைக்கண்டு அவை ஏது என்று கேட்டேன். அவள் "நல்லவரான எனது புருஷன் எனக்காகப் பதினைந்துநாள் யாத்திரை செய்து இந்தப்பழங்களைக் கொண்டு வந்தார்.' என்றுசொன்னாள். பின் நான் அவளிடம் விடைபெற்று வந்த பொழுது எனக்குஒரு பழத்தை வெகு மதியாக அளித்தாள். அதுதான் இது." என்று சொன்னான்.

இந்த விருத்தாந்தத்தைக் கேட்டவுடன் வர்த்தகனுக்கு அது மிகுந்த உண்மை யென்று தோன்றியது. உடனே அவன் எழுந்து கடையைப் பூட்டிவிட்டு ஆத்திரத்துடன் வீட்டுக்கு விரைந்து சென்றான். வீடு போனவுடன் மனைவியின் அறைக்குச் சென்று ஆப்பிள் பழங்கள் மூன்றும் இருக்கின்றனவா என்று பார்த்தான். இரண்டுதான் இருந்தன; ஒன்றைக் காணவில்லை உடனே மனைவியைக் கேட்டான். படுக்கையிலிருந்த அவள்பழங்கள் வைத்திருந்த இடத்தைக் கஷ்டத்துடன் திரும்பிப்பார்த்து அங்கே இரண்டு பழங்கள் மட்டும் இருப்பதைக்கண்டு அத்தான், ஒருபழம் என்ன ஆயிற்றோ எனக்குத் தெரியவில்லை என்றாள். மனைவி இவ்வாறு சொன்னதைக் கேட்டவுடன் அந்த அடிமைநம்மிடம் சொன்னது வாஸ்தவமாயிருக்க வேண்டும் என்று உறுதிசெய்து கொண்டான். உடனே நமதுமனைவி ஓர் அடிமையைக்காதலித்து நம்மை வஞ்சிக்கும்



கள்ளியாஎன்ற எண்ணத்தால் அவன் உள்ளத்தில் கோபமும் விசனமும் பொங்கின. கோபத்தீ தீப்போற் கொதிக்க உடனே தனது வாளை உருவித்தனது மனைவியை ஓரே வெட்டாய் வெட்டிவிட்டான். பின்அவன் அவள் பிரேதத்தை ஒருபெட்டியில் அடக்கஞ் செய்து இருட்டியவுடன் தனது தோளில் சுமந்து கொண்டு போய் டைக்ரிஸ் நதியில் போட்டுவிட்டான்.

வர்த்தகன் இந்தக் கொடுஞ் செயலைச் செய்து வீட்டுக் குத்திரும்பி வந்தபொழுது அவன் மூத்தபிள்ளை வாசலில் அழுதுகொண்டு நின்றான். "ஏன் அழுகின்றாய்?" என்றுவர்த்தகன் கேட்கச்சிறுவன் கூறுகின்றான். "அப்பா, நீர்அம்மாவுக்காகக் கொணர்ந்த மூன்று ஆப்பிள் பழங்களில் ஒன்றைநான் இன்றுகாலையில் அவளுக்குத் தெரியாமல் எடுத்துக்கொண்டேன். தம்பியுடன் வீதியில் விளையாடிக் கொண்டிருந்தேன். பின் சிறிது நேரத்திற்கு முன், அப்பொழுது நெட்டையாக வளர்ந்த ஓர் அடிமை அந்தப் பழத்தை என்கையிலிருந்து பிடுங்கிக்கொண்டுபோய்விட்டான். நான்அவன் பின்னே ஓடினேன். பழத்தைக் கொடு என்று கேட்டதுடன் அந்தப்பழம் வியாதியாயிருக்கும் எங்கள் அம்மாவுடையது என்றும் எங்கள் அப்பா அதற்காகப் பதினைந்து நாள் பிரயாணஞ் செய்து கொண்டு வந்தார் என்றும் சொன்னேன் என்ன சொல்லியும் அவன் கேளாமல் பழத்தைக் கொண்டு போனான் பின்னும் நான் அழுது கொண்டே அவன்பின போய்க் கொண்டிருந்தேன். உடனே அவன் திரும்பிவந்து என்னைஅடித்து விட்டு விரைவாக ஓடிவிட்டான். அப்பா! அம்மாவருத்தப் படுவாள் நீர் இந்தச் சங்கதியை அவளிடம் சொல்லக் கூடாது: அதற்காகவே இதுவரை இங்கேயே நின்றுகாத்துக் கொண்டிருக்கிறேன்" என்று சொல்லி விட்டுப் பின்னும் மிகுதியாக அழத்தொடங்கினான்.

மகன் சொன்ன விருத்தாந்தத்தைக் கேட்டவுடன் வர்த்தகனுக்குத் தலையில் இடிவிழுந்தது போலிருந்தது. என்ன பாதகம் செய்தோம் என்று ஏங்கினான். அவன் உள்ளத்தில் துக்கமாகிய தீபற்றியெரிந்தது! நாம்மகா பாதகம் செய்துவிட்டோமே என்று கவலையடைந்தான். வஞ்சக மிகுந்த ஓர்அடிமை என் துமகன் சொன்ன வார்த்தைகளால் அறிந்து சொன்ன தந்திர வார்த்தைகளை மெய்யெனநம்பி ஐயோ! எனதுஆருயிர்க்காதலி அன்புடைச் செல்வம், இன்றடைத்துணைவியைவாளுக்கு இரையாக்கினேனே" என்று யெண்ணி யெண்ணி நெஞ்சகம் புண்ணானான். கண்ணாட்டியை வதை செய்தேனே" யென்று கண்ணீர் ஆறாய்ச் சொரிந்தான். "அழியாத பத்தினியைக் கொன்ற பழியை நான் எவ்வாறு தீர்ப்பேன்" என்று வருந்தினான். அணைகடந்த வெள்ளம் அழுதாலும் வருமா? பின் தான் தீரவிசாரியாது அறிவீனத்தால செய்த தீவினைக்காகப் பெரிதும்வருந்தித் தனது மக்கள் தக்கவயடைந்தவுடன் அவர்களுக்கு விவாகமுதலிய சுபகருமங்களைச் செய்து தனது ஆஸ்திகளை அவர்களுக்குப் பங்கிட்டுக் கொடுத்து அவர்களை ஒற்றுமையாக வாழுமாறு வேண்டும் புத்திமதிகளைச் சொல்லிவிட்டுத் தனது மனைவியை அநியாய மாகக் கொன்றபாவம் நீங்குமாறு துறவுநிலை யடைந்து அல்லாவைத்தொழுது வாழ்ந்தான். தீரவிசாரித்துத் தெளிந்து கொள்ளாது எதனையும் திடீரென்று செய்து விடுதலால் பெருங்கேடுகள் விளையும் என்பது இந்தக்கதையால் தெளிவாக விளங்கும்.

பாரதி.

# எமது அபிப்பிராயம்.

பிரசித்தி பெற்றுவரும் சுகானந்த மாத்திரைகள் மிகவும் பரிசுத்தமான கைகண்ட ஔஷதம். தேகத்துக்குக் கெடுதி செய்யக் கூடிய எவ்வித லோகமாவது சாக்காவது சேர்க்கப் படவில்லை. மாத்திரைகளை உபயோகித்தால் நற்குணத்தைத் தவிர வேறெதுவும் பின் தொடர்வதற் கில்லை. இவை போகங்களை அளிக்கவல்ல இவ் விந்தியா தேசத்து மூலிகைகளைக் கொண்டு, இந்தியர்களால் கைபடாமல் இயந்திரங்களில், பார்வைக்கு இச்சிதமாயும் தயார் செய்யப் பட்டிருக்கிறது. எவரும் கஷ்டமின்றி லகுவில் உபயோகிக்கத் தக்கது. இம் மருந்தை வாலிபர் முதற் கொண்டு வயோதிகர் வரை உபயோகித்து பயனை யடையலாம். தேகத்தை திடகாத்திர மாக்கத்தக்க நல்ல மருந்து. தேகம் கட்டு விட்டு தளர்ந்துபோன ஸ்திரீ புருஷர்களும் உபயோகித்து உண்மையை யறிந்து இம்மருந்துக்கு வேறொன்றும் நிகரில்லையெனஜெயப் பிரதாபத்தையடைந்திருக்கிறது.

ஒரு கடிதம்.

(2—5—1915.)

தாங்கள் எழுதி யிருந்தது போல் தினந்தோறும் சுகானந்த மாத்திரைகளை உபயோகித்து வருகிறேன். என் தேகம் முன்னிலும் வன்மையுடைய தாகவே யிருக்கிறது. பலஹீனத்தை நீக்கி சுறுசுறுப்பைக் கொடுத் திருக்கிறது. இந்த ஒரு மருந்தில்தான் உபயோகித்த வுடன் குணத்தைக் கண்டேன். நல்ல சுகத்தை அடைவதற்கு தங்கள் சுகானந்த மாத்திரைகளே ஸௌக்கியம். தயவுசெய்து இன்னும் ஒரு புட்டி மாத்திரை வி. பி. யில் அனுப்பக் கோருகிறேன்.

தங்களன்புள்ள
K. வேதமூர்த்திமுதலியார்.
சோழவந்தான்.

உபயோகித்தவர்,

50-மாத்திரை கொண்ட புட்டி 1-க்கு விலை ரூபா 1 0 0

திருநெல்வேலி ஜில்லாவுக்கு ஏஜண்டு:—
K. அரியநாயக முதலியார்.
ஆழ்வார்குறிச்சி.




கொடுப்பார். சரி நேரமாகிறது போய்வாருங்கள். எவ்வளவோ காசு செலவாகிறது அதில் இது ஆறு ரூபாய்க் காசு பிரமாதமா விடுங்கள் கீழே தவறி விழுந்துவிட்டது என்று நினைத்துக்கொள்ளவேண்டியதுதான்.

“அதினால் எனக் கொன்றுமில்லை. சேலை வாங்கியவரும் விலைசகாயந்தான் நன்றா யிருக்கிற தென்று சந்தோஷப்பட்டார்.

“பிறகென்ன போங்கோ.

“போகாமல் அவரோடு சண்டையா போடப்போகிறேன்.

“அதில்லை யிருந்தாலும் மனதுக்கு சமாதானமில்லை பாருங்கோ.

“ஆம் இருக்கத்தான் செய்யும். வருகிறேன்.

என்று கொஞ்சத்தூரம் போகையில் அங்கொருவர் தன்மனைவியோடு எதிர்வர அந்தம்மாள் இவர் வாங்கிவைத்திருக்கிற சேலையைப் போல் உடுத்தியிருக்கப் பார்த்து, ஐயா இந்த சேலை எப்போ வாங்கியது என்றார்

வந்தவர்—ஐயா இன்று காலையிற்றான் வாங்கினேன் தெண்டத்திற்கு இருபது ரூபாய் போட்டேன் எல்லாரும் சாயம் போய்விடுமென்று சொல்கிறார்கள்.

“எங்கே வாங்கினீர்கள்.

“அவர்தானிருக்கிறாரே பொய்யா மொழிப்புன்னைவனஞ் செட்டியார் அந்தப் படுதோஷி கடையில்.

“ஐயா இன்றைக்குத் தானே வாங்கியிருக்கிறீர் இன்னும் மடிப்புக் குலையவில்லை போலிருக்கிறதே இப்போதேயிவ்வளவு கோபம் அவர் மேலிருந்தால், ஒருவேளை மற்றவர் சொல்வது போல் சாயம்போய் விட்டால் எப்படி யாவீரோ தெரியவில்லையே.

“இல்லை ஐயா, அது சாயம் போனால் போகட்டும் இருந்தாலிருக்கட்டும் அதைப்பற்றி யொன்று மில்லை. நம்மதாக இல்லையென்று நினைத்து விட்டுப் போகிறோம். நம்முடைய காயமே நிலையில்லாதா யிருக்கிறது. அதைக் கேட்பானேன்.

“அதைப் பற்றியல்ல சொல்லவருவது.

“வேறென்ன.

“நாலுபேர் சாயம் போய்விடுமென்று சொல்கிறார்களே இதைவைத்துக் கொண்டு வேறுநல்லசாய முள்ளதாகக் கொடுங்கள் என்று

போய்க்கேட்டால் அவர் என்ன செய்ய வேணும்.

"என்ன செய்தார்.

"என்ன செய்தாரா ஊம். முன்னால் வைத்த சேலையை சட்டென் றெடுத்ததும் சாயம் போகுமென்று எவன் சொன்னானோ அவன் பெண்சாதி தலையிலேயே கொண்டுபோய் போடுமென்று விசிறி ரோட்டிலே எறிந்து விட்டான் பாவி, அதோடுபோச்சா அங்கே ரோட்டிலே எந்த நாசகாலனோ சுருட்டுப் பிடித்த மீதத்தைப் போட்டுப் போயிருந்திருக்கிறான் அதுபட்டு காலணா அகலத்தில் கரிந்து பொட்டு விழுந்திட்டது. நான் கலியாணம்பண்ணி என் கையால் முதல் முதலில் சேலை வாங்கிக் கொடுக்க நேர்ந்த கருமாந்தரம் இப்படி யாச்சுது.

"அப்படியா ஐயோ பாவம்! அதுதா லிவ்வளவு கோபம். இப்போ எங்கே போகிறீர்கள்.

என் மாமியார் வீட்டுக்கு முதல் முதல் மருவுக்குப் போகிறோம் (என்று சொல்லவும் இவர்க்கு முகம் சுருங்கிற்று.)

வந்தவர்-என் ஐயா நான் சொன்னவுடன் தங்கள் முகம் வேறு பட்டு விட்டது. நீங்களும் இப்மாதிரி மோசம் போனீர்களோ ?

"இல்லை. அவ்வளவு மோசமில்லை.

"எங்கே பார்க்கலாம். (எடுத்துக் கொடுத்தனர் பார்த்து) நீங்களும் அப்பாவியிடம் ஏமாந்தீர்களா அவன் பொல்லாதவனாச்சே என்ன விலைக்கு வாங்கினீர்களையா.

"அதுதான் மோசம்.

"எப்படி.

"இருபது ரூபாய் அசல் என்று பட்டிகாட்டி ரூபா 1-க்கு லாபம் கால் ரூபாய் வீதம் 25-ரூபாய் வாங்கி விட்டான்.

"நம்பர் கூட ஒரே நம்பாகத்தா னிருக்கிறது என்னிடத்தில் 16-ரூபாய் அசல் என்றும் ரூபாய்க்கு கால் ரூபாய் லாபமென்றும் 20-ரூபாய் வாங்கினான். தாங்கள் விலையிலும் ஏமாந்து போனீர்களா.

"நாம் என்ன ஐயா செய்வது மனுஷனை நம்பித்தானே எது வுஞ் செய்யவேணும். நம்பிக்கைத் துரோகம் பண்ணுகிற வன் ஒரு நாளுமுன்னுக்கு வாமாட்டான். அவனை ஒரு கேழ்வி



யாவது கேட்டு வரவேணும் அப்படி யானாற்றான் என் மனம் ஆறும். நீங்களுங்கூட வாருங்களையா,

"ஐயா நான் வெகுதூரம் போகிறவனாச்சே.

"போகலாமையா இதற்கென்ன வரப்போகிறீர்கள் மாக்கம் தானே.

"சரி நீங்கள் இவ்வளவு சொல்லும் போது என்ன செய்கிறது; வருகிறேன்.

"வாருங்கள் அவனைலேசா விடுகிறதா.

"ஊம் அவன் எல்லோரையும் விழுங்கி ஏப்பமிடுகிறவனாயிற்றே தங்களுக்கா பயப்படப் போகிறான்.

அவனுக்கு பேர்வழி தெரியாதுபோலிருக்கிறது. இன்றைக்குத் தெரியும்படி செய்கிறேன் என்று விரைவிற் சென்று இருவரும் செட்டியார் கடை போய்ச் சேர்ந்தார்கள். இவர்கள் போவதை அரசகுமாரனும் மந்திரிகுமாரனும் பார்த்து இவர்களுடைய முடிவு எப்படியாகுமோ பார்க்கலா மென்று பின்னோடே போயினர். அங்கே கடையி லிருக்கிற செட்டியார் இவர்கள் வருவதைப் பார்த்து ஏதோ கோபத்தோடு வருகிறாரென்று தெரிந்துகொண்டு அவர்களைப் பார்த்து புன் சிரிப்புடன் இரண்டு கையையும் உயர வெடுத்து ஐயா வரவேணும் நமஸ்காரம் வாருங்கோ என்றார். எண்ணிவந்த எண்ணம் போய் கோபந் தணிந்து ஒருகால் ரோட்டிலும் ஒரு கால் படிமேலுமாய் நின்று திகைத்தனர்.

"ஏன் உள்ளே வாருங்கள் ஏன் திகைப்பு இது உங்கள் சொந்தக் கடைபோ லாச்சே ஐயா நீங்களும் வாருங்கள்.

"வருகிறோம் வரத்தானே வந்தோம்.

"நீங்கள் நம்மை ஒருக்காலு மறக்கமாட்டீர்களென்பது எனது நம்பிக்கை.

(பின்னால் வந்த பெண் வருகிறதா வென்று பார்த்தனர்)

"ஓகோ அம்மா வருகிறார்களா வரட்டும் அவர்களும் உள்ளே வந்திடட்டும். நீங்களும் இப்படி வந்திருங்கள், பாரடா அங்கே அய்யாவுக்குத் தட்டில் தாம்பூலங் கொண்டுவந்து வை. தாகத்துக்குக் கொண்டு வரட்டுமா.

"இல்லை, இல்லை.

"சோடா சாப்பிடுங்கள்-பாரடா 3 சோடா எடுத்துவா.

"வேண்டாமையா தாகமில்லை.

"சும்மா சாப்பிடுங்கள் உடைத்துக்கொடு.
(கொடுக்கிறான்.)

"அவாளுக்குக்கொடு. அவாளுக்கும் இருக்கிறது. நீங்கள் சாப்பிடுங்கள்.

(இன்னொன்று உடைத்து மற்றொருவர்க்குக் கொடுக்க அவர் வாங்கி தன் மனைவிக்குக் கொடுக்க வெழுந்தார்.)

"நீங்கள் உட்காருங்கள் அம்மாளுக்கு வேறே தரச் சொல்கிறேன்.

(உட்கார்ந்து சாப்பிடுகிறார் பிறகொன்றை உடைத்து அந்தம்மாள் கையில் கொடுத்தான். எனக்கு வேண்டா மென்று சொல்ல செட்டியார் சும்மா சாப்பிடம்மா வென்றார், புருஷனும் வாங்கிச் சாப்பிடு அவாள் தகப்பன்போல் வெகு அன்பாய்க் கொடுக்கிறார்கள் வேண்டா மென்று சொல்வதா.

(வாங்கிச் சாப்பிடுகிறாள்.)

"ஏன் வெற்றிலை போடுங்களேன்.

"போடுகிறோம்.

"அடே ஐயாவுக்கு ஏலக்காய் லவங்கம் எடுத்து வந்துகொடு. புகையிலை வேண்டுமோ.

"வேண்டியதில்லை.

"அடேபையா அம்மாளுக்கு வெற்றிலை கொண்டு போய்க்கொடு
(கொடுக்கிறான்.)

இருவரும் தாம்பூலம் போட்டுக் கொண்டு கேள்வி கேட்க வந்தவர் மறுவீடு போகிறவர் முகத்தைப் பார்த்தார். அவர் நாம் சொல்லுங்கள் என்றார். இதற்குள் செட்டியார் என்ன சங்கதி என்னிடம் சொன்னால் தங்கள் மனம்போற் செய்கிறேன் என்னதேவை நீங்களே நேரில் பார்த்து எடுக்கவேணுமா – அடே ஐயாவுக்கு பீரோவைத்திறந்துகாட்டு பார்க்கட்டும் எழுந்துபாருங்கோ என்றார்.

இல்லை ஐயா இப்போ தொன்றுந் தேவையில்லை என்றார் வந்தவர். சரி என்ன விசேஷம் என்று கேட்டுக்கொண்டு ஒருவரை நன்றாய் உற்றுப்பார்த்து உங்களை எங்கேயோ பார்த்தாப்போ லிருக்கிறதே என்றார் செட்டியார். ஞாபகமில்லையா என்றார் வந்தவர்.



"நல்ல ஞாபகந்தான் ஆனால் இன்ன இடமென்று மாத்திரம் ஞாபகத்துக்கு வரவில்லை.

சிரித்துக்கொண்டு காலையில் சேலையைவாங்கி விட்டெறியவில்லையா என்றார் வந்தவர்.

ஓகோ சரி சரி ஞாபகம் வந்தது என்று செட்டியார் மற்றவரை நோக்கி ஐயா! இந்தப்பிள்ளையாண்டன் ரொம்ப நல்லபிள்ளை குணம் தங்கக்கம்பிதான் முழுத்துணிகூட நம்மகடையைவிட்டு வேறேபோனதில்லை அப்பேர்ப்பட்ட பிள்ளையை எந்தப்பாவியோ இல்லாததும் பொல்லாததும் சொல்லி இந்தச் சேலையை சாபம் போகுமென்று சொல்லி கழுதைப்புரட்டுப்பண்ணி மனதைக் கெடுத்து விட்டான். இந்தப்பிள்ளை அதைக்கேட்டு இங்கே வந்து என்னென்னமோ சொல்லிற்று. எனக்கு அது சமையம்வந்த கிராக்கியைவிட்டு முடுக்கி விட்டார்கள் அவர்கள் அடுத்த கடையில் போய் 500- ரூபா வரை வாங்கிக்கொண்டு போய்விட்டார்கள். அதினால் இந்தப் பையன்கள் பேரில் கோபித்துக்கொண் டிருந்தேன். அந்தச் சமையத்தில் இது கொண்டு வந்து கையிற் கொடுத்தது நான் கோபத்தோடு கோபமாய் வாங்கி விசிறியெறிந்துவிட்டேன். அதுபாவம் ஒன்றுஞ்சொல்லவில்லை அப்படியே போய்விட்டது. நல்லபிள்ளைகட்கு அடையாளம் அதுதான். அப்புறம் நான்ரொம்பவருத்தமுற்று வண்டாநாம்இப்படி செய்தோம் என்றெண்ணினேன். இந்தசேலையிருக்கிறதே அதினுடைய அருமை இப்போதெரியாது பின்னாற் சொல்வீர்கள் ரொம்ப நல்லமாதிரி சொல்லிநெய்தது. சொந்தத்திற் கென்று இது இவாளுக்கு கிடைக்கிற பொருளல்ல, நானே நூல்வாங்கிக் கொடுத்து ஒருதறி 1-சேலை போடச் செய்தது. அந்தம்மா இந்தபிள்ளைக்கு எப்படியோ வென்றார். மனைவிதான் என்றார். அப்படியா நல்லா யிருக்கட்டும் பாருங்களேன் என் வைகாசியை அந்த சேலையைக் கட்டியிருக்கிறார்களல்லவா அடுத்தவருடம் பாருங்கள் ரத்தினம் போல் ஆண்பிள்ளை பிறக்கும் இப்போ தொன்றும் சொல்ல மாட்டார்கள் அப்புறந்தெரியும் ஐயா சொன்னது போற் சரியாயிருந்ததென்று என்றார்.

"ஆம் ஆம் எப்படியும் பெரிய மனுஷாள் பெரிய மனுஷாள்தான்.

"என்னையாவாழ்வு இன்றைக்கிருப்பவர் நாளைக்கிருந்திலர்.

என்னமோ இருக்குமட்டும் நல்லவரென்று பேர் எடுக்கவேணும்.

"அந்தப் புத்தியாருக்கையா வாய்க்கும் எல்லார்க்கும் வாய்க்குமா தங்களைப் போன்ற பிரபுக்களுக்குத் தான் வாய்க்கும்.

"சரி நீங்கள்வந்த காரியம் என்ன.

"நான் வந்தகாரியமா அந்த சேலை என்ன விலைக்கு கொடுத்தீர்கள். அதுவா 20-ரூபாயல்லவா நீங்கள் கொடுத்தது.

"ஆமா.

"வேறொருவர்க்கானால் ரூபாய் 30 இது நல்லபின்னை என்று சொற்ப லாபத்துக்கு கொடுத்தது அதற்கென்ன இப்போது.

"இப்போதொன்று மில்லை என்னிடம் ஐந்துரூபாய் கூட வாங்கி விட்டார்கள் தங்கள் குமஸ்தாக்கள்.

அப்படியிருக்காதே எங்கே பார்ப்போம் சேலையை

(எடுத்துக் கொடுக்கிறார்.)

ஆஹா இதுவா இந்தச் சேலைக்கும் அந்தச் சேலைக்கும் எவ்வளவோ வித்தியாச மாச்சுதே இந்தசேலை 31-4-0 ரூபாய்க்கு வித்திருக்கிறது பார்க்கிறீர்களா, அடே அந்தக்கணக்கை எடுத்து ஐயாவுக்கு காட்டடா அப்போதுதான் நம்புவார்கள் என்றார்.

"கணக்கு வேண்டாம் நீங்கள் சொல்வது நம்பிக்கையில்லையா சரியாகத் தானிருக்கும் 31-4-0க்கு வாங்கினவரே சொன்னார்.

"ஊம் அதுவெல்லாம் தெரிந்து சால்ஜியென்று சொல்கிறீர்களே.

"இவாளுக்கு 20ரூபாய்க்கு கொடுத்தீர்களே.

"அது சங்கதிவேறேயிது.சங்கதிவேறே அதற்கும் இதற்குமில்லையா?

"இது மறுசாயமாச்சுதே.

"இரண்டும் ஒரே நம்பர்தானையா.

நீங்கள் நம்பரை ஏன் பார்க்கிறீர்கள். அது பலிதமிருக்கும் யாராவது ஒருவர் எனக்கு அந்த நம்பர் வேண்டுமென்று கேட்டால் அதற்கு தகுந்தாப்போல் நம்பர்போட்டு கொடுத்திருக்கும் அதையா கவனிப்பது.

"சரி நீங்கள் பார்த்து இப்படிச் சொல்கிறபோது என்ன செய்கிறது.

"உங்களுக்கு மனதிற் சந்தேகம் வேண்டாம் இந்த நம்பர் சேலை ஒன்று எடுக்கிறேன் பாருங்கள் அப்போதுதான் தெரியும் அடே எடுத்து வந்து காட்டடா அப்பா பார்க்கட்டும்.



ஒரு பையன் போகிறான் அந்த சேலையை எடுத்து மேலே சுற்றியிருந்த பட்டுநூலை அவிழ்த்து விட்டு பழக்கா நூலை தாறுமாறாக சுற்றிக்கொண்டு வந்து கொடுத்தான். இரண்டும் ஒன்றாய் வைத்துப் பார்த்தார் நம்பர் ஒன்றுதான் சேலையும் ஒன்றுதான் தான் வாங்கிய சேலை பட்டுநூலால் வெகு அழகாய் சுத்தியிருப்பதால் பார்வைக்கு நன்றாயிருந்தது. செட்டியார் எப்படி யிருக்கிறதையா இதை வேண்டுமானால் எடுத்துப் போங்கள் 20-ரூபாய்தான் அப்புறம் என் பேரில் ஆவலாதி சொல்லக்கூடாது. இப்போதே சொல்லி விடுகிறேன் யாரடா இந்தா இதை கடுதாசியில் சுற்றிக் கொடு அய்யா வைத்திருக்கிறதை வாங்கிப் பீரோவில் வை 5-ரூபாய் கொண்டு வந்து கொடு என்றார் செட்டியார்.

"இல்லை அப்பா இதுவே யிருக்கட்டும்.

"உங்களுக்கு சந்தேகம் வேண்டாம்.

"இல்லை இதுவே யிருக்கட்டும் அதை எடுத்து வையுங்கள் நாங்கள் வந்தாற் வந்து.நேரமாயிற்று போய்வர உத்தரவு கொடுங்கள். போனால் பார்த்துக் கொள்ளவேணும் இதைவிட்டு ஒரு பக்கமும் போகமாட்டேன்.

ஆஹா! அப்படியே அடே அப்பா எப்போது வந்தாலுஞ் சரி யாய் சொல்லிக்கொடு ஆளைப்பார்த்துக் கொள் என்ன தெரிகிறதா

"தெரிந்தேன்.

(எழுந்து கொண்டு) சேலை சாயம் போகாதே.

"சாயமா அதைப்பற்றி இப்போ தெரியாது சாயம் போகும் போகாதென்று கனவிலும் நினைக்க வேண்டாம்.

"சரி போய்வருகிறேன் நமஸ்காரம்.

"செய்யுங்கள்.

வெளியிற்போய் செட்டியார் நல்லகுணம் அப்படித்தானிருக்க வேண்டும் என்றுபுகழ்ந்து கொண்டு அவரவர் செல்லவேண்டிய வழியைக் கூடிப்புறப்பட்டுப்போயினர்.

இவைகளை யெல்லாம் கவனித்துக் கொண்டிருந்த விவேகனும் சிகாமணியும் எழுந்து செட்டியாரைப் பார்த்து ஐயா அந்தமனுஷன் வந்த வார்த்தைப் பார்த்தால் அப்படியே தங்களை எடுத்து வாழைக் கனி போல் விழுங்கி விடுவான்போலிருந்தது அவ்வளவு கோபத் தோடு வந்தான். அப்படி வந்த அவன் கோபமானது தங்களைக்

கண்ட மாத்திரத்தில் சூரியனைக்கண்ட பனியைப்போற் பறந்து விட்டது என்றான்.

"சிரித்துக் கொண்டு இவன் கெட்டான் அற்பன் இவன் எனக்கு அணுமாத்திரம்.

"தெரிந்து கொண்டேன் அந்த சேலை சாயம்போய் விட்டால் என்ன செய்வீர்கள்.

"அதுதான் கடையிற் சொல்லிவிட்டேனே.

"எப்படி.

"சாயம் போகும். போகாதென்று கனவிலும் நினைக்க வேண்டாம் என்று அடைமொழி கூடக்கொடுத் திருக்கின்றேனே வக் தாற் பார்த்துக் கொள்கிறது சமயம்போல் என்றார் செட்டியார்.

மறுபக்கம்திரும்பி பாடாகாலையில் அந்தசேலை 20ரூபாய்க்கு கொடுத்தது உங்களுக்கு புத்திகெட்டிருக்கிறதா நேற்று 31-4-0 ரூபாய்க்கு விற்றது ஞாபகமில்லையா நீங்கள் வியாபாரம் பண்ணி மண்ணைவாரிப் போட்டீர்கள் என்னடா இவ்வளவுகாலம் பழகியும் அ. பட்டி வ. பட்டி இ. பட்டி என்பது தெரியாதா சம்பளம் மட்டும் சாஸ்தி கேட்கத் தெரிகிறது உங்களுக்கென்ன முட்டையிடுகிற கோழிக்கல்லோ வலிக்கும். எல்லாம் நாளெண்ணிக் கொண்டு போகிறவர்கள் தானே யென்று பலவாறு பேசினர். இதைக் கேட்ட இருபாலர்களும் உள்ளம் பூரித்து ஐவுளிக்கடை மோசம் இவ்வளவா வென்று நினைத்துக் கொண்டு வெளிப்புறப்பட்டுப் போயினர்.

வி.—அண்ணா ரொம்ப நன்றாயிருக்கிறதே வியாபாரம்.

சி.—அவர்களுக்கு அது வழக்கந்தான்.

வி.—இப்படியா பெருமோசமாயிருக்கிறதே.

சி.—ஆம் விலையிலும் மோசம் சேலையிலும் மோசம் பேச்சிலேயும் மோசம் எல்லாம் மோசடியாகத்தா னிருக்கிறது.

வி.—தம்பி நாம் வந்து அதிக நேரமாயிற்று வீட்டில் தேடுவார் போகலாம் வா.

சி.—சரி போகலாம். என்ன அண்ணா முழுமோசமாயிருக்கிறதே வியாபாரிகளுடைய கடை. இதென்ன அநியாயம் இவர்களுடைய முறைகள் இப்படித் தானோ.



உ

# வள்ளிநாயகி புராணம்.

## கடவுள் வாழ்த்து.

மலைமுகர் தெடுப்ப ள்ளநகை விளக்கு
மரகதக் கொடிமடி யிருந்தம்
மலைமுகங் காக்கும் பிறைச்சடைக் கடவு
ளகத்துறு வகைக்கட லலைப்பத்
தலைமுகந் திடப்போம் பொழுதகஞ் சாய்த்துத்
தலையெனத் தலைவாந் தலைவி
முலைமுகந் திடக்கண் டவர்களுஞ் சிறிப்ப
முறுவல்செய் களிறடி பணிவாம். (1)

ஆதியாய் நடுவாயீறு பண்டமாய்ப் பிண்டமாகிச்
சோதியாய்ச் சுடரா யாவுந் தோற்றமா யொடுக்கந் தானுய்
நீதியாய் நினைவா யெங்கு நினைப்பிலா மறப்பிலாவாய்ப்
பேதியாய்ப் பேதமாகப் பிரமத்தைக் கருதுகிற்பாம். (2)

வேறு.

மத்தணிந்து மன்றுடி மருந்தினை
முத்தரன் பின்முளைத்த கரும்பனை
பத்தர்சிந்தை பழுத்த பழந்தனை
நித்தநெஞ்சி னினைவினி லாட்டுவாம். (3)

முன்னகத்தி லுதித்த முதல்வியைப்
பன்னகத்தினணிபணிப் பாவையைத்
துன்னகத்திருள் செய்த்திடு சோதியை
யென்னகத்திலிருத்தி வணங்குவேன். (4)

மாகரக்கணமொடு வணங்குவார்புழை
மாகரக்கணமுறு வரதர் கோச்சடைச்
சேகரக்கணமதி மருப்பிற்சேர்குல
சேகரக்கணபதி தாளைச் சிந்திப்பாம். (5)

வேறு

முருகனையரிதனை முர்தகக்கல்செய்
மருகனையரிதனை முடிக்கும் வள்ளலார்
அருகனையரிமொழி யமலைதந்தவ
னிருகனையரிகழலடிகளை யேத்துவாம். (6)

சக்கரவிந்தரை வலஞ்செய்நூற்றடை
புக்கரைவிந்தரை வலஞ்செய் போரின்வாய்க்
கொக்காவிந்தரை யுறச்செய்கோனவா
றக்கரவிந்தரை யடிவணங்குவாம். (7)

கவவாரணக்கது கொண்டோராழியல்
கேவவாரணங் களித்திடச்செய் வானநண்
மேவவாரணங்களும் விளம்பும் வெளவுனர்
தேவவாரணக்கழல் சிந்தைசேர்த்துவாம். (8)

வள்ளியைபோதி மவானமின் முன்பின்கண்
வள்ளியைபோதி மஞ்சரிப வார்தரு
வள்ளியைபோதிம மறவரில் வளர்
வள்ளியைபோதி மரிவை மற்றுவாம். (9)

வேறு.

பூவடிக்கொளு புக்கவனெய்பவ
ஞூவடிக்கொளு நாயகி நால்வகைப்
பாவடிக்கொளு பானிற மேனியன்
சேவடிக்கொளு மென்னுட சென்னியே. (10)

வேறு.

பொல்லாத சமணைவென்று சைவநிலை
நிறுத்தவின்றோர் பொற்றாள் போற்றிக்
கல்லாலுஞ் சொல்லாலு மிருகடலுங்
கடந்தோர் தாள்கருத்து ளேத்தி
வில்லாறு நுதலிடத்து விழிநுதலைச்
சந்துவிட்டோர் விரைத்தாள் பாடிச்
சொல்லாத முதைமறை சொல்லவைத்தா
ரடிமலரைச் சூடுவோமே. (11)



வண்டிரைக்கு நிப்பையந்தார்க்
கைதவற்குத் தமிழுரைத்த மறைநூல்வல்ல
குண்டிகைக்கை குப்பமுனி செப்பதப்போ
தகப்போதிற் குடியேத்திக்கை
தண்டிருக்கு மிருடியித்த ரனவாடிக்
தளிர்முடித்தேன் றனக்குப்போதம்
விண்டிசைத்த மெஞ்ஞான வாலை
யானந்தரடி மிலைச்சுவாமே. (12)

மாபுவழி வழியாக மான் காட்டி
மான்பிடிக்கும் வாறுமான
வரவு பிறை யுழை மழுவைக் கரந்து கழுக்
கையில் வந்தெ னல்லறீர்த்து
வரவுதநி யுலகிடை மானிடப் போர்வை
போர்த்தடியே னுய்யவாண்ட
பரவுதரு சோமநாதக் கடவுள்
பதமிசைய பதுமஞ் சேப்பாம். (13)

வேறு.

நெஞ்சினின் முறாரு நட்டு நெறிநிறு காப்பிட்டோ
கஞ்சினை படர்செலாதக் காளினிறு கடகாக்கித்
தஞ்சிலாத் தழல் செட்டாறுக் காத்தின்முக் தாங்கிச் சாத்தி
கஞ்சினிறுதுணைத்திருடா நாடகாக் கழுமை செய்வாம். (14)

---

புராண வரலாறு.

ஆதிநாயகன்றுதியிடை பிறந்தனைவதனைப்
போதிநாயகன்புகன்றனன் சதுர்மறைப்பொருளா
மிதிநாகமமெழுந்தன புராணமீரொன்பா
னோதிநிற்றிது பதிக் கொன்றெனும் பொன்பான். (15)

பின்னதாலதுமாலயர்க் கொண்டயற்கொல்லிவாய
றென்றுநீக்கெனவெட்டிலை யிறைக்கெனவுரைத்த
முன்றொகைக்குளே மொழிந்ததி காந்தமென்றிகழு
மொன்றுறுத்தில சங்கிதைகந்தரிதை யென்றுரைத்தார். (16)

உச்சியிற்பொருடிரு விளையாடலையுணர்ந்தே
வைச்சியற்றிய வடமொழியுத்தியை மாற்றிக்
கச்சியப்பவான்றமிழ்மழை பொழிந்தனகளித்து
மெச்சியிப்புவியுயிர்ப் பயிர்தளிர்த்திடவியப்பால். (17)

ஆயவப்பெருங்கதையிலெம் மன்னையாய்வள்ளி
தாயகற்பெருங்கதையையுஞ் சொல்வஃதுணர்ந்தே
நேயமுற்றவர்மற்றவர்சிற்சில பாகறைத்தார்
காயவிப்பெயரோதவ ருளத்தினியைந்தே. (18)

முந்த வுத்தர மொழிப்பயோ ததிகரு முநியோர்
பிந்தைத்தன காவெனும் பிறங்கலாற் கடைந்தே
செந்தமிழ்ச்சுவை தருபவ ரிருவர்க டிருத்தா
டந்திடத்தலை வைத்திடப் பெற்றிடுந் தரத்தால். (19)

## பாயிரம்.

சேயமணி வெயில் பகலென் றெண்ணி வேடர்
　　திரியவள்ளி மலைவளங்கள் சிறந்தவாறுந்
தூயமறை முழுதளித்த தொன்மையோனுஞ்
　　சொற்கலைக டருபனிக்குச் சொரூபமாறு
மேயபதந் தனிதுறைநாள் வாணிநீத்து
　　வெகுளியினா லயன் சாபம் விதித்தவாறு
மாயபொழு தவனிப்பக் கருணைகூர்ந்து
　　அவனவரு மவனிபவ தரித்தவாறும். (20)

தெய்வவள்ளி மலையிலவா வாறும் வள்ளி
　　திரு வவதாரஞ் செய்த சிறப்பாந்த
மைவரையன் கண்டெடுத்து வளர்த்தவாறும்
　　மயிலூர்தி கந்தமலை யுற்றவாறும்
மெய்வருநாரதன் வள்ளி கவின் சொல்வாறும்
　　விளம்பிடவேள் கைக்கிளையான் மெலிந்தவாறும்
நைவருதண் ணிடையிருந்த புனத்தேகந்த
　　னல்வளை வாணிகனாய்ப்போய் நவின்றவாறும் (21)

அவ்வாறு நினைத்தபடி முடியாதாக
　　வயில்வேட னடல்வேட னானவாறும்,



மெய்வார் கண்ணியை யிணைக்க விணங்கிலாதான்
　　மறந்துமறை விருத்தனென வந்தவாறுஞ்,
செவ்வாய்மைக் குழறிருந்தா திருந்தாளாகச்
　　செவ்வேள்கை வேழத்தாற் றிருத்துவாறு
மொவ்வாத குயிலை யணைந்து வந்தவாறு
　　முறுதோழி வேளிடத் தொப்பித்தவாறும் (22)

வேடர் கண்டு மறித்தமர்செய் திறந்துமுந்தை
　　வினைவலராய்ச் சாபந் தீர்ந்தவாறுங்
கூடமுயர் வள்ளிமலை தன்னில் வேடர்
　　குலமயிலைக் குமரன் மணஞ் செய்தவாறு
மாடல்புரி வேலனுமவ் வணங்குந் தோகை
　　யதின்மேற்கொண் டவனியெலாம் பவனிவந்தே
சேடமர் கந்தக்கிரிபோ யுறைந்தவாறுந்
　　தெரிந்தமட்டில் வெறும்பேதை செப்பினேனால். (23)

---

## அவை யடக்கம்.

காரேறு குமாரனைக் கந்தன் வந்து
　　மணம்புரிந்த காதை பேதை
காரேறுபுன் மொழியதனு னடாத்துகின்றே
　　னென்றனக்கே நகைப்புண்டாமாற்
றூரேறு மவர்க்கென் னுமானுஞ்
　　சொற்றனன் மாதவத்துள்ளோரும்
வாரேறுந் தொழுமுருகன் கழல் வழுத்த
　　வென நினைத்த மனத்த வாவால் (24)

பாரினிலே பாவினிடை தெரிந்து நெய்யைப்
　　பாங்குபெறக் கொள்வோரும் பரிவினீந்த
மோரினையுந் தள்ளாதே கொள்வாருள்ள
　　முறையன்றோ விலக்கணநூன் முடிய வோர்ந்து
சீரினையுப்படியுரைத்த முதிய நூலைச்
　　சிந்தை செய்த புலவோர்கள் சிறியேன் சொன்ன
நேரிலபுன் மொழியினையு மதுபோற் கொண்டு
　　நேசிப்பார் செந்தமிழாய் வாசிப்பாரே. (25)

வேறு.

நரையிலென் புன்சொலுந் தமிழ்ச் செய் பாமல
ருரைசெய்வர் பொருளென வுளமு வக்கவா
யறையுரை தெரிப்பது மன்றி யன்னோரார்
கரையில வுவகையங் கடலுந் தோய்வரால். (26)

சொலுமிலக் கணக்கடல்கடந்த சொற்கவிப்
புலவர்முன் னெளியனேன் புகறல் வான்வழி
கலுழனுஞ் சிறைபடிந் தேகக் கண்டுமண்
டலமிசை மசகமுந் தாவல் போலுமால். (27)

அறுசுவை யமிழ்தினி லடேமம் மாதர் முன்
சிறுமிய ரயிறினுற் செயச் சினைப்பரோ
வுறுகு மென்புன் சொல் கண்டுணர்ந்த மேலவர்
முறுவல்செய் குவரலான் முனியற் பாலரோ. (28)

## 1 வள்ளிமலைப் படலம்.

காரணி பணிபதாய்க் கஞ்சனுவனந்
தோரணி புருவுகொண் டெழுந்து வான்வழி
சீரணி மணிநிறை சேயிற் படிந்த
தாரணி மணிக்கள னுகவல்லி போல். (1)

உருக்கொடு மீண்டன வுப்பாரதாய்த்
திருப்பதி சேர்க்கெழுஞ் செல்வி யுற்பவா
பொருப்பதி லேந்தன பொருந்து சேல்வயாய்
விருப்பொடு பொழிந்தன வெள்ளி யிடேன. (2)

களங்கெழு காரிடை பதிந்து காரினி
விளங்கிடப் பனிசென மின்னிப் பெய்மழை
வளங்கெழு சகத்திர வதன வாவைய
ரிளங்கொடி பலமுகத் திழிதில் போலுமால். (3)

வேறு.

கான வேடுவ ருறவென வருகந் போகவ
கூனவேடுவர் சிலையென வானின்ற குழைநந்துந்
தானவேடுவர் தாரத்திரி சாமனைச் சொரிந்த
வேனல்வேடுவ ரிருக்கையுங் குறிஞ்சிமற் றெறங்கும். (4)



வேறு.

சிலைமுகத் தெழுவெழு தெய்வ வள்ளிமா
மலைமுகட் டினிலெழு மருவி வாரதாப்
பலமுகத் திழிவரு பானமை பார்மகண்
முலைமுகட் டணிபல முத்த மாலைபோல். (5)

ஏர்பெற விசும்பள வென்ன நின்றிடுங்
கார்வரை மீதுவீ ழருவி காசினி
சீர்பெற வளர்ந்த நாட்டிதான் றிரு
மார்பினி லுத்தரீகத்தை மானுமே. (6)

குலவரை யெனப்பெயர் கொண்ட வெண்வரைத்
தலைவரைக்குவடு தாழருவி தன்னகட்
டிலகெலா மீன்றருண் மாபதிச் சடை
மிலைநதி புவியிடை வீழ்வ போலுமால். (7)

தடவரை வார்தரு மருவி தாழ்சினை
வடமரு தொடுகடு மாமுஞ் சாடியே
யடவியி னிடைபறந் தாறதாறதாய்க்
கடன்மடி சிழிபட வகிர்ந்து காணுமால். (8)

வேறு.

பொதிமதியான்வார் சடையினி னதிபோற்
பொருப்பிழி சலமக னிலமா
மதினிமெய் தழுவி மகிழ்ந்து தீன் மண்ட
மருகராஞ் சராசராக் கூட்டி
விதிதடங் குளமாங் கலத்துமிட் டேய்ந்து
பெய்ச் சகோதரன் றுயிலிடமென்
றதிர்கட லுறுகி யங்கவர்க் காண்பா
னுசையா லேகின னன்றே. (9)

வேறு.

உருமுவோ டெதிரேற்றன வார்திரைப் புய்பர்
வரிகிலோ டெதிரேற்றன வீழ்புனல் வாள்விற்
புரியினோ டெதிரேற்றன விலையெறி பொன்முத்
தரியினோ டெதிரேற்றன வாற்றினி லுணிவே. (10)

கோவுமார மந்தாரமுஞ் சந்தனமு குருந்து
மேவுமாரமும் புழுக்கையுந் திரைக்கையால் வீசி
நீவுமாறு மரியுங்கந் துரியினிசியும்
பூவு மாறும் வாரிவந்தன புது நீத்தம். (11)

பல்வகை முத்தலர் பலமும் வாரியே
செல்வரு நதிகளுங் கடலைச் சேருதல்
கல்வரைப் பிறந்தகத் திருந்து காதலர்
நல்வள விருக்கெழு நாரி போன்றவே. (12)

ஓங்கலின் வளங்கவர்ந் தூர்ந்து சேருமா
றுங்கலைத் தொடு பொன்முத் தள்ளி வீசுதல்
போங்கவர்க ளன்றனைப் போனைப் புரக்குவான்
றுங்கலைபய லெறிந்தோடுந் தன்மைபோல் (13)

அரவமு மாரமு மணித்திருப்பதாற்
சிரமலை வல்லியுஞ் சேருஞ் செவ்வியாற்
பாவைபா லேகலாற் படிவம் வெள்ளையால்
வருநதி சிவபெரு மானை மானுமே. (14)

மின்மணி பன்மணி மேலணிந்ததாற்
பொன்னொடு பூவையும் புணர்ந்து போதலாற்
றொன்னெடுங் கடலிடைத் துஞ்சுகின்றதா
லின்னதி மாலவ னென்ன லாகுமால். (15)

இன்கரும் பிரிபெறுந் திரளவன் மீகவாய்
தன்கருங் கடலெனுந் தன்னிற் சிறிய
வெண்கரும் வாளைவைத் திரைக்கு மாறெனு
முண்கரும் பாம்பினையு மஞ்சு கின்றதே. (16)

வேறு.

வெண்ணிறமாய்க் கருநிறமு முவர்நித்திப்பாய்
    வியன்மணமாய்ப் புலவகன்று மேன்மையாகக்
கண்ணகன்மால் வரைநதிபாய்ந் தன்னீர்பள்ளக்
    கடலினைப் பரிசுசெய்த காட்சிமிக்க
மண்ணுலகிற் குலந்தாழுக் கல்விதாழு
    வருபுகழ்தாழ்ந் திடத்திருவில் வாழ்வோர்தம்பா
லண்ணிபவர்க் கலந்தவர் முன்னிகட்சிபோக்கி
    ஞாலமதின் மேன்மைசெய்த நல்லோர்போலும். (17)



வேறு.

சலமதிப்பிறை தரித்தலாற் பொற்சிலைதாங்கிக்
கலையும்வைத்தலா லெண்கையு முடையதாற்கனல்கட்
புலமுதித்தலால் வானிலத்தடங்கலாப் பொலிவா
னலமிகுத்திடு மிம்மலை செம்மலை நிகரும். (18)

வண்டுவாள் சிலைதிகிரியுந் தரித்திடும் வளத்தாற்
றண்டமுந்தனி கொண்டதால் காப்பல் செய்தகையா
லண்டமுமுற நிவந்ததாற் கார்வடிவதனுன்
மண்டலம் புகழ்கிரி சக்கிரமாலும். (19)

நான்முகங்களுந் தெரிதர நிற்றலானன்னி
வாணுயர்ந்தெழு மோதிம மானதாற் கலைமான்
றுணமர்ந்ததா லென்றுமே மறைதருந்தகையா
லூனமென்ற விப்பதுமபதம் விதியனை யொக்கும். (20)

மீதுறச்சசி மருவலால ரம்பைகண் மிகவெப்
போதுகட்புறச் சூழ்தலால் விசும்பதுபுகலான்
மாதருக்களும் பொலிவதான் மகிழ்பல்செய்திடலா
லோதுமிக்கிரு சதக்கிரு தென்பதே யொக்கும். (21)

வேறு.

சோதியின் விருக்கமுஞ் சோதியால் ரச
வாதிசெய் விருக்கமும் வாதிலோதும் பல்
சாதியின் விருக்கமுஞ் சாதிதன்னொடு
பாதிரிவிருக்கமும் பாதியாகுமால். (22)

சூரகனங்கடங் குழலினை வயிற்றிடைக் கொண்டு
வாங்கிலாடுவதன்றி வேழம்பர் போலவரி
ஆரங்கொள் பல்கனியூன்றி யாடியசெய லொப்ப
மாங்கனேறிக் கரணமிட வுவப்பனமந்தி. (23)

சிறுகன்றுகளுங் குராச்சேகரச் செறிவுந்
தறுகண்வேங்கையுந் தன்னினங்கண்டுடன் சார்ந்தன்
புறுகண்வந்து கண்டோடியே தன்னினத்தோடு
மறுகண்சென்றிடு மானொடு கலைகளுமற்றும். (24)

குன்றமியானையின் கொப்பமுங் கொப்பத்திற்படிந்துச்
சென்றுலைவசஞ் செப்பவரிருக்கையுந் திசைசெய்

இன்றவேனலும் வள்ளியின் கொடிபடர்ந்தேறி
நின்றவிசலைக் கொம்பெனவரம்பையிற்பனவும். (25

வருக்கையின் கனியுடைந்திட மாங்கனிவீழ்ந்து
பெருக்குதீம்புனற் பாய்ந்திடச் சாய்ந்திடப்பிதிர்ந்து
வுருக்காம்பையின் பழக்குலையூறலு மொன்றாய்
நெருக்கமாந்தினைப் புனத்திடைபாய்ந்தெழு நீத்தம். (26

சிறுசிலைப்பலரு வட்டிற்பலசந்து செவ்வார
நறவொழுக்கிடத் தடஞ்சினை சிறுவளிகண்ணுந்
தொறுமசைத்திட முறைமுறை முழம்பிழிதேற்ற
வறுமுகற்கமைவிழவிறுக்க மைக்கசோலம் போல். (27)

புனத்தினிற் சிறுசிலையிடைக் கொம்புதேன் பொழியுஞ்
சினைப்பொற்றுள குமலருகுங் கனியுருஞ் செறியும்
வனத்திலாரம் வெகுதெழுபுகை வலம்வருங்குமரன்
றனக்கியற்றி யத்தனிக்கனி பூசையிற்சால. (28)

வேறு.

அறத்தினைவளர்தலா லிப்பேற்றோன் றலா
அறப்பறுபதத்திடை புதித்தமான்மையாற்
கறைக்களத்திறைபவர் கலந்து சேதலான்
மறத்தவருறை புனஞ்சிவையை மானுமே. (29)

வேறு.

மடியின் மிக்குறமால் படித்துறங்கலால் வனப்பான்
மிடியகற்றலான் முண்டகமுறைவதால் வியப்பாற்
படிவளைத்திடுக் கிரியிற்றோன்றிய பரிவான்
கெடியவிப்புன மொப்பெனத் திருவையேநிகழ்த்தும். (30)

கலைதெரித்தலால் வடமதுதரித்திடு கையிற்
றிலகம்வைத்தலா லப்பயன்மேவி மேதினமு
யிலகுமேனலங் கெழுமதாற் றுமனையிருப்பான்
மலிசெய்மாவன காவலாடன்னையே மானும். (31)

இணக்கதிர்க்கனல் லோனையிற் சொனர்வர்மாச்செய்வர்
தனக்கலக்குவர் மதுக்கொடுபுக்குவர் தத்தம்
புனக்கடைக் குணாற்குகற்க முகைப்பார்கை புடைப்பார்
மனக்கனுப்புவர் கிளைப்பலர்க் கருத்துவர் மறவர். (32)



அம்புளை செலவப்புளொட்டியுங் கையிலேவா
ரப்புளை செலவப்புளொட்டியுங் கயலடிவார்
வம்புளை செலவப்புளொட்டியுங் குயமடவார்
வம்புளை செலவப்புளொட்டி யமதன்மானவார். (33)

வேறு.

முகில்படி சந்தமு முறிந்தப்பாறையே
தகிலொடு சோத்துலை யளைமாற்றிடை
வகிர்குழற் குறச்சிறு மகளிராடுவார்
துகிரலர்க்காம்பெனக் கோத்தலஞ் சூடுவார். (34)

கொடிச்சியர் கால்வரா லென்னக்கோளிடை
யடித்தன வாண்வரால் சேரச்சூழ்வர
யடித்துடையல்குல் கண்டரவமேமாழிது
கடித்திடு மென்றுளங் கலங்கியோடுமால். (35)

அளிப்படுதண்டலை நெருங்குமாற்றிடை
குளித்திடு குறத்தியர் கொங்கைமூங்குதல்
வெளிப்படு மரியினை யரிய வீரைய
வொளித்திடு பொருப்பினிறு வகையாகுமால். (36)

வண்டினுஞ் சோலையுண் மதுவுண்டெடவெறி
கொண்டிதுஞ் சுனர் பூங்குருப்பை யாமெனக்
கண்டுகவாவரு களிமுழும் பத
நண்டுமற்றிது வெனாவெஞ்சி யோடுமால். (37)

வேறு.

கந்தமேசடுபுகைத் திரளிநமெனக் கறக்குஞ்
சிந்துவோய் மணிக்கதிரெழுங் கவ்விருட்டிப்பத
மிந்துவார்நுதற் கொடிச்சியர் குழலினமெனதிக்கு
மந்தமாதர்கள் கைநிலாவிதித்ததை யகற்றும். (38)

வள்ளுண்டாடயிற் கண்ணியர் மதுவுண்டுவண்டு
கள்ளுண்டாடிய நீள்குழற் சூழ்தரக்கனமோ
தெள்ளுண்டா விலையாவெனு மிடையிறுமென்னத்
துள்ளுண்டாடுவர் சோருதப்படுந் தெனச்சாடுவார். (39)

மீனுண்கண்ணியர் மருநறுநகினைவொடிஞ் சிகைமேற்
தேனுண்கண்ணியர் செல்வழியால்லவா சிதறக்

காணுங்கண்ணியலாரமுங் கருமணி கடுப்பத்
தாணுங்கண்ணிய வெறியினிற்றிரிகுவர் தடத்தே. (40)

இன்னபல்வள்க்குறிஞ்சி நன்னிலத்திறை யெங்கோன்
றன்னன்மெய்த்திருநாமமே துதித்திடுந்தகையா
ரன்னவேரி லனைவரிற்றலைமை பெற்றுங்கோர்
மன்னனென்னவக் குறிஞ்சியிலிருந்ததோர் மறவன். (41)

மற்றும் பற்பலவேடருமவ னுழைவந்து
சொற்றவாய்மையே நடத்துவர் வன்பணிசுமந்து
குற்றமில் புனத்தினை முதலுரைத்தபைங் கூழோ
டுற்றதொல்வரையைவகை நிதிகளுமுடையான். (42)

காவகத்தினி லரிதுயர்கடிந் திடக்கருதி
மாவகத்தினைக் கீண்டவன் மலரடிவழுத்திக்
கோவகத்தினி லுறைந்துள குறவர்கள்கோமான்
சேவகத்திலும் வலியவன் வலியவர் சிறுரும். (43)

சத்தபுத்திரருண்டவர்க் கென்னினுந் தனக்கோர்
புத்திரிக்கவா வுடையளாங் காதலிபொருட்டாற்
பித்தரைத் தொழுதேத்தியு மிமையமாபெற்ற
வித்தகர்த் தொழுதேத்தினு நோற்றனர் விரதம். (44)

நோன்பியற்றியு மாதுலர்க் கருத்தி நுண்ணிடைய
மான்பிணித்தகண் மனையொடுமிருந்தனன் மன்னன்
தேன்பிலிற்றிய செங்கடம் பணிகழற்றேவர்
கோன்பிடித்தகைவேற் பெருமானையுட் கொண்டு. (45)

வேறு.

பூவலிபோலவள்கண் பொருந்து மேல்வையோர்
காவதிலேகவுங் கையில் கிள்ளைவந்
தாவலினோ டெடுத்தருத்தி வைகவோர்
சேவலினோடது சென்று வாழவும். (46)

கண்டனள்கனவிது கணவற்கிதென
விண்டனளென்கொலோ வினைவதென்றுளங்
கொண்டனர்வேடர்க்குங் கூறுகின்றனர்
வண்டனகண்ணியு மறவன்றானுமே. (47)



இன்னவாறி வரினிதியைந்த பற்பல
பன்னியிங்கிருந்தன பகர்ந்துளோமினி
முன்னமேவாணியை முனிந்து நான்முகன்
சொன்னதோர்சாபமும் விளைவுஞ் சொல்லுவாம். (48)

வள்ளிமலைப்படலம் முற்றிற்று.

## 2 சாபப் படலம்.

அரியுமந்தரமும் பிணித்தரி கடைந்தமுதை
யரியுமந்தரருங்கொள வளித்த தோரணங்கா
மரியுமந்தாணியை யருளயனுமவாத்திற்கீ
ழரியுமந்தரமனமு மாயறிகிலானருள் சேய். (1)

அலங்கலு மசைவில்லது மல்லதுவணையும்
விலங்கலுமிவையில்லது வெவ்வெளியீரு
யிலங்கலெனனுமைம் பூதமுமில்லது தெளிவுங்
கலங்கலுமிலகாலமுங் கணக்கையுங்கடந்த. (2)

இருளுமல்லது வொளிவெளியல்லது இயம்பிற்
றெருளுமல்லது தேம்பலுமல்லது சிதையா
வருளுமல்லது வருளிலதல்லது வறையும்
பொருளுமல்லது பொருளிலதல்லது போதம். (3)

சுடருமல்லது சுடரெழுபகலிர விரண்டுங்
கடருமின்ன வாய்க்கூழறவுங் கருதவுமமையாப்
படருமல்லது படர்ந்திலதல்லது பகரி
லிடருமல்லதின் பமுமல்ல தென்னென்பாம். (4)

அருவுமல்லது ஆணொடுபெண்ணு மற்றலியா
முருவுமல்லது மறமறமல்லதுணர்வு
மருவுமூடமு மல்லது வறுமையுமலது
திருவுமல்லது குற்றமுங் குணங்களுந்தீர்ந்த. (5)

ஈறுமாதியுமிடையினு மிலதிருக்காதி
கூறுமாரணமாக மத்தில்லது குறித்த
வாறுநூலினுமாறிரு சமையத்து மடங்கா
வேறியாதெனப்பொய்மையின் மெய்மையாம்வினவில். (6)

இன்னதாகிய பரம்பொருளென்பதோர் பொருடான்
றன்னிலேதமியிருந்தது நினைந்ததுதன்னி
லன்னுபோதமொன்று தித்திடவுதித்த நிர்மலமொன்
றன்னதற்குணிராகர நிட்களமஃதில். (7)

ஆயநிற்குணமவையினில கண்டமுமதனின்
மேயசுற்பராபரமதிற் பரையொன்று விளங்கித்
தூயதற்பரமதிற் சிவந்தனிற்சத்தி தோன்றி
யேயசத்தியினாதமாய் விந்துவுமதனில். (8)

விந்துவிற் சதாசிவன்மகேசுரனரன்விண்டு
வந்தணனவரவர்க்கொருசத்தியாயயனில்
வந்தநற்பெரும் பூதங்களைந்தென வளைந்த
முந்தமுற்பொருளிப் படியாம் வரன்முறையே. (9)

தேடுகின்ற மாமறைகளா யாகமத்திரளாய்ப்
பாடுகின்ற தொன்னூல்களாய்ப் பன்னியமனுவேழ்
கோடியென்பவாய் மேதையாகியகலை குவிந்து
நீடுகின்றதோர் பசுபதிபாசமாய் நிறைந்த. (10)

படைப்புமத்துணைப் படைப்பையுமளித்தலும் பரித்துத்
துடைப்புமாயையின் சூட்சியுமத்திரோபவத்தை
யுடைத்து நற்கதியுதவு மித்தொழிலைந்து முளவாய்
நடத்துகிற்பனவாயின யாவையுநவையில். (11)

ஆயதின்னண மடங்குவதென்பதுமஃதே
சேயசெம்பொனோர் குவையினிற் பலபணிதிருத்தி
மேயவப்பணியுருக முற்குவையென விளங்கிப்
போயவாறதாமொருபரம் பொருள்வினைப்புணர்ப்பில். (12)

பங்கயத்தயன் பனுவலின் மடந்தையைநாவிற்
றங்கவைத்த வனண்டகோடிகளையுஞ் சமைக்கு
மங்கதைக்கணன்பரித்திடு முருத்திரனளிக்கு
மிங்கிதிப்படியடிக்கடி தொழிலிவர்க்கிதுவே. (13)

அந்தணாளனும் வாணிகேளண்டங் களனைத்தும்
பந்தமாய வெண்பத்துநாலிலக்க வத்திரபே
தந்தராதரமாயுருப் பேதமாய்ச் சமைத்த
தெந்தனுளிது காண்டியாலென மகிழ்ந்திசைத்தான். (14)



பூவின்மே லயன்றனைப் புகழ்ந்தித்திறம்புகல
நாவின்மேலவள் சத்தபேதங்களை நான்செய்
தேவிமானிலத்திருளிலு முணர்ந்திட விளைத்தே
னீவிரேயுமைப் பெருமித்த தென்னெனநிகழ்த்த. (15)

இன்னகாலையிலணங்கு நீயெமையிகழ்ந்தெ திர்த்துச்
சொன்னதாலிது பொறுக்கலம் வெறுத்தனந்தோகாய்
பன்னகாதிபன் பரிபுவிதனிலெழு தோற்றந்
தன்னினு மொரோர்பவஞ் செய்துவருகெனச்சபித்தான். (16)

தீயினுங்கொடிதின்ன சொற்றனன் செவித் துளையிற்
காயும்வெஞ்சலாகையைச் செலவிடுப்பது கடுப்பத்
தூய்பங்கயச் செல்வியுங்கேட்டுளஞ் சோர்ந்து
நாயகன்றனைத் தொழுதெழுந்திரந் தனணவில்வாள். (17)

அன்னையேயுலகுக்கென தாருயிர்க்குயிரே
யின்னவாய்க்கொடுஞ் சாபவாரியிலெனையிட்டா
லென்னவாய்க் கடந்தேறு வனிருங்கடல் கொதித்தாற்
றன்னைமாற்றிடவுண்டுங் கொலோ மறுதண்ணீர். (18)

தன்னைநம்பினோர் தன்னுயிர்த்துணைவியர் தனையர்
பின்னறிந்திலாப் பேதையர்தூதர் விப்பரர்கள்
பன்னுதந்தை தாய்குரவர் நோயரிவர்பயின்ற
வென்னகுற்றமும் பொறுப்பதேயறத்தினுக்கியல்பே. (19)

ஆதலாலெலாமளிகிலை போலறிவித்தேன்
பேதையென்பிழை பொறுத்தருள் புரியெனப்பிரமன்
மாதுநின்பிழை பொறுத்தனம் வருபவமொன்றி
லோதுமுற்பவம் பெறுதியாலதன் வகையுரைப்போம். (20

கடைக்குலத் தினிற்றோன் றுதிமுந்து காசினியின்
மடக்கொடியினை மறைக்குலமாகுதி மணந்து
தொடக்குறவெமைத் தொடர்குதி விலங்கெனத்தோன்றி
நடக்குதியணைந்துன் பவந்துடைக்குது நாமே. (21)

என்றுகூறினனேட விழ்பங்கயனிருள் போற்
றுன்று கார்குழலங்கவன் சொற்றலைக்கொண்டா
ளன்று தானிருவோர்களுந் தங்களிலகன்று
சென்றுபூவினுற் பவஞ்செயச் சிந்தனைசெய்தார். (22)

கோபம்வந்தது மயற்குவெண்டாமரைக் கொடிக்குச்
சாபம்வந்தது மறைந்தன மதுகொடுதாங்க
ணீபம்வந்ததார வற்றருமவராருணெறியாற்
பாபம்வந்தபார்வந்ததும் விளைந்ததும் பகர்வாம். (23)

சாபப்படலம் முற்றிற்று

## 3 உற்பவப் படலம்.

மாலானமோகினியைச் சேர்ந்துமுந்து
　　மதகரிப் பாகனையருளும் வள்ளலாமல்
வேலாவலையத்த முதாராததாலவ் விண்ணவர்
　　போர்க்குடைந்த சுரர்வெந்து சுங்கன்
பாலாகவிஞ்சை கற்றமகளைக் காசிபன்
　　பால்விட்டயன்னையப் பகாசூராதி
யாலாலமெனவுதிப்ப வருளிச்செய்த
　　வைமுகன்சே யறுமுகனுக்கன்பு செய்வாம். (1)

வேறு

நற்றாதலத்தனிலியற் சோழ நாடதனுண்
முற்றவோதியுமகம் பலவியற்று மோர்முனிவ
னுற்றமாமனையொடுமக வின்மையா லொழிவார்
குற்றமியாவையு மெடுத்தெடுத்தின்னன கூறும். (2)

நீலவார்சுருளோதி கேளிந்த நீணிலத்துப்
பாலரில்லவர்க்கில்லையேற் பரிசத்தின் பயனுஞ்
சீலநல்லுருவப் பயனெங்ஙனஞ் செவிக்குஞ்
சாலநன்கில மழலையின்றீஞ்சொல் சார்கிலதால். (3)

மோந்து தன்மகவெடுத்தணையாதவர் முகத்தி
லேய்ந்த கோணத்தின் கந்தமென்றிடுபொறியிலையான்
மாந்துசட்சுவையை வகையுண்டியு மகக்கை (4)
சேர்ந்துணச்சுவை யென்னினும் விடமென்பர் தெளிந்தோர்.

ஆயதாலிவர் தாபரம்பரவை போலதாலாற்
றாயதேகமுந்தளர் வுறுமுதுமையிற் சுதைதந்

இனாம்! இனாம்!! இனாம்!!!

# கதாரத்னாகரம்.

மனதை மகிழ்விக்கும்
ஓர்
மாதாந்தரப் பத்திரிகை.

இப்பத்திரிகையில் இனியகதைகளும் அறிவுக்குணவான அற்புத விஷயங்களும் வெளியாகும். இப்பத்திரிகைக்கு ஒரு வருஷ சந்தா தொகை ரூ. 1—8—0 செலுத்துவோருக்கு மிருக திருஷ்ணிகா அல்லது குணசுந்தரி இனாமாய்க்கொடுக்கப்படும். வெளிநாடுகளுக்கு சந்தா ரூபா 2-0-0

மிருகதிருஷ்ணிகா.
இந்த நாடகம் வெல்த்னைட் என்னும் ஆங்கிலநாடகத்திலிருந்து தமிழில் மொழி பெயர்க்கப்பட்டது. நல்ல கடுதாசியில் அச்சிடப்பட்டிருக்கிறது.

குணசுந்தரி
அல்லது இல்லற பொக்கிஷம்.
இப் புத்தகத்தில் இல்லறத்துக்கு வேண்டிய அரும்பெரும் பாக்கியங்கள் பொதிந்து கிடக்கின்றன.

"கதாரத்னாகரம் ஆபீஸ்"
162, 163, பவழக்காரத்தெரு, சென்னை.

THE REGISTRAR OF ... 6 - DEC 1915 MADRAS

# வசீகரி.

இனிய தமிழ் நாவல். இவ்வரிய நாவல் பிரக்யாதிபெற்ற ஆங்கிலேய வித்வசிரோமணிகளி லொருவராகிய மிஸ்ஸெஸ் ஹென்றிவுட் என்னும் மாதினால் கதா ரூபமாய் வரையப்பட்டுள்ள புஸ்தகங்களுள் சிறந்ததாகிய ஈஸ்ட்லின் என்னும் நாவலை பொட்டி எழுதப்பட்டது. இஃது சிற்றின்ப விஷயங்களை மட்டும் வெகுவாய் விரித்துக் காட்டி ஆத்மாவுக்கு நிஷ்பிரயோஜனமாய்ப் போகும் சில நூற்களைப் போன்றதன்று. இது விசேஷமாய் பெண்கள் தம் கற்பழிதலாலடையும் கஷ்டங்களை யெடுத்துக் காட்டி யுள்ளது. சிற்றின்ப விஷயங்களில் உழன்று திரியும் ஆண் பெண் உருவமெடுத்த ஆன்மகோடி ஞானத்துக் [illegible] பொருந்திய நூலெனக் கொள்வதே முறை. இக்கதையின் சாராம்சம் கற் [illegible]ல் வரும் கஷ்டங்கள் மாத்திரமன்று; வீண்பெருமை, டம்பம், அன [illegible]ஞ்சிய செலவு, ஆவல், அடாதகாரியத்தில் தலையிடல் ஆகிய இவற்றால் [illegible]ம் கஷ்டங்களும் அடங்கி யிருக்கின்றன. இப்புத்தகம் கிரவுன் அளவில் 350 பக்கங்களுக்குமே லுள்ளது. விலை ரூ. 1 0 0

அமிர்தம் அன் கோ,
தபால் பெட்டி 222, மதராஸ்.

**SEND FOR THIS FREE BOOK.**

இனம்! இனை!! இனம்!!!

# ஆயுர்வேத மகத்துவம்.

இரண்டணா விலையுள்ள இப்புத்தகத்தை பொது நலங்கருதி இலவசமாய்க் கொடுக்கத் தீர்மானித்து விட்டோம். இதில் ஆயுர்வேத உற்பத்தி, சாராம்சம், மாறுதலடைந்த காரணம், ஜனசமூகத்துக் குண்டாகும் அனுகுணம் முதலியவைகளை ஒருங்கே திரட்டி உயர்ந்த கிளேஸ் கடிதத்தில் அச்சிட்டிருக்கிறோம். அரையணா ஸ்டாம்பு அனுப்புவோருக்கு மறுதபாலில் அனுப்பப்படும்.

| AMIRTAM & Co,<br>Post Box 222,<br>MADRAS. | அமிர்தம் அண் கோ,<br>தபால் பெட்டி 222,<br>மதராஸ். |
|---|---|

திருநெல்வேலி ஜில்லாவுக்கு சோல் ஏஜண்டு:—

**K. அரியநாயக முதலியார்.**

ஆழ்வார்குறிச்சி.


173

ஸ்ரீ

கடவுள் துணை.


# கதாரத்னாகரம்

" கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி "

| Vol 1.<br>தொகுதி—1 | SEPTEMBER, 1915.<br>1915௵ செப்டம்பர்௴. | No. 7.<br>பகுதி—7. |
|---|---|---|


## விசேஷ வர்த்தமானங்கள்.

**ஒரு பெரிய இடத்து விவாகம்.**—ஸர் C. சங்கரன் நாயரின் மூன்றாவது குமாரத்தியான சௌபாக்கியவதி பாலத் மாதவிக்குட்டி அம்மாவை பாரிஸ்டரான மிஸ்டர் A. C. கண்டெத்துக்கு விவாகஞ்செய்து கொடுப்பதாக நிச்சயஞ் செய்யப்பட்டிருக்கிறது. இந்த விவாகம் மலையாளத்தில் இந்த மாதம் 30-ந் தேதி நடக்குமென்று சொல்லப்படுகிறது.

---

**நிஜாம் அரசரின் தர்மங்கள்.**—நிஜாம் அரசர் ஸிம்லாவிலிருந்து தம் சமஸ்தானத்திற்குத் திரும்பி வருவதற்கு முந்தி, தர்மகாரியத்தில் செலவு செய்யும்படியாக ராஜப்பிரதிநிதியின் வசம் 10000 ரூபாயையும் ஒரு நாடகத்தை நடித்துக்காட்டின சிறுவர்களுக்கு இனாமாகக் கொடுக்கும்படிக்காக 500 ரூபாயையும் கொடுத்து விட்டு வந்தார்.

---

**யுத்த பண்டுக்கு நன்கொடை.**—திருவாரூர் சப் மாஜிஸ்ட்ரேட் மிஸ்டர் V. S. சுப்பிரமணிய பிள்ளை, தஞ்சாவூர் கலெக்டர் மிஸ்டர் R. B. உட் இவர்களிருவரின் முயற்சியின் பேரில் பார்வதி பாலமோஹன சங்கீத நடன சபையார், நாகப்பட்டணத்தில் மூன்று ஆட்டங்களை ஆடி, அதில் வருவான 1500 ரூபாயை யுத்த பண்டுக்குச்சேர்ப்பிக்கும்படியாக நாகப்பட்டண தாலூக்கா கஜானாவில் செலுத்தி யிருக்கிறார்கள்.

---

**குண்டூர் டவுன் ஹைஸ்கூலுக்கு பத்தாயிரம் ரூபாய் நன்கொடை.**—குண்டூரில் வசிக்கும் வைசிய சாவுக்காரான மிஸ்டர் T. சாம்பய்யா, தாம் கொடுக்கப் போகும் 10,000-ரூபாய்க்கு ஒரு பூமியை வாங்க வேண்டுமென்றும் அதிலிருந்து வரும், வரும்படியை குண்டூர் டவுன் ஹைஸ்கூலை நடத்தி வருவதில் உபயோகித்து வரவேண்டுமென்றும் அதற்குண்டான பத்திரங்களை எழுதி வைத்திருக்கிறார்.

---

**மோட்டார் பைசைக்கில்களும் கவர்ன்மெண்ட் உத்தியோகஸ்தர்களும்:**—மாதம் 800 ரூபாய்க்கு அதிகப்படாத சம்பளம் பெறும் கவர்ன்மெண்ட் உத்தியோகஸ்தர்கள், மோட்டார் பைசைக்கிள்களை வாங்கப் பிரியப்பட்டால், அவர்களுக்கு 1000 ரூபாய் வரையிலும் முன் பணம் கொடுக்கலாமென்று இந்தியா செக்ரிடெரி இந்தியா கவர்ன்மெண்டுக்கும் மாகாண கவர்ன்மெண்டுகளுக்கும் தெரிவித்திருக்கிறார். ச. ஸ்ரீ.

**ஒற்றுமை:**—ஒவ்வொரு காரியத்துக்கும் ஒற்றுமை வேண்டிய தவசியமேயாகும் ஆனால் ஒற்றுமை வேண்டுமென்று ஜாதி மதம் இவைகளை நீக்கி எல்லோரும் ஒன்றாய்ச் சேர்ந்து புசிப்பது தகுமோ! எந்தெந்த விஷயங்களில் ஒற்றுமை வேண்டுமோ அதை மறந்து, உண்பதிலும் உடுப்பதிலும் ஒற்றுமையா யிருப்பதில் என்ன பலன் உண்டாகுமோ தெரியவில்லை. நண்பர்களே! எத்தொழிலையாவது செய்ய ஒற்றுமையா யிருங்கள்.

---

**இங்கி (மை)**—அயல்நாட்டிலிருந்து வரும் அநேக பொருள்களுக்கு நமது தாய்நாடாகிய இந்தியாவே காரணமாயிருக்கிறது. இரண்டணாவில் செய்து கொள்ளக் கூடிய பொருள் யுத்தத்துக்கு முன் ரூபா $1\frac{1}{2}$ யாகவும் இப்பொழுது ரூபா $2\frac{1}{4}$ ஆகவும் விற்கப்பட்டு வருகிறது. எழுதுகிற 'மை' (Ink) செய்வதற்கு எவ்வித யந்திரமும் வேண்டியதில்லை. இதையேன் எவரும் விர்த்தி செய்ய முன்வரவில்லை? (கால விசேஷம்.)

---

**பொது நலங் கருதும் வைத்தியர்கள் கவனிக்கவேண்டியவைகள் —** அழைப்போருக்குத் தயாராயிருத்தல். குறித்தநேரந் தவறினால் மன்னிப்புக் கேட்கவேண்டும். எப்பொழுதும் நம்பிக்கை யுள்ளவராகவும்; சந்தோஷமாகவும், மனஉறுதி தேக வன்மை யுள்ளவரா யிருக்கவேண்டும். குழந்தைகளிடம் மிகுந்த அன்போடிருக்கவேண்டும். விளையாட்டு காட்டி சந்தோஷத்தை யுண்டுபண்ணவேண்டும். பக்ஷமுடன் எப்பொழுதும் இனிமையாய்ப் பேசவேண்டும். வியாதிகளைப் பற்றி விபரமாகச் சொல்லவேண்டும். வியாதிக்காரரிடம் பேசும்பொழுதும், ஔஷதங் கொடுக்கும்போதும் அவசரப்படக்கூடாது. நோயாளிகளை அன்போடு நடத்தவேண்டும். அவர்கள் சொல்வதை கவனித்து முகத்தைப் பார்த்துக் கேட்கவேண்டும்.

**சந்தா நேயர்களுக்கு.**—நமது கதாரத்னாகரம் பத்திரிகையை மாதந்தோறும் ஒழுங்காய் அனுப்பி வருகிறோம் சென்ற ஆகஸ்டு மாதத்தில் பத்திரிகை முதலிலிருந்து வரவில்லையென்று சிலரும், 2, 3-ம். 3, 4-ம் வரவில்லையென்றும் எழுதியவர்களுக்கு மறுமுறை ஆகஸ்டு மாதப் பத்திரிகையோடு அனுப்பி யிருந்தும் வரவில்லையென்று எழுதுகிறார்கள். அந்தந்த மாதம் 15 அல்லது 16-ந் தேதியில் பத்திரிகையை அனுப்பி வருகிறோம். அம்பாசமுத்திரம் ஸ்ரீமான் மனகாவலப் பெருமாள் மேஸ்திரியாருக்கு பத்திரிகையை ஒவ்வொரு தடவையும் அனுப்பியும் ஒன்றும் வரவில்லையென்று கடிதம் வரப்பெற்றோம். ஆகையால், மறுமுறையும் நாலுபத்திரிகைகளை அனுப்பியும் வரவில்லையென்று எழுதியிருக்கிறார். இதற்காக தபாலாபீஸ் அதிகாரிகளுக்கு எழுதினால் நலம். தொடர்ந்த கதை வருகிறதென்றும், புத்தகமாக்கிக்கொள்ளலாமென்றும், எவராவது அபகரித்திருக்கலாமென்று நினைக்கிறோம்.

---

**சம்புக்குக்களை வெட்டினாற்போலுமிருக்க வேண்டும்—தம்பிக்குப் பெண் கொடாதாற்போலுமிருக்க வேண்டும்:**—என்பது போல, அறிவுக்கு அறிவாகவும் விநோதத்திற்கு விநோதமாகவும் இருக்கும்படியாக, சென்னைக் கடற்கரையோரமாய் மீன் காட்சிச்சாலையொன்று அமைக்கப்பட்டு கடவுளின் சிருஷ்டித்திறத்தினைக் காண்பிக்கும் ஒரு அற்புதமாக அது ஒளிர்கின்றது. அங்கு அராபிக்கதையில் கண்டதுபோல பலவித வர்ணங்களுள்ள மீன்கள் துள்ளிவிளையாடிக் கொண்டிருக்கின்றன. சென்ற 1913—14-ம் வருஷத்தில் அதைப் பார்க்க வந்தவர்களின் தொகை 110191-ஆகும். இவ்வாறு காணவருவோர்கள் செலுத்தும் பிரவேசக் கட்டணத் தொகைகளின் மூலமாக



சென்ற வருஷத்தில் 4118-ரூபாய் வசூலாயிருக்கிறது இவைப் பார்க்கச் செல்வோருக்கு 4-அணா வீதம் ஏற்பட்டிருந்த சார்ஜை 1914-ம் வருஷம் ஆகஸ்டு மாதத்திலிருந்து அரையணாவாகக் குறைத்து விட்டிருப்பது சிலாகிக்கத்தக்கது, எம்டன் கப்பல் செய்த ஆரவாரத்தினால் பார்க்கவந்தவர்களின் தொகை சற்று குறைந்ததாகவும் சொல்லப்படுகிறது. இக்காட்சிச்சாலையை நேரிற் கண்டவர்கட்கே அதன் சிலாக்கியம் தெரியவரும்.

---

**வர்த்தகம்.**—ஜாதித் தொழில் மாறுதலடைந்த இக்காலத்தில் எவரும் வியாபாரம் செய்யலாம் பணம் இருந்தால் 'அதைச் செய்வேன் இதைச் செய்வேன்' என்று சொல்வாருமுண்டு. அப்பேர்ப் பட்டவர்களுக்கு படிப்படியாய் உத்தியோகத்தாலோ அல்லது வேறு நல்ல மார்க்கத்தாலோ பணம் சேர்ந்து விட்டால் முன் சொன்னதை மறந்து விடுவார்கள். வர்த்தகம் செய்யவிரும்புவோர் எல்லாம் வியாபார ஸ்தலங்களிலிருந்து பழகவேண்டும். வர்த்தகத்தைத் தெரிந்துகொள்வதற்கு பள்ளிக்கூடம் கிடையாது. வர்த்தகத்தில் பின் வாங்கிய நாடு நமது இந்தியா ஒன்றுதான். வர்த்தகம் ஒன்றிலேயே தான் நம்மையாளும் ஆங்கிலேயர் பிரசித்தி பெற்றவர்களாயிருக்கிறார்கள். உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்கும் இந்த ஒரு உதாரணம் போதுமானதன்றோ! அநேக செல்வவான்கள் கல்வியைக் கற்றும் வீட்டை விட்டகலா திருக்கின்றனர். இவர்கள் ஏன் ஏதாவதொரு தொழிலை யாரம்பிக்கக் கூடாது? செல்வவான் என்பதை கொஞ்சகாலம் மறந்து, எந்தத்தொழி[illegible] செய்ய விருப்பமுண்டா[illegible]தா, அத்தொழிலை கீழ்ப்படியி[illegible]ந்து நன்றாய்க் கற்றுக்கொள்ள வேண்டும். அதற்குத்தான் 'அனுபவம்' என்ற வார்த்தை ஒத்திருக்கும்.

---

**நகை யணிதலைப்பற்றி 'ஸர் ஜேம்ஸ் மேஸ்டன்.**—குழந்தைகளுக்கு நகை யணிவிக்கும் பேதமையால் அக்குழந்தைகள் பாதகர்களால் பலவாற்றானும் துன்புறுத்தப்பட்டும் கொல்லப்பட்டும் இன்னலுறுவதை நேயர்களறிவர். ஐக்கிய மாகாண லெப்டினெண்ட் கவர்னர் ஸர் ஜேம்ஸ் மெஸ்டன் தம் மாகாணத்திய இந்தியப் பிரமுகர்கட்கு ஒரு வேண்டுகோள் பிரசுரித்திருக்கின்றார். அதில் குழந்தைக்கு நகைகளால் அபாயங்கள் நேர்வது பெற்றோர்களின் அற்ப ஆசையால் நேரிடுகின்றன வென்றும், குழந்தைகளுக்கு நகை போடுவது சாஸ்திரமுமல்ல, நல்லொழுக்கமுமல்லவென்றும் குறிப்பிட் டிருக்கிறார். கவர்னரவர்களே இதில் தலை நுழைத்துக்கொண் டிருக்கிறபடியால் அவருடைய வேண்டுகோள் பயன்பட்டு நலமுண்டாக வேண்டுமென்றுகோருகிறோம். அநேக வருஷங்கட்கு முன் 'நகைப் பைத்தியம்' என்ற விஸ்தாரமான நூல் ஒன்று தமிழில் வெளியாயிற்று. நகைத் தீமைகளை மிக்க அற்புதமாகப் பேசப்பட்டிருந்தது. அந்நூலின் இறுதியில் காங்கிரஸுக்கு வரும் கனவான்களும் சீமாட்டிகளும் நகை யணிதலின்றி விஜயம் புரிந்து மற்றவர்கட்குப் புத்தி புகட்ட வேண்டுமென்று குறிப்பிட்டிருந்தார். இது நல்ல உபதேசமாகும். ஆனால் இதைக் கவனிப்போரைத் தான் காணோம். அபாயம் என்பது மற்றவர்கட்கே யன்றி தங்கட்கல்லவென்று ஜனங்கள் நம்புகின்றார்கள். இந்த நம்புதலும் ஓர் விநோதந்தான்.

---

**நீமைக்கதை:**—நியூயார்க்என்னும் பட்டணத்தில் ஒரு பிரபு ஓரிரவு மோட்டார் வண்டியில் விளக் கில்லாமல் போய்க்கொண் டிருந்தார். இந்தவண்டிக்குள்ள 666 என்னும் நம்பரைப் போலீஸ்காரன் குறித்துக்கொண்டான். இதைக்கண்ட அப் பிரபு தலைகீழாக அந்த நம்பரை மாற்றி

வைத்துக் கொண்டார். மோட்டார் வண்டிகளுக்குள்ள நம்பர் சாதாரணமாய் ஒரு தகட்டில் எழுதப்பட்டு வண்டியில் கட்டப்பட்டிருக்கும். இப்படி திருப்பியது 999 (மூன்று ஒன்பதாக) மாறியது. சற்று நேரத்திற் கெல்லாம். உண்மையாக 999 நம்பருள்ள மோட்டார் வண்டியில் அநேக திருடர்கள் பிரபுக்கள் போல் நடித்து சில வீடுகளில் கொள்ளையிட்டு மோட்டார் வண்டியில் போய்க்கொண்டிருந்தார்கள். இதை ஒரு போலீசார் கண்டு டெலிபோன் வழியாக 999 நம்பருள்ள மோட்டார்வண்டியைப் பிடித்து அதிலுள்ளவர்களை கைதி செய்யும்படி போலீஸார்களுக்கெல்லாம் தெரிவித்தார். 666 நம்பரை 999 ஆகத் திருப்பிய பிரபுவும் நாடகம் பார்த்துவிட்டு சுமார் ஒரு மணிக்கு வரும்போது ஒரு போலீஸ்காரன் குடும்ப சகிதமாயிருந்த அப்பிரபுவைத் தடுத்துப் போலீஸ் கச்சேரிக்குக் கொண்டுபோனான். இரவெல்லாம் அங்கேயே தங்கும்படி நேர்ந்ததுபற்றி வருத்தப்பட்டார்கள். பிறகு ஒருமணி நேரத்திற்கெல்லாம் மற்றொரு திசையிலிருந்து உண்மையாகவே 999 நெம்பர் வண்டியையும், திருடர்களையும் சிலபோலீசார்பிடித்து வந்தார்கள். மறுநாட் காலை போலீஸ் உத்தியோகஸ்தர் விசாரித்தார். நம்பரை மாற்றிய பிரபு உண்மையைச் சொன்னார். இதைக் கேட்ட போலீஸார்கள் ஆச்சரியமடைந்து விடுதலை செய்தார்கள்.

---

வந்தனம் செய்யும் விதம்.—ஸர் லாரன்ஸ் ஜென்கின்ஸ் கல்கட்டாவிலிருந்து பம்பாய்க்கு வந்தபோது கல்கட்டா ஸ்டேஷனில் இந்திய வக்கீல்களும் பாரிஸ்டர்களும் சேர்ந்து வழியனுப்பினார்கள். அப்போது ரயில்வே ஸ்டேஷனில் ஒரு விசேஷம் நடந்தது. சேர்ந்து வழியனுப்பின இந்தியர்களில் ஸர் ஸதயேந்திர பிரஸாத் ஸின்ஹா ஒருவராயிருந்தார். ஸர் லாரன்ஸ் ஜென்கின்ஸுக்கு அவர் ஆங்கிலேய வழக்கப்படி கை குலுக்கி வந்தனம் செய்யாமல் இந்தியரின் பூர்வீக வழக்கப்படி "நமஸ்தே" என்று சொல்லி எங்கள் பூர்வீக வழக்கப்படி உங்களுக்கு வந்தனம் செய்கிறேன் என்றும் சொன்னார். இந்தியருக்குள் வழக்கம் என்னவெனில் அவர்கள் யாரை பூஜ்ஜியரென்று மதிக்கிறார்களோ, அவரைப் பார்த்ததும் கைகூப்பி வணங்கி உபசரிப்பார்கள். இவ்விதம் ஸர் S P ஸின்ஹாவும் மற்ற வக்கீல்களும் பாரிஸ்டர்களும் அன்புடன் உபசரித்த ஸர் லாரன்ஸ் ஜென்கின்ஸை வழியனுப்பினார். ஸர் S. P. ஸின்ஹா இங்கிலாந்தில் வெகுகாலம் வசித்த பாரிஸ்டராகி, தாமே ஐரோப்பியர்மாதிரி ஜீவிப்பது மல்லாமல் ஐரோப்பியரோடு நெருங்கி சாவகாசம் செய்து ராஜப்பிரதிநிதி நிர்வாக சபையில் மெம்பராகி, மஹோன்னதமான ஆங்கிலேய உத்தியோகஸ்தருடன் சரிசமானஸ்தராயிருந்தவர். அப்படி இருந்தவருக்கு இந்துக்களின் பூர்வீக ஆசாரப்படி வந்தனம் செய்வதே பூஜ்ஜியருக்கு உரிய வந்தன வழிபாடென்று தோன்றிற்று. தற்காலம் ஆங்கிலங் கற்ற இந்தியரும் மற்ற இந்தியருங்கூட இந்துக்களின் ஆசாரத்தை விட்டுவிட்டு "குட்மார்னிங்" "குட்ஈவினிங்" என்று சொல்லும் வழக்கத்தைக் கொண்டிருக்கிறார்கள். இந்த அன்னிய வழக்கத்தால் நமக்குள்ள அபிமானம் எவ்வளவு தூரம் செல்லுகிறதென்றால் பேசத்தெரியாத குழந்தைகளுக்குக்கூட "குட்மார்னிங்" என்று சொல்லென்று பெற்றோர்கள் நயபயம் சொல்லி கற்றுக்கொடுக்கிறார்கள். வாழ்க்கையில் எல்லா அம்சங்களிலும் இந்தியர் ஆங்கிலேயருக்கு அடிமைகளாகி விட்டார்கள். நல்ல வழக்கங்களையும் நாம் கைவிட்டு அன்னியருடைய வழக்கங்களை நாம் அனுஷ்டிக்கிறோம். இந்தியருக்குத் தங்கள் வாழ்க்கையில் எப்போது சுவாதீனம் உண்டாகுமோ! சு. மி.



---

பால் வியாபாரம்:—இக்காலத்தில் நாகரீகமென்று அநேக தொழில்களை கல்வியிற் சிறந்தவர்களே நடத்துகிறார்கள். இப்படியிருக்கும்பொழுது பட்டணங்களில் நல்ல பால் கிடைக்கிறதில்லையென்பது பிரசித்தம். பசுக்களை இப்பொழுது வைத்திருப்போர் ரக்ஷிப்பதைக் கேட்டால் வருத்தத்தையுண்டு பண்ணும். இச்சென்னையில் யாதவரல்லாத மற்றோரும் பசுக்களை வைத்துக்கொண்டு ஜீவனம் செய்கிறார்கள். ஆனால் ஜீவனத்துக்குக் காரணமாயுள்ள பசுக்களைக் கவனிக்கிறதில்லை வீதிகளில் கொண்டு வரும் சில பசுக்களைப் பார்த்தால் அதிக மெலிவாயிருக்கும். கன்றுக்குப் பால்கொடாமல் தாய்க்குக் கன்றைக்காட்டிப்பாலைக் கறந்துவிடுகிறார்கள். இப்படிக் கன்றுகளுக்குப் பால் கொடாதிருந்தால் பசுக்கள் எங்ஙனம் விருத்தியாகும். சில பசுக்கள் கன்றின்றி பால் கொடுப்பதில்லை. இதற்காக கன்றுகளை அடித்தும் இழுத்தும், கையில் தூக்கிக் கொண்டும் போகிறார்கள். இவ்வளவு கொடுமைசெய்து பாலைக் கறந்தாலும், பாலாயினும் நல்லதாயிருக்குமோவெனில் அதுவுமில்லை. எப்படி நல்ல பாலாயிருக்கும். அதற்கு என்ன ஆகாரம் கொடுக்கிறார்கள்? சுத்த ஜலமும் வைக்கோலுந்தான். சிசுக்களாவது பசித்தால் பால் வேண்டி யழும். வாயில்லாத சாந்தமிருகம் எப்படிக் கேட்கும்? ஒருக்கால் அந்த வைக்கோலையாவது போதுமானபடி போடுவார்களோ அறியோம். சிலர் பசுக்களை எச்சில் இலைகளைப் புசிக்கும்படி இரவில் வீதிகள்தோறும் கொண்டு போகின்றனர். இவ்வித ஆகாரத்தை உணவாகக்கொண்ட பசுக்கள் எப்பேர்ப்பட்ட பாலைக் கொடுக்கும்! பாலும் ஜலம்போலிருந்தாலும் சுவையென்பதேயில்லை. பசுக்கள் இருக்குமிடங்கள் சுத்தமாயிருக்கிறதாவென்று முனிஸிபாலிட்டியார் கவனித்து வருகிறார்கள். சென்னபட்டணத்தில் எவ்வளவு பால் கிடைத்த போதிலும் செலவாகும். இதற்கு முதலாவது காப்பி கிளப்பு போதுமானது.

பசுக்களை தெய்வமாகப் பாவிக்கிறோமல்லவா? எவ்வளவு சாந்தமுள்ளபிராணி. இவைகளையேன் சீர்படுத்தி நடத்த எவரும் முன்வரவில்லை? பசுக்களை நன்றாய் போஷித்து விருத்திசெய்யலாம். நடத்துவோருக்கும் நல்ல லாபமுண்டு. மேலும் பசுக்களுக்கு நல்லபுல், புண்ணாக்கு, பருத்திக் கொட்டை முதலியவைகளைக் கொடுத்தால் நல்ல சுவையுள்ள பாலைக் கொடுக்கும்.

இனம்! இனம்!

தேகாரோக்கியத்தைப்பற்றிக் கவலையுள்ள ஒவ்வொருவரும் தபாற் செலவுக்காக அரையணா ஸ்டாம்பு அனுப்பினால் நாலணா விலையுள்ள **இன்பரகஸ்யம்** என்னும் சிறந்த புத்தகம் இனமாய் அனுப்பப்படும். இப் புத்தகத்தில் இல்லற வாழ்வில் கவனிக்கவேண்டிய அற்புதமான விஷயங்கள் வெளியிடப்பட்டிருக்கின்றன.

அமிர்தம் அண்டுகோ,

தபால்பெட்டி 222, மதராஸ்.

# எமது அபிப்பிராயம்.

பிரசித்தி பெற்றுவரும் சுகானந்த மாத்திரைகள் மிகவும் பரிசுத்தமான கைகண்ட ஔஷதம். தேகத்துக்குக் கெடுதி செய்யக்கூடிய எவ்வித லோகமாவது சரக்காவது சேர்க்கப் படவில்லை. மாத்திரைகளை உபயோகித்தால் நற்குணத்தைத் தவிர வேறெதுவும் பின் தொடர்வதற் கில்லை. இக போகங்களை அளிக்கவல்ல இவ் விந்தியா தேசத்து மூலிகைகளைக் கொண்டு, இந்தியர்களால் கைபடாமல் இயந்திரங்களில், பார்வைக்கு இங்கிதமாயும் தயார் செய்யப் பட்டிருக்கிறது. எவரும் கஷ்டமின்றி லகுவில் உபயோகிக்கத் தக்கது. இம் மருந்தை வாலிபர் முதற் கொண்டு வயோதிகர் வரை உபயோகித்து பயனை யடையலாம். தேகத்தை திடகாத்திர மாக்கத்தக்க நல்ல மருந்து. தேகம் கட்டு விட்டு தளர்ந்துபோன ஸ்திரீ புருஷர்களும் உபயோகித்து உண்மையை யறிந்து இம்மருந்துக்கு வேறொன்றும் நிகரில்லையெனஜெயப்பிரதாபத்தையடைந் திருக்கிறது.

உபயோகித்தவர்,

## ஒரு கடிதம்.

(2—5—1915.)

தாங்கள் எழுதி யிருந்தது போல் தினந்தோறும் சுகானந்த மாத்திரைகளை உபயோகித்து வருகிறேன். என் தேகம் முன்னிலும் வன்மையுடைய தாகவே யிருக்கிறது. பலஹீனத்தை நீக்கி சுறுசுறுப்பைக் கொடுத் திருக்கிறது. இந்த ஒரு மருந்தில்தான் உபயோகித்த வுடன் குணத்தைக் கண்டேன். நல்ல சுகத்தை அடைவதற்கு தங்கள் சுகானந்த மாத்திரைகளே சிலாக்கியம் தயவு செய்து இன்னும் ஒரு புட்டி மாத்திரை வி. பி. யில் அனுப்பக் கோருகிறேன்.

தங்களன்புள்ள
K வேதமூர்த்திமுதலியார்.
சோழவந்தான்.

50-மாத்திரை கொண்ட புட்டி 1-க்கு விலை ரூபா 1 0 0

திருநெல்வேலி ஜில்லாவுக்கு ஏஜண்டு:—
K. அரியநாயக முதலியார்.
ஆழ்வார்திருநகரி.



சி.—இல்லை தம்பி, வியாபாரங்கள் மிக ஒழுங்காய்ச் செய்யலாம் கலியுகமானதால் பாவஹிருதயமுள்ளவர்கள் வியாபார முறையில் ஒழுங்கீனம் பண்ணுகிறார்கள். அதிலும் இந்தச் செட்டியார் பெரிய மோசக்காரன் இவன் விருத்தாந்தத்தை அறியலாம் கொஞ்சம் நில் (என்று பக்கத்துக் கடையிற் சென்று) அய்யா அடுத்த கடைச் செட்டியாரைத் தாங்கள் நன்கு அறிவீர்களோ என்றான்.

ப.—குழந்தாய் அந்தப் பாதகன் வார்த்தையைக் காதினாலுங்கேட்கப் படாது. வாயினாலும் பேசப்படாது அவ்வளவு கொடியன் பொருள்மட்டும் ஏராளமாய்ச்சேர்த்து வைத்துவிட்டான். அது எப்படிப் போமோ ஒன்றுக்கு 3-பேர் மனைவிகளிருக்கிறார்கள் குழந்தை யில்லை கொள்ளியற்றவன் இவன் தகப்பனுக்கு இவன் ஒரே புத்திரன் அவனும் இப்படித்தான். இனி இந்த சொத்து எவ்வாறு போகுமோ. இவன் செத்தானோ வந்திட்டது பொருளுக்கு அழிவும் குலநாசமும்.

சி.—சரிதான் அய்யா வருகிறேன் என்னமோ பாவம் போகிறான். தம்பி பார்த்தாயா செட்டியார் வாழ்க்கை. இவன் பழிபாவங்களுக்கஞ்சிப் பொருளைத்தேடி பங்கிட்டுண் டிருப்பானானால் இவனுக்கு கால்வழியானது குறையாமல் நீடித்திருக்கும் அப்படியல்லாமல் பழிபாவங்களுக் கஞ்சாமல் வஞ்சித்துப் பொருளைச் சம்பாதித்தவனானதால் இவனோடு இவனுடைய குலம் நசிக்கப்போகிறது இதுபற்றி யன்றோ நாயனாரும்.

பழியஞ்சிப்பாத் தூணுடைத்தாயின்—வாழ்க்கை
வழியெஞ்ச லெஞ்ஞான்று மில்.

என்றுங்கூறியுளார்.

வி.—அண்ணா இவர்களிடம் விலையைக் குறைத்துக் கேட்பவர்க்குத் தானே இவர் கூட்டிச் சொல்லவேணும் நம்பினவர்கட்கு கூடச் சொல்லி மோசம் பண்ணலாமோ.

சி.—அவர்கட்கு அது அனுபவத்திற்கு வந்துவிட்டது. மேலும் அவர்கள் சீக்கிரத்தில் அதிக லாபத்தை அடைந்துவிடக் கருதுகிறார்கள். அதுபோல் அவர்களுக்குக் கை கூடிவிடுகிறது. கைகூடினும் பிரயோசன மில்லை; ஏனென்றால் அந்தப்பொருள் சீக்கிரம் கெடும். இதுபற்றி,

"களவினா லாகிய வாக்க மளவிறந்
தாவதுபோலக் கெடும்."

என்று நாயனாரும் கூறியிருக்கிறார். ஆகையினால் எவரும் பழி பாவங்களுக் கஞ்சிப் பொருளை யீட்டல் வேண்டும்.

வி.—அண்ணா இவர்களெல்லாம் தெரிந்துதானே பொய் பேசுகின்றனர்.

சி.—ஆம்.

"தன்னெஞ் சறிவது பொய்யற்க—பொய்த்தபின்
தன் னெஞ்சே தன்னைச் சுடும்"

என்பதை ஆராய்ந்து பாராமல் கெட்டழிகின்றனர்.

வி.—அண்ணா நேற்றிருந்தான் இன்றில்லை யென்று சொல்லும்படியான இவ்வுலக வாழ்க்கையில் மனிதர்கட் கேன் இவ்வளவு அவா தோற்றுகிறது, அதனால் சஞ்சலமன்றோ.

சி.—ஆம் ஆம் அப்பேர்ப்பட்ட உலகந்தான். நாயனாரும்,

"நெருநலுளனொருவ னின்றில்லை யென்னும்
பெருமை யுடைத் திவ் வுலகு"

என்றுதான் சொல்லி யிருக்கிறார். சொல்லியிருந்தும் அறிவிழந்தவர் ஒரு கணமேனும் தம்முடம்போடு உயிர் இயைந்திருத்தலை அறியார். அப்படி யிருந்தும் அவர்களுடைய நினைவோ கணக்கில்லை. இதுபற்றியே நமது பாட்டி ஔவையும்,

"உண்பது நாழி யுடுப்பது நான்கு முழம்
எண்பது கோடி நினைந் தெண்ணுவன—கண்புதைந்த
மாந்தர்குடி வாழ்க்கை மண்ணின் கலம்போலச்,
சாந்துணையுஞ் சஞ்சலமே தான்" என்றும்,

"ஒருபொழுதும் வாழ்வ தறியார் கருதுப
கோடியு மல்ல பல"

என்று நாயனாரும் கூறியிருக்கின்றனர்.

இவைகளை யெல்லாம் எவனொருவன் கவனித்துணர்ந் தொழுகின்றானோ அவன்தான் மனிதரிற் சிறந்தோன். தம்பி முதலில் நாம் பார்த்தோமே அவன் தன்மையைப்பார். ஒருவன்தான் வாங்கிய விலைக்கும் சாஸ்தியாய் விலை கொடுத்ததைக் கேட்டவுடன் எவ்வளவு சந்தோஷங் கொண்டான் பார்த்தாயா.



வி.—ஆம் ஆம் நான் நல்லவிலை கொடுத்து வாங்கினேம். இவன் ஏமாந்து சாஸ்திவிலை கொடுத்து விட்டான் என்ற எண்ணத்தால் மகிழ்ச்சி யடைந்தான்.

சி.—அப்புறம் அவனுடைய மகிழ்ச்சியென்ன வாயிற்று தன் விலைக்குங் குறைய வாங்கினவனைக் கண்டவுடன்.—

வி.—அந்தச் சமையத்தில் அணிலேற விட்ட நாய்போல் ஆகாயத்தை நோக்கிக் கொண்டு ஏமாந்து போனேமே யென்றேக்கமிட்டான்.

சி.—இம்மாதிரி தான் உலகில் எப்பொருளைக் கொண்டவர்களும் தான் கொண்டவிலைக்கும் சாஸ்திவிலைக்கு கொண்டவரையோ அல்லது சாஸ்திவிலை பெறுமென மதித்தவரையோ பார்த்துச் சந்தோஷமும் தான் வாங்கிய விலைக்கு குறைந்து வாங்கினவரையோ அல்லது குறைவாகவிலை மதிப்பவரையோ பார்த்து மன ஆயாசமும் படுவர். இவை உலகில் சஹஜமே. இது நிற்க, உலகில் இன்னபொருள் இன்னவிலை தானெனத்தீர்மானமுண்டோ அந்த நியமம் இல்லை. ஒருவன் ஓர் ரத்தினத்தை எவ்விதத்தாலோ விலையில்லாது பெறுகிறான். அவன் அதை 100-ரூபாய்க்கு விற்று விடுகிறான். வாங்கியவன் மற்றொருவனுக்கு 500-ரூபாய்க்கு விற்றுவிடுகிறான். அவன் பிறிதொருவனுக்கு 1000-ரூபாய்க்கு விற்கிறான், இப்படியே சாணி போட்டால் மண்ணெட்டு மென்ற கணக்காய் அது விலையேறி விலைப்படுகிறது. அதுவே வாங்கியவர்களுக்கு கஷ்டதிசை வரும் பக்ஷத்தில் படிப்படியாய் விலை குறைந்தும் வாங்குபவரில்லாமலும் போகக் கூடும். இதில் இன்ன விலைதான் என்று நியமம் இருக்கிறதோ இல்லை. ஆகையால் இவர்கள் கூட்டியாவது குறைத்தாவது விற்றதினால் குற்றமில்லை பின் எப்படி விற்பதினாற் குற்றமெனின் ஒரு பொருளை 10-ரூபாய் விலைக்கு வாங்கி அதை 20-ரூபாய்க்கு வாங்கினேன் அதின் பேரில் லாபம் சேர்த்துக்கொடுவென்று சொல்லிபொய்கலந்து விற்பனை செய்யக்கூடாது. அப்படிச் செய்து லாபத்தைப் பெறுவது விஷங்கலந்த அன்னத்தை யுண்டதொக்கும். ஆனதினால் இம்மாதிரி வஞ்சிப்பது கூடாது. உண்மை சொல்லி லாபம் கேட்டு வாங்கவேண்டும். இல்லை யெனில் இந்தப் பொருள் இன்ன விலைதான் என்று சரக்குகளின் உயர்வு தாழ்வு கண்டு

அந்தந்த தேசத்திலிருக்கிற விலையையும் அனுசரித்து இவ்வளவு காலம் வைத்திருந்தோம் இவ்வளவு லாபம் வைக்கலாம் என்பதையும் வரையறுத்து மனுநீதிப்படிக்கு விலை சொல்லி விற்கவேண்டும். இதில் குற்றமில்லை. இதில் வாங்குகிறவர்களுக்கு மட்டும் ஏற்றக்குறைவாய் வாங்கிய பிறரைப்பார்த்து மனத்துயரும் சந்தோஷமு முண்டாகலாம். அவர்களும் அப்படிக்கில்லாமல் கற்கொண்டார் மனங்கல் லென்பது போல் வாங்கின பின் வாங்கியதே சரி எனப் போதல்வேண்டும். அதை விட்டு விட்டு பிறர் நம்மைப் புகழ்தல் வேண்டும் அவர்களைப் பார்க்கினும் நாம் மேன்மை அடையவேண்டும். பிறர் நம்போன்றிருத்தல் கூடாது என்று எவனொருவன் நினைந்து ஜீவிக்கின்றானோ அவனவசியம் கெடுவன். எவர்கள் பிறரை நேசித்துத் தன்னைப்போ லெண்ணுகின்றனரோ அவர்களுக் கெல்லா நலமுமுண்டாகும். பொதுவாய் வியாபாரிகளில் மிகவும் பொய்யை உபயோகிப்பவர் ஜவுளிவியாபாரிகளே,! அவர்கள் சொல்கிற பொய்க்கு அளவே யில்லை யென்று அநேகரின் அணிபு, இதுபற்றியே, ஒரு பெரியார் பாடியிருக்கின்றனர்.

" பூசாரி பொய்யும் புலவோர்கள்தன் பொய்யும்
காசாசை வேசையர்கள் கற்ற பொய்யும்—கூசாமற்
றட்டா ருரைத்த பொய்யும் ஜவுளிக்கடைப் பொய்க்குக்
கிட்டாது கால்வரிசை காண் ." என்றனர்.

ஆகையால் ஜவுளிக்கடை பொய்க்கு மிகவும் நெருங்கிய பந்துவென்றே சொல்லலாம். ஜவுளி வியாபாரிகளைக் கேட்டாலும் இதில் பொய்யென்பதை உபயோகிக்காமல் தீராது வென்பார்கள். ஆகையால் பொய்க்கு இருப்பிடம் ஜவுளிக் கடையே.

முன்னொரு காலத்தில் கோபமே உருவெடுத்து வந்ததுபோன்ற விஸ்வாமித்திர மஹரிஷியால் கொடுந் துன்பமுற்ற அரிச்சந்திர மகாராஜனைப் படுத்தாத பாடெல்லாம் படுத்தியும் பொய் சொல்லாமையால் தன் கோரிக்கை ஈடேறாமல் வசிட்டரிடங் கூறியது வியர்த்தமானதை நினைந்து ஒரு சமயம் ஆஹா நாம் எல்லாவித உபாயஞ் செய்தும் ஒன்றை மறந்தோமே இவனை ஜவுளிக் கடையில் கொண்டுபோய் வைத்திருந்தால் எப்படியும் பொய் சொல்லி யிருப்பானே அதை மறந்துவிட்டோமே என்று நினைத்ததாக உலகோர் கூறுவர். அப்படிப்பட்டது இந்த ஜவுளி வியாபாரம். இப்படியே வியாபாரஸ்தர்கள் பொய்யை உபயோகித்துத் தான் வருகிறார்கள் இந்தப் பொய்யானது மனிதர்கட்கு மிகவுந் துன்பம் விளைக்கின்றது என்பது ஒருதலை. இந்தப் பொய்யை ஒருவன் எவ்விதத்திலும் உபயோகியா மலிருப்பின் அவன் வேறு புண்ணியம் ஒன்றும் செய்ய வேண்டுவதில்லை. இதுபற்றி நாயனாரும்,



"பொய்யாமை யன்ன புகழில்லை யெய்யாமை
யெல்லா வறமுந் தரும்"

அதாவது பொய் பேசாமையானது எளிதில் இம்மைக்குப் புகழையும் மறுமைக்கு அறத்தையும் தரும் என்றும்,

"பொய்யாமை பொய்யாமை யாற்றி னறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று"

அதாவது பொய் பேசாமல் ஒருவன் இருப்பானே யானல் அவன் வேறு அறங்களைச் செய்ய வேண்டியதில்லை யென்றுங் கூறியிருக்கின்றனர். ஆகையால் இவை நீக்கத் தகுந்தவையே. தம்பி இன்றுநாம் போவோம் இன்னொரு சமையங்களில் மற்ற விஷயங்களையும் இதுபோல் கவனித்துத் தெரிந்து கொள்ளலாம் வா. வென்று இருவரும் அரண்மனை சென்று அமுதருந்திப்பலதும் பேசிக் கொண்டிருந்து விட்டு அதிக நேரமாயினதால் நித்திரைக்குச் சென்றனர்.

## ஆறுவது அத்தியாயம்.

பூர்வ கர்மானுபவ பல போகத்தைப் புஜிக்கும் ஜீவகோடிகளின் இன்பதுன்பங்களை நாடாது என்றும் ஒரு தன்மையனவாக விரைந்து செல்லுங் கணங்கள் பல வோடிச் சில நாளாயின. பின் ஒரு நாள் அதிகாலையில் விவேகனும் சிகாமணியும் நித்திரை நீங்கி பத்தியிலோங்கி நித்தனை யெண்ணிப் பிரார்த்தனை பண்ணி திருநீறணிந்து இருவருந்துணிந்து எழுந்து உபாதி கழிந்து சுபாதி கருமங்கள் புரிந்து தருமங்கள் சொரிந்து களித்துப் பின் தாயை விழித்து அன்பாயே அன்னையே சிற்றுண்டி தன்னையே கொணர்ந்திடு முன்னையே என்று அழைக்க, தாய் குலந்தழைக்கச் சேய் நலம் வந்தனவென்றே சிந்தையிற் கொண்டே சட்டென வோடிப் பொன்

றட்டதை நாடி எடுத்ததிற் பக்ஷணம் கொடுத்திடத் தக்ஷணம் பாலர்கள் தின்று சிலர்கள் நன்று பசிதனையாற்றி சுசியுடன் போற்றி பரமசாந்தர்களாய் யிருவரும் அரண்மனையினின்றும் வெளிக்கிளம்பி வீதிவழிச் சென்று சிங்காரமான பூங்காவனத்தை நாடிப்போகும் மார்க்கத்தில் ஓர் தனவந்தர் வீட்டுத் தெருத்திண்ணையிற் பலர்கூடிக்கொண்டும் யாரையோ ஒருவரை எதிர்ப்பார்த்த வண்ணமாக யிருந்தனர். அதில் ஒருவர் சட்டென் றெழுந்து மேற்கு முகமாகத் திரும்பினர். அவருடைய பார்வையானது வெகு தூரத்திற் சென்றது போல் தோன்றிற்று. அவரை சிகாமணி பார்த்து என்ன பார்க்கிறீர்க ளென்று கேட்க பதிலில்லை. கண்ணிமை இரண்டையும் சற்று சுருக்கிக்கொண்டு இமையாது பார்த்துக்கொண்டு நின்றார். மறுபடியும் சிகாமணி அவரை நோக்கி ஐயா! இங்கு என்ன விசேஷம் என்று கேட்க அதற்கு அவர் திரும்பிச் சிகாமணியைப் பார்த்து விட்டு மறுபடியும் முன்போலவே பார்க்க வாரம்பித்து விட்டார். பதில் கிடையாது. இதைக் கேட்டுக்கொண் டிருந்த இன்னொருவர் இவர்களிருவரையும் பார்த்து இவர்கள் அரண்மனையிலுள்ள குழந்தைகளாக இருக்கலா மென்றெண்ணி அவர்களை அருகிலழைத்து அவரை என்ன கேட்கிறீர்கள் என்றார். அதற்கு சிகாமணி ஒன்றுமில்லை. இந்த மனிதர் ஏதோ வொன்றை வெகு ஆத்திரத்தோடு நோக்கி நின்றனரே யாது காரணம் பற்றி யென்றும் நீங்களெல்லோருங் கூட்டமாக கூடியிருக்கிறீர்களே என்ன விசேஷமென்றுங் கேட்டேன் என்றான். அதற்குப் பெரியவர் ஓகோ இதுவா இது இந்த ஊரில் இவர் பெரிய தனவந்தர்.

சி.—யார் தனவந்தர்.

பே.—இந்த வீட்டுக் குடையவர்.

சி.—அப்படியா சரி.

பே.—இவர்க்கு இந்தவூரிலுஞ் சரி இதைச் சுற்றியுள்ள கிராமங்களிலுஞ் சரி செல்வாக்கு அதிகம்.

சி.—இருக்கலாம் (தலையை யசைத்துக் கொண்டு) ஊம்.

பே.—இவர்க்கு இப்போது வயது 60 கிட்டத் தட்ட இருக்கலாம்.

சி.—நடு வயதுதான் ஊம்.

பே.—இவர்க்குத் தாயுந் தகப்பனும் இருக்கிறார்கள்.



சி.—இருக்கிறார்களா பாக்கியசாலிதான் ஊம்.

பே.—அவர்களில் தகப்பனார்க்குப் பார்வை கொஞ்சம்மட்டு

சி.—ஓஹோ அவருடைய அதிர்ஷ்டம். ஊம்

பே.—இவர்க்குத்தாரம் 3 அதில் இரண்டாவது தவறிவிட்டது,

சி.—சரிதான் அந்தம்மாளுக்கு அமைப்பு அவ்வளவே ஊம்

பே.—மூத்தாளுக்கு ஒரு பெண் இரண்டு ஆண் இரண்டில் ஒன்றுதானிருக்கிறது.

சி.—கொடுத்து வைத்தது தானே கிடைக்கும் ஊம்

பே.—இரண்டாவதுக்கு ஒரே மகன் பிறந்த அன்றே தாயைத் தின்றது.

சி.—ஆஹா நல்ல குழந்தை தான்.

பே.—மூன்றாவது மனைவி செப்புவிக்கிரக மாதிரி நல்ல அழகுடையவள்.

சி.—அழகுடையவ ளானதினாற்றான் மூன்றாவதும் வரித்தார்

பே.—ஆம் அவளைக் கண்ணுறுபவர் யாராயிருப்பினுங் காதலிக்காதிரார்

சி.—அது சரி. செப்புவிக்கிரக மென்றபோதே விளங்குகிறதே.

வி.—எப்படி யண்ணா விளங்குகிறது.

சி.—தம்பி விக்கிரகங்களை யார்பார்க்கினும் ஆசைப்படுவர் தானே மேலும் செம்புவிக்கிரக மென்கிறார். செம்பு ஏழை பிச்சை யெடுப்பவர் முதல் பெரிய குபேர சம்பத்தையுடையவர் வரை இச்சைப்படுகிற பதார்த்தம். மற்ற பொன் வெள்ளியோ பிரபுக்களினிச்சைக்குகந்தவை. இதைத் தெரிந்தே இந்தப் பெரியவரும் சொன்னார். அப்புறம் ஐயா நான் கேட்டதற்குப்பதில் இன்னுந் தெரிய வில்லையே.

பே.—அதைச் சொல்வதற்குத்தானே ஆரம்பித்தேன் இந்தக் கதையை.

சி.—வாஸ்தவந்தான் ரொம்ப நன்றா யிருக்கிறது. வெகுநீளம். ஊம்,

பே.—அவளுக்கும் பெண் குழந்தை யொன்று பிறந்து 5 வயதாயிற்று. இப்போது 10 மாதம் பூரண கர்ப்பவதி. அவளுக்கு ஆண் குழந்தை வேண்டுமென்று அதிக ஆசை. இவள் பத்தா

வுக்கும் இவள் கர்ப்பம் ஆண் குழந்தையாகவே பிறக்கவேண்டுமென்று தினம் விநாயகர் கோவிலுக்குப் போய் வந்தார். கடவுள் கிருபை எப்படியோ.

சி.—கடவுளும் கிருபைசெய்வார். அப்படியே பிறக்கும் தடையில்லை.

பே.—அதுதான் எல்லோருடைய கோரிக்கையும்.

சி.—அப்புறம்.

பே.—மூத்த தாரத்தின் மூத்த குமாரனுக்கு கல்யாணமாகி ஆண் குழந்தை யொன்று பிறந்து 2 வயதாகிறது.

சி.—மிகவுந் தழைத்த குடும்பம். அப்படியே விருத்தியாகவேண்டுமென்று ஈஸ்வரனைத் தியானித்தல் வேண்டும்.

பே.—மூத்தாள் பெண்ணை தன் தமக்கை மகனுக்கு கன்னிகாதானஞ் செய்தார். பெண் நல்ல புத்திசாலி. தன் மனதிற்குக் கொஞ்சமும் விரோதமாய் நடக்கமாட்டாள். புருஷனை சன்னியாசியாக்கியும் பார்த்துவிட்டாள்.

சி.—அப்படியா அந்தம்மாளிடம் கீழ்படிதலான குணங்கள் வேறுடன் கலையப்பட்டிருக்கும்போலிருக்கிறது.

பே.—குணங்களா மெதுவாய்ப் பேசுங்கள், ஒரு வேளை கேட்டுவிட்டால் நம்ம உயிருக்கே உலை வைப்பாள். அவள் தகப்பனார்பேரில்தான் கொஞ்சம் பக்ஷம். ஏனென்றால் அவர் அவள் பேச்சைக் கொஞ்சங்கூட மறுப்பதில்லை. அவர்க்கு அவள் கைக்குருவி மாதிரியாக இருக்கிறாள். அவளைக் கொண்டே மற்றவர்களை யடக்கி யாள்கிறார். அவளைப்பற்றி ரொம்ப சொல்வதென்ன துஷ் கிருத்தியங்களில் அவளுக்கிணை எந்த வுலகத்திலும் இல்லை யென்றே சொல்லலாம்.

சி.—போதும் போதும் அந்தம்மாளை நினைத்தற்கு நாம் அருகரில்லை. அதை விட்டுவிட்டு குறைக் கதையையும் சொல்லுங்கள்.

பே.—பார்த்தால் கதைதான் நீங்களும் நன்றாய்ச் சொன்னீர்கள். ஆச்சுதா, அவர் தங்கை ஒரு அம்மா அமங்கிலியாகி 2 குழந்தைகளோடு இங்கேதானிருக்கிறாள், சுருக்கி முடித்துவிடுகிறேன்.

சி.—ஆமாமா. சீக்கிரம் முடியுங்கள் நேரமாகிறது. தங்களுக்கும் வயது சென்ற காலத்தில் சிரமம். பாவம் தொண்டைகூட வரண்டதுபோல் தோன்றுகிறது.



பே.—இவர்க்கு இன்னும் அனேக வேலையாட்களும் குமஸ்தாக்களும் வெகு பேரிருக்கிறார்கள். வியாபாரங்களோ ரொம்ப நடக்கிறது. வரவாசியோ அளவில்லை. ஒரு தண்ணீர்ப் பந்தலில் மட்டும் குறைந்தது மாதம் 5000 ரூபாய்க்குக் குறைந்தபாடில்லை.

சி.—அதென்ன ஐயா புதுமாதிரியான வரவாசியாக இருக்கிறது. இன்னொரு தரம் நன்றாய்க் கூறுங்கள்.

பே.—இவை புதுமாதிரிதான். இதை இவருடைய யுக்தியினாலேயே கண்டுபிடித்தனர்.

சி.—எப்படி ஐயா கண்டு பிடித்தனர்.

பே.—இவர் அடிக்கடி பட்டண முதலிய விடங்களுக்குப் போவர். ஒருதபா பட்டணம் போயிருக்கும் போது ஒரு தெருவில் ஒரு வீட்டின் வாசலில் "தருமாம்பாள் அன்ன சத்திரம்" என்று எழுதி யிருப்பதைப்பார்த்து செலவில்லாமல் பசியாற்றிக்கொள்ளலாமென்று எண்ணி உள்ளே சென்றார். அங்குள்ளவர் மிகுந்த உபசாரத்தோடு அன்னமிட்டு இவரைத் திருப்திசெய்வித்தனர். பின்பு இவர் சந்தோஷமாய் வெளிக்கிளம்பி வாக்கண்டு அந்தச் சத்திரத்துக் குடையவர் வாசலில் நின்று, ஐயா இராப்போசனமும் இங்குதானே யென்றார். ஆஹா அப்படியே வருகிறேனென்று சொல்லி நடந்தார். வீட்டுக்காரன் அணா சேரவில்லையென்று சொல்ல, என்ன அணா வென்று இவர் கேட்க அவர் சாப்பிட்ட காசு என்றார். இவர் ஏற யிறங்கப் பார்த்துவிட்டு, போர்டு பலகையைக் காட்டி இது என்ன எழுதி யிருக்கிறது என்றார். "தருமாம்பாள் அன்ன சத்திரம்" என்றான். மறுபடி ஏன் காசுகேட்கிறாய் என்றார். வீட்டுக்காரன் சத்திரமென்றால் சாப்பாட்டுக் கிளப்புத்தான் காசு வாங்கிக்கொண்டுதான் சாப்பாடு போடுவது என்றான். இவர் சத்திரமென்று சாப்பிட வந்தேனே யல்லது கிளப்பு என்று தெரியாது. இப்போது கையில் காசுமில்லை என்றார். இருவருக்கும் சச்சரவுண்டாகி வெகு கூட்டமாயிற்று கடைசியாக வந்தவர்களில் ஒருவர் சமாதானம் பண்ணி தன் கையிலிருந்த ரூபாயில் 4 அணா கொடுத்தனராம். இவர் அதை மனதில் நன்றாய் ஆலோசனை செய்து ஒரு தீர்மானந் தோன்றி ஊருக்கு வந்து இதை அடுத்தாப்போல் 5 மைலுக்கப்பால் இவருடைய பங்களா வொன்று

இருக்கிறது. அதில் தண்ணீர்வசதி யதிகம். சுற்றிலுள்ள கிராமங்களில் குளம் கிணறு முதலியவைகளில் ஒரு காலத்தில் உப்புக் காய்ச்சுவதை கவர்ன்மெண்டார் தெரிந்து சோதிக்க வர, குடிகளெல்லாம் இருக்கிற உப்புகளை குளத்திலும் கிணற்றிலும் போட்டுவிட்டதால் அது முதல் உப்பு நீராகிவிட்டது. இவர் கிணறு வொன்றில்தான் நல்ல தண்ணீர் வேறு சமீபங்களில் கிடையாது. இங்கு வந்துதான் யாவருந் தண்ணீர் எடுத்துப் போய்க்கொண்டிருந்தார்கள். அதை இவர் பந்தோபஸ்து செய்து வேண்டிய ஏற்பாடுகள் செய்து முன்னால் தன் பேரால் "புண்ணியமூர்த்தி தண்ணீர்ப் பந்தல்" என்று போட்டு அன்று முதல் குடம் 1—க்கு காலணா வீதம் வசூல் செய்துவருகிறார். மாடு முதலிய மிருகங்களுக்கு ½ அணா. தாகமுள்ள வழிப் போக்கர்களுக்குக்கூட தம்படி விதித்து வாங்கிவருகிறார். இதில் ஏராளமாக ஆதாயங் கிடைக்கிறது இவர் இப்போது...நீங்களுங் காத்திருக்கிறீர்கள் ஒரே பேச்சில் முடித்துவிடுகிறேன். வியாதியினால் ரொம்பக் கஷ்டப்படுகிறார். வைத்தியரை அழைத்துவர வண்டி போயிருக்கிறது. அதைத்தான் அவாள் செட்டியார் மைத்துனர், மூத்தாளுடன் பிறந்தவர் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார். நாங்களெல்லோரும் அடுத்தவீடு அண்டை வீட்டுக்காரர் பார்க்க வந்தவர்கள். நீங்கள் யாரோ தெரிவிக்கலாமோ!

இதற்குள் உள்ளே கா, கூ வென்று கதறிக்கொண்டு பலர்களுடைய இரைச்சலுங் கேட்டன. வெளியிலிருந்த யாவரும் எழுந்து உள்ளே சென்றனர். சிகாமணியும் தம்பி உலக வேடிக்கையை நன்றாய்ப் பார் எப்படியிருக்கின்றன வென்று சொல்லிக்கொண்டே இவர்களும் உள்ளே சென்றனர். இதற்குள் வண்டிச் சத்தம் கேட்கவே சிலர் ஓடிப்போய் பார்த்துவந்து வைத்தியர் வந்துவிட்டார். ஒருவரும் சத்தமிடாதீர்கள் என்றார். ஒருவர் போய் வாசலண்டை நின்றுகொண்டு இரண்டுகைகையும் தலைமேற் கூப்பிக்கொண்டு ஐயா நமஸ்காரம் என்றார். வைத்தியர் தலையை அசைத்துக்கொண்டு எப்படியிருக்கிறது என்று கேட்டார்.

"என்னவொன்றும் சுமாராயில்லை. இனி உங்களால் தான் ஆகவேண்டும் நீங்கள் தயவு வைத்தால் பிழைத்திடுவார்.



"சரி அப்படியே செய்வோம் நீங்கள் கவலை யடையவேண்டாம்.

"அவ்வளவு தான் வேண்டியது. கடவுள் உங்களுக்கு கிருபை செய்வார்.

வை.—என்ன இப்படிக் கூடிக்கொண்டிருக்கின்றார்களே.

மற்றொருவர்—எல்லாம் விலகிக் கொஞ்சந்தூரம் போங்கள் காற்று வரட்டும்.

இன்னொருவர்.—இங்கு ஏன் கூடிக்கொண்டிருக்கிறீர்கள் எல்லாம் வெளியிற் போய் திண்ணையிலுட்காருங்களேன் ;கடவுள் கிருபையால் சுகமாய் விட்டால் அப்புறம் வந்து பாருங்களேன் ஆசைதீர.

"யாரையா அந்த நாற்காலியைக் கொஞ்சந் தூக்குங்கள். (எடுத்து ஒருவர் கொடுத்தார்) வாங்கி செட்டியார் பக்கத்தில் போடச் செய்து வைத்தியர் உட்கார்ந்தார்.

வைத்தியரைக் கண்டவுடனே கத்திக்கொண்டு அழுதவர்களெல்லாம் சத்தம் மற்றவர்கட்கு கேட்காதபடி கண்ணீர் வடித்துக் கொண்டு ஆளுக்கொரு பக்கமாய் நின்றவர்களும் உட்கார்ந்தவர்களுமாக இருந்தனர்.

வை.—(ஒரு நாளிகை வரையும் கையைப் பிடித்துக்கொண்டிருந்துவிட்டு) கையில் ஒன்றுமில்லை. காலையில் என்ன ஆகாரங்கொடுத்தீர்கள்.

"ஆகாரங் கொடுத்து மூன்று நாளாகிறது. பால்மட்டுங் கொஞ்சம் சாப்பிட்டார்.

வை.—அதுதான் ரெம்பக்களைப்பா யிருக்கிறது வேறொன்றுமில்லை.

தாயார்.—ஐயா நீங்கள் தெய்வம் போலிருந்து சொஸ்தம் பண்ணிவிட வேண்டும்

வை.—அந்த அம்மா யார்,

"செட்டியாருடைய தாயார்.

வை.—அப்படியா அம்மா உன்மகனுக்கு ஒன்றுமில்லை பயப்படாதே.

தா.—அவவளவு தான் வேணும் நீங்கள் நன்றாயிருப்பீர்கள்.

வை.—அந்தப்பெண் ஏனழுகிறது இவருடைய குழந்தையா.

"இல்லை. இவருடைய பத்தினி மூன்றாவது தாரம்,

வை.—அப்படியா நீ யேனம்மா அழவேணும் அழாதே அப்படி இப்போ தொன்றும் வந்துவிடவில்லை சும்மா யிரு.

இ-ம.—என்னுடைய தாயுந் தகப்பனும் என்னைக் கெடுத்து விட்டார்களே நான் இனி என்னசெய்வேன் ஐயையோ தெய்வமே.

“சீ சீ நீயொரு பெண்தானா அவர்களை மலைபோல் படுக்கையில் வைத்துக் கொண்டு கண்ணீரை வடிக்கிறாயே அவர்கள் மனதில் என்ன நினைக்க மாட்டார்கள் பேசாதிரு.

வை.—அம்மா நீ ஒன்றும் யோசியாதே. உன் கணவன் உயிருக்கு ஒருக்காலும் அழிவில்லை. அவர் சரீரத்துக்கு எதுவாகிலுந் தீங்கு நேரிட்டால் நான் இருக்கிறேன். பார்த்துக்கொள்கிறேன் யாரையா ஒரு கடுதாசி கொண்டு வாருங்கள் (கொண்டு வந்து கொடுக்க வாங்கி யாதோ எழுதி) இதைக் கொண்டுபோய் ஔஷதம் அன்கோ வில் கொடுத்தால் மருந்து கொடுப்பார்கள் வாங்கி வந்து 3 தரம் கொடுங்கள். அதோடு தீர்ந்து போம் (எழுந்தார்) (மயக்கந் தவிர்ந்து விழிதிறந்து நோக்கி)

சே.—ஐயா நான் பிழைத்திடுவேனா?

வை.—ஐயா தாங்கள் பிழைத்திடுவீர்கள் என்ற கவலை எனக்கல்லோ இருக்கவேணும்.

சே.—இல்லை. அவள் சிறு பெண்ணாச்சுதே என்றும் சாயந்திரம் முகூர்த்தம் ஒன்று நிச்சயித்து சுற்றத்தார்க் கெல்லாம் அறிவித்து அவர்களெல்லாம் வருஞ்சமைய மாச்சுதே என்றுதான் கவலை. இதைத் தவிர வேறே யென்னுடைய உயிர் போய்விடுமென்ற கவலை கிடையாது. அதற்கு என்னிடம் பணமில்லையா என்ன?

வை.—ஆஹா பொருள் விஷபத்தில் தங்களுக்கினை சாற்றுதற்கில்லை முகூர்த்தம் என்றீர்களே யாருக்கு.

சே.— எனக்கு இப்போது வயது 60 ஆயிற்று.

வை.—அப்படியா தங்களுக்குத்தானோ முகூர்த்தம்.

சே.—ஆம் அது விக்கினமில்லாது முடிந்துபோகவேணும்.

வை.—அப்படியே முடியும், யோசிக்கத் தேவையில்லை.

சே.—ஊம். யோசனை யென்ன எல்லாந் தயாராய்விட்டது. அப்படியே உயிர்க்கு யேதாவது அபாயம் நேரிடினும் செய்யவேண்டிய சடங்குகளை முடித்துவிட வேண்டியதுதான் இனி நிறுத்தப்போமா?



வை.—அது யார் செய்கிற வேலை. எண்ணித் துணிவது கருமம் துணிந்த பின் எண்ணுவ திழுக்கு அல்லவா.

சே.—ஆம் ஆம் தாங்களும் அந்தச் சமயம் வந்திருக்கவேண்டும்.

வை.—இதற்கென்ன தடை. யார் வீட்டுக்கு யார் வரப்போகிறார்.

சே.—தாங்கள் வருவீர்கள் சமயம் எப்படி யிருக்குமோ.

வை.—சமயம் என்ன சமயம், எந்த வேலைக ளிருப்பினும் அவசியம் வந்து சேருகிறேன்.

சே.—அவ்வளவு சொன்னதேபோதும் தாங்கள் வந்ததுபோலாகும்.

வை.—(சரி போய்வருகிறேனென்று போய்விடுகிறார்.)

தெருவில் ஒரு வண்டியி லிருந்து மூன்றுபேர் கீழிறங்கி ஒருவர் பின் ஒருவராய் தடதடவென்று உட்பிரவேசித்தார்கள். அவர்களை அங்குள்ளவர்களி லொருவர் பார்த்து,

“ஐயா என்ன இவ்வளவு சீக்கிரம் வர தயவு வைத்துவிட்டீர்களே. சற்றுமுன் செட்டியார் பாலோக கமனம் பண்ணுவர்போல் இருந்தனர். யார் செய்த புண்ணியமோ பழிக்கஞ்சாப் பாண்டி வைத்தியரைக் கொண்டுவந்துவிட்டது. அவர் வந்த முகூர்த்தம் செட்டியார் கண்ணையும் விழித்து வாய் திறந்தும் பேசினார். வைத்தியரும் ஒரு மருந் தெழுதிக் கொடுத்துக் கொடுக்கச் சொல்லிவிட்டு சற்று முன்னடித்தான் போகிறார். தாங்கள்கூட எதிரில் பார்த்திருக்கலாம் என்றார்.

வந்தவர்களில் இருவர் வைத்தியர். இவர்கள் எந்த வியாதியஸ்தர்களைப் பார்க்கப் போயினும் ஒருவரை விட்டொருவர் போவதில்லை. இருவருமே போய் வியாதியஸ்தர் கால்பக்கம் ஒருவரும் தலைப்பக்கமொருவருமாக உட்காருவது வழக்கம். இதினால் இவர்க்கு கால்மாட்டு வைத்தியர் தலைமாட்டு வைத்தியர் யெனச்சொல்லுவர். இவரில் கால்மாட்டு வைத்தியர் தலைமாட்டு வைத்தியரைப் பார்த்து என்ன உமக்குத் தெரிந்ததா இவாள் சொல்கிற ஆள் எனறார்.

தி.வை.—யார் அவர் எனக்கு ஞாபகம் வரவில்லையே?

வை.—என்ன இவ்வளவுக்குள் மறந்து போனீரா.

த-வை.—ஏதாவதொரு அடையாளஞ் சொன்னால் தெரிந்து கொள்வேன்.

கா-வை.—அடையாளமா நாளைப் போவான் தெருவில் மீளவொட்டான் சந்தில் நீளக்குடி யிருக்கும் சாமண்ணா வென்பருக்குத் தாழச் சுண்ணமெடுத்து வாழத்தை யதில் வைத்து மாளக் கொடுத்துவிட்டு சாமண்ணா வென்பதிலே மகாரத்தை நீக்கிவிட மருந்தைக் கொடுத்தது போல் வகாரத்தைக் கொடுத்து சாவண்ணா வென்று போக, அது போல் அவனுஞ்சாகவில்லையா?

த-வை.—ஆமா ஆமா!

கா-வை.—அவன் தான் ஆசாமி பார்த்துக்கொள்.

த-வை.—அடே யடே அவன்தானா அவனெப்படி யிங்குவந்தான்.

கா-வை.—கூட்டி வந்திருப்பார்கள் இவர்களுக்கு வயித்திய னென்றால் போதும் அவனுக்கு அந்த அம்சமிருக்கிறதா இல்லையா வென்று பார்ப்பதில்லை,

த-வை.—நாம் தானிருக்கிறோமே ஒருவருக்கிருவர்.

கா-வை.—அதற்குள் அவசரம்.

த-வை.—அட பைத்தியங்களே ஆத்திரக்காரருக்கு புத்திமட்டு என்பது சரியாகத்தா னிருக்கிறது.

கா-வை.—சரி போனது போகட்டும் அவர் எழுதிக்கொடுத்ததை எங்கே பார்க்கலாம்.

"அதை எடுத்துக்கொண்டு ஔஷதம் அன்கோவுக்கு மருந்து வாங்கிவர ஆள் போயிருக்கிறது. இதற்குள் வாங்கி திரும்பி யிருக்கலாம்.

த-வை.—சரி வரட்டும் செட்டியா ரெங்கே படுத்திருக்கிறார்.

"கடுக்கட்டு ஒடுக்கத்தில் படுத்திருக்கிறார். வாருங்கள் இருவரும் உள்ளே சென்று வழக்கப்படி கால் மாட்டினுந் தலைமாட்டினுமாக உட்கார்ந்தனர்.

த. வை.—ஐயா கையைக் கொடுங்கள் (கையை நீட்டுகிறார்) பார்த்துவிட்டு மற்றொரு கையையும் பிடித்துப் பார்த்துவிட்டு பெருமூச் சொன்றுவிட்டார்.

கா. வை.—என்ன கை எப்படி யிருக்கிறது. எங்கே இந்தப் பக்கம்



நீட்டுங்கள். (நீட்டுகிறார்) பார்த்து அப்பா. எவ்வளவு தீவிரமா யிருக்கிறது.

த. வை.—அது கெட்டதுபோ அவனுக்கிருந்ததே அதைப் பார்க்கிலுமா?

கா. வை.—அதற்கு இது எத்தனையோ பங்கில் ஒரு பங்கு.

த-வை.—இதற்கிப்போ எதைக் கொடுக்க வேணுந் தெரியுமா.

கா-வை.—நம்மருந்தைத் தான் கொடுக்கவேணும்.

த-வை.—அதைக் கொடுக்கலாமா அல்லது அவனுக்குக் கொடுத்தோமே எவனுக்கு காலையில் வீட்டில் வந்து வாங்கிப்போனானையா. 100 ரூபாய்க்காரன்.

கா-வை.—100 ரூபாய் இரண்டு பேர் கொடுத்தானே அதிலெவன்

த-வை.—ஒருவன் 500 ரூபாய்க் காரனல்லவா பாக்கிப்பணம் நூறையுங் கொடுத்துப் போனான்.

கா-வை.—ஆமா

த-வை.—அவனல்ல இன்னொருவன் நேற்று 300 வரை தருகிறேனென்ன நாம் ஒப்புக்கொள்ளாமல் வந்துவிடவில்லையா.

கா-வை.—ஆம் ஆம்

த-வை.—அவன்தான் இன்று 350 வைத்துக் கொள்ளுங்கள் என்று கெஞ்சிக்கேட்டு நாடியையும் பிடித்தான். சரிதான் இதிலில்லையானாலின் னொன்றில் கொடுக்கிறானென்று ஒப்புக்கொண்டு முதலில் 100 ரூபாய் மருந்து சிலவுக்கு வாங்கிக் கொண்டு மருந்துங்கொடுத்தனுப்பினேன்.

கா-வை.—ஓகோ அவன்தானா மறுபடியும் வந்தானா சரி சரி நான் கவனிக்கவில்லை.

த-வை.—அதைக் கொடுத்தா லென்ன?

கா-வை.—சீ சீ அடிக்கடி நாம் வரப்பட்ட யிடம் இங்கேயா அப்படிச் செய்வது. நீ யோசியாது அதைக் கொடையா உன் மனம்போல் செட்டியார் நடந்து கொள்வார் நீ நினைப்பதெல்லாம் மணியைப்பற்றித் தானே அது கிடக்குதுபோ நமக்கு செட்டியார் தயவு இருந்தாற் போதும்.

த-வை.—சரி நீயே இப்படி சொல்லுகிற போது நான் பின் வாங்குவேனா?

சே.—ஐயா ! நான் பெரிதா பணம் பெரிதா கொஞ்சம் யோசிக்க வேண்டும்.

கா-வை.—தாங்கள் தான் பெரிது. பணம் என்ன பணம் இன்றைக் கொருவன் கையில் நாளைக் கொருவன் கையில்.

த-வை.—இதையும் அதையுங்கலந்து கொடுக்கலாமா.

கா-வை.—சே சே அதைத்தாங்க யிப்போது சக்தி வேண்டாமா. மேலும் அதையும் பார்த்துக் கொள்ள வேண்டாமா?

த-வை.—அப்படியானால் இது மட்டுங்கொடுக்கலா மென்கிறீரா.

கா-வை.—ஆமா இதைக் கொடுத்து இருக்கிற ஸ்திதியைப் பார்த்துக்கொண்டு இரண்டு நாள் சென்று கொடுக்கலாமதை

சே.—ஐயா நீங்கள் பணத்தை எண்ணி மருந்தைக் கெடுத்துவிடாதீர்கள் பணம் தங்கள் பெட்டியி லிருப்பதாக நினைத்துக் கொள்ள வேணும்,

த-வை.—ஆஹா அப்படியே (என்று தன் பையில் யிருந்த ஒரு டப்பியை திறந்து அதில் கொஞ்ச மெடுத்து சர்க்கரையோடு சேர்த்து செட்டியார் கையில் கொடுத்து) இப்போது நல்ல வேளையாயு மிருக்கிறது சாப்பிடுங்கள் என்றார்.

சே.—தங்கள் கை விசேஷம் இதோடு தீர்ந்து போகவேணும்.

கா-வை.—உங்கள் மனம் போலவே ஆகும் யோசிக்க வேண்டாம். "ஐயா ஆகாரம் என்ன கொடுக்கிறது.

த-வை.—மிளகு ரசம் வைத்து சாதத்தை குழைபவடித்து அதில் போட்டுக் கரைத்து ஒரு சோடுதலை கொடுங்கள்.

இந்தச் சமையம் ஒருவர்க்கு அபாய ஸ்திதியிலிருப்பதாய் இருவர் வந்து வைத்தியர்களை அழைக்க, இருவரும் எழுந்து செட்டியாரிடம் சொல்லிக்கொண்டு மறுபடி வருகிறோமென்று வெளியேவரும்போது, மருந்து வாங்கப்போன ஆள் மருந்தை வாங்கிக்கொண்டு எதிர் வர, வைத்தியர் அவன் கையி லிருந்த ரசிதை மட்டும் வாங்கிக்கொண்டு அவசரமாய் வண்டியிலேறி உட்கார்ந்தார். வண்டி வெகு விரைவில் சென்றது. மருந்து வாங்கி வந்தவன் மருந்தை செட்டியார் மகளிடம் கொடுக்க அவள் வாங்கி முன்னமே தயாரித்து வைத்திருந்த கியாழத்தில் கலந்து கொண்டுவந்து கொடுத்தாள். செட்டியார் எப்படியாவது நமக்கு சொஸ்த மாகவேணுமென்றே பேரெண்ணங்கொண்



தேயவேவல் செய்திடுபவர வருபிரமனார்
போயகாலைபுங்கடன் செய்தல் புதல்வர்தங்கடனே. (5)

ஈதுமட்டுமோ விபமனார் கடந்தினிப் பிதிருர்
போதுமட்டுமே திலசலந்தருவதும் போனற்
சூதுமட்டு நேர்சொர்க்கத்தாய் சொர்க்கத்தாயிடவுந்
தாதுமட்டல ரற்சுதர்பூசிக்குந் தவத்தில். (6

என்றியம்பிடுமாரண மியம்பிய விஃதி
லொன்றுநந்தமக் கில்லையா லெங்ஙன முய்வோம்
பொன்றயங்கிய மூலபிறு பென்றிடப்புகலு
மன்றலங்குழன் மலரடிவணங்கி மற்றவர்க்கே. (7)

ஈசர்பூசனை யியற்றிடி விட்ட காமியமு
மாசின்முத்தியுங் கிடைக்குமான் மலர்கொடுமதின்மூன்
றூசுகங்கொடெய் தழித்தவர் பூசனையதிக
நேசமோடியற் றிடுதிரென் றனுமதுநேர்ந்தே. (8)

அந்தவந்தண னடுத்தவோர் தபோவனமணுகி
வந்துசிந்துவி னுடிநீர்க் கடனெல்லாம் வழங்கி
பிந்தியந்தினிறத்தர் பூசனைக்கிடம் பிடித்து
மூந்திரந்திய மொழிந்திடுமாகம முறையாய். (9)

பனிப்பகைக்குரு மருச்சனை பரிவுடன்முடித்துத்
தனிப்பதாங்கிய மனத்தொடு திரவியஞ்சமைத்து
வுனித்துவராவற் சனையிடையூறொழித் தாத்மத்
தினைச்சுசிசெய்து விசேனபகத்துள் வைத்திறைஞ்சி. (10)

தானத்தாதி திரவியங்களை மந்திரந்தன்னை
மோனத்தார்க்கருண் முழுமுதலிங்கத்தை முறையாய்
ஞானத்தாற்சுசி செய்தமைத்தைங் கரனனிக்
கேனத்தாற்சனை செய்து செய்தேழ் குருவினுக்கும். (11)

இலிங்க மூலத்தினதாசத்தி தொட்டிபத்தோற்
கலிங்கமூர்த்தி யீறருச் சனைபுரிந்துதன்னையாற்
புலிங்கமூர்த்தியிற் றெண்டமுண்ட பங்கிபுகட்சி
வலிங்கமூர்த்தினித்தாவுடல் வரித்தக்கம்வைத்து. (12)

ஆபனுதிசெய்தற்க மீய்ந்தடியவர் பிறவிக்
கோபனூர்க்கிறையாதிமா முத்திரை கொடுத்துப்

பாபநாசற்குப் பாத்தியாதி நடந்துபதுமை
நாபனான் முகனறிகிலார்க் கட்சதைநல்கி. (13)

வெடியுஞ்சோதியு மாசமனற்கமும் விரைசேர்
படியுமஞ்சனமருக்கிய மாட்டிப் பாத்தியாதி
முடியநல்கி பொற்றுடைசந்தட்சதை முறையிய்ந்
தடிகளுக்கு முத்தத்துவபுட் பாஞ்சலியணிந்து. (14)

விண்டையேறிய குழகருக்கழகும விரைதோ
யிண்டைநுபதி பாசமனற்கிய மீய்ந்து
தொண்டைவாயுமை பங்கற்குச் சங்கிதைசொல்லிப்
பண்டைநாதர்தன் யோகவங்காற் சனைபண்ணி. (15)

அருக்கியபாத்திய மாதியீய்ந்தஞ் சலிசாத்தித்
திருக்கிராயதீபாச மனற்கியஞ் செய்து
விருப்பிநேனுடனை வேத்தியம்புகைபொளி பவித்திரங்
கருப்புராதி நீராதிகளா சமனற்கம். (16)

இடைக்கிடையிவீய்ந்தவானமைத் தெழுத்தைந்துமோதிச்
சடைக்காரவணி சங்கரர்க்கற்கத்தாற் சாத்தி
நடைக்குரவன் முன்னருச்சித்தானை நமக்கரித்து
விடைப்பார்க்கங்கி வெட்டட்டமலர்கொடு வேய்ந்து. (17)

இன்னவாறொரு தேறுவார் பூசனையியற்றி
நன்னயத்தொடு சட்டங்கமாய் நமக்கரித்துச்
சொன்னநான் மறைபரியயர்க்கெட்டிலாச்சோதி
யென்னையாளுடை யிறைவனே யேகநாயகனே. (18)

வேதிநேமமதாதி சமாதியினிலேய
யாதியந்தமுமானவா வுலகருளனைப்
பாதிதங்கியவடிவனே பண்ணவா வென்றே
ஓதியீசனைப் பூசனைமுடித்தன னுணர்ந்தோன். (19)

குடங்கைநீரொடு பச்சிலையிடுபவர் கொள்ளி
விடங்கொளாந்தரு மேழைபளகையை யெழில்சேர்
படங்கொள்பாயலைப் பங்கயத்தவிசினைப் பாத்தை
யடங்கவீய்பவனி வர்க்கொரு மகவருளாதோ. (20)

முந்தநாமகட் கீய்ந்தன வரத்தினைமுடிப்பா
னந்தணாளனைவருது மென்றிருந்தன வயனை



யிந்தநான்மறையவன் மகவாமென வீசன்
கந்தநாண்மலர்க் கடவுளதியைந்திது கழறும். (21)

நேரிவிண்டினுக் கன்றருணிருமலா வடியேன்
பூமியின்கண் வந்தேனெனிலெனக் கருள்புரிந்து
சாமியென் பக்கம்வந்துன்பதந் தந்தருள்வாய்
வாமிபங்கவென்றனு மருள்வோமென மகிழ்ந்து. (22)

தோன்றயாவையுஞ் செய்திடுவேமுமோர் தோன்றற்
போன்றமைந்திடச் சிவன்செயலென மறைபொலிய
வீன்றதாயவன் வளர்த்தாயவன வர்க்கியைந்த
வான்றகற்பினி லருந்துதிகருப்பம் வந்தடைந்தான். (23)

மன்றலங்குழன் மாமறையவன் மனைவயிற்றி
லொன்றிரண்டு மூன்றீரண்டைந் துடனாறு
சென்றவேழெட்டொன் பானொடு திங்களுந்தசமா
கின்றநாளினிலாண் மகவொன்றையங் கீன்றாள். (24)

முனிவனு மனங்களித்தனன் மொய்குழலாளுங்
கனிவுறும்படி வளர்த்தனள் கனிதர்வந்தடுத்து
நனிபகவனு நாமமிங்கி வனடைநாடிற்
புனிதமில்லவட் புணர்வனென்றுரைத்தனர் போனார். (25)

தேடருந்தவ மியற்றியம்முனி பெறுசெல்வன்
நாடொறும்பிறை வளர்ந்தெனவளர்ந்து நான்மறையு
நீடருங்கலையாவையும் படித்தன னேடிப்
போடருந்தனம் புதைத்தவரெடுத்தன போலும். (26)

ஆண்டுமிப்பரிசைந்துடனைந்து போனாந்துந்
தாணடுகிற்றனகனிதர் சொற்றதை யானுணர்ந்தா
னீண்டுநிற்பரிதினிப் பிரமச்சரிய, மியற்றி
வேண்டுகற்றவம் பெறுவனென்றிருவர்கள் விடையால். (27)

உத்தரத்திசை யேகினன் கருவையிலொருசார்
மைத்தசோலையுங் கூவலு நந்தனவனமு
மத்தலத்தினிற் கண்டனனதி லொருமடமு
மெய்த்தவத்தினுக் கேற்றதென்றவ் விடமேவி. (28)

இருந்துயாதவ மியற்றின னீசனைப் பூசித்
தருந்துவான் பொருட்டாகவே சாகினியமைத்துப்

பொருந்துசாலி பொனிறையினற் சாலிபோனிறைய
முருந்துவாண கைமுறுவலார் கொள்வர் நாண்முறையே. (29)

இன்னவாறினி திருந்தனன் சிவமுனியெனவு
மன்னுதாமரை மேலவன்றுமறை மலர்வெள்
ளன்னமன்னவன் சாபத்தா லன்னிலையகன்று
துன்னுபூவுல்கடைந்தது நடந்ததுஞ் சொல்வாம். (30)

மருவைத்தாரிதழ் மாமலர் வேதனுமார்பிற்
றிருவைத்தார் தருதீர்த்தனுந் தேடியுங்காணு
வுருவைத்தீரென வோதுவார்வினை தொலைத்துழலுங்
கருவைத்தீர் தருகண்ணுதல் வாழ்ந்திடுங்கருவை. (31)

இருக்கொடாதி நூலோதுவ ரிருபிறப்பாளர்
திருக்கொடியாவையுந் தீர்த்துலகாள்வர் செங்கோலர்
தருக்கொடாதன வீய்வர்மூவசியராந் தகையோர்
மருக்கொடாழ் குழன்மாதர்கண் மழலையாழ்பயில்வார். (32)

முத்திறத்தர்கள் பணியெலாஞ் சதுரர்கண்முடிப்பா
ரத்திறத்தின கருவையிற் கடையரிலதிலோ
ரெத்திறத்திருவரு மறியார் பணியியற்றும்
வகத்திறத்தினன் கடையனிற்றலை யெனுங்கருத்தோன். (33)

சேரிதங்கியச் சாம்புசெய்திடுபவன் மணஞ்செய்
காரிருஞ்சுருள் கூழையின்மாழையொண் கருங்கட்
பாரிதன்றவப் பண்பினுற்பெண் பிரசாக
வேரிவெண்கமலா சனியுதித்தனள் விளங்க. (34)

தாயுந்தந்தையு மகிழ்ந்திட விருந்தன டவழ்ந்தாள்
வாயினிஞ்சொலும் பயின்றன ணடந்தனள்வளர்ந்தா
ளாயுஞ்செந்த மிழியாவர்க்கு முணர்த்துவட்கரிதோ
வேயுந்தண் கதிருறுப்பொடும் வளர்வதீடாணுள். (35)

பேதையோடியற் பெதும்பையின் பருவமுங்கடந்து
மாதுமங்கையம் பருவம் வந்தெய்தினண்மழைபோ
லோதியுங்கலை மதியெனும் வதனமுமுறுகட்
போதும்வள்ளைவார்காது மூக்கெனுங்குமிட்பூவும். (36)

தொண்டையுங் கனிவாயும் பைங்கழையிணைதோளுங்
கண்டமீதலக்கமுகெனு மெழிலுங்கச்சணிந்த



முண்டகத்திரு முகையெனு முலையுமாலிலைபோற்
கொண்டபண்டியு முந்தியுஞ் சிற்றிடைக்கொடியும். (37)

ஈடதாகியகுரங்கினை வாழையினிடையோ
ராடராப்படம் விரித்தென வல்குலுமாவஞ்
சோடதாங்கணைக் காலுங்கைக் காந்தளந்துணையு
மேடதார்ந்த செங்கமலமே போலடியிரண்டும். (38)

இன்னவேரெழில் கண்டவரிந் திரையிவளோ
பன்னகாபரணத் தவரிடத்துறைபவளோ
முன்னமாமறை தந்தவனின் மொய்கூந்த
லன்னமோ இவளாரை யென்றறைகுவதென்பார். (39)

அந்தநாளிலோர் நாளினிற்றந்தையு மனையுந்
தந்தம்வேலையிலேகுவாரடிசினீ சமைப்பாய்
கந்தவார்குழலா யெனக்கடி தினிலடிசி
லிந்தநேரமே யடுவனென்றியைந்தனளெழுந்தாள். (40)

கழுவிமூழையும் பாண்டமுமயினிபெய் கலனும்
வழுவிலோதக மொண்டனள் கொணர்ந்தனள்வைத்தாள்
முழுவிதா நுதலரி மினுக்கினள் குழைபோய்மூக்
கெழுவிலோசனிசாகினி கொள்வதற்கெழுந்தாள். (41)

கைக்கடங்கின பெட்டியினெல்லொடு கடிதின்
மைக்கடங்கில கண்ணினள் வினவினள் வடமே
றிக்கடங்கிய சிவமுனியிருப் பிடந்தேடிப்
பொய்க்கடங்கிய விடையினன் மடமுன்றில்புக்காள். (42)

கண்டனன்சிவமுனியுமக்கன்னிதன் கவினைப்
பண்டைநேத்திர மெட்டிலனென்கொல் பார்த்துணர்வான்
தொண்டைவாய் மயி லெங்குவந்தாயெனத் தூநெற்
கொண்டணைந்தனன் சாகினிகொள்வதற் கென்றாள் (43)

சாகினிகொய்து தருவனென்றுவென வாங்கி
யேகினனது கொய்யவோர் கூனிரும்பெடுத்துப்
போகியேவலிவிறை யினிற்புயமிரண்டிருளை
யாகிவானமு மாசையுங்கனமு மடைந்த. (44)

இடியிடித்தன பளிர்பளிரெனத் தடித்தெறிகா
லடியடித்தன வெளிமகனலையை விட்டுணியால

வடிவடித்தன வொத்தன வாலியின்மாரி
துடிதுடித்தன சரங்களுமசரமுந் துணிந்த. (45)

இன்னவாறெனிவிவர்கண் மற்றென்படாரி ரிந்து
தன்னதாகிய திருமடத்தந்தணன் சார்ந்தான்
பின்னரேவருபெண் கொடிக்கிரங்கி விப்பரனி
யன்னகோடி வந்தணையெனுமுன்னம்வந்தடைந்தாள். (46)

அடைந்தகண்ணெலா மாவிவந்தடித் திடக்கொடுகி
மடந்தைசென்றந்த மறையவர்த் திண்டினண்மழைவந்
துடந்தைசெய்ததோ வோடியவிடமெலா மூழ்தான்
றொடர்ந்துசெய்ததேல் விரித்தினி சொல்லுமாறுளதோ. (47)

வேறு.

மன்றன்மலர்க்குடி கொண்டவொருத்தனை மஞ்சளகக் குயிலை
யொன்றுபடுத்துகருங்குயிலப்புற வொண்கலையக்கொடிபோ
னின்றுவெளுத்தன பின்புநினைத்தனனின்குலமெக்குலமோ [48)
தென்றனுமைக்கணிழிந்த பறைக்குலமென்றனளப்பொழுதே

கத்திபவந்தணன் மெத்தவெகுண் டிருகட்பொறிசிந்திடவே
சுத்தியொடிங்கேயிருக்கையில்வம்பிலே தொட்டுமுழும்பினையே
பத்தியழிந்திடவொட்டியதென்கொல்பறைச்சிநீயென்றுகமைக் 49
கொத்தினனங்கை கொள்செற்றுபயங்கொடுகுப்புறவீழ்ந்தனளே.

வீழ்ந்தனளங்கழுருண்டு வுருண்டு விழுந்தனள் கூவமதி
லாழ்ந்தனளம்பிலமிழ்ந்து மிதந்தனளங்கொருபாவுகலால்
வாழ்ந்தனளிங்கிதறிந்தில ரென்றும் வளைந்தனைமாபழிகள்
சூழ்ந்தனவென்றுநடந்து நடந்துதுலைந்த திராவழியே. (50)

யோசனையோசனை யோடியுமோடியு மோய்விலநீள்வழிபோய்க்
காசியிலேசருவேசனையேசிறு காலையின்யாலையிலே
பூசனையேசதகாலமுமே செய்து போசன மேபலியாய்
வாசமதே செயுமாசையதாயுறை வாகினன்மாமுனியே. (51)

கஞ்சவனவன்செயலிங்கிதுபின் பொருகாசியின்மாமறையோன்
மஞ்சர்விரும் பிலொடுங்குமரப்பிகை வாழ்கடலாடிமிக
நெஞ்சமகிழ்ந்தவர் முந்தையிடம்புக நீள்வருபோம் வழிமேன்
மிஞ்சுகடுந்தவனங் கொடும்புலினுவின வேலையிலே. (52)



சிவமுனிமுன் முறைபொழில் விழியெதிரது தெரிதர வதுகுறுகி
நவமுறுமடமதி லொருவரு மிலையென நறுபுனலுறு கிணறிற்
[வருவார்
சுவைபெறயிறைவை செய்துணவென வதினெலைதுலை தெரிவுற
தவனமு மகவிழை கவனமு மறவொருதனையடெரிய வுணர்வார் (53)

கூவலினிடையொரு பாவுகலதினுறு கோதையை யிவர்காண
வாவலின்முனிமனை நீரிறைகயிறிட வாயிழை யதுசார்பாய்
மேவினள்கரையிடை மாமனையொடு மகறவேதிய னெழில்காணு
வோவிய மலயிவடே வாமுதமென வோகையின் மிகுவாராய் (54)

தொழுகுல மகளிரு மலநலகலையுகை சுரிகுழ லருளினதே
பழுதலவென விவர்மன மகிழ்வதினொடு பனிமொழி மொழிவின
மழுவலரு ளெனமிசை நினைபவள் வகைவகை மொழிவதனை
யழிவருமென துயிருள் பவருமை யலதயனை யிலையெனவே (55)

மாதுமொழிந்த சொல்லானது வந்தியின் மாபிணியன்றொழியப்
போதுபிழிந்திடு காதுறு சஞ்சிவி போலு மிருந் தனவாற்
நீதகலுங்கலை.வேதனுமங்கல தேனனையுஞ் சுதையுஞ்
சாதநறும்புனலி யாவுநுகர்ந்தினிதாக நடந்தனரால் (56)

வேறு.

வடுவோடி கற்செய்விழி குழையூடு முட்டுமறி
மடமானை மற்றிருவருங்
கொடுபோய் முனைத்தமது வடகாசியிற் பெரிய
குடிவாழ்வி னுற்ற மிகுமன்
பொடுமே வளர்த்திவளை யொளிமா மணிப்பணிக
ளுறவே தரித்துமண மேர்
படுமோர் தவப்பிரம சரியா ரெனக்கருது
பவரா யிருக்கு மளவில். (57)

அங்காய் மறைக்குறிசின் முன்பாய் வசிக்குமவ
னன்றுடகத் தொழிலதாய்
தங்காசலத்திடை மிகுந்தான மற்சனைகள்
கங்காளருக் குதவியே

தங்காரணத்துளா கந்தோறு மிட்ட பலி
    தங்காதலுற்று நுகர்வான்
கொங்கார் குழற்றிரு விருந்தாரகத்துமது
    கொண்டே வரச் செல்லுமே. (58)

கண்டான் மகட்குரிய மணவாள னிவனென்று
    கலையோது மறையாளனவன்
பெண்டான் மணக்கில னுனக்கே யளிப்பனறல்
    பெய்தாதலிற் கோடியோ
வுண்டானதைப் பகர்தி யென்றா னதற்கிவனு
    மொத்தான் மனத்தாசையாற்
பண்டாம் விதிப்பகுதி கொண்டே நடத்திய
    படிக்கே நடக்கு மதியே. (59)

ஆய்ந்தாரை யக்கண மழைத்தே முகூர்த்தமு
    மமைத்தே யமைத்தோர்புயப்
பூந்தாரையச் சிவ முனிக்கே யளித்திடு
    பொருட்டார முற்காகுதி
யீய்ந்தா ரயற்குநிக ரொப்பார் மறைப்படி
    யெழிற்காசி விப்ரன் மகளைத்
தாந்தாரை விட்டுட னளித்திட வுளக்கனி
    தழைத்திடு சிவப் பிரமனே. (60)

அங்கைகொடு மங்கைவிரல் பற்றினன் மற்றமறை
    யவாசி செவிசாரவே
பொங்கமுட னங்கறை புகுந்தான் மகிழ்ந்து
    புணர்ந்தான் மணந்தா ளுடன்
சங்கையின் மிகுங்கலவி தங்களி னடந்தது
    தவிர்ந்தா ரவிழ்ந்தார்குழன்
மங்குலை வகிர்ந்தனன் முடிக்கத்தலைப்படு
    வடுக்கண் டிரக்கமுறுவான் (61)

இதுவேது சொலுபேதை யென்றானினார்களென்
    றிருவோரு மறியாததா
லதுகேளு மொருவேதன் முனை செய்த வாறிதென்
    றடையாளமுட னோதினாள்



டிருந்தவ ராதலால், முன் சாப்பிட்ட மருந்துக்கும் இந்த மருந்துக் கும் விரோதம் ஏற்படுமென்பதைக் கவனியாமல் வாங்கிச் சாப்பிட் டார். சாப்பிட்ட ஐந்து நிமிஷத்துக் கெல்லாம் குடலைப் புரட்டிக் கொண்டு வயிற்றை வலித்தது. சற்று நேரத்திலெல்லாம் நாலு தடவை பேதியுண்டாயிற்று. கை கால்கள் சோர்ந்தன. அங்ஙனே உட் கார்ந்தார். கண்ணைக் கட்டியது. வாயில் நுரை தள்ளியது, கண்டவர் நடுக்க மெய்தினர். இரண்டுபெயர் வந்து தூக்கிப்போய் கை கால் முதலியதைவெந்நீர் கொண்டுசுத்தம்செய்து பழையதுணிகொண்டு ஈரந் துவட்டி போர்வை கொண்டு போத்தி மெத்தையில் படுக்க வைத்தனர். ஒருவர் புகை பிடியுங்கள் என்றார். ஒருவர் சுக்கு கொண்டுவாருங்கள் என்றார். ஒருவர் சுக்கு எடுத்துவந்து கொடு க்க, அதை மற்றொருவர் வாங்கி வாயிற் போட்டு மென்று செட்டி யார் காதில் ஊதினார். என்ன பரிகாரங்கள் செய்யினும் செட்டியார் ஏறிட்டும் பார்த்திலர். வரவர மயக்கஞ் ஜாஸ்தியாயிற்று. பக்கத்தி னின்றவர்களுடைய மனம் திடுக்கென் றடிக்கிறது. வாயைத் திறந்து கேட்க சக்தி வரவில்லை. என் செய்வர் பாவம். பெண்கள் பிள்ளைகள் முதலிய யாவரும் சத்தமிட ஆரம்பித்துவிட்டார்கள். செட்டியார் மனைவி இளையாள் என்ன என்னவெனக் கேட்டுக்கொண்டு மெள்ள நடந்துவந்து கூட்டத்தை விலக்கிக்கொண்டு செட்டியார் முகத்தைப் பார்த்தாள். வயிறு பக்கென்று பற்றியது. கண்ணீர் மளமளவென்று ஓடுகிறது. வாய்விட்டு அழ ஆரம்பித்து ஐயோ! ஐயோ! ஐயையோ! தெய்வமே! என்னை அவதிகொண்ட தெய்வமே! என்னை அலக்க ளித்த தெய்வமே! இனி நானென்ன செய்யப்போகிறேன். ஏ சாமி! ஏ சாமி! ஐயையோ! விழியிரண்டுஞ் சுழலுதே மேல் மூச்சும் வாங்குதே என் ராஜாவே என் ராஜாவே ஐயையோ வாயுங்குள றிடுதே என் சாமி! என் சாமி! என்னை ஏறிட்டுப் பார்க்கக்கூடாதா; நாதா நாதா நான் பாவி தவிக்கிறேனே இனி நான் ஏது செய்யப்போ றேன், எப்படிப் பிழைத்திடுவேன், வைத்தவிட மறியாது வகை மோசம் போனேனே, என் வாயில் மண்போட்டு மாயமாய்ப்போ னீரே, ஐயோ வென்றழுகிறதை பக்கத்தினின்ற பழங்கிளவி யொரு வள் அம்மா நீ அழாதே அவர்களுக்கிப்போதென்ன வந்திட்ட தென்றழுகிறாய் ஒன்றும் வராது ஏதோ இரண்டு மூன்றுதரம் கொல்லைக்கு போனதினால் களைப்புண்டா யிருக்கிறது. சற்று நேரத் திற் றெளிந் தெழுந்திடுவர், நீ சும்மா யிரு நிறைந்த கர்ப்பவதி

ஏங்கி அழப்படுமா, அழாதே. சும்மா யிரு யிங்கு நில்லாதேவா, அந்தக் கூடத்திற்போய் உட்காருவோம். தேம்பித் தேம்பி அழுதால் வயிறுநோகும் சும்மாயிரு என்று சொல்லி கூட்டிப்போய் உட்காரவைத்தாள். ஒரு பக்கத்தில் செட்டியார் தாயார் உட்கார்ந்தபடி என்மகனே என்மகனே என்று தலையி லடித்துக்கொண் டழுகிறாள். அவர் தகப்பனார் ஒரு பக்கம் இது என் தலைவிதியா தெய்வமே நான் போய் அவனிருக்கக்கூடாதா? இன்னம் நானிருந்த வதிப்படவேணுமா ஜெகதீசா! ஜெகதீசா! வென்கிறார். மகன் பக்கத்தில் நின்று மயில் விசிறிகொண்டு விசுருகிறான். இவருடைய மகள் ஓரிடத்தும் நில்லாமல் நாலாபக்கமுந் திரிந்துகொண்டு அவனைக்கூட்டிவா இவனை அழைத்துவா அந்த மருந்துபோய் கொண்டுவா இந்த மருந்தை எடுத்துவாவென அங்கங்கும் ஆட்களை அனுப்பிக் கொண்டு அவதிப்படுகிறாள்.

அவர் மைத்துனர் ஒரு பக்கத்தி லுட்கார்ந்து உடம்பில் வெயர்வையைத் துடைக்கிறார். இருவர் இரண்டுள்ளங்கால்களில் சூடுண்டாகுப்படி தைலங்கொண்டு தேய்த்தனர். அவர் மனைவி மூத்தாள் அங்கங்கு சிதரிக்கிடக்குஞ் சாமான் முதலியவைகளை ஒருங்கே சேர்த்துக்கொண்டு புலம்பித் திரிகிறாள். குழந்தைகளெல்லாம் கா கூவெனக் கத்துகின்றன. அவருடன் பிறந்த தங்கை லபோ லபோவென வாயிலடித்துக்கொண் டழுகிறாள். முகூர்த்தத்துக்கு வந்த சுற்றத்தவர்களும் வருகிறவர்களும் அடுத்த வீடு அண்டைவீட்டுக்காரர்களுமாக வீடு நிரம்பக்கூடி விட்டனர். இரண்டு பேர் விரைந்துசென்று வைத்தியர்களை வழியிற் சந்தித்தனர். அவர்களிருவரும் முன்னம் செட்டியார் வீட்டைவிட்டு வெளியிற் செல்லுங்கால் மருந்து வாங்கியவன் கையிலிருந்து வாங்கிய சீட்டை இவர்கள் சிக்குப் பார்க்கச் சென்றிருந்த வீட்டில் வைத்துப்பார்த்து ஓகோ மோசம் வந்தது நாம் மருந்து கொடுத்து வந்தோம் அதற்குமேல் இந்தமருந்தையுங் கொடுத்து விடுகிறார்களோ என்னமோ கொடுத்தாற் பிழைமோசம் வருமென்றெண்ணி சட்டென்றெழுந்து துரிதமாயிருவரும் வரும்போது அழைக்க வருமிருவரையும் பார்த்தனர். நின்று என்ன சங்கதி யென்றார். அதற்கவர்கள் கொஞ்சம் சீக்கிரம்வரவேணும் இருக்கிறதைப் பார்த்தால் ஒன்றுந்தோன்றவில்லை. ஒருமாதிரியாய்ப் பேச்சுமூச்சில்லாது மயக்கமாயிருக்கிறது. நாலுதரம் கொல்லைக்குச் சாஸ்திபோய் விட்டதுஎன்றார். உடம்பும் சலவை கண்டிருக்கிறது



என்று சொல்ல வைத்தியர் நாலைந்துதரம் கொல்லைக்கு போயிற்றாவென, வந்தவர் ஆமாவென, வைத்தியர் பீடையொழிந்தது வென்றும் பரவாயில்லை பிழைத்திடுவாரென்றும் சொல்லிக் கொண்டனர். சீக்கிரமாயும் வந்துசேர்ந்தார். வந்தவுடன் சுற்றியிருந்தவர் விலகிட இருவரும் வழக்கப்படி யுட்கார்ந்து ஆளுக்கொருகையைப் பிடித்து அரைமணிநேரம் வரை நாடியைப் பார்த்துவிட்டு அந்த மருந்தைக் கொடுத்தீர்களா வென்றார். பக்கமாய் நின்றுகொண்டிருந்த மகள் ஆஹா அது அந்தக்ஷணமே கொடுத்தவள் நானல்லவா வென்றாள். வைத்தியர் நல்லகாரியஞ் செய்தாய் அந்தமட்டில் கெட்டிக்காரிதான். உன்னையாரம்மா அந்தமருந்தைக் கொடுக்கச் செய்தது.

மகள்:—முதலில்வந்த வைத்தியர் சொல்லிப் போனதால் கொடுத்தேன்.

வை:—அப்புறம் நாங்கள்தான் மருந்து கொடுத்துப் போனோமேயம்மா.

மகள்:—நீங்கள்கொடுத்தது எனக்கென்ன தெரியும் நீங்கள்கொடுக்கக் கூடாதெனச் சொல்லிப் போயிருந்தால் நான் கொடுக்காதிருந்திருப்பேன்.

சரிசரி போனதுபோகட்டுமப்பா இனி நடக்கக்கூடியதைப் பாருங்கள் என்றார் ஒருவர்.

வை:—அன்னப்பால் போட்டிருக்கிறதா.

மகள்:—ஆஹா போட்டிருக்கிறது.

வை:—கொஞ்சங் கொண்டுவாருங்கள் சீக்கிரம்.

மகள்:—இந்தாருங்கள் அன்னப்பால் (வாங்குகிறார்.)

வை:—யாரையா ஒருகரண்டியில் கொஞ்சம் முலைப்பால் தருவியுங்கள் (கொண்டுவந்து கொடுத்தனர்)

வைத்தியர்வாங்கி அதில் ஒருமருந்தையெடுத்து உரைத்தார். உரைத்து வேறொரு மருந்தையுங் கரைத்து செட்டியார் வாயைத் திறந்தார். பல்லுகள் ஒன்றோடொன்று பூண்டுபோயிருப்பதால் திறப்பதற்கில்லை. மற்றொருவரைத் திறக்கும்படி சொன்னார் அவராலும் சாத்தியப்படவில்லை. இரும்புக்கம்பி ஒன்றுவேண்டுமென்றார்.

மகள்:—வேண்டியதில்லை புகட்டுதற்கு வழியிருக்குதென்றாள்.

வை:—எப்படியம்மா புகட்டுவது. அதுதான் பூண்டுவிட்டதே.

மகள்:—இல்லை புகட்டிவிடலாம்.

வை:—எவ்விதம் அதையாவதுசொல்.

மகள்:—அவர்களுக்கு கொஞ்சநாளைக்கு முன்பல் நோவுண்டாயிருந்தது. அந்தச்சமையம் நோவைச் சகிக்கமுடியாமல் டாக்டர் மூலமாய் இடதுபக்கம் மேலுங் கீழுமாய் இரண்டிரண்டு பல் பிடுங்கப்பட்டிருக்கிறது. அதின்வழியாய் இலேசாய்ப் புகட்டலாம் இடதுபக்கம் கடவாயையிழுத்துப் பாருங்கள்.

வைத்தியர் இழுத்துப்பார்க்க பல்பிடுங்கப்பட்ட இடம் மருந்தைச் செலுத்துவதற்கு மிகவும் அநுகூலமாகயிருந்தது. தலைமாட்டு வைத்தியர்புன் சிரிப்புடன் கரண்டி மருந்தை சாதாரணமாய் கரண்டியுடன் வெகுசுலபமாய் உட்செலுத்தி மருந்தைப்புகட்டிவிட்டனர். சற்று நேரத்துக் கெல்லாம் செட்டியார் கண்ணை ஒரு சுழற்றுச் சுழற்றி மூடினார். வைத்தியர் கஞ்சியில் ஏதோ ஒரு பஸ்பத்தைத்தூவினார். இதற்குள் செட்டியார் மறுபடியும் கண்ணை விழித்துப் பார்த்து பற்றுதே பற்றுதே பொறுக்க முடியவில்லையே என்று தன் வயிற்றில் கையை வைத்துக் கொண்டுகதறினார். சுற்றி நின்றவர் யாவரும் மனதில் சந்தோஷத்தைக் குடியேற்றப் பார்த்தனர். துக்கம் விரைந்து செல்லவழி தேடிற்று. வைத்தியர் செட்டியாரைக் கூவி வாயைத்திறந்து இதைச் சாப்பிடுங்கள் என்று வாயில் குவளைக்கஞ்சியை வைத்தார். பசியின் தீவிரத்தால் வெகுசீக்கிரம் உட்கொண்டனர். சற்றுநேரத்திற் கெல்லாங்களை தெளிந்து எழுந்து உட்கார்ந்தனர். யாவருங் கண்டு ஆனந்தித்து வைத்தியர்களைக் கொண்டாடி அவர்மேல் யாவருஞ் சொல் மலர்தூவினர். வைத்தியர் செட்டியாரைப் பார்த்து இப்போ தெப்படி யிருக்கிறதையா வென, செட்டியார் ஐயா இன்று தங்களுடைய வயிற்றில் ஜனித்தவனாயினேன். வேறென்ன சொல்லப் போகிறேன் என்றார். வைத்தியர் அதுசரி எங்களுக் கென்ன கொடுக்க நினைக்கிறீர்கள் என்றார்.

செ:—நானே தங்களுடைய வயிற்றில் பிறந்தவனானே நான் தங்களுக்குக் கொடுக்க யாதிருக்கிறது.

த.வை:—ரூபாய் 1000த்துக்கு குறைந்துவாங்கப் போகிறதில்லை. அதற்குமேல் தங்களுடைய இஷ்டம் எவ்வளவு கொடுக்கலாமோ அவ்வளவு கொடுங்கள் நாங்கள் சந்தோஷமாய்ப் பெற்றுக் கொள்கிறோம்.



செ:—ரூபாயை விட்டுதள்ளுங்களையா மனுஷாளைப்பார்க்க வேணுமேதவிர ரூபாய்என்ன பிரமாதம். ரூபாய்கூடவருமா? இன்று நான் பிராணனை யிழந்திருந்தால்—அதை நினையுங்கள்.

வை:—இம்மாதிரி யாரையா இப்போது நினைக்கிறார்கள், எல்லாம் பணம்பணம்என்றே இந்தப்பாழும் உலகம் பரதவித்தலைகிறது.

செ:—அந்தப் பேச்சை என்காதில் போடாதேயுங்கள். நான்எவ்வளவோ பணத்தைத்தேடி புதைத்து வைத்திருக்கிறேன். இந்த ஆபத்துக்கு அது உதவிற்றா! நீங்கள் உதவினீர்களே ஆகையால் இன்றோடு பணத்தின் மூஞ்சியில் விழிக்கிறதில்லை. நீங்களும் அதைக்கனவிலும் நினைக்க வேண்டாம். மனுஷாளைச் சம்பாத்தியம் பண்ணுங்கள் (வைத்தியர்கள் நெஞ்சம் பகீரென்றது. இவ்வளவு பாடுபட்டும் விபர்த்தமாகும் போலிருக்கிறதே வென்றெண்ணினர். மறுபடியும் செட்டியார் வைத்தியரைப்பார்த்து) ஐயா இப்போது எனக்கு வயிற்றுக்குள் என்றுமில்லாத ஓர் நூதனவலி தோற்றுகிறது. அதை இன்னதெனச் சொல்வதற்கில்லை; ஆகையால் நீங்களுங் கூடவிருந்து சீக்கிரம் முகூர்த்தத்தை சிறப்பித்திடுங்கள்.

வை:—அப்படியானால் சீக்கிரம் ஆகவேண்டிய காரியங்களைப் பாருங்கள்.

சரி அப்படியே யென்று யாவருஞ் சொல்லி ஒவ்வொருவரும் பிரயத்தனப்பட்டு வெகு துரிதத்தில் சாமக்கிரிகைகள் யாவும் தயாரித்து புரோகிதரை வரவழைத்து ஓமம்வளர்த்திமந்திர பூர்வகமாய் சகல கிரியைகளுந் தடையற வியற்றி செட்டியாரையும் மூத்தமனைவியையும் மணவறையிலுட் காரச்செய்து சடங்குகள் நடத்திவரும்போது வைத்தியர் இவருடைய முகக்குறிபார்த்து மரணக்குறி தோற்றுவதைத் தெரிந்து இனிநாமிங்கிருப்பது தகுதியன்றென இருவரும் மெள்ளச்காற்றுக்கு வெளிவருவது போல்வந்து அங்குள்ளவர்களிடம்தாகசாந்தி நடத்திவருவதாய்சொல்லிவிட்டு அடுத்த கிராமத்திற்குப் போய்விட்டனர். செட்டியாருக்கு வாவரமயக்கம் அதிகப்படுகிறது. புரோகிதரை நோக்கி தங்கள் வேலை சீக்கிரமாக முடியவேணும் எனக்குஒன்றும் சரியாயில்லை யென்றார். புரோகிதர் இதைக் கேட்டதும் மனதிற் பீதிகொண்டு யேதேது தெக்ஷிணை முதலிய வஸ்துக்களுக்கிடைஞ்சல் நேரிடுமோ வெனத் தன் காரியங்

களை முடித்தற் காரம்பித்தார். இத்தருணம் ஒரு வயதுமுதிர்ந்த ஒரு கிழவி வந்து மருத்துவச்சிக்கு ஆளனுப்புங்கள் என்றாள். இவை செட்டியார் காதிற்பட அதென்ன வென்றார். பக்கத்தினின்றமகள் சிறிய தாயார்க்கு இடுப்பு வலிக்கிறதாம் மருத்துவச்சிக் காளனுப்பச் சொல்கிறார் என்றாள்.

சே:—ஆளனுப்பியாய் விட்டதா இல்லையா ?

மக:—ஆஹா முன்னமேயே அனுப்பியிருக்கிறது.

சே:—இல்லையானால் ஒருஆளை அனுப்புங்கள்.

மகள்:—இல்லை அனுப்பியாய் விட்டது.

சே:—சரி. நீயும் போய் பக்கத்தி லிருந்து வேண்டியதைச் செய்.

மகள்:—ஆஹா அப்படியே செய்கிறேன்.

இதற்குள் புரோகிதர் முதலெழுத்தும் கடையெழுத்து மாக முடிக்குகிறார். யௌவனமங்கையர் வாழ்த்துகிற சப்தம் ஒரு பக்கமும் கலீர்கலீரெனச் சப்திக்கின்ற தாளங்களொரு பக்கமும் முழக்கம் செய்கிறது. இதுசமையம் செட்டியார் நெஞ்சம்பளீர்பளீரென தாள சப்தத்திற்கிணங்க பறையடிக்கவாரம் பித்தது. உட்கார்ந்திருத்தற்கு கூடவில்லை என்னைப் பிடியுங்களென்றார். புரோகிதர் பார்த்தார் ஓகோ இதேது மோசமாயிருக்கிறதே யென்று சகலமந்திரங்களையும் ஓரேமந்திரத் திலமைத்துத் தந்திரமாய் முடித்து தக்ஷணை பச்சரிசிமுதலிய வஸ்துக்களைச் சுருட்டிக்கொண்டு வெளிக்கிளம்பினார். செட்டியார்க்கு மரணவஸ்தைைக் காரம்பித்து விட்டது. நாலுபேர்வந்து தூக்கிக்கொண்டு போய்க் கட்டிலில் கிடத்தினர். மூச்சுத்திணறுகிறது. விழிகள் சொருகுகின்றன. இழுப்பில் வைத்துவிட்டது என்செய்வார். பாவம் இவைகளை யெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த விவேகனும் சிகாமணியும் அதிக ஆச்சரியத்தை யடைந்தவர்களாய் பின் வருமாறு சம்பாஷித்தனர்.

வி:—அண்ணா உலக வாழ்வு ? ஒரு வாழ்வா எல்லாம்மாய மாயிருக்கிறதே.

சி:—தம்பி இதற்கென்ன தடை, "வாழ்வாவது மாயமிது மண்ணாவது திண்ணம்" எனப் பெரியாரொருவர் கூறியுமுளரே.

வி:—இருந்தபோதிலும் பெருமோசமா யிருக்கிறதே.



சி:—தம்பி இப்போதென்ன வாயிற்று. சற்றுநேரத்திற் கெல்லாம் நடப்பதைப்பார். சற்றுமுன் மணமகனாயிருந்த செட்டியார் சில நிமிஷத்தில் பிணமகனாகப் போகிறார். அவர்மணத்திற்குத் தருவித்து இதுவரை கோஷித்துக் கொண்டிருந்த மணப் பறை பிணப்பறையாக மாறிவிடும். மணமகனுக்காக இளமங்கையர்கள் வாழ்த்திக் கொண்டிருந்த ஒலிகளானது அழுகை யொலியாக மாறிவிட்டது. இவை உலகத்தில் சகசமாய்நடந்து வருகிறதோடும் பெரியார் வாக்குமுளது எப்படியெனில்.

> மணமகனே பிணமகனாய் மணப்பறையே பிணப்பறையாய்
> மணமக்கள்வாழ்த் தொலியே யழுகையொலியாய்க்கழிய.

வெனக்கூறியுளார்.

வி.—அண்ணா இவர் இன்று உயிரிழப்பர் என்று என்ன நிக்ஷபம்.

சி.—தம்பி நானதை யறிவேன். அறிந்துதான் இவ்வளவு நேரம் தாமதித்தேன், இதை வைத்தியர்களுந் தெரிந்து கூறுவேதகினார். சற்று நேரத்திற்கெல்லாம் இக் குடும்பத்தில் ஓர் விநோதங் காணலாம்.

வி.—அண்ணா அது உனக்கு எப்படித் தெரியும்.

சி.—தம்பி செட்டியாருடைய ஜீவனைக் கொண்டு செல்ல இருவர் எதிர் பார்க்கிறார்கள். இங்குள்ளவர் அவர்களை யறியார்.

வி.—அவர்கள் யார் நான் அவர்களை யறியலாமோ.

சி.—உனக்கு அவர்களை அறியப் பிரிய மிருந்தால் இங்குவா காட்டுகிறேன். (சமீபத்தி லழைத்து விரலால் சுட்டிக்காட்டி) தெரிகிறதா.

வி.—தெரிகிறதண்ணா, அவர்கள் கையில் சூலமும் ஏதோ ஓர் கயிறும் வைத்துக்கொண்டு மிகப் பயங்கரமான கோர ரூபத்துடன் தோன்றுகிறார்கள்.

சி.—இவர்கள்தான் யமதூதர். காலன் தூதன் என்பவர்கள். இவர்களுக் கதிபதி யமதர்மராஜன். இவர்கள்தான் உயிர்களைக் கொள்ளை கொள்பவர்கள்.

வி.—அப்படியானால் இங்கு வராது அந்தரத்தே நிற்கின்றனரே காரணம் யாது?

சி.—காரணமா செட்டியாருடைய வினை கொஞ்சம் மிகுதியிருப்பதே அதற்குக் காரணம். அவ்வினையும் இரண்டு நாழிகைக்குள் அனுபவித்துத் தீர்ந்துவிடப்போகிறது. இவர்களும் உயிரைக் கவர்ந்து செல்வர்.

வி.—பிராரத்துவ கருமம் புசித்துத் தீர்ந்து மறுபடி இரண்டு நாழிகை மூன்று நாழிகை தாமதித்து நிற்ற லேலாதோ.

சி.—அது ஒரு நிமிஷமேனும் அப்புறமிருத்தற்குச் சாத்தியமாகா. அவர்கள் நீதிவழுவாது நிற்பவராதலால் ஏற்பட்டகாலத்தையெதிர் பார்க்கிறார்கள். மேலும் இவர்கள் தருமத்தினின்று அணுவளவுந்தவறார். இதுபற்றியே அறக்கடவுள் என்றும், தருமன் என்றும் காலன் என்றும் பெயர் ஏற்பட்டது. தவிர பெரியார் மொழிந்த வாக்கு மிங்கறியத் தகுந்தது.

"வினைப்போகமே யொருதேகங் கண்டாய் வினைதானொழிந்தால்
தினைப்போதளவு நில்லாது கண்டாய்"

என்று கூறியுளார். ஆகையால் இவர்களிருவரும் அடுத்த க்ஷணத்தில் செட்டியார் கழுத்தில் சங்கின் இருபக்கமும் நின்று அவருயிரைக் கவரப்போகின்றனர். அதற்குள் சில விநோதங்களைப் பார்க்கலாம் வா.

இருவரும் அவர் படுத்திருக்கிற கூடத்திற், (கூட்டமத்தியிற்) போய் நின்றனர். அது சமைபம் செட்டியார்க்கு கொஞ்சந் தெளிவு பிறந்தது. இதுதான் கடைசியில் யாவருக்கும் உண்டாகக் கூடிய ஞானம். தீபாதிகள் அணைந்து போகுஞ் சமயம் சாஸ்திப்பிரகாசந்தந்து சட்டென்று அணைந்து விடுவதுபோல் இங்கே செட்டியார்க்கு அந்தியகாலமானதால் நல்ல அறிவு பிறந்தது. அங்குள்ளோரிடத்தில் என்ன ஆச்சுதா வென்றார். இவருக்கு இன்னும் மணவரையி லுட்கார்ந்திருப்பதாக நினைவு என்று பக்கத்திலிருந்தவர் எல்லா முடிந்தது. புரோகிதர் போய்விட்டார். தாங்கள் கூடத்தில் கட்டிலில் படுத்திருக்கிறீர்கள் என்றார். செட்டியார் தலையை அசைத்துக்கொண்டு அங்கே எப்படியிருக்கிறது என்றார். பக்கம் நின்ற பெண்ணொருவள் இப்போ சமயந்தான் என்றாள். செட்டியார்க்கு குழந்தையைப் பார்க்க மிகுந்தபிரியந்தோன்றிற்று. ஒரு கிழவி ஓடோடியும் வந்து விலகுங்கள் என்று விலக்கிக்கொண்டு செட்டியார் காதோரம் வாயை வைத்து சிரசு உதயமாகி விட்டது



என்றாள். செட்டியார் ஆண்மகவுதானே யென்று ஆவலோடு கேட்டார். கிழவி பார்த்து வருகிறே னென்று விரைந்து சென்றாள். செட்டியார் முகத்தைத்திருப்பி உயர நோக்கினர். சட்டென்று கண்ணை மூடிக்கொண்டு அதோ வருகிறான் அதோ வருகிறான் என்று ஓலமிட்டனர்.

சி.—தம்பி பார்த்தையா செட்டியார்முன் தோன்றிவிட்டனர்.

வி.—ஆம் அண்ணா கண்டுதான் பாவம் கூச்சலிடுகிறார்.

செ.—கட்ட வாரானே அப்போ கட்ட வாரானே தூத்துங்களேன் ஒருவரும் வரவில்லை சும்மா படுத்திருங்கள் என்றார் ஒருவர்.

செ.—இல்லை. இல்லை (அழுகிறார் கண்ணில் நீர்வடிகிறது) நானில்லை ஐயோ கையுங்காலும் விறைத்துக் கொண்டது ஓவென்றலறுகிறார் கட்டிலை விட்டுக் கீழே யிறக்கிப் போட்டுவிட்டார்கள்.

எல்லோரும் இனிப் பிழைபா ரென்றார்கள். தாயார் ஒருபக்கம் வயிற்றி லடித்துக்கொண்டு மகனே மகனே யென்கிறாள். தகப்பனார் ஒருபக்கம் தலையி லடித்துக்கொண்டு எனக்கு வழியென்ன வென்கிறார். மூத்த மனைவி மார்பி லடித்துக்கொண்டு நான் பாவி நான் பாவி யிருக்கலாமோ வென்கிறாள். மகன் ஒரு பக்கம் முகத்தி லடித்துக்கொண்டு அப்பா அப்பா ஒன்றுஞ் சொல்லாது போகிறாயே நானென்ன செய்வே னென்கிறான். தங்கை யொருபக்கம் அண்ணா அண்ணா உன்னை நம்பி வந்தவளை நடுத் தெருவில் விட்டனையே நான் இனி எப்படிப் பிழைப்பேன் என்கிறாள். மகள் ஒருபக்கம் கண்ணீரை மாலை மாலையாக வடித்தழுகிறாள். குழந்தைகளெல்லாம் காகூவென்று கதறுகின்றன. அக்கம் பக்கமிருந்து வந்த இளம் பெண்களெல்லாம் ஏங்கி ஏங்கியழுகிறார்கள். இளையாள் இது செய்தியை அறிந்ததும் இன்னது செய்வது என்று வகையறியாது பைத்தியம் பிடித்தவள் போல் விழிக்கிறாள். இப்படி அல்லோல கல்லோலமாகக் கிடக்கிறது. இந்தச் சமயத்தில் சிகாமணி ஒரு யுக்தி செய்தான். அதெப்படி யெனில் உலகமோ மருள் கொண்டது. இதற்குத் தகுந்தவாறு நாமும் வேடந்தரித்துக் கொள்ளவேணு மென்று தனக்கு ஆவேசம் வந்ததுபோற் பாவனை காட்டி பேரிரைச்சலொன்று போட்டுக்கொண்டு உயரப்பார்த்தபடியே இங்குவராதே அப்படியே நில் என்று பல்லை நெறு நெறனக்கடித்தான். இதைப்

பார்த்த பலரும் திடுக்கிடென நடுங்கி ஒடுங்கி மூச்சுப் பேச்சில்லாது விலகி நின்றனர்.

சி.—கொண்டுவா கற்பூரம் (தட்டில் கற்பூரங்கொளுத்தி முன் வைத்தனர்.)

வி.—வந்திருக்கிற நீ இன்னாரெனத் தெரியவில்லை. அதை எங்களுக்குச் சொல்லவேணும்.

சி.—நானா. ஹும். உனக்குத் தெரியுமா நீ என்னை நினைத்தாலல்லவோ தெரியும். நீ உன் ஆஸ்தியையும் உற்றார் பெற்றாரையுங் கண்டு மகிழ்ச்சி யடைந்தவன் என்னை யறிவாயா அறியமாட்டாய்தான்.

வி.—எங்கள் பேரில் யாது குற்றமிருப்பினும் மன்னித்து நீ இன்னாரெனச் சொல்லி எங்களுக்கும் நன்மையைத் தரவேணும்.

சி.—நான்தான் உன் குலதெய்வம் என்னை உன் பாட்டன் காலமுதற்கொண்டு மறந்து விட்டீர்கள் இருந்தாலும் எனக்கு மனங் கேட்காமல் இப்போது வந்தேன். இதோ யமதூதுவர் இருவர் வந்து நிற்கிறார்கள்; உங்கள் ஒவ்வொருவருடைய அபிப்பிராயங்களையும் சொல்லவேணும். முதலில் பிள்ளை வரட்டும் (வந்து நிற்கிறான்.)

வி.—இதோ செட்டியாருடைய குழந்தை மூத்தவர் வந்திருக்கிறார்.

சி.—அப்பா உன்னுடைய அபிப்பிராயமென்ன?

மகன்.—சுவாமி தங்களுக்குத் தெரியாததல்ல. ஆயினுங் கேட்டதால் சொல்கிறேன். உலகில் ஜீவர்களுக்கு இறப்புண்டென்பது நிச்சயம். எத்தனைகால மிருப்பினும் ஒருநாளிறத்தல் திண்ணம். அதுபோல் என் பிதாவும் இப்போது அந்தச் சந்தர்ப்பத்திற்றா னிருக்கிறார். ஒருவேளை யின்று பிழைத்திடினும் இனியொருக் காலத்திலாயினும் மரித்திடுவரென்பதிற் றடையில்லை. இதைப்பற்றியும் எனக்கு அவ்வளவாகக் கவலையில்லை. எங்களுக்கு ஏராளமான செல்வங்க ளிருக்கின்றன. அதை பிதாவே சம்பாதித்தவர். அவரே யாண்டு வந்தனர். நான் அதில் தலையிடுவதில்லை. இவ்வளவு பொருள் இருக்கிறதென்றும் இன்னின்ன விதம் வைத்திருக்கிறாரென்றும் இதுவரை எனக்குச் சொன்னவரல்ல. [illegible] யிருக்கட்டும் கடைசியில் எங்கே நம்மைவிட்டுப் போகப்போகிறது அப்போதாவது



சொல்வா ரல்லவாவென் றெண்ணியிருந்தேன். இதுவரை யிருந்ததுபோலவே யிப்போதுஞ் சொல்லாது போகப் பார்க்கிறார். இவ்வளவு வஞ்சக நெஞ்சையுடைய பிதாவை நானொரு பக்கமும் பார்த்திலேன். அவர் வைத்திருக்கிற விடமுஞ் சொல்லவில்லை. கொடுத்திருக்கிற இடமுந் தெரிவிக்கவில்லை. வாங்கியிருக்கிற இடம் சொன்னாலும் சொல்லாது போய்விடினும் பாவாயில்லை. வந்து கேட்பார். கொடுத்த பேர் வழிகளைச் சொல்லாது போனால் எப்படி வசூல் செய்வது? நானும் மனைவி மக்களோடு தாயார் பாட்டன் பாட்டி முதலிய கிழங்களை வைத்துக்கொண்டு எப்படி ஜீவிக்கிறது? இதற்காகத் தான் கொடுத்த விடமும் புதைத்த விடமுஞ் சொல்லிவிடுமென்று எவ்வளவு கத்தியும் சொல்லாது போய்விடுவர் போலிருக்கிறது. நான் இனி என்ன செய்வேன். நீ யாவது சொல்லிவிட்டுப் போகும்படி செய்தால் உன்னை நான் எப்போதுங் கொண்டாடுகிறேன். என் தகப்பன் பாட்டன் போல் மறந்துவிடுவானென்று நினைக்காதே. அவ்வளவு கிருபை செய். நீயே யினித்தஞ்சம் (என்று கீழே விழுந்து நமஸ்காரம் பண்ணினான்.)

சி.—சரி உன் அதிர்ஷ்டப்படி செய்வோம் எழுந்திரு வேறே வரட்டும்.

வி.—இதோ தகப்பனார் வந்திருக்கிறார்.

சி.—உன்னுடைய அபிப்பிராயம் என்ன தெரிவி.

த.—நான் உன்னை இதுவரை நினையாதிருந்த குற்றத்தை மன்னிக்கவேண்டும். நா னிவ்வளவு கால மிருந்து கஷ்டத்தை யனுபவித்தது போதாதா. இன்னமும் இருந்து அனுபவிக்கவேண்டுமா. நான் போய் அவனிருந்தாலும் என்னை நல்லடக்கம் செய்வானே எனக்கு வேண்டிய கிரியைகளை யெல்லா மியற்றுவான். அவனால் நாம் நல்ல கதி பெறலா மென்றெண்ணி யிருந்தேன். அப்படி யெண்ணிய வெண்ணமெல்லாம் இப்போது மண்ணாய் மடிந்துபோகும்போ லிருக்கிறதே நானென்ன செய்வேன். நானின்னு மிங்கிருந்து கஷ்டப்பட வேண்டுமா எனக்கு மரணம் வரவில்லையே தெய்வமே நீயாவது கிருபை செய்து என்னையுங் கூட்டிப்போய்விடு. (என்று நிலத்தில் விழுந்து நமஸ்கரித்தார்.)

சி.—வேறே வரட்டும். நீ யெழுந்துபோ யுட்கார்.

வி.—தாயார் வந்து நிற்கிறாள்.

சி.—என்ன உன்னுடைய அபிப்பிராயம்.

தா.—எனக்குப் பெற்ற வயிறு பற்றி யெரிகிறது. இதைக் குளிர வைக்கவேணும் அவ்வளவுதான். வேறு என்னையுஞ் சீக்கிரம் உன்பாதம் சேர்த்துக் கொள்ளவேணும் கண்ணுங் கருத்துமுள்ளபோதே. வேறொன்றும் வேண்டாம். (என்று கையெடுத்துக் கும்பிட் டழுதாள்.)

சி.—அடுத்த பேர்வழி வரட்டும்.

வி.—இதோ அவருடைய மனைவி மூத்தாள் வந்து நிற்கிறாள்.

சி.—உன் கருத் தெதுவோ அதைச் சொல்.

மனைவி.—என் கருத் தென்ன கருத்து கரி முடிந்துபோவாளுக்கு கருத்து வேறேயா நல்ல மணத்தோடு கட்டையைப் போட்டுவிட வேண்டும். இது ஒன்றுதான் எனக்கு வேண்டியது. அவர்கள் போய் நானிருப்பது தகாது. நான் முந்திக்கொள்ள வேண்டும். இந்தத் தயவு மட்டும் வைக்கவேண்டும். (என்று அடி தொழுதாள்.)

சி.—மற்றவர்கள் வரட்டும் சீக்கிரம்.

வி.—இதோ மகளுந் தங்கையும் மருமகளும் வந்து நிற்கிறார்கள்.

சி.—சரி உங்கள் மூவர் அபிப்பிராயத்தையுந் தனித்தனி தெரிவியுங்கள்.

மகள்.—என்னை எனது பிதா தன்னுடைய தமக்கை மகனுக்குக் கன்னிகாதானஞ் செய்து வைத்தார். அவர் நன்றாய்ப் படித்தவர். ஏதோ துரதிஷ்டத்தால் எனக்கும் அவருக்கும் ஒற்றுமை கிடையாது. அவர் செய்வது எனக்குப் பிடிக்கிறதில்லை. நான் செய்வது அவருக்குப் பிடிப்பதில்லை. அடிக்கடி முறைத்துக் கொள்வார். ஒரு சமயம் எனக்குக் கோபம் வந்து காரி உமிழ்ந்தேன் முகத்தில். அத்தோடு வெளிக் கிளம்பினவர்தான். அப்புறம் வரவில்லை. சன்னியாசம் பெற்றுக்கொண்ட தாய்க் கேள்வி; அவரிருக்கும் போதும் அடிக்கடி.

"பத்தாவுக் கேற்றபதிவிரதை யுண்டானால்
எத்தாலுங் கூடியிருக்கலாம்—சற்றேறு



மேறுமாறுக விருப்பளே யாமாகிற்
கூறாமற் சன்யாசங் கொள்"

என்று சொல்வர்.

அதுபோலவே போய்விட்டனர். அதன் பின் இனி யென் செய்வதென நினைந்து உலகில் பெண்கள் எப்போதும் தற்சுதந்தரத்வமுடையவரல்லவே. சிறு குழந்தையில் தகப்பனும் யௌவனத்தில் புருஷனும் முதுமையில் புக்திரனும் பாதுகாப்பவர்களென்பதும் அவர்களுக்கு இவள் அடங்கி யிருத்த லவசியமென்பதும் தெரிந்தவளாய் தகப்பனார் வீட்டில் வந்து யாதொரு குறைவில்லாது காலங்கழித்தேன். இப்போது எனது பிதாவுக்கு இந்த மாதிரி வந்திருக்கிறது. நானினி யாது செய்வதென்பது தோன்றவில்லை. ஆற்றில் குளத்தில் விழுந்திறந்துபோகலா மென்றால் உலகர் பழிப்பர் மேலும் தற்கொலை செய்வது தகாது. அதற்கும் மனம் உடன்படே னென்கிறது துணிவில்லை. இன்னது செய்வதென்பது தோன்றவில்லை. கடவுள் விதித்தபடி நடக்கட்டு மென்றிருக்கிறேன் (என்று சற்றுவிலகிக் கொண்டாள்.)

தங்கை.—நான் ஒன்றொன்றாய்ச் சொல்லவா ஒரு மிக்கச் சொல்லவா வென்பது போல என்பாடுகளை எதை யென் றெடுத்துரைக்கப் போகிறேன். என்னை என் தாயுந் தகப்பனும் சொந்தப்பந்துக்களில் எத்தனையோ மாப்பிள்ளைகளிருக்க என்னை அன்னியத்தில் என் கணவருடைய கல்வியையும் குணத்தையும் செல்வத்தையும் நோக்கிக் கல்யாணம்பண்ணி வைத்தனர். நானும் அவரிருக்கும் வரை நல்லமணத்தோடு நகமுஞ் சதையும் போலவும் உயிரும் உடலும் போலவும் பூவும் மணமும் போலவும் பொருந்தி வாழ்ந்து இரண்டு பிள்ளைகளையும் பெற்றேன். அவருக்குப் பிரமா கொடுத்த ஆயுள் அற்பமாயிருந்தபடியால் சரியான பிராயத்தில் சரீரத்தைப் போட்டுப் போய் விட்டார். அவருக்கு உடன் பிறந்த சகோதர சகோதரிகள் கிடையா. ஒரேபிள்ளை தாயார் மட்டுமிருக்கிறாள். தகப்பனார் சிறு பிராயத்திலேயே சென்று விட்டார். ஆகையால் என்னை ஆதரிக்க யாருமில்லாததால் இங்கு தமையனாரிடம் வந்து சேர்ந்தேன். என் ஆஸ்திகளை எல்லாம் இவரே ஒப்புக்கொண்டு மேல் பார்த்து வருகிறார். குழந்தைகளோ பள்ளிக்கூடத்தில்

படிக்கிறார்கள். அது தலையெடுத்துச் சுயமாய்க் குடும்பத்தைக் கவனிக்கும் வரை இங்கு காலங்கழிக்கலாமென்றிருந்தேன். என்னை யாதரித்த தமயனார் இப்பாடு படுகிறார். என்னுடைய பாடோ சொல்லி முடியாது. நமது பட்டினத்துச் சுவாமிகள் சொன்னவாறு,

“பூணும் பணிக்கல்ல பொன்னுக்குந் தானல்ல பூமிதனைக்
காணும்படிக்கல்ல மங்கையர்க்கல்ல நற் காட்சிக்கல்ல
சேணுங்கடந்த சிவனடிக்கல்ல வென் சிந்தை கெட்டு
சாணும் வளர்க்க அடியேன் படுந்துயர் சற்றல்லவே.” என்பதுபோல

நானிந்த சாண் கும்பிக்கு இங்கு வந்து எவ்வளவோ பாடுபடுகிறேன். அதை நினைத்தற்கும் சொல்வதற்கு முடியாது. இவ்வளவே எனது விண்ணப்பம், (விலகிக்கொண்டனள்.)

மருமகள்.—யானோ ஒன்று மறியாச் சிறு பெண். எனக்கு யாதொன்றுந் தோற்றவில்லை. ஆனால் இவள் இந்த வீட்டில் வந்து புகுந்த சில நாளிலேயே மாமனை வழியனுப்பிவிட்டனள் என்ற வசையை உலகோர் பேசாவண்ண மிருக்கப் பிரார்த்திக்கிறேன். இதைத் தவிர வேறொன்றுஞ் சொல்வதற்கில்லை. (என்று ஒரு பக்கம் போயினள்.)

சி.—இன்னும் யாரேனு மிருக்கிறார்களா? (ஒருவரும் பேசவில்லை)

வி.—செட்டியாருடைய மனைவி இளையாள் ஒருவள்தான் பாக்கி மற்றவர்களெல்லாம் சிறுவர்கள்

சி.—அவளிங்கு வரச் சந்தர்ப்ப மில்லைபோ லிருக்கிறது.

வி.—ஆம். பிரசவ வேதனை பட்டுக்கொண் டிருக்கிறதாகத் தெரிகிறது.

சி.—ஒரு பெண்ணை யனுப்பிக் கேட்டுவரச் சொல். (ஒருவள் போகிறாள் இவள்தான் செட்டியார் மகள்.)

மகள்.—அம்மா நங்குல தெய்வம் வந்து ஒவ்வொருவருடைய அபிப்பிராயத்தையுங் கேட்டது. எல்லோரும் சொல்லியாயிற்று. நீ பொருத்தி தான் பாக்கி. உன்னபிப்பிராயத்தைக் கேட்டுவரச் சொல்லிற்று என்னிடஞ் சொல்.

இளையாள்.—மகளே நானென்ன சொல்வது நான்படுகிற கஷ்டத்தில் என்னைக் கேட்கிறாயே உனக்குத் தெரியாதா சொல்லேன்.



மகள்.—நான் சொல்வதா யிருந்தால் இங்கு ஏன் வரவேணும். உன் வாக்காலுன் அபிப்பிராயந் தெரிய நம் குல தெய்வத்தின் எண்ணம். ஆகையால் நீயே சொல்.

இளை.—குழந்தாய் உனக்குத் தெரியாததை நான் என்ன சொல்லப் போகிறேன். நான் உன்னைப் பார்க்கிலும் அதிகக் கல்விகற்றிருப்பினும் உன்போற் பேசுந்திறமை யுடையவளல்ல. நீ கல்வியிற் குறைந்தவளாயினும் சொல்லுந்திறமை வாய்ந்தவள். ஆகையால் சுருக்கி யுரைக்கின்றேன். அதை நீ போய் விரிவா யெடுத்துரைத்துக்கொள். நான் என் மனதிலுள்ளதை ஒளியாது புகல்கின்றேன். மகளே நான் உன்னிலுஞ் சிறுபெண், உனது பிதா வயோதிகர். எனக்கவர் பதியென்ற நாமம் ஒன்றைத் தவிர அதற்குற்ற காரியங்களில் பிரயோசன மின்று. வேண்டுவண யாவுங் குறைவற நடந்து வருகிறது. யானோ எல்லா நலனு மனுபவித்தற் குரியவள். என் போன்ற பெண்கள் பழித்தல் கூடாது. சிசுஹத்தி தற்கொலை முதலியவைகளுக்கு மிகவும் பயந்தவள். எமனுக்கு ஏழுபிள்ளை கொடுப்பினும் உற்றார்க் கொருபிள்ளை கொடுக்கச் சகியார் என்னும் பழமொழி போல் நான் குழந்தையை மன மொப்பிக் கொடுக்க மனம் வராது. உலகவாழ்வை மிகவும் விரும்புகிறேன். தன்னைப் போல் பிறரை நேசி என்பது போல் உன்னைப்போல் என்னையும் பார். அவாவற்ற வரை அறக்கடவுளணுகாது. என்னுளை தவிற்கார் உனது பிதா இவ்வளவே எனதுளம். அப்புறம் என் விதிபோல் நடக்கிறது (என்று கண்ணீர் விட்டழுதாள்)

பக்கதிருந்த அவள் தாய் கண்ணீரைத் துடைத்துவிட்டு:

அழுதாற் பயனென்ன நொந்தாற் பயனென்ன வாவதில்லை
தொழுதாற் பயனென்ன நின்னை யொருவர் சுடவுரைத்த
பழுதாற் பயனென்ன நன்மையுந் தீமையும் பங்கயத்தோ
னெழுதாப் படிவருமோ சலியாதிரென் னேழைநெஞ்சே.

வெனப் பாடிய பட்டினத்தார் பாட்டை உன்பிதா அடிக்கடி சொல்லக் கேட்டிருக்கிற நீ இம்மாதிரி மலைக்கலாகுமா; வருவது வருகவென தைரியமாக இருவென்றாள். (இங்கிப்படியிருக்க) அங்கு செட்டியார் மறுபடியுங் கூச்சலிட்டனர்.

தூதுவர்.—அடே துஷ்டா ஏன் வீணில் காலத்தைக் கடத்துகின்றாய் வா இப்பக்கம்.

சே.—ஐயோ நானங்கு வரமாட்டேன். என்னை விட்டிடுங்களேன்.

தூ.—அடே பைத்தியக்காரா நாங்க ளென்ன போலீஸ்காரர்களா என்ன எதையாவது வாங்கிக்கொண்டு இன்னொரு சமயம் பார்த்துக்கொள்வோமென்று விட்டுப்போக, சீ, எழுந்துவா.

சே.—எது கேட்பினுங் கொடுக்கிறேன். தயவு செய்யுங்கள்.

தூ:—உன்னுடைய உயிரைக்கொண்டு செல்வதற்காகவே வந்திருக்கிறோமே நீ யென்ன கொடுப்பது நாங்கள்வாங்க.

சே:—உயிர்க்குப் பதிலாக வேறெதைக் கேட்பினுந் தருகிறேனையா.

தூ:—குடி தண்ணீர்க்கு காசுவாங்கிய கொடும்பாவி நீ; உன்னிடம் நாங்களா யாசிக்கவேண்டும். நிரம்ப நல்லா யிருக்கிற தடா அந்த மட்டும் நீ சமர்த்தன்றான் வாயைமூடு.

சே.—இப்புவியில் நானொருஜீவன்றா னிருக்கின்றேன். வேறொருவர் உங்களுக்ககப் படவில்லையா ஏழைபேரில் கொஞ்சம் மனம் வையுங்களேன்.

தூ.—அடேகருமி உன்பக்கத் திலிருக்கிற சிறு வர்களாலல்லவா இவ்வளவு வாதாடுகிறாய். அவர்களுக்காக இதுவரை பொறுத்தோம். இனிஎங்கள் வேலையை நாங்கள் பார்க்கிறோம் (பாசவலையை வீசி இழுத்தார் பக்கத்தினின்ற சிடாமணியின் காலைக்கட்டிக் கொண்டு.)

சே.—ஐயோ இழுக்கிறானே இழுக்கிறானே பிடியுங்களேன்.

சி.—ஐயா இனிநீர் இங்கிருத்தற்கில்லை; அவர்களோடு செல்லவேண்டியதுதான் விதியைக்கடப் பதற்கு யாரால் சாத்தியம்; என்காலை விட்டிடும்.

சே.—ஐயோ என்விதி யிப்படியா நேர்ந்தது. எப்படி யாயினுஞ் சரி என்மனை வியைக்கண்டு ஓர் வார்த்தை சொல்லிவிட்டு குழந்தை பிறக்குந் தருவாயிலிருப் பதாய்ச் சொன்னார்கள். அதையுங்கண்ணால் பார்த்துக் கொண்டு வருகிறேன் இவ்வளவு தயவு வைத்தாற் போதும்.

தூ.—அது ஒருபோதும் முடியாதகாரியம் நினைப்பதிற் பலனில்லை வீண்கலக்க மடையாதே பேசாது வா இதெல்லாம் எப்போது வேண்டியது.



சதுர்வேத னிருகாது சடகெஞ் சழல் மூர்த்து
சண்டாளி யென்றாகரா
விதியோயிதென் றிருகை செவியோடறைந்தரு
விழுந்தா னெழுந் தோடினன். (62)

இவனோடவ வளிவனை யினிவிடே னென்றோட
இடையிலொரு மகவீன்றன
ளவனோ டோர்காலேக மகனோடோர் காளிப்ப
வஞ்ஞான மென்றனையனை
பவனோடு நீயேகு பகிரண்ட கோடியும்
பயிர் செய்தளித்த பரம
சிவனோடு முமையுண் டெனக்கென மகச்சொலத்
தேர்ந்தாறு சேர்ந்தாளரோ (63)

இவ்வாறு சென்று சென்றிடையிடை யனைத்தனைத்
தீன்றாளோரோ ரோர்மகவை
யவ்வாறு மகவுகளு மெஞ்ஞான மோதலா
லஞ்ஞான மேதுமிலளாய்
செவ்வாய்மையிற்பிரம தேவனால் விதிதருஞ்
செய்கையா லானருளினூ
லவ்வாறு குழவிகளுதித்தது விதித்திற
மொழித்திட லெவர்க்குமரிதால் (64)

வேறு

இருபாலுநேர் நோய்ப் பிறந்திடத்திற் கிடக்தழவவ்
விடங்களாறாய்
வருவார்கண்டெடுத்துவளர்த் தனாதிலுத் தங்காட்டில்
வண்ணார் வீட்டில்
திருமூவரொனுஞ்சேயி லுப்பை யெனவொரு சேயுஞ்
சிர்கா வேரிப்
பொருவில்பூம் பட்டணத்தி லுருவை யெனக்கள்ளிடுவர்
புகலவோர் சேய் (65)

இன்னியபற்பாடியிற்பாண ரிலத்தவ்வை யெனவொருசே
யினியாண் மூவர்

மன்னிய சீர்வஞ்சியிடை மன்னரகத்ததிகமானென
வோர் மாண்சேய்
பின்னொருசேய் மயிலாப்பூர்ப் பின்னவர் வள்ளுவனெனவப்
பிறஞ்சேரிக்குட்
பன்னுகலையாரு ரந்தணரகத்திற் கபிலனெனப்
பாலனொன்றே. (66)

ஆமிந்த வறுசேயுமறு தேயத்தறு நகரி
லறுவர்ணத்திற்
றாமிந்தப்படி வளர்ந்தாரொரு வதனச் சதுர்வதனன்
றன்பினோடிப்
போமந்தக் கடைக்குலமாய்ப் பிறந்துமுதற்குலமான
பொருவில் வாணி
காமங்கொடணைய வள்ளிக்கன்னி பிறந்ததுஞ்சிறிது
கழறலுற்றாம். (67)

உற்பவப்படலம் முற்றும்.

## 4. திருவவதாரப்படலம்,

வருபிதாமகன் மகன்மகிழ் மகளெனமலர் மீச்
சொருபிதாமக னிலத்தென வனைவாத் துறந்தோ
ருருபிதாமக னென்னென வேட்டல் செய்துவகை
தருபிதா மகனிருகழல் புனைதுமென் றலைக்கே. (1)

பாவிரண்டினு மூன்று மூன்றாக வப்பாலே
மேலுணர்ந்தனன் பவந்தனி விளைந்ததும் விரிநீர்த்
தாலம்வந்துறு தொடர்க்கெனுஞ் சடக்கினைத் தவிர்க்குங்
காலம்வந்தது முணர்ந்தனன் சிவமுனிக்கஞ்சன். (2)

வேறு

நவமுடைய வள்ளிமலை தனிலேபோந்து
நவநாதர் முதலான ஞானயோக
தவமுனிவர் தத்துவல்ய சமாதியாதி
சவ்விகற்ப நிருவிகற்பந் தானொடு



மவுனமறு சமாதிவரையியற்ற மற்ற
மாவிருடிகளுந் தவசுபுரிந்து மேலாஞ்
சிவகதியையடைய விது தெரிந்தானந்தச்
சிவமுனியுமது துணிந்தான் சென்மந்தீர்ப்பான். (3)

கருத்திலுற்ற படி முடிக்கும் பொருட்டினாலக்
கனவரையை யடைந்து நதியாடிக்காதல்
விருப்பமுறச் சந்திசெய்து இயமமாதி
மிருநியம முணர்ந்து நவாசனத்தையாய்ந்து
திருத்துபது மாசனத்திலிருந்து யோகஞ்
செய்கின்றரேசக பூரககும் பத்தின்
மருத்துவதை நிறுத்தி மூலாங்கிமூட்டி
மனுவுறு சபீசநிர்ப் பீசத்தவாகி. (4)

பிறத்தியா காரந்தாரணையுந் தீர்த்துப்
பேசருந்தியான மீரைந்தும் பின்னே
திறத்துறு சமாதியைந்துஞ் செய்யுங்காலை
சிவபெருமான்றிரு வருளாற் சேடந்தீர
நிறத்தினிய பாலனந்த நிறையைச்சேரு
நினைவினளாய் நின்றிவன்றனிலைமை போர்ந்தே
அறத்தனிமான் பதத்துணைபை யகத்துளேத்த
வம்மானோர் பொன்மான தாகினாள். (5)

ஒரு மானாய்க்கலைமானா முருவாய் வேள்வி
யோங்கவில் வந்தங்கு தவசுற்றவேதப்
பெருமான் முன்விளையாடக் கண்டான் முந்தப்
பெம்மானோடேற்ற கழைப்பிரச நான்மா
றருமாரன் விதிவழி வந்தேற்றானந்தோ
தாயத்தார் பகையெளிதோ சாற்றுங்காலை
செருமாலின் மிகத்தளர்ந்து பெருமானுற்றச்
சிவமுனியு மயறீரச் சேர்ந்தானன்றே. (6)

வேறு

புணர்ந்தனன் சிவமுனிபொன்னின் மானொடுந்
தணந்தனன் மோகமுந் தவிர்ந்தகாலையி

துணர்ந்தனன் றொடர்ந்தன வூழியென்றனன்
கணந்தனிதுழை யதுங்கருப்ப முற்றதே. (7)

சூலதுமுதிர்ந்தன சமந்தமானது
மேலது பசந்தன வெளுப்பதாகின
வாலது நிமிர்ந்தன வயிறுழைந்தன
காலதுதளர்ந்தன கமலன் காணவே. (8)

துள்ளியங்கின்றன சுதையொன்றுங் கொரு
வள்ளியங் கிழங்ககழ் குழியில்வண்டுயர்
தன்ளியங் கெழுந்தன சாபந்தீர்ந்ததால்
வெள்ளியங்கிரியுறை விமலராணையால். (9)

சத்தியலோக மீத்தங்கு மோதிம
மித்தகைவரையின் வந்திறைஞ்சி நின்றன
வத்தலையறிந்தன ரயனும் வாணியுந்
தத்தமதெழிலுருத் தானதாகினர். (10)

ஆனவப்போதினி லந்தரத்துறை
வானவரொடு மகவானு மேனைய
தானவர்கிஞ்சையர் தாமும்வந்துவான்
மேனவமலர் மழைவிளங்கப் பெய்தனர். (11)

வானுளார் மலருளார் வரவுபார்ப்பதாற்
பானுவுமகிழ்ந்தது பார்க்கு மாசையால்
கானதில்வெங்கதிர் காந்து வந்தபோ
லானபைங் குழவியினழ கின்றோற்றமே (12)

எழுந்தனரனமிசை யிசையுநான் மறைக்
கொழுந்தன வயனும்வெண்குயிலுஞ் சென்றுதஞ்
செழும்பதம் புகுந்திருந் தனர்கடேவர்க
டொழுந்தொறுஞ் சிறந்தருள்புரியுந் தொன்மையார். (13)

கலையவனுழையயன் முனியதாகக் கோத்
தலமிசை வந்ததுந் தனையளீன்றதுஞ்
சிலதுசொற்றனம் பினத்தெய்வமா மகண்
மலையரில் வளர்ந்ததும் வழுத்துவாமரோ. (14)

(திருவவதாரப் படலம் முற்றிற்று)

## 5-வது வள்ளி குறவரில்லில் வளர்ந்த படலம்.

அகமகத்தி லெழுதக்கன் மிக்கமல
ரயன்முதற் கடவுளர்வருதி நீர்
மகமியற்று மென வுடனியற்றவது
வடவையிற் கனல்வதனமீ
மிகவெயர்த்தளவில் விறல்செய்பத்திரனெழ
வினைசெய்தக்க னெடுபுலவரோ
டிகலவிட்டுமக மழிசெய் நித்தன்மக
னிளையவர்க் கடிமைபுரிகுவாம். (1)

வேறு.

வேடரிற்சிறந்த நம்பியொடுமவன் விரும்புமின்னுந்
தேடரிதாய பெண்ணின் சிசுவின்மேல் வைத்தகாத
லோடவரிருக்கவை வேலுளவர்கள் சிலம்பவேனற்
காடரியெண்குமேதி களிறுவந்திறுத்த தென்றார். (2)

வேறு

சொன்னது கேட்டனன் சூழ்ந்துவேட்டையா
லன்னதை யடும்பரி சாயுதங்கண்மற்
றென்னெனவுள தெடுத்தெழு மீனீரென
மன்னனுநாமுமே வருதுமென்றனன். (3)

குறவரு நன்றெனக் கூடியார்த்தன
ரிறைவனுமக்களுக் கிவையுரைக்கவத்
திறலுடை வீரருஞ்சினத் தெழுந்தன
குறவருமிரை பலவுண்டியுண்டுமே. (4)

வாள்களும் வேல்களும் வாங்குவார்சிலைத்
தோள்களும் வலைகளுஞ் சுற்றுபாசமுந்
தாள்களுங் கழல்களுந் தங்குவேட்டையி
னீள்களிறெதிர்க்கினு நீட்டுஞாங்கரும். (5)

கறுப்பினும் வெளுப்பினுங் கலந்ததாயின
நிறப்பருமிதத்தினு நீண்டசெந்நிறக்
குறிப்பினிற் பரியினக் குட்டியென்றிடு
முறுப்பினின் ஞமலிகளொருங்கு சேர்த்தனர். (6)

இரைத்தனரெழுந்தன ரேகுமெல்லையிற்
குரைத்தது விடப்புறங்கோடி கோகிலம்
நரைத்தது கரிக்குரீஇ நடக்கவாமமே
னிரைத்தது பற்பன்னன் னிமித்தமாகவே. (7)

போயினர் நடந்தனர் புனத்துவேட்டையி
லாயினர் வளைந்தனர் வலைகொண்டங்குள
காயின விலங்கினங் கலங்க வாங்கதின்
மேயினர் பற்பல விறல்வில் வீரரே. (8)

இப்படி வேட்டையிலேற்க வெண்ணிறக்
கப்படியூர்திமேற் கருணை கொடம்புயத்
தொப்படி மகக்கிடந்தொளிரு மேலவா
யப்படிமார்க்கம் வந்தடைந் திட்டார்களே. (9)

அடர்தரு குறவர்களாடல் பார்த்தொரு
படர்தருநீழலிற் பகைஞர் மண்டமர்
கடர்தரு வேலினா னிற்பக்கண்ணெதிர்
சுடர்தருமதியிலோர் சோதி கண்டனன். (10)

யாதுகொலிது வெனவையுற்றே பகற்
போதுதண் கலையெலாம் பொருந்துறுதநா
ளோதுதென் றிசையினி லுதிக்குமோமதி
யீதுமோரதிசய மீண்டிதென்னவே. (11)

வேறு

காலமன்றிய மரங்களும் பூத்தன காய்த்த
சாலவுஞ்சில பழுத்தன பட்டதுந் தழைந்த
சீலமிங்கிவை தெரிந்திலங் குறிஞ்சியிற் செங்கை
வேலனிங்கிவை புரிவினையாட்டிதோ வினவில். (12)

வேறு

ஆகிலுந்தூரமில் லநகிற்றோன்றின
போலியங் கறிகுது மென்னும் புந்திவைத்



தேகினன் செவிக்கமு தென்ன வின்புறக்
கோகிலந்தனின் மகக் கூவக் கேட்டனன். (13)

கண்டனன் குழவியைக் காதலங்கடல்
கொண்டன னெடுத்தனன் குடங்கையான்முக
முண்டக முத்தினன் முகத்தி லொத்தினன்
றிண்டடந்தோண் மிசைச் சேரச் சேர்த்தினான். (14)

மலையது விரண்டென வுயர்ந்தவாகுவுஞ்
சிலையெனவிரிந்தன மார்புஞ் செங்கணு
மலையென வகன்றன வாருந் தன்னைநே
ரிலையென மிகக்களிப் பெய்துஞ் சிந்தையான். (I5)

ஆடிடும் பாடிடு மானந்தத்தினிற்
கூடிடுவரிற்களி கூருமாமறை
தேடியுமறியொணாப் பொருடன் செங்கையிற்
சூடிடுமவன்செயல் சொல்லி முற்றுமோ. (16)

தேவருமகிழ்வொடு சேணில் வந்துறப்
பூவருடங்களைப் பொழிந்து நின்றனர்
தாவருங் குறவரும் வந்துதத்தமக்
கேவருந்திருவி தென் றுவகையெய்தினார். (17)

கூடுவரொருமுகங் குறவர் நின்றுநின்
றாடுவர்சிலர் சில ரானந்தம் பெறப்
பாடுவர்முருகனைப் பணிவர் நம்மிறை
தேடுவகிடைத்ததின் றென்று செப்புவார். (18)

வேட்ட முந்துறந்தனர் குறிஞ்சிமேவினர்
கூட்டமதாயிளங் குழவியாமறைப்
பாட்டகப் பொருளினைப் பார்த்துப் பார்த்திரு
நாட்டமு மிமைக்கிலர் நம்பியோடுமே. (19)

சென்றனரதிற்சில சிலவர் முந்துபோய்க்
குன்றவரிறை வியைக் குறுகி ன்னை நீ
முன்றவமியற்றிய பலன்கண் முற்றுற
வின்றதுகிடைத்த தென்றிறைஞ்சிச் சொல்லுவார். (20)

வேறு

வேட்டைபோயின மாடல்செய்தனம் விறல் வேந்தோர்
மாட்டதேகியே நின்றனன் விழிக் கொருமதிபோற்
காட்டவேகினன் கண்டனன் எடுத்தனன் பன்னாட்
டேட்டமான பெண்குழவி யென்றனர்களி செய்தார். (21)

அன்னசோபனங் கேட்டவ ருவகையைய ளவிட்
டென்னவென்ன வென்றோதுவ தெழுவகைகடந்த
மின்னனுளிள மடந்தையா யிள முலைவிம்மிப்
பொன்னவாமுடல் பச்சடம்பாய்ப் புளகித்த. (22)

அந்தவேளையி லரசனுங்குழவி கொண்டணைந்தான்
கொந்தவார்குழற் கோதையைக் கூவினன் கொடுத்தான்
வந்தமாமகவாங்கினண் முகந்துவைத் தணைத்தாள்
சந்தமாமுலை பீரிட வூட்டின டையல். (23)

சந்தமுங்கமுகின்கனி வெள்ளிலை தானுங்
கந்தமுங்கனி காய்மதுக் காணவர்க் குதவிப்
பிந்தமங்கையர்க் களித்தளித்தெவர்க்கும் பேருண்டி
யந்தநம்பிமன் முருகர்க்குந் திருவிழா வமைத்தான். (24)

சாற்றுவார்கதிர் மணியினைக் கழுவியதகையா
ராற்றுவார் புனலாட்டுவார் காப்பெடுத் தணிவார்
கீற்றுவார்பிறையலதிது நுதலெனக் கேழ்வார்
தேற்றுவார்களிற் சிந்துரந்தீட்டுவர் சிலரே. (25)

எழில்செயண்டமு மியாவையும் பார்வையாலியற்றிப்
பொழியுமன்பினு விமைத்திடிற் பொன்றுமென்றிமையா
விழியிலஞ்சன மெழுதுவ ரெழுதுமோ வியத்து
மழகமைக் கொணுவன்னையைக் குழவியாயமைத்தே. (26)

உச்சிபொத்துவர் தலைப்பணிதிருத்துவ ருவப்பார்
கச்சியற்றிய முலையினருலகை யங்கைமேல்
வைச்சியற்றிய விறைவியைச் சிறுவியாய் வளர்ப்பார்
தச்சியற்றிய தொட்டில் வைத்தாட்டியஞ் சலிப்பார். (27)

காதணிந்திடு குழைகளுங் ககனத்தினெழுமின்
னேதணிந்திடு மிடைக்கரை வடங்களுமெழிலார்
மாதணிந்து நற்பணிமணிமாலை பன்மணியும்
யோதணிந்திடு குழலியர் கள மிசைப்புனைந்தார். (28)

## ஸ்ரீபாகவதம் தமிழ் வசனம்.

ஸ்ரீகிருஷ்ண சரித்ரங்களை உட்கொண்ட ஸ்ரீபாகவதத்தையும் ப்ரதமஸ்கந்தம் தொடங்கி மூலத்திற்கிணங்க மொழிபெயர்த்து அழகான சித்ரப்படங்களோடு அச்சிட்டுக்கொண்டு வருகின்றோம்.

இதில் ஸ்ரீபாகவதம் முதல் வால்யம் (ப்ரதம த்விதீய ஸ்கந்தங்கள்) அச்சாய் விட்டது. இதன் விலை. ரூபாய் 1-0-0) (தபால் சார்ஜ் ப்ரத்யேகம்).

இரண்டாவது வால்யம் (த்ருதீய ஸ்கந்தம்) அச்சாகி வருகின்றது. இதுவும் கூடியசீக்ரத்தில் வெளியாகும்.

| | | | |
|---|---|---|---|
| ஸ்ரீபாகவதம் (ப்ரதம த்விதீய ஸ்கந்தங்கள்) | 1 | 3 | 0 |
| ,, (த்ருதீய ஸ்கந்தம்) | 1 | 8 | 0 |

## ஸ்ரீ வால்மீகி தமிழ் வசன ராமாயணம்

ஸ்ரீராமயணம் காலிகோ பைண்டுடனும், ஆர்ட்பேபரில் உயர்ந்தகாலிகோ பைண்டுசெய்து கிலிட்டு அக்ஷரம் போட்டதுமான இருவகை புஸ்தகங்கள் ஸ்ரீராமாயணம் முழுமையும் 8-பாகமாக அச்சிட்டிருக்கின்றோம். சந்தாதாரர்கள் தாம் விடாமல் வாங்குவது மாத்திரமே யன்றித் தமது இஷ்டமித்ர பந்துக்களையும் ப்ரோத்ஸாஹப்படுத்தி வாங்கச் செய்து அவர்களையும் களிக்கச் செய்வார்களென்று வேண்டுகிறோம்.

சந்தாதாரர்களுக்கு விற்பனைசெய்யும் விலை.

| | சாதாரண பேபர் புஸ்தகம். | ஆர்ட்பேபர் புஸ்தகம். |
|---|---|---|
| பாலகாண்டம் | 1 0 0 | 2 4 0 |
| அயோத்யாகாண்டம் முதல்பாகம் | 1 0 0 | 2 4 0 |
| ,, இரண்டாம் பாகம் | 1 2 0 | 2 6 0 |
| ஆரண்யகாண்டம் | 1 0 0 | 2 4 0 |
| கிஷ்கிந்தாகாண்டம் | 1 0 0 | 2 4 0 |
| சுந்தரகாண்டம் | 1 8 0 | 3 0 0 |
| யுத்தகாண்டம் I Vol. | 1 8 0 | 3 0 0 |
| ,, II ,, | 1 8 0 | 3 0 0 |

(தபால் சார்ஜ் ப்ரத்யேகம்.)

| | |
|---|---|
| ஸ்ரீ வசன பூஷணம். (முழுவதும் கித்தாலுல் பைண்ட் செய்யப்பட்டது) | 2 4 0 |
| வைராக்யஸூர்யோதயம் (காகிதஅட்டை) | 0 6 0 |
| கோயிலொழுகு | 0 6 0 |
| நல்லவழி: மூலமும் உரையும் | 0 0 6 |

ஆர் வெங்கடேஸ்வர் அண்டு கம்பெனி,
ஆனந்த பிரஸ், மதராஸ்.

R. VENKATESHWAR & Co.,
Ananda Press, Madras.

# MADRAS STORES SUPPLYING AGENCY,

## 15, BROADWAY, MADRAS.

## நல்ல ஆர்மோனியங்களை ஆராய்ச்சி செய்து வாங்குகிறதற்கு இதுவே நல்ல சமயம்.

கந்தர்வபுளுட் ஆர்மோனியங்கள் தமிழ் நாதங்களிலும், இந்துஸ்தானி நாதங்களிலும் ஆர்மோனியத்தில் மிகவும் பயிற்சி அடைந்தவரால் ஸ்பெஷலாகச் செய்யப்பட்டிருக்கிறது.

1-ம் நெம்பர் புளுட் விலை ரூபா ... 30-0-0

2-ம் நெம்பர் புளுட் விலை ரூபா ... 20-0-0

இன்னும் அநேகவிதமான ஆர்மோனியங்களும், 17-ரூபா முதல் 45-ரூபா வரையில் விலை சரசமாய் கிடைக்கும்.

ஸ்ருதி ஆர்மோனியங்கள் 7-ரூபாய் முதல் 10-ரூபாய் வரையிலிருக்கிறது. ஆர்மோனியம் சுயமாகக் கற்றுக்கொள்பவர்களுக்கு ஜாவளிகள், கீர்த்தனைகள், நந்தனார் சரித்திரக் கீர்த்தனைகள், கோஹர்ஜான் கீர்த்தனை அடங்கிய தமிழ்ப் புத்தகம் ஒன்று அநேக கனவான்களாலும் கனம்பொருந்திய ஐகோர்ட் ஜட்ஜிகளாலும் புகழ்ப்பெற்று அச்சிடப்பட்டிருக்கிறது. இதன் விலை ரூபா 2-0-0

இச்சென்னையிலிருந்து உங்களுக்கு எந்த சாமானும் இதர இடங்களைக் காட்டிலும் நயமாக வேண்டுமானால் எங்களுக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளுங்கள்.

மதராஸ் ஸ்டோர்ஸ் சப்ளையிங் ஏஜென்ஸி,

15, பிராட்வே, மதராஸ்.



ஸ்ரீ

கடவுள் துணை.

# கதாரத்னாகரம்

"கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி"

பத்ராதிபர்:— M. A. நெல்லையப்பர்.

| | | |
|---|---|---|
| Vol I. தொகுதி—1 | NOVEMBER, 1915. 1915-ம் வருஷம் நவம்பர் மீ | No. 9. பகுதி—9. |


## விசேஷ வர்த்தமானங்கள்.

**ஜெர்மனியின் ஒருமாத யுத்தச் செலவு.**—ஜெர்மனிக்கு ஒரு மாதத்திற்கு 11 கோடிப் பவுன், அல்லது 210 கோடி ரூபாய் யுத்தத்திற்காகச் செலவாகின்றனவாம்.

---

**காப்பி தேயிலைகளின் வரி:**—இங்கிலாந்தில் காப்பிக் கொட்டைக்கும் தேயிலைக்கும் விதித்திருந்த தீர்வையானது இப்போது முன்னிருந்ததை விட 100க்கு 50 வீதம் உயர்த்தப் பட்டிருக்கின்றது.

---

ருஷிய அரசாட்சிக்குட்பட்ட வெளிநாட்டுச் சேனைகளில் 80 லட்சம் துருப்புகளையுடைய ரிசர்வ் சேனையை அழைக்க வேண்டுமென்று ருஷியக் கவர்ன்மெண்டார் உத்தரவு செய்திருக்கின்றனர்.

---

ஸ்வீடன் தேசத்திற்கு இப்போது இங்கிலாந்திலிருந்து நிலக்கரி போவது முற்றும் நின்று விட்டது; அதனால், அங்கு கைத்தொழிற் சாலைகளின் நிலைமை அபாயகரமாயிருக்கின்றது.

---

**ஸ்ரீகாசி ஹிந்து யூனிவர்ஸிடி:**—அடுத்த வசந்தகாலத்தில் ஸ்ரீகாசி ஹிந்து யூனிவர்ஸிடியின் கட்டிடத்தின் அஸ்திவாரக்கல்லை ராஜப்பிரதிநிதி நாட்டப்போகிறார். அச்சமயம் அங்கே விஜயஞ் செய்ய வேண்டுமென்று லார்ட்கார்மி கேலைக் கேட்டுக் கொண்டார்கள். அதற்கு அவர் சம்மதித் திருக்கிறார். அஸ்திவாரக்கல் நாட்டும்பொழுது எண்ணிறந்த ஜனங்கள் ஆஜராயிருப்பார்கள்.

---

**ஓர் இந்திய வீரருக்குப் புகழ்ச்சி.**

போர்முனையிலிருக்கும் "காப்டின் உமார் ஹையத்கான், திவானு" என்பவர் செப்டம்பர் மாதம் 9-ந்தேதியன்று தமது அரணை விட்டுச்சென்று தமது படையைச் சேர்ந்த மனிதர்களைப் பத்திரமான இடத்திற்குக் கொண்டுபோய்ச் சேர்த்தார். ஆகவே இந்தியச் சேனையின் உத்தியோகஸ்தர்கள் நால்வர் அவருடைய தீரத்தைப் பாராட்டி அவருக்குக் கடிதம் எழுதியிருக்கின்றனர்.

---

**இந்தியாவிற்கு வந்த முதல் ஐரோப்பியர்.**

இந்தியாவிற்கு முதல் முதல்வந்த

ஐரோப்பியர் ஸ்டீபன் என்பவராம். அவர் 1579 வது வருடத்தில் இந்தியாவிற்கு வந்தனர். அவர் தாம் இந்தியாவின் பொருளா தாரத்தைப் பற்றியும், வளப்பங்களைப் பற்றியும் இங்கிலாண்டிற்கு வியந்து எழுதிஞர். அதன்மீது ஆங்கிலேயர் இந்தியாவுடன் நேராக வர்த்தகஞ் செய்ய ஆரம்பித்தனர். அர்மேடாவிற்குப் பின்னர் அடிக்கடி அவர்கள் இந்தியாவிற்கு வர ஆரம்பித்தனர். முதல் முதல் பிரிட்டிஷார் இந்தியாவில் 1612 வது வருடத்தில் ஸ்திரமான இடம் பெற்றனர்.

---

தெய்வீகமான கம்பளம்.

தெய்வீகமான கம்பளத்தினம் கெய்ரோ நகரத்தில் சென்றமாதம் 30ந் தேதி கொண்டாடப் பட்டது. இத்தினத்தில் கெய்ரோவி லிருந்து மெக்காவிற்குக் கம்பளம் அனுப்புவது புராதன வழக்கமாம். இந்தக் கம்பளத்தில் கொரானிலிருந்து சிலவாக்கியங்கள் பொன்னெழுத் துக்களாலெழுதப்பட்டிருக்கும்; இது மெக்கா மசூதியில் மகம்மது தேவோபாசனை செய்தவிடத்தில் விரித்து வைக்கப் படுகின்றதாம்.

இந்துக்கள் சென்னையிலும், வேறிடங்களிலு மிருந்து திருப்பதிக்குக் கொடையும், ஜோடும் அனுப்பும் வழக்கத்தை மகம்மதியர் எளனஞ் செய்கின்றனர்; மேற்படி சம்பளக தினம் கொண்டாடப் படுவது இந்துக்கள் கொடை, ஜோடு அனுப்பும் வழக்கமே போன்றதாம்.

---

## தீபாவளி பண்டிகையும் அதன் தத்வார்த்தமும்.

தீபாவளி யென்னுஞ் சொற்றொடர் வடமொழியினதாம். அது தீபம், ஆவளி என்னு மிரண்டு சொற்களாலாயது; விளக்கு வரிசை யென்று பொருள்படும்.

இதற்குச் சம்பந்தமாகப் பாகவதத்தில் ஒரு கதையுண்டு. அஃதாவது:—

நரகாசுர னென்னு மோரரக்கன் தேவலோகத்திற் கதிபதியாகிய இந்திரனை வென்று தன்வசப்படுத்திக் கொண்டு அவனைப் பலகஷ்டங்களுக் குட்படுமாறு செய்தான். அவன் (இந்திரன்) பரமேசுவரனாகிய கிருஷ்ணனை (மனோவாக்குக் காயங்களால் தியானித்து, துதித்து) வணங்கி, அவருடையகடாக்ஷவீக்ஷண்யத்தினால், ஸத்தியபாமை அவ்வரக்கனை, ஐப்பசிமீ சதுர்த்தசி இரவு விடியற்காலத்தில் கொன்றான். நரகாசூரன் கொல்லப்பட்டதனால் தேவர்களுக்குக் கஷ்டம் நீங்கிற்று. இந்திரன் தன் பழைய பதவியை ஸ்ரீகிருஷ்ண பரமாத்மா கொடுக்கப் பெற்றுச் சந்தோஷமடைந்தா னென்பதே.

இக்கதையைச் சற்றுச் சீர்தூக்கி நோக்குவோமாயின், இது ஒருருவகமென்பது நன்கு புலப்படும். எங்ஙனமெனின்:—

(1) "நரகாசுர" னென்பது:— மாயை, அல்லது அவித்தை.

(2) "தேவேந்திரன்" என்பது:— ஜீவன்.

(3) "வென்ற" னென்பது:— ஆத்மாவின் (ஸச்சிதாநந்த) ஸ்வரூபத்தை மறைத்தல்.

(4) "கஷ்ட" மென்பது:—ஜனன மரணாதி ஸம்ஸார கஷ்டங்கள்.

(5) "வணங்க" லென்பது:—ஸகுணோபாஸனை.

(6) "கிருஷ்ணன்" என்பது:— ஜீவன் முக்தராகிய ஸத்குரு.

(7) ஸத்தியபாமை யென்பது:— பரோக்ஷ குரு.

(8) ஐப்பசிமீ என்பது:—ஏழாவது பூமி.

(சித்திரையிலிருந்து ஏழாவது மாதம்)

(9) சதுர்த்தசி என்பது:— பதிஞன்கு சாதனங்கள்.



(10) பழைய பதவியை யடைதலென்பது:—தன் ஸ்வரூபமான ஸச்சிதாநந்த ஸ்வரூபத்தை யடைதல்.

ஆகவே, ஸச்சிதாநந்த ஸ்வரூபமாகிய ஆத்மா அநாதியாயும் ஸதஸத்விலக்ஷண அநிர்வசனீயமாயு முள்ள அவித்தையின் வசப்பட்டு ஜீவபாவத்தை யடைந்து, ஜனன மரண ஸம்ஸார துக்கங்களுக் கிலக்காய், புண்ய விசேஷத்தினால் ஸகுணோபாஸனை (பக்தி) யைச் செய்து, பரமேசுவரனது கருணையினால் பரோக்ஷகுருவை யடைந்து, சுபேச்சை முதல் துரியமீறாகவுள்ள ஞான பூமிகளை விவேகமாதி ஸாதனங்களா லடைந்து, ஸத்குருவின் கடாக்ஷ வீக்ஷண்யத்தினால் தன் ஸ்வரூபமான ஸச்சிதாநந்த நிலையை யடைதலே யென்பது மேற்கூறிய கதையின் தத்துவார்த்தமாம்.

ஏழு ஞான பூமிகளாவன:— (1) சுபேச்சை (2) விசாரணை (3) தநுமாநஸி (4) சத்வாபத்தி (5) அஸம்சக்தி (6) பதார்த்த பாவனை (7) துரியம்.

இவை முறையே (1) நன்மையை விரும்புதல், (2) தத்துவ விசாரஞ் செய்தல், (3) மனம் சூக்ஷ்மத் தன்மையை யடைதல், (4) தேகாத்ம புத்தியை யொழித்து ஆத்ம சொரூபமாக விளங்கல், (5) தேக சம்பந்த மின்றி யிருத்தல், (6) உலகத்தோற்ற மின்றி யிருத்தல், (7) எவ்விதவிகற்ப மில்லாது தானே தானாய் விளங்கல் எனப் பொருள்படும்.

பதிஞன்கு ஸாதனங்களாவன:— (1) நித்தியா நித்தியவஸ்து விவேகம், (2) இகமுத்ரார்த்த பல போக விராகம், (3) சமம், (4) தமம், (5) உபரதி, (6) திதீக்ஷை, (7) சிரத்தை, (8) சமாதானம், (9) முமூக்ஷுத்வம், (10) சிரவணம், (11) மநநம், (12) நிதித்யாஸனம், (13) ஸவிகற்ப ஸமாதி, (14) நிர்விகற்ப ஸமாதி.

ஜீவபாவத்திற்குக்காரணம் மனமேயாதலின் மனமே மாயையென்றும் அவித்தை யென்றும் கூறப்படும். ஆதலால், மன மிறத்தலே அவித்தை யொழிதலாம். மன மானது நிருவிகற்ப ஸமாதி சித்திக்கிற வரையில் ஒழிவதின்மையின், அவித்தையி (நரகாசுரனி)ன் ஒழிவிற்கு விவேக முதல் பதிஞன்கு ஸாதனங்கள் அத்தியாவசியமாம்.

இக்கதையில் நரகாசுரனை என் கிருஷ்ணன் கொல்லவில்லை? கிருஷ்ணனுக்கு அவனைக்கொல்லச் சக்தியில்லையா? என்ற சந்தேகம் உண்டாகலாம்.

கிருஷ்ணன் ஜீவன் முக்தரானதால் மாயை அல்லது அவித்தை அல்லது அஞ்ஞானமாகிய நரகாசூரன் கிருஷ்ணனுக்கு இலக்காக மாட்டான்; சூரியனுக்கு இருட்டு இலக்கா காமைபோல, கிருஷ்ணனுக்கு எதிரில் நரகாசூரனே யில்லாதபோது அவன் யாரைக் கொல்வது? யார்மேல் அம் பெய்வது?. ஆதலாற்றான் ஸத்தியபாமை யாகிய பரோக்ஷகுரு கொன்றாள்.

ஐப்பசி மாதம், கிருஷ்ணபக்ஷம் பிரதமை முதல் சதுர்த்தசி வரையில் யுத்தம் நடந்தது. ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு ஸாதனத்தைப் பிரயோகித்துக் கடைசி நாளாகிய சதுர்த்தசியன்று நிர்விகற்பஸமாதி யாகிய ஸாதனத்தினால் மனமென்னும் அவித்தை (நாகாசுரன்) நாசமடைந்தது; உடனே ஜீவன் நிரதி சயாநந்த வடிவாய் விளங்கினான். இங்ஙனமாய் ஸர்வ அநர்த்த நிவிருத்தி பரமாநந்தப் பிராப்தியே தீபாவளியாம். விளக்கு வரிசையின் பிரகாசமானது அகண்டமாய் ஒரே தாரையா யிருப்பது போல் ஸ்வரூபாநந்தமும் தடையற்றிருப்பதால் தீபாவளி யென்று கூறப்பட்டது. இந்நிலையடைந் தவர்க்கன்றோ தீபாவளி பண்டிகை சித்தித்தது? நம்முடைய தீபாவளி பண்டிகை போலிப்பண்டிகை யல்லவா? லோகோபகாரி.

## லாலா லஜபதிராய் சொல்லும் புத்தி.

லாலா லஜபதிராய் அக்டோபர் 7-ந்தேதி யன்று ஜப்பானிலுள்ள டோகியோ என்னும் நகரிலிருந்து டிரிபியூன் என்ற பஞ்சாப் பத்திரிகைக்கு எழுதியிருக்கும் கடிதத்தின் ஸாராம்சம் பின்வருமாறு:—

இந்தியர் அனைவரும ஒற்றுமையுடன் இருக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். பஞ்சாபின் தென்மேற்குப் பாகத்திலும் மத்திய பாகத்திலும் சமீபத்திலே நடந்த தொந்தரவுகளில் சம்பந்தப் பட்டவர்களிற் சிலர் கலகக்காரர்களாய் இருந்த போதிலும், அத்தொந்தரவுகளுக்கு அடிப்படையான காரணம் என்னவென்றால் தரித்திரமும் அறியாமையுமே யாகும். தற்பொழுது நடந்துவரும் யுத்தத்தில் நேச ராஜ்யங்கள் ஒற்றுமைப் பட்டிருப்பதைப் பார்த்தாவது இந்தியர் அனைவரும் தங்களுக்குள்ள அபிப்பிராய பேதங்களையும் வித்தியாசங்களையும் மறந்து ஒற்றுமையுடன் இருப்பார்களாக !

---

## மகுடாபிஷேக வைபவ விருந்து.

ஜப்பான் சக்கரவர்த்தியின் மகுடாபிஷேக வைபவத்தை யொட்டி, கல்கத்தாவிலுள்ள ஜப்பான் கான்ஸல் ஜெனரலானவர் பத்தாந்தேதி ஒரு விருந்து நடத்தினார். அவ்விருந்தில் பலர் ஆஜரா யிருந்தனர். சுமார் 50 வருஷங்களுக்கு முன் துறவிகளாயிருந்த ஜப்பானியர் கிரேட் பிரிட்டனுடன் சம்பந்தப் பட்டது காரணமாக, பல வழிகளிலும் முன்னேற்ற மடைந்து மேனாட்டாருக்கு சரிசமமாக எவ்விதத்திலும் மேன்மையடைந் திருப்பதைக் கவனித்துப் பார்க்கும் பொழுது சுமார் நூறு வருஷ காலமாக ஆங்கில அரசாட்சியின்கீழ் இருந்துவரும் இந்தியாவானது ஜப்பானைவிட எவ்விதத்திலும் அதிக முன்னேற்ற மடைந்திருக்க வேண்டுமே? அப்படி யில்லாமல் இந்தியாவானது என் ஜப்பானுக்குச் சமமாகக் கூட இருக்கவில்லை என்ற கேள்வி பிறக்கும். தொழில், வியாபாரம், சாஸ்திர அபிவிருத்தி முதலிய அம்சங்களில் நமக்கு வேண்டிய அளவு கவர்ன்மெண்டாரிடமிருந்து உதவி கிடைக்காதிருப்பது இதற்கு ஒரு காரணமாகும். ராஜ்யவிஷயங்களிலும் ஜப்பானியரைப் போல் நமக்கு அவ்வளவு சுதந்தரங்கள் கிடைக்கவில்லை. இந்தியாவின் ஒரு சிறிய பாகத்துக்குக் கூட அளவிலும் ஜனத் தொகையிலும் ஈடில்லாத ஜப்பான் தேசமானது வல்லரசுகளில் ஒன்றான ஜெர்மனியை எதிர்த்து சீனாவில் வெற்றி பெற்றிருக்க, ஜப்பானைவிடப் பன் மடங்கு பெரியதான இந்தியாவோ தன்னைத்தானே காத்துக் கொள்வதற்கும் கிரேட் பிரிட்டனை நம்பி யிருக்கும்படியான நிலைமையில் இருந்து வருகிறது. இந்தியாவுக்கு வேண்டிய உதவிகளைப் புரிய பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் தயாரா யிருப்பினும், நம்மையாளும் அதிகாரிகளே அதற்குத் தடங்கலாகவே இருந்து வருகின்றனர். இந்தியரிட மிருந்தே பூர்வீக நாகரீகங்களை ஜப்பானியர் முதன் முதல் கற்றுக் கொண்டதாக ஜப்பான் கான்ஸல் ஜெனரல் சொல்லி யிருக்கிறார். இனி நம்மையாளும் அதிகாரிகள் நாம் முன்னேற்ற மடைவதற்குப் பாதகமாயிராமல், சாதகமாயிருப் பார்களாயின், பிரிட்டிஷ் கவர்ன்மெண்டின் முடிரத்தின மெனக் கொண்டாடப்படும் இந்தியாவானது உலகமனைத்திற்குமே முடிரத்தினமாக இருக்க முடியுமென்று சொல்லலாம்.

ச. மி.



## குடலைப்பரிசோதிக்கும் பெரிஸ்கோப் கருவி.

இந்நாட்களில் ஒருவனுக்கு குடலில் ஏதாவது ஆபத்து நேரிட்டு அதைப் பரிசோதனை செய்வதற்கு டாக்டர்களுக்குச் சொல்லி யனுப்பி வைத்தால் அவர்கள் அந்த உறுப்பை அறுத்து சிகிச்சை செய்ய வேண்டுமா வேண்டாமா வென்று தெரிந்துகொள்ள முதல் முதலில் குடலின் உள் புறத்தைச் சோதித்துப் பார்க்கிறார்கள். குடலின் உள் புறத்தைச் சோதனை செய்ய வைத்தியர்கள் பெரிஸ்கோப் (Menicsure Periscope) என்னும் கருவியை உபயோகிக்கிறார்கள் இந்த கருவியானது (சப்மெரின்) சமுத்திர ஜலத்துக்குள் போகும் ஒரு கப்பலின் தளகர்த்தர் வைத்திருக்கும் கருவியைப் போலவே இருந்தாலும் உருவமட்டும் சிறியது.

இந்தக் கருவியானது ஒரு சிறிய பரிமாணமுள்ள ஒரு உலோகத்தினால் செய்யப்பட்ட குழாயாகும். இதற்குள் கண்ணாடிகளும் பிம்பங்களும் வரிசையாய் வைக்கப் பட்டிருக்கின்றன. இதன் கடைசியில் ஒரு மின்சார விளக்கு மிருக்கிறது. இந்தக் கருவியை வைத்தியர்கள் வியாதிக்காரனின் தொண்டையின் வழியாய் உள்ளே தள்ளுகிறார்கள். விளக்கு திருப்பப்பட்டு கருவியும் நகர்த்தப்படுகிறது. இம்மாதிரிசெய்து கொண்டே உடலின் உள்ளே எல்லாவற்றையும் சோதிக்கிறார்கள். அந்தக் குழாய்களில் கண்ணாடிகள், வெளிச்சம் இவைகள் வைத்திருப்பது போக மீதி இடமும் இருக்கிறது. இந்த இடத்தின் வழியாய் நேர்த்தியான ரண சிகிச்சை கத்திகளையும் சிமிட்டிகளையும், கத்திரிகளையும் உட் செலுத்தலாம். இம்மாதிரியாக வைத்தியர்களுக்கு இந்தக் குழாயின் வழியாக வயிற்றை அறுத்து விடாமல் குடலில் நாசூக்காய் அறுத்து சிகிச்சை செய்ய வல்லவர்களா யிருக்கிறார்கள். இந்தக்கருவியின் வெளிப்புறக் கடைசியில் ரப்பர் உருண்டைகள் சேர்க்கப் பட்டிருக்கின்றன. நோய்க்குத் தக்கபடி இவைகள் அநேக காரியங்களுக்கு உபயோகப் படுத்தப்படுகின்றன.

ச. மி.

**இனாம் ! இனாம் !!**

தேகாரோக்கியத்தைப்பற்றிக் கவலை யுள்ள ஒவ்வொருவரும் விலாசத்தை விபரமா யெழுதி அனுப்பினால் நாலணா விலையுள்ள இன்பரகஸ்யம் என்னும் சிறந்த புத்தகம் இனாமாய் அனுப்பப்படும். இப் புத்தகத்தில் இல்லற வாழ்வில் கவனிக்கவேண்டிய அற்புதமான விஷயங்கள் வெளியிடப்பட் டிருக்கின்றன.

**அமிர்தம் அண்டுகோ.,**
தபால்பெட்டி 222, மதராஸ்.

## பிரமசரியம், பிராணாயாமம், சாமம் அல்லது கஸரத்

இவ்விஷயங்களைப் பற்றி, கலிகால பீமசேனன் என்று ப்ரக்யாதி படைத்த ப்ரொபஸர் இராமமூர்த்தி சில நாட்களுக்கு முன் புனாவில் செய்த ஒரு பிரசங்கத்தின் ஸங்கிரகம்:—

பிரமசரியத்தின் முக்கிய பலனாவது தேகத்தின் வீரியத்தை வீணாக்காமல் காப்பாற்றுவதாகும். சுகர், சனகர் வியாசர் பரசுராமர் முதலிய மஹான்கள் இந்த பிரமசரியத்தால் தான் அனேக அசாத்தியமானவேலைகளைச் செய்துமுடித்தார்கள். மேலும் நம்முடைய உபயோகத்திற்காக மேற்கண்ட விஷயங்களைப் பற்றி பல அரிய பெரிய நூல்களை எழுதி வைத்தார்கள். பிரமசரியமானது முக்கியமாய் ஆசிரியருடன் அவர் வீட்டிலேயே கழிக்கப்பட்டு வெகு சாக்கிரதையாய் பாலிக்கப்பட்டு வந்தது. இக்காலத்தைப்போல் அக்காலத்தில் பாலிய விவாகம்கிடையாது. ஆகையால்தான் அக்காலத்து மனிதர்கள் தேகதிடம் மனோதிட முடையவர்களாய் பல நற்குணங்களையும் பெற்றிருந்தார்கள். ஆகையால் பிரமசரியத்தைக் காப்பதும் நல்லொழுக்கத்தை உண்டுபண்ணுவதுமான கல்வியைச் சிறுவர்களுக்கு கற்பித்து, அவர்கள் மனம் கெடாதபடி துர்சக வாசத்திலிருந்து அவர்களைப்பாதுகாத்து வெகு கெடுதிகளுக்கு காரணமாகும் பாலியவிவாக வழக்கத்தை யொழித்தால் இந்நாட்டில் நமக்குப் பின்வரும் சந்ததியார்கள் சகல விதத்திலும் மேலாயிருப்பார்கள் என்பதற்குச் சந்தேகமில்லை. பிரமசரியப் பாதுகாப்புக்கு பிராணாயாமம் வெகு முக்கியம். ஹடயோகத்தின் ஆரம்பம் பிராணாயாமமாகும். இதின் முக்கிய கருத்தும் காரியமும் மனசை யொரு வழிப்படுத்துவதாம். கஸரத் விஷயமாய் அல்லது பிராணாயாம விஷயமாய் மனதையொரு நிலை நிறுத்துவது வெகு உபயோகமாகும். இந்த யோகத்தின் பல ஆஸனங்கள் தேக பலத்தை விருத்தி செய்வதிலும் பல நோய்களின் அணுக்களைக் கொல்வதிலும் வெகு உபயோகமாகும். தேகத்தின் சுகாரோக்கியத்துக்கு சாமம் வெகு முக்கிய மென்பதை அதிகமாய் சொல்ல வேண்டியதில்லை. கஸரத் செய்த ஒருவன் நோய்நொடிகளுக்கு அனேகமாய் உள்ளாவதில்லை யென்பது நம்மனுபவம். மேற்கூறிய மூன்று விஷயங்களையும் நன்றாய்க் கவனித்து கிரமமாய் செய்து வந்தால் நம்சிறுவர்களுக்கு வெகு நன்மை யுண்டாகும் சாமம் சுத்தமான காற்றுள்ள இடத்தில் செய்ய வேண்டும்; வேர்வை நன்றாய் ஆறிய பின் குளிக்கவேண்டும்; மேலும் தேகத்துக்கு நன்மையுண்டாக வாதுமைப் பருப்பு சேர்த்து செய்யப்பட்ட பலகாரமேதாவது சாப்பிடுவது அவசியம். இதுவும் சுலபத்தில் சீரணமாகும்படி கொஞ்சமாய் சாப்பிட ஆரம்பித்து காலக்கிரமத்தில் அதிகப்படுத்த வேண்டும்; அப்போது தான் அதினால் குணமுண்டாகும்.

ஒ. பி. ஸ்மித்

அண்டு கம்பெனியார்,

குழாய்க்கிணறு (Tube Well) போடுவதில் அனுபவ முள்ளவர்கள். சென்னையி லிருந்து வேண்டிய சாமான்களை வாங்கி அனுப்புவார்கள் வேண்டிய விபரங்களுக்கு எழுதவும்.

O. P. SMITH & CO.
Post Box 202,
Madras. E.



"முப்போது மன்னம் புசிக்கவுந் தூங்கவு மோகத்தினற்
செப்போதி ளமுலையாருடன் சேரவுஞ் சீவன்விடு
மப்போது கண்கலக்கப் படவுமமைத் தாயையனே" என்று

பட்டினத்தடிகள் பகர்ந்தவாறு கண்கலக்க மிப்போதா படுவது பேஷ்! பேஷ்! நன்றா யிருக்கிறது. அழுகைவேறா உனக்கு.

செ.—நான் தேடிய கோடிக்கணக்கான திரவியத்தைத் தருகிறேன்; இதைப் பெற்றுக்கொண்டு இதற்குப் பதிலாக ஒரு நிமிஷந் தாருங்கள் அதற்குள் குழந்தையைப் பார்த்து வந்திடுகிறேன்; இந்தத் தயவாவது வையுங்களையா?

தூ.—அடே நீ வைத்திருக்கிற ஆஸ்தியைப் பார்க்கினும் பல்லாயிரங் கோடிப் பங்கு அதிகமாக வீயினும் நீ பகர்ந்த ஓர் நிமிஷத்துக்குப் பதிலாகாது. கொடுக்க முடியாது; புறப்படு, இல்லையாகில் இதோ சூலத்தால் குடல் சரியக் குத்திக்கொண்டு செல்கிறேன்.

வி.—அண்ணா நம்வாணாள் அவ்வளவு கிடைத்தற் கரியதா என்ன.

சி.—ஆஹா கிடைத்தற் கரிதுதான்.

வி.—அப்படி யானால் பலர் வாணாட்களை வீணாளாக்குகிறார்களே நாமும் அப்படித் தானே செய்கிறோம்.

சி—ஆம் நாமும் அப்படித்தான். உலகம் பொய் யெனக்காணும் புண்ணியர்கள் ஒரு க்ஷணமும் வீணில் காலங்கழியார். இது பற்றி ஒழிவி லொடுக்கத்தில் கண்ணுடைய வள்ளல் அருளிச் செய்த கவியே சான்றாகும் அதெவ்வாறெனில்.

"தேடப்படும் பொருளைச் சிக்கெனவாகப் புதைத்துக்
கோடிக் கொருநிமிடங் கொள்ளுகினுங் கூடாத வாணாளை
வீண்கழிக்கு மானுடரைப் போன்மயக்கம்
பூணார் பொய் கண்டுதுறப் போர்" என்பது போல்

நம்முடைய வாணாளானது ஒவ்வொரு க்ஷணமும் அதிதுர்லபமே. (என்று சொல்லிவிட்டு உயர நோக்கி, பொறு பொறு சற்று நில்லென சூலத்தால் குத்த வந்த யமதூதரை நிறுத்தி செட்டியார்க்கு மனைவியின் மொழி புலப்படுமாறு நல்லுணர் வுண்டாக வேண்டு மென்று மனதில் நினைத்தனன். அதுபோல் செட்டியா ரும் உணர்வுடன் தோன்றினர்.)

வி.—ஓ தெய்வமே இதோ மனைவி வாய்மொழி கேட்டு வந்தனள் மகள்.

சி.—உனது சிறியதாய் யாதுகூறினள், ஒன்றொளியாது கூறுவாயாக.

மகள்.—என் சிறியதாயினிடம் போய் வினவியதில் சில மொழிகள் புகன்று இதை விரிவா யெடுத்துக் கூறெனச் சொல்லினள். அதை என் மதியளவு புகல்கின்றேன். செவியுற்று எமையாள் வதுன்கடனே. முதலில் நான் உன்னிலுஞ் சிறுபெண் என்றாள்; அதாவது வயதில் உன்னைப்பார்க்கிலுங் குறைந்தவள். என்னை என்தாய் தகப்பன் இருவரும் வஞ்சித்து விட்டனர். ஏனெனில் சரியொத்த கணவனோடு சகல இன்பங்களுகர்ந்து தர்ம வழியினின்று தவறாதிருத்தற் கில. ஆகையினால் பெண்களுக்கின்றியமையாத பெரும்புகழ் பெறாது போயினன். அதாவது

"பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னுந்
திண்மையுண்டாகப் பெறின்."

என்று நாயனார் கூறியபடி கற்புடைமையைக் கைக்கொள்ளாததே யாம். இதற்கெல்லாங் காரணம் ஒன்றே யொன்று முறணுற்ற உன் தந்தையின் முதுமையும் எனது இளமையுமே. இதில் யான் கூறுதற்கு யாதுளவென்றனள். இரண்டாவது உனது பிதா வயோதிகர் என்றாள். அதாவது பட்டினத்துச்சுவாமிகள் பகர்ந்தவண்ணம்.

"வாலிபகோல மும்வேறுபிரிந்து வளமையுமாறி யிளமையு மாறி வன்பல்விழுந்திரு கண்களிருண்டு வயதுமுதிர்ந்து நரைதிரை வந்து வாத விரோத குரோதமடைந்து."

செங்கையினிற்றடி கொள்ள அதி தீவிரபக்குவர் என்றும் இதனாலவர் இல்லறத்திற் குரியவரல்லரென்றும் தெரிவிக்கிறாள். மூன்றாவது எனக்கவர் பதியென்ற நாமம் ஒன்றே தவிர அதற்கான லக்ஷணமின்று என்றாள். அதாவது உலக ஒப்புரவுக்கு இவர் என் கணவர் என்ற பெயரே தவிர உண்மையிற் கணவராகமாட்டார் ஏனென்றால் மனைவியோடு வாழுங் காலத்தையும் மனு முதலிய பெரியோர்களா லேற்படுத்தப்பட்ட மார்க்கங்களையுங் கைவிட்டாரன்றோ வாதலால் அது விஷயத்திலு மிவர் பிரயோசன மற்றவரென்கிறாள். நான்காவது வேண்டுவன யாவுங் குறைவற நடக்கி



றது என்றனள். அதாவது சோறு கூறை ஆபரணம் சுகம் மக்கட்பேறு திரவியம் சுயேச்சை பயமின்மை முதலியவைகளுக்குத் தட்டில்லை என்கிறாள்.

ஐந்தாவது யானே யெல்லாநலனு மனுபவித்தற்குரியவள் என்றாள். அதாவது உலகவின்பம் நுகருங்கால்யாதுயாது மங்களகரமான காரியங்கள் நிகழுமோ அங்கு செல்வதற்கும் கந்தபுஷ்பபரிமளாதிகள் அணிவதற்கும் விதவிதமான உடைகள் உடுப்பதற்கும்மற்றும் வேண்டுவன வற்றிற்கும் மறுமையின்பமெய்தற் குரித்தாய ஐவகை வேள்விக்கும் அநுகூலமாயு மிருத்தற் குரியவள் என்றும்சொல்லுகிறாள். ஆறாவது என் போன்றவர்பழித்தல்தகாது வென்கிறாள். அதாவது தன்னைப் போலுள்ள சுமங்கிலியப் பெண்கள் இகழா திருத்தல் வேண்டும். இதன்றாற்பரியமென்ன வென்றால்தன்னாயகர் மரித்தால்தான் அமங்கிலியாகி யெல்லா நலனு மிழந்து சுபகாரியங்களில் முன்வரக் கூடாமையாகும் இதையெல்லாம் நினையாமல்வந்துவிடில் சுபகாரியத்தில் அமங்கிலிவரக்கூடுமா இதுதெரியாதா? சவம்போல் ஓரிடத்தில்விழுந்து கிடக்காமல் குறுக்குமறுக்கும் அலைகிறதுஎன்று ஏசுவதோடு என்னைப் பார்த்தவுடன் அவர்கள் நெஞ்சம் பகீரென்றிடும். காரியக்குறைவுகள் தற்செயலாய் நேரிடினும்அதையென் தலையிற் சுமத்தி அந்தச்சண்டாளி பாதகி மொட்டை முண்டை எனக்கென்று எங்கிருந்து எதிர்வந்தாளோ அன்றைக்கிருந்து நானிந்தப் பாடுதான் படுகிறேன்என்று பழிப்பார்கள். அப்படியவர்கள் பழிப்பதற்கில்லாமற் பார்த்துக்கொள்ளவேணும் என்றதாக அபிப்பிராயப்படுகிறாள். ஏழாவது சிசுஹத்தி தற்கொலை முதலியவைகளுக்கு மிகவும்பயந்தவள் என்றுஞ்சொன்னாள். அதாவது உலகத்திற்பெரும்பாலும் விதவைகள்பின்வரும் ஆபத்தைநினையாது தற்போதையஆத்திரத்தை தீர்த்துக்கொள்ளும் நிமித்தம் சோரம் போகின்றனர். அதினால் கிணறு வெட்டப் பூதம் புறப்பட்டதுபோல் கெர்ப்பந் தோன்றிவிடுகின்றது. இதுவும் உலகில்விந்தையினும் விந்தையே. ஏன் விந்தை என்கிறேனென்றால் இப்போது பாருங்கோ பூமியில் எவ்வளவுபேர் குழந்தை வேணுமென்று நாகப் பிரதிஷ்டை செய்தும் அரசமரம் விநாயகர்கோவில் சுத்திவந்தும் தான தருமங்கள் வேள்விகள் முதலிய இயற்றியும் எண்ணம் முற்றுப் பெறாது கவலை கொள்கின்றனர். விதவைகளோ வென்றால் கெர்ப்பம் யாதிருக்க

வேண்டுமென்று வெகு தெய்வங்களைப் பிரார்த்தனை பண்ணினாலும் அது கட்டாயம் உற்பத்தியாய் விடுகிறது. அப்புறம் அதை எவ்விதத்தினாலும் மறைக்க வழி தேடுகின்றனர். வழிதேடி சிசுஹத்தி (கொலை)செய்து விடுகிறார்கள். இதற்கெல்லாந் தப்பித்துக் கொண்டு எங்கேயொன்று பிறந்து விடுகிறது. அதைக் காடோ செடியோ கால்வாயோ சாக்கடையோ புள்ளோ முடுக்கோ இவைகளில் விட்டெறிந்து விடுகின்றனர். ஆகையால் இது போன்ற கொடுஞ்செய்கைக் குட்பட எனக்கு மனம் வரவில்லையென்பதாயும் சொல்கிறாள். தவிர எட்டாவது, குழந்தைகளை பிறர் பாற் கொடுக்கத் துணியேன் என்றாள். இதினால் என்ன தெரிகிறதென்றால் இப்போது நம் நாட்டில் நூதனமாக ஒரு வழிகண்டு பிடித்துப் பெரும் புண்ணியத்தைக் கைக்கொள்கிறார்கள். அதாவது விதவைகள் பெற்று வீசியெறிந்த அனாதைக் குழந்தைகளை வாங்கி வளர்ப்பதுவொன்று. இதில் தற்காலத்தில் நூதனத்திலும் நூதனமாக ஒரு வழக்கத்தைக்கண்டு பிடித்து வெகு விநோதமாக நடக்கிறதாகக் கேள்விப்படுகிறேன். எப்படியெனில் கற்றறிந்த சிலவிதவா கண்மணிகள் கெர்ப்பந்தரித்தோமென்று தெரிந்துகொண்டு 5, 6, 7, 8. இந்த மாதங்களில் பிறர்க்குத் தெரிந்து விடுமெனக் கண்டு காசி ராமேஸ்வர முதலிய ஸ்தல யாத்திரைக்குப் போய் வருவதாய்ச் சொல்லிக்கொண்டு புறப்பட்டு விடுகிறார்கள். அப்படிப் புறப்பட்ட இவர்கள் காசிக்குப் போவதெங்கே! கர்மந்தொலைவதெங்கே! அதுவொன்றுங் கிடையாது. பட்டண முதலிய விடங்களிலுள்ள ஆஸ்பத்திரிபோய்ச் சேருகிறார்கள். அங்கே இவர்களை யேற்றுக்கொண்டு இவர்களுக்கு வேண்டிய சௌகரியங்கள் செய்து கொடுத்து உணவு முதலியவைகளெல்லாம் ஒழுங்காயுதவி வருகிறார்கள். அங்கே குலநலம் பார்ப்பது இல்லை. குலமா இழவா எல்லாம் மனிதவர்க்கத்தில் சேர்ந்ததும் கடவுளால் சிருஷ்டிக்கப்பட்டதுமே தவிர வேறு கிடையாதென்பார். இப்படிப் பத்து மாதம் வரையிருந்து சுகமே குழந்தையைப் பெற்றுச் சந்தோஷமாய் அங்குள்ளவர்களிடத்தில் கொடுத்துவிட்டு வெளியே வருவதும் பெரிய புண்ணியம். இவர்களுக்கு கடவுள் கிருபை செய்ய வேணும் என்று மனதார வெண்ணிக்கொண்டு ஆசீர்வதிக்கின்றனர். அப்புறம் இனி வீடு போய்ச் சேர்ந்து அடுத்தாப்போற் கெர்ப்போற்பத்திக்கு



ஆரம்பிக்கவேணுமே. இதற்காகக் கொஞ்சம் மனதைப் புண்ணாக்கி யோசித்துக்கொண்டு அதுபோல் பகல்காலம் போனதும் இரவுடன் வந்து கிரகத்திற் சேர்கின்றனர். இப்படி யாருங் குழந்தைகளை வாங்கி வளர்த்து விருத்தி செய்வது மிகுந்த புண்யமெனக் கண்டுபிடித்து இதற்காக ஏராளமான பொருள்களை செலவிட்டு வேண்டிய ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இதையறிந்த விதவைகளோ கடவுள் நமக்கு வழி காட்டினார். எப்படியும் கடவுள் காருண்யமுள்ளவர் என்பது உண்மை. (ஏனெனில் இவர்கள் நினைத்துச் சரியென்று சொன்னாற்றான் அவருக்குக் காருண்யமென்பது நிலைக்கும்போலிருக்கிறது.) என்றும் நாமிதுவிஷயமாய் வைக்குங் கவலை கெட்டதென்று மிதமிஞ்சி யாரம்பிக்கின்றனர்.

உள்ளதும் போய்விட்டது பிள்ளை பள்ளிக் கிருக்கப்போய் என்பதுபோல தருமத்தை யுத்தேசித்து விதவைகளின் மானத்தைக் காப்பாற்றி குழந்தைகளை வாங்கப்போக அவர்களுக்குக் கொஞ்ச நஞ்சமிருந்த பயமெல்லாம்போய் பகிரங்கமாக லீலா விநோதம் புரிய வாரம்பமாய்விட்டது. ஆகையால் இவர்களைப் போல் பெற்ற குழந்தைகளைப் பிறர்கையில் கொடுக்கக் கொஞ்சமும் மனம் பொறேன் என்பதாய் சொன்னாள். ஒன்பதாவது உன்னைப் போல என்னை நேசி என்றாள். அதாவது நான் என்பத்தாவை சன்னியாசி யாக்கிவிட்டு நான் சுமங்கிலியாய் வாழ்கிறேன். ஒரு வேளை அவர் வினையாலிறந்திருப்பினும் இறவாதவரென வெண்ணியென் ஆயுள் முழுதும் இப்படியே சுமங்கிலியாக வாழவிரும்புகிறேன். இதையறிந்த அவளும் என்னைப் போலிருக்க விரும்புகிறாள். அதாவது கணவன் சன்யாசியாகட்டுமென்றும் நான் சுமங்கிலியாகவே யிருப்பேனென்றும் எண்ணம். இதுவுந்தவிர அவாவற்றவரை அறக்கடவுளனுகாது என்றாள். அதாவது ஒருபுருஷனுக்கு விதியாலேற்பட்ட வயது 16 என்றால் இவன் மதியால் அத்துணை காலம் வாழலாம் என்று பெரியாரனுபவமே சான்றாகும். தவிர சேர்திட நூலுங்கூறுவதாக சிலர் சொல்கிறார்கள். எப்படியென்றால் ஓர் புருஷன் தன் ஆயுள்முடிவு காலத்தில் சன்னியாசம் பெற்றுக் கொள்வானேயானால் அவனுக்கப்போது சாவு வருவதில்லை; கொஞ்ச காலம் சன்யாசியாகி உயிர் பெற்றிருக்கலாம். இதேபோல் நமதுலோக குரு ஆதி சங்கராசாரிய சுவாமிகள் பெற்

றுக்கொண்டதாய்த் தெரிகிறது. மார்க்கண்டேயரும் சிவபூஜை நேசத்தால் அதிக தீர்க்காயுள் பெற்றனர் என்று விளங்குகிறது. ஆகையால் இப்போது உன் தகப்பனாரை சன்யாசம்பெற்றுக் கொள்ளும்படி செய்யென்று இப்படிப்பத்து வாக்கியங்கள் பகர்ந்தனள். இதல்லாமலும் கடைசியாக உனதுபிதா என்னுரைதவிரார் என்றும் எனதுள மிவ்வளவே யென்றும் சொல்லி முடித்தாள். அதாவது உலகில் புருஷர்களிடம் உண்மையில் நடந்துகொள்பவரை நீக்கி மற்றப்பெண்கள் பெரும்பாலும் புருஷர்களிடம் மாயப்பகட்டாக பசப்புவார்கள். நீ போய்விட்டால் நானொருக்ஷணம் வாழேன் உனக்குமுன் நான் கட்டையிலேறுவேன். நீ போய்விட்டால் உலகில் எனக்கார் துணையெனப் பலவாறுவாய்ப் பேச்சுப்பேசிக் கடைசியில் புருஷர் உயிர்துறந்தால் அவள் சொல்லியயாவுங்கடக விட்டு அதற்கு மாறுகடந்து சந்தோஷமாக இருப்பர். இப்பேர்ப்பட்ட பெண்களைப்பார்க்கிலும் புருஷன் முன்கொடிய சொல்லம்பெய்து வெறுக்கப்பேசி நீசெத்தாலும் ஒருநாளைக்கு அழுதுவிட்டு சனிதொலைந்ததென்றுதலையை முழுகிவிட்டு அப்புறம் சுகமாகக் காலங்கழிப்பேன் என்று சொல்கிறபெண்களை நல்லவர்கள் என்று சொல்லலாம். ஆகையால் நான் மனதிலொன்று வாக்கிலொன்றுமாக வொன்றுங் கூறவில்லை. எல்லாம்உண்மையே மனச்சாக்ஷிக்கு விரோதமில்லாது கூறி விட்டேனென்றாள். இவ்வளவே.

இதைக்கேட்டிருந்த செட்டியார் ஒருபக்கம் நம்மானத்தைக் கெடுத்தாளே மனைவியென்று துன்புற்றிருந்தாலும் நாம் பிழைத்தற்கு வழியுந் தெரிவித்தாளேயென்ற சந்தோஷமுங் கொண்டனர் இந்த வேளையில் யமதூதரைச் சிகாமணிபார்த்து பின்வருமாறு கேட்டனர்:—

சி.—யமதூதர்களே இப்போது யிந்தச் செட்டியாரை விட்டுவிட்டுப் போக உங்களால் கூடுமா.

யமதூதர்.—அது ஒரு போதுங் கூடாது. உயிரைக் கொண்டே செல்லவேணும்.

சி.—அப்படியானால் இவருக்குப் பதிலாக வேறயாருயிரையாவது கொண்டு செல்வதற்காகுமா.



யமதூதர்.—நாங்கள் வேறொரு உயிரை வலிய அழைத்துச் செல்லோம் யாராவதுநான் தருகிறேனென்று முன்வந்து கொடுத்தால் கொண்டு செல்கிறோம்.

சே.—அந்த உபகாரமாவது செய்யுங்களையா உங்களுக்குப் புண்ணிய முண்டாகும்.

சரி இங்குள்ளயாவர்களையுங் கேட்கிறேன். செட்டியார்வீட்டு டன் இருக்கிற உங்களெல்லோரையும் ஒரு கேள்வி கேட்கிறேன். அதாவது இவருடைய உயிருக்குப்பதிலாக யாராவது ஒருவர் தங்களுயிரைக் கொடுக்க இஷ்டமானால் எழுந்துவந்து இதோஇருக்கிற யமதூதர்களிடம் என்னுடைய உயிரைக் கொடுக்கிறேனென்று சொல்லவாருங்கள். அப்படியானாற்றான் செட்டியார் மீட்கப்படுவார். இல்லையானால் சற்றுநேரத்தில் தூதுவர்கொண்டுபோய் விடுவர். யார் வருகிறவர்கள் என்ன ஒருவரும் பேசவில்லை. பதிலில்லையாதலால் மறுபடியும் செட்டியார் தகப்பனாரைக் கூவி, ஐயா! பெரியவரே இங்கு எழுந்துவாரும் என்றான். இதைக்கேட்டதும் மற்றவர்களெல்லாம் இவர் சாகப்போகிறவர்தானே போனால் போகிறார் என்றெண்ணி சந்தோஷித்தனர். அவர்க்கோ பீதியுண்டாயிற்று எழுந்துநின்றார்.

சி.—பெரியவரே நீர்மிகுந்த புண்ணியஞ்செய்தவர், மகனுக்காக உயி
ரைக்கொடுக்க வெழுந்ததைப்பற்றி சந்தோஷிக்கிறேன் வாருஞ் சீக்
கிரத்தில் என்றான். சற்று திரும்பித் தெருப்பக்கமாகச் சென்றனர்.
அப்யா எங்கு செல்கிறீர். விரலைக்காட்டி ஒண்ணுக்குப்போய் வரு
கிறேனென்றார்.) அப்புறம்போகலாம் இங்கு வாரும்என்றான். விரை
ந்து கோலூன்றி நடந்தனர். (எதிர்நிற்கிற ஒருவரைப் பார்த்து)
ஐயா! அந்தப் பெரியவரை விடாதீர்கள் அப்படியே தூக்கி இங்கு
கொண்டுவாருங்கள் என்றான். எதிரில்நின்றவர் பெரியவர்கையைப்
பிடித்தனரோ இல்லையோ உடல் நடுக்கங்கொண்டு கோவெனக் கதறி
கால்வழியாய் மூத்திரம்பெய்து விட்டனர். ஐயா! அவரை விட்டு
விடுங்கள். அவருக்கிஷ்டமில்லை போகட்டும். அவர்சமுசாரம் எங்கே
அந்தம்மாளாவது உயிரைக் கொடுக்க முன் வரட்டும் என்றான்.
இதைக்கேட்ட ஒருவர் முன் பெரியவர் போனமாதிரியிவளும்
எங்கே ஓட்டம்பிடிப்பாளோ வென்னவோவென்று சட்டென்றெழு

ந்து அந்தக்கிழவியை அப்படியேதூக்கிக் கொண்டுவந்து முன்னால் வைத்தனர். பறக்கப் பறக்கவிழிக்கிறாள். அம்மையே சற்றுமுன்பு என்னை உன்பாதஞ்சேர்த்துக் கொள்ளென்று சொன்னையே இப்போது உன் உயிரை உன் மகனுக்காக இந்த யமதூதர் கையில் ஒப்பித்துவிட்டு என் பாதம்வந்து சேர்என்றான். அதற்குநான் ஏனையா கொடுக்கிறேன். அவன்மனைவி ஒருத்திக்கிருவள் இருக்கிறாள் அவர்கள் கொடுப்பார்கள். நான் போய்விட்டால் என் புருஷனை யார் ஆதரிக்கிறவர்என்றாள். சிகாமணி கிழவியை நோக்கிச்சற்று முன்னடிகானே சொன்னாய் இப்போது மாட்டேனென்கிறாயே யென்றான். நான் சும்மாசொன்னேன். இப்படிவருமென்று நான்கண்டேனோ வென்றாள். அப்படியானால் இங்கே இருக்காதே என்றான்.

தா.—அப்படிவேணுமானாலும் போய் நாலுவீட்டில் பிச்சைவாங்கிப்புசித்துப் பிழைத்துப்போகிறேன். இதற்காக மனதாரச் சாவார்களா (வெளியேபோய் புருஷனோடு சேர்ந்துஅடுத்த வீட்டுத்திண்ணையிற் குந்தினர்.)

சி.—வேறேயாராவது வாஇஷ்டமா (மூத்தமனைவி எழுந்துபின்னால் போனாள்) அம்மணிநீதான் வரவேணும் சற்றுமுன்னடியும் அவர்களுக்குமுன் நான் போய் விடவேணு மென்று சொல்லி யிருக்கின்றனை யாகையால் சீக்கிரம் வா.

மூத்தாள்.—என் ஐயா அந்தக்கிழமிரண்டுஞ் சம்மதிக்காமல் போகிறது நான்சரியான மகனையும்மருமகளையும் வைத்திருக்கிறேன். என்னைக் கொடுக்கச் சொல்கிறீர்களே இது நியாயமா?

சி.—நீயே சொல்லினையே நான் மணத்தோடு முந்திக் கொள்ள வேணுமென்று.

மூத்தவள்.—என்னமோ வாய் தடுமாறிச் சொல்லி யிருப்பேன். அதையே பெரிதா யெண்ணிக் கொள்வதா?

சி.—இப்போ கொடுக்க முடியுமா முடியாதா ?

மூத்தவள்.—கொடுக்கிறவள் வேறேயிருக்கிறாள் (போய்விடுகிறாள்)

சி.—செட்டியார் மகளைப்பார்த்து அம்மா நீதான் நல்லமனமுடையவள் உதார குணமும் உன்னிடந்தான் தோன்றுகிறது ஆகையால் நீயே உன்தகப்பனாருக்கு உதவிசெய்.



மகள்.—அய்யா முதலில் என்னைக் கேட்டீர்களேயானால் கொடுத்தே யிருப்பேன். அந்தப் பாக்கியம் பெற எனக்குக் கொடுத்து வைக்கவில்லை.

சி.—இப்போதென்ன ஒன்றும்முழுகிப் போய் விடவில்லையே சும்மா கொடு.

மகள்:—இனிநான் கொடுப்பதற்குப் பயித்தியக்காரியா.

சி. – என்ன சங்கதி.

மகள்—அந்தக்கிழங்களெல்லாம் அப்படி முறைத்துக் கொண்டு ஓடிப் போய்விட்டதே நான் கொடுத்தால் என்ன சொல்ல மாட்டார்கள் ஊரில்.

சி.—என்ன சொல்லுவார்கள். அப்படியொன்றுங் குறைவு கூறமாட்டார்கள். பிதாவுக்குயிர் கொடுத்த பெண்மணியென்று பெருமையாய்ப் பேசுவார்கள்.

மகள்.—நன்றாய்ச் சொன்னீர்கள். நாளைக்கு நாலுபேர்க் கூடி கொண்டு சாகப்போகிற கிழங்களெல்லாந் தப்பித்துக் கொண்டோடினர். இவள் நன்றாய்த்தின்று கொழுத்த திமிரல்லவா உயிரைக் கொடுக்கச் சம்மதித்தாள். இவளைப் பார்க்கிலும் பெருநீலி இந்தப்பூமியிற் கிடையாது என்பார்களே. அப்பேர்ப்பட்ட பேச்சைப் பேசவா நான் பிறந்தது. தவிரவும் இன்னார்மகளென்று என் தகப்பனார்க்கே வசையாகும். அவரை எல்லோருங் கேலிசெய்வார்கள் ஆகையால் அவர்களுக்குங் குறைவு வரும்படி செய்யவெனக்குப் பிரியமில்லை. இனி என்னிடம் மறுபடி மறுபடி யொன்றுங் கேட்கத் தேவையில்லை எனக்கு வேறு வேலையிருக்கிறது (சரேலென்று பின்கட்டுக் குப் போய் விட்டாள்.

சி.—செட்டியார் தங்கையைப்பார்த்து ஏனம்மா உன்னபிப்பிராயம் எப்படி.

தங்.—என்னபிப்பிராயம் முன்னமே எல்லாஞ் சொல்லியாயிற்று. இனி சொல்லவேண்டிய தொன்றுமில்லை.

சி.—நீயும் பர்த்தாவை யிழந்தவள். நீ கொடுப்பதனால் உனக்கும் பெருமை உலகிலுண்டு. உன் பர்த்தாவையும் போய்ப்பார்ப்பாய் உன்தமையன் உயிர்வாழ்வான். உன்பிள்ளைகளை அவர்

உன்னைப்பார்க்கினும் நன்றாய்ப் பாதுகாப்பார். எல்லாம் நன்மையாகவே முடியும். நீயும் முதலில் சாண்குப்பிக்கு இப்பாடு படுகிறேனென்று பட்டணத்தார் பாடல்கூடப் படித்தனையே.

தங்.—இருந்திருந்து நல்லகதையை ஆரம்பித்தீர்களே போதும் போதும் எனக்கென்ன வீடுவாசலில்லையா தோட்டந்துறவு இல்லையா மாடுகண்ணு இல்லையா. சொத்து பத்து இல்லையா குழந்தை குட்டியிற் குறையா, பண்டபதார்த்தங்களிற் குறையா, மனுஷ மக்களிற் குறையா, என்ன குறையென்று என்னை யிந்தமாதிரி உயிரைக் கொடுக்கச் சொல்கிறீர்கள். அவர்சொத்தை இங்கே எல்லாருங்கூடிக் கொண்டுதின்கிறவர்களெல்லாம் நான்மாட்டேன் நீ மாட்டேனென்று ஓடுஒளிகிறார்கள். நானும் என்பிள்ளைகளும் எங்கள் சொத்தைக் கொண்டுவந்து கொட்டிக்கொண்டு அரைவயிறுங் குறை வயிறுங் குடித்துங் குடிக்காமலு மிருந்து பாடுபட்டு வந்தோம். நானு உயிரைக்கொடுக்கவேணும் நல்ல மாதிரியாச்சுதே.

சி.—அம்மணி நீ சொல்வது சரி. யாரும் சிரஞ்சீவியாயிருந்து வாழப் போவதில்லை எல்லாம் போகிறவர்கள்தான் அதுபோல் நீயும் ஒருநாளைக்கி இறப்பதுண்டா இல்லையா.

தங்.—அது விதிவசம் ஒருநாளையில் செத்திட்டுப் போகிறேன்.

சி.—அப்போது சாகிறது இப்போ தமயனுர்க்காக விட்டாலென்ன

தங்.—அப்படி யெனக்குவந்த விதியென்னையா? அப்படி ஒன்றும் வந்திடவில்லை. எல்லாம் இங்கிருப்பதினாற்றானே இவ்வளவு வந்தது. வேண்டியதில்லை யிவர்களுறவு. இதோ என் வீடு போய்ச் சேர்கிறேன் (என்று குழந்தைகளை யழைத்துக் கொண்டு ஒரேபிடியாய் புருஷன் வீட்டுக்குச் சென்றாள்)

சி.—மருமகளைப் பார்த்து நீ பொருத்திதான்; இதில் சரியானவளானதினாற்றான் உன்னைக் கடைசியில் கேட்டுக்கொள்ளலாமென்று மற்றவர்களை யெல்லாங் கேட்டு வந்தது. மற்றவர்களைக் கண்டிப்பாகக் கொடுத்தேதீர வேண்டுமென்று சொல்லாதகாரணமும் நீயொருபெண் இருப்பதினாலேயே. ஆகையால் நீ மனமகிழ்வோடு உன் மாமனார் உயிரோடு வாழ்வதற்காக இதோ நிற்கிற எமதூதர்களிடம் உனதுயிரைக் கொடு.



மருமக—இதென்ன கூற்றாய் முடிந்தது. இருந்திருந்து என்உயிர்க்கா உலைவைத்தீர்கள். யாரேனும் தான் சாக மருந்துண்பவருண்டா; இதென்ன பைத்தியங் கொண்டிருக்கிறீர்களா. என்ன! அப்படியானால் சரியான வைத்தியர்களைக் கொண்டு நல்ல மருந்து வாங்கிச் சாப்பிடுங்கள் எழுந்துபோங்கள் இனி இங்கு தாமதித்தீர்களானால் யாதாய் முடியுமோ தெரியாது. சீக்கிரம் செல்லுங்கள் (என்று சற்றுதூரம்போய் தன் தமையனைப் பார்த்தாள்)

தமை.—அப்படி உன்னுடைய உயிருக்குஆபத்து வந்தால் நான் சும்மா தடியனாட்டம் நின்றுகொண்டிருப் பேனென்று பார்க்கிறாயா. எல்லாம் கடைசிவரை எப்படி யாகும் பார்க்கலாமென்றிருந்தேன். ஏதோ அவர்களைப் பிடித்த நற்காலம் அந்தமட்டில் நின்று விட்டது.

சி.—அய்யா இங்கே இஷ்டமில்லாதவர்களைக் கஷ்டப்படுத்துவதில்லை. மனமுவந்து கொடுத்தால் மட்டிலும் பெற்றுக் கொள்ளப்படும்.

தமை.—யார் வாழ யார் உயிர் துறக்கிறது. அவர் மனைவி ஒருவர்க்கிருவர் இருக்கிறார். தாயுந்தகப்பனும் இப்போ பிறகோ வென்றிருக்கிறார்கள். போதாக்குறைக்கு உடன்பிறந்தவளும் மகளும் மகனு மிருக்கிறார்கள். அவர்களையெல்லாம் கேட்டுக்கொடுக்கச் செய்யாமல் ஒரு பாவமுமறியாத இந்தக் குழந்தையை நிர்ப்பந்திக்கிறதா.

சி.—அய்யா மன்னிக்கவேணும் எல்லோரையுந்தான் கேட்டுவந்தோம், பாக்கி செட்டியார் மகன்தான் அவர் தகப்பனுர்க்காக உயிரை விடப்பின்னிட்டார். அப்படியானாலது தங்களுக்கும் அந்தம்மாள் தங்கள் சகோதரிக்கும் இஷ்டந்தானே.

தமை.—எவனும் எக்கேடுங் கெட்டுப்போகிறான் வேணுமானாலும் அவன்கண்ணெதிரே கட்டியதாலியை அவிழ்த்துக் கொண்டு என் பின்னோடே அனுப்பி விடட்டும்.

சி.—அய்யா தயவுசெய்து உட்காருங்கள் நீங்கள்ஒன்றுஞ் செய்யவேண்டியதில்லை. (செட்டியார் மகனைப்பார்த்து) நீர் என்ன சொல்லக் காத்திருக்கிறீர்.

மகன்.—நான் என்னுடையவுயிரைக் கொடுப்பது அவ்வளவு பெரிய காரியமில்லை. யாருக்குபார் கொடுக்கப்போகிறார். எல்லாம் தகப்பனும் பிள்ளையும். இதில் இன்னொன்று— அதாவது நான் வாலிபன் பிதாவோ வயது முதிர்ந்தவர். அவர் இன்னும் இந்த உலகத்திலிருந்து கஷ்டப்படுவதானால் நன்றாயிருக்காது. பார்த்தவர்கள் கிழவனை கஷ்டப்படவைத்துவிட்டு இந்தப் பயல் தடியனாட்டமாக சுகத்தையனுபவிக்கப் போய்விட்டானென்பார்கள் இந்தவசைக்குடன் படஎன்மனம் சம்மதிக்கவில்லை. முன் நான் சொன்னபடி அவர் வைத்திருக்கிற இடத்தையும் கொடுத்திருக்கிற பேர் வழிகளையுந் தெரிவித்தாலுஞ் சரி தெரிவிக்காது போயினுஞ் சரி அவர் போய் சுவர்க்கத்தில் நல்ல சுக மனுபவித்துக்கொண்டிருப்பது எனக்கு ரொம்பத் திருப்திதான். நானும் அடிக்கடி சிரார்த்த முதலியவைகளெல்லாம் நன்றாய்ச் செய்து வருகிறேன். அவர் பாரமெல்லாம்என்மேற் சுமத்திவிடட்டும். நானே ஏற்றுக்கொண்டு என்ன கஷ்டப் பட்டாயினும் பார்த்துக் கொள்கிறேன். எனக்காக நீங்கள்எல்லோருங் கொஞ்சம் சிரமத்தைக் கவனியாமல் என் தகப்பனாரிடம். எல்லாம் தங்கள் குமாரன் பார்த்துக் கொள்வான். குடும்ப விஷயத்தில் நீங்கள் கவலைகொள்ளத் தேவையில்லை .மனச் சமாதானத்தோடு சுவர்க்கஞ் சென்று சுகித்திருங்கள். அதோடு அங்கு சென்றதும் இவடத்துக் கவனத்தை மறக்காமல் எங்களுக்கெல்லாம் சரியான இடம்பார்த்து வைக்கும்படியாயும் தங்கள் புத்திரன் சொல்லுகிறான் என்றுசொல்லி அவரை ஓர் மனப்படுத்தி அனுப்பிவிடுங்கள் இவ்வளவு உபகாரஞ்செய்தால் தங்களை என்றைக்கும் நினைத்துக் கொண்டேயிருப்பேன்.

சே.—அடே இதற்காகத்தானா உன்னைப்பெற்று வளர்த்தேன்.

மகன்.—வருத்தப்படாதீர்கள் சந்தோஷமாய்ப் போய் வாருங்கள் எல்லாம் அவாளிடம் சொல்லியிருக்கிறேன் மனதில் வேறொன்றும் நினையாமல் சிவநாமத்தைச் சொல்லிக்கொண்டே செல்லுங்கள்:

சே.—அய்யா எனக்கொன்றும் வேண்டாம் இவர்களெல்லாம் அடி



யோடு ஒழிந்தார்களென்று நான் சன்யாசம் பெற்றுக்கொள்கிறேன்.

சி.—தூதர்களே இனியென்ன நினைக்கிறீர்கள்

தூ.—நினைத்தற் கென்ன விருக்கிறது. இதோ கொண்டு போகிறோம்.

சி.—சமீபத்தில் வாருங்கள் (வந்துநிற்கிறார்) காதோரமாய் மற்றவர்களறியாதபடி நான் பெரியோர்களிடம் சிரவணம் பண்ணியபலனில் 100-ல் ஒருபங்கு இவருக்குத்தருகிறேன் அதனால் இவர்க்கு வைராக்கியம் பிறந்து சன்னியாசியாகி விடட்டும். மற்றவர்கட்கு சன்னியாசியாகி பிழைத்துப் போனானென்று தெரியாமல் மரித்துப் போனானென்றே நினைக்கும்படி மரணமூர்ச்சையாகும்படி செய்து இவரை காஷ்டத்தில் வைத்து தீயிட்டுத் திரும்பியபின்பு மூர்ச்சைதெளிந்து எழும்படி செய்யவேண்டியது. அதன்மேல் நான் பார்த்துக்கொள்கிறேன்.

தூ.—இதுவெல்லாம் எனக்குத் தெரியும். இவரும் முன்சென்மத்தில் சாது சங்கப் பழக்கமுள்ளவர்தான். ஒரு குற்றத்திற்காக இங்கு வந்து சனித்தார். இனி சீக்கிரம் மகா தபஸ்வியாகப் போகிறார். தங்க ளிஷ்டப்படியே செய்கிறோம். (பாசத்தினை விறுக்கிக் கட்டினார்)

சே.—அடே பாவிகளா எல்லாமொன்றுபோற் கூடிக்கொண்டு என்னைக் கொன்றுவிடப் பார்க்கிறீர்களே. நான் செத்தாலும் எளிதில் விடப்போகிறேனோ ஒவ்வொருவரையும் பிடித் தாட்டி வைக்கிறேன் பாருங்கள் 'என்றுகண்ணை ஒரு சுழட்டுச் சுழட்டியது ஆவிபிரிந்தது போலாயினர் மற்றவர் பார்வைக்குமட்டுமே தவிரஇவர்க்கு உயிர் நீங்கவில்லை.)

சி.—இனி நீங்கள் செய்யவேண்டிய காரியங்களைப் பாருங்கள் அவர் உங்கள்மனம் போல் போய்விட்டார்.

எல்லோருங் கூடிஅழுகிறார்கள் செய்ய வேண்டிய சடங்குகளும் நடக்கிறது.

வி.—என்ன அண்ணா முதலில் வெறுக்கப்பேசி இப்போது உருக்கமாகக் கூடி அழுகிறார்களே.

சி.—இது உலகசுபாவந்தான். பட்டணத்தார்,

"பத்தும் புகுந்து பிறந்து வளர்ந்து பட்டாடை சுற்றி
முத்தும் பவளமும் பூண்டோடி யாடி முடிந்தபின்பு
செத்துக்கிடக்கும் பிணத்தருகே யினிச் சாம்பிணங்கள்
கத்துங் கணக்கென்னகாண் கயிலாயபுரிக் காளத்தியே."

என்று சொன்னபடி அது இப்போது செத்தபிணம் இவர்களெல்லாம் இனிச் சாம்பிணங்கள் இப்படியே எல்லாமாகும். ஒருவரெழுந்து மற்றவர்களைப் பார்த்து சாமான்களெல்லாந் தயாராகட்டுமையாவென்றார். வேறொருவர் இனிமேல் தயாராக வேண்டிய சாமான்கள் அதிகமில்லை யெல்லாம் முகூர்த்தத்திற்கு வந்தசாமான்கள் அப்படியேயிருக்கிறது. இப்போது வேண்டியதெது வெனில் பச்சைப்பானை யொன்று அக்கினிச் சட்டியொன்று பொரி சொஞ்சம் பேய்க்கரும்பின் தோகை இவைகளே வேண்டியது என்றார். மற்றொருவர் இதுவெல்லாம் நாவிதன் தயார் செய்து வைத்திருப்பான் என்று சொல்லிவிட்டு தெருவில் போய் யாரடா சாமான்களெல்லாந் தயாராய் வைத்திருக்கிறாயா வென்று கேட்டார்.

நாவிதன்.—சுவாமி அடியேன் காரியத்தில் சோரடபோகாது எல்லாம் அதிகாலையிலேதயாரித்து வைத்துவிட்டேன். செட்டியாரவர்களுக்கு அவ்வளவு செய்ய அடிமை பாத்தியப்பட்டவனில்லையா.

"சரிசீக்கிரம் கொண்டுவா (போகிறான்) (மகனைப்பார்த்து) ஏனையா அந்த சாமானெல்லாந்தயார். வேறு ஏதேனும் விசேஷமாய் செய்ய வுத்தேசமோ.

மகன்.—என்ன விசேஷமாய் செய்கிறது, எனக்கு தெரியவில்லை.

"இல்லை செட்டியாரவாள் தந்த பிரபுவாச்சே ஏதாவது சில்லரை மாத்தி சூறை யெறிகிறதுண்டா வென்று கேட்கிறேன்.

மகன்.—அது வெல்லாம் செய்யலாந்தான் அதற்கும் வேண்டிய பணங்காசு களெல்லா மிருக்கிறது ஆனல் இருக்கிற இடத்தைத்தான் சொல்லாது போய்விட்டார். அவர் மட்டும் சந்தோஷமாய் இருப்பை என்னிடம் ஒப்பித்துவிட்டு மனவமைதியோடு பிராணனை யிழந்திருந்தால் நான் எவ்வளவு மங்களமாய்ச் செய்வேனென்று நினைக்கிறீர்கள். இந்த துட்டு சூறை போடுவதா பெரியகாரியம் இங்கிருந்து தகனக்கட்டம் வரை புஷ்பப்பந்தல் போட்டு வெகு மணமா யெடுத்தடக்கஞ் செய்ய வெண்ணியிருந்தேன் பாவி அதற்கு ஒத்துவராமல் மாண்டானே!



"அதுபோனது போகட்டும் இப்போநடக்க வேண்டியதைச் சொல்லுங்கள் சூறையுண்டா யில்லையா.

மகன்.—இல்லை. அதை மட்டும் நிறுத்திக்கொள்ளுங்கள்.

"சரி. அவ்வளவுதான் நான் கேட்கிறது.

மகன்.—சூறை போடுவது பெரியகாரியமில்லை. இன்றைக்கெல்லாம் போட்டால் 1000 ரூபாய் காசு ஆகப்போகிறது. இதற்கா பார்க்கப் போகிறேன். இறந்தவருடைய மனோபாவம் எப்படிப் பட்டதென்று ஆலோசிக்கத் தேவையில்லையா? அவாள் நன்றாய் வடிகட்டிய கஞ்சனல்லவா. ஒரு சல்லிக்கு பட்டாணி வாங்கி 4 ஏழைகளுக்கு போடுவோமென்று நினைத்து வாங்குவார். வாங்கிவந்து ருசிதெரியாது தருமஞ் செய்வதில் புண்ணியமில்லை யென்று கண்ணப்பர் சுவாமிக்கு ருசியுள்ள மாமிசத்துண்டாக விருக்கவேணுமென்று சுவைத்து அறிவரோ அதுபோல் இவர் பட்டாணியை ருசிபார்த்துங் குரங்குபழம் பாகித்துச் கொடுத்த கதைபாய் பாகித்துத்தானே சாப்பிட்டு விடுவார். அதிகமாய்ச் சொல்வானேன் ஊர்தான் பறையடிக்கிறதே.

" எப்படியையா பறைபடிக்கிறது.

மகன்.—குடி தண்ணீர்க்கு காசுவாங்குகிற கொடும்பாவி என்று.

"ஆம் ஆம் அதுவாஸ்தவந்தான்.

மகன்:—அப்படியிருக்க இப்போ நம்மளுடைய புகழ்ச்சிக்காக சூறை போடுவோமானால் அது அவர்க்குப் பிரியமாகுமா.

"வேண்டியதில்லை நிறுத்திவிடுங்கள் நடக்க வேண்டியது சீக்கிரம் நடக்கட்டும்

நாலுபேர்வழிகள் எழுந்து செட்டியாரைத் தூக்கிக் கட்டிலில் வைத்து மூழுக்காட்டி அலங்கரித்து முறைவழுவாது சடங்குகளை

யற்றித் தெருவில் தயாராயிருக்கிற பல்லக்கில் வைத்துச் சகலவாத்திய கோஷ்டங்களுடன் மயானத்திற்குத் தூக்கிச் சென்றனர். இவர்பின் மகனும் சுற்றத்தினரும் ஊரிலுள்ளவர் சிலருமாக ஏகினர். இங்கேபட்டினத்தடிகள் "அத்தமும்வாழ்வு மகத்துமட்டே விழியம்பொழுகமெத்திய மாதரும் வீதிமட்டே, யெனவும்" மனையாளுமக்களும் வாழ்வுந் தனமுந் தன்வாயின் மட்டே யினமான சுற்றமயானமட்டே, யெனவும்" விம்மி விம்மி யிருகைத்தலை மேல்வைத்தழு மைந்தருஞ் சுடுகாடுமட்டே யெனச் சொல்லியவாறும் அவரவர்களும் எதுவரைவர நியமமோ அதுவரையுஞ் சென்று அந்தந்த இடங்களினின்றுந் திரும்பினர். மயானஞ் சேர்ந்ததும் அங்கே தயாரிலிருந்த அகில் சந்தன முதலிய வாசனை நிறைந்த கட்டைகளடுக்கிய விறகாசனத்தில் செட்டியார் சரீரத்தைக் கிடத்தினர். வரிசைகளெல்லாம் நடத்தினர். மகனைக் கொண்டு சகல கிரிகைகளையுமியற்றினர் முடிவில் சிதையில் நெருப்பிட்டனர். இத்தருணம் அங்குள்ளோர்களிற் சிலர் மயானவைராக்கிய முள்ளவராய் என்ன வாழ்வு என்ன சுகம் என்ன குடும்பம் என்ன சரீரம் என வாய்ப்பறை கொட்டி முற்றத்துறந்த முனிவரர் போன்று சர்வசங்க பரித்தியாகியாயினர். நாளைநமக்கு மிக்கதிதானே யென்றொருவர். நீ யென்ன மார்க்கண்டனா சிரஞ்சீவியா யிருத்தற்கென்றொருவர். சீ. சீ இதோர் வாழ்வா வென்றார் பிறிதொருவர். இன்னொருவர் ஐயா ஏன் பலதும் பேசுகிறீர் இது நமக்குச் சகஜந்தானே யென்றார். மற்றொருவர் நேற்றிருந்தார் இன்று வேகிறார் என்றார். இப்படி பலவாறு பலரும் பேசிக் கொண்டிருந்து விட்டு, சரி எல்லோரும் வாருங்கள் என்று யாவரு மேகோபித்துக்கூடி அங்கு நடத்த வேண்டிய கட்டைச் செலவு செய்ய வாரம்பித்தனர். ஆரம்பித்து வெட்டியான், தலையாரி, நாவிதன், ஏகாலி முதலிய யாவர்களுக்கும் அவரவர் சுதந்திரப்படி யேற்பட்ட பணத்தைக் கொடுக்கும்போது ஒவ்வொருவருஞ் செட்டியார் பணக்காரரென்ற வெண்ணத்தால் சாஸ்தியாய்க் கேட்டு வாங்கி லாபம் பெற விரும்பி சண்டை போட்டுக் கொண்டிருந்தனர். இதைப் பார்த்தசிகாமணி, தம்பி பார்த்தாயா காசு படுகிறபாடு. இந்தக் காசுக்குமட்டும் திட்டென்பது கிடையாது. கலியாணம் சாந்தி ஸ்ரீமந்தம் கிரகப் பிரவேசம் முதலிய சுபகருமங்களுக்கும், இழவு கருமாதி காடாத்து



தாதவிழ்ந்திடு குழலியர் வளர்த்திடத் தரைமீ
தேதவழ்ந்தனண் மலையன்வள்ளிக் குழியினிலென்
மாதவந்தனிற் கிடந்ததால் வள்ளியேயிவளென்
றோதவந்தவேடுவரு மன்னுமமே யுரைத்தார். (29)

வேறு

தெள்ளியதினை மாத்தேனுந் தீங்கனி யிதவையூட்ட
வொள்ளியவிதழான் மென்று வுண்டு பட்பாதிசிந்தக்
கள்ளிழிநீபப் பொற்றாள் கருதுவார் வினைகளெல்லாந்
தள்ளிநன்னடை காட்டன்னை தள்ளி நன்னடையிட்டாளே. (30)

பூமருவீசும்வாசப் பொங்கர்சேர்குறிஞ்சிக் கோமான்
மாமருவலர்ச் சூட்டோதி மனை விகண்களிப்பமேனிக்
காமருகவினும் வீசக் கலைமின்மின் கடகச்செங்கைத்
தாமரையிரண்டுஞ் சேர்ப்பச் சப்பாணி கொட்டினாளே. (31)

கமழ்குறுங்கேச வேடச் சிறுமிகள் கனிமூலாதி
தமையடுசெந்தின்றா மத் தரிமறை குறிஞ்சிசாரு
மமர்வசிக்கருங்கைவேடன் னகவிளக் கன்னாள்செவ்வாய்க்
குமுத மமமுத மூழ்த்தக் குதலைகள் பகர்ந்திட்டாளே. (32)

கார்முற்றும் வசிக்கும்வள்ளிக் கனகிரிச்சாரல்வேட
ரூர்முற்றுமளித்த கோமா னுறுமனைப் பாங்கிமார்கள்
பார்முற்றுமளித்த வள்ளிப் பைங்கிளி தன்னையேந்தி
வார்முற்றுமுலையார்கிள்ளி வாய்முத்த மிட்டிட்டாரே. (33)

காரானைக்கோட்டு முத்துங் கழை முத்துமரியின்முத்துஞ்
சீராகக்கோத்துப்பந்து சரமெனச்சேர்த்திச் சேய்க்கோ
ரோராகச்செய்தேயிந்துக் கெழிலென வுடு சூழ்வார்போல்
வாரானைச்செவிலித்தாய்மார் வாரானையழைத் திட்டாரே. (34)

செம்புலிங்கஞ்சேர் கோவிற் சேர்கர வேடர்கைமாக்
கொம்புதந் திறைஞ்சவைகுங் கொற்றவனா மியத்தில்
வம்புகொண்டணைத்துக் குன்றி வடமணிக் கொங்கைமாத
ரம்புலியுகிர்ச் சூட்டாளுக் கம்புலிகாட்டினாரே. (35)

மைம்மனையென்றொணு தென் மன்மனைபுகுந்தாட்கொண்ட
வெம்மனையண்டமெல்லா மீன்றனையெழுத் தாறண்ண

றம்மனையடியாருள்ளச் சழக்கினையொழிப் பாள்வேட
ரம்மனையிடங் கடோறு மம்மனை யாடினாளே. (36)

கூறியவனப்புநூலின் குறிப்பினைத் தெரித்துக்காட்ட
நூறிதட்கஞ்சன் செய்த வோவியம்போல் வாணூல்கள்
வேறிலைமுத்திக்கென்று விளம்பியவெழுத்தா மென்ப
தாறினுட்பொருளாம் வள்ளி யாற்று நீராடினாளே. (37)

நீடியவிழிகளாட நெடுகுழலாட நாகக்
கோடியல் கொங்கையாடக் கோல்வளையாட வோடிச்
சாடியவுழுவையாம்பல் சாய்ந்திடக்குறிஞ்சி யேட்டை
யாடியவேடன் கன்னி யாடினாளம் பொன்னூசல். (38)

நாடொறுங்கலைகடேறி நற்பிறைவளர்ந்தா லென்ன
வேடர்தங்குலத்து வந்த மென் கொடிபருவமேறிச்
சேடுறவளர்ந்ததன்பர் செய்சிவ யோகத்துள்ளத்
தேடவிழ்போதினை னின்புறவளர்ந்த போலும். (39)

தூங்கியபாகற் கொம்பிற் சுளைபிதிர் பழத்தையேந்தித்
தாங்கியவரம்பை வேள்விச் சாரலின் குறிஞ்சிவைகும்
வாங்கிய சிலைத்தோள்வேடன் மகளெனும் வள்ளியாங்கே
பாங்கியரோடுங் கூடிப் பண்புடனிருக்கும்வேலை. (40)

வேறு

குறவர்யாவருங் கூடியே புனங்களைக் குறுகி
மறுவிலேனலும் விதைக்குவர் வள்ளியோடாம்பைச்
சிறுகணுனது பதிக்குவர் பூதியஞ்செய்து
பிறவும்பற்பல பயிர்களுஞ் செயுமவர் பிழைப்பே. (41)

ஆயகாலையு மப்பரிசே பயிராக்கி
நாயுங்கைக்கொடு சென்றவர் புனந்தொறுநாளும்
போயறிந்தவ ரேனலும் பொதியவிழ்கதிராய்க்
காயதாகிய பருவமுங் குறவர்கள் கண்டார். (42)

கிள்ளைசேர வந்தழித்தலுங் குறிஞ்சியிற்கிழவர்
கள்ளருக்குழற்றுதியர் காவலாயமைப்பப்
புள்ளடாத வரோச்சுவான் புனத்திடைப்போக
வள்ளைவார் குழை வள்ளியு மவரொடுவருமால். (43)



வருமரித்திர ளோச்சுது மெனப்பரண்வைகும்
பொருமுவார் முலை மாதரோ டுவகைகள்பொங்கக்
குருமணிக்கழுங் காடிடும் பாடிடுங் குறவர்க்
கொருமருந்தெனச் சாபநோய்தீர்த்திடு மொருத்தி. (44)

இன்னவாறுலகீன்ற மானிங்கினிதிருந்த
நன்னயஞ்சில மொழிந்தனங் குமரநாயகன்றான்
முன்னர்வந்தறு முகனென வசுரரைமுடித்து
வன்னகந்தமால் வரையிடை யடைந்தது மறைவாம். (45)

வள்ளிகுறவரில்லில் வளர்ந்தபடலம் முற்றிற்று.

## 6 வது-நந்தப்படலம்.

உரைமறுத்தறிய வெனமகத்ததிலெழு
முமைமலைத்தவசின் மகவதாய்
வரவும்வி புலவர் சமரிலுக்கிரன்மலை
வதிலலக்கணுறுவது மலா
லரவினிற்கொடிய வசுரர்கைப்படவு
மவாடக்கெடவு மெனவமை
பரசிவப்பொருளின் மகர்குகற்குரிய
பணிவிடைத்தொழில்கள் புரிமினே. (1)

வேறு.

மலைமாதின் கேள்வன்முன்னர் நால்வர்க்காக
வருகுருவா மொருவுருவாய் வைகுநாளிற்
கலைமாதின் கேள்வன்முதற் கடவுளோருங்
கடவுடொழு மாயிரமாங் கண்ணினானு
மலைமாதின் கேள்வனுமொல் செய்ய வைய
னஞ்சுவீர் குகனையறு முகவனைச்
இலைமாதின் கேள்வனைத் தருதுந் தந்தத்
தெவ்வரையட் டுங்கவலை தீர்மினென்றான். (2)

சொற்றபடி வெற்பனையை மணஞ்செய் தந்தச்
சூரர் பகைக்குப் பகையாகத் தோளீராறு
முற்றமுக மிருமூன்றாய் கிரணங் கோடி
யொடுமிரவி பல்கோடி யுதித்தா லென்னக்
கொற்றபடி வேற்படையான் றன்னை யீன்றக்
குமரனையே வம்மினெனக் கூவிச் சூராஞ்
செற்றலரை யடுதி யென்றான் பெம்மா னந்தத்
தேவரெல்லாந் துயர்நீங்கித் திருவுற்றாரால். (3)

சிந்தைகளி கூர்ந்தரிதன் றனயளான
தேவகரி தனைமுருகன் செவ்விக்கேற்பத்
தந்தமரெலாம் வியப்பத் தாரையீய்ந்து
தார்சூட்டும் படிக்களித்தான் சந்தமேவும்
பந்தனைய முலையாடன் செங்கை யங்கை
பற்றியயிற் பாணியினன் பலரோடேகி
வந்துகந்த மலைதனில்வீற் றிருந்தான் வந்து
மாதவர்தேவர்கள் கழற்கால் வணங்கி யேத்த. (4)

இலக்கநவ வீரர்களும் பணிந்து போற்ற
வெண்டிசையோர்ரும்பாவ. விபமீனோடுங்
கலக்கு மின்பக் கடல்வீழ்ந்து மலைமேலுய்ந்து
கந்தமலை மேலுவந்து களிக்குங்காலை
நிலைக்குமறைக் குலவரைகண் முகட்டிலேறு
நெடுங்கொடிபோ லறிவுடையா னீந்தொணாத
வலைக்குநெடு மாகமமாக் கடலுமாழ
மளந்தறிபொற் கழைமன நாரதனங்குற்றான். (5)

வேறு.

கந்த மலைக்குள யிற்கை
யெந்தை யிருந்த விசைத்தேன்
அந்த விலங்கலில் யாழோன்
வந்த துரைக்குவன் மாதோ.

கந்தப் படலம் முற்றிற்று.

## 7. நாரதப் படலம்.

சூரனுதியர்கள் வந்து மெந்தை மதி
சொல்லு கென்று தொழுமெல்லையி
லாரமாமதிகள் பேசு காசிபனை
யசுரையென் பவன் முனிந்துமின்
னீரதே யெனுரை கேண்மினென்றவ
ணிகழ்ந்த மக்களுமதைக் கொட
கோரமாத வழியற்ற வேண்டிய
கொடுத்தவன்மைகளை யோதுவாம். (1)

வேறு

புண்டாக் கீற்றிலங்கிய முண்டகமும் வேணிப்
பொன்னிறமு முன்னூலும் விளங்கயோக
தண்டதுவு மிலங்கமுனி வந்தான் கந்தத்
தடவரை மேற்சசிமகடன் கோயினண்ணக்
கண்டனையமொழி மடமானரம்பை மார்கள்
கனக்குழலை முடித்திட வாண்டிருந்தாள் கண்டு
கொண்டுடன் மூதாதைவருகென மின்னுரைக்
கொடுமிவர்க்கா சனமென்னக்கொணர்ந்தாரன்னோன் (2)

கொண்டுவந்த தவிசதிலு மிருக்காதிந்தக்
குரும்பைமுலை யரம்பையர்தங் குழுவி னண்ணுஞ்
செண்டுவந்த முலைமடமான் தேவர்கோமான்
றிருமகளா யன்னகரத் திருக்கு நாணும்
பண்டுவந்த பொழுதியற்றும் பண்பு காணும்
பரமர்திரு மகன்மணஞ்செய் பரிவாற்கந்த
விண்டுவந்தபெருமை கொண்டோ விருந்தாளென்று
வெகுளியுங் கொண்டக்கணமே வெளிக்கொண்டானே (3)

அகத்தெழுந்த வெகுளிபுறங் காட்டாளுக
வாயிழைநீதனி யிருந்தாயந்தோ வென்று

மிகக்கன லுங்கனற் பொடியாற்பொதிந் தாலென்ன
வேநடந்து வெளிருக்குங் கோயிலெய்தி
நகத்திறை மான்றந்தகுரு பரனேயந்த
நடுவாதியானபுரம் பொருளே யாறு
முகக்கடவுளேயென வேத்தினனன் னார்க்கு
முன்பினிருக்கையு மளித்தான்மொய்ம்பிரானன். (4)

இருந்தனனாரத முனிவனிருந்து நெஞ்சத்
தெண்ணுவான் ஞானதிருட்டியினு லோர்ந்து
பெருந்தகையதிரு முருகக்கடவுளார் முன்
பீதாம்பரத்தினன்கோ விரண்டி லுற்ற
மருந்தனைய விரண்டுமகளீர் சேர்ந்து
வந்ததுவுமவர் கடத்தம் வாதினாலே
திருந்தலரிகாவி னிலுற்பவிக்க சாபஞ்
செப்பினதால மிர்தவல்லி சிந்துவாடி. (5)

இதமாயதோமுக முற்றிடக் காலூன்றி
யின்னொரு காறனைமடக்கியியைய வாசி
முதலான மூலமதிலங்கி மூட்டி
மூதண்ட வெளிகடந்து முடிவிலேறிச்
சதமான கரணமற்றுக் கருவி யற்று
சடத்தொடுமக் கடலடங்கத் தவத்தினலற்
புதமானசிறு மகவாய்நிற்கவாங் கோர்
புனிதமுளனெய்த நிலம்புரந்த வேந்தன். (6)

கண்டெடுத்து வளர்க்கவதைக் கண்டுதான் போய்க்
கடலரசனிடத்தனது கடலிற் சேர்ந்த
வண்டடுக்குங்குழல் சிலமறியாய் நெய்தன்
மன்மனை சேர்ந்தனண் முருகன் மனைவிமுந்திச்
செண்டடுக்குங்குவி முலையாடன்னை யின்னஞ்
செய்யுமவன் மணமதனாற் செம்பொனாட்டிற்
கொண்டுவைப்பாய் மானதவாவி யினீயென்று
கூறவவன் கொண்டுவைத்த குறிப்புமெண்ணி (7)



வெண்கரி யேறுந்துவான் விரைந்து செல்லும்
வியன்றடப்பங் கேருகத்தோர் மின்னார்த்தென்னக்
கண்கவரும் வனப்புள பெண்குழவியாகக்
கமலையினிலிருந்ததுவுங் கண்டவ் வேர்கைத்
திண்கிரி வந்தெடுத்தது வுந்தன்னை யூருந்
தேவர்பதிகாதலிபாற் சிறக்கவீய்ந்தப்
பண்கனிவாய் மொழிவளர்த்த பரிசுமந்தப்
பைங்கொடியும் பருவமுற்ற பான்மைதானும் (8)

அன்னதன்மையாய் வளர்ந்த மாதுதெய்வ
யானைதனை யறுமுகனுக்கமரர் கோமான்
முன்னமன்றன் முடித்ததுவு மோர்ந்துமற்ற
முகில்முலைச் சுந்தரவல்லி கிரிச்சாபெய்தி
வன்னிவளர்த்ததி லொருகா லூன்றியோர்கான்
மடித்து நின்று மவுனத்தால் வாசியூதிப்
பன்னரிய மூலமுதலாறுந் தாண்டிப்
பரைதாண்டி யப்பான் முப்பாழுந் தாண்டி (9)

பின்னமுறுதத்து வங்களனைத்துந் தீர்ந்துப்
பேரறிவா யதுவுமற்றுப் பிரமமாகித்
தன்னைமறந்தித்தவசு புரியவன்று
டவத்தின் மகக்கிரி யுதித்தசாரல் வேட
மன்னர் மனைவளருவது மோர்ந்தானிந்த
மானீன்ற கொடியுமிவன் வதுவையாற்று
மென்னுமுற் காரணங்களெல்லா மெண்ணி நன்று
மிதையமுற்றான் குகனிடத்தி லியம்பலானான். (10)

வேறு.

குகனேயின்றதோர திசயநின்னுழைக் கூறு
மகமைகொண்டன னாதலில்வந்திவ ணடுத்தேன்
மகமேகோசிக னியற்றினதால்வளர் வேள்வி
நகமேயென்றொரு நாமமுண்டன்னக வாயில். (11)

என்றேயில்லெனும் வேய்சொரிமுத்த மிருட்டைத்
தின்றேயெல்லொளி செய்யவளர்ந்திடு சிகரக்
குன்றேயில்லெனக் கொண்டணைவேடர் குறிஞ்சி
யொன்றேயுள்ளன வவர்தொழுதலைவனு மொருவன். (12)

அன்னவனொருவ னவன்றருமைந்தர்க ளெழு
மன்னவரோடு முயங்கியவேட்டையின் வழியிற்
றன்னது தனியொரு மானீன்றிடுமொரு தனயள்
பொன்னதுவென்ன வெடுத்தனரில்லிடை போனார். (13)

அங்கவடன்னை வளர்த்தனரவரெழு வோர்க்குந்
தங்கையதாமிவள் வள்ளியென்றே பெயர்சாற்றி
மங்கையரோடு மகிழ்ந்துகுறிஞ்சியில் வைகிப்
பங்கையமாதி லிருந்தனளந்தப் பருவத்தே. (14)

வேறு.

வந்தனைசெய்யாச் சூருடலீரும் வடிவேலோய்
செந்தினையின்கதிர் பைங்கிளிதின்கச் சினமோச்சக்
கொந்தலராதிய ரேகனுமந்தக் குழூவோடே
சந்ததமுஞ்செனு நன்கிளியோச்சுந் தகைமாதே. (15)

கோவையிதழ்க்குயில் கூவுதாலாலே குயில்கூவா
மாவதனிற்கிளி கற்பனபோலும் வாயாடாப்
பூவைகுழுக்கொடு வேலியின்வந்து புறந்தாழாப்
பாவைமொழிக்குருகாதவரெவரே பார்மீதே. (16)

அங்கவளைப்புவி தன்னிலமைத்த வயனாலும்
பொங்கெழிலைச்சொல முடியாதேனுட் பொருவேலோய்
தொங்கன்முடிக்குழ லெழிலையறிந்தது சொல்கின்றே
னுங்கனசித்த மகிழ்ந்திதுகேளென் றுரைசெய்தான். (17)

வேறு

சைவலஞ்செய் நாணூ முத்திவீழுந்
தனிவிசும்பும் விசும்பாருய்த் தடத்திலேறு
மைவலஞ்செய் குழலெழிலுக் குடைந்தென்றக்கான்
மற்றுமினிக் கருமணலோ மாற்றமாகச்



OFFICE ... M

## ஸ்ரீபாகவதம் தமிழ் வசனம்.

ஸ்ரீகிருஷ்ண சரித்ரங்களை உட்கொண்ட ஸ்ரீபாகவதத்தையும் ப்ரதமஸ்கந்தம் தொடங்கி மூலத்திற்கிணங்க மொழிபெயர்த்து அழகான சித்ரப்படங்களோடு அச்சிட்டுக்கொண்டு வருகின்றோம்.

இதில் ஸ்ரீபாகவதம் முதல் வால்யம் (ப்ரத்ம த்விதீயஸ்கந்தங்கள்) அச்சாய் விட்டது. இதன் விலை. ரூபாய் 1-0-0) (தபால் சார்ஜ் ப்ரத்யேகம்).

இரண்டாவது வால்யம் (த்ருதீய ஸ்கந்தம்) அச்சாய் வருகின்றது. இதுவும் கூடியசீக்ரத்தில் வெளியாகும்.

| | |
|---|---|
| ஸ்ரீபாகவதம் (ப்ரதம த்விதீய ஸ்கந்தங்கள்) | 1 3 0 |
| ,, (த்ருதீய ஸ்கந்தம்) | 1 8 0 |

## ஸ்ரீ வால்மீகி தமிழ் வசன ராமாயணம்

ஸ்ரீராமயணம் காலிகோ பைண்டுடனும், ஆர்ட்பேபரில் உயர்ந்தகாலிகோ பைண்டுசெய்து கிலிட்டு அக்ஷரம் போட்டதுமான இருவகை புஸ்தகங்கள் ஸ்ரீராமாயணம் முழுமையும் 8-பாகமாக அச்சிட்டிருக்கின்றோம். சந்தாதாரர்கள் தாம் விடாமல் வாங்குவது மாத்திரமே யன்றித் தமது இஷ்டமித்ர பந்துக்களையும் ப்ரோத்ஸாஹப்படுத்தி வாங்கச் செய்து அவர்களையும் களிக்கச் செய்வார்களென்று வேண்டுகிறோம்.

### சந்தாதாரர்களுக்கு விற்பனைசெய்யும் விலை.

| | சாதாரண பேபர் புஸ்தகம். | ஆர்ட்பேபர் புஸ்தகம். |
|---|---|---|
| பாலகாண்டம் | 1 0 0 | 2 4 0 |
| அயோத்யாகாண்டம் முதல்பாகம் | 1 0 0 | 2 4 0 |
| ,, இரண்டாம் பாகம் | 1 2 0 | 2 6 0 |
| ஆரண்யகாண்டம் | 1 0 0 | 2 4 0 |
| கிஷ்கிந்தாகாண்டம் | 1 0 0 | 2 4 0 |
| சுந்தரகாண்டம் | 1 8 0 | 3 0 0 |
| யுத்தகாண்டம் I Vol. | 1 8 0 | 3 0 0 |
| ,, II ,, | 1 8 0 | 3 0 0 |

(தபால் சார்ஜ் ப்ரத்யேகம்.)

| | |
|---|---|
| ஸ்ரீ வசன பூஷணம். (முழுவதும் கித்தானல் பைண்ட் செய்யப்பட்டது) | 2 4 0 |
| வைராக்யஸூர்யோதயம் (காகிதஅட்டை) | 0 6 0 |
| கோயிலொழுகு | 0 6 0 |
| நல்லவழி: மூலமும் உரையும். | 0 0 6 |

ஆர். வெங்கடேஸ்வர் அண்டு கம்பெனி,
ஆனந்த பிரஸ், மதராஸ்,

R. VENKATESHWAR & Co.,
Ananda Press, Madras.

நோயுண்டாகாது. எரிகிறதுமில்லை.

விலையுயர்ந்த வஸ்துக்களால் தயார்செய்யப்பட்ட

## ரோமசங்காரி மஹாராஜா ஸோப்பு.

ரிஜிஸ்டர் நெ. 37 பாருங்கள்.

இந்த சோப்பின் மேன்மையான குணங்களைப் பற்றி இராஜாக்களும் ஜமீன்தாரிகளும் சுகமாக இதை உபயோகப் படுத்திக்கொண்டு வருகிறார்கள். இதன் முக்கியமான குணங்கள் யாதெனில், ரோமத்தை நீக்கவேண்டிய இடத்தில் ஜலத்தினால் சுத்தம்செய்து இந்த சோப்பை 5 நிமிஷகாலம் தேய்த்துவிட்டு பிறகு துணியினால் துடைத்துவிட்டால் அந்த இடம் மிருதுவாய்விடும். நோயும் எரிச்சலும் உண்டாகிறதில்லை.

ஒருதரம் உபயோகித்தவர் இதர சோப்பை உபயோகிக்க மாட்டார்கள். விலை 3 கேக்கு உள்ள பெட்டி 1-க்குரூபா 1-0-0 தபால் சார்ஜ் அணா 0-4-0 3. பெட்டிகளுக்கு ரூபா 2-10-0

### அழகான புட்டி பரிமள மிகுந்த சென்டுகள்.

| | ரூ. | அ. | ப. | | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|---|---|---|---|
| சென்டு ஆட்டோ மோஹினி ஒரு டிராம் புட்டி | 0 | 12 | 0 | ஆபீஸ் குல்பகார் ஷை | 2 | 0 | 0 |
| ஷை ½ அவுன்ஸ் | 2 | 0 | 0 | ஓட்டோ டில்லாரம் ஷை | 1 | 8 | 0 |
| ஆபீஸ் மல்லியப்பூ ஒரு புட்டி | 1 | 4 | 0 | கூம்பா அத்தர் | 1 | 0 | 0 |
| ஆபீஸ் ஜாஸ்மென் | 1 | 0 | 0 | ஆபீஸ் ரோஸ் | 1 | 0 | 0 |
| ,, சம்பா | 1 | 0 | 0 | ஆபீஸ் கஸ்தூரி | 1 | 4 | 0 |
| | | | | ,, கார்டுகள் டஜன் | 0 | 12 | 0 |

மேற்கண்ட பாட்டில்கள் அழகான ஜெர்மன் டியூபில் பாக்பண்ணியிருக்கிறது பரிமள வாசனை தரத்தக்கது.

### ஹேர் ஆயில்ஸ் எக்ஸிபிஷன் டிப்போ

கல்கத்தா, பம்பாய், டெல்லி முதலிய இடங்களில் தயார்செய்யப்பட்டு இந்தியா முழுமையும் பெயர் பிரசித்தமாகி மெடல்கள் பெற்றது. அடியில் கண்ட கூந்தல் வளரும் பரிமளத் தைலங்கள் (Hair Oils) எங்களிடம் விலை சகாயமாய் அகப்படும்.

| | ரூ. | அ. | | ரூ. | அ. |
|---|---|---|---|---|---|
| விஸ்வனாத் ஹேர் ஆயில் ... | 1 | 0 | சந்திரமாலதி ஹேர் ஆயில் ... | 0 | 12 |
| காமினியா ... | 1 | 0 | சந்திரமுகி ... | 0 | 12 |
| கேசரஞ்சனி தைலம் ... | 1 | 0 | குந்தல கொமிலினி ... | 0 | 12 |
| குந்தல் கொமுதி ... | 1 | 0 | காமவிலாசா ... | 0 | 12 |
| வனிதா விஹார் ... | 1 | 0 | கேசுதாரா ... | 0 | 10 |
| ஹர் வசி ... | 1 | 0 | சிவாஜி ... | 0 | 10 |
| பூதனாத் ... | 0 | 14 | சரஸ்வதிபரிமளசிரோஜவர்த்னி | 0 | 12 |

எங்களிடம் இன்னும் அநேகமாதிரியான அத்தர்தினுசுகளும் கூந்தல்வளரும் எண்ணெய்களும் கிடைக்கும். வேண்டுவோர்கள் எழுதிக்கொள்ளவும்,

R. V. பண்டிட் அண்டு கம்பனி.

நெ 6 பந்தர் தெரு, மதராஸ்.








## FOUNTAIN PENS.

உலகப் பிரசித்தமான
"பிளாக்பர்ட்"
என்னும்
பவுண்டன் பேனா.
சந்தேக மில்லாமல்
சுளுவான விலையும்
அதிக திருப்தியைக்
கொடுக்கக் கூடியதுமா
யிருக்கிறது.
விலை ரூபா 3-12-0.

இங்கிலாந்து விலை ஐந்து ஷில்லிங்காயிருந்த போதிலும் அமிர்தம் அண்டு கம்பெனியார் இதை ரூபா 3-12-0-க்கு விற்கிறார்கள்.

பிளாக்பர்ட் பேனாவோடு கொடுக்கப்படும் நிப் சரியான பொன் நிப். மைக்குழாய் பெரியது. மொத்தையாய் மை விழுந்து கனப் படுத்தாதபடி சரியானபடி சமமாய் இங்கு பாயத்தகுந்த ஏற்பாடுள்ளது.

நூற்றுக் கணக்கான பேனாவிலிருந்து தெரிந்தெடுக்கலாம். ஆயிரம் கணக்காய் மற்றவர்களுக்கு திருப்தி செய்தது போலவே உமக்கும் திருப்தியைக்கொடுக்க உத்தரவாதம் பண்ணுகிறோம்.

சந்தாதாரர்களுக்கு
மாத்திரம் விலை ரூ. 3.
அமிர்தம் & கோ,
தபால்பெட்டி, 222.
மதராஸ்.

AMIRTAM & CO.,
Post Box, 222, Madras.



## KATHARATNAKARAM.

An illustrated Tamil Monthly Largest circulation in India, Burma, Ceylon, Straits, Malay States, Fiji Islands, and South Africa.

**Subscription.**

| | | | | |
|---|---|---|---|---|
| Inland Yearly | Rs. | 1 | 8 | 0 |
| Foreign ,, | ,, | 2 | 0 | 0 |

**Rates of Advertisement.**

| | | | | |
|---|---|---|---|---|
| one page per Month | Rs. | 3 | 0 | 0 |
| Half a page ,, | | 2 | 0 | 0 |

**MANAGER,**
**Katharatnakaram Office,**
**MADRAS.**


### ஓர் வேண்டுகோள்.

இப் பத்திரிகையைக் கண்ணுறுவோர் விளம்பரக்காரர்களுக்கு கடிதம் எழுதும்போதெல்லாம் கதாரத்னாகரம் பத்திரிகையில் கண்டதாய் எழுதக் கோருகிறோம். ப—ர்.


### வாசனைத் தைலம்.

எங்களுடைய கேசானந்தம் கூந்தல் தைலம் பரிமள மிகுந்தது. மூளைக்குக் குளிர்ச்சியைக் கொடுத்து கூந்தலை நன்றாய் வளரச் செய்கிறது. தினந்தோறும் உபயோகிக்கின் தேக மனோஆயாசம் நீங்கும். உற்சாகம்உண்டாகும். புட்டி 1-க்கு விலை ரூ. 1.

அமிர்தம் அண்டு கோ.,
தபால் பெட்டி, 222, மதராஸ்.

### சுகபேதி மாத்திரைகள்.

நண்பர்களே! தினந்தோறும் மலப்ரவர்த்தி ஆகாமலிருப்பதே அனேக வியாதிகளுக்குக் காரணம். மலத்தைக் கழிப்பதற்கு நமது மருந்து மிகவும் சிலாக்கியம். எவ்வித கெடுதலையும் உண்டாக்காது.

புட்டி 1-க்கு விலை அணா 8.
அமிர்தம் அண்டு கோ.,
தபால் பெட்டி, 222, மதராஸ்.

# MADRAS STORES SUPPLYING AGENCY,

**15, BROADWAY, MADRAS.**

## நல்ல ஆர்மோனியங்களை ஆராய்ச்சி செய்து வாங்குகிறதற்கு இதுவே நல்ல சமயம்.

கந்தர்வபுளூட் ஆர்மோனியங்கள் தமிழ் நாதங்களிலும், இந்துஸ்தானி நாதங்களிலும் ஆர்மோனியத்தில் மிகவும் பயிற்சி அடைந்தவரால் ஸ்பெஷலாகச் செய்யப்பட்டிருக்கிறது.

1-ம் நெம்பர் புளூட் விலை ரூபா ... 30-0-0

2-ம் நெம்பர் புளூட் விலை ரூபா ... 20-0-0

இன்னும் அநேகவிதமான ஆர்மோனியங்களும் 17-ரூபா முதல் 45-ரூபா வரையில் விலை சரசமாய் கிடைக்கும்.

ஸ்ருதி ஆர்மோனியங்கள் 7-ரூபாய் முதல் 10-ரூபாய் வரையிலிருக்கிறது. ஆர்மோனியம் சுயமாகக் கற்றுக்கொள்பவர்களுக்கு ஜாவளிகள், கீர்த்தனைகள், நந்தனார் சரித்திரக் கீர்த்தனைகள், கோஹர்ஜான் கீர்த்தனை அடங்கிய தமிழ்ப் புத்தகம் ஒன்று அநேக கனவான்களாலும் கனம்பொருந்திய ஐகோர்ட் ஜட்ஜிகளாலும் புகழ்ப்பெற்று அச்சிடப்பட்டிருக்கிறது. இதன் விலை ரூபா 2-0-0

**இச்சென்னையிலிருந்து உங்களுக்கு எந்த சாமானும் இதர இடங்களைக் காட்டிலும் நயமாக வேண்டுமானால் எங்களுக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளுங்கள்.**

மதராஸ் ஸ்டோர்ஸ் சப்ளையிங் ஏஜென்ஸி,

15, பிராட்வே, மதராஸ்.


ஸ்ரீ
கடவுள் துணை.

# கதாரத்னாகரம்

"கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி"


M. A நெல்லையப்பர்.
பத்ராதிபர்:—

| Vol 1. தொகுதி—1 | DECEMBER, 1915. 1915-ம் ௵ டிசம்பர் ௴ | No. 10. பகுதி—10. |
|---|---|---|


## விசேஷ வர்த்தமானங்கள்.

கல்கத்தா ஐக்கோர்ட் ஜட்ஜியாக ஓர் ஐரிஷ் பாரிஸ்டர் நியமிக்கப்பட்டிருக்கின்றார்.

---

கோகலே ஞாபகச் சின்ன நிதிக்கு காபா மகாராஜா 1500 ரூபாய் நன்கொடை யளித்திருக்கின்றார்.

---

**சூரத் நகரில் பிளேக்:**—பம்பாய் ராஜதானியிலுள்ள சூரத் நகரில் பிளேக் மிகுதியாகப் பரவி வருகின்றது.

---

ஸ்ரீமான் கோகலேயின் ஞாபகச் சின்ன நிதிக்காகப் பொருள் சேகரஞ் செய்தற் பொருட்டு ஸ்ரீமான் காந்தி கத்தியாவாருக்குச் சென்றிருக்கின்றார்.

---

கல்கத்தாவில் ஜட்காவண்டிக் கொள்ளைகள் சிலகாலமாக அதிகமாக நடைபெற்று வருகின்றன. அவற்றை யடக்குவதற்கு அங்கு போலீசார் மிகு விழிப்பாக விருந்து வருகின்றனர்.

---

பம்பாய்ச் சட்டசபையில் உத்தியோக அங்கத்தினரா யிருப்பவர் காங்கிரஸ் மகாசபைக்கு ஜனப்பிரதிநிதிகளாகச் செல்லுதல் கூடாதென்று கவர்ன்மெண்டார் உத்தரவு செய்து விட்டனர்.

---

கன்னனூரில் சமீபத்தில் நடந்த உற்சவத்திற்குச் சென்றிருந்தவர்களுள் 40 பேர் தமதூருக்குச் செல்லப் பலிபாத நதியில் படகேறினர்; அந்தப்படகு நதியில் கவிழ்ந்து விட்டது; அதனால் அதிலிருந்தவர்களுள் பெரும்பான்மையோர் நதிக்கிரையாயினர்.

---

நீலகிரி இருப்புப் பாதையில், ரன்னிமீட்-ஹில்குரோவ் என்னும் ஸ்டேஷன்களுக்கு இடையில் சென்று கொண்டிருந்த ஒரு பிரயாணி ரயில் வண்டித் தொடரின், மூன்றாவது வகுப்பு வண்டியில் ஓர் இந்து இறந்து கிடந்தான்.

---

மதுரை டிஸ்டிரிக்ட், பரமக்குடி ஜில்லாவிலுள்ள அக்ரா முண்டியில் தேவர்களுக்கும் மகம்மதியருக்கும், அல்லது முனிசிப்பிற்கும் கிராம வாசிகளுக்கும் விபரீதமான கலகம் நேர்ந்ததென்று சமாச்சாரம் வருகின்றது. ஆனால் கலகம் இன்னார் நேர்ந்ததென்று ஸ்திரமாகத் தெரியவில்லை.

சிந்து நாட்டைச் சேர்ந்த ஹைதராபாத் முனிசிபாலிட்டி இம்மாதம் 6-ந் தேதி முதல் மூன்று வருஷத்திற்கு [illegible]த்தி செய்யப்பட்டிருக்கின்றது. இதற்குக் காரணம், அந்த முனிசிபாலிட்டி, முனிசிபல் கமிஷனர்களை நியமிக்கவும், புதிய வரியொன்று போட்டு அதன் வருமானத்தை அதிகப்படுத்தவும் மறுத்து விட்டமையேயாம்.

---

சென்ற அக்டோபர் மாதம் 21-ந் தேதி, கல்கத்தா மஸ்ஜிட்பாரி வீதியில் சுட்டுக்கொல்லப்பட்ட சப் இன்ஸ்பெக்டர் ஸ்ரீந்திர நாத பானர்ஜியின் விதவைக்கு ஜீவியகாலம் வரையில் கவர்ன்மெண்டார் மாதமொன்றிற்கு 125 ரூபாய் வீதம் பென்ஷன் கொடுக்க உத்தரவு செய்திருக்கின்றனர்; அவருடைய இரண்டு பிள்ளைகட்கு இலவசமாகக் கல்வி கற்பிக்கப்படும்; இரண்டு பெண்களுக்குக் கலியாண காலத்தில் ஒவ்வொருவருக்கும் ஓராயிரம் ரூபாய் ஸ்திரீதனம் கொடுக்கப்படும்.

---

**சந்தா நேயர்களுக்கு** :—இதுவரை சந்தா நேயர்களுக்கு நமது 'கதா ரத்னாகரம்' பத்திரிகையை ஒழுங்காய் அனுப்பி வருகிறோம். ஒருவர் அல்லது இருவர் மாதந்தோறும் பத்திரிகை வரவில்லையென்று எழுதுகிறார்கள். அப்படி யெழுதியவர்களுக்கெல்லாம் அனுப்பி யிருக்கிறோம். சிலர் 5-மாதம் பத்திரிகை வரவில்லையென்றும் எழு மாதம் பத்திரிகை வரவில்லையென்றும் இரண்டு கடிதம் வரப்பெற்றோம். நேயர்கள் வெளியூர் போகும்போது வீட்டில் அறிக்கை செய்யவேண்டும். அல்லது நமக்காவது எழுதி விலாசத்தை மாற்றிக் கொள்ளவேண்டும்.

---

**க்ஷேம விசாரணை** :—இந்தியாவில் ஆதிகாலத்தில் இப்பொழுது சில பாகங்களில் நம்மவர்கள் ஒருவரையொருவர் சந்திக்கும்போது 'நமஸ்காரம்' என்று சொல்வது வழக்கம். (இக்காலத்தில் இரவில் ஒருவரையொருவர் சந்திக்கும்போதும் நாகரீகமாக 'குட்மார்னிங் சார்' என்று சிலர் சொல்லுகிறார்கள்.) மற்றதேசங்களில் வெவ்வேறு விதமாகச் சொல்லுகிறார்கள். ஆங்கிலேயர் என்ன செய்கிறாய் என்று கேட்பது சகஜமாயிருக்கிறது. இப்படிக் கேட்பதில் எவரும் பின் வாங்குவதில்லை. பிரஞ்சு தேசத்தில் 'உங்கள் விஷயம் எப்படியிருக்கிறது' என்று கேட்கிறார்கள். இடாலியர் 'எப்படி யிருக்கிறாய்' என்று சொல்லுகிறார்கள். ஸ்பானியர் ஒன்றும் சொல்வதில்லை. சில சமயங்களில் 'கடவுளைப் பின்பற்று' என்கிறார்கள். ருஷ்யர் 'எப்படி ஜீவிக்கிறாய்' என்று கேட்கிறார்களென்றாலும் விடை யின்னதென்பது விளங்கவில்லை. எகிப்திலும் துருக்கியிலும் அதிக உஷ்ணமாயிருப்பதால் அவர்கள் 'வியர்வை எப்படி' என்று கேட்கிறார்கள்: உஷ்ணப் ப்ரதேசங்களில் சரீர சர்மத்தை பாதுகாப்பது அவசியமே யாகும். ஜெர்மானியர் 'உன்னில் நீ எப்படியிருக்கக் காண்கிறாய்' என்கிறார்கள். அராபியர் 'கடவுளுக்கு வந்தனம், எப்படியிருக்கிறாய்' என்று கேட்கிறார்கள். பாரசீகன் 'உனது நிழல் உன்னில் குன்றியிருக்கக்கடவது' என்றும் ஸ்வேதியர் 'நீ எப்படி யிருக்கக்கூடும்' என்றும், டச்சுக்காரர் 'உன் காலம் எப்படி' என்றும் (ஆசியா) துலுக்கர் 'கடவுளின் கடாக்ஷத்துக்குட்பட்டிரு' என்றும், சைனாக்காரர்கள் 'இரை[illegible] யெப்படி யிருக்கிறது. நீ உன் [illegible]த்தைப் புசித்தாயா' வென்றும் [illegible]கிறார்கள். தேச ஆசாரம், நடையுடை பாவனை, கல்வி யறிவுக்குத் தக்கவாறு வார்த்தை வேறுபடுகிறது.



[illegible]ப்பு முதலிய அசுப கர்மங்களுக்கும் இந்தக் காசு வண்டாடி ஞற்றான் சிறப்பாக விருக்கிறது. இதைப்பற்றி அதிகம் விஸ்தரிப்பானேன் இதோ வேகவிருக்கிற பிணத்தின் வாயிற் றுட்டு[illegible]ஞ் சாரஞ் செய்வதானால் மற்றெங்கு செல்லாதிருக்கும். அது நடமாடாத இடம் இல்லையென்றே சொல்லவேண்டும் என்றான்.

இங்கே காசு செலவு செய்துகொண்டு கூச்சல் போட்டுக்கொண்டிருக்குஞ் சமையம் சிகாமணி எமதூதுவரை சமிக்ஞை செய்தனன். தூதரும் அங்குகூடியுள்ள யாவருடைய செவியிலும் படும்படி,

வாச்சுது வாச்சுது பேச்சியரோ குறை,
வயிற்றுக்கு வாச்சியது பேச்சியரே.

எனப் பாடினர். இச்சத்தத்தை அங்குள்ளார் யாவருங் கேட்டு மனக் கலக்கத்தோடு மௌன விரதம் பூண்டு இவை பூதங்களோ பிசாசோ ராக்ஷதரோவென மருண்டு யாவருமெழுந்து நின்று சிலர் திரும்பிப் பிரேதத்தை நோக்கினர். சிலர் அதைப்பார்க்க அச்சமுடையவராய் வேறுபக்கமாகத் திரும்பிக்கொண்டனர். சிலர் சதம் வரும் திசையாகிய ஆகாயத்தைப் பார்த்தனர். சிலர் ஒரு பக்கமும் பார்க்கத் தைரியங்கொள்ளாது பதுமைபோல பாதத்தையே பார்த்துக் கொண்டு நின்றனர். நேரமோ கருகருவென்று மயங்குகின்றது. இந்தச் சந்தர்ப்பத்தில் பெரும் பேரிடியொன் றிடித்தது போன்ற சத்தம் ஒன்று யாவருடைய மனமுங் கலக்கமுறும்படி கேட்டது. இதல்லாமலும் அந்தத்திக்கை பார்த்தவர் கண்களுக்கு இரண்டு கருமலை போன்ற காத்திரத்தை யுடையவர்களாயும், பொறிகள் சிந்திய கண்களை யுடையவர்களாயும், ஆவென்றத் திறந்த வாயை யுடையவர்களாயு முள்ள தூதர்கள் தென்பட்டனர். கட்டையிற் கிடத்திய பிணமோ சட்டென் றெழுந்தது போன்று இவர்கள் கண்ணுக்குப் புலப் பட்டது. இதைக் கண்ணுற்றனரோ இல்லையோ வெடுத்தனர் ஓட்டம், ஒருவ ரொருவர் போன வழியொருவர் போகாமல் ஓடோடியும்போய் அவரவர்கள் [illegible]டிற் புகுந்து முன் தலைவாசற் கதவைத் தாளிட்டுச் சங்கதியா [illegible]ரொருவரும் அறியாது அங்குற்றவர் பால் மொழிந்தனர். வெளியூர் [illegible]ர் செட்டியார் வீடேவந்து சேர்ந்தனர். சிகாமணியும் விவேகனும் உண்மை அறிந்தவர்களானதால் ஐயமின்றி நின்றனர்,

னாகரோ அவருடன் சேர்ந்து சென்று செட்டியாரை எழுப்பிஸ்நானம் செய்வித்து வைராக்கியத்தைப் போதித்து வான் வழிச் சென்றனர். சிகாமணியும் செட்டியாருக்குவேண்டிய சாதனங்களை முறையாகச் சொல்லி வைத்து அவரைப் பார்த்து செட்டியாரே! நீவிர் முன் புகன்ற வண்ணம் சன்யாசத்தைக் கைக்கொண்டு வனத்திற் சஞ்சரித்து தடையியற்றி சாதுக்களை யடுத்துத் தத்துவ விசாரணை செய்து, ஜென்ம சாபல்ய மடையும் மார்க்கத்தைத் தழுவும். இனி நரகத்திற் சென்று பந்தமென்னும் படுகுழியில் வீழாதீரெனப் பலவாறு சொல்லி அங்கோர் மடத்தைக் காட்டி அதிற் போய் இரவைக் கழித்து அதிகாலையில் எழுந்து உட்கார்ந்திரும். அந்தச் சமையம் நான் அங்குவருகிறேன். அதற்கு முன்னாடி நீர் ஊருக்குட் புகுவீரேல் உமக்கு பெருங்கஷ்டம் வந்துநேரும்; ஆகையாலிதை விட்டு ஒரு பக்கமும் போகாதீர் என்று சொல்லி நிறுத்திவிட்டு, இருவருந் திரும்பி நகரக்குட் புகுந்து வீதி வழியே வரும்போது எதிரில் கண்டவர்களனைவரிடமும் செட்டியார் பேய் ரூபமாயினர். ஆகையால் ராக்காலங்களில் வீடுகள் தோறும் வருவர். வந்தால் ரொம்ப நல்லவர் போன்று நடித்து உங்களை யேமாற்றிக் கெடுதிகளை விளைவிப்பர். ஆகையால் அவரிடம் ஏமாந்து விடாதீர்கள். மேலும் அப்பேய் ரூபம் உங்களைத் தனியிடத் தழைத்துப் போய் ஓரே அடியாய் அடித்துப் பிராணனைப் போக்கிவிடும். அது வேறு வேறு ரூபங்களும் எடுத்துவரும். அநேகமாய் செட்டியாரைப் போலவே இரவிலும் சிலவேளை பகலிலுங்கூட வந்தாலும் வரக்கூடும்; நீங்கள் கண்டு ஏமாறாதிருங்கள். இல்லையேல் உங்களை எளிதில் விடமாட்டாது. இப்போது நாங்களெல்லோரும் திரும்பி வரப்பட்டபாடு பிராணனுக்கு வந்து விட்டது என இவ்விதமாகவே கண்டோர்களனைவரிடமும் புகன்று கடைசியாக செட்டியார் வீட்டிலும் போய் சமாசார மெல்லாஞ் சொல்லி அவர் இங்கு வந்தாலும் வருவர், ஏனெனில் உங்கள் யாவர்பேரிலும் அதிக கோபங் கொண்டுள்ளார். முன்னமேயும் உங்களை ஆட்டி அலக்கழிக்கிறேனென்று புகன்ற வார்த்தை உங்களெல்லோருக்கும் கவனத் திலிருக்கலாம் உஷாராயிருங்கள். அவர் வந்து என்ன ஜெகஜாலம் பண்ணினபோதிலும் இடங்கொடாது உதாசீன வார்த்தைகளை உபயோகித்து ஓட்டி விடுங்கள். இரவில் கதவை மறந்தேனும் திறந்து விடப்



போகாதீர்கள். திறந்தீர்களோ வந்தது மோசம். நன்றாயிருக்கிற உங்கள் குடும்பத்தை வீணாகக் கெடுத்துவிடுவார். நான் சொல்லி வந்ததை நீங்கள் ஒவ்வொருவரும் மறந்துவிடாதீர்கள். நாங்கள் வீட்டுக்குப் போய்க்காலையில் வருகிறோம் என்று கூறிவிட்டு, அரண்மனையை நோக்கி நடந்தனர். போகும் மார்க்கத்தில் விவேகன் சிகாமணியைப் பார்த்து அண்ணா இந்தக் குடும்பத்திலுள்ளோர்களனைவரும் செட்டியாரால் போஷிக்கப்பட்டு வந்தும் அவருக்காக இவர்களில் ஒருவராவது தன்னுடைய வுயிரைத் தான் கொடுக்கச் சித்தமாயிருக்கிறேனென்று சொல்லி முன் வந்தனரில்லையே யென்றான்.

சி.—தம்பி யென்ன! நீ சொல்வது வேடிக்கையாயிருக்கிறதே, ஒருவருக்காக மற்றொருவர் உயிரைக் கொடுப்ப தென்றால், இலேசான காரியமா? அவை முடியக்கூடியதா, ஒவ்வொருவருக்கும் அவரவர் பிராணன் அபூர்வமானதே; ஆகையால் அவர்கள் கொடுக்கமாட்டேனென்று சொன்னது ஆச்சரியமாகாது.

வி.—மன்னுயிரனைத்தையும் தன்னுயிர்போல் பாவிக்க வேண்டாமா!

சி.—அப்படியானால் உன் அபிப்பிராயம் யாது?

வி.—தன் உயிர் நீங்கச் சகியாத செட்டியார்க்காக அவர் குடும்பத்தினரில் யாரேனுமொருவர் அவர் படுங் கஷ்டத்தைக் கண்டு தன்னுயிர் கொடுத்து அந்தக் கஷ்டத்தை நீக்குவதே உசிதம்.

சி.—செட்டியார்க்கு பிறருயிர் கொடுத்தேனும் தன்னுயிரைக் காப்பாற்றவேண்டுமென்ற எண்ணந்தானே?

வி.—ஆம் அதுதான் அவர் அபிப்பிராயம்.

சி.—அப்படியானால் அவருடைய உயிரைப்போல் பிறருயிரையும் பார்க்கவேணுமே. அப்படி அவர் பார்த்தனரா?

வி.—இல்லை.

சி.—அதுபோல்தான் மற்றவர்களும் (என்று பலவாறு பேசி வீடு போய்ச் சேர்ந்து உண்டு உறங்கினர்.)

---

# ஏழாவது அத்தியாயம்.

இங்கு இப்படியிருக்க அங்கே செட்டியார் சிகாமணி காட்டிய விடத்திற் சென்று சற்று நேரம் படுத்து நித்திரை வராமல் விழித்துக்கொண்டே உயர நோக்கிய வண்ணமாகப் பலது மெண்ணிச் சிந்தை வருந்தியவராய் பின் வருமாறு தனக்குத் தானே சொல்லிக் கொள்கிறார்.

நாம் இதுவரை எவ்வளவு சுகமாய் வாழ்ந்தோம். எவ்வளவு பொருளைச் சம்பாதித்தோம். எப்படி யிருந்த நமக்கு இப்போப் பட்ட ஆபத்து நேர்ந்ததே என்று நினைந்து மனஞ் சோர்வடைந் திருக்குஞ் சமையம் இவர் ஒருநாளேனும் இராக்காலங்களில் தனி யிடத்திருந் தறியாதவராதலால் இவருடைய மனதில் சற்று பயந் தோன்றி சட்டென் றெழுந்து ஆகா நாம் நகருக்கு வெளியே தனி யான பாழும் மடத்தி லிருக்கிறோமே, இங்கு பூத பைசாசுகள் வரின் நாம் யாது செய்வதுவென ஐயங் கொண்டவராய் நான்குபுற மும் பார்த்தனர். எங்கும் இருண்டு கல்வி அறிவில்லாக் கசடர் இருதயமெனக் கருத்து இருந்ததால் இவர் மனதை வருத்தியது. நான் குழந்தையைக் கண்ணால் பார்க்கவில்லையே. யாவரு மென் மேற் பிரியமில்லாது போயினும் இளையாள் என்மீது அதிகப் பக்ஷ முடையவளா யிருந்தனளே, நானும் அவள்மீது மிகுந்த அன்புடை யவனா யிருந்தேன். அவள் என்னை வெறுக்கக் காரணமில்லையே. ஒருக்கால் அவள் நம்மை வெறுப்புண்டாகும்படி. பேசியதாக என் மகள் சூட்சி செய்து தானே கற்பனையாகக் கட்டி முன்வந்து சொல் லினளோ யாதோ அறிகிலனே, அவள் அவ்விதம் ஒரு காலத்தும் புகன்றவ ளல்லவே. எல்லாம் யோசிக்கும் போது ஆச்சரியமாகவே தோன்றுகிறது. நாம் அங்கு சென்று அவளைக் கண்டு நேரில் அவ ளுடைய மனோபாவத்தை யறியலாமா. அங்கு சென்றால் நம்மை என்ன ஆபத்திற் குள்ளாக்குவரோ தெரியவில்லையே. பசியோ மிக வருத்துகிறதே. தனித்திருக்கப் பயந் தோன்றுகிறதே. தூக்கமும் வரமாட்டுதில்லை. நான் முன்பே பையனிடம் அவனிஷ்டம்போல் சாவியைக் கொடுத்து இனி நீயே எல்லாக் காரியாதிகளையும் பார்த் துவா வெனச் சொல்லி அவனிடஞ் சகலமும் ஒப்புவித்திருந்தால்



இவ்விதம் நேர்ந்திருக்காது. அவ்விதஞ் செய்திருந்தால் யாவரும் என்பேரில் பக்ஷமுள்ளவர்களாகவே யிருப்பார். பொருளை வைத்துக் காப்பாற்றாது செலவு செய்து வறுமை யடையும்படி செய்திடுவே னோ யாதோ வென எண்ணிக் கொடுக்க மறுத்தபடியால் இப்போ திப்படி அவதிப்பட நேர்ந்தது. எக்கேடு கெட்டுப்போகிறானென்று கொடுத்திருந்தே னில்லை. இப்போது அங்கு சென்று அவனிடத் தில் நயமாய்ப் பேசி உன்னிஷ்டம்போல் நீயே எல்லாக் காரியங்களை யும் நடத்திவா புதையல் தனமெல்லாம் எடுத்துத் தருகிறேனென்று சொல்லலாமென்றாலோ அவன் என்னைப் பார்த்து நம்முடைய தக ப்பனென்றே யெண்ணுவானோ அல்லது பிசாசென நினைத்து துயர் விளைவிப்பனோ யாதோ எவ்விதமாயினு மாகுக, நான் போய் பார்த்துவருவதே சரியெனச் சற்றுதூரம் நடப்பார். திகைத்து நின்று நம்மை யாரேனும் எதிரில் பார்த்துவிட்டால் என்ன கெடுதி நேருமோவென எண்ணுவார். பின்னும் போய்வருவதே சரியென நடப்பார். மார்க்கத்தில் சற்று சருக்கென்ற சத்தங் கேட்டால் யாரோ வருகிறார்போ லிருக்கிறதே கண்டுவிடின் யாதாகுமோ, வென நினைப்பர். இப்படி அடிக்கடி நிற்பதும் நடப்பதுமாகச் சென்று நகருக்குட் புகுந்தனர். அங்கு கோடியிலிருக்கிற வீட்டுக் காரர் சிகாமணி யுரைத்ததைக் கேட்டதுமுதல் நம் வீடுதானே வரும் வழியில் முதலிலிருக்கிறது. ஒரு வேளை வந்துவிட்டால் என் செய்வது என்ற அதே எண்ணமாக விருந்தபடியால் செட்டி யார் நடந்துவரும் சத்தங் கேட்டவுடன் தன் பயமாக யாரங்கே என்றார். கதவோ சாத்தி யிருக்கிறது. உள்ளே விளக்கு எரிந்து கொண்டிருக்கின்றது. அவ்வீட்டிலுள்ள மற்ற பெண்டுபிள்ளைகள் கண்ணை இறுக மூடி விழித்துக்கொண்டே படுத்திருக்கிறார்கள். இவர் யாரென்றவுடன் அவர்களுக்கெல்லாம் நெஞ்சு படபடத்தது. யாரா யிருந்தாலுமென்ன நீர் பேசாது தூங்குமென்றார்கள். செட் டியாரோ யார் என்றசத்தங் காதிற்பட்டும் பேசாது விரைந்துசென் றனர். கேட்டவர்க்கு பதில் வார்த்தை யில்லாததால் பிசாசுதா னென மதித்து தெருப்பக்கஞ் சன்னல் வழியாய் பார்க்கலாமென படுத்திருந்தவர் எழுந்து உட்கார்ந்துகொண்டு சன்னற்பக்கம் பார்த் தார். அங்கு இவர்கண்ணுக்கு ஒருவர் எட்டியெட்டிப் பார்ப்பதாய்த் தென்பட்டது. சட்டென்று கண்ணை மூடிக் குப்புறப் படுத்தனர். சற்று நேரஞ் சென்று கண்ணைத் திறந்து நோக்கினார். அங்கே எட்

டிப் பார்த்தவர் மறுபடி கைச்சாடை காட்டி அழைப்பதுபோற் றோற்றியது. தோற்றினதும் ஏதேது நம்மை இவை விடாதுபோல் தோன்றுகிறதே யென்று நினைத்து அடுத்த அரைக்குள் மற்றவரோடு போய்ப் படுத்துக்கொள்ளலா மென்று நினைத்தார். ஆனால் எழுந்துபோகவோ மிகப் பயம். சீ. சீ. ஒரு பக்கமும் போவது சரியல்ல. எழுந்தால் ஒரே அடியாய் அடித்தாலும் அடிக்கும். ஆகையால் கண்ணைத் திறக்காமல் இப்படியே தூங்கிவிடுவதே சரியெனத் தூங்கினர். செட்டியாரோ சில வீடுகளைக் கடந்து செல்லும்போது இருவர் எதிர்ப்பட அவரைக் கண்டதும் சற்று மயங்கினர். மறுபடியும் தலையைக் குனிந்தபடியே போய்விடுவதே சரியென நடந்தனர். வந்தவரிருவரும் சமீபத்தில் வந்ததும் யாரதுவென்றார். செட்டியார் சத்தமிடாது விலகிச் சென்றார். வந்த இருவர்க்கும் பதில் கூறாதுபோகிற இவர் யாராயிருக்கலாமென மறுபடியும் யாரது போவதென்றார். அதற்கும் பதிலில்லை. இருவரி லொருவர் அடே பிசாசுபோலிருக்கிறது. அதுதான் பேசாதுபோகிற தென்றான். மற்றவன் அந்தச் சந்தேகந்தான் எனக்கும். பகலில் இறந்தனரே செட்டியார் அவர் பிசாசாகிவிட்டனராம். அதுதான் போல் இருக்கிறது. உட்கார்ந்துகொண்டு பாரடா கால் கீழே படுகிறதா வென்று என்றானொருவன். மற்றவன் உட்கார்ந்து பார்த்து கால் கீழே படவில்லை. முழ உயரத்திற்கு மேலேதானிருக்கிற தென்றான். போனால்போகிறது நாம் போவோமடா இந்தமட்டோடே என்றான். ஒருவன் அடே அது நம்மை என்செய்யும் அவர்கள் வீட்டை நோக்கிப் போகிறதுபோலிருக்கிறது. அவர்களைத்தான் ஏதாவது செய்தாலுஞ் செய்யும் என்றான் இல்லையடா அதற்கு யாரென்றிருக்கிறது. நினைத்தால் ஒரே அடியில் அடித்து வீழ்த்தி விட்டுப் போய்விடும். அந்தச் சனி நமக்கேன்டா என்று இருவரும் வேறு வழியாகச் சீக்கிரம் வீடுபோய்ச் சேர்ந்தனர். இதை யறிந்த செட்டியாரோ ஓகோ இவர்கள் நம்மைப் பேயென மதித்துப் பயந்து ஓடுகிறார்கள். போனால் போகிறார்களென வெகுதுரிதமாக வீடு வந்து சேர்ந்தனர். வாசற் கதவு சாத்தித் தாளிட்டிருந்தது. சன்னலைப் பார்த்தார் அவைகளெல்லாம் அடைத்துக் கொக்கிகள் மாட்டியிருந்தன. கதவின் சாவித்துவாரத்தின் வழியாய்ப் பார்க்க விளக்கு எரிந்துகொண் டிருக்கிறது. சிலருடைய குரலுங் கேட்டது. ஆனால் பயந்தவர்கள்போல் மெல்லிய குரலோடு முணுமுணு



வென்று பேசுகிறாரெனத் தெரிந்தது. சற்று நேரந் திண்ணையிலுட்கார்ந்து உள்ளே என்ன பேசுகிறார்களென உற்றுக் கேட்டனர். நாலைந்து பேர்வழிகள் புருஷர்கள் பேசுவதாகத் தெரிந்தது. இந்தச் சமயம் ரோந்துவருகிற போலீஸ் ஜவான்களிலிருவர் சந்தடியோடு கையில் விளக்கொன்று வைத்துக்கொண்டு வந்தனர். இவர்களைப் பார்த்தவுடன் செட்டியார்க்கு இன்னது செய்வதெனத் தோன்றவில்லை. திகைத்தனர். மறுபடியும் ஒருவாறாகத் தேறி இவர்கள் நம்மை என்ன கேட்டிலும் நாம் பேசாது நின்றுவிட்டால் நம்மைப் பிசாசென மதித்து பயந்து ஓடிவிடுவர். இதுதான் சரியெனத் தன் முகத்தைத் துணியால் மூடிக்கொண்டு அசையாது மரம் போல் நின்று கதவை ஒரு கையால் தொட்டுக்கொண்டு நின்றனர். இதை ரோந்து வந்த ஜவான்கள் கண்டு விளக்கை நேரே பிடித்துப் பார்க்க முகந் தெரியவில்லை. யார் அங்கே நிற்கிற தென்றார். பதிலில்லை. முகமும் தெரியவில்லை, சரீரமோ செட்டியாரைப் போலவே தோன்றியது. இவர்கட்கு திடுக்கென்று நெஞ்சு அடித்துக்கொண்டது. கை கால் நடுக்குற்றது. யார் நிற்கிறதென்று வாய் குழறுதலாய்க் கேட்டனர். அப்போதும் பேசவில்லை. ஆனால் மூடிய முகத்தோடு திரும்பிப் பார்த்தனர். இதைக் கண்டாரோ இல்லையோ பேய்தானப்பா வென்று அலறிக்கொண்டு புறங்கால் புட்டத்திற்றாக்க வோட்டமெடுத்தனர். இதைக்கேட்ட அக்கம் பக்கமுள்ள வீட்டுக்காரர் யாவரும் பயந்துபோய் ஒருவராவது கதவைத் திறந்து வெளிவந்து பார்த்தவர்களில்லை.

செட்டியார் வீட்டுக்குள்ளே பேசிக்கொண் டிருந்தவர்களும் இதைக் கேட்டு நெஞ்சம்பதைபதைத்து பிசாசு வந்து வெளியில் நிற்கிறதுபோ லிருக்கிறதென வெண்ணி சாவித் துவார வழியாய் வெளியே நோக்கும்போது, கதவண்டை நிற்பதா யறிந்தனர். செட்டியாரோ ஜவான்கள் பயந்து ஓடிப்போயினர் என்று சந்தோஷித்தாலும் இனி அனேகருக்குத் தெரிந்துவிடுமே அவர்களெல்லாம் வந்து நம்மை என்செய்வரோ வென்ற அச்சம் ஒரு பக்கம் வாட்டிற்றாயினும் இவ்வளவு தூரம் வந்து ஒரு வார்த்தையாவது பேசாதுபோவதா, எது நேரிடினும் நேரிடுகவெனத் துணிந்து கதவை மெதுவாகத் தட்டினார். தட்டிய சத்தங் கேட்டு உள்ளே யிருக்கிறவர்களிற் சிலர் மௌனமுற்றனர். சிலர் கதவைத் திறக்காதே யென்றார். அதில் ஒருவர்

யார் வெளியில் என்றார். செட்டியார் பதில் பேசவில்லை. மறுபடியுந் தட்டினார். அப்போதும் யார் கதவைத் தட்டுகிறது என்றார். அதற்கும் பதில் சொன்னாரில்லை. இதற்குள் செட்டியார் மகள் ஓடிவந்து என்ன சங்கதியென்றாள். சங்கதி ஒன்றுமில்லை வெளியில் யாரோ ஒருவர் நின்றுகொண்டு கதவைத் தட்டுகிறார் யார் யார் என்று கேட்டாலும் பதில் பேசாது தட்டிக்கொண்டு நிற்கிறார் என்றார்கள். உடனே செட்டியாருடைய மகள் கதவண்டை வந்து நின்று கொண்டு யாரையா வெளியே என்றாள். செட்டியார் இதைக் கேட்டு இனி நாம் சும்மா விருத்தல் தகுதியன்று, என நினைந்து, ஏனம்மா நான் உன் தகப்பனல்லவா கதவைத் திறவென்றார்.

மகள்.—இங்கு ஏன் இந்த இருளில் வந்தீர்.

த.—உங்களிடத்தில் சில காரியங்கள் பேசவேண்டியதிருக்கிறது.

மகள்.—எங்களிடத்தில் தங்களுக்காகவேண்டிய காரியம் யாதிருக்கிறது.

த.—இருப்பதினாற்றான் வந்து நிற்கின்றேன்.

மகள்.—உமக்கும் எங்களுக்கும் உள்ள சம்பந்தம் பகலோடு போயிற்று. இனி நீர் இங்கே நிற்கத் தேவையில்லை. சுடுகாடு செல்லும்.

த.—நான் இறந்துபோனதாக நினைக்கவேண்டாம். உயிரோடுதானிருக்கிறேன். வேண்டுமானால் கதவைத் திறந்து பார்.

மகள்.—கதவைத் திறப்பேனென்று சொப்பனத்திலும் நினைக்க வேண்டாம். பேசாது போய்விடும்.

த.—நான் உன்னை இதற்காகத்தானா பிரியமாய் வளர்த்தேன்.

மகள்.—அந்தக் கதைகளெல்லாம் இப்போது தேவையில்லை. நடந்துவிடும்.

த.—என்ன இவ்வளவு கொடூரமான வார்த்தைகளை தயவு தாக்ஷண்யமில்லாது பேசுகின்றனையே.

மகள்.—இவ்வளவோடு நின்றால் நீர் பூர்வஞ் செய்த புண்ணியமென்றெண்ணும்.

த.—அப்படியா, இனி வேறு கெடுதிகளும் உண்டாக்குவீர்களோ.

மகள்.—நீர் இதோடு போய்விடாமல் சற்று நேரம் தாமதிப்பீராகில் அப்போது யாது நடக்குமென்றறிவீர்.



த.—சரி உங்களிடத்தில் நான் வைத்திருந்த அன்புக்கும் உங்களுக்காகக் கஷ்டப்பட்டுப் பொருளைச் சேகரித்து வைத்ததற்கும் நீங்கள் அவ்வளவு உபகாரமேனும் செய்யவேண்டாமா. செய்யத்தான் வேண்டும். இனி நானிங்கிருக்கவில்லை. போய்விடுகிறேன். ஒரு தயவுமட்டும் வையேன்.

மகள்.—நாங்கள் என்ன தயவை வைக்கப்போகிறோம். கூடுமானால் உமது முகத்தில் தேயுவைத்தான் வைக்கலாம்.

செ.—தெய்வம் உன்னை இவ்வாறு பேசவைத்ததே? மகளே உன் சிறியதாயார் என்ன குழந்தை பெற்றனள். இதாவது சொல்.

மகள்.— சீ. சீ. பிசாசே. ஓடிவிடு நில்லாதே என எத்தனை தரம் சொல்வது.

செ.—நீ நான் பெற்ற பிள்ளையாதலால் யாதுவசை கூறினுமின்பமே; குழந்தை ஆணோ பெண்ணோ அதைத் தெரியச் சொல்லிவிடு.

மகள்.—இந்தப் பிசாசு எளிதில் செல்லாது. கொடுப்பதைக் கொடுத்தால்தானே போகும். எடுத்துவா துடைப்பத்தை.

மகன்.—அதோடு இவ்வளவு நேரம் பேசுவதா திற கதவை அதன் மூஞ்சியில் சுட்டுவிடுகிறேன்.

ஒருவர்.—அந்தப் பிசாசுக்கு இங்கு என்ன அலுவல் செருப்பெடுத்தடித்து ஓட்டுங்கள்.

இவ்விதமாகப் பலரும் பல பல பேசிப் பயமுறுத்தினர். இந்தச் சத்தங் கேட்டு அக்கம் பக்கம் வீட்டிலுள்ளோர்களும் விழித்துக்கொண்டு பிசாசை யெளிதில் விடப்படாது. போடு போடென்றும் விடாதே விடாதே எனவும் சுடு சுடு வெனவும் குத்து குத்தெனவும் விரட்டு விரட்டெனவும் ஏகமாய் இரைச்சலுண்டாயது. செட்டியார் இதேது பெரு மோசமாயிருக்கிறதே இனி இவர்களுக்கு நாமெத்தனை விதமாயெடுத்து மொழிந்தபோதிலும் நம்மை நம்பமாட்டார்கள். இங்கிருப்பது சரியன்று என்ன கேடு விளைத்திடுவரோவென நடுக்குற்று கதவின் துவாரத்தின் வழியாய் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள் யார் யார் நிற்கிறார்கள், இளையாள் ஒருவேளை கண்ணுக்குத் தென்படாளா பார்த்துவிட்டுப் போகலாமென நினைத்து உற்று நோக்கினர். இந்தச் சமயம் உள்ளே செட்டியார் மகன் நன்றாய்க் கொதித்த எண்ணெயை பீச்சாங்குழலி

லடைத்து கதவின் துவாரத்தின் வழியாகப் பீச்சினான்; அவை செட்டியார் முகத்திற் பட்டு ஒரு கண்ணிலும் ஒருபுறம் கன்னம் காது முதலியவைகளிலும் பட்டது. உடனே பெருங் கூச்சலாக அப்பா வென்றலறிக்கொண்டு ஓட்டமெடுத்தனர். இவர்களுங் கதவைச் சட்டென்று திறந்து நாலைந்துபேர் கையில் பந்தங்களைக் கொளுத்திக்கொண்டு சுடுசுடுவெனப் புறப்பட்டார்கள். இதைப் பார்த்திருந்த பக்கத்து வீட்டிலுள்ளவரும் எதிர் பக்கத்து வீட்டுக்காரருமாகப் பத்துப்பேர்வரை கையிற் பந்தமெடுத்துக்கொண்டு எங்கே எங்கே யெனத் தெருவில் வந்து நின்றனர். ஆக யாவருமொருமித்து கொஞ்சதூரம் பின் சென்று விரட்டினர். செட்டியாரும் நாம் இங்கு வந்தது புத்தியீனமென வெண்ணித் திரும்பிப்பாராமல் தலைவிரி கோலமாய் ஓடி நகரைக் கடந்து பரங்க ளடர்ந்த சோலையிற் புகுந்து மறைந்தனர். பின்தொடர்ந்து வந்தவர்களும் இனி நாம் திரும்பிவிடுவதே சரி. இனிப் போனால் அந்தப் பிசாசு மற்றப் பிசாசுகளைத் துணையாகக்கொண்டு பெருங் கூட்டமாக வந்தாலும் வரக்கூடும், என்று திரும்பிச் செல்ல நினைக்கையில், முன் லோந்து வந்த யிருவரும் பயந்து ஓடினவர்கள் அங்கே போலீஸ் ஸ்டேஷனிற் சென்று அவர்களிடம் சொல்ல அவர்கள் பத்துப்பேர்வரை கையிற் றடியும் பந்தமுமெடுத்துப் பெரிய ஆரவாரத்துடன் காக்கிச்சட்டையுடையோடு வருவதை இக்கூற்றவர் கண்டு அதோ பிசாசுக்கூட்டம் வந்துவிட்டதடா வென்று பந்தங்களை அந்த யிடத்திலேயே போட்டுவிட்டு ஓடோடியும் போய் அவரவர்கள் வீட்டிற் புகுந்து கதவைத் தாளிட்டுக்கொண்டனர். போலீஸ்காரர்களோ இங்கே பந்தங்களைப் போட்டுப்போன விடம் வந்து பிசாசுக்கூட்டங்கள் அனேகம் வந்ததுபோற் றோற்றுது. எல்லாம் நம்மைப் பார்த்ததும் பந்தங்களைப் போட்டுவிட்டு மறைந்துபோயிற்று வென வெண்ணிச் செட்டியார் வீடுவரை போய்ப் பார்க்க அங்கு ஒரு வீடாவது கதவு திறக்காமலும் சந்தடி யில்லாமையையுங் கண்டு சரி பிசாசுகள் ஓடிவிட்டன, இனி வராதெனப் போய்விட்டனர். அங்கே செட்டியார் ஒரு செடி மறைவில் நின்றுகொண்டு இவர்கள் வந்து திரும்பிப் போனதையும் பார்த்துக்கொண்டே யோசிக்கலாயினர். என்ன இவ்வித கஷ்டம் நமக் குற்றதே யாது காரணம். இதுகாலபரியந்தம் நாம் எவ்வளவு சுகத்தோடு இனிது வாழ்ந்திருந்தோம். இப்போது ஒரேதினத்தில் திடீரென்று பெருங் கஷ்டம் வந்து சம்பவித்து




## ஸ்ரீபாகவதம் தமிழ் வசனம்.

ஸ்ரீகிருஷ்ண சரித்ரங்களை உட்கொண்ட ஸ்ரீபாகவதத்தையும் ப்ரதமஸ்கந்தம் தொடங்கி மூலத்திற்கிணங்க மொழிபெயர்த்து அழகான சித்ரப்படங்களோடு அச்சிட்டுக்கொண்டு வருகின்றோம்.

இதில் ஸ்ரீபாகவதம் முதல் வால்யம் (ப்ரத்ம த்விதீயஸ்கந்தங்கள்) அச்சாய் விட்டது. இதன் விலை. ரூபாய் 1-0-0) (தபால் சார்ஜ் ப்ரத்யேகம்).

இரண்டாவது வால்யம் (த்ருதீய ஸ்கந்தம்) அச்சாய் வருகின்றது. இதுவும் கூடியசீக்ரத்தில் வெளியாகும்.

| | |
|---|---|
| ஸ்ரீபாகவதம் (ப்ரதம த்விதீய ஸ்கந்தங்கள்) | 1 3 0 |
| ,, (த்ருதீய ஸ்கந்தம்) | 1 8 0 |

## ஸ்ரீ வால்மீகி தமிழ் வசன ராமாயணம்

ஸ்ரீராமயணம் காலிகோ பைண்டுடனும், ஆர்ட்பேபரில் உயர்ந்தகாலிகோ பைண்டுசெய்து கிலிட்டு அக்ஷரம் போட்டதுமான இருவகை புஸ்தகங்கள் ஸ்ரீராமாயணம் முழுமையும் 8-பாகமாக அச்சிட்டிருக்கின்றோம். சந்தாதாரர்கள் தாம் விடாமல் வாங்குவது மாத்திரமே யன்றித் தமது இஷ்டமித்ர பந்துக்களையும் ப்ரோத்ஸாஹப்படுத்தி வாங்கச் செய்து அவர்களையும் களிக்கச் செய்வார்களென்று வேண்டுகிறோம்.

சந்தாதாரர்களுக்கு விற்பனைசெய்யும் விலை.

| | சாதாரண பேபர் புஸ்தகம். | ஆர்ட்பேபர் புஸ்தகம். |
|---|---|---|
| பாலகாண்டம் | 1 0 0 | 2 4 0 |
| அயோத்யாகாண்டம் முதல்பாகம் | 1 0 0 | 2 4 0 |
| ,, இரண்டாம் பாகம் | 1 2 0 | 2 6 0 |
| ஆரண்யகாண்டம் | 1 0 0 | 2 4 0 |
| கிஷ்கிந்தாகாண்டம் | 1 0 0 | 2 4 0 |
| சுந்தரகாண்டம் | 1 8 0 | 3 0 0 |
| யுத்தகாண்டம் I Vol. | 1 8 0 | 3 0 0 |
| ,, II ,, | 1 8 0 | 3 0 0 |

(தபால் சார்ஜ் ப்ரத்யேகம்.)

| | |
|---|---|
| ஸ்ரீ வசன பூஷணம். (முழுவதும் கித்தானல் பைண்ட் செய்யப்பட்டது) | 2 4 0 |
| வைராக்யஸூர்யோதயம் (காகிதஅட்டை) | 0 6 0 |
| கோயிலொழுகு | 0 6 0 |
| நல்வழி: மூலமும் உரையும் | 0 0 6 |

ஆர். வெங்கடேஸ்வர் அண்டு கம்பெனி,
ஆனந்த பிரஸ், மதராஸ்.

R. VENKATESHWAR & Co.,
Ananda Press, Madras.




**FOUNTAIN PENS.**

உலகப் பிரசித்தமான
"ப்ளாக்பர்ட்"
என்னும்
பவுண்டன் பேனு.

சந்தேக மில்லாமல் சகலருக்கும் அதிக திருப்தியைக் கொடுக்கக் கூடியதுமா யிருக்கிறது.

விலை ரூபா 3-12-0.

இங்கிலாந்து விலை ஐந்து ஷில்லிங்கா யிருந்த போதிலும் அமிர்தம் அண்டு கம்பெனியார் இதை ரூபா 3-12-0-க்கு விற்கிறார்கள்.

ப்ளாக்பர்ட் பேனுவோடு கொடுக்கப்படும் நிப் சரியான பொன் நிப். மைக்கூடாய் பெரியது. மொத்தையாய் மை விழுந்து கறைப் படுத்ாதபடி சரியானபடி சமமாய் இங்கு பாயத்தக்கதாய் ஏற்பா டுள்ளது.

நூற்றுக் கணக்கான பேனுவிலிருந்து தெரிந்தெடுக்கலாம். ஆயிரம் கணக்காய் மற்றவர்களுக்கு திருப்தி செய்தது போலவே உமக்கும் திருப்தியைக்கொடுக்க உத்தரவாதம் பண்ணுகிறோம்.

சந்தாதாரர்களுக்கு
மாத்திரம் விலை ரூ. 3.

**அமிர்தம் & கோ,**
தபால்பெட்டி, 222.
மதராஸ்.

**AMIRTAM & CO.,**
Post Box, 222, Madras.

## KATHARATNAKARAM.

An illustrated Tamil Monthly Largest circulation in India, Burma-Ceylon, Straits, Malay States, Fiji Islands, and South Africa.

**Subscription.**

| | | | | |
|---|---|---|---|---|
| Inland Yearly | Rs. | 1 | 8 | 0 |
| Foreign ,, | ,, | 2 | 0 | 0 |

**Rates of Advertisement.**

| | | | | |
|---|---|---|---|---|
| one page per Month | Rs. | 3 | 0 | 0 |
| Half a page ,, | | 2 | 0 | 0 |

**MANAGER,**
**Katharatnakaram Office,**
MADRAS.

### ஓர் வேண்டுகோள்.

இப் பத்திரிகையைக் கண்ணுறுவோர் விளம்பரக்காரர்களுக்கு கடிதம் எழுதும்போதெல்லாம் கதாரத்னாகரம் பத்திரிகையில் கண்டதாய் எழுதக் கோருகிறோம். ப—ர்.

### இனம் இனம்!

தேகாரோக்கியத்தைப் பற்றிக் கவலை யுள்ள ஒவ்வொருவரும் விலாசத்தை விபரமா யெழுதி அனுப்பினால் காலணு விலையுள்ள <u>இன்பரகஸ்யம்</u> என்னும் சிறந்த புத்தகம இனமாய் அனுப்பப்படும். இப் புத்தகத்தில் [illegible] லற வாழ்வில் கவனிக்கவேண்டிய அற்புதமான விஷயங்கள் வெளியிடப்பட்டிருக்கின்றன.

**அமிர்தம் அண்டு கோ.**
தபால் பெட்டி 222, மதராஸ்.

# ஸ்ரீ வேணுகான ரகஸ்யம்.

ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவானவர், ருக்மணி, சத்தியபாமை சமேதராய் துவாரகையில் வசித்துவரு நாளில் பகவான் தனித்திருந்து புல்லாங்குழலை ஊதி ஆனந்த மடைந்து கொண்டிருந்தார். இதைப் பார்த்த தேவிகள் இருவர்க்கும் மனத்தில் ஓர் சந்தேகம் தோன்றியது. அஃதென்னவெனில் முத்தங்கொடுத்து கொஞ்சி விளையாட நாங்களிருக்கும்போது புல்லாங்குழலையேன் கையில் வைத்துக் கொண்டு சந்தோஷப்படுகிறார் என்பதை நினைத்து ஒருவர்க்கொருவர் பேசிக்கொண்டிருந்தார்கள். இப்படி யிருக்கும்போது திரிலோக சஞ்சாரி யாகிய நாரத மகா முனிவர் அங்கே விஜயஞ் செய்தார். இருவரும் உடனே எழுந்து நமஸ்கரித்து ஓர் ஆசனத்தில் அமரச்செய்தனர். நாரத பகவானும் அவர்களுடைய உள்ளக் கருத்தை யறிந்து, உங்கள் முகம் ஆழ்ந்த யோசனையோடிருப்பதாய்ப் புலப்படுகிறதே, எனக்குச் சொல்லலாமோவென்றார். அதற்கு ருக்மணி ஸ்வாமி! தாங்க ளறியாததொன்றில்லை. ஆயினும் உண்மையைச் சொல்லுகிறோம் எங்கள் சந்தேகத்தை நிவர்த்திசெய்ய வேண்டுமென்று பணிவாய்ச் சொன்னாள். அதற்கு முனிவரும் எனக்குத் தெரிந்தவரை சொல்லுகிறேன் என்றார். இதைக் கேட்டதும் ருக்மணி தேவியும் பகவானே! ஸ்ரீ கிருஷ்ண பகவான் சதாகாலமும் புல்லாங்குழலை வைத்துக் கொண்டு சுகானந்த மென்று நினைத்திருக்கிறாரே அந்தப் புல்லாங்குழல் எங்களைவிட சிலாக்கியமா அதனுடைய மர்மம் இன்னதெனச் சொல்ல வேண்டுகிறோம் என்றாள். அதற்கு ரிஷி சிரேஷ்டரான நாரதரும் அவர்களை நோக்கி அந்தப் பரம ரகஸ்யத்தை உங்களுக்குச் சொல்லுகிறேன். அந்தப் புல்லாங்குழல் உங்களைவிட மேன்மையானது, அதிக பாக்கியத்தைச் செய்தது. பகவானிடத்தில் மிகுந்த பக்தியுள்ளது. அது விஷயத்தை விரிவாய்ச் சொல்லுகிறேன் கவனமாய்க் கேளுங்கள் என்று சொல்ல ஆரம்பித்தார்.

ஸ்ரீ காசி க்ஷேத்திரத்திலே கலா சமுத்திரத்தை வாரியுண்ட விஸ்வநாத சாஸ்திரி யென்ற ஒரு பிராமணர் இருந்தார். இவர் சமஸ்தானத்தில் பிரதான சமஸ்கிருத பண்டிதர். இவருக்கு அருமையாய் ஒரு ஆண் குழந்தை பிறந்தது. அதற்கு கவிரத்னம் என்று திருநாமம் சூட்டி நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்த்து வந்தார். ஐந்து வயதாகியதும் அக்ஷராப்யாசஞ் செய்துவைத்து அந்நாளை வெகு சிறப்பாகக் கொண்டாடினார்கள்.

குழந்தைக்குக் கவிரத்னம் என்று பெயரிட்டிருந்தாலும் மந்தபுத்தியுடையது. இதனால் பிதாவானவர் அதிகாலையில் எழுப்பி கற்பிப்பது மேலெனக் கருதி அப்படியே செய்துவந்தார்.

ஸ்ரீ காசிமா நகரைப் பாராதவர் வெகு சொற்பமேயானாலும், அப் பெயரைக் கேளாதவர் இரார் எனச் சொல்லலாம். திவ்ய க்ஷேத்ரங்களிலொன்று. விசாலமான வீதிகள், மாடமாளிகைகள் கூடகோபுர முதலிய கட்டடங்கள் ஆகாயத்தை அளாவியிருப்பதால் சாதாரணமாய் நிமிர்

ந்து பார்க்கமுடியாது. வீதிகளைச் சுத்திசெய்வதற்காக பஞ்சமர்கள் நியமிக்கப்பட்டிருந்தார்கள். விஸ்வநாத சாஸ்திரிகள் வசிக்கும் வீதியை இளம் பிராயமுள்ள ஒரு பஞ்சமன் சுத்தி செய்துவந்தான். விஸ்வநாத சாஸ்திரிகளின் வீட்டுக்கருகில் நிற்கும்போது, சாஸ்திரி தன் குழந்தையை அதட்டி 'என்னடா, முதலெழுத்தை சரியாய் உச்சரிக்காமலிருக்கிறாயே' என்றார். இதைக்கேட்ட பஞ்சமன் குழந்தைக்கு இப்பொழுதுதான் கல்வி கற்பிக்கிறார். நாம் தினந்தோறும் இவ்வீட்டுக் கருகிலிருந்து கேட்டுத் தெரிந்து கொள்ளலாமென்று நிர்மானித்துக் கொண்டான்.

சாஸ்திரியாருக்குப் பகலில் தன் குழந்தைக்குக் கல்வி கற்பிக்க நேரமில்லாததால் அதிகாலையில் சொல்லிக் கொடுப்பது அனுகூலமாயிருந்தது. இவர் இப்படிச் செய்ததானது பஞ்சமனுடைய தீர்மானத்துக்கும் ஒத்திருந்தது. தினந்தோறும் சாஸ்திரியார் கஷ்டப்பட்டுக் கல்வி கற்பிப்பதைக் கண்ணுற்றால் கல்லுங் கரையும் என்றால் பஞ்சமன் கல்வி கற்றுக்கொண்டு வந்தது ஆச்சரியமாகமாட்டாது.

இதைப் படிப்போருக்கு பஞ்சமன் சமஸ்கிருதம் படித்து வருவதைக் கவனித்தால் ஆச்சரியமாயிருக்கும். அர்ச்சுனன் குரு, துரோணாச்சாரியிடம் வில்வித்தையைக் கற்றுக்கொண்டு குருவோடு கானகமார்க்கமாய் வரும்போது, ஒரு வேடன் ஒரு நாயின் வாய்க்கு சரம்போன்ற பாணங்களை சுற்றிலும் விட்டு வாய்திறந்திருக்கவும் இறவாதிருக்கவும் தகுந்த விதமாய் அமைத்திருந்ததைப் பார்த்த அர்ச்சுனன் ஆச்சரியப்பட்டு குருவை நோக்கி ஸ்வாமி! வில்வித்தையில் எனக்கிணையில்லையென்றும், வில்வித்தை பாக்கியின்றிச் சொல்லிக் கொடுத்தேனென்றுஞ் சொன்னீர்களே, இந்த நாய்க்கு பாணம் போட்டவன் அபூர்வ சக்தியையுள்ளவன் போல் காணப்படுகிறானே யென்றான். குருவும் அர்ச்சுனனோடு, பாணம் போட்டவன் இருப்பிடத்தைத் தேடி நாயைப் பின்பற்றிச் சென்றார்கள். அங்கே ஒரு வேடனைக் கண்டார்கள். அவ்வேடன் ரிஷியைக் கண்டு நமஸ்கரித்து நின்றான். நாய்க்குப் பாணம் போட்டதார் என்றார். அதற்கு தான் செய்ததாக ஒப்புக்கொண்டான். பிறகு குருவும் எப்படிக் கற்றுக்கொண்டாய் என்றார். அதற்கு அவ்வேடன், ஸ்வாமி! தாங்கள் எனக்கு வில்வித்தையைச் சொல்லிக் கொடுக்க மறுத்து விட்டதால் தங்களைப்போல் ஒரு உருவத்தை பிரதிஷ்டை செய்து குருவாகப்பாவித்து வில் வித்தையைக் கற்றுக் கொண்டேன் என்றான். இதனால் பஞ்சமன் விஷயம் ஆச்சரியமாகமாட்டாது.

பஞ்சமனும் 'கற்றலிற் கேட்டலே நன்று' என்பதற்கிணங்க இலக்கண இலக்கிய முதலிய அநேக விஷயங்களை அறிந்து ஒரு கவியைப்போல் சமத்துவத்தை யடைந்தான். ஆகையால் அவ்வூரிலேயே யிருப்பது கண்ணிய மல்லவென்று வெளியூர் சென்றான். கொஞ்ச தூரம் சென்றதும் நதிக் கரையில் அநேக அந்தணர்கள் யாகஞ் செய்து கொண்டிருந்தார்கள். அங்கே சிலர் சமஸ்கிருத பதங்களை தப்பிதமாய் உச்சரித்தார்கள். இதைக் கேட்டு மந்திரங்களை தானே சொல்லித் திருத்தி அதற்கான நியாயங்களையும் எடுத்துச் சொன்னான். பிராமணர்களெல்லாம் அவனைப் பார்த்து யாகத்தின் பலனைப் பகவான் ஒரு [illegible]யைக் கொடுத்தாரோ யாதோ வென்று நினைத்து, வாக்கு சுத்தத்தையும், மடை திறந்த வெள்ளம் போல் கவியை கொட்டுவதையும் பார்த்து, தேவியின் வரப்ப்ராசாதம் பெற்றவனோ, அல்லது ஞானியோ வென்று அவனது பாதத்தில் அந்தணர்களெல்லாம் நமஸ்கரித்தார்கள். பிறகு அவனிடமுள்ள அழுக்கு வஸ்திரத்தை நீக்கி பட்டாடை யுடுத்தி திவ்யமான அமுதன்



னைச்செய்து (பஞ்சமனாகிய) சாஸ்திரியை அந்தி வேளையில் சில கடின கவிகளை வ்யாக்யானம் செய்துகொடுக்கச் சொன்னார்கள். அவனும் அதற்கிணங்கி, ஓர் ஆசனத்திலமர்ந்து நிறை நிறையாக நீண்ட தாரை போற் சுலோகங்களைக் கொட்டி கண்டவர் மனத்தையும் கேட்டவருள்ளத்தையும் கொள்ளை கொண்டு கல்விக் கடலைக் கரைகண்டவனாய் விளங்கினான். அநேக வித்வசிரோன்மணிகளும் சந்தேக நிவர்த்திக்காக இவனிடம் வந்துகொண்டிருந்தார்கள். ஒரு நாள் ஒரு வித்வான் தங்கள் திருநாமம் அறிய விரும்புகிறேன் என்றார். அதற்கு அவன், என்னை கலாபூஷணன் என்று சொல்வார்கள் என்றான். வித்வத்திற்குத் தக்க நாமமும் அமைந்திருக்கிறதென்று சந்தோஷித்தார்கள். அவ்வூருக்குப் பக்கத்தில் கிரிவலம் என்றோர் பட்டணமிருந்தது. அந்நகரில் சாமினாத சாஸ்திரி யென்பவர் பக்தியிலும் செல்வத்திலும் சிறந்து வாழ்ந்துவந்தார். அரசனுக்கு சமத்துவமான செல்வத்தை யடைந்தும் புத்திரபாக்கியமில்லாதிருந்து அநேக தானதர்மங்கள் செய்து வெகு காலத்துக்குப்பிறகு அவருக்கு ஓர் பெண் குழந்தை பிறந்தது.

அப்புத்ரியோ வனப்பெலாங் கொண்டு விசாலித்த கண்களும், நீண்டு வளைந்து நுனி சிறுத்த கூரிய மூக்கும், பவழ விதழும், சித்திரித்த வாயும், சிரிக்குந் தோறும் சிறு பள்ளம் விழுஞ் சிவந்த கன்னங்களும், அகண்ட மார்பும், ஆலிலை போன்ற வயிறும், அரவிந்தம்போன்ற நாபியும், நீண்ட கையும், நேர்ந்த துடையும், ஸ்ரீ மகாலக்ஷ்மியே போலும் சிறந்து விளங்கினாள்.

இப்பெண்மணிக்கு கல்வி கற்பிக்க வேண்டுமென்று ஆவல் கொண்டு தக்க பண்டிதனை தேடலானார். அடுத்த வூரிலே கலாபூஷணன் அதி அற்ப விஷயங்களை யெல்லாம் அப்படி யப்படியே எடுத்துக் காட்டி அவைகளின் சாராம்ஸங்களை யெல்லாம் அதி சுலபமாகத்தானே தெளியச்செய்விக்கும் விவேகபுருஷனென்றறிந்து தம இல்லத்துக்கு அழைத்து வந்தனர். கலாபூஷணனுக்கு தக்க மரியாதை செய்து தமது அருமைப் புதல்விக்கு கல்வி கற்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டனர். அவனுமப்படியே ஸ்திரீகளுக்கு முக்கியமாய் போதிக்க வேண்டிய கற்பிலக்கணம், கற்பின் மகிமை, முதலியவைகளை யெடுத்துக் கற்பித்தான். 'கற்பெனப்படுவது சொற்றிறம் பாமை' இதற்குப் பொருள் கணவன் சொல் தவறாமை யென்பதாகும். அதாவது வாக்குத் தவறாமை. சாவித்திரி சத்தியவானை மனதால் வரித்து விட்டு அவன் அற்ப ஆயுசுள்ளவன் என்று (நாரத முனிவர்) தான் சொல்லக் கேட்டிருந்தும் தன் 'வாக்குத் தவறாமை' யாகிய கற்பின் சிறப்பால் அவனையே மணந்து அவனுயிரைக் காப்பாற்றினாள். இப்படியே தன் வாக்குத் தவறாதவர் இல்லறம் புகுந்த பின் கணவன் சொற்றவறி நடக்கார் என்பது இயல்பினாலே ஏற்பட்டமையும். பெண்களுக்குக் கற்பினும் சிறந்த கருமமில்லை. அதுவே ஞானத்தை யளிக்கும். அதுவே கடவுளையும் காட்டிக்கொடுக்கும்.

"கற்பினு மதற்கு மேலாங்
கருமமு மொழுக்க மில்லை
கற்பினு மதற்கு மேலாங்
கொடையுமற் றவமுமில்லை
கற்பினு மதற்கு மேலாங்
குணமுமெய்ஞ் ஞானமில்லை
கற்பினு மதற்கு மேலாங்
கடவுளும் யாதுமில்லை"
"கற்பிற்கு வேறு
கருதினு மொன்றுமில்லை
கற்பிற்கு வேறு
காரிகை தனக்கொன்றில்லை

கற்பிற்கு வேறு
சத்தியா கீர்த்தியில்லை
கற்பிற்கு வேறு
குணமுமே யாதுமில்லை."

உலக வழக்கத்தில் கடவுளையும் கற்புடைப் பெண்டிரையும் சோதிக்கலாகாது என்று சொல்லுவர். இவ்விதமாக கல்மனமும் கசிந்துருக கற்பின் மகிமையை அநேக கதைகளால் விளக்கிக் காட்டினன். அப் பெண்மணியோ பசியுள்ளவன் அமிர்தத்தைப் புசிப்பதுபோல், அவன் கற்பின் விஷயமாய் கற்பித்ததையெல்லாம் நன்றாய்க் கேட்டு அதன்படி நடக்க சித்தமானாள். அநேக சாஸ்திரங்களை ஆராய்ச்சி செய்ய ஆரம்பித்தாள். இதிகாச புராணங்களை நேரம் கிடைக்கும்போதெல்லாம் வாசித்தாள். கல்வியில் கலைமகள் போலிருந்ததாலும் சௌந்தரியத்தில் லக்ஷ்மியைப்போலுமிருந்தமையால் கண்டவர்களெல்லாம் தகுந்த கணவன் வாய்க்கவேண்டுமென்று கடவுளைப் பிரார்த்தித்தார்கள்.

கலாபூஷணனும் தன் ஊரைவிட்டு அதிக நாளாய் விட்டதென்றும், இனி விவாஹம் செய்ய வேண்டுமென்றும் சொல்லி சாமிநாத சாஸ்திரியிடம் விடை கேட்டான்.

கலாபூஷணன் நல்லுணவால் தேகாரோக்கியமும் தேஜஸும் பெற்று ஓர் பிராமணனைப்போல் தோற்றியதால், உண்மையில் பிராமணனென்று மதித்து சாமிநாத சாஸ்திரி தனது புத்திரியை அவனுக்கே கன்னிகாதானமாய்க் கொடுக்க எண்ணங்கொண்டு, வெகு பரியாசையாய் இன்னும் கொஞ்ச நாட்கள் சென்றுபோகலாமென்றார். ஆனால் கலாபூஷணன் இப்பெண் தனக்கு வாய்க்குமோவென பல தடவைகளிலும் கருதினன். அவன் மனம் சித்திக்கலாயிற்று. ஒரு நாள் ஆகாரமானதும் சில விஷயங்களைப் பேசிக்கொண்டிருக்கும்போது தனது உள்ள கருத்தை சாமிநாத சாஸ்திரி வெளியிட்டார்.

ஏ ருக்மணிதேவி! சற்று கவனமாய்க் கேட்கவேண்டும். கலாபூஷணனென்று பெயரை வைத்துக்கொண்ட அப் பஞ்சமன் அன்னை தந்தை அனுமதியின்றி உத்தரம் கொடுப்பதற்கில்லையென்றான். அதற்கு சாஸ்திரியும், தாங்கள் பெற்றோரைவிட்டு அதிக நாளாய் விட்டபடியால் விவாஹம் செய்துகொண்டு போனால் அவர்களுக்கு மிகுந்த திருப்தியைக் கொடுக்கும் என்றார். ஜாதியில் பஞ்சமனாயிருக்க, பிராமண குலத்துதித்த பெண்ணையெப்படி வரிப்பது, தகாத காரியமென்றெண்ணி சித்தங் கலங்கினன். அடிக்கடி தனக்குள், பஞ்சமனாகிய நான் அவர்களுடைய இல்லம் புகுந்து சமத்துவத்தைப் பெற்றிருப்பது எவ்வளவு பெரிய குற்றம் என்று எண்ணியிருந்தான். இப்பொழுது கலியாண விஷயத்தையும் கேட்ட பிறது சில சமயங்களில் அவனுக்கு நடுக்கமும் உண்டாயிற்று. தனக்குத்தானே மனத்தைத் திடப்படுத்தி ஒப்புக்கொண்டான். விவாஹமும் நடந்தது.

அழகு மறிவு மதற்கேற்ற இனிய குரலு மிசையும் பெற்ற செல்வி அநேக அரிய நூல்களையும் அதிநுட்ப சாஸ்திரங்களை கற்றவளானதால் கற்புநெறி தவறாது கணவனுக்குக் கண்ணுங் கருத்துமாய் சிசுருஷை செய்[illegible]தாள். தனக்கு ஆதியில் குரு[illegible] அதன் பிறகு புருஷனாகவும் [illegible]தது பற்றி ஆனந்தமடைந்தாள்.

சில மாதங்கள் கடந்தன. ஒருநாள் கலாபூஷணனும் பெற்றோரிருக்குமிடம் போய்வருகிறேன் என்று சாஸ்திரிகளை விடை கேட்டான். தாங்கள் திடீரென்று போகவேண்டுமென்று சொல்லுகிறீர்களே, ஒருமாதம் முன்னதாகத் தெரிவித்திருந்தால் வேண்டிய ஆபரணங்களையும், ஸ்ரீதனமாக



அநேக பொருள்களையும் தயார்செய்து கொடுத்திருப்போம். ஆகையால் இரண்டு மாதம் சென்று ஊருக்குப் போகலாமென்று சாஸ்திரி பதில் சொன்னார். கலாபூஷணனும் தனது பத்னியாகிய சுகதேவியினிடத்தில் ஊருக்குப் போய்விட்டு கூடிய சீக்கிரம் வருகிறேன் என்றான். அதற்கு அப் பெண் தானும் வரச் சித்தமாயிருக்கிறேன் என்றாள். கலாபூஷணன் தனது ஊர் வெகு தூரத்திலிருப்பதாயும் வழியில் கள்ளர் பயமுண்டென்றும், தனித்திருக்க நேரிடுவதைப் பற்றி கவலைப்படவேண்டாம் என்றும் தன்னால் இயன்ற அளவு சொல்லிப் பார்த்தான். அப் பெண்மணியோ எள்ளளவும் சம்மதியாமல், எக்காரணத்தைக்கொண்டும் புருஷனை விட்டுப் பிரிந்திருக்கக் கூடாதென்று, எவ்வளவோ கதைகளையும் நீதிகளையும் முன் எடுத்துரைத்தீர்கள். இப்பொழுது என் மனம் தங்களிடமே குடிகொண்டிருக்கிறது. தங்களை விட்டுப் பிரிந்திருக்க மனம் சகியாது என்றாள். கலாபூஷணனும் அழைத்துப் போவதைத் தவிர வேறு மார்க்கமில்லையென்று எண்ணி சம்மதித்தான். பிரயாணமாவதற்கு ஒரு நாளைக் குறிப்பிட்டார்கள். ஒரு வண்டியிலேறி இருவரும் அடுத்தஊர் சென்றதும் நடந்து போக ஆரம்பித்தார்கள். பஞ்சமனுக்கோ அப்பெண்மணியை அழைத்துப்போகக் கூடாதென்ற எண்ணம் பெரிதும் இருந்தமையால் வழி நடந்து கொண்டே தனக்குள் ஆலோசிக்கலானன்.

வெகு காலம் கடவுளை நோக்கித் தவம் புரியும் பக்தர்களுக்கு அவர் சீக்கிரம் அருள்புரிகிறதில்லை. ஆனால் நல்லொழுக்கத்தாலும் கற்பு நிலையாலும் மேன்மை பெற்ற பெண்களுக்கு பகவான் வெகு சுலபமாகவே கருணை புரிகிறார். சுகதேவியின் குணமகத்துவத்தை என்னென்றுரைப்பேன். கல்வியறிவுள்ளவளன்றோ! மஹா உத்தமி யல்லவா! பொறுமையில் பூமிதேவிக்கு நிகரானவள். கணவன் சொல்லை கனவிலும் உல்லங்கனம் செய்கிறதில்லை. கணவனைக் கடவுளாகவே மதித்து தொண்டு புரிவாள். புருஷன் என்றால் பூரிப்படைவாள். இவ்வளவுசிறப்பு வாய்ந்த பெண்கள் சிகாமணியை வழியிலேயே வதைத்து விடக் கருதினன்.

அப்பெண்ணைப் பார்த்து ஏ சுகதேவி! விலையுயர்ந்த ஆபரணங்களையெல்லாம் அணிந்திருக்கிறாய். மனித சஞ்சாரமில்லாத இடத்தில் போய்க்கொண்டிருக்கிறோம் என்றான். அதற்கு அவனது மனைவியும் மிகுந்த வணக்கத்தோடு தங்கள் சித்தம்போல் நடக்கிறேன். எனது ஆபரணங்களையெடுத்துத் தருகிறேன், என்று நகைகளையெல்லாம் கழற்றி தனது கணவனிடம் கொடுத்தாள். அவனும் அதை வாங்கி ஒரு வஸ்திரத்தில் கட்டி வைத்துக்கொண்டு இருவரும் முன்போல் நடந்தார்கள். பறையனும் அப்பெண்ணைக் கொலை செய்வதற்கே சூழ்ச்சி தேடிக்கொண்டிருந்தான். ஏனென்றால் அழகிலும் அறிவிலும் சிறந்த பிராமண ஸ்திரீயை பத்னியென்றழைத்துக்கொண்டு காசிக்குச் சென்றால், அவ்வூர் அரசனறிந்து தன்னை எமபுரம் அனுப்பி விடுவானென்ற எண்ணமே அவனை வாதித்துக் கொலை செய்யத் தூண்டுகிறது. இக்காரணங்கொண்டு தாய் வீட்டிலேயேயிருக்கும்படி எவ்வளவோ எடுத்துரைத்தும் பயன்படவில்லை. அப்பெண் முன்னால் நடக்கவும் பஞ்சமன் பின்னால் ஒரு பெரிய கல்லையெடுத்து அவள் மேல் போட்டு விடுகிறதென்று எடுப்பதற்காக சற்றே குனிந்தான். அப்படிக் குனியும்போது அப்பெண் திரும்பிப் பார்த்து நாவரட்சியாயிருக்கிறது என்றாள். கல்லை யெடுக்கப் போவது போலிருந்தால் 'பெரிய கல்லாயிருக்கிறதே நானும் தங்கள் கூடத் தூக்கட்டுமா' வென்றாள். அதற்கவன்

வேண்டாமென்று சொல்லி, நாவரட்சியென்றாயே அங்கோர் கிணறு இருக்கிறது போவோம் வாவென்றான். ஆஹா! நல்ல சமயம், இதுவன்றோ சரியான வழி, கிணற்றில் ஜலத்துக்காக உள்ளே இறங்கும்போது அப்படியே தள்ளிவிட வேண்டும் என்று தனக்குள் தீர்மானித்துக்கொண்டு உற்சாகமாய் நடந்தான்.

சத்யபாமா! ஒன்றுமறியாத அந்தப் பேதை நாரியும் முன்னே நடந்தாள். தன் மனதை பலனற்ற விஷயங்களில் புகவிடாமல் சதாகாலமும் ஸ்ரீமன் நாராயண மூர்த்தியையே ஸ்துதி செய்துகொண்டிருப்பாள். எவரேனும் பகவானுடைய திவ்ய நாமத்தை உச்சரித்துவிட்டால் ஆனந்தமடைவாள். கிணறும் சமீபித்தது. முதலாவது பாவிப் பறையனும் கிணற்றுக்குள்ளிறங்கி தாகவிடாய் தீர்த்துக்கொண்டு வந்தான். அதன் பிறகு உத்தமியாகிய சுகதேவியும் கிணற்றுக்குள்ளிருந்த படிகளில் மெதுவாய் இறங்கினாள். பஞ்சமனும் பின்னால் சென்று திடீரென கிணற்றுக்குள் தள்ளிவிட்டான். நன்றி மறப்போர்க்கும் நாடினோரைக் கை விடுவோர்க்கும் நல்லவர்க்குக் கெடுதலை நினைப்போர்க்கும் மீளாநரகமென்று சொல்லவும் வேண்டுமோ? ஆ! என்ற தொனியோடு கிணற்றில் விழுந்தாள். ஜலமும் மூன்று பிழை பொறுக்குமென்பதுபோல ஒருதடவை ஜலமட்டத்திற்கு வந்தாள். ஒரு மரத்தின் வேர் நீண்டு தொங்கியிருக்கக் கண்டு அதனைப் பிடித்துக்கொண்டு ஆ! ஜகதீசா! அநாதரக்ஷகா! ஆபத்சகாயா! என்று சொல்லிக்கொண்டு பகவானை துதி செய்து, வழிப் போக்கர்களே! ஒரு பெண் ஜலத்தில் விழுந்திருக்கிறேன். கரை சேருங்களையா வென்று சத்தமிட்டாள். பக்தியிற் சிறந்த அப்பெண்மணிக்கு லோக ரக்ஷகராகிய பகவானும் ஓர் கிழவன்போல் அங்கே தோன்றி யாரம்மா! சத்த மிடுகிறது என்றார். அதற்கவளும் ஐயா! நான் ஒரு பெண் கிணற்றுக்குள்ளிருக்கிறேன். சற்று கைகொடுத்தால் உயிர் பிழைப்பேன் என்றாள். பகவானும், நான் கிழவனம்மா இருந்தாலும், ஏதோ கை கொடுக்கிறேன் வாவென்று, படிக்கட்டில் நின்று கையைப் பிடித்திழுத்தார். அவளும் படியோரமாய் வந்து கரை யேறினாள். உடனே பகவானும் நீ எப்படி கிணற்றுக்குள் விழுந்துவிட்டாய் என்று வினவினார். அந்தப் பெண் தன் நாயகன்மேல் குற்றஞ் சொல்லக் கூடாதென்றும் அவன் செய்வதெல்லாம் நன்மையைக் கருதியே யென்றும் மனதில் நினைத்து பகவானிடம் தான் தாகவிடாய் தீர்க்கும்போது தவறி விழுந்து விட்டதாயச் சொன்னாள். தன்னைக் கொலை செய்யத் துணிந்த கணவன்மேல் குற்றஞ் சொல்லக் கருதாத விவேகவதியன்றோ வென்று நினைத்து சந்தோஷித்தவராய் அப்பெண்ணை நீ இப்பொழுது எங்கு போகவேண்டும் என்று கேட்டார். அதற்கவள் கிரிவலத்திலிருக்கும் தந்தைவீடு போகவேண்டுமென்றாள். நானும் அவ்வூர் கடந்தே போகவேண்டும் போவோம் வாவென்று சொல்ல அதற்கு அவளிணங்கவும் இருவரும் கிரிவலம் சென்றார்கள். சுகதேவி ஊருக்குள் போகும்போது பின்னால் வந்த கிழவரைப் பார்க்க அவர் திடீரென மறைந்தார். கிழவரை நாலா பக்கங்களிலும் தேடி பகவான்தான் தனக்குத் துணையாக வந்திருக்கவேண்டுமென்று கடவுளைத் தியானித்துக்கொண்ட தனதில்லம் சென்றாள். ஆபரணமில்லாது இயற்கை அழகோடு வரும் புத்திரியைப் பிதா பார்த்து, உன் புருஷன் எங்கே யென்றார். அதற்கவள் விடை பகர பின்வாங்காமல், தானும் புருஷனும் சத்திரத்தில் படுத்திருந்ததாகவும், அவர் வெளியில் போயிருந்த சமயத்தில் தன் நகைகளை கள்ளர் பிடுங்கிக்கொண்



விட்டதே இவ்வுலகில் எனக்கிணை பினி எவரெனப் பெருநிதிபடைத்தும் பிரயோஜனமில்லாதுபோயிற்றே! என்னை அன்புடனின்று ஆதரித்து வாலிபமாக்கிப் பின் என்னால் போஷிக்கப்பட்டு என்னை மிகவும் நேசித்துவந்த அன்னை தந்தைகளும் அநாதரவுசெய்து அவதூறு விளைத்தனரே. ஒருதாரத்துக் கிருதாரம் போதாதென முத்தாரம் போன்ற மூத்தாரத்தையும் வரித்தேனே! அவளுங் கடுஞ் சொற்களால் கவலைக்குள்ளாழ்த்தினளே! பதர்கூடச்சிதறாத படிக்குப் பத்திரப்படுத்திப் பாலனுக்காகச் சாலப் பொருள்தேடிப் பணக்காரனெனப் பேரெடுத்தேன். அப்பாலனும் காலனைப் பழிப்புறைகளிப்புடன் மொழிந்து ஒழிந்துபோ வெனக்கழித்தனனே. இனி யாதுசெய்ய விருக்கின்றேன். இவ்விதம் தந்தைதாய் மனைவிமக்கள் யாவரும் இடறு விளைப்பதினாலல்லவா. ஓட்டுடன் பற்றின்றி உலகத்துறந்த பட்டினத்தடிகள்

"என்பெற்ற தாயாரு மென்னைப் பிணமென் றிகழ்ந்து விட்டார்
பொன்பெற்ற மாதரும் போவென்று சொல்லிப்புலம்பி விட்டார்
கொன்பெற்ற மைந்தரும் பின்வலம்வந்து குடமுடைத்தா
ருன்பற் றொழிய வொருபற்று மில்லை யுடையவனே."

எனக்கூறினர். இவர்களையல்லாமலும் தங்கை புத்திரி சுற்றங்களும் என்மீது தயைவையாது தூரத்தினர்களே, இதனாலல்லவோ நமது பாட்டி ஔவைப் பிராட்டியாரும்—

"உடன் பிறந்துஞ் சுற்றத்தா ரென்றிருக்க வேண்டாம்
உடன்பிறந்தே கொல்லும் வியாதி—உடன் பிறவா
மாமலையிலுள்ள மருந்தே பிணிதீர்க்கும்
அம்மருந்தே போல்வாருளர்."

என்று கூறினர். தங்கை சுற்றத்தார்களெல்லாம் உடன்பிறந்து கொல்லும் வியாதிக்குச் சமமாயும் மலையிலுள்ள மருந்தேபோல் இரண்டு சிறுபாலர்கள் வந்து நமக்கு இதங்கூறி நன்மொழி புகன்று நாளைக்காலையில் வருவதாய்ச் சென்றனரே அவரேயாகும். அவர்களுடைய கட்டுரை தவிர்ந்ததினாலல்லவோ நானிக்கதியானேன். அவர்கள் சொற்படிநான் நகருக்குட் புகாதிருந்திருப்பின் இத்துயர் விளைதற்கிட மிருந்திராதே! இவையறியாமலா—பெரியோர் மேன்மக்கள் சொற்கேளென்று சொல்லியிருக்கிறார். இதை அறியாமலன்றோ மோசம்போனேன். தவிரவும்—

"மனுநன்மாந் தாதாமு னவர் களெல்லாரு
மண்மே லிருந்து வாழ்ந்து
மடியர்திருந்த பே ரில்லையவர் தேடியதை
வாரிவைத் தவருமில்லை."

என்றபடி நாம்எவ்வளவு காலம் ஜீவித்திருப்பினும் ஓர் நாளைக் கிறப்பது திண்ணம். அப்படி மரணமாகும் போது நாம் தேடிய பொருள்களை உடன்கொண்டு செல்வதுமில்லை. அவையும் வருவ தில்லையே அவ்வித மிருந்தும்—

"பனியதனை நம்பியே யேர்பூட்டு கதையெனப்
பாழான வுடலை நம்பிப்
பார்மீதி லின்னம் வெகுநாளிருப் போமென்று
பலகோடி நினைவை யெண்ணி
அனிதமாய் விருதாவின் மாய்வதே யல்லாம
லன்பாக நின்பதத்தை
யர்ச்சித்து முத்திபெறல் வேண்டுமென் றெண்ணார்க
ளாசைவலையிற் சுழலுவார்."

என்றபடி இந்தப் பாழுஞ்சரீரத்தைச் சதமென நம்பி யிப்பூமி யில் வெகுநாளிருந்து அநேகசுகபோகங்களை அனுபவிக்கலாமென் றெண்ணி வீணில்காலங்கழித்து வாழ விருக்கின்றேன். இதைவிட்டு அன்போடு அரன்பாதம் பூஜித்து அர்ச்சித்து மோக்ஷத்தையடைதற் கெண்ணிலேன் ஆகையால் இந்த உலகவாசைக் குட்பட்டு அல்லற் படுகிறேன். இவ் வல்லலினின்று எப்போது விடுபட்டு சுகத்தை நான் என்று அடைவேனோ ஆ, தெய்வமே!—இவ்வுலகிலோ பெரி யோர் பட்டினத்தடிகள் பகர்ந்தவாறு—

"தாயும் பகைகொண்ட பெண்டிர் பெரும்பகை தன்னுடைய
சேயும் பகையுற வோரும் பகையிச் செகமும்பகை—"

எனச் சொல்லியவண்ணம் என்னொரு வனுக்கேபலித்தது. சீ சீ, இது வொருவாழ்வா ! இனியிவ்வாழ்வை விரும்பேன். இது கெட்டதுவென்று இதயம்புண்ணாகி அகமெலிந்து முகம்வாடி கால் கைகள் சோர்ந்து அங்குற்ற புற்பூமியிற்படுத்து அயர்ந்து நித்திரை போயினர். சற்று நேரத்திற்கெல்லாம் அதிரூப சௌந்தர்ய முள்ள சிறுவர்கள் இருவர்வந்து இவர் முன்னின்று கொண்டிருக்கக் கனவு கண்டு அவரைப்பார்த்து மிகவுந்துக்கித்தனர். அவர்களிலொருவர் இவரைப்பார்த்து என்ன ஆயாசப்படுகிறீர் என்றுகேட்க, இவர்



ஐயா, தங்களுடைய வாக்கை உல்லங்கனஞ் செய்து நகருக்குட் புகுந்ததனால் இவ்வித கஷ்டத்திற் குள்ளானேன். இதோ பாருங் கள் என்னுடைய வேதனத்தை என்றார்.

வந்தவர்.—இம்மாதிரி அவகேடு விளைத்தவர்யாவர் நீவிர் எங்கு சென்றீர்.

சே.—ஐயா நான்நீங்கள் சென்றுகொஞ்ச நேரத்திற் செல்லாந்தனி யிடத்திருக்க அச்சமுற்றவனாய் முன் பழக்கவாசனைக் குட் பட்டு மனைக்குச்சென்று அங்குள்ளோரிடம் சில மொழிகள் வினவிவர வெண்ணிச் சென்றேன். அங்குஅவர்கள் என்னை இவ்வித அலங்கோலம் புரிந்து அவதிக்குள்ளாக்கினர். என க்கோ உபாதை சகிக்கக் கூடுதில்லை என்செய்வேன் (எனக் கண்ணீர் விட்டுக்கதறினர்)

வ.—(இருவரும் அவரைக்கைபிடித்துத் தடவிக் கொடுத்து) ஐயா ! நாங்கள் கூறியமொழியைக் கடந்து ஏன் அங்குசென்றீர். அங்கு சென்றாலனர்த்தம் விளையுமென்று கூறிப் போனோமே, அதைமீறிச் சென்றதினாலல்லவா இவ்வித கஷ்டத்துக்குள்ளா னீர். இப்படி நேருமென வெண்ணியே கூறிப்போயினோம். இனியாவது அங்கு செல்லாது வனத்திலேயே கொஞ்சகாலம் வாசமாயிருக்கவேணும்.

சே.—சரி அப்படியே இனிநடந்து கொள்வேன். தங்களுடைய வாக்கை குருவாக்காகவே கொள்கிறேன். ஏதோநான் தேடிச் சம்பாதித்த செல்வந்தானோ நான் அன்போடு ஆதரித்து வந்த குடும்பந்தானோ நமக்கு கேடு விளைவிப்பாரா வென்றெண்ணி னேன்.

வ.—"ஐயா மாடுண்டு கன்றுண்டு மக்களுண்டென்று மகிழ்வதெல் லாங் கேடுண்டெனும்படி கேட்டுவிட்டோம்" என்றபடி இவை யெல்லாம் இருவினைக் கீடாகவந்தனவே யல்லது வேறில்லை. இவை எப்போதும் துக்கத்தைக் கொடுக்கக்கூடியன வென்று அவர்கள் பேற் பற்றற்றிருத்தல் வேண்டும்.

சே.—ஐயா நாம் தேடியபொருள் கணக்கற்றிருந்தும் கட்டியவீடு களோ இடப்பெற பலவளமை யோடிருந்தும் இப்போதுற்ற பசிக்கும் குளிருக்கும் உதவிற்றில்லையே ! பட்டுப் பட்டாவளி களும் சப்ரமஞ்சங்களும் விதவிதமாக எவ்வளவோ ஏராள

மாக விருந்தும் பயன்படவில்லையே! இப்போது அவைக்கெல்லாங் கஷ்டப்பட வேண்டிவருகிறதே!

வ.—ஐயா இதற்கெல்லாம் ஆயாசப்பட்டு மனஞ்சலிப்புற வேண்டாம் நமக்கோ.

"உடுக்கக் கவிக்கக் குளிர்காற்று வெய்யி லொடுங்கிவந்தாற்
றடுக்கப் பழைய வொருவேட்டியுண்டு சகமுழுதும்
படுக்கப் புறந்திண்ணை யெங்கெங்கு முண்டு பசித்துவந்தாற்
கொடுக்கச் சிவனுண்டு நெஞ்சே நமக்குக் குறைவில்லையே."

யென்று பெரியோர்கள் கூறியபடி. நமக்கு ஒன்றுங் குறைவு வராது, எல்லாம் நன்மையாகவே நடக்கும்.

செ.—ஐயா நம்முடைய செயலாற்றான் எல்லா விவகாரங்களும் நடப்பதாக வெண்ணி இடர்ப்பட்டேன் இப்போது பார்த்தால் எல்லாம் ஈசன் செயலென்றறிந்தேன்.

வ.—ஆஹா! இதற்கென்ன ஆட்சேபனையுளது யாவுமவரதே.

"ஊட்டுவிப்பானு முறக்குவிப் பானுமிங் கொன்றோ டொன்றை
மூட்டு விப்பானு முயங்குவிப் பானுமுயன்ற வினை
காட்டுவிப்பானு மிருவினைப் பாசக் கயிற்றின்வழி
யாட்டுவிப்பானு மொருவனுண்டே தில்லையம்பலத்தே,"

யென்றபடி எல்லாம் வல்ல இறைவனொருவனுளன். அவனருளினால்யாவுந் தொழிற் பட்டியங்குகின்றது. மேலும் நமக்கு அவனுடைய பாதாரவிந்தங்களே யல்லது வேறொன்றுஞ் சதமாகாது. அதுவே சதமாக இடையறாது நாடி ஈடேறும் வழியைத் தேடிக்கொள்ள வேண்டியது அவசியமான காரியம். இதுபற்றியே,

"ஊருஞ்சதமல்ல வுற்றார்சதமல்ல வுற்றுப் பெற்ற
பேருஞ்சதமல்ல பெண்டிர் சதமல்ல பிள்ளைகளுஞ்
சீருஞ்சதமல்ல செல்வஞ் சதமல்ல தேசத்திலே
யாருஞ் சதமல்ல நின்றாள் சதங்கச்சி யேகம்பனே."

என்றுங் கூறியுளார். ஆகையால் இனி நீரும் அவரருளை நாடி யனவரதமுந் துதித்துச் சுகத்தை யடையும், மயக்கந்தவிருப். தெளிவோடிருக்கக் கடவீர் யாங்கள் செல்கிறோம்.—

செ.—ஐயன்மீர்! நானோ மிகப் பொல்லாதவன், நீதிநெறி நில்லாதவன். ஐம்புலன்கடமை வெல்லாதவன், கசடறக்கல்வி கல்லாதவன்.



உண்மைப்படியவற்பால் செல்லாதவன். உண்மை யென்றொருஞ் சொல்லாதவன். அரன்றிருவடிக்கு அன்பில்லாதவன். மேலும் வாதுக்குச் சண்டைக்குப் போவேன். வருவேன் வழக்கோர முறைத்திடுவேன். தீதுக்குதவியோ மிகச் செய்திடுவேன். தினமுந் தேடியொன்றை மாதர்கட் கழித்து மயங்கிடுவேன். ஏதுக்கு நான் பிறந்தேன்! இதுவல்லாமலுங் கல்லேன் சிவகதை நல்லோர்களிடத்துக் கனவிலும் மெய் சொல்லேன். பசித்துவந்து வாயலில் நிற்போர்க்கு அன்னங்கொடேன். குரு சொல்லியவாறு நில்லேன். அறத்தை யென்றொரும் நினையேன். சிவநாமம் நினைவிற் சற்றேனுமில்லேன். இப்பாவி பேன் இங்கிருந்தென்ன அல்லது இறந்துதான் போயுமென்ன எவ்வாறு கடைத் தேறுவேனென் செய்வேன் பாவியேனே!

வ.—ஐயா! நீவிர் சொல்லிவந்த குற்றங்களெல்லாஞ் செய்திருப்பினும் இக்குற்றத்தை குற்றமென்று எப்போது மனதில் எண்ணி வருந்த முற்றுணர்ந்தீரோ அன்றே எல்லாப்பாவங்களுமற்றதென்றெண்ணி ஒரேமனதுடையவராய் சிவனுடைய பாதத்தை சிந்தையிற் கொண்டு.

"கல்லாப் பிழையுங் கருதாப் பிழையுங் கசிந்துருகி
நில்லாப் பிழையும் நினையாப் பிழையுநின் னஞ்செழுத்தைச்
சொல்லாப்பிழையுந் துதியாப் பிழையுந் தொழாப்பிழையு
மெல்லாப் பிழையும் பொறுத்தருள் வாய்கச்சி யேகம்பனே,"

என்று ஆன்றோர் கூறியவாறு அவர்மேற் பாரத்தைவைத்து நலமே புரிந்துவருவீரேல் எல்லாம் நன்மையாகவே முடியும். நாங்கள் போய் வருகிறோம்.

செட்டியார் எதிர்நின்ற இருவரையுங் காணாதுதிகைத்து எங்குற்றனரெனச் சட்டென்று விழித்து எழுந்து உட்கார்ந்து கொண்டு சுற்றிலும் பார்த்தனர். ஒருவரையுங் கண்டிலர். ஆகா நாம் கண்டவை கனவோ அல்லது நினைவோ நனவோயாதோ தெரிகிலனே. யாதாயிருப்பினும் நலமே யறிவித்தனர். இதைக்கனவென நாம் அலக்ஷியஞ் செய்யாது கருத்துட்கொண்டு கவலையை யொழித்துக் கடைத்தேறும் வழியைக் கடைப்பிடித்துக் காலத்தை வீணாக்காது கருத்தோடிருத்தல் வேண்டுமென்று கண்ணீர் பல்கி நெகிழ்ந்து நெஞ்சங் கனிந்து கண்ணயர்ந்தனர். சற்று நேரத்திற்கெல்லாம் கல்வி

கேள்வியறியாக் கசடர் இருதயத்துக்குச் சமமான காரிருளைக் கூரிய கிரணங்களால் வேரறக்களைதற் கெண்ணிச் சூரியபகவானும் பேரவாக்கொண்டு நேரதாய் பாரதிற் றோற்றினான். செட்டியாரோ சட்டென்றெழுந்து வெட்டெனெ விடிந்ததே யாரேனுங் காணில் கஷ்டம் வந்துறுமே யெனமருண்டு பழைய மடம்போய்ச் சேர்ந்தனர்.

## எட்டாவது அத்தியாயம்.

அரண்மனையிற் குழந்தை விவேகசிகாமணிகள் வைகறைத்துயிலெழுவென ஔவை கூறிய செவ்வை மொழிதனை திவ்யமாயனுசரித்து வருபவர்களாதலால் வழக்கம்போல் கிழக்கு வெளுக்கு முன்னெழுந்து உபாதி கழித்து நித்திய கர்மானுஷ்டானங்களை முடித்துக்கொண்டு பசிவேதனையை நிவர்த்தித்து 'பருவத்தே பயிர்செய்' என்ற பழமொழிக்கிணங்க இல்லைத் துறந்தும் துறவை யடையாமலும் இடையே நின்று தடுமாறும் செட்டியாரை இது சமையந்தான் துறவைக் கைக்கொள்ளும்படி செய்வதற் குற்ற காலம். இது தப்பினால் மறுபடியும் பந்தப் படுகுழியில் வீழ்வர்; ஆகையால் தாமதஞ் செய்யாது போகவேணுமென்று இருவரும் அரண்மனையினின்று வெளிக் கிளம்பி வாகனமீதி லாரோகணித்து விரைவிற் சென்று பாழ்மடமணுகினர். அவ்வேளையிலங்கோர் புருடர் துணியினால் முகத்தை மூடிக்கொண்டு அதி விரைவிலோடோடியும் வந்து இவர்களைக் கண்ணுற்று அடா கண்மணிகாள்! இவ்வழியே யேன் வந்தீர்கள். திருப்ப வீடுபோய்ச் சேருங்கள். இல்லையாகில் அதோ அந்தப் பாழும் மடத்திலிருக்கிற பூதம் உங்களை வாரி ஒரே விழுங்காய் விழுங்கிவிடும். நான் அதைக் கண்டேனோ வில்லையோ என் மனம் பகீரென வெடித்துப் பதைத்துப் போயினேன். நீங்களோ சிறு பிள்ளைகளாயிருக்கிறீர்கள் போகவேண்டாம். உங்களை மாதா பிதாக்கள் மிக அருமையாய் வளர்த்தெடுத்திருப்பர். அந்தப் பாழும் பூதத்துக் கிரையாகாதீர்கள். போய் வீடுசேருங்கள் என்று எதிர் நின்று மறித்து நின்றனர்.

சி.—ஐயா பெரியவரே நீர் கண்ட பூதம் எங்குளது?

பெ.—அதோ தெரிகிறது பாருங்கள் பாழும்படம். அதிற்றானுளது



சி.—அப்பூதம் எப்பேர்ப்பட்டவை. உம்மை அவை எவ்விதம் பயமுறுத்தியது.

பெ.—சிறுவர்களே நான் தினம் மலைபாதை நீக்குதற்கு இந்த மடத்தருகிற்போ யுட்கார்வேன். அதுபோ லின்றும் போனேன். போய் உட்கார்ந்தேனோ இல்லையோ உடனே ஒரு சத்தம் என்னுடைய பெயரைச் சொல்லி கூப்பிட்டமாதிரியாய்த் தெரிந்தேன். தெரிந்துசட்டென்றெழுந்து திகைத்து நின்றேன். மடத்துள்ளிருந்து வெளிவந்து அது என்முன் தோற்றின. நான் அதைப் பார்த்ததும் அது என்னைப் பார்த்து ஐயா சௌக்கியமா வென்றது. எனக்கு உடம்பு நடுங்கிற்று. மனதில் நேற்று இறந்த செட்டியாரல்லவோ இவ்வித பேய்ருபங் கொண்டு இங்கு வந்திட்டது வென நினைத்தேன். அது என்னைப் பார்த்துச் சிரித்துக்கொண்டு நான் புண்ணியமூர்த்தி யல்லவா, என் இவ்வளவு திகைப்பு என்னை நீர் அறியீரோ வென்றது. உடனே நான் செய்வதென்ன வெனத் தோற்றாது துணியால் முகத்தை மூடிக்கொண்டு வாய்வு வேகத்திற்குப் பின்னிடாது ஓடி வந்து உங்களைப் பார்த்தேன். இவ்வளவே என் சங்கதி எனத் திரும்பி மடத்தை நோக்கினர். (இந்த வேளையில் அங்கே மடத்தருகே நின்ற செட்டியார் வருகிற சிறுவர்களிருவரையும் பார்த்து நம்மைக் கண்டு பயந்தோடிய பெரியவரிடம் பேசிக்கொண்டு நிற்பதை நோக்கி வந்தனர் இவர் வரவை யறிந்த பெரியவர்) அப்பா அதோ ஓடி வருகிறது நீங்களெப்படியும் போங்கள் நானிற்கேன்.

எனச் சென்றனர். சிகாமணி! பெரியவரே உண்மை நாங்கள் விடமாட்டோம். உம்மைப் பிடித்துப் பேயின்கையில் ஒப்பித்து நாங்கள் தப்பித்துக் கொள்கிறோம். பாரும் எனப் பின்றொடர்ந்து வருபவர்போல் கொஞ்சதூரம் விடாது பின்வரவே இவர் பாடு பெருங்கஷ்டமாகி ஏதடா இந்தச் சிறுவரும் நமக்கு இடராகத் தோன்றினரே யென்று மிகமனம் நொந்து கால்வழி மல சலமோட கண்ணை மூடிக்கொண்டு கடுகவோடி நகருக்குள் மறைந்தனர். பின் சென்ற சிகாமணி இனி இவர் திரும்பிப் பாராரென வெண்ணி மறுபடித் திரும்பி விவேகனோடு தம்மை நோக்கிவரும் செட்டியாரிடம் போய்ச்சேர்ந்து அவருடன் மடத்துட் புகுந்து அங்கோரிடத்தில் உட்கார்ந்தனர்.

செட்டியார் முதனாளிரவில் இவர்கள் தன்னைவிட்டுப் பிரிந்த நேர முதல் இந்தச் சமையம்வரை நடந்தவை யாவு மொன்றொழியாது கூறிக் கண்ணீர் விட்டுக் கதறினர். சிகாமணி அவரைத் தேற்றி எங்கள் சொல்லைமீறி வனத்திற் சென்றீர். சென்றதாலல்லவா இத்துயருற்றீர். இனியாவது அங்கு செல்லாது இருக்கக் கடவீர் என்று சொல்லி வேண்டியவண்ணம் வைராக்கியத்தை யெடுத்தோதி அய்யா இனி நீவிர் இங்கிருத்தல் தகுதியன்று. இருப்பின் அடிக்கடி ஆபத்து நேரும் ஆகையாலிதை விட்டு அதோ தெரிகிறமலைச் சாரலில் அடர்ந்தசெடிகள் மரங்கள் பொருந்திய வனத்திற்போய் அங்கு சஞ்சரிக்கின்ற பெரியோர்களைக் கண்டு "நல்லோரினத்திரு" வென்ற வாக்கிடப்படி அவர்களோடுறவாடி அவரையடுத்து அவரிட்ட பணிவிடை பழுதுறுதியற்றி அவர்மனதுக் கிசைந்தவாறு நடப்பீரேல் அவர்பால் நன்மார்க்கத்தை உபதேசிக்கப் பெற்று அவர் சொல்லிய நிலையில் "நிலையிற் பிரியேல்" என்ற வாக்கியப்படி நின்று, "ஊக்கமது கைவிடேல்" என்றதாய் தீரனாய் சோர்வையடையாது, சுற்று சுற்றுப்புற்று மோகத்தைமுனி யென்றபடி முன்பழக்க வாசனையால் வரும் ஆசாபாசங்களை அறவேயொழித்து அதிவைராக்கிய சித்தனாய் உம்மிடத்துற்ற அஞ்ஞானங்களை யெல்லாம் வேருடன்களைந்து "பேதமையகற்று" என்றபடி கொஞ்சமேனும் பேத வெண்ணங்கள் பிறவாத வண்ணம்நின்று "பொருடனைப் போற்றி வாழ்" வென்ற அறிவுடையார் சொற்படி உண்மைப் பொருளாகிய பிரம சொரூபத்தை யனுசந்தித்து அதிலே இரண்டறக் கலந்து அதுவே யாகி ஆனந்த மடைவீர். இதுவே உமக்கின்றியமையாத இன்பம். இதை விடுத்துக் கீழ்ப்போன அனந்த ஜன்மங்களை அடுக்கடுக்காய்க் கொடுக்கக் காத்துக்கொண்டிருக்கிற மாயா வலைக் குட்படுவீரேல் மறுபடி மீளமாட்டீர். நாங்கள் சொல்வதை உறுதியா யெண்ணி இப்போதே விரைவிற் கானத்தை நாடி வலையினின்று விடுபட்டோடு மான்போற் சென்று "பெரியோரைத் துணைக்கொள்" என்ற ஔவை சொற்படி அங்குற்ற பெரியோர்களைக் கண்டு அவரருள் பெறுவீர் எனப் பலவாறு பேசி, அவர் விடைபெற்றுப் போய்வருகிறேனெனக் கூறும்போது; மறுபடி உங்களைப் பார்க்க சமயம் எப்போதோ வென்றார். சிகாமணி, நான் சொல்லியவாறு நடந்து வருவீரேல் கூடிய சீக்கிரம் பார்ப்பீர் போமென்று அனுப்பித்து இருவரும் பரம சந்துஷ்டர்களாகத்



திரும்பி வரும்போது விமலகன், சிகாமணியைப் பார்த்து அண்ணா இவரை இரவில் பார்த்தவர்கள்தான் பேயெனப் பயந்து பெருந்துயரடைந்தனர். நாம் வரும்போது எதிரே சென்ற பெரியவர் பகலிற் பார்த்தும் பேயென மருண்டனரே, என்ன விபரீதம்! இவ்வளவு தெரியாதவராயினரே அதோடு போகாமல் நம்மைக் கண்டபின்புங் கூட அவரிடத்தில் குடி புகுந்த அச்சம் விட்டு நீங்கிற்றில்லையே! இப்படியும் பயப்படுவர் உலகத்திருக்கின்றாரே! இவர்களுடைய மதியை மன்னமதி யாகுமென்று சொல்லலாம் என்றான். அதற்கு சிகாமணியும் தம்பி இதுவொரு விபரீதமாகாது. இதைப் பார்க்கினும் விபரீதங்கள் நடக்கினும் நடக்கும். முன்னும் நடந்திருக்கின்றது. இதைப் பற்றி யோர் கதையுளது. அதை உனக்குச் சொல்லுகிறேன். கேளெனப் பின் வருமாறு கூறினன்.

அரசர்களிற் சிறந்த தர்மகுத்தனென்னும் ஓர் பூபதி ராஜ்ய பரிபாலனத்தையும் துஷ்ட நிக்ரஹத்தையும் பிரதானி முதலிய பரிசன சவரட்சனைகளையும் தனது தர்மத்தினாலேயே பரிசினிசரிவர நடத்திவந்தனன். அப்படியிருக்குங் காலத்தில் அந்த அர யென்னும் நாமம் வாய்ந்த ஒருபரமார்த்த வஞ்சகன் அப்பூபதிசனிடம் பிரதானியாக வந்த மர்ந்தனன்.— அவன் விலக்கப் பட்டயிடம் சென்று அடிக்கடியவனுக்கு நல்லோரால் விருந்துவர் அதர்மங்களையே போதித்து வருவது வழக்கமாக மகாராஜனே! தது. பலசமயங்களில் மன்னனைப்பார்த்து ஓய் விருதாவிற் சம இந்த வித்துவான் முதலான பேர்களுக்கு ஏன் ஸ்தானாதிபதி, பாங்கொடுத்து வருகிறீர்கள். இவர்களாலும் முதலான வாயில்காப்போர், கொல்லர், மல்லர், கட்டியக்காரர் பொருள் இவ்வளவு ஜனங்களாலும் பிரதி மாதமும் எவ்வளவு பிரவிணைகச் செலவாகின்றது? இந்தப் பிரதிஷ்டையினால் என்ன சொல்லி யோசனம் நமக்குண்டாகிறதென்று அனுதினஞ் சொல்லிச் யாவரையுங் அவர்களுக்கெல்லாம் ஜீவனமில்லாமற் பண்ணுவித்து யிருப்பின் துவேஷித்துக்கொண்டு மன்னரும் நாமும் ஒருமையா அச இவர்கள் துவேஷம் யாதுசெய்யக் கடவது என வெண்ணி அவமதித்திருந்தனன்.
ட்டையோடு அவர்களை யெல்லாம் அவமதித்திருந்தனன்.

இப்படியிருக்க சிறிதுகாலஞ் சென்று ஒருசமயம் சபஸ்தான உத்தியோகஸ்தரு மொன்றாகக் கூடி ஆலோசனை செய்து பரிசினி

என்னும் பிரதானியை மன்னர் சமுகம் வரவொட்டாது தடுக்கு முபாயஞ் செய்வதே தகுதியெனத் தீர்மானித்துக்கொண்டு அவன் வருஞ் சமயம் பார்த்து பலரு மேகோபித்து அவன்மேல் விழுந்து அடித்து மிதித்து அங்கத்தைப் பங்கமாக்கி நகர்ப்புறம் ஓட்டிவிட்டனர். இதை யறியாத மன்னன் பரிசினி யேன் வரவில்லை யென்று கேட்டால் அவனுக்கு மகா சுர வியாதி வந்து அதிக கஷ்டத்திற்குள்ளாக விருக்கிறானென்று சொன்னார்கள். அதைச் செவியுற்ற அரசன் அவன்மீதுற்ற அன்பின் மிகுதியால் அரண்மனை வைத்தியர்களை அனுப்பி பார்க்கும்படியும் அதற்கு வேண்டிய சிகிச்சைகள் செய்து சீக்கிரம் குணமாகும்படி செய்யுங்களென்றனுப்பினர். அவர்களும் விரோதக் கூட்டத்திற் சேர்ந்தவர்களாதலால் ஓய் மதி மன்னரே! அவர்க்கு வந்த சுரமோ இலகுவிற் றீருமென்று சொல்வதற்கில்லை. நாங்கள் எவ்வளவோ ஔஷதங்களைக் கொடுத்தும் பிரயோசன மற்றதாகவே யிருக்கிறது. அவரும் பிழைக்கிறது மிக அருமை யென்றே நினைக்கிறோம் என்றனர். அதைச் செவியுற்ற மன்னரும் மிகுந்த துயருற்று அவனை நான் போய்ப் பார்த்து வர வேண்டுமென்று பிரயாணப்பட்டுப் போகும்போது அதுவிஷய மறிந்து சிலர் மன்னர்க்கெதிர்வந்து சுவாமி! நமது பிரதானியாகிய பரிசினி பாரிற் சரீரத்தைப் போட்டுப் பரலோகங் குடியேறினர். ஆகையாலினித் தாங்கள் அங்கு செல்வது தகாது. ஏனெனில் பிணத்தை யாகிலும் புறக்கும் மன்னர்கள் பார்க்கலாகாதென மறைகள் கோஷிக்கின்றனவென்று சாஸ்திர திருஷ்டாந்தங்க ளெடுத்துக் காட்டி அங்கு செல்லவொட்டாது தடுத்து அரமனைக் கேகும்படி கூறினர். மன்னர் இக்பிரமை கொண்டு அழுது புலம்பி அவனைப் பற்றி பலவாறு புகழ்ந்து பேசி ஆராத் துயருற்றனர். இதைக் கேட்டவர் பிரபு! நீர் அவர்மீது வைத்துள்ள அன்பின் மிகுதியால் இவ்வளவு துயரி லாழ்ந்தீர். அவர்மீது உமக்குள்ள அன்பை இன்றைக்குத்தான் வெளிக்காட்டினீர். இருந்தால் இப்படித்தான் நேசம்வைக்க வேணும்; அந்தரங்கத்தில் வைத்த பக்ஷமே வெகு நாளிருக்கும். பகிரங்கமாக வைக்கும் பக்ஷமெல்லாம் அவ்வளவு நலந் தாராது. மேலும் நீர் அவர் உயிருடனிருக்கும் வரை அவர்மீது வைத்திருக்கும் அன்பை வெளிக்குத் தெரியாதபடி வைத்திருந்து இப்போது அவர் வானுடு செல்லவும் நீர் தானுகச் செல்லவுமாச்சது தவிரவும்,



"நேசனைக் காணுவிடத்தே நெஞ்சாரவே புகழ்தல்
ஆசானை யெப்பொழுது மப்படியே—நேச
மனையாளை மஞ்சத்தில் மைந்தர்களை நெஞ்சில்
வினையாளை வேலை முடிவில்." என்ற கவிக்கு

நேரேசான்றுவீர். பிரபு! இனி அவர்மேல் வைத்த அன்பை மறந்து விடும். உமக்கு இவ்வுலகத்தில் எவ்வளவு பேரோ சினேகிதர்க ளிருக்கிறார்கள் அவர்கள் அநேகராயிருந்தாலும் உங்களுக்கு எவர்கள்பேரில் கிருபையோ அவர்கள்தான் உங்கள் சினேகத்திற்குப் பாத்திரரா வார்களென்று பலவித ஹிதமான வார்த்தைகளைச் சொல்லி மன்னனுடைய துக்கத்தைப் போக்கி அரமனைக்குத் திரும்பும்படி செய்து விட்டார்கள்.

பிறகு இவைகளெல்லாம் பரிசினியென்பவ னறிந்து "கெருடாசுகமா" வென்று நாகம் வினவுமானல் "இருக்குந் தானத்திலிருந்தால் எல்லாஞ் சுகந்தான்", என்பது போல நாம் எப்போதும் போல் ராஜசமுகம் போய்ச் சேர்ந்தல்லவா இவர்களுக் கெல்லாம் பிராயச்சித்தம் பண்ணுவிக்க வேண்டும். அப்படி செய்விக்காமுன் நாம் க்ஷவரகர்மம் பண்ணுவதில்லை யென்ற பிரதிக்ஞையை தனக்குட்டானே பண்ணிக்கொண்டு ராஜசேவை எப்போது கிடைக்குமென்று அநேக நாளாக எதிர் பார்த்துக் கொண்டிருந்தான்.

இப்படியிருக்க, பரிசினியும் ஒருநாள் அவ்வரசன் சவாரி புறப்படுகிற சமாசாரங் கேள்விப்பட்டு மார்க்கத்தில் ஒரு அரசமரத்தி லேறிக்கொண்டு ஒருவருக்குந் தெரியாமற் பதுங்கிக் கொண்டிருந்தான். அப்படியிருக்க அம்மன்னன் நால்வகைச் சேனைகளுடன் தாம் தாம் என்று சகல வாத்தியங்களும் கோஷிக்க அம்மரத்தினருகே சவாரி வரும்போது, இந்தப் பரிசினி யென்பவன் அரசனைப் பிரத்தியக்ஷமாய்க்கண்டு விஜயபவா வென்று கூவி உம்முடைய பிரதானியாகிய பரிசினி நான்தான் இதோ மரத்தின் மேலிருக்கின்றேன். என்னை உமது சமுகத்திற்கு வரவொட்டாமல் நமதுபரிவாரமெல்லா மொன்றுகூடிச் சங்கேதம் பண்ணிக்கொண்டு என்னைக் கண்டவிடத்தி லடித்துத் துரத்தித் துராகிருதம் பண்ணுகிறார்களென்று உரத்தசத்தமாகச் சொல்ல, அதுகேட்டு மன்னனுந் திரும்பி மரத்தின் மேலிருக்கும் பிரதானியாகிய பரிசினியை நேரே ஸ்பஷ்டமாகப் பார்த்தான்.

அந்த சமையத்தில் அங்கிருந்த பரிசனங்களெல்லாம் ஓ! ஓ! ஏது மோசம்வந்ததே; இனி யெப்படியென்று அதி சீக்கிரத்தில் விபூதியை அபிமந்திரித்து அரசன்மேல் தெளித்து ஈருகைத் துப்பட்டாவால் ராஜனைமூடி மறைத்து அகோ மகா ராஜாவே! தேவரீர் பீதிகொள்ள வேண்டாம் முன் இறந்துபோன பரிசினி இந்த அரசமரத்தில் பிரமராக்ஷதனாயிருந்து உம்மைக் கூப்பிட்டிரைகிறானென்றும், அரசமரம் பேய் மிகப்பொல்லாதென்றும் இனி அரைக்கணமாயினு மிங்கு தங்கக் கூடாதென்றும் சகல வாத்தியங்களையும் நன்றாய்க் கோஷிக்கும்படி செய்வித்து அதிசீக்கிரத்தில் தானே அரசனை யழைத்துக் கொண்டு அரண்மனை வந்து சேர்ந்தார்கள்.

சிலபேரை யனுப்பி அந்தப்பரிசினியை நன்றாய்ப் புடைத்துப் பட்டணத்திற்குப் புறம்பே துரத்தி விட்டார்கள். இப்படி பரிசினியை அரசன் பிரத்தியட்சமாய்ப் பார்த்தும் அவனுடைய குரல் வசனங்களைக் கேட்டும் மற்றவர்கள் செய்த ஜாலத்தினால் விவேகம் விளங்காமல் உண்மையாய்ப் பிரமராக்ஷதன்றான், இல்லையானால் இந்த அரசமரத்திலே தோன்றியிருக்க வேண்டும் என்று எப்படி சிக்ஷிக்கப் பட்டானோ அதுபோல் இந்தப் பெரியவரும் செட்டியாரைப் பிரத்தியட்சமாகக்கண்டும் பலபேர் செட்டியார் பேய்வடிவாயினர் எனச் சொல்லிய வசனங் கேட்டிருந்தபடியாலும், நேற்று அவர் இறந்து போயினர் என யாவரும் சிக்ஷித்திருக்கிறபடியாலும் அதை யிவர் அறிந்து இன்று நேரில் பார்த்தும் பிரமை கொண்டு பேயென்றே மருண்டனர். ஆகையாலிது வொரு பிரமாதமல்ல. இதைப்பற்றி இன்னொரு கதை சொல்லுகிறேன் கேளெனப் பின் வருமாறு சொல்லினன்:—

ஒரு அரசன் யாகம் பண்ணவேண்டி புரோகிதர்க் கறிக்கையிட அவர் சகல பதார்த்தங்களுஞ் சேகரித்து முக்கியமாய் வேண்டிய பசு வகப்படாமலிருக்க அது தெரிந்த அரசன் பசு லட்சணமறிந்த வொரு பிராமணனை யழைத்து அவன் கையிற் சில பொருளைக் கொடுத்துப் பசுவைக் கொண்டு வரும்படி யனுப்பினான். அந்தப் பிராமணனும் கொடுத்த திரவியத்தை வாங்கிக்கொண்டு பசுக்களுண்டாயிருக்கிற திக்கில் விசாரித்து சகல லட்சணமு நிறைந்த வொரு பசுவைப் பேசி அதற்கான திரவியங்கொடுத்துப் பசுவை யோட்டிக் கொண்டு வரும்போது வழியில் திருடர்கள் கண்டு மறிக்கப்பிராமணர்



இந்தப் பசு அரமனைக்குப் போகிறதென்று சொன்ன மாத்திரத்தில் ராஜாக்கினைக்குப் பயந்து விட்டு விட்டார்கள். அதைப் பார்த்த மற்றொருவன் இது நல்ல லட்சணம் வாய்ந்த பசுவாயிருக்கிறது. இதை நாம் உபாயத்தினால் பெறலாமென்று சொல்ல மற்றவர்கள் அவ்வுபாயம் யாது வென்ன, ஐயா, நாம் நாலுபேரும் அவன் போகிற மார்க்கத்தில் நாலு நாழிகை வழிக் கொருவராயிருந்து கொண்டு அந்தப் பசுவை பேய் நாய் என்று சொல்லுவோமானால் அதைப் பிராமணன் கேட்டுப் பிரமித்து பசுவை விட்டு விடுவான். அப்புறம் நாம் அதைக் கைப்பற்றிக் கொள்ளலாமென்ன? அதற்குச் சம்மதித்துப் பிராமணன் போகிற வழியில் நாலுபேர் நாலிடத்திலிருந்தார்கள். அந்தப் பிராமணன் பசுவைப் பிடித்துக் கொண்டு போகிறதைப் பார்த்து, முன்னாக விருந்தவன் ஓய் பிராமணா! அந்தணர்களுக்கு நாய் வளர்ப்பது தகாதே, அதிலும் மனுஷனைக் கடித்துக் கொல்லப்பட்ட பேய் நாயை வளர்க்கலாமா, இது தெரியாத உமக்கு, உம்மைப் பார்த்தால் சகல சாஸ்திரமுங் கற்ற தபோதனர் போன்றிருக்கின்றீரே, அப்படி நாய் வளர்ப்பதற்குப் பிரியமிருந்தால் ஒரு நல்ல நாயகப்படாமற் போச்சுதா வென்றிப்படிப் பலவிதமாகச் சொல்லி, மேலுமிது யாவரையுங் கடிக்கும் போல் தோற்றுகிறது; என்னிடங்கொண்டு வராதேயு மென்று சொல்லிப் பயந்தவனைப்போலோடிப் போயினன். அதுகேட்ட பிராமணன் ஓ! ஓ!! இவனுக்குப் பயித்தியம் போற் காண்கிறது. இவ்வளவு லட்சணம் வாய்ந்த பசுவைப் பார்த்திப்படி யேன் சொல்லுகிறானென்று அவன் சொல்லைச் சட்டை செய்யாமற், செவ்வையாய்ப் போகிறபோது, அவ்விரண்டாவது மனுஷனுமந்தப் பிராமணனைக் கண்டு பேய் நாயென்று முன் சொன்னவனைப் போலவே சொல்லி யோடிப்போனான். இதைக் கேட்டதும் அந்தப் பிராமணனுக்கு மனத் திகிலுற்று, ஐயோ, இது வென்ன ஆச்சரியம்! நாம் பேய் நாயைத்தான் வாங்கி மோசம் போனோமோ வென்று மனதிற் சம்சயமுண்டாகி, இந்தப் பேய் நாய் நம்மை ஒருவேளை கொன்று விடுமோ என்னவோ வெனப் பதறிப் பதறிப் பசுவை அடிக்கடி திருப்பித் திருப்பிப் பார்த்துக்கொண்டு பயத்தோடு நடந்து போகும்போது, மூன்றாமிடத்திருந்தவன் இவனைத் தூரத் தேவரும்போது ஓய் பிராமணரே யென்று கூவி நீர் பிடித்து வரு

கிற பேய் நாயை நம்மிடத்திற் கொண்டுவர வேண்டாமென்று தானும் பார்க்கத்தை விட்டு அப்புறம் விலகித் தன் பக்கத்திலிருந்தவர்களையும் பின்னோடு ஓடி வரும்படி செய்து தானு போடினான். அதைக்கண்டு அந்தப் பிராமணன் திகிலடைந்து, ஓ! ஓ!! நாம் பேய் நாயைத்தான் யுக்தமாய் வாங்கி வந்தோம்; நாம் ஏமாந்து போனதிற் சந்தேகமேயில்லை யென்று விசனத்தை யடைந்து இதைவிட்டுவிட்டுப்போவதானால் பின்னே தூரத்தி வந்து கடித்தால் என்ன செய்கிறது. இதைப் பார்க்கிறபோதுங் கட்டாயங் கடிக்குமென்றே தோற்றுகிறது என்று நிச்சயங்கொண்டு அந்தப் பசுவை விட்டுவிடுகிற வுபாய சிந்தையுடன் யோசித்துச் செல்லும் போது, நாலாமிடத்திருந்தவன், இவனைப்பார்த்து ஓய் பிராமணரே! உமக்குப் பைத்தியமோ தெரியவில்லை, ஏன்காணும் இந்தப் பேய் நாயைக் கையிற் பிடித்துக்கொண்டு வருகிறீர்? இது எவர்களையுங் கடித்துக் கொன்று தின்னுமே யுமக்கிது தெரியாதா வென்று சொல்லி விலகிப் போனான்.

அது கேட்டுப் பிராமணன் அச்சமுற்று, அப்பா, நான் தெரியாமல் இதை வாங்கி வந்தேன், தெரிந்தால் நான் ஏன் வாங்கி வருகிறேன். என்னை யேமாற்றி என்னிடமிருந்த பொருளை வாங்கிக்கொண்டு இதுதான் பசு வெனக்கொண்டு போகச்செய்தனர். என்னுடைய பொருள் போயினும் போகிறது எனக்கு ஆபத்துண்டாகாதிருக்க வழியைத் தெரிவித்தால் உனக்கு வெகு சுகிர்தமுண்டாகுமென்று சொல்லிப் பரிதாபமாய்க் கெஞ்சினான். அப்படிப் பிராமணன் கெஞ்சியதைக் கேட்டு, ஐயா! எனக்கு உம்மிடத்தில் வரப் பயமாயிருக்கின்றது, அதை விடுகிற வுபாய மாத்திரஞ் சொல்லுகிறேன், அதெப்படி யென்றால், உம்முடைய கைக் கயிற்றைப் பேய் நாயுடனே கூட்டி அதோ விருக்கிற மரத்தடியிற் கொண்டுபோய் நிறுத்தி அந்தக் கயிற்றை விடாமல் அந்த மரத்தை மூன்று பிரதட்சணஞ் செய்து முடி போட்டோடிப் போய் விடுமென்று சொன்னான்.

அப்பிராமணன் அப்படியே செய்து விட்டு இப்பால் வந்து அப்பா உன்னுடைய சகாயத்தாலின்று நான் பிழைத்தேன், நீ இன்றைக்குப் பிராமணனை ரட்சித்தாய் துர் மரணமாயிறவாதபடி யென்னைக் காப்பாற்றினையே யெனப் பலவாசிகள் கூறி அவனிடம் விடை பெற்றுக்கொண்டு, இன்றைக்கு நமக்கு புனர் ஜனனமாச்சுது இனிமேற் பசுக் கொள்ளப் போகப்படாதென்று நிச்சயித்துக்

ஸ்ரீ
கடவுள் துணை.

# கதாரத்னாகரம்

"கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் [illegible]
மற்றீண்டு வாரா நெறி"

M. A. நெல்லையப்[illegible]
பத்ராதிபர்:—

| Vol 1. | JANUARY, 1916. | No. 11. |
| தொகுதி—1 | 1916 ம் ஹூ ஜனவரி மீ | பகுதி—11. |

24 FEB 1916
OFFICE OF THE REGISTRAR OF [illegible] MADRAS

## விசேஷ வர்த்தமானங்கள்.

**பாபு சுரேந்திரநாத் பானர்ஜியின் குமாரர்:**—கனம் பாபு சுரேந்திரநாத் பானர்ஜிக்கு ஒரே யொரு குமாரர்; அவருடைய பெயர் பாபு பாபா சங்கர பானர்ஜி; அவருக்கு மாயாதேவி என்னும் மாதை பிப்ரவரி மாதத்தில் விவாகம் செய்துகொடுப்பதாய் நிச்சயமாயிருக்கிறது. சென்ற 2-ந்தேதி ஞாயிற்றுக்கிழமையன்று நிச்சய தாம்பூலமையம் நடந்தேறியதாகத் தெரியவருகிறது.

**தீ விபத்தில் 50 ஆயிரம் ரூபாய் நஷ்டம்:**—பம்பாயில் ஜீவன்ஜி பிரஸ் என்னும் கட்டிடத்தில் சென்ற புதனன்று மாலையில் தீப்பற்றிக்கொண்டது. அதனால் சுமார் 50 ஆயிரம் ரூபாய் நஷ்டமென்று மதிக்கப்படுகின்றது. தீப்பிடித்த காரணம் இன்னதென்று விளங்கவில்லை.

**கவர்னர் தம்பதிகள் விருந்து நட[illegible]:**—போர்முனையில் காயமடை[illegible]ரும் ஸோல்ஜர்களுக்கு ரண[illegible]ய சிகிச்சையையும் இன்னும் [illegible] சௌகரியங்களையும் தேடிக் கொடுப்பதையே நோக்கமாகக்கொண்டுள்ளது. "ஜெயின்டு ஜான்ஸ் அம்புலன்ஸ் சங்கம்" என்பதை நேயர்கள் அறிவர். அச்சங்கத்திற்கு பம்பாயில் ஒரு கிளைச்சங்கம் இருக்கிறது. அக் கிளைச் சங்கத்தின் மெம்பர்களில் பார்ஸிகள், ஹிந்துக்கள், யூதர்கள் முதலியோரடங்கிய சுமார் 200 பெயருக்கு பம்பாய் கவர்னர் தம்பதிகள் சென்ற 12-ந்தேதி புதன்கிழமையன்று மாலையில் தோட்டக் கச்சேரி நடத்தினர்.

**சென்னை பிரஸிடென்ஸி காலேஜில் தர்பங்கா மகாராஜ:**—14-ந் தேதி மாலை சென்னைபிரஸிடென்ஸி காலேஜில் மாணவர்களால் கூட்டப்பட்ட ஒரு மீட்டிங்குக்கு H. H. தர்பங்கா மகாராஜா விஜயஞ்செய்து அடியில் வருமாறு பேசினார்:— சிறு நண்பர்களே! சகோதரர்களே! நமது தேசம் நெருக்கடியான காலத்தில் பாரமார்த்தி விஷயத்தில் தலையிட்டு சங்கடப்பட்டுவருகிறது. நமது சாஸ்திரங்களிலும் இப்படி நடக்கப்போகிறதென்று காண்பிக்கப்பட்டிருக்கிறது. கலியுகத்தில் நடக்கப்போகும் எதிர்கால சம்பவங்கள் அனைத்தும் சாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருக்கின்றன. ஆங்கிலேயர்களும் சென்ற நூற்றாண்டில் இவ்வித பாரமார்த்திகமான போராட்டத்தில் தலையிட்டுக் கொண்டிருந்தார்கள். 19-வது நூற்

றூண்டில் இங்கிலாந்தில் மதக்கொள்கைகளைப்பற்றியவாதம் ஒரிடத்திலும் நவீன சாஸ்திராபிவிருத்தி, கைத்தொழில் அபிவிருத்தி முதலிய விவகார சம்பந்தமான விஷயங்களில் வாதம் மற்றொரிடத்திலும்; நடந்துவந்தன. அதே மாதிரியான ஸ்திதியில் இந்தியா இப்பொழுது இருக்கிறது. பாரமார்த்திக வழியைப்பற்றியும் விவகார வழியைப்பற்றியும் வாதங்கள் நடந்து வருகின்றன. நமக்கு பரம்பரையாக வந்துகொண்டிருக்கும் மதக்கொள்கைகளை அனுஷ்டித்து வந்ததினால், நாம் மத்தியில் நேரிட்ட பல அவாந்தரங்களுக்குள்ளானோம். அன்னிய தேசத்தார்கள் பலர் இந்தியாவின் மீது படையெடுத்து வந்தார்கள் என்றாலும் ஹிந்து மதம் சஞ்சலமற்ற இமயமலையைப்போல், அசையாமல் உறுதியாக நிற்கிறது. அப்படியிருக்க காலதேச வர்த்தமானங்களினாலும் மேனாட்டாரின் படிப்பு விசேஷமாய்ப் பரவி அதனால் நாம் அடைந்திருக்கும் நாகரீகத்தின் சிறப்பினாலும் ஆசாரங்களில் புதியதாய் தோன்றி வரும் பலவித நவீன திருத்தங்களுக்கு நாம் உள்ளாகாமல், நமது பூர்வீகர்களின் கௌரவத்திற்கும் வழிக்கும் யாதொரு ஹானியையும் விளைவிக்காமல், நடந்துவரவேண்டும் என்பதை மறந்து விடாதேயுங்கள். ஜாதியக் கொள்கைகளும் கட்டுப்பாட்டுகளும், ஆசாரங்களும் நிலைநிற்கும்படிச் செய்தது ஒருநாளில் உழைத்த உழைப்பல்ல. பல வருஷங்களாக உழைத்து வந்ததின் பலனேயாகும். அவைகளை திடீரென்று மாற்றிவிட முயலவேண்டாம். பல்லாயிரக் கணக்கான வருஷங்களாய் இந்தியாவில் ஏற்பட்டிருக்கும் ஜாதி வித்தியாசத்தைப்பற்றி நான் உங்களுக்கு ஒரு வார்த்தை சொல்லாமல் இருப்பதற்கில்லை. எந்த தேசத்திலும் எந்த வகுப்பாருள்ளும் ஜாதி வித்தியாசம் பாராட்டும் சுபாவம் இல்லாமற் போகவில்லை. நமக்குள் பிரம்ம, க்ஷத்திரிய, வைசிய, சூத்திர என்று சதுர்வித வர்ணங்கள் ஏற்பட்டிருப்பதுபோல இங்கிலாந்திலும் ஏற்பட்டிருக்கிறது. இங்கே பிராமணரென்று யாரைச் சொல்லுகிறோமோ அவர்களுக்குச் சரியாக இங்கிலாந்தில் சாஸ்திர வித்பன்னர்களையும் ராஜதந்திரிகளையும் படிப்பாளிகளையும் சொல்லலாம். இங்கே க்ஷத்திரியர்கள் எப்படியோ இங்கிலாந்தில் ஸோல்ஜர்கள். இங்கே வைசிய சூத்திரர்கள் எப்படியோ இங்கிலாந்தில் வியாபாரிகளும், கூலி வேலை செய்கிறவர்களும் ஆவார்கள். இங்கேயிருப்பதுபோலவே அங்கேயும் சதுர் வர்ணங்களுண்டு. குணங்களுக்கும், கர்மங்களுக்கும் தகுந்தபடி நான் சதுர் வர்ணத்தை சிருஷ்டித்தேன் என்று பகவத்கீதையில் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா சொல்லி யிருக்கிறார். இந்த கீதாவாக்கியம் இந்தியாவுக்கு மட்டுமல்ல. மற்றெல்லா தேசங்களுக்கும் கால தேச வர்த்தமானங்களுக்கும் பொருந்தியதாகும். மனித சுபாவத்திற்கே ஜாதி வித்தியாசம் இயற்கையாக ஏற்பட்டது.

ஆகையால் நமது பழைய காலத்து அனுஷ்டானத்தின்படி நாம் நடப்போம். பாரமார்த்திக விஷயத்தில் கியாதி பெற்று விளங்கி வரும் பாரத வருஷத்தின் பெருமைக்கு யாதொரு ஹானியையும் விளைவிக்காமல் அதன் பிள்ளைகளாகிய நாம் நமது தாயாரின் வயிற்றில் பிறந்த உண்மையான குமாரர்கள் என்பதை மறந்துவிடாமல் தாயாருக்குப் பெருமையை விளைவிப்போமாக. ஸனாதன தர்மத்தை நிலைநிறுத்துவதற்காக நமக்கு வேண்டிய பலத்தையும் ஊக்கத்தையும் தாராளமான மனதையும் கொடுக்கும்படியாக நாம் கடவுளைப் பிரார்த்திப்போமாக.

சு. மி.

...டார் என்றும், இதைக் கண்டு அவர் மனம் நொந்து என்னை இவ்வூர் எல்லவரை கூட்டி வந்து என்னை இங்கேயே யிருக்கவேண்டு மென்றும் கூடிய சீக்கிரம் தாய்வீடு போய்வருவதாகச் சொல்லிச் சென்றார் என்றாள். பெற்றோர்கள் லக்ஷக் கணக்கான திரவிய முள்ளவர்களான தால் சிந்தை கலங்காது வேறு ஆபரணம் செய்துபோட்டார்கள்.

வஞ்ச நெஞ்சனாகிய பஞ்சமன் சுகதேவியை ஜலத்தில் தள்ளியதும், ஆபரணங்களை யெடுத்துக் கொண்டு வெகு வேகமாக கொஞ்ச தூரம் ஓடினான். அதன் பிறகு தனது சொந்த வூராகிய காசிமா நகருக்குச் சென்றான். தாய் தந்தையை தேடிப்பார்த்தான். விண்ணுலகம் சென்றார் என்பதைக் கேட்டு வசனமுற்றான். குடியிருக்க வீடு மில்லை. கையிலிருந்த நகைகளை ஒவ்வொன்றாய் விற்றுக் காலத்தைக் கழித்து வந்தான். தான் செய்த காரியங்களை யெல்லாம் நினைத்து வருந்துவான், கடைசியாக சுகதேவியைக் கிணற்றில் தள்ளியது ஞாபகத்துக்கு வர குற்றமற்ற பெண்ணை அநியாயமாய்க் கொலை செய்தோமே, நான் மீனா நகரத்துக்குப் போவேனே யன்றி வேறு மார்க்கமு முண்டோ! நான் செய்த எந்த வேலைதான் நியாயமாகும் என்று சித்தங் கலங்கினான். கையிலிருந்த ஆபரணங்களை விற்று ஆறுமாதமாய் [illegible]லவிட்டனன். கடைசியில் கையி[illegible] மில்லாததால் [illegible]ரிவலம் [illegible]ன். சுகதேவியின் வீட்டுக் [illegible]போகாமல் வெளியில் உலாவிக் கொண்டிருந்தான். [illegible] தினமாய் சுகதேவியும் கிணற்றிலிருந்து தப்பித்து வந்திருந்தால், நான் செய்த தீங்கை எல்லோரும் அறிந்திருப்பார்கள் என்று எண்ணும் பொழுது சுகதேவியும் அழகெலாங்குன்றி ஆற்றிலிருந்து ஜலங்கொண்டு வீட்டுக்குப் போகும்போது வழியில் தன் புருஷன் நிற்கக் கண்டு, இடுப்பிலிருந்த குடத்தை கீழே வைத்துவிட்டு அவனருகில் சென்றாள். சுகதேவி வருவதைக் கண்ட பஞ்சமனாகிய கலாபூஷணனும் ஊரை விட்டுப் போகக்கருதி நடந்தனன். சுகதேவியும் அவனையே பின்பற்றி நடந்தாள். பஞ்சமனும் மனித சஞ்சார மில்லாத, விடத்தில் நின்று, சுகதேவி என்ன சொல்லப் போகிறாள் என்று நின்றான். அவளும் அருகில் வந்து புருஷனைக் கண்டு புளகாங்கிதங் கொண்டு அடங்கா மகிழ்ச்சியுடனே ஆனந்த சாகரத்தில் மூழ்கினவளாய் பிராண நாதா வீட்டுக்கு வாருங்கள் எனது பெற்றோருக்கு நாலைந்து மாதத்துக்குள் வருவீரென்று சொல்லி யிருந்தேன். அவர்கள் தினந்தோறும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். தாங்கள் சீக்கிரத்தில் வரவேண்டுமென்று ஐம்புல னடக்கி அந்த ரக்ஷகராகிய மஹா விஷ்ணுவை நோக்கித் தவம் புரிந்தேன். என் தவமும் பலித்தது. வாருங்கள் என்றாள்.

ஆஹா! உத்தமி யென்றால் இவளன்றோ! நான் செய்த குற்றத்தை மறைத்து என்னை யெதிர்பார்த்திருக்கும்படி செய்தேன் என்பது உண்மையாயிருக்கலாம். இவள் மனதைப் பரிக்ஷிக்காமல் செல்லக் கூடாது என்று நான் பித்தன் என்னை நாடுவதில் பயனில்லை யென்றான். சற்று ஆலோசனை செய்து பதில் சொன்னதைப்பார்த்து ஏதோ மனதில் அச்சம் ஏற்பட்டிருப்பதாயறிந்து ஸ்வாமி! தங்களைப்பற்றி யெவ்வித குறையும் எவரிடமும் சொல்லவில்லை தாங்கள் சந்தேகமின்றி வரலாம். தங்களுக்கு ஒரு குறைவு ஏற்படுமானால் அது எனக்கும் சம்பந்தப்பட்டதன்றோ! தாங்கள் வேறு நான் வேறு என்ற எண்ணம் எனக்கில்லை. கணவன் கொஞ்சம் குறைவாயிருந்தாலும் குணமாக்கிக் கொண்டுபோவது குலமகளின் நிறை கற்புக்கு மழகன்றோ என்றாள்.

பொறுமையையும் ஆழ்ந்த கருத்தையு மறிந்து சந்தோஷமாய் அவளோடு சாமிநாத சாஸ்திரி வீடு போய்ச் சேர்ந்தான். இவன் வந்ததைப்பற்றி மிகுந்த சந்தோஷங் கொண்ட பெண்ணின் பெற்றோரும், க்ஷேமம் விசாரித்தார்கள். பஞ்சமனும் அவர்களிஷ்டம் போல் நடந்து வந்தான். சில மாதங்கள் கடந்ததும் கலாபூஷணன் அவர்கள் வீட்டிலிருக்க மனமில்லாதவனாயிருந்தான். இதை யறிந்த சாமிநாத சாஸ்திரி பக்கத்திலிருந்த தனது வீட்டைக் கொடுத்து மகளையும் மருமகனையும் வாழ்ந்து வரச் செய்தார்.

இவ்விதமாய் வாழ்ந்து வரும் நாளில் சுகதேவியும் கர்ப்பவதியானாள். முந்திய ஜன்மத்தில் புண்ணியஞ் செய்தோருக்கே புத்திர பாக்கியமென்று சொல்லி சாமிநாத சாஸ்திரியும் ஏழாமாதம் ஸ்ரீமந்த சடங்கை நடத்தினார். பத்தாம்மாதம் ஒரு பாலனைப் பெற்றாள். ஆண் குழந்தை பிறந்ததால் அனைவரும் ஆனந்த மடைந்தார்கள். ஜயபாலன் எனப் பெயரிட்டார்கள். குழந்தைக்கு ஐந்து வயதாகி வரும்போது அவ்வூரிலுள்ள மற்ற பிராமணக் குழந்தைகளோடு விளையாடுவது வழக்கம். மற்றக் குழந்தைகள் குலத்திற்கேற்றவாறு விளையாட ஜயபாலன் மாத்திரம் எலும்புகளையும், ஓடுகளையும், வைத்து விளையாடிக் கொண்டிருந்தான்.

ஒரு நாள் அந்தி நேரம் சுகதேவி நதியிலிருந்து ஜலங்கொண்டு வரும்போது தனது குழந்தை எலும்பை வைத்து விளையாடக் கண்டு கோபங்கொண்டடித்து ஸ்நானம் செய்வித்து வீட்டிற் கழைத்து வந்தாள். சுகதேவியும் ஜயபாலன் செய்த வேலையை புருஷனிடம் சொன்னாள். அவனும் அதைக்கேட்டு, கொஞ்சநேரம் பேசாதிருந்து நகைத்தான்.

சுகதேவியும் காரணத்தை வினவ, பஞ்சமனும் அது பரம ரகஸ்யமென்றும் வெளியிடக் கூடாததென்றும் சொன்னான். அதற்கு அவள் பிராணநாதா! எனக்கும் சொல்லக்கூடாததா! பெற்ற தாய் தெரிந்து கொள்ளக் கூடாதா! தங்களை இவ்விஷயமாய் தொந்தரவு செய்ய வல்லேன். தங்களுக்குப் பிரியமுண்டானால் சொல்லுங்கள் என்றாள்.

நீ அதை யறிந்து கொள்ளவேண்டுமானால் எவரும் இங்கு வராமல் கதவை மூடிவிடு என்றான். அப்படியே கதவைத் தாளிட்டாள்.

கலாபூஷணனும் தான் ஜாதியில் பஞ்சமனென்றும். கல்விகற்ற விதத்தையும் கிணற்றில் தள்ளிய காரணத்தையும், காசிக்குச் சென்று ஆபரணங்களை விற்று ஜீவித்ததையும், கடைசியாகத் திரும்பி வந்ததையும் சொல்லி முடித்தான். தான் பஞ்சமனானதால் குழந்தையும் தனது குலாசாரப்படி எலும்புகளை யெடுத்து விளையாட ஆரம்பித்ததென்றான்.

ஹே! ருக்மணி, இந்த விபரீதக் கதையைக் கேட்ட கற்புக்கரசியாகிய சுகதேவியும் பெருமூச்சு விட்டு சரேலென்று கதவைத் திறந்து பக்கத்திலுள்ள தாய்வீடு சென்று, பிதாவைக் கண்டு, அப்பா! ஒரு சந்தேகம், நிவர்த்தி செய்யவேண்டுமென்றாள். அதற்கு சாஸ்திரியும் அம்மா! உனக்குச் சொல்லாமல் யாருக்குச் சொல்வேன் என்றார். உடனே அவள், ஒரு தீண்டாப்பேர் நம்முடைய பாத்திரத்தை தொட்டு விட்டால் என்ன செய்கிறதென்றாள். அதற்கவர் அக்னியில் போட்டு எடுத்துக் கொள்ளலாமென்றார். இதைக் கேட்டுக்கொண்டு தன் வீடு திரும்பிச் சென்றாள். திடீரென்று சுகதேவி வெளியே சென்றதால், தெரிவித்த விஷயங்களையெல்லாம் பெற்றோர்களிடம் சொல்லிவிடுவாளென்று பயந்தான். சுகதேவி அவன் முன் தோன்றி இடித்தாற்போல மெய் நடுக்குறவும், ரோமக்கால் சிலிர்க்கவும், மைப்படியுங் கண்



யோகிகளின் அனுக்ரஹம் பெற்ற

# சுகானந்த மாத்திரைகள்.

## தேகாரோக்கியத்தைக் கொடுக்கும் திவ்யமருந்து.

இம்மருந்து, ஜீரண சம்பந்தமான தொந்தரவுகளை நீக்கி, ஜீரண சக்தியை விர்த்திசெய்து, வாலிப கோலத்தால் ஏற்படும் மேக ரோகங்களைக் குணமாக்கி நரம்பு ஸ்தானங்களை உறுதிப்படுத்தி தேக சுகத்தையும் தீர்க்காயுளையும் கொடுக்கிறது.

50, மாத்திரைக்கு விலை-ரூ. 1.

சொந்தக்காரர் :—,

அமிர்தம் அண்டு கோ.,
தபால் பெட்டி 222, மதராஸ்.

ஏஜண்டு:
A. துரைசாமி நாய்க்கர்,
43, மண்ணடி மதராஸ்.

# அமிர்தம் அண்டு கம்பனியின்

இதர

# ஆயுர்வேத ஔஷதங்கள்.

**காசமாத்திரைகள்:**—அதிக உஷ்ணத்தினாலும், குளிரினாலும் உண்டாகும் இருமல், தொண்டையில் சலசலவென்னும் அரவம் தொண்டை கம்முதல் முதலியவைகள் நீங்கும். க்ஷய ரோகங்கள் குணப்படுமென்றால் சாதாரண வியாதியைப்பற்றி சொல்லவும் வேண்டுமோ!

புட்டி 1-க்கு விலை ரூ. 1.

**பற்பொடி:**—இதை சாதாரணமாய் தினந்தோறும் உபயோகித்து வரலாம். பல் ஆடுதல், ஈறு கொழுத்தல், ரத்தம் வருதல், வாய் துர் நாற்றம் முதலியவை நீங்கி தந்த சுத்தி யுண்டாகும்.

டப்பி 1-க்கு விலை அணா 4.

**சந்திரப்ரபா:**—வெட்டை முதலிய மேகரோகங்களை நீக்குதற்குத் தகுந்த மருந்து.

புட்டி 1-க்கு அணா. 12.

**பால சஞ்சீவி:**—இம் மருந்தை குழந்தைகளுக் கெல்லாம் ஓர் வரப்பிரசாதமென்று சொல்லற்பாலது. பத்து வயதுக்குட்பட்ட பாலர்களின் பலவித வியாதிகளை நீக்கித் தேகாரோக்யத்தைக் கொடுக்கிறது.

200, மாத்திரை கொண்ட புட்டி 1-க்கு அணா 8.

**அமிர்தம் அண்டு கோ.,**

தபால் பெட்டி 222, மதராஸ்.

[illegible] தன்னுடைய ஸ்தானம் போய் சேர்ந்து விட்டான். பிறகு பசுவைத் திருடர்கள் கிரஹித்துக்கொண்டு போய்விட்டார்கள். இந்தப்படி அந்த வஞ்சகர்கள், பிரத்தியட்சமாய்ப் பார்த்துப் பரிக்ஷித்துக்கொண்ட பசுவாயிருந்தும் அதைத் தாங்கள் கிரகித்துக்கொள்கிற நிமித்தம் பேய் நாயாக்கிப் பிராமணனது புத்தியை வெருட்டி மாறுபடுத்திவிட அந்தப் பிராமணனும் அவர்கள் சொல்லால் பேத புத்தி யடைந்து பசுவை நாயெனவே எண்ணி விட்டு விட்டான். ஆகையால் இது உலகில் சகசமாயிருக்கிறது இதுவும் மாயையினுடைய அகடிதகடனாசாமார்த்தியம். இது போன்ற அத்தியாயங்கள் சாஸ்திரங்களில் பலவுரைக்கின்றன. அதாவது கானல் நீர், கிளிஞ்சில் வெள்ளி, கந்தர்ப்ப நகர், சஜூர், வானமை, கயிற்றிற் பாம்பு, முயற் கொம்பு, கட்டையிற்கள்வன், இவைகளெல்லாம் ஒன்றி லொன்றாகத் தோற்றப்படுகிறது. இதைத் தவிரவும் நாம் பள்ளிக்கூடத்தில் வாசிக்கும்போது விவேக சிந்தாமணியில் ஓர் கவிக்குப் பொருள் விவரித்தனரே நமது வாத்தியார். அது உன் மனதில் ஞாபகமில்லையா வென்றான். அண்ணே எனக்கு ஞாபகத்துக்கு வரவில்லை. மேலும் எனக்கு ஞாபக சக்தி குறை வென்றே யெண்ணுகிறேன். எப்படி யவர் சொல்லியது, கதையை மட்டுஞ் சொன்னால் நான் அந்தக் கவியைத் தெரிந்து கொள்கிறேனென் றான். தம்பி அப்படியே தெரிவிக்கிறேன் கேள் என்றான்.

ஓர் கிராமத்தில் நாணம் மடம் அச்சம் பயிர்ப்பு என்னும் நான்கு குணங்களும் வாய்ந்த வோர் வனிதையானவள் வசந்த காலத்திலோர் நாள் நந்தவனத்திற் சென்று உல்லாசமாகத் திரிந்து கொண்டிருக்கும்போது அங்கோர் புஷ்பபூமியில் பிங்கள வர்ணமுள்ள ஓர் வண்டானது தாமரை மலர்களிலுள்ள நறுந்தேனை இனிதாக வயிறு நிரம்பப் புசித்து மதோ மத்தராய் மயங்கிக் கிடப்பதைக் [illegible] அதை அந்தப் பெண்ணானவள் இது ஓர் சம்புக்கனி யென்று [illegible]ம்போடு தன் கையால் எடுத்து அதின் அழகைப் பார்த்துப் [illegible]ப் பூரித்தனள். இவ்வளவு அழகோடும் ஓர் கனியை அயன் சிருஷ்டித்திருக்கிறானே அவனுடைய வல்லபமே வல்லபம், அவனுடைய மேலான புத்தி சாதுரியத்திற் கிணையாவருளரோ நகச் செப்பலாம் என்று பலபலவாகத் தனக்குள்ளேயே பேசிக் களித்தனள் இவளிவ்வாறு தன் கையிலேந்திக் களிப்புற்றிருக்க வண்டானது தாமரை மலரிலேயே வசிப்பது [illegible] உயர நோக்கிற்று. அச்

சமயம் இவளுடைய முகார விந்தமானது பூர்ண சந்திரனை யொத்திலங்கவே அதைக் கண்ணுற்று ஒகோ! ஆகாயத்தில் சந்திரன் புறப்பட்டு வந்துவிட்டதே இனி நாமிங்கிருந்தால் இந்த அரவிந்த மலரானது குவிந்து விடுமே அப்புறம் இதைவிட்டு வெளிக்கிளம்புதற்கில்லாது இதிலே கிடந்து உயிர் நீங்கும்படி யாகுமென்றஞ்சி சட்டென்று பறந்தோடியது. அப்படிப் பறந்தோடியதைக் கண்ட பெண்ணானவள் ஆஹா இதுவென்ன ஆச்சரியம்! நமது கையிலிருந்தது வண்டோ நாம் கனி யென்றல்லவோ கைப்பற்றினோம், இப்போது பறந்தோடியதைப் பார்க்க வண்டாயிருக்கலாமா அல்லது கனியே பறந்தோடிற்று, கனி பறந்தோடியதாக நானிதுவரை கண்டறியேன் கேட்டுமறியேனே இது வொரு புதுமையாகவே தோற்றுகிறது எனப்பிரமித்து நின்றனள், என்பதாய்ச்சொன்னது ஞாபகமில்லையா வென்றான்.

வி.—அண்ணா இப்போது ஞாபகத்துக்கு வந்து விட்டது.

சி.—தம்பி அக்கவி யெப்படி தெரியச் சொல்.

வி.—ஆகா சொல்கிறேன்.

"தேனு கர்வண்டு மதுதனையுண்டு தியங்கியே கிடந்ததைக் கண்டு
தானதைச் சம்புவின் கனியெனத் தடக்கையாலெடுத்து முன்பார்த்தாள்
வானுறு மதியம் வந்ததென் றெண்ணி மலர்க்கரங் குவியுமென்றஞ்சிப்
போனது வண்டோ பறந்ததோ பழந்தான் புதுமையோ விதுவெனப்
[புகன்றாள்"

என்று சொன்ன கவி நன்றாய் ஞாபகத்திலிருக்கிறது. அப்படியிருந்தும் சமையத்திற்கு ஞாபக முண்டாவதில்லை என்றான்.

தம்பி அந்தக் கவியிற்பார், வண்டைப் பழமென்று அப்பெண்மணி கையிலெடுத்துப் பார்த்துக்கொண்டிருந்தனள். கொஞ்ச நேரத்தில் அந்த வண்டானது கையை விட்டுப் பறந்து சென்றும் வண்டென நிச்சயங் கொள்ளாது வண்டோ வல்லது பழந்தான் அவ்விதம் பறந்து சென்றதோவென மருட்சி யடைந்தனள். ஆகையால் யாரும் அத்தியாசத்திற்குட் படாதவரில்லை. எங்கோ ஓர் தீரனாகிய ஞானி யொருவனிருப்பான். அவனைத்தவிர மற்ற சாமானியர்களெல்லாம் ஒன்றை யொன்றாக் கருதும் நெஞ்ச முடையோர்கள்தான். அதுபோல் இந்தப் பெரியவரும் மருண்டனர். தம்பி இனி நாம் அந்த செட்டியாருடைய வீட்டிற் சென்று விபர மறிந்துகொண்டு வீட்டுக்குச் செல்லலாம் வா வென்று



இருவரும் அங்கு சென்று இரவு நடந்தவை யாவுந்தெரிந்து கொண்டு அவர்களுக்கும் இனி அந்தப் பேய் இங்கு வரவே மாட்டாது அதைக் காட்டி லோட்டியாயிற்று. எப்போதாவது ஒருவேளை வந்தால் அதற்கிடங் கொடாமல் கடினவார்த்தைகளால் தூஷித்து ஓட்டிவிடுங்கள் உசார். எனச் சொல்லித் திரும்பி அரமனையை நோக்கிச் சென்றனர். அவ்விதம் போகும் மார்க்கத்தில் விவேகன் சிகாமணியைப் பார்த்து அண்ணா அந்தச் செட்டியாரிடத்தில் வனவாசத்தைப்பற்றிச் சொல்லியதிலிருந்து என்மனம் அதையே நாடிக்கொண்டிருக்கிறது. மேலும் பாரதாதி இதிகாசங்களில் தருமபுத்திர மகாராசர் தன் சகோதரர்களுடன் பன்னிரண்டு வருடம் வனசஞ்சாரஞ் செய்து அங்கே பெரியோர்களுடைய அனுக்கிரகத்தையும் புண்ணியதீர்த்த ஸ்நானங்களும் சாக்ஷாத்பரமேஸ்வரருடைய தெரிசனமும் இன்னும் வேண்டிய நன்மைகளும் பெற்றுத் திரும்பினதாகவும் ஸ்ரீராமபிரான் தமது வைதேகியுடன் லட்சுமணரையுங் கூட்டிப்போய் பதினாலு வருடம் வனசஞ்சாரம் பண்ணி அங்கே வசிக்கும் முனிவரர்கட்குற்ற இடுக்கண் களைந்து ஜீவகோடிக ளெல்லாமுய் ஜீவிக்கும்படியாய் அநேக தீர்த்தங்களை முக்கியமாய் சேதுவில் அவர்களால் ஸ்தாபிக்கப்பட்ட லிங்கங்களும் அங்கங்கே அவர்கள் தங்கி வசித்த விடங்களும் இவையெல்லாம் உலகர்க்கு அதிக க்ஷேமத்தைக் கொடுக்கக்கூடியதாயு மிருந்துவருகிறது. ஆகையால் நாமுங் கொஞ்சகாலம் வனத்தில் வசிக்க விரும்புகின்றேன். தங்களுடைய மனோபாவம் எப்படியோ அதைத் தெரிவிக்கவேண்டும் என்றான்.

சி.—தம்பி நீ இதுகாறு மொழிந்த வசனங்கள் எனக்கு மிகவு மிதத்தையே கொடுக்கின்றது. ஆயினும் நாம் சிறுவர்களாயிற்றே அன்னை தந்தையர் என் புகல்வரோ அறிகிலோமே.

வி.—அண்ணா நாம் வனம் பார்த்துவரப் பிரியமா யிருக்கிறது, சென்றுவர உத்தரவு கொடுங்களென்று நமது பெற்றோர்களிடம் புகன்று அவர்கள் சம்மதத்தின்மேற் போகலாம்.

சி.—தம்பி அவர்கள் அதற்கு சம்மதிக்காதுபோனா லென் செய்வது.

வி.—அண்ணா இதுவரையும் நமது பெற்றோர்கள் நம் விருப்பத்திற்கிடையூறு விளைத்திலரே.

சி.—தம்பி இதுவரை நாம் சமீபத்திலேயே யிருக்கிற காட்டில் சஞ்சரித்தபடியால் இங்கு இடையூறு விளையாதென்றெண்ணிப் பேசாதிருந்தனர்.

வி.—அப்படியானால் காட்டில் இடையூறு படுவதுமுண்டோ

சி.—ஆகா, அங்குண்டானாலும் இடையூறுகளுக்குக் கேட்கவாவேண்டும்

வி.—அப்படியென்ன அண்ணா அங்குண்டாகக் காரணம்

சி.—அங்கு துஷ்டமிருக சஞ்சாரங்களதிகமானதால் அது கெடுதி விளைவிக்கும்.

வி.—அப்படியானால் அங்கு முனிவரர்கள் பெரியோர்கள் எதேஷ்டமாய் சஞ்சரிப்பாரென முன் புகன்றதுண்டே அவர்கள் எவ்விதம் வசிக்கிறார்கள்?

சி.—அவர்களிடம் அம்மிருகங்கள் மிக சாந்தகுணத்தோடு வசிக்கும்

வி.—நம்மிடத்திலும் அப்படி நடந்துகொள்ளாதோ?

சி.—நாம் அதைக் கண்டவுடன் பயங்கொள்வோம் மேலும் அதைக் கொல்ல வேண்டிய வழியைத் தேடுவோமானதால் அதுவும் நம்மைக் கொல்லுகைக்கே யெண்ணும்.

வி.—நாமேன் அப்படி யெண்ணுவோம்.

சி.—அது நமக்குற்ற க்ஷத்திரிய தருமம் ரஜோகுணத்தர்களாகையால்.

வி.—நம்மைப் போன்ற அரசர்களும் வனத்தை நாடிச் செல்கின்றன ரென்று கேட்டிருக்கின்றேனே. தவிரவும் தருமபுத்திராதிகளும் ஸ்ரீராமபிரானும் நம்போன்ற க்ஷத்திரிய குலத்துதித்தவர்கள் தானே அவர்களும் வனஞ் சென்றனரே.

சி.—சரி நீ சொல்வது உண்மைதான், க்ஷத்திரியர்கள் தான் அதிகமாய் வனசஞ்சாரஞ் செய்கிறவர். அதில் நாம் சிறுவர்களானதால் நாம் போவது தகுதியல்ல வெனச்சொல்ல வந்தேனே யொழிய வேறல்ல.



வி.—நாம் சிறுவர்களென்றால் சரியான துணைப்பலங்கொண்டு செல்வோம் நமக்கென்ன சேனைகளில்லையா?

சி.—ஆகா. சேனைகளில்லா திருக்கிறது. உனக்கு கட்டாயம் போகத்தான் வேண்டுமென்ற விருப்பமிருக்கும் பக்ஷத்தில் அப்படியே போவோம். ஆனாலின்னொன்று சொல்கிறேன்.

இந்த யெண்ணம் எனக்கும் அநேக நாளாக விருக்கிறது' அதற்கு காலம் சமீபத்தி லிருப்பதினால் அதை யெதிர் பார்த்துக் கொண்டிருந்தேன். அதுவும் நெருங்கிற்று இன்னும் இரண்டு தினங்களில் யாவரும் போகும்படியாகும். அங்கு போனால் அநேக விதமான நலன்களும் ஆச்சரியபடத் தகுந்த சம்பவங்களும் சில சில கிலேசங்களும் முடிவில் பெருமகிழ்ச்சியு மடையும்படியாய் நேருமென்று எனக்குத் தெரிகிறது. ஆகையால் நீ கேட்பதற்கு முன்பாகவே நமது பெற்றோர்கள் நம்மை யழைத்துக்கொண்டு வனஞ் செல்வார்கள். இதில் சந்தேகமில்லை. நம்மிருவரால் அங்கு அநேக ஆச்சரியபடத்தக்க காக்ஷிகள் காணப்படப் போகின்றன. அதை அப்போதைக்கப்போது நீயே வரவரத் தெரிந்து கொள்வாய் இப்போ தொன்றும் அதைப்பற்றிச் சங்கிக்க வேண்டாம். வா போவோம் (என அரமனை சேர்ந்தார்கள்)

சுபம்! சுபம்!! சுபம்!!!

(முதற்பாகம் முற்றிற்று.)

# இரண்டாம் பாகத்தின் சுருக்கம்.

இனி இரண்டாம் பாகத்தில் விவேக சிகாமணிகள் மாதா பிதா தங்கை சில சைநியங்களோடு வனஞ் சென்று வசித்தலும், அங்கு விவேக சிகாமணிகள் தனித்து வனத்தில் அதிதூரஞ் சென்று அங்கங்கு சில விசித்திரமான சம்பவங்களைக் காட்டியும் இவர்கள் மலைச் சாரலில் ஓர் விருக்ஷத் தடியிற் சயனித்திருக்கையில் சிகாமணி விழித்திருக்க இரண்டு அண்டில்கள் வந்து இவர்களுடைய முற் பிறப்புகளும் இப்போது நடக்கப் போகிறதையும் சமீபத்தில் நடக்கப் போகிற ஆபத்துகளையும் பின்னால் நடக்கப்போகிற பிரபாவங்களையுந் தெளியக் கூறக்கேட்டு அதையெல்லாந் தன் மனத்துட் கொண்டு அங்கங்கே நடந்து கொள்ள வேண்டிய வாறு நடந்து கொள்ளுதலும் கடைசியாய் தன்னுடைய குரு தெரிசனங் கிடைத்து அவர் பாலுபதேசம் பெற்று அங்கு களித்திருத்தலும், இங்கே பிதா மாதாக்கள் வனத்தில் குழந்தைகளைக் காணாது துயருற்று பிதா தேடிச் சென்று, காணாது திரும்புதலும் தனது பெண் சிசுவை சுரவியாதி பீடித்து வருத்த அதற்காக வைத்தியர்கள் வருவதும் இதற்குள் பெண் குழந்தையை ஓர் வானரம் தூக்கிப்போவதும் அதை தாய் பின் தொடர்ந்து பயன்பெறாது திரும்புவதும், அவ் வானரம் குழந்தையின் அழகைக் கண்டு இன்புற்று அதைப் போஷித்து அநேக வனங்கள் கொண்டு செல்வதும் அதை அநேக மிருகங்களும் அரசர்களுங் கண்டு அப்பெண்ணைக் கவர்வதற்குப் பின்தொடர்ந்து வேண்டிய பிரயத்தனங்கள் செய்தும் பயனிலாதுபோக, வானரம் நெடுந்தூரம் கொண்டு செல்லும்போது தற்செயலாய் வனம் பற்றி யெரிய வானரம் குழந்தையோடு தப்பிக்க வழியின்றி திகைத்து கடைசியில் குழந்தையைப் போட்டுவிட்டுத், தான் தப்பித்துக் கொள்ளுதலும், அச்சமயம் ஓர் பூதம் ஆகாயமார்க்கமாய் வந்து இக்குழந்தையைக் கண்டு அதினழகில் மயங்கி யெடுத்துப்போய் தான் வசிக்குமிடத்தில் வைத்து வளர்த்து பருவத்தை யெதிர்பார்த்துக்கொண் டிருக்கிறதும் அரசன் குழந்தைகளைத் தேடி மாயமானால் பூதமிருக்குமிடம் வந்து சிறையிலிருப்பதும் அங்கு பூதத்தால் நடக்கும் கோரமான காட்சிகளும் அங்கே தனியே யிருக்கிற அரசியின் துயரமும் அவள் தன் தகப்பனார் வீடு சேர்தலும் இவர்களிப்படி யொருவரை யொருவர் பிரிந்து பரிதபிக்கும்போது அன்னிய



தேசத் தரசன் வந்து இவர்களுடைய ராஜ்ஜியத்தை அபகரித்து மந்திரியை ஓட்டி விடுதலும், மந்திரி சன்னியாசி வேடந் தரித்து அரசனையும் புத்திரர்களையுந் தேடுதலும் பூதங்கொண்டு சென்ற பெண்ணை தானநுபவிக்க வெண்ணி அநேக சூழ்ச்சிகள் செய்வதும் அப்பெண் அப்பூதத்தை விட்டுத்தப்பிக்க வழிகள் தேடிக் கடைசியில் பிரதிக்ஞை செய்தலும், அப்பிரதிக்ஞையை முடிப்பதற்காக அநேக அரசர்களைப் பூதமெடுத்து வந்து சிறையில் வைப்பதும், அந்த நாள் வர பிரதிக்ஞை முடிப்பதற் காரம்பித்து ஓமகுண்டம் வளர்ப்பித்து அதில் ஆயிரம் பேர்களைக் கொன்று அவர்கள் தசை வுதிரங்களைச் சொரிந்து அக்னியை மூட்டுவதும் 108, அரசர் தலையரிந்து அவர்கள் நரம்புகளால் கயிறு திரித்து அதில் 108 தலையையும் கோர்த்து மாலையாக்கி அந்த மாலையால் ஜெபஞ்செய்து கால வயிரவர் பிரசன்னமாகிவர மீய்தலும் அந்த வரத்தால் பூதம் ஓமகுண்டத்தில் வீழ்ந்து பூதசரீரமாறி திவ்ய சரீரமாகுதலும், அந்தச் சமயம் விவேகசிகாமணிகள் தன் குருவோடு திடீரென்று அங்ஙனந்தோன்றி பூதத்தின் றலையிலடிக்க அது தேவசரீரம் பெற்று வான்வழிச் செல்லுதலும், விவேகசிகாமணிகள் குருவால் அங்கு உயிர் நீங்கிய அரசர் முதல் யாவரும் உயிர் பெற்று மீளயாவரும் ஒன்றுகூடி பெண்ணையுங் கண்டு ஆதிமுதல் நடந்த சங்கதிகள் யாவும் குருவினாலறிந்து கொண்டு, எல்லோருஞ் புறப்பட்டு நகரை நோக்கிச் செல்ல இதையறிந்த சத்துரு தேசத்தை விட்டு விட்டுச் சொல்லாது போயினன். அங்கு சென்று குருவின் உத்தரவால் விவேகன் கிரகஸ்தனாகி அரசைக் கைப்பற்றி யாண்டு வந்தான். சிகாமணி குருவோடு சேர்ந்து வனஞ்சென்று ஜீவன் முத்தியை யடைந்தான். மற்ற அரசர்களெல்லாம் குருவினிடமே அநேக காலம் வசித்து அவரவர்கள் பக்குவத்திற்குத் தகுந்த பதவி முத்திகளும், விதேகமுத்திகளுமடைந்தனர் என்றும் மிகவும் விஸ்தாரமாயும் தெளிவாயும் அற்புதமாயும் ஆச்சரியமாயும் ஆனந்தமாயும் கூறப்படும்; ஆகையால் இதை வரப்பெறும் ஒவ்வொருவரும் இதை இது காறும் வாங்கியதேபோல் இனிவரும் மேலே சொல்லிய கருத்துகளடங்கிய இரண்டாவது பாகச் சஞ்சிகைகளையும் அவசியம் தவறாது வரப் பெற்று அதிற்கண்டு ஆனந்தங் கொள்வீர்களாக.

மானேஜர்,

கதாரத்னாகரம்.

கதாரத்னாகரம் ஆபீஸ்,

# அத்யாத்மராமாயணம்.

ஸம்ஸ்கிருத மொழிபெயர்ப்பு தமிழ்வசனம்.

ஏழுகாண்டங்கள் சேர்ந்த உயர்ந்த காலிகோ பைண்டு 2-8-0.

| | ரூ. | அ. | | ரூ. | அ. | | ரூ. | அ. |
|---|---|---|---|---|---|---|---|---|
| விவேகாநந்த விஜயம | 1 | 4 | தாயுமானவர் | 1 | 0 | ஸர் ...ர்லிங் | 0 | 8 |
| அரிச்சந்திரபுராணம | 1 | 8 | பட்டணத்தார் | 1 | 0 | மீ...க்ஷி | 1 | 0 |
| பக்தலீலா மிருதவசனம் | 3 | 0 | பக்தமாலா | 3 | 0 | கம...நாதன் | ! | 0 |
| அகஸ்தியர் தேவாரத் திரட்டு | 0 | 12 | விஷ்ணுபுராணம் | 2 | 8 | கல்...லதா | 0 | 14 |
| கல்லாடம் மூலமும் உரையும் | 3 | 0 | லண்டன் திருடர் | 2 | 4 | அந்...புர ரகசியம் | 0 | 14 |
| திவ்யதேச யாத்திரை | 2 | 0 | சுந்தரன் | 0 | 12 | சுமுகன் | 0 | 12 |
| சுந்தராங்கி | 1 | 0 | பத்மலோசனி | 0 | 12 | பா...மதி | 0 | 12 |
| விஜய காருண்யம் | 0 | 12 | மோகன சுந்தரம் | 0 | 12 | சத்ருஜித் | 0 | 12 |
| அமீர்சிங் | 0 | 12 | ராஜாம்பாள் | 0 | 12 | காதலர்கண்கள் | 0 | 12 |
| புஷ்பவனம் | 0 | 10 | சந்திரகாந்தா | 0 | 12 | விரும்பியவிதமே | 0 | 12 |
| தேவசுந்தரி | 0 | 14 | ஆனந்தகிருஷ்ண | 0 | 12 | ஞான சுந்தரம் | 0 | 8 |
| தினகரசுந்தரி | 0 | 12 | அனுமான்சிங் | 0 | 12 | பகவத்கீதைவசன | 1 | 4 |
| கமலசேகரன் | 1 | 4 | சுந்தரிமனோகரன் | 0 | 12 | சந்திரோதயம் | 1 | 0 |
| பத்மநிதி | 0 | 10 | மாதவி | 0 | 6 | மங்...ம்மாள் | 1 | 0 |
| ஹேமலதா | 1 | 0 | அயாஷா | 1 | 8 | சார...ம்பாள் | 0 | 8 |
| சுந்தரி | 0 | 12 | கன்னியின் முத்தம் | 1 | 8 | வத்...லா | 0 | 8 |
| பஷ்பவல்லி | 0 | 12 | நாரதர் கலகம் | [illegible] | 8 | சார...கதான் | 0 | 8 |
| ரஜபுத்திரவீரன் | 0 | 8 | வித்யாநந்தர் | 1 | 0 | வே...ள உலகம் | 0 | 8 |
| ஏகபஞ்சநதம் | 0 | 10 | பணங்தளம் | 0 | 12 | சுந்...ரவல்லி | 0 | 8 |
| நீலகண்டன் | 0 | 10 | தமயந்தி | 0 | 8 | லீலா 0 4 0 லீலா | 0 | 12 |
| சுயம்பிரகாசன் | 0 | 10 | திருவாசகம் | 1 | 0 | ...மணி | 0 | 3 |
| ராமமூர்த்தி | 0 | 10 | பழமொழிஅகராதி | 2 | 0 | ரத்...வளி | 0 | 12 |
| மனோரஞ்சிதம் | 2 | 0 | பிரபலிங்கலீலை | 0 | 12 | வா...புரவணிகன் | 0 | 12 |
| கனகபூஷணம் | 2 | 0 | சுவர்ணம்பாள் | 0 | 8 | மங்...க்கரசி | 0 | 12 |
| பொற்றொடி | 0 | 13 | சிம்ஹலநாதன் | 0 | 12 | லீலா...தி | 0 | 10 |
| வனஜாக்ஷி | 0 | 8 | ஆனந்தசுந்தரி | 0 | 12 | குல...சகரன் | 0 | 10 |
| ஜரத்காரு | 0 | 5 | இந்திரஜித்தன் | 0 | 12 | புரு...ஷாத்தமன் | 0 | 10 |
| புஷ்பாகரன் | 0 | 10 | அகமேபுறம் | 0 | 8 | நிக்...றகுழந்தை | 0 | 12 |
| விநோதரமஞ்சரி | 1 | 2 | மெய்யறம் | 0 | 8 | குமா...சம்பவம் | 0 | 12 |
| | | | கருணாகரன் | 0 | 4 | சால...வன் | 0 | 12 |
| | | | கமலாம்பிகை | 0 | 4 | தலை...பீனமந்தரம் | 0 | 8 |
| | | | ருக்மணி பரிணயம் | 0 | 4 | தீன...யாளு | 0 | 6 |
| | | | | | | ஷேக்ஸ்பியர்கதை | 0 | 6 |

அமிர்தம் அண்டு கோ.,

காபால் பெட்டி 222, மதராஸ்.



OFFICE OF THE REGISTRAR OF ... 4 FEB 1915 MADRAS

செய்வலஞ்செய் பிறையதுபோ நிக்கு ...
செப்புதற்கோர் பொருள்வேறு தெரியோமாங்க
கைவலஞ் செயயிற்குமரா குறமான்வள்ளி
கவின்பெறுவாணு தலுவமை கழறத்தானே. (18)

கள்ளவிழ்பூங்கோதை கணைக்கணையென்கோ நின்
கைவேலைப் பயிற்றுவித்த கருவேலென்கோ
தெள்ளமுதமென்கோ கரியநஞ்சென்கோ வான்
சிலையென்பேனு தலையென்னசெய்வேன் காது
வள்ளை தங்கு மலரென்கோ சண்பகத்தின்
மலரொடுக்கு மிண்மலருநாணு காணு
லெள்ளிளம் பூவென்பதுவோ வள்ளிமூக்கை
யெந்தனக்கே சந்தேகமிருந்ததாமால். (19)

ஆம்பலஞ் செவ்வாயதாந் தொண்டையென்பா
ரதிலிருந்த வெண்ணகையையேதென் பார்க
டாம்பவளவள்ளமு மற்றதனிற் சேர்த்துந்
தாளமுமென்றிடல் சிறிதுதாமதா மாற்
காம்பனைய பசுந்தோளி மணக்குநாதன்
கவின்பார்க்கு மிண்டாடியெனுங்க போல
மேம்படுபைங்க முகிணைக்கந்தரமாய் வைத்த
விதமெங்கோ குறக்குலத்தின் விந்தைபன்றே. (20)

வேறு

உமிழ்திரையாழி துயில் சுடராழி
யொருதிருமார் பினனு பிக்
கமழ்தருகமலமலர் வலம்வருவோன்
கலைநிறை மதிதிரு வாரி
யமிழ்தினை மொழியாயொளியினை முகமா
யதிலுறை கறைமிருவரு வாய்த்
தமிழ்தருகுருமா முனிதொழுகுரவோய்
சமைத்தன னெனுமிவ டனக்கே. (21)

வேறு

மழையளகக்கழை நெடுந்தோண்மாதம மஞ்செம்
முணிக்கலசஞ்சூசக நன்மணிக்குச் சென்று
மிழைநுழைதற் கிடமிலதாய் நெருங்கிவிம்மி
பெழுந்துபுடை பரந்தகன்றதிறைவன் காதல்
விழைபுணரிதனின் மூழ்கி நீந்தி நீந்தி
விளையாடுங்குட மிரண்டு விதித்தாள் போலுங்
குழையளவுங் குழலளவுஞ் சாடுங்கெண்டைக்
கோலவிழிக்குறமாதின் குறிப்பிதாமால் (22)

ஆலிலைபோல் வயிறதனிற் சயனமாலோ
வணிரோமவரிசை முலையானைதன்னை
வேலிறையோய் விசித்தமணி வல்லிதானோ
விரிகுரும்பை பொருவுகொங்கை வெல்லப்பாகைப்
போலினிய மொழியளடிக் குடைந்து கஞ்சம்
புனலினின்றோர் காற்றவசு புரியுமென்றக்
காலினி மற்றவள் செங்கைக்கிணையோ தும்பிக்
கைக்குறங்கு கதலிபுறங் காட்டுமாமால் (23)

முலைப்பாரந் தாங்குதலுமன்றிக் கூந்தன்
முழுப்பாரமுந் தாங்குகின்றதாலே
மலைப்பாரிசத்து வள்ளிக்கிடைபொன் றோர்நான்
மட்டெனிலு மிருக்குமல்லாவிறு மேதிங்கட்
கலைப்பாதி நுதற்றீட்டுந் திலகவட்டக்
கண்ணாட்டி நடைக்கனமுங் கடுப்பின்றுன்
றலைப்பாரி தானுமிவட் கொல்குவாள்செந்
தளிரடியின் சுவட்டெழிலின் றகைக்கென்பாரால். (24)

சந்திரனைக் கவிகைசெய்யு மனங்கவேளோர்
சரநாலுந் துறந்தாவிந் தத்தீரம்பைச்
சிந்தைமகிழ்ந் திருதூணி சேர்த்தாலென்னுஞ்
சேவடிசேர் கணைக்காலின் செவ்விதன்னைச்
சுந்தரியை யுருப்பசியோ டரம்பைமாரைத்
துய்யவெண்டா மரைமகளைச் செய்யகஞ்சத்



திந்திரையைக் கண்டகண்ணாற் கண்டேன்கண்டு
ளின்புற்றே னொருபகலென் றியம்புகின்றான். (25)

அறத்தவர்க ளங்கியிட்டு மூளமூள
வாகுதிசெய் திடலவர்க்க தழகாமென்னுந்
திறத்தினாரதமுனிவன் கடலைச்சூரர்
தீ மூட்டுஞ் செவ்வேடன் சிந்தைமீது
குறத்திருவி னெழிலுரைத்து மூட்டுந்தீக்கா
குதிசெய்வான் போலுரைப்பான் குமாரவந்த
மறத்தவர்க் குலத்தவர்க்கே யல்லான்மாதை
மணமுடிப்பா ரியாவருக்கும் வையமீதே. (26)

வேறு.

ஆயினுந் தனக்காசை யுண்டேற்றனி
போயுன் சூட்டியிற் பொற்கொடியைக்கொணர்
வாயென்றோதியம்மா முனிதன்பத
நாயகன் பதமேத்தி நடந்தனன். (27)

வேறு.

போனான் வழிக்கொண்டு குறமாதிருக்கின்ற புனமேவினான்
மான்மாதெதிர்ச்சென்று தொழுதாடனைக்கண்டு மறைநாரதன்
கான்வார்குழற்கஞ்ச மலர்பானுநிற்பொங்கு கவினேரிலா
ளானாலுனக்கிங்க ணிகரார்புவிப்பெண்க ளாவார்களோ. (28)

குனிமாமதிப் பங்கினுதலாரு நிற்கன்பு கொளுவாரெனிற்
றனியாழிசைக்குஞ் சொன்மயிலே யுனக்கன் புதருகாதல
ரினியார் கழைப்பஞ்ச மலராளெழிற் கொஞ்சமெனும் வேனிலான்
மனுவாயுதிக்கின்ற புவிபாசரோ நிற்குமணவாளரே. (29(

என்றாலு நின்பொற்பினுக்குங் குணத்திற்கு மெழாய் குழை
முன்று நின்கட் குறிக்குங் கைரேகைக்கு மூவேழு பன்
னொன்றுமெனச்சொற்ற வருவிலக்கணத் துக்கு முளாரும் வே
னின்றுதை கந்தர்க்குவப் பாய் விழாச் செய்யு நேயத்துமே. (30

செவ்வேளுனக் கிங்கனருள் வானவர்கன்பு செயிலின்பமுங்
னைவ்வேழ நிற்கும் பொன்னகர் மாதரிற் பொங்கு கனமுங்கணு

மைவ்வேலி நிற்கென்று மிகவாசி சொற்றிங்கு வழி சென்றன
னவ்வேடனித்தங்குமிக மாலுளக் கின்றதறை கின்றனம். (31)

(நாரதப் படலம் முற்றும்.)

## 8. கைக்கிளைப் படலம்.

அவுணர்கள் பெற்றிடும் வரமதுகைக்கொடு
அகிலமனைத்தையுமரசாள
நவமுறுவெற்பிடை நகரினுமற்றொரு
நகரினும் வைத்திரு வினையோரை
யுவரியிறைத்தொரு புரிசெய்த தற்குண்முன்
னொருகுடையிட்டரி யணையேறி
மவுலிதரித்திட வருள்புரிதற்பரன்
மகனிருபொற்பத மறவேனே. (1)

வேறு.

ஐயன் கேட்பவ வருந்தவ நாரதன்
மெய்யவாக விளம்பிய மென்மொழி
யெய்யவில் லெடுத்தேற்ற மதனனுண்
செய்யு மோதையிற் புக்கசெவியினே. (2)

இன்னவா றதியம்பலுந் தேவமான்
றன்னமாநிலஞ் சார்மயனுழுகான்
பின்னமாநில மீதுநட்டான்முனி
யென்னவாசை தழைந்தெழுகின்றதே. (3)

கனிமொழி யெழில் கேட்டறி கந்தனப்
பனிமொழியை யுளச் சிறை பண்ணினு
னினிமொழிவதென் னீது சயிப்பனோ
முனிமொழிதனைக் கேட்டமர் மூட்டினான். (4)

நல்லமால் வென்று காமங் கொள்வான்றனை
வெல்லலா மின்றி வெள்குறும் வேள்குற
வல்லியால் வெல்ல வந்து மலைந்தனன்
செல்லுங்கால் தெரிந்து செருச் செய்வான் (5)



தாதையாருருச் சாய்த்தறரக் கொலோ
தாதையாரலரைச் சுதன்றன்னகப்
போதையாரப் பொதிந்து மயனறைப்
போதையார நிவேதித்துப் பூசித்தான். (6)

துன்று மாகடறீய்த்து வெஞ்சூரினை
வென்றி கொண்டிடு வேடனை வேடனு
வொன்று வாங்கி யுளங்கிழித்துடற
பன்றல் வாழி விடுத்தனன் மாரிபோல். (7)

மாரன்விட்ட கொடுங்கணை மார்பகஞ்
சேரவூடு தெரித்த புழைவழி
சாரவீசு வசந்தந ழுற்சிசை
யாரவீசுவ வாற்றிலனையனே. (8)

வில்லினை வில்வெதுப்பிய வேழலா
தல்லிலிந்து படுதுமென்னுவிவை
யெல்லைகாண்டற் கிதையமுறுதபொன்
மெல்லவோடி விழுந்தனன்மேல்கடல். (9)

பட்டவானுதன் மோகப் பரவைபுள்
விட்டவார்மன மேளுறைகோயிலைத்
தொட்டவார்சரச் சூடுதணிப்பபோற்
குட்டவாரி குளித்தகதிரதே. (10)

நன்குறு நிலவேந்தர் நலிந்தநாட்
புன்குறு நிலவேந்தர் பொலிந்தபொன்
முன்குறுகுமிரவி முடிந்திடப்
பின்குறுகிற் றிருளின் பிழம்பரோ. (11)

ஏழிரும் பரித்தேரவ னேகலுஞ்
சூளிருட் பிழம் போக்கத் துணிப்படுங்
கேழொளிக் கொடு கீழ்த்திசை மோதிய
வாழி மீதிலெழுந்த வப்புலி. (12)

மலையை மத்தென வாசுகியைப் பிணித்
தலைகடலைக் கடைந்திடு மற்புதப்
புலவருண்ணவெழுமமுதப் புதுக்
கலைப்பெண்ண வெழுந்த கதிர் நிலா. (13)

தோணிமேவு புணரியிற் றோன்றியே
சேணின் மேவிய திங்கணெடுங் கதிர்
பாணிமேவு பரமனொளிதரு
வேணிபோல விரிந்து பரந்தவே. (14)

கோல விந்தயன் கோயிறனையுமுன்
சீலவென்று திறந்த தடைத்தனன்
ஞால மன்றி றக்கத் தனித் தொணிவெந்
தால மன்றன் றடைத்தன போதுமால். (15)

தவளவண்டு முத்தத்தை யுதிர்த்திடு
நவையில்லாம் பல்லாதனகையுறக்
குவிதருமரைக் கொங்கைத்தடமகள்
பவளவாயைத் திறந்தன பான்மைபோல். (16)

தென்றல் சுட்டிடு சேடத்தை வானிடை
நின்றுசுட்ட நிலாவினை நோக்கியே
யின்றுசுட்ட தெனையெனை யென்றரி
யன்றுசுட்ட வயிலவன் கூறினான். (17)

எந்தைவேணி யிருந்தது மெண்ணிலா
யந்தவேளுற வாக்கொளு மப்புலி
முந்தைவீரன் முடித்ததிற் செய்குறைக்
குந்தன்மேற்குறை யோதவும் வேண்டுமோ. (18)

கோலைக்கூர்செய் மரத்தைக் குறைப்பவர்
போலக்கோவரு நீயப்புராரிதிப்
பாலக்கோவிற் பயின்றகொல் லென்னிலென்
மேலக்கோபம் விளைத்தல் வழக்கதே. (19)

முன்னையார முதத்தொடு தித்தென
தன்னையோடு பயின்றன வன்புவிட்
டென்னையே சுடுவித்திடு மித்தொழில்
பின்னை யாரிடம் பெற்றனை திங்களே. (20)

பச்சைமாலொடு பங்கயர்க் கெட்டிலா
ருச்சவார்சடை மீதினுறைந்து நீ
மச்சகேதன னுக்கு மதியமே
பிச்சமாகிய பேதமை யோர்துவாய். (21)



மீன நற்று வசன் சரம் விட்டுமென்
மானதத்தி லிருந்திடும் வள்ளிதன்
ஞானத்தி லெழுந்தென தங்க நீ
யேனனற்றினை யென்றன னெம்பிரான். (22)

மாவினிற் குயிலே யென் மனத்துறை
தேவியின் சொலையின்புறச் செப்பியென்
னாவியின்று பறிப்பதன் பன்றெனப்
பூவியந்தவன் போற்றுவன் சொல்லினான். (23)

பொன்னல்வில்லின் புருவக்கொடி முனஞ்
சென்னல் வில்லின்றி றஞ்செலுத்தன்றெனைக்
கன்னல்வில்லி கரந்துநின் றெய்ததா
லுன்னல்வில்லினு றதியென்னுங்கொலோ. (24)

தந்தையார்முன் சமர்செய்து மாரனீ
யுந்தனுக மிழந்தது மோர்ந்திலா
தெந்தனோடும் வந்தேற்றனை யின்றெனக்
கந்தனொந்து கனன்று புலம்புமால். (25)

செண்டிசைக்குங்குயி றலைத் தேமலும்
வண்டிசைக்குங் குழலும வண்மதி
கொண்டிசைக்கு முகமுங் குமரனுக்
கெண்டிசைக்கு மெதிரெதிர் தோன்றுமால். (26)

வந்து நிற்கும் வடிவினை நோக்குறுங்
கொந்துமைக்குழல் வள்ளி யிவள்கொலோ
முந்துரைத்த முனிசொல் லெனுமறை
தந்தைபித்த னெனுந்தகை சாரவே. (27)

சந்தவார்முலைத் தையலின் மையலா
லிந்தவாறு புலம்பிடு மெல்லையிற்
பந்தவார்கதிர் முந்தப் பனிமதி
பிந்தவாரப் பெருங்கடல் புக்கதே. (28)

அடன்மதன்பொர வாகந்தளர்ந்தவேற்
படையன்புன் கணைப்பார்க்க வந்தானெனச்
சுடர்நெடுந்தடந் தேரினைத் தூண்டியே
கடன்முகட்டிற் கதிரவன்றோன்றினான். (29)

மேலவாரியின் மூழ்கினதாலிது
நீலமேனரை போய்க்குண கேமியிற்
கோலசேயுருப் பெற்றெழுங் கொள்கைபோல்
வாலசூரியன் வந்திடு தோற்றமே. (30)

ஆயகாலை யறுமுக னாதன்
றாயவாணைகைத் தோகைதன் னாசையின்
னேயதானது தீரநவன்றவன்
னேயமான பருந்தை நினைந்தனன். (31)

வேறு.

எவ்வமற நாரதனு முரைத்தவாறே
யிளங்குமரன் குறமின்மண மியற்றவேண்டுங்
கவ்வையினன் மிகவெழுந்து போந்தான்றெய்வக்
களிறுறை மாளிகைசென்று கரியகூந்தற்
செவ்வரியின் விழிக்கிளியின் மொழியமானே
தேனோநா ரதனுரைத்த செய்திதன்னை
யொவ்வலிலா மின்சோதித் தருவசொன்று
வுயர்வேழ்வி மலையருகி லுன்றெடன்றனல். (32)

ஆங்கதுவுந் தமியனுக் கொணர்கவென்று
னதுகொணருங் கவலையினு லருவிச்சாரல்
போங்கவனத் துணையடைந்தேன் கொணர்ந்தேகந்தப்
பொருப்பிடை வைத்தான் மிகவும் பொற்பாமென்றான்
மாங்குயிலின் கிழவியிதின் சூட்டிபோரான்
மடமகளி ரென்பதன்றே மாதர்க்கெல்லா
நீங்கரிய விறைவனைக்காண் கரியதோர்
நிமித்தியத்தாற் சென்றுவர நேர்ந்தானெஞ்சம். (33)

வேறு.

மானனைதனை மனதினைத்திருந்திடேய வள்ளி
யேனல்காத்திடு புனத்தினிலே கிடவிடைபர்தே
தேனவிழ்ந்திடு நீபமாலிகை யணிசெவ்வே
டானறிந்ததா யெழுந்தனன்கடிதி னிற்றனியே. (34)

317

ஸ்ரீ
கடவுள் துணை.

# ஸுதாரத்னாகரம்

" கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி "

M. A. நெல்லையப்பர்.
பத்ராதிபர்:—

| Vol 1. | FEBRUARY, 1916. | No. 12 |
| --- | --- | --- |
| தொகுதி—1. | 1916 ம் ஸு பிப்ரவரி மீ | பகுதி—12. |

## விசேஷ வர்த்தமானங்கள்.

**மார்ச்சுமாதப் பத்திரிகை.**—ஸுதாரத்னாகரம் அடுத்த மார்ச்சு மாதப் பத்திரிகையில் யுத்த சம்பந்தமான அனேக சித்திரங்கள் (படங்கள்) அழகான கடிதங்களில் அச்சிட்டு சேர்க்கப் படுகின்றன. பூரணமான சில விநோத கதைகளும அச்சிடப்பட்டு வருகின்றன.

**சந்தாநேயர்கள் கவனிக்கவேண்டிய முக்கியமான விஷயம்:**—ஸுதாரத்னாகரம் மார்ச்சுமாதப் பத்திரிகையை ஒருவருஷ சந்தா தொகை ரூபா 1-8-0-க்கு வி. பி. யில் அனுப்பத் தீர்மானித்திருக்கிறோம். சந்தா நேயர்கள் தயவு செய்து ஒப்புக்கொள்வார்களென்று நம்பியிருக்கிறோம். பத்திரிகை வேண்டாதவர்கள் இப் பத்திரிகை கிடைத்ததும் கார்டு மூலமாய்த் தெரிவித்துவிட்டால் வீண்செலவுக் குட்படாதிருப்போம்.

**பழய பத்திரிகைகள்.**—பத்திரிகையை ஒழுங்காக அனுப்பிக்கொண்டிருக்கும்போது சிலர் பத்திரிகை ஒன்றிரண்டு வந்து சேரவில்லையென்று எழுதுகிறார்கள். இப் பத்திரிகை வந்து சேர்ந்தவுடன் முன்வந்து சேராத பத்திரிகைகளுக்குள்ள மாதங்களைக் குறித்தனுப்பினால் அடுத்த மாதம் வி. பி. அனுப்பும்போது, அதனுடன் இனாமாகவே சேர்த்து அனுப்புகிறோம்.

**சென்னையில் சில்லரை வியாபாரர்.**—வடதேசத்திலிருந்து ஒருவகை ஜனங்கள் வந்திருக்கிறார்கள். காபூலியர் என்று தோன்றுகிறது. இவர்கள் கடைகளில் மொத்தமாக கத்தி, பூட்டு இவைகளை வாங்கி தனியில் ஒவ்வொன்றாய் வைத்து விற்கிறார்கள். ஜனங்கள் கூட்டங்கூடி நிற்பதோடு சிலர் அவைகளை வாங்குகிறார்கள்: இம்மாதிரியாக சிலவகுப்பார் செய்து வருகிறார்கள்.

**ஒவ்வொரு ஜாதியாருக்கும் ஒரு பத்திரிகை வேண்டும்.**—ஒவ்வொரு வகுப்பாரும் தனித்தனி ஒரு பத்திரிகை வெளியிட்டு வந்தால் ஒற்றுமை உண்டாவதற்கு ஓர் உபாயமாகும், ஜெள்வரியவான்கள் முற்பட்டு சொற்ப பொருளுதவி செய்து இனத்தார்களிடம் தகுதிக்குத் தக்கவாறு பணம் சேகரித்து முயற்சிக்கவேண்டும். மாதாந்தரப் பத்திரிகை அல்லது இரண்டு

மாதத்துக்கொன்று அல்லது மூன்று மாதத்துக் கொருமுறை யாகவேனு மிருப்பது நலம். அவ்வவ் வகுப்பிலுள்ள ஏற்றத் தாழ்வுகளை சீர்திருத்திக்கொள்ளலாம். ஏழைகளுக்குப் பத்திரிகையை இனாமாக வாவது அல்லது சொற்ப சந்தா ஏற்படுத்தவாவது வேண்டும். பணம் அதிகமாய்ச் சேர்ந்தால் ஏழைகளைப் படிக்கும்படி உதவி செய்யலாம்.

---

சந்தா நேயர்களுக்கு —கடவுள் கிருபையால் நமது கதாரத்னாகரம் பத்திரிகைக்கு இந்த பிப்ரவரிமாதத்தோடு ஒரு வருஷம் பூர்த்தியாவது நேயர்களுக்குத் தெரிந்த விஷயம். யுத்த காரணமாய் பேப்பரின் விலை ஒன்றுக் கிரண்டாய் அதிகப்பட்டுக் கொண்டிருந்தும் உயர்ந்த கிளேஸ் கடிதத்தில் அச்சிட்டு வருகிறோம். இந்தப் பன்னிரண்டு மாதப் பத்திரிகையில், சின்மய சிகாமணி முதற் பாகமும் தீர்த்த மகிமையும் மூர்த்தி தெரிசன மேன்மையும், வேணுகான ரகஸ்யம், இன்னும் சில கிளைக்கதைகளோடு கதாரத்னம் என்று ஒன்றும் ஆக இரண்டு புத்தகங்கள் தயாராயிருக்கின்றன. வள்ளிநாயகி புராணம் இரண்டாவது பகுதியில் பூர்த்தியாகும். இரண்டாம் பகுதியும் அநேக கிளைக் கதைகளுடன் வெளியாகும்.

---

செல்வத்தை உபயோகிக்கும் சிறந்த வழி:—தேசத்தின் முன்னேற்றத்திற்குக் காரணமாயுள்ள கைத்தொழில்கள், விவசாயம், வியாபாரம், இத்துறைகளிலேயே பணத்தை அதிகமாகப் போட்டு, அத் துறைகளில் நாம் விருத்தியடைய வேண்டு மென்றும், தேசத்தின் க்ஷேம லாபத்திற்கு ஆதாரமா யில்லாத, வியாஜ்ய விவகாரங்களில் பணத்தை விரயஞ் செய்யக்கூடாது ஐக்கிய மாகாணத்திலே கோவாபரேடிவ் கான்பரன்ஸானது நேற்றைய்தினம் அலகாபாத்நகரில் கூடியபொழுது, அம்மாகாண லெப்டினெண்ட் கவர்னராகிய ஸர் ஜேம்ஸ் மெஸ்டன், "பணத்தை வியாஜ்யவிவகாரங்களில் வீணாக்காமல், கைத்தொழில் முதலிய விஷயங்களிலேயே பணத்தைப் போட்டு தேசத்தின் க்ஷேமலாபத்தை விருத்தி செய்யவேண்டு" மென்று நன்கு எடுத்துச் சொல்லி யிருக்கிறார். இனி, ஜப்பானியரோ இதுவே தக்க சமயமென்று கருதி, சீனா முதலிய தேசங்களிலும் இந்தியாவிலும் போட்டி போட்டு, வியாபாரத்தைக் கைப்பற்றிவிட முயலும்பொழுது, இந்தியர் அதை நன்குணர்ந்து பணத்தை கைத்தொழில் போன்ற நல்ல விஷயங்களில் செலவிடத் தவறமாட்டார்களென நம்புகிறோம்.

சு. மி.

---

புதிய ராஜப் பிரதிநிதி:—லார்ட் ஹார்டிஞ்சுக்குப் பின்னர் இந்தியாவிற்கு வைஸியராக நியமிக்கப்பட்டிருக்கும் லார்ட் செம்ஸ்போர்ட் கன்சர்வெடிவ் கட்சியைச் சேர்ந்தவராயினும் அவர் லிபரல் கட்சியைச் சேர்ந்தவரைப்போலவே விரிந்த நோக்கமுடையவரென்று தெரிகின்றது. இவர் குவீன்ஸ்லாண்டின் கவர்னரா யிருந்தபொழுது பிரிட்டிஷ் அன்னிய தேச செக்ரிடெரி ஆபீஸின் உத்தாவிற்கடங்காது சுயேச்சையோடு நடந்திருக்கின்றார். அயர்லாண்டிற்கு சுயராஜ்ய சுதந்தரங் கொடுத்தல் வேண்டுமென்னும் கட்சியிற் சேர்ந்தவராயிருந்தார். வங்காளக் கவர்னர் லார்ட் கார்மிக்கேலவர்களும் புதிய ராஜப் பிரதிநிதியைப் பற்றிப் புகழ்ந்து பேசகின்றார். இவற்றால் புதிய ராஜப் பிரதிநிதி இந்தியாவின் தற்கால ஸ்திதியை யநுசரித்த அநுதாபத்துடன் இந்தியாவை அரசாட்சி செய்வார்.

லோகோபகாரி.

---



களினின்று தாரைபோல கண்ணீரானது ஆறாய்ப் பெருகவும், நீறு பூத்தவளாய்நெட்டுயிர்ப்பெய்தி, உதடு துடிக்கவும் கோபங்கொண்டு அடே பறையா! அடாதகாரியத்தைச்செய்து என் குடும்பத்தை அழித்தாயே! பாவிப் பறப் பதரே! கல்வி கற்ற கர்வங்கொண்டு பிராமண னென்று பாசாங்கு செய்யலாமா! கற்ற முட்டாள் உன்னை யன்றி வேறுண்டோ! கற்றால் பெரியவனாவாயா! அற்பனுக்கு அபார விஷயத்தைச் சொல்லிக் கொடுக்க லாகாதெனப் பாரும் சாஸ்திரம் பொய்க்குமா! கழுதையை யெவ்வளவுதான் அலங்காரம் செய்தாலும் குதிரை யாகுமா! நீ படித்து அடைந்த பயனென்ன? எங்களுடன் கலக்க உன் சித்தமுங் கலங்கவில்லையா! உன்னுடன் பேசுவது பெரிய பாவமாகும். நீ செய்த குற்றத்திற்கு தண்டனை வேண்டாமா! பிடி சாபம். "இப்படியே எருமையாக மாறி காட்டில் அலைந்து திரி" என்று கண்களினின்றும் நெருப்புப் பொறி பறக்க, உரத்த சத்தமிட்டுச் சொன்னாள். அதற்கவன் நீ கொடுத்த சாபம் தவறாது. எனக்கு விமோசனமும் சொல்லவேண்டு மென்றான். சுகதேவியும் பகவான் மாலிட உருக் கொண்டு வரும்போது சாபம் நீங்கு மென்றாள். கொஞ்ச நேரத்துக்குள் அந்தப் பறையனும் எருமையாக மாறி கானகம் சென்றான்.

சுகதேவியும் வீட்டிலுள்ள விறகுகளை அம்பாரமாக ஓரறையில் குவித்து அக்னியை மூட்டி, நன்றாய் எரியும்போது குழந்தையை அதில் தூக்கிப் போட்டுவிட்டு, அப் பெண்மணியும் பகவானை நோக்கி "தேவ தேவனே! ஜெகதீசனே! தீனதயாளா! திவ்யநாமனே! பக்தவத்சலா! பரம தயாளா! ஏழைபங்காளா! எம்பெருமானே! துஷ்ட சம்ஹாரா! இஷ்ட பரிபாலனா! ஏழைக் கிரங்கவேண்டும். என்னையனே!" என்று இரண்டு கண்களிலும் நீர் துளிக்கவும் சிரமேற் கரங்கூப்பி, அஞ்சலி அஸ்தளாய், வஞ்சிக்கொடிபோலும் வாடி நின்றனள். அப்போது பகவானும் கருணை பூத்தவராய், அப் பெண்ணுக்கெதிரில் பிரஸன்னமாகி ஏ பெண்மணியே! ஏனிப்படி கலங்குகின்றனை? என்றார். அதற்கு சுகதேவியும் ஸ்வாமி! நீ அறியாததுமுண்டோ? என்னைப் பஞ்சமன் தொட்டுவிட்டானே எனக்கோர் வழியு முண்டா! பகவானே! எப்படியாவது பரிசுத்தமாக்கவேண்டு மென்றாள். அதற்குப் பகவானும் அப் பஞ்சமனால் உன் சுற்றத்தா ரெல்லோரும் அசுத்தமாய்விட்டார்கள். நீ அக்கினியில் பிரவேசம் செய்தால் இந்தவிடத்திலேயே மூங்கில்மரமாக முளைப்பாய். நான் கிருஷ்ணவதார மெடுக்கும்போது அந்த மூங்கிலில் உன்னை ஒரு புல்லாங்குழலாக வெடுத்து ஊதி சுத்திசெய்வேன். உன் குழந்தையை ஒரு மூங்கில் பிரம்பாகச் செய்து சுத்தி செய்வேன். என்று சொல்லி அந்தரத்தில் மறைந்தார். சுகதேவியும் அக்னியில் பிரவேசமானாள். அந்த அக்கினி அவ்வூரை அன்றியே பரிசுத்தமாக்கியது. இப்பொழுது அந்த விடம் மூங்கிற்காடாய் இருக்கிறது. அதிலிருந்து தான் பரம கிருபாநிதியாகிய பகவான் புல்லாங்குழல் செய்திருக்கிறார் என்று நாரதமுனிவர் சொல்ல ருக்மணி, சத்தியபாமா இருவரும் இரகஸ்யத்தை யறிந்து களிப்புற்றார்கள். நாரத பகவானும் விடைபெற்று தன் வழி சென்றார். சுபம். சுபம். சுபம்.

இவ்விஷயத்தை வட தேசத்தார், ஒருவர் சொல்லக்கேட்டோம்.

புராணங்களில் எவ்விதம் வெளியாயிருக்கிற தென்பதை அன்பர் எவரேனும் தெரிவிக்கக் கோருகிறோம்.

பத்ராதிபர்,

கதாரத்னாகரம்,

மதராஸ்.

# இராஜலக்ஷ்மி
## அல்லது
# பதிவிரதா மகத்துவம்.

## முதல் அத்தியாயம்.

இந்தியாவில் பிரதான நகரம் கல்கத்தாவென்று வெகுகாலமாய் வழங்கி வந்தது. நமது ஜியார்ஜ் மஹா மன்னர் இந்தியாவில் முதல் முதலாக விஜயம்செய்து டில்லிமாநகரில் மகுடாபிஷேகம் செய்த கொண்டாட்ட முதற்கொண்டு டில்லிநகர் பிரதானமாகச் செய்யப்பட்டிருக்கிறதென்பது யாவரும் அறிந்த விஷயம். இந்நகர் பிரதானமாயிருக்கிறது இப்பொழுது மாத்திரமல்ல. இந்தியாவை மகம்மதியர் ஆட்சிபுரியுங் காலத்தில் டில்லி நகரை பிரதானமாகக் கொண்டிருந்தார்கள். அக்காலத்தில் சக்கரவர்த்தி அங்குவசித்து வந்தார்களென்றால் அதின் அருமை, பெருமைகளையும், நகரச் சிறப்பையும் எடுத்தெழுதவும் வேண்டுமோ! இப்பட்டணத்தின் தடாகம் நிறைந்த செழுநிறச் சோலைகள் தோறும் கருநிறக் குயில்கள் கானம்பாடவும், பலவித மரங்களினொழுங்குபெற்ற பசுநிறச் சாலைகள் தோறும் பார்வைக்கினிய அதிவிசித்திராலங்கார சோபிதமான அநேக கண்களையுடைய நீண்ட கலாபங்களை விரித்துப் பச்சை மயில்களாடவும், சன்னமாக விளைத்த இனிய தாதுக்களினின்றெழும் சப்த சுரங்களையும் பாடவல்ல கண்டத்தொனி பெற்றக்கின்னரவிசைபோலப் பண்படும் அறுகாற்பறவைகள் எங்கும் ரீங்காரித்தாலாபிக்கவும், மாங்கொத்தி முதலிய பக்ஷிகளெல்லாம் மத்தள தாளம் தத்திமவென்று தாங்கிப் போடவும் எங்கே பார்த்தாலும் மங்களகரமாய் இலையா நாட்டங்கொண்ட இலக்ஷ்மி வாசஸ்தலம் போலிருந்தது. இதில் அநேக மாடமாளிகைகளுங் கூடகோபுரங்களும் சபா மண்டபங்களுங் கொலுக்கூடங்களும் பார்ப்பவர் மனதை மகிழ்விக்கத் தக்கதாயிருந்தன. இந்நகரில் அக்பர் சக்கரவர்த்தி அரசுபுரிந்து வந்ததை இந்துதேச சரித்திரத்தில் படித்திருக்கிறோம். அவர் காலத்தில் நடந்ததோர் சரித்திரத்தை இங்கு வெளியிடுகிறோம்.

தென் இந்தியாவிலும் மத்திய மாகாணங்களிலுமுள்ள அநேக அரசர்கள் டில்லியிலுள்ள சக்கரவர்த்திக்குக் கப்பங்கட்டி வந்தார்கள். சில அரசர்கள் கப்பங்கட்டி வருவதோடு வருஷத்தில் மூன்றுமாதம் டில்லியில் வந்திருக்க வேண்டுமென்றும் சட்டம் ஏற்பட்டிருந்தது. சக்கரவர்த்தியின் உத்தரவு படியே அரசர்களெல்லாம் கீழ்ப்படிந்துவந்தார்கள்.

ஒருநாள் சபாமண்டபத்தில் அநேக சிற்றரசர்களும், பிரபுக்களும் வீற்றிருக்கும்பொழுது அக்பர் பக்கத்திலுள்ள பாதுஷாவென்னும் பெயருள்ள நண்பரை யழைத்து இக்காலத்தில் கற்புள்ள மாதர்களும் இருக்கிறார்களாவென்று கேட்டார். அதற்கு அவர், அரசே! கற்புள்ள ஸ்திரீயென்பது சொல் மாத்திரமாய் பரவுகின்றதேயன்றி, நானறிந்த வரை



யில் இவ்விந்த தேசத்தில் இல்லவேயில்லையென்றார். ஏ நண்ப! என்ன அந்தப்புரத்திலுள்ள ஸ்திரீகளையும் அப்படியே நினைத்துவிட்டாயாவென்றார் அரசன். மன்னிக்கவேண்டும் அரசே! அந்தப்புரத்தில் நடக்கும் சில விநோதங்களை தாங்கள் மாறுவேடம் அணிந்துவந்தால் காணலாம் என்று மெதுவாகச் சொன்னார். அதற்கு அரசன் மௌனம் சாதித்து ரகஸ்யமாய் விஷயங்களை விசாரித்தார். பாதுஷா அடையாளங்களோடு சில விஷயங்களைத் தெரிவித்ததும் 'இருக்கலாம்' என்று நினைத்து மற்றோர்நாள் அரசனும் பாதுஷாவைப் பார்த்து, கற்புடைய ஸ்திரீ இல்லையென்பதே உமது அபிப்பிராயமாவென்றார். கற்புடையவள் என்று எந்த ஸ்திரீ சொல்லப்படுகிறாளோ அவள்தான் ஒழுங்கீனத்தில் முதன்மையாயிருப்பாள். ஆகையால் எந்த ஸ்திரீயையும் நம்பலாகாது என்றார். அரசனும் அதைக்கேட்டு ஆச்சரியமடைந்து, ஆஹா! கற்பைப் பற்றி கங்கு கரையின்றி கற்றேனே! என்று வருந்தினார்.

அச்சபையிலிருந்த சாம்ராஜ் என்னும் ஒரு க்ஷத்திரியனெழுந்து அரசனை வணங்கி, சூரியன் உதிப்பதும் அஸ்தமிப்பதும் கற்புடைய ஸ்திரீகளாலேயென்று சொல்வது உண்மையேயாகும். கற்பின் மகிமையை கற்புடைய ஸ்திரீகளிடம் காணலாம். இப்பொழுது அமராபுரிக்கு அரசனான பிரதாப்சிங் இச்சபையில் இருக்கின்றனர். எனது உண்மையான நண்பர். அவரது பத்னியாகிய ராஜலக்ஷ்மியைப்போல் எங்கும் பார்த்ததுமில்லை கேட்டதுமில்லை. கற்பென்பது சாமான்யமான தன்று. அதற்குரிய லக்ஷணங்கள் பலவுண்டு. ஒன்றையேனும் விடாது அதன்படி நடப்போருக்குத் தான் கற்பின் தன்மையுண்டாகும். என்றாலும் பிரதாப்சிங்கின் மனைவியை அவரல்லாத காலத்தில் எந்த மனிதனும் கண்டுவிட முடியாது. அப்பெண்மணியின் விசேஷத்தை அந்நகரில் அறியாதாரில்லை. என்று சொல்லிக்கொண்டிருக்கும்போது, பாதுஷா இடத்தைவிட்டெழுந்து அரசனைநோக்கி, சொல்வதெல்லாம் வீண் வார்த்தை அப்பேர்ப்பட்ட பெண்ணையும் என் வசப்படுத்த அதிக காலம் ஆகாது என்றார்.

இதைக்கேட்ட பிரதாப்சிங் பாதுஷாவைநோக்கி-அபாரமான இவ்விஷயத்தை உதாசினமாய் பேசவேண்டாம் உம்மால் முடியாத காரியம் என்றார். அதற்குப் பாதுஷா — உன் மனைவியை என் வசமாக்கி விட்டால் என்ன தருவாய் என்று பந்தயம் கூறினார். அதற்கு பிரதாப்சிங் நீ அப்படி செய்துவிட்டால் என் சிரசைக் கொடுக்கிறேன். நீர் தோற்றுவிட்டால் உமது சிரசை கத்திக்கிரையாக்க வேண்டும் என்றார். இப்படியிருவர் வாதம் செய்வதைக்கேட்டு அக்பர் ஒரு தீர்மானஞ்செய்தார். அதாவது தோற்றவரை தூக்கிலிடப்படும் என்றார். பிரதாப்சிங் ஒப்புக்கொண்டார் பாதுஷா சில நிபந்தனை வேண்டுமென்றார். அக்பர் சக்கரவர்த்தியு மிணங்க, மூன்றுமாதகாலம் வேண்டுமென்றும் பிரதாப்சிங்கை கடிதப் போக்குவரத்தின்றி பந்தோபஸ்திலிருக்கச் செய்ய வேண்டுமென்றார். அரசனும் பிரதாப் சிங்கும் ஒப்புக்கொண்டார்கள். பாதுஷாவும் விடைபெற்று வேண்டிய திரவியங்களோடு அமராபுரிக்குச் சென்றார்.

## இரண்டாவது அத்தியாயம்.

அமராபுரி அழகிற் சிறந்த நகர் அரசனெப்படியோ குடியுமப்படியென்பதுபோல அவ்வூர் ஜனங்களெல்லாம் அரசனுடைய அன்புக்கு பாத்திரர்களாயிருந்தார்கள். எல்லா விதத்திலும் நன்மையையே யளிக்கவல்ல இந்நாட்டில் நெடுந்தூரக்காட்சியாய் நீண்டமலை செறிவுற்று களை

யாறு சூழவுங் கருத்தமேகங்கள் பெருத்த கர்ச்சனைகளோடுங் கார்காலம் போலெங்குஞ் சூழ்ந்து உருண்டு பருத்துநீண்ட யானைத்துதிக்கைகொண்டு ஓயாது தாரை தாரையாக மாதமும் மாரி பொழியவும் செழிப்புற்ற அந்த அமராபுரியில்,

"காவெலாங் குயில்கள் கூவுங்
 காடெலாம் விளையுஞ் செந்நெல்
மாவெலா மடர்ந்த சோலை
 மயிலெலா மாடல் செய்யு
மாவலா யலர்ந்த புட்பத்
 தளியெலா மூறு மெங்குங்
காவலா ரிடங்க டோறுங்
 கறங்குமா முரச வோதை"

இப்படியாகச் சகல வைபவக் காக்ஷியாயிருந்தது.

அரசபத்னியாகிய ராஜ லக்ஷ்மியும் ஏகாந்தமான அரண்மனையில் ஒரே பக்கமயுள்ள எட்டு வாசல்களமைந்துள்ளதும் போர் வீரர்களால் பாதுகாக்கப்பட்டும், அநேக ஸ்திரீகளும் சில விடங்களில் காவல் புரியவும் மத்தியிலுள்ள சிங்காரமண்டபத்தில் தேவோபாசனை செய்துவந்தாள். இந்த ராணியைப் பார்க்கப் பாக்கியஞ் செய்தோருக்கு பக்தியுண்டாகும். பகவானை பூஜிக்காதிராள். எந்த வேலை செய்தபோதிலும் பகவன் நாமத்தை மறவாள். தமிழ் நாட்டிலே திருவள்ளுவர் சரித்திரத்தை யாவரும் படித்துங்கேட்டுமிருக்கலாம். அதில் வாசுகியைப் பற்றிச் சொல்லியிருப்பதெல்லாம் இராஜலக்ஷ்மிக்கும் சொல்லத்தகுமென்றால் அவளது குணத்தையெழுதவும் வேண்டுமோ! பிரதாபசிங் வெளியூருக்குச் சென்றால் காவலர்களை ஜாக்கிரதையாயிருக்கச் செய்து தனது உத்தரவின்றி எவரையும் உள்ளே விடக்கூடாதென ஆக்ஞாபிப்பது வழக்கம். அரசன் டில்லிக்குப் போனபோது அவரது வஸ்திரத்தையும் பட்டாக் கத்தியையும் வைத்து தினந்தோறும் பூஜை செய்வாள். பகவானிடம் எவ்வளவு பக்தி செலுத்தினாளோ அவ்வளவுக்குச் சரிசமமாக தனது பர்த்தாவிடமும் அன்பு செலுத்திவந்தாள். இக்காலத்தில் சொற்ப செல்வம் வந்துற்றாலும் மற்றவர்களைக் கவனியாமல் மாயம்போல் அற்ப காரியங்களுக்கும் அநேக வேலைக்காரர்களை வைத்துக்கொண்டு டம்பம் செய்கிறார்கள். அதைப் போலில்லாமல், தன்னுடைய பதவியின்னதென்று அறிந்திருந்தும் தனது பர்த்தாவுக்கு பணிவிடை செய்வதற்கு பாங்கிகளையாவது வேறு புருஷர்களையாவது அனுப்புவதில்லை. தானே பணிவிடை செய்வாள். ஒளி கொண்ட காந்தியும் ஒய்யார நடையும் உள்ளவள். குயில்போலுங் குரலுள்ளவள். மயில்போலுஞ் சாயலுள்ளவள். அவளது ரூபலாவண்யத்திற்கும் அகண்ட அறிவிற்கும் ஆழ்ந்த கல்விக்கும் இவ்வுலகில் எந்த மாதரும் இணையாகார். அவ்வூரில் அரசனது பத்னி ராஜலக்ஷ்மி யென்று எவரேனும் உச்சரித்தால் கடவுளின் திருநாமத்தை உச்சரித்ததாக நினைத்து வணங்குவார்கள். பிரதாப்சிங்கினுடைய நல்லொழுக்கத்தையும், நீதிமுறை வழுவாது அரசியற்றும் பெருமையையும் பற்றிமற்ற நாட்டாரும் நன்றாய் அறிவார்கள். அரசனுக்குத் தகுந்த மனைவியும் வாய்த்தது அவரது பூர்வ புண்ணியமென்பார்கள். இவ்வளவு மகிமை வாய்ந்த அந்நகருக்குள் பாதுஷாவும் வந்துசேர்ந்தனர்.

அஷ்டலக்ஷ்மிவிலாசனுடைய அமராபுரியானது அடுக்கடுக்காய்ப் பத்தி கொண்டு, அமோகமாக வார்ப்பரித்தெழுந்து விநோத வர்ணங்களையுடைய இலைகளை விஸ்த[illegible] வீசி வரையாது கொடுக்கும் [illegible]லைப்போல ரத்னராசிகளை வா[illegible]ந்து வளமைகொண்ட கரைகளை மோதி கருத்தடங்கிய மகா யோகிகளைப்போலத் திரும்பிச் செல்லுந் திரைகளையுடைய ஆழ்ந்த கங்கை சூழ்ந்த இவ்வவனியின் கண்ணே, அநேக



தேசங்களிலும் அதி சிறப்புற்ற அஷ்டதிக்குகளிலும் விநோத வீரர்கள் காவல்பூண்டு, அகன்று நீண்டு ஒழுங்குபெற்ற சாலைகள் முழுதும் பூதாகார வுருவங்கொண்டு பூரித்தெழுந்த ஆலரசு முதலிய அடர்ந்த விருக்ஷங்களாய் நிறையவும் அங்கங்கே அரவு கொண்டுவரிசையுற்று வளமைபெற்ற வீதிகளெல்லாம் வேதசாலைகளும், விநோதமுற்ற சித்ரடாகசாலைகளும், சாலைகளும், மாட மாளிகைகளும், மண்டபங்களும், சாவடிகளும் கொலுக்கூடங்களும் கொத்தளங்களும் பெருத்த கட்டடங்களுமாய் நெருங்கவும், அழகிய ராஜ வீதிகளெல்லாம் அடுக்கு வரிசைகொண்ட அநேக தளங்களையுடையதாய் மனோஹரங் கொண்ட மாளிகையாகத்தானே மாக்ஷிமை கொண்டிருக்கக் கண்டு பிரமித்து நின்றார். தன்னைப் போன்ற மகம்மதியர் யாருமில்லாததைக்கண்டு அவ்வூரார்போல் வேஷங் கொண்டார். தான் கொண்ட காரியம் முற்றுப் பெறாதென்று தயங்கினார். முயற்சி செய்து பார்க்கிறதென்று தீர்மானித்தார். அரசனது மாளிகையைப் பார்க்கச் சென்றார். ஆயிரக் கணக்கான காவலர்களிருக்கக் கண்டார். மிகவும் உயரமாயுள்ள மதில்களைக் கண்டு மயக்கங் கொண்டார். கடைசியாக அரண்மனையில் வேலை செய்வோர்களை நட்பாகச் செய்தனர். தினந்தோறும் ராஜலக்ஷ்மிக்கு புஷ்பங் கொடுக்கும் ஒரு கிழவியின் வீட்டில் தங்கியிருந்து, ஒன்றுக்குப் பத்தாய் பணத்தைக்கொடுத்து, விஸ்வாசத்தை வளரச் செய்தார். ஒருநாள் அந்தக் கிழவியிடம் அந்தப்புர விஷயங்களை விசாரித்தார். [illegible]ம் காவலர்களின் கண்டிப்பை [illegible]ராஜலக்ஷ்மியின் அதிகாரத்தை [illegible] அவளது சிறப்பையும் எடுத்துச் சொன்னான். அதைக்கேட்ட பாதுஷாவானவர் தன்னால் எவ்விதத்திலும் அந்தப்புரம் செல்லமுடியாதென்பதை யுணர்ந்து ஒரு தாசி வீடு சென்றார். அங்கே ஒரு மாதமிருந்து அவ்வீட்டிலுள்ள ஒரு ஸ்திரீயை ராஜஸ்திரீயைப்போல் ஆடையால் அலங்கரித்து, அந்நகர் அரசனது சகோதரியென்று அந்தப்புரம் போகவேண்டுமென்றும் அவளது கற்புக்குப் பங்கம் செய்துவிட சூழ்ச்சி தேடவேண்டுமென்றும் அது முடியாவிடில் ராஜஸ்திரீயிருக்குமிடத்திலுள்ள அடையாளங்களையெல்லாம் கவனித்து வரவேண்டுமென்றும் ஏற்பாடு செய்து அனுப்பினார். இதை பூர்த்தி செய்து கொடுத்தால் ஆயிரம்பொன் தருவதாயும் உறுதி செய்தனர்.

அந்த விலைமாதும் அதற்கு உடன்பட்டு அழகான பல்லக்கிலேறி அந்தப்புர வாயிலுக்குச் சென்று அரசனது சகோதரி தேவசுந்தரி வந்திருக்கிறேன் என்று காவலாளியிடம் சொல்லியனுப்பினாள். அவ்விதமே காவலன் சொல்லக் கேட்ட ராஜ லக்ஷ்மியும் திடுக்கிட்டு, இதுவரை கேட்டிராத விஷயமாயிருக்கிறது எனது பிரிய காதலருக்கு சகோதரி இருக்கின்றாளென இதுவரை யான் கேட்டதில்லையே! மிகவும் அதிசயமாயிருக்கிறது. ஒருக்கால் சகோதரி யிருந்தாலும் ஒரு அரசனுக்குத் தேவியா யிருக்கவேண்டும். தேவ சுந்தரி எவ்வித உடை தரித்திருக்கிறாள் என்றும், ராஜஸ்திரீயைப் போலிருந்தால் அழைத்து வாவென ஒரு தாதியை யனுப்பினாள். அவளும் அங்ஙனமே சென்று பார்க்க ராஜ ஸ்திரீயைப் போல் பல்லக்கிலிருந்தாள். தாதியும் அவளை கைகூப்பி நமஸ்கரித்து, தேவியார் தங்களை அழைத்து வர உத்தரவு செய்தார்கள் என்றாள். எதிர் பார்த்துக் கொண்டிருந்த தேவ சுந்தரியும் சமயம்வாய்த்ததென்று வெகு உல்லாசமாகவே அந்தப்புரம் புகுந்தனள். இராஜலக்ஷ்மியும் எதிர்சென்று நமஸ்கரித்து அழைத்து வந்து பொன்னாசனத்

நிலமைச் செய்து க்ஷேமலாபத்தை விசாரித்தாள். கூச்சமில்லாத மனதுடைய தேவசுந்தரி அதற்குத் தக்கவாறு விடை கொடுத்திருந்தனள். இராஜலக்ஷ்மி தேவசுந்தரியை புன்னகையுடன் பார்த்து தங்கள் அரசனது சகோதரி யென்று இன்றைக்குத்தான் கேட்டேன். தாங்கள் என் அடிக்கடி இங்கு வரலாகாதென்றாள். அதற்கு கபட தாசியும், தன் கணவரை பலதடவைகளில் இவ்விடம் வர உத்தரவு கேட்டும் அனுக்ரஹம் செய்யவில்லை. எனது புருஷரின் குணத்தையறிந்த சகோதரரும்பலகாலும் அழைத்து, வராததால் இருந்துவிட்டார். இப்பொழுதுதான் கருணை செய்து அனுப்பினார். என்றாலும் என் சகோதரரைப் பார்க்க பாக்கியம் செய்தேனில்லை, என்னசெய்யலாம் என்று வருந்துபவள்போல் தலைகுனிந்தாள். அதற்கு லக்ஷ்மி வருத்தப்பட வேண்டாம், இன்னும் ஒருமாதத்தில் வந்துவிடுவார்கள். கவலைப்படவேண்டாம் என்று ஆறுதல் சொன்னாள். இவ்விதமாக ஒருவாரம் கழிந்தது. தேவசுந்தரி பேசும்போதெல்லாம் பல புருஷர்களுடைய லக்ஷணங்களை எடுத்து சிலாகிப்பாள். தேவசுந்தரி முக்கியமாய்க் கருதிவந்த விஷயத்தை அதிக விரிவாய் எழுதுவது நலமல்லவென்று சுருக்கிச் சொல்லுகிறோம்.

பரபுருஷர்களை இச்சிக்கவேண்டுமென்று ஒருதடவை சொல்ல ஆரம்பித்தாள்.

புருஷர்களைப்பற்றிப் பேசும்போதெல்லாம் அருவருப்புக் கொண்டு பொறுமையுடனிருந்தாள். இப்பொழுது சொல்லிய விஷயமோ நாராசம் போலிருந்ததால் கடுஞ்சினங்கொண்டு அம்மா! புருஷர்களைப்பற்றி என்னிடமினி பேசவேண்டாம் என்றாள். அதற்கு தேவசுந்தரி, உனக்குப் பிரியமில்லாத விஷயத்தில் வற்புறுத்த மாட்டேன், நன்மையை யுத்தேசித்துச் சொல்ல வந்தேன் என்றாள். சும்மா விருந்தால் பேருபகாரமாயிருக்குமென்றாள் ராஜலக்ஷ்மி. தேவசுந்தரிதான் பிரயாசைப்படுவதில் பயனில்லையென்று அங்குள்ள பொருள் முதலானவைகளைக் கவனிக்க ஆரம்பித்தாள்.

புருஷனுடைய ஆடையைக் காலையில் எழுந்ததும் கண்ணில் ஒற்றிக் கொள்கிறாள். ஸ்நானம் செய்ததும் அவைகளைப் பூஜிக்கிறாள். பொன் பாத்திரங்களையும் வெள்ளி பாத்திரங்களையும் வைத்திருப்பதைக் கண்ணுற்றாள். இவ்விதமாய்க் கவனித்து வரும்போது ஒரு நாள் ராஜலக்ஷ்மி ஸ்நானம் செய்வதற்கு அந்தப் புரத்திலுள்ள சிறு தடாகத்துக்குச் செல்லும்போது தேவ சுந்தரியும் பின்னோடு சென்றாள்; முதலாவது தேவ சுந்தரி ஸ்நானம் செய்து கரைக்கு வந்தாள். இராஜலக்ஷ்மி ஜலத்தை விட்டு வஸ்திரத்தை யெடுக்கப்படியின்மேல் ஏறினாள். அப்பொழுது அவளது அங்க அமைப்பைக் கவனித்து வரும்போது கபட ஸ்திரீயாகிய தேவசுந்தரி லக்ஷ்மி தொடையிலுள்ள நீண்டதோர் மச்சத்தையும் பார்த்தாள். இதுவரை சேகரித்த அடையாளங்கள் போதுமென்றெண்ணி, தான் வந்து அதிக நாளாய் விட்டதென்று சகோதரன் (அரசன்) இருக்கும்போது இன்னொரு முறை வருவதாகவும் சொல்லி விடைபெற்றுச் சென்றாள்.

---

## மூன்றாவது அத்தியாயம்

தேவசுந்தரியின் வரவை சதாகாலமும் எதிர்பார்த்துக் கொண்டிருந்த பாதுஷா இன்னது செய்வதென்றறியாது ஊரைச்சுற்றி வருவதே ஓர் வேலையாகக் கொண்டார். இராஜலக்ஷ்மியிடம் விடைபெற்ற தேவசுந்தரி அந்தி வேளையில் அந்தப்புரத்தை விட்டு ஊருக்குள் சென்றாள். தன் வேஷத்தை சாமர்த்தியமாய் மாற்றிக் கொண்டு வீடுபோய்ச் சேர்ந்தாள்.



நம்பிக்கை யில்லாமலிருந்த பாதுஷா தேவசுந்தரி வந்திருந்ததைக் கண்டு சந்தோஷத்துடன் அந்தப்புர விஷயங்களைச் சொல்லக்கேட்டார். தேவசுந்தரி இராஜலக்ஷ்மியின் தொடையில்கண்ட மச்சத்தை அலட்சியமாய் நினைத்து சொல்லாதுவிட்டாள். மற்ற விஷயங்களைக் கேட்டு கவலையென்னும் கடலில் மூழ்கினான். இவனது உள்ளக் கருத்தையறிந்த தேவசுந்தரி, ஐயா! இன்னொரு ரகஸ்யமொன்றை சொல்லுகிறேன் அதனால் நீங்கள் மிகுந்த திருப்தியடைவீர்கள் என்றாள். இதைக்கேட்டதும் பாதுஷா உற்சாகத்தோடு, சுந்தரி! இன்னதென்று விபரமாய்ச்சொல் என்று கேட்டார். அதற்கு தேவசுந்தரி, ஐயா! ஒருநாள் இராஜலக்ஷ்மியும் நானும் ஸ்நானம் செய்யப் போயிருந்தோம். அவள் ஸ்நானம் செய்து கரையேறும்போது தொடையில் பச்சை நிறமுள்ள அடையாளமிருக்கக் கண்டேன். இதை அனாவசியமென்று சொல்லாதிருந்தேன் இதோ அவளுடைய மோதிரமும் கொண்டுவந்தேன் என்றாள். பாதுஷா இதைக் கேட்டவுடனே, ஏ இன்பரத்னமே! இதை முதலாவது சொல்லியிருந்தால் இவ்வளவு தூரம் நான் வருந்த வேண்டியதில்லையே யென்று மோதிரத்தை வாங்கிக்கொண்டு, ஆயினும் சமயோசிதமான ரகஸ்யம்தான். ஆனால் அவளது கற்பை எவ்விதத்திலும் உன்னால் அழிக்க முடியவில்லையே. உன் சாமர்த்தியம் அங்கு பயன்படாது போய்விட்டது. காரணம் இன்னதென்று தெரியவில்லை என்றார். ஐயா! கற்புடைய ஸ்திரீயின் மனதை சீக்கிரத்தில் மாற்றிவிடமுடியாது. புருஷனையே தெய்வமாக நினைத்திருக்கிறாள். சதாகாலமும் கணவனையே நினைத்து மிகுந்த அன்போடு பஜிக்கிறாள். வைராக்கிய சித்தமுடையவள். அறிவிற் சிறந்தவள். ஆகையால் என் மாயவலைக்குள் பிடிக்க முடியவில்லை. கற்புடைய ஸ்திரீகளின் சொல்லானது தெய்வ வாக்காய் பலித்துவிடும் என்றாள். இதையெல்லாம் மௌனமாய்க் கேட்ட பாதுஷா தனக்குள்ளே யோசிக்கலானார். நாம் எவ்வளவோ தீர்மானத்தோடு வந்தோம். காரியம் சித்திபெறவில்லை. எவ்விதம் அரசனுக்கு உத்தரம் செய்வேன். யானை தன் தலையில் மண்ணை வாரிப் போட்டுக்கொள்வதுபோல் என் உயிர்க்கு நானே உலை வைத்துக் கொண்டேன். குறித்த நாளும் நெருங்கிவிட்டது. சாமர்த்தியமாய் கற்பை யழித்ததாகவே கபடமாய்ப் பேசிக் காரியத்தை முடிக்க வேண்டுமென்று மனதைத் திடப்படுத்திக்கொண்டு டில்லியை நோக்கிச் சென்றனன்.

---

## நாலாவது அத்தியாயம்.

நல்லவர்களுக்குக் கஷ்டம் ஏற்படுவது சாதாரணமாயிருக்கிறது. குற்றமொன்றும் செய்யாத பிரதாபசிங்னும் காராக்ரஹம் போன்ற தனித்த அரண்மனையில் நான்கு பக்கங்களிலும் காவலர் பாதுகாக்க வாசஞ்செய்து வந்தார். மாதமும் இரண்டுக்கும் மேலாகி விட்டது. இராஜலக்ஷ்மியோ சாதாரண ஸ்திரீயல்ல. நான் இல்லாத காலங்களில் இன்னும் அதிக ஜாக்கிரதையோடிருப்பாள். பாதுஷாவுக்குக் கெட்ட காலம் அணுகிவருவதால் நமது நாட்டுக்குச் சென்றான். என்னைக் கண்ட மாத்திரத்தில் தெய்வத்தைக் கண்டது போல, புன்னகை கொள்வாள் எனக்குள்ள பாக்கியத்துக்கும் ஆனந்தத்துக்கும் அவளே காரணம் என்று இவ்விதம் நினைத்துக்கொண்டிருக்கும் பொழுது ஒரு காவலன் அவர் முன் தோன்றி, பாதுஷா காரிய சித்தியோடு இன்று வந்துவிட்டாராம் நாளைக்கு ராஜசபை கூடும் என்றான். இதைக் கேட்ட அவ்வரசன் அச்சங்கொண்டு

திகைத்து இதுவரை மனப்பால் குடித்தோம் என்று ஆராத்துயரங் கொண்டார். அரசனுயிருந்து அச்சப்பட வேண்டாம், நிதானமாய்க் கவனிப்போம் என்று மனதை சமாதானஞ் செய்துகொண்டார்.

மறுநாள் சபாமண்டபத்தில் சக்கரவர்த்தி அநேக அரசர்கள் பல பிரபுக்கள் முதலானவர்கள் வந்துசேர்ந்தார்கள். பாதுஷா ஜெயங்கொண்டவர்போல் உல்லாசமாயிருந்தார். சக்கரவர்த்தி முதல் மந்திரியைப் பார்த்து பிரதாப்சிங்கை அழைத்துவரச் செய்ய வேண்டுமென்றார். என்றுமில்லாத அவ்வளவு ஜனங்கள் சபையின்கண் இவ்வற்புத விஷயத்தை யறிய வந்திருந்தார்கள். சற்றுநேரத்திற்குள் பிரதாப் சிங்கும் வந்துசேர்ந்தார். ஜனங்களெல்லாம், ஐயோ! என்வீண்வாதஞ் செய்தார். கொஞ்ச நேரத்திற்குள் என்ன விபரீதம் நடக்குமோவென்று அவர் முகத்தைப் பார்த்தார்கள். பிரதாப்சிங் ஓராசனத்திலமர்ந்ததும் நிஸ்ஸப்தமாயிருந்தது. உடனே அக்பர் பாதுஷாவைப் பார்த்தார். அவர் அரசனை வணங்கி எழுந்து நின்றார். பாதுஷா விஷயமென்ன சொல்லுங்களென்றார். காரியசித்தியோடு வந்திருக்கிறேன் என்றார். அக்பர் பிரதாப்சிங்கை நோக்கி நீங்கள் ஒப்புக்கொள்கிறீர்களா வென்றார். அரசே! நன்றாய் விசாரித்தே தீர்ப்புசெய்ய வேண்டும். அவர் சொல்வதை நான் நம்பமாட்டேன் என்றார். அதற்கரசன் பாதுஷா! அதற்கான அடையாளங்களோடு சொல்லென்றார். பாதுஷா பிரதாப்சிங்கைப் பார்த்து, நண்பரே! உமக்காக நான் மிகவுந் துக்கப்படுகிறேன். பெண்களை மாத்திரம் நம்பலாகாது காணும்போது 'உன் உயிர் நீங்குமானால் என் உயிர் தங்காது' என்று சொல்வார்கள். ஸ்திரீகள் திடபுத்தியுள்ளவர்களல்ல, பரபுருஷர்களை இச்சிக்கக்கூடாதென்று எவ்வளவு தான் வைராக்கிய சித்தர்களாயிருந்தாலும் அழகான ஒரு புருஷனைக் கண்ட மாத்திரத்தில் சற்றுவது மனம் விகாரம் அடையாதிராது. உன்னுடைய அந்தப்புர விஷயத்தை நிரூபிக்கிறதாயிருந்தால் உனக்கு அவமானத்தை யுண்டுபண்ணும் மேலும் அதை விவரித்துச்சொல்வது எனக்குக் கண்ணியமல்ல வென்றார்.

இதைப் பொறுமையுடன் கேட்ட பிரதாப்சிங்கு, எனக்காக தாட்சணியம் வேண்டாம் நடந்த விஷயங்களைச் சொல்லுங்கள் என்றார். பாதுஷா தேவசுந்தரியிடம் தான் கேட்ட விஷயங்களையெல்லாம் ஒன்றின் பின்னொன்றாய்ச் சொன்னார். அதற்குப் பிரதாப்சிங்கு தாங்கள் கூறிய வனைத்தும் ரகஸ்யமல்ல, பட்டணத்திலுள்ள சில ஜனங்களுக்குத் தெரியும். தாங்களும் யாரேனும் சொல்லக் கேட்டிருக்கலாம் என்றார்.

உடனே பாதுஷா முன்னிலும் அதிக உற்சாகங் கொண்டவர்போல் மன்னவரே! இதுவரை சொன்னதை யெல்லாம் சொல்லக்கேட்டதென்று புகன்றீர். இனி சொல்லப்போவது ஒன்றுதான் உண்டு. அது மிகவும் ரகஸ்யம். இதையும் சொல்லிவிட்டால் நீங்கள் அதிகமாய் வருத்தப்படுவீர்களே யென்றார். பாதுஷா, நீர் மகா சாமர்த்தியவான் என்று சொல்லக் கேட்டிருக்கிறேன். என்னைப்பற்றி சவலைப்படாமல் பாக்கியாயுள்ளதையும் சொல்லி விடுமென்றார்.

அரசே பஞ்சணையிலன்றி நீர் காணக்கூடாதது. தங்கள் மனைவியிடத்தில் இயற்கையாய் அமைந்துள்ளது, இன்னும் சொல்ல வேண்டுமோ வென்றார். பிரதாப் சிங் இதைக் கேட்கும்போது மனத்தளர்வும் சோகமும் உண்டாக ஆரம்பித்ததென்றாலும், சொல்லி முடியுங்கள் என்றார். உங்கள் மனைவியின் தொடையில் நீண்டதோர் மச்சமிருக்கிறதென்றார் பாதுஷா. இதைக்கேட்ட பிரதாப்சிங் தலை குனிந்தனர். பாதுஷா தன்

கதாரத்னகாரம் விளம்பரம்.

# கேசானந்தம்

## கூந்தல்தைலம்.

கேசானந்தம், பரிமளம் மிகுந்தது அலங்காரத்துக்கு சிலாக்கியமானது. இதைத் தினந்தோறும் உபயோகித்து வந்தால், தேகத்தைப் போஷித்து மூளையைக் குளிர்ந்திருக்கச் செய்து ரோமங்களை உதிராமற் றடுப்பதன்றி, மிருதுவாயும், பளபளப்பாயும், நீண்டு வளரச் செய்யும். ஒரு தடவை வாங்கிப் பாருங்கள். அதன் குணத்தை எல்லோரும் அறியும்பொருட்டு சொற்ப காலம் பாதி விலை அதாவது எட்டணாவுக்குக் கொடுக்கிறோம்.

அமிர்தம் அண்டு கோ.,

தபால் பெட்டி 222, மதராஸ்.

# அமிர்தம் அண்டு கம்பனியின்

இதர

# ஆயுர்வேத ஔஷதங்கள்.

**காசமாத்திரைகள்:**—அதிக உஷ்ணத்தினாலும், குளிரினாலும் உண்டாகும் இருமல், தொண்டையில் சலசலவென்னும் அரவம் தொண்டை கம்முதல் முதலியவைகள் நீங்கும். க்ஷய ரோகங்கள் குணப்படுமென்றால் சாதாரண வியாதியைப்பற்றி சொல்லவும் வேண்டுமோ!

புட்டி 1-க்கு விலை ரூ. 1.

**பற்பொடி:**—இதை சாதாரணமாய் தினந்தோறும் உபயோகிக்கலாம். பல் ஆடுதல், ஈறு கொழுத்தல், ரத்தம் வருதல், வாய் துர்நாற்றம் முதலியவை நீங்கி தந்த சுத்தி யுண்டாகும்.

டப்பி 1-க்கு விலை அணா 4.

**சத்திரப்ரபா:**—வெட்டை முதலிய மேகரோகங்களை நீக்குதற்குச் சிறந்த மருந்து.

புட்டி 1-க்கு அணா 12.

**பால சஞ்சீவி:**—இம் மருந்தை குழந்தைகளுக் கெல்லாம் ஓர் வரப்பிரசாதமென்று சொல்லற்பாலது. பந்து ... ஷக்குட்பட்ட பாலர்களின் பலவிதவியாதிகளை ... தேகாரோக்யத்தைக் கொடுக்கிறது.

200, மாத்திரை கொண்ட புட்டி 1-க்கு அணா 8.

அமிர்தம் அண்டு கோ.,

தபால் பெட்டி 222, மதராஸ்.



யோகிகளின் அனுக்ரஹம் பெற்ற

# சுகானந்த

# மாத்திரைகள்.

## தேகாரோக்கியத்தைக் கொடுக்கும் திவ்ய மருந்து.

இம்மருந்து, ஜீரண சம்பந்தமான தொந்தரவுகளை நீக்கி, ஜீரண சக்தியை விர்த்திசெய்து, வாலிப கோலத்தால் ஏற்படும் மேக ரோகங்களைக் குணமாக்கி நரம்பு ஸ்தானங்களை உறுதிப்படுத்தி தேக சுகத்தையும் தீர்க்காயுளையும் கொடுக்கிறது.

50, மாத்திரைக்கு விலை ரூ. 1.

சொந்தக்காரர்:—

அமிர்தம் அண்டு கோ.,

தபால் பெட்டி 222, மதராஸ்.

ஏஜண்டு:

A. துரைசாமி நாய்க்கர்,

43, மண்ணடி மதராஸ்.

ஊங்காளத்தைச் சேர்ந்த த்யரம்பகானந்கிரி ஸ்வாமி யென்னும் ஓர் யோகியானவர் சுகானந்த மாத்திரைகளை பரிக்ஷை செய்து குணமகத்துவத்தைக் கண்டு, அம்மஹான் செல்லுமிடங்களிலெல்லாம் அநேகருக்கு மேற்கண்ட மருந்தைப்பற்றி ஒரு வருஷகாலமாய் பிரசாரம் செய்து வருகிறார்கள். மருந்தின் பிரபலத்தை யறிய இது வொன்றே போதுமன்றோ!

**Purgative Pills.**

**சுகபேதி மாத்ரைகள்.**

மலப்பிரவர்த்தி யாகாமலிருப்பதே சகல வியாதிகளுக்கும் காரணம். இரவில் படுக்குமுன் இரண்டு மாத்திரைகளை உட்கொண்டால் உபத்திரவமின்றி மலம் நீங்கும்.

விலை புட்டி 1-க்கு அணா 8.

அமிர்த[illegible]ண்டு கோ,

தபால் பெட்டி 222, சென்னை.



கையிலிருந்த மோதிரத்தை அக்பரிடம் கொடுத்து 'அவர் மனைவி அன்புடன் கொடுத்தாள்' என்றார். அக்பரும் திருப்தி யடைந்தார். வாக்குவாதத்தினாலல்லவோ கொலை யேற்பட வேண்டியதாயிருக்கிறது என்ன செய்யலாம். மன்னிக்கவா மென்றால், ஒருவர்க் கொருவர் சபதம் செய்து கொண்டதா யிருக்கிறது. எப்படியிருந்தாலும் பிரதாப்சிங்கைக் கேட்போமென்று, அரசே! உமது அபிப்பிராயமென்னவென்றார். அதற்குத் தான் குற்றவாளி தண்டிக்க வேண்டியது நியாயமென்றார். சற்று யோசனை செய்து சக்கரவர்த்தியை நோக்கி மன்றாதி மன்னரே! ஒரு விண்ணப்பம். என்னைத் தூக்கிலிட வேண்டியதென்றாலும், எனக்கு பத்துநாள் கெடு கொடுங்கள். நான் அமராபுரிக்குப் போய்வருகிறேன் என்று கேட்டார். ராஜசபையில் அநேகர் ஆட்சேபனை செய்தார்கள். அப்பொழுது பிரதாப்சிங்கின் ஆப்த நண்பரான சாம்ராஜ் என்பவர் சக்கரவர்த்தியை வந்தனஞ் செய்து பிரதாப்சிங் க்ஷத்ரிய குல திலகர், ஒருக்காலும் சொல் தவறி நடக்கார். அப்படி யவர் குறித்த காலந்தன்னில்வாராவிடில் யான் அவருக்குள்ள தண்டனையை யேற்றுக்கொள்ள சித்தமாயிருக்கிறேன் என்றார். அக்பர் சக்கரவர்த்தி யதைக்கேட்டு ஆச்சரியமடைந்து, சர் பிரதாப்சிங் தமது பட்டணம் போய்வரலாம். இன்று வியாழக்கிழமையானதால் பத்தாம் நாளாகிய சனியன்று மாலை மூன்றுமணிக்கு பிரதாப்சிங் வராவிடில் சாம்ராஜனை தூக்கிலிடவேண்டுமென்றார். பிரதாப்சிங் வேகமாய் ஓடக்கூடிய குதிரையிலேறிச் சென்றார்.

---

## ஐந்தாவது அத்தியாயம்

உத்தம ஸ்திரீகள், பக்தர்கள் பகவானை இடைவிடாது தியானிப்பது போல், தத்தம் பிராணநாதனைக் கண்ணால் காணக்கூடிய கடவுள் என்று சதாகாலமும் நினைத்துக்கொண்டு பக்தி பண்ணுகிறார்கள். இப்படியிருக்கிற ஸ்திரீ ரத்தினங்களுக்கு மனதில் நினைத்ததெல்லாம் கைகூடுகிறதென்பது நன்கு புலப்படும். புருஷனின் ரூபம் சிந்தையில் குடிகொள்கிறது. பணத்துக்காக பாடுபடும் வேலைக்காரர்கள் எஜமானன் திருப்தியடைய வேண்டுமென்று எங்ஙனம் முயற்சி செய்கிறார்களோ அங்ஙனமே ஸ்திரீகளும் தங்கள் காதலனுடைய கருணைக்கு பாத்திரராக வேண்டுமென்று நடக்கிறார்கள்.

இராஜலக்ஷ்மி தனது நாயகன் குறித்தகாலத்தில் வரவில்லையென்று வருந்தினாள். அவரது ஜன்மதினத்துக்குள் வருவேன் என்றார்களே இன்னும் வரவில்லையே! சீக்கிரம் வரவேண்டுமென்று பகவானைப் பிரார்த்தித்தாள். அரசனோ வரவில்லை. அரசனுடைய பிறந்தநாளில் இராஜலக்ஷ்மி சகல ஆபரணங்களையும் அணிந்து, புருஷனுடைய ஆடைகளை வைத்து புஷ்பங்களால் அலங்காரம் செய்து பூஜைசெய்து கொண்டிருந்தாள். அன்று அநேக ஜனங்களுக்கு அமுதளிக்க ஏற்பாடு செய்யப்பட்டு வெகு விமரிசையாய் நடந்துகொண்டிருந்தது. இராஜலக்ஷ்மி பூஜை முதலானவைகளை முடித்துக்கொண்டு, தனது கணவன் படுக்கும்படியான மஞ்சத்தைக் கண்ணில் ஒத்திக்கொள்வதற்காக வெளியே வந்தாள்.

படிக்கும் பாக்கியவான்களே! கற்புடைய ஸ்திரீயானவள் கணவன் எந்தத்திசை நோக்கிப் போயிருக்கிறானோ அந்தத் திசையில் சயனிக்கும்போது கால்களை நீட்டாள். புருஷனில்லாத காலத்தில் தாங்களிருவரும் சயனிக்கும் மஞ்சத்தில் படுக்கமாட்டாள். அவனுடைய வஸ்திரம், தலையணை முதலிய எந்த வஸ்துவையும் காலில் படும்படி வைக்கமாட்டார்கள்.

என் இவைகளுக் கெல்லாம் இவ்வளவு உன்னத பதவியைக் கொடுக்க வேண்டுமென்றால், அவைகளெல்லாம் தனது பத்தாவை ஞாபகப்படுத்துகிறது. இன்னும் அவருக்குப் பிரியமான பதார்த்தம் எதுவோ அதைஅவரில்லாத காலத்தில் புசிக்கமாட்டாள். அலங்காரஞ் செய்து கொள்ளாள். இக்காலத்தில் வீட்டைவிட்டு வெளியே போகிறதென்றால் ஸ்திரீகள் இயன்றமட்டும் அலங்காரஞ் செய்து கொள்கிறார்கள். புருஷன் எதிரில் தோன்றும்போது அழுக்கு வஸ்திரத்தை யணிகிறார்கள். வீட்டி லிருக்கும்போது எப்பொழுதும் அலங்காரம் செய்து கொள்ளவேண்டு மென்பது எமது கருத்தல்ல. ஆனால்,

"அன்னை தயையும் அடியாள்
(பணியுமலர்ப்
பொன்னினழகும் புவிப்பிறையும்
(வண்ணமுலை
வேசிதுயிலும் விரல்மந்திரி மதியும்
பேசில் இவையுடையாள் பெண்"

இத்தகைய குணங்களோ டிருப்பது நலம். இவ்விஷயம் விரிக்கிற் பெருகும்.

கற்புக் கரசி அவ்விதம் வெளியில் வரும்போது, ஒரு ஸ்திரீ ஓடோடியும் வந்து அரசன் வருகிறார் என்றாள். இதைச் சொல்லி முடிப்பதற்குள் அரசசிம்மமாகிய பிரதாப் சிங் உருவினகத்தியை கையில் ஓங்கி, உடல் நடுங்கவும், மீசை துடிக்கவும், ஏ துஷ்டை! பரம சண்டாளி பெண்களை நம்பலாகா தென்பது உண்மையாய் விட்டதே! உன்னையும் பெண்ணென்று காதலித்தேனே! கொலை செய்து இல்லை யென்றும் சொல்லி விடுவாய்! எனக்கென்று எமனாக வந்தாயா! உன்னைக் கொன்றால் ஸ்திரீஹத்தி வந்து சேரு மென்று கத்திக்கிரையாக்காது விடுகின்றேன் அடிபாதகி இப்படிச் செய்வாயா! உன் முகத்தைப் பார்ப்பதும் பாவம் என்றார். உடனே லக்ஷ்மி அருகிற் சென்றாள். கையால் தள்ளிவிட்டு வாயைத் திறக்காதே நீ அணிந் திருப்பதைப் பார்த்தவுடனே உன் யோக்கியதை வெளியாகி விட்டது. சீச்சி நீ கெட்டாய், என்று சொல்லி உடனே குதிரைமேலேறித் திரும்பினன்.

இதைக்கேட்ட லக்ஷ்மி இடித்தாற்போல் நடுக்கங்கொண்டு இன்னது செய்வதென்பது தெரியாமல் திகைத்து நின்றாள். சற்று நிதானித்து, இதில் ஏதாவது ரகஸ்யமிருக்கவேண்டுமென்று ஆலோசனை செய்து, அவசரநிமித்தம் அந்தப்புரத்தை விட்டு நீங்குகிறேன், ராஜ்யத்தைப் பார்த்துக் கொள்ளுங்கள் என்று ஓர் கடிதமெழுதி மந்திரிக்கு அனுப்பிவிட்டு, புருஷருடை தர்த்து தனக்கு உதவிக்காக நாலு ஸ்திரீகளுக்கும் புருஷர் உடைகொடுத்து ஆயுதமணிந்து குதிரைகளின் மேலேறி குறுக்குவழியாக கானகமார்க்கமாய் டில்லியை நோக்கிச்சென்றாள். வழியில் கள்ளர் தடுக்க அவர்களை வென்று பிரதாப்சிங் டில்லிக்குவர இரண்டுநாளுக்கு முன்னதாகவே வந்துசேர்ந்தாள். அவ்விடத்தில் ஏதேனும் விசேஷமுண்டோ வென்று வினவினள். பிரதாப்சிங் என்னு மரசனை சனிக்கிழமை மாலை தூக்கிலிடப் போகிறார்கள் என்றார்கள். அதற்குள்ள காரணத்தையும் மற்றெல்லா விஷயங்களையுங்கேட்டு பாதுஷா இன்னவர் என்பதையும் அறிந்துகொண்டாள். உடனே முதல் மந்திரி வீட்டுக்குச் சென்று பிரசித்திபெற்ற தாசி வந்திருப்பதாய்த் தெரிவித்தாள். மந்திரியும் உள்ளேவரும்படி உத்தரவு செய்தனர், லக்ஷ்மியும் அவரை புன்னகையுடன் நமஸ்கரித்துநின்றாள். மந்திரியும் அவளை உட்காரச்செய்து பாடும்படி சொன்னார். அவருக்குச் சந்தோஷமுண்டாக இரண்டொரு கீதங்களை விநோதமாகப் பாடினள். மந்திரியும் திருப்தியடைந்து, இதுவரையிப்பேர்ப்பட்ட இனிய கீதங்களைக்



கேட்டதில்லை. மெத்த சந்தோஷம் என்றுஒருதட்டில்பொன்களைவைத்து சன்மானமாகக் கொடுத்தார். அதை வாங்காமல் தனக்கு அளவற்ற செல்வமிருக்கிறதென்றும்தங்கள் போலுள்ள பிரமுகர்களைக் காண வந்தேனேயன்றி வேறல்ல. ஆனால் ஒரு உபகாரம்செய்தால் மிகவும் நலமாயிருக்குமென்றாள். என்னாலாகக் கூடியதைச் செய்கிறேன் என்றார் மந்திரி. அதற்கு இராஜலக்ஷ்மி, அரசனிடமும் பாடுவதற்குப் பிரியமுள்ளவளா யிருக்கிறேன். அதற்கு அரசனிடம் உத்தரவு வாங்கிக் கொடுக்க வேண்டும். மேலும் நாளை மாலைக்குள் பாட்டுக் கச்சேரி நடக்கும்படி செய்தால் பேருபகாரமாயிருக்குமென்றாள். மந்திரியும் அதற்கு இணங்கினார். அவ்விதமே மறுநாள் மந்திரியும் அரசனிடம் அநுமதி பெற்று பகல் இரண்டு மணிக்கு பாட்டுக் கச்சேரி நடத்த ஆரம்பம் செய்யவேண்டு மென்றும் சொன்னார்.

---

## ஆறாவது அத்தியாயம்.

டில்லி நகரிலுள்ள ஜனங்களெல்லாம் சனிக்கிழமை சந்தோஷமின்றி துக்கத்துட னிருந்தார்கள். என்றும் மணி ஒன்றாகியும் பிரதாப்சிங் வரவில்லை. இராஜ சபை கூடிவிட்டது. சபா மண்டபத்தில் செல்வோரெல்லாம் அற்ப விஷயத்தால் மன்னரெல்லாம் புகழும் பிரதாப்சிங் இன்று உயிரிழக்க அதைக் கேட்கவும் நேரிடுமே யென்றும். சிலர் கூட்டங் கூடி ஐயோ! பிரதாப்சிங் அபார சக்தியுடையவன், இவன் புவியை விட்டு நீங்குவானானால் சந்திரனில்லாத மேகம் போலிருக்குமென்றார்கள். இன்னும் சிலர், பாதுஷா சொன்னவை பொய்யாயிருந்தாலுமிருக்கும் அவனை நம்பலாகா தென்றார்கள். இவ்விதமாக சபையும் நிறைந்தது. அரசன், மந்திரி பாதுஷா முதலான எல்லோரும் வந்து சேர்ந்தார்கள். பிரதாப்சிங் வரவில்லை யென்ற விஷயம் பரவியது. இரண்டு மணிக்கு பாட்டுக் கச்சேரி ஆரம்பமாயிற்று. இராஜலக்ஷ்மி, கண்டோர் மனதைக் கவரத்தக்க விஷயமாய் ரத்னாபரணங்களையணிந்து, அரசன் முன் சென்று கை கூப்பி வணங்கி நின்று அவரது உத்தரவுக்கு எதிர் பார்த்திருந்தாள். அக்பர் மந்திரியோடு ஏதோ ஆலோசனை செய்ய மணியும் இரண்டரை யடித்தது. சாம்ராஜ், அரசன் முன் தோன்றி, எனது நண்பர் இன்னும் வராத காரணம் தெரியவில்லை ஆகையால் தண்டனைக்குப் பாத்திரனாயிருக்கிறேன் என்றார். இதைக்கேட்ட அக்பர் சக்ரவர்த்தி தலை குனிந்தார். இதுதான் அடையாளமென்றறிந்து சாம்ராஜ் கொலையாளியோடு தூக்குமரத்தினடிபோய்ச் சேர்ந்தார்.

அரசனது மனச் சோர்வை யறிந்த மந்திரி பாட்டுக் கச்சேரி நடத்த உத்தரவு செய்தனர். இராஜலக்ஷ்மி நான்கு தோழிகள் நான்கு பக்கத்தில் நிற்க, மத்தியில் நின்று பாடிக்கொண்டிருந்தாள்.

இது இப்படியிருக்க தூக்கு மரத்தடியில் கொலைஞர்கள் மணி மூன்றடிக்க ஐந்து நிமிஷங்களிருக்கிறதென்று பார்த்துக்கொண்டிருந்தார்கள். சாம்ராஜ் யாதொரு குற்றமும் செய்யாதவராதலாலும், நண்பருக்காக தன்தலை கொடுக்க வந்திருப்பதாலும், வெகு சந்தோஷமாக மனத் தளர்வின்றி பகவானை ஸ்தோத்ரம் செய்துகொண்டிருந்தார். அவரை தூக்கு மரத்திற்குச்சரியாய் நிறுத்திவைத்து தலையை துணியால் மூடினார்கள். இப்படியிருக்கும்போது தூரத்தில் ஒருவர் எரிக்கின்ற வெயிலுக்கும் இடி மின்னல் காற்றுக்கும், இவைகளை யடுத்த மழைகளுக்கும் எவ்வளவும் சளையாது ஓடி வந்து கொண்டே, சற்று நில்லுங்கள் நில்லுங்கள், கொலை செய்ய வேண்டாம், வந்து விட்டேன் என்ற

சப்தம் செய்தார். இதைக் கவனித்த சேவகர்கள் கொலைஞர்களை தாமதப் படுத்தினார்கள். பக்கத்தில் வந்ததும் பிரதாப்சிங்கென்று அறிந்து ஆச்சரியப் பட்டார்கள். சாம்ராஜனுடைய தலையிலிருந்த துணியை யவிழ்த்து விட்டார்கள். இவ்விஷயத்தை ராஜ சமூகத்துக்கு அனுப்பினார்கள். அக்பர் சக்கரவர்த்தி புதிய உயிர் பெற்றவர்போல் கேட்டு, பாடலைநிறுத்தி உடனே பிரதாப்சிங்கையும், சாம்ராஜனையும் அழைத்து வாருங்கள் என்று உத்தரவுசெய்தார். அப்படியே யிருவரும் வந்துசேர்ந்தார்கள். அரசன் பிரதாப்சிங்கை நோக்கி உம்முடைய மனோ உறுதிக்கும், குறித்த காலந் தவறாமல் வந்து சேர்ந்ததற்கும் மிகவும் சந்தோஷப் படுகிறேன். எனக்கு உம்மை, கொல்ல வேண்டுமென்ற வெண்ணங் கிடையாது. உம்மையிழந்துவிட நேரிட்டதே யென்று அடிக்கடி சிந்தைகலங்குகிறது என்ன செய்வேன். நீர் சற்றுநேரம் பாட்டுக் கச்சேரி முடியும் வரையும் இருக்க வேண்டுமென்றார். அதற்கிணங்கி பிரதாப்சிங் ஓராசனத்தி லமர்ந்தார். இராஜ லக்ஷ்மியைப் பாடும்படி அரசன் உத்தரவுசெய்தார். அவளும்பாட ஆரம்பித்தாள். பிரதாப்சிங் பித்துப் பிடித்தவர்போல் சபையோரை யெல்லாம் பார்த்துக்கொண்டிருந்தார். அப்படிப் பார்க்கும்போது பாடுகிறவளைக் கண்டதும் திடுக்கிட்டு நமது மனைவியா! லக்ஷ்மியா! ஆஹா! உண்மைதானோ வென்று கண்ணைத் துடைத்துப் பார்த்தார். சந்தேகமில்லை, குரலும் ஒத்திருக்கிறது. அதோ! தோழி என்று தோழிகளைப்பார்த்து, லக்ஷ்மி தான் என்று நிச்சயமானதும், அடங்காமல் பொங்குங் கோபத் தீயை, பொறுமையால் அடக்கி அடக்கிப்பார்த்தும் முடியாமல் எழுந்து நிற்பதும், உட்கார்வதுமாயிருந்து இனியிதை யாம் கவனிக்கவேண்டியதில்லை. சற்று நேரத்திற்கெல்லாம் விண்ணுலகம் போவோமேயென்று சற்று நிதானமாயிருந்தார். இனிய கீதங்களைக் கேட்பதிலேயே சபையோர்கள் கவனமாயிருந்தார்கள். மங்களம்பாடி கச்சேரி முடிந்தது. உடனே அரசன் அமைச்சனைப்பார்க்க, ஐந்து தட்டுகளில் பட்டுப்பீதாம்பரங்களையும் ரத்னாபரணங்களையும் நிறைத்துவைத்து, ஐந்து வேலையாட்கள் லக்ஷ்மி முன் வைத்தார்கள். அதற்கு அவள் அரசனைப் பார்த்து, ராஜாதிராஜனே! நான் பிரசித்திபெற்ற தாசி, நடனமாடுவதிலும், பாடுந்திறமையிலும் மிகக் கீர்த்திபெற்றிருக்கிறேன். எனக்கு கடவுளின் அனுக்ரஹத்தாலும் தங்களுடைய ஆசீர்வாதத்தாலும் அளவற்ற செல்வமிருக்கின்றன. மன்னவரே! தயைகூர்ந்து மன்னிக்கவேண்டும். எனக்கிப் பொருள்வேண்டாம். ஆனால் ஒரு வேண்டுகோள், அதைக்கேட்டு விசாரித்தால் எனக்குத் திருப்தியைக் கொடுக்கும் என்றாள். இவள் பேசுவதை சபையோரெல்லாம் கவனமாய்க் கேட்டுக்கொண் டிருந்தார்கள். பிரதாப்சிங்கின் கோபத்துக்கு எல்லையில்லை. உடனே அவளைக் கொன்று விடவேண்டு மென்று எண்ணினார். நமது மனைவி யென்று எவரும் அறியவில்லை என்று ஒருவேளை திடப்படுத்திக்கொள்வார். இவரது கோபம் எத்தன்மையதா யிருக்கு மென்பதை வாசிப்போர்தான் கவனிக்கவேண்டும். அக்பர் சக்கரவர்த்தியும் லக்ஷ்மியைப் பார்த்து, உன்னுடைய வேண்டுகோளைச் சொல் என்றார்.

அதற்கு லக்ஷ்மி அரசே நான் அழகுள்ள தாசி யென்று அநேக பிரபுக்கள் வெகுதூரத்திலிருந்து வருவதுண்டு. ஆனால் எவரும் நிர்மானித்த தொகையைக் கொடுக்காமல் போவதில்லை. ஆனால் தங்கள் சபையிலுள்ள பாதுஷா வென்னும் பிரபு என்னிடம் வந்து நாள் ஒன்றுக்கு 10 ஆயிரம் பொன் கொடுப்பதாய்ச் சொல்லி



மூன்றுநாள் தங்கியிருந்தார். கடைசியாய் கொடுக்காமலே யேமாற்றி விட்டு வந்துவிட்டார் என்றாள். இப்படிச் சொல்லி முடித்ததும் பிரதாப்சிங் ஆஹா பாதுஷா இவளை யெப்படியோ மயக்கிவிட்டான். உண்மை தான் நாம் சாக வேண்டியதுதான் என்று பாம்பின்வாயிற்பட்ட தேரைபோல் துடித்தனன். அக்பர் பாதுஷாவின் முகத்தைப்பார்த்தார். பாதுஷா உடல் நடுங்கி யெழுந்து, கைகட்டி அரசே! நான் ஒன்றுமறியேன். இந்த தாசியை இந்தச் சபையில்தான் முதல்தடவை பார்க்கிறேன் என்றார். இப்படி பாதுஷா சொல்வதைக் கேட்டு, ஆச்சரியப்பட்டு அக்பர் ஏ தாசி! இல்லை என்கிறாரே என்றார். அதற்கவள் அரசே, வந்திருந்தார். பணங் கொடுக்கவேண்டியதா யிருக்கிறதே யென்று பொய் சொல்லுகிறார் என்றாள். பாதுஷா முன்போலவே அரசனை நோக்கி ஐயோ இவள் முகத்தைக்கூட இதுவரைபார்த்தறியேனே! இவள் எந்த ஊர் என்பதுவும் தெரியாதே! என்னசெய்வேன் என்றார். உடனேலக்ஷ்மி அரசனை அவர் சொல்வதை யெழுதி வாங்கி கையெழுத்திடும்படி செய்யுங்களென்றாள். அப்படியே யெழுதி பாதுஷாவினிடம் கையொப்பம் வாங்கினார்கள். அரசே! இது போதாது. கொரான் புஸ்தகத்தைக் கையில் கொடுத்து சத்தியஞ் செய்யச்சொல்லுங்கள் என்றாள்.

பாசாங்கு செய்த பாதுஷாவும் சத்தியஞ் செய்தார். உடனே லக்ஷ்மி தோழிப்பெண்ணைப்பார்த்தாள். அவள் பட்டினால் செய்த கவசத்தை யிட்டு லக்ஷ்மியை மூடினாள் (கோஷா ஸ்திரீ போர்த்துக் கொள்வதுபோல் அணிந்துகொண்டாள்.) இதைப் பார்த்த அரசனும் மற்றுமுள்ள சபையோரும் ஆச்சரியப்பட்டார்கள்.

இதின் ரகசியம் இன்னதென அறிந்து கொள்ள முடியாமல், சற்று நேரத்துக்கு முன் தாசியைப்போல் பேசினாள், இப்பொழுது கோஷா ஸ்திரீயைப்போலிருக்கின்றாள் என்று யோசித்து நீயார் உண்மையைச் சொல் என்றார். அதற்கு லக்ஷ்மி ஒன்றும் பதில் சொல்லவில்லை. ஆனால் தோழி அரசனைப் பார்த்து ராஜேஸ்வரரே! அமராபுரி நகரத்து அரச சிம்மாகிய எங்கள் ரக்ஷகர் பிரதாப்சிங் என்பவர்களின் மனைவி கற்புக்கரசி எங்கள் எஜமானி இராஜலக்ஷ்மி யென்னும் பெயருடையவர்கள். பாதுஷா செய்த துன்பத்தை நீக்க இவ்விதமாக மாறுவேடங் கொண்டு வந்தார்கள் என்றாள். அரசன் இதைக்கேட்டதும் மடைதிறந்த வெள்ளம் போல் மகிழ்ச்சியடைந்து தாயே! உன்னை சாதாரண ஸ்திரீ யென்று எண்ணிவிடலாகாது, உனது திருமுகத்தை ஒருமுறை தரிசிக்க வேண்டும் என்றார். அதற்கு லக்ஷ்மியின் தோழி—எங்கள் அரசரது உத்தரவின்றி இனி யெவருடனும் பேச மாட்டார்கள் என்றாள். உடனே பிரதாப்சிங்கை தனது அருகில் வரவழைத்து, கைலாகுகொடுத்து, உண்மைதான் வெற்றியடைந்தது என்றார். பிரதாப்சிங்குக்குள்ள ஆனந்தத்துக்கு அளவேயில்லை. தனது உயிரைக் காப்பாற்றுவதற்கு எப்படியோ மாறுவேடங்கொண்டு வந்திருக்கிறாள். இதுவரை கேவலமாயெண்ணிக் கோபங் கொண்டிருந்தேன் என்று தனக்குள் திருப்தியடைந்து, அரசன் சொல்லியதற்கு 'கடவுளின் செயல்' என்றார். சபையிலுள்ளோர் புஷ்பங்களை வாரி இறைத்தார்கள். கரகோஷஞ் செய்தார்கள்.

அக்பர் சக்கரவர்த்தி பாதுஷாவை தூக்கிலிட உத்தரவுசெய்தார். பாதுஷா பிரதாப்சிங்கின் பாதத்தைப்பிடித்துக்கொண்டு சரணமையா, உயிர்ப்பிச்சை கொடுக்கப் பிரார்த்திக்கிறேன் என்றார். சரணாகதி யடைந்தோருக்கு உதவிபுரிவது க்ஷத்ரிய தருமமென்று, அக்பரிடம் பாதுஷாவை

மன்னித்து தூக்குத் தண்டனையை ரத்து செய்யும்படி கேட்டுக்கொண்டார். அக்பர் அதைக்கேட்டு, பிரதாப்சிங்கின் உதாரகுணத்தைக் கண்டு வாழ்த்தினார், பாதுஷாவை மன்னித்து நாட்டைவிட்டுப் போகும்படி உத்தரவுசெய்தார். பிரதாப்சிங்கின் உத்தரவால் லக்ஷ்மி கவசத்தை யகற்றினாள். அக்பர் அவளது பாதத்தைத் தொட்டு நமஸ்கரித்தார். உத்தமஸ்திரீ தெய்வத்துக்குச் சமானம், நான் செய்த குற்றத்தை மன்னிக்கவேண்டும் என்றார். பிரதாப்சிங் மன்னிக்கத்தக்க குற்றம் நீங்கள் செய்யவில்லை என்றார்.

இராஜலக்ஷ்மி கவசமணிந்தாள் சபையிலுள்ளோர் எழுந்து நின்று திருக்கோயில்களில் எழுந்தருளியிருக்கும் தேவியைத் தரிசிப்பதுபோல் அடங்கா மகிழ்ச்சியுடனிருந்தார்கள். வெகு உல்லாசமாகவே சபை கலைந்தது. ராஜனும் ராணியும் அக்பரிடம் விடைபெற்று அமராபுரி சென்று சுகமாய் வாழ்ந்து வந்தார்கள். சுபம் சுபம் சுபம் சுபம்.

முற்றிற்று.

# ஓர் புராணக்கதை.

## தானமும் பக்தியும்.

திரிலோகசஞ்சாரியாகிய நாரதமுனிவர் தேவலோகத்துக் கொப்பான ஊரொன்று பூலோகத்தி லிருக்கக் கண்டு அங்கு விஜயஞ்செய்தார். இந்நகரையாளும் அரசனுக்கு எவ்வித குறைவுமிராது. லோக ரக்ஷகராகிய மஹா விஷ்ணுவின் அம்சம் பெற்றவன் போலும். இவ்விதமாக வெண்ணிக்கொண்டு ராஜவீதி வழிசென்றனர். யாழ்வல்லோனென்றறிந்த ஓர் ஏழைப் பிராமணன், அம்முனிவரை நமஸ்கரித்து தேவ! தாங்கள் லோகசஞ்சாரி, எங்கு செல்கின்றீர் என்றனன். அதற்கவர் ஸ்ரீ மஹாவிஷ்ணுவைத் தெரிசிக்கப் போகிறேன் என்றார். பிராமணன் பரம தரித்திரனாயிருந்தபடியால், தனது நிலைமையைத் தெரிவித்து, அன்றன்று போஜனம் செய்வதே கஷ்டமாயிருக்கிறது. ஆகையால் பகவானிடம் என் வறுமை எப்பொழுது நீங்குமென்று கேட்டுவரும்படி சொன்னான். அதற்கம்முனிவரும் ஒப்புக்கொண்டு இராஜனிடம் சென்றார். அரசனும் நாரதமுனிவரை அன்புடன் உபசரித்தார். முனிவர் மஹாவிஷ்ணுவினிடம் போவதையறிந்து தமக்கு வெகுகாலமாய் புத்திரபாக்கியமில்லாததைத் தெரிவித்து, மகப்பேறு உண்டாவென்பதைக் கேட்டுவரும்படி நமஸ்கரித்தார். நாரத பகவானும் சம்மதித்து அவ்விடத்தை விட்டகன்று சென்றுகொண்டிருந்தார்.

வெகுதூரம் சென்றதும் அப்பொழுதுதான் கண்விழித்த ஒரு யோகியானவர் மிகுந்த பசிப்பிணியால் வருந்திக்கொண்டிருந்தார். அம்மகானுபாவர் நாரதரை யழைத்து, நீர் எங்கு செல்கின்றீரோ அவ்விடமிருந்து எனக்கு ஆகாரம் உடனே கொண்டுவரவேண்டுமென்றார். தபோதனரின் உக்ரத்தைச் சகிக்கமுடியாத நாரத பகவான் அதிவேகமாக லோக ரக்ஷகராகிய மஹா விஷ்ணுவினிடம் சென்றார். பகவான் நாரதமுனிவரை யெதிர்சென்றழைத்துவந்து உயர்ந்த பீடத்தைக் கொடுத்து உபசரித்தனர். நாரதமுனிவருக்கு தமக்குகடைசியில்கட்டளையிட்ட யோகியினுடைய ஞாபகமேயிருந்துகொண்டிருந்தது. ஆகையால் மஹாவிஷ்ணுவை நோக்கி தேவ! நாம் சாவதானமாய் எல்லா விஷயத்தையும் பேசிக்கொள்ளலாம். இப்பொழுது ஒரு யோகியின் பசிநோய்தீர ஏதாவது தந்தருளுமென்றார். உள்ளக் கருத்தையறிந்த விஷ்ணுவானவர் அவருக்கு வேண்டிய கனி முதலானவைகளைக் கொடுத்தனுப்பினார், நாரதரும் பகவான் கொடுத்த ஆகாரத்தை யோகியிடம் கொடுத்து விடைபெற்று குளிர்ந்த மனத்துடன் திரும்பினார். முன்போல் விஷ்ணுதேவர் இருக்குமிடம் சென்று உல்லாசமாய்ப்பேசிக்கொண்டிருந்தார். அப்பொழுது ஏழைப் பிராமணன் ஞாபகம் வரவே பகவானை நோக்கி, "தேவாதி தேவனே! நான் வரும்பொழுது ஒரு ஏழைப்பிராமணன் தனது வறுமை தீருவது எக்காலமென்றும், அவ்வூரரசனுக்கு மகப்பேறு இல்லாததால் தனது வாழ்க்கையில் புத்திரபாக்கியமுண்டாமோ" வென தங்களிடம் வினவி வரும்படி கேட்டுக்கொண்டார்கள். ஆகையால் கிருபைகூர்ந்து தெரிவிக்கவேண்டுமென்று பிரார்த்தித்தனர். கருணைக்கடவுளும் அதற்கிணங்கி, அந்த ஏழைப் பிராமணன் அவனது ஆயுள் காலத்துக்குள் ஐந்து ரூபாய் பெறுவானென்றும், அரசனுக்குப் புத்திரப்பேறில்லை யென்றும் சொன்னார். அதைக்கேட்டுக்கொண்டு நாரதமுனிவரும் அவ்வூர் சென்று அரசனிடத்திலும் பிராமணனிடத்திலும் தாம் கேட்டுவந்த விஷயத்தைச் சொல்லிச் சென்றனர்.

ஏழைப்பிராமணன் தனக்கு பகவான் கிருபை இவ்வளவுதான் போலும் என்று மனந் துக்கித்து உற்சாகங் குன்றி கவலையெனும் கடலில் மூழ்கினான். எவ்வளவுதான் துக்கித்தாலும் பசிப் பிணி விட்டகலுமோ சொல்மின்! முன்போலவே பிச்சையெடுத்துண்டு காலங் கழித்தனன்.



ஒருநாள் அவ்வூர் அரசன் தமது பிறந்தநாள் கொண்டாட்டத்துக்காக முதலில் வரும் இரண்டு பிராமணர்களுக்கு ஐந்து ரூபாயும் மற்றவர்களுக்கு இரண்டுரூபாயும் ஆக தக்ஷிணைகொடுக்கும்படி கட்டளை யிட்டிருந்தனர். மேற்சொல்லிய ஏழைப் பிராமணன் ஒரு நாளேனும் ரூபாயைப் பார்த்ததில்லை யென்றாலும் அன்று அவனே முதலாவதாய் நின்றான். தனக்கு இவ்வளவுதான் கிடைக்குமென்று நினைத்தவனுமல்ல. பூரி கொடுப்பவர் வெளியில் வந்ததும் இப்பிராமணனுக்கு ஐந்து ரூபாய் கொடுத்தார். நாரத முனிவர் சொல்லியிருந்தது ஞாபகத்துக்கு வந்தது. பகவான் நமக்கு ஐந்து ரூபாய் தானே கிடைக்குமென்று சொல்லியிருக்கிறார்—சரி இதுவும் நமக்கு வேண்டியதில்லை—என்று அந்தப்பணத்தில் ஒரு வேளை ஆகாரத்துக்கு செலவு செய்து விட்டு பாக்கியாயுள்ள பணத்தை காலணாவாக மாற்றி ஏழைகளுக்குக் கொடுத்துவிட்டான். இவனது உதார குணத்தை யறிந்த பிரபு ஒருவர் மறுநாள் 10 ரூபாய்களைக் கொடுத்து உன் இஷ்டம்போல் செலவு செய்துக் கொள் என்று கொடுத்தார். ஆகாரத்துக்குவேண்டியதை யெடுத்துக்கொண்டு முன்போலவே காலணா வீதம் தர்மம் செய்தான். இப்படிச் செய்து வந்ததால் இவனது தர்மகுணத்தை அவ்வூரார் அறிந்து அநேகர் தர்மம் செய்யும் பொருட்டு இந்தப் பிராமணனிடம் கொடுக்க ஆரம்பித்தார்கள். தர்மம் விர்த்தியாகவே ஒன்றுக் கிரண்டாக செல்வம் வந்து கொண்டிருந்தது. சொற்ப காலத்துக்குள் மனைவி மக்களோடும் பெரும் புகழோடும் வாழ்ந்து வந்தான்.

அவ்வூர் அரசன் தனக்கு குழந்தையில்லையென்பதை எண்ணியெண்ணி சிந்தை கலங்கிக் கொண்டிருக்கும் பொழுது ஒரு நாள் சடைமுடி தரித்த ஓர் சாதுவானவர் அவரது

அரண்மனைக்குள் வந்தனர். சாதுவை நமஸ்கரித்து யாது வேண்டுமென வினவினார். அவர் தனக்குக் கொஞ்சம் ஆகாரம் கொடுத்தால் போதுமானதென்றார். அரசனும் அவர் மனம் குளிரும் வண்ணம் சிறந்த போஜனம் செய்து வைத்தனர். ஆகாரமானதும் அரசனைப் பார்த்து உமது குழந்தையைக் கூப்பிடுமென்றார். அவர் வெட்கித் தலை குனிந்து நின்றார். நீர் மௌனம் சாதிப்பதின் காரணமென்னவென்றார். எனக்கு அப்பேர்ப்பட்ட பாக்கியம் பெறுவதற்கு புண்ணியஞ் செய்தேனில்லை யென்று புகன்றனர். அதற்குத்தபோதனரும், நல்லது உமக்கு ஒரு குழந்தை உண்டாகக் கடவதென்றார். அரசனும் நம்பிக்கையின்றி சகல ஜீவராசிகளையும் ரக்ஷிக்கும் மஹா விஷ்ணுவானவர் எனக்கு புத்திரனில்லையென்று சொல்லியிருக்கிறார் என்றார். என் வார்த்தையை நம்பாததால் உனக்கு இன்னுமொரு குழந்தை பிறக்கக் கடவதென்றார். தேவ ரிஷியாகிய நாரதமுனிவர் இவ் விஷயத்தைத் தெரிவித்தனரே யென்றார். யோகியானவர் மறுபடியும் அரசனைநோக்கி, இன்னும் உனக்கு என்னிடம் நம்பிக்கை யுண்டாகவில்லை யாதலால் மற்றுமோர் குழந்தையையும் பெறுவாய் என்றார். தடுத்துரைக்கும்போது தவசிரேஷ்டரும் ஒவ்வொரு குழந்தையாக அதிகப்படுத்துகின்றனர். இவர் கொடுக்கும் வரம் தவறாது என்று அரசன் தனக்குள் நினைத்து யோகியை உபசரித்து அனுப்பினர்.

இவ்வரசன் சிவபக்தி ஜீவகாருண்யம், பொறுமை, அன்பு, ஆசாரம், ஒழுக்கம், ஊக்கம், சாந்தம், சற்சனநேய முதலான நற்குண முள்ளவன். ஒருநாளாகிலும் திருக்கோயில் செல்லாதிரான். யோகியானவர் கொடுத்த வரம் பூர்த்தியாகவேண்டி கடவுளைப் பிரார்த்தித்தார். அவர் செய்யும் வழிபாட்டுக்கும் வந்தனைக்கும் இரங்கிய பெருமான் புத்திரப்பேறுண்டாகும்படி அனுக்கிரகம் செய்ததால் அரசனது தேவியார் பத்துமாதமுஞ் சென்று நல்ல சுபதினத்தில் தர்மதேவதை தாண்டவமாடவும், வானகத்தார் மலர் சொரிந்து வாழ்த்தவும், வையகத்தார் மனங் களிக்கவும் ஒரு புத்திரனைப் பெற்றார். இவ்விதமே சில வருஷங்களுக்குள் நான்கு குழந்தைகளையும் பெற்று வாழ்ந்துவந்தனர்.

சில வருஷங்கள் கழிந்ததும் நாரத மஹா முனிவரும் அவ்வூர் வழியாய் வந்தார். தர்மத்தால் விர்த்தியானவரும், தர்மப் பிரபு என்று பெரும் புகழ்படைத்த அப் பிராமணன் நாரத பகவான் வீதி வழி வருவதைக் கண்டு எதிர்சென்று அழைத்து வந்து சாஷ்டாங்கமாய் நமஸ்கரித்து நின்றார். முனிவரும் மாளிகை போன்ற வீட்டையும் பல வேலையாட்களையும், மனைவி மக்கள் முதலானவைகளையுங் கண்டு ஆச்சரியப்பட்டு இவை யெங்ஙனம் கிடைத்ததென்றார். அதற்குத் தர்மப் பிரபுவும் தனக்கு 5 ரூபாய் கிடைத்ததையும் கோபங் கொண்டு அதைக் காலணாவாக மாற்றி தர்மஞ் செய்ததையும் ஒவ்வொருநாளும் எவ்வளவு திரவியம் தர்மஞ் செய்யப்பட்டதோ அதற் கிருபங்காக மறுநாள் கிடைத்துவந்தவரலாற்றையும் சொன்னார். சற்றுநேரம் சென்றதும் பிராமணனிடம் விடைபெற்று அவ்வூர் அரசனிடம் சென்றார். அரசனும் மஹாரிஷியை அன்போடு ஆதரித்து, வீற்றிருக்கச் செய்தார்.

இப்படியிருக்கும்பொழுது மூன்றாவதான 5-வயதுக் குழந்தை அப்பாவென்றோடி வந்தது. அரசன் யாழ்வல்லோனை ஸ்துதித்து தாங்கள் இந்நகருக்கு வந்ததினால் பாவங்களினின்றும் புனிதமானேன். தங்கள் தரிசன பலத்தால் நான்கு மகப் பேற்றையும் அடைந்தேன் என்றார். அது கேட்டு ஆச்சரிய மடைந்து நடந்த விஷயத்தை வினவினார். அரசனும் பசிப்பிணி




# Reliable Silk House !

நம்பிக்கையும், நாணயமும், சகாயமுமான
பட்டு வர்த்தக சாலை எது?

காசி (பனாரஸ் ஸிட்டி)யில் பிரபல பட்டு வர்த்தகர்களாகிய

**கே. எஸ். முத்தையா அண்டு கம்பெனி,**
**என்று தெரிந்து கொள்ளுங்கள்.**

இங்கு அனேக நவீன கலர்களில் புதிது புதிதான மாதிரிகளில் பட்டு புடவைகள், ரவிக்கைக், குட்டைகள், தாவணிகள், பிள்ளை, (பஸ்க்காரு) வேட்டிகள், தலைகுட்டைகள், நார்மடி புடவைகள், நார்மடி வேட்டிகள், காஞ்சீபுரம், சேலம் நூல் வேட்டிகளில் நிசவு செய்வித்து வருகிற மாதிரிகரைகளோடுள்ள வெண்பட்டு தோவத்தி, அங்கவஸ்திரம், ஸோமன் ஜோடி முதலிய பல விதமான பட்டாடைகளும் விற்பனைக்கு சித்தமாக விருக்கின்றன.

நீங்கள் கொடுக்கும் பணத்துக்குச் சரியான மதிப்போடுள்ள வஸ்துகளை வாங்கப் பிரியப்பட்டால் உடனே காசி. கே. எஸ். முத்தையா அண்டு கம்பெனிக்கு எழுதுங்கள். உங்களுக்கு விபரமான கேட்லாக்கு வேண்டுமானால் உடனே உங்கள் விலாசங்களை தெரிவியுங்கள். அடுத்த தபாலில் கேட்லாக் தங்களுக்கு வந்து சேரும்.

**K. S. Muthiah & Co.,**

*Vasaswameda Road,* **"Silk House"**
**BENARES CITY.**

# H. A. காலிக் & சன்ஸ்

2-173, பிராட்வே, மதராஸ்.



| | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|
| வாக்வம் பிலாஸ்குகள் 1-பயிண்ட் சயிஸ் யெனமல் அண்டு லெதாட் பிலாஸ்கு ... | 3 | 0 | 0 |
| ஷை நிக்கல் ... | 5 | 0 | 0 |
| 1½-பயிண்ட் சயிஸ்கு பிலாஸ் லெதாட்சவர் ... | 4 | 8 | 0 |
| ஆட்டோ கோல்ட் மேகர் 1-பயிண்ட் நிக்கல் அண்டு எனமல் பிலாஸ்கு ... | 6 | 0 | 0 |
| 1-பயிண்ட் உயர்ந்த குவாலிடி பிலாஸ்கு நிக்கல் ... | 8 | 0 | 0 |
| மேற்படி பிலாஸ்குகளுக்கு கிலாஸ் கார்க்கு வேண்மோனல் ரூபாய் 1-அதிகம். ஷை பிலாஸ்குகள் ரொம்பவும் காரண்டி யுள்ளது. லெதர் பொம்மைகள். ... | 1 | 4 | 0 |

பெறல் மோஹன் ஹார்மோனியம் மேற்படிக்கு வேண்டிய சாமான்களும், லெதாட் சூட்கேஸ், துவால் குட்டைகள், பெட்ஷீட்டுகள், ரோல்ட்கோல்ட் செயின்வகையறுக்கள், ஜெப்பான் பனியன்கள், பிரம்பு பாஸ்கட்டுகள், சில்லரைச் சாமான்களும் விற்கப்படும். வெளியூர் ஆர்டர்களுக்கு அட்ரஸ் சரியாகவும் ரயில்வே ஸ்டேஷன் போஸ்டாபீஸ் பேர் சரியாகவும் தெரிவிக்கும்படியாய்க் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

## லெதர் பாக்குகள் (தோல் பைகள்).

சதுர்பாக் (ஸ்தயர்பாக்)

14-இன்ச் ரூ. 11-6
16-இன்ச் ரூ. 13-2.
18-இன்ச் ரூ. 14-8.

பிரிப் பாக்.

14-இன்ச் ரூ. 8-8.
16-இன்ச் ரூ. 9-8.



18-இன்ச் ரூ. 10-8.

கிலாஸ்டன் பாக்.

20-இன்ச் ரூ. 22.
2?-இன்ச் ரூ. 24-6
24-இன்ச் ரூ. 26-12.
26-இன்ச் ரூ. 29-2

## GOLD MEDAL "CAMP COTS.

கோல்டு மெடல் காம்பு காட்.



(கபில) ப்ரௌன் கலர் விலை ரூ. 9 0 0
பச்சைக் கலர் லெதர் டிரேப் உள்பட ரூ. 9 8 0
யான்கி காட் Yankee Cots (Brown) கபில வர்ணம் விலை ரூ. 9 0 0
பச்சைச் கலர் லெதர் டிரேப் உள்பட ரூ 9 8 0
பெட்டிங் ரூ 4 0 0
பிட்டிங் பிரத்தியேகம் ரூ 2 4 0
Bag ரூ 1 8 முதல் 2 4 0




நீங்க ஒரு யோகி வந்ததையும் தனக்கு பிள்ளை வரங் கொடுத்ததையும் சொன்னார். கொஞ்ச நேரம் தாமதித்து முனிவரும் அவ்விடம் விட்டுப் புறப்பட்டு, பகவான் தன்னை பொய்யனாக்கி விட்டனரென்றெண்ணி வைகுண்ட வாசனிடம் சென்றார். மகா விஷ்ணுவும் அவரை எதிர் சென்று வணங்கி அழைத்து வந்து தமதாசனத்திலிருக்கச் செய்து லோக சஞ்சாரியானதால் யாதேனும் விசேஷமுண்டா வென்றார். அதற்கு நாரத முனிவரும்—நான் முன் ஒரு தடவை வந்திருக்கும் போது ஏழைப் பிராமணன் செல்வத்தோடு வாழ்ந்திருக்கவும், அரசனுக்கு புத்திரனுண்டாக வகையுமுண்டா வென்று கேட்டேன். அதற்குத் தாங்களும் பிராமணனுக்கு 5 ரூபாய் கிடைக்கு மென்றும், அரசனுக்குப் பிள்ளை யில்லை யென்றும் சொன்னீர்களே! இப்பொழுது அந்த ஏழைப் பிராமணன் தர்மப்பிரபுவாய் விளங்குகின்றான். அரசனுக்கோ வென்றால் நான்கு குழந்தைக ளிருக்கின்றனவே யென்றார். விஷ்ணுபகவான் தான் கொடுக்கவில்லையென்றும் பிராமணன் தர்மஞ்செய்து வந்ததால் அபிவிர்த்தியுண்டாயிற்றென்றார். அப்படியானால் அரசனுக்குக் குழந்தைகளே தென்றார் நாரதமுனிவர். அதற்குப்பகவான் தன்னுடைய பக்தனொருவன் பாக்கியமுண்டாகச் செய்தானென்றார். அப்பேர்ப்பட்ட பக்தன் எங்கேயிருக்கிறானென்றார். அவனிருப் பிடத்தைக் கண்டுகொள்ள ஓர் உபாயம் சொல்லுகிறேன். தவம்புரியும் ஒவ்வொருவரிடமும் சென்று விஷ்ணு பகவானுக்கு சிரநோயுண்டா யிருக்கிறது; அதை நிவர்த்திக்க உமது தலை வேண்டுமென்று கேட்கவேண்டும். எவரொருவர் மறுமொழி புகலாது தனது சிரசைக் கொடுக்கிறாரோ அவரே எனது பக்தராவரென்றார். அவ்விதமே நாரத முனிவரும் ஒவ்வொரு தபோதனரிடமும் சென்று பகவான் சொல்லியவாறு சிரசைக்கேட்டார். சிலர் கடுஞ்சினங்கொண்டார்; சிலர் புடைக்கச் சென்றார். கடைசியாக ஒருவிருத்தர் சடைமுடி தரித்து நிஷ்டை கூடியிருந்தார். தெளியும் வரையிருந்து பகவானுக்கு தலைநோய் உண்டாயிருக்கிறது அப்பிணியை நிவர்த்திக்க தங்கள் போலுள்ள முனி புங்கவரின் சிரம் வேண்டுமென்றார். அப்படியாவென்று சொல்லி தன் தலையை வெட்டிக் கொடுத்தனர். அதனைக்கொண்டு பகவானிடம் சேர்த்தனர். விஷ்ணுதேவரும் இவர் தான் பக்தனென்றார். நன்கு விளங்கவில்லையென்று நாரதர் விரித்துரைக்க வேண்டினர். இவர் தான் தங்களிடம் முதல் தடவை ஆகாரம் கொண்டு வரும்படி அதட்டி யனுப்பினவர். இந்த பக்தன் ஒரு நாள் அவ்வரசனிடம் சென்று பசிநோய் நீக்கி புத்திரபாக்கியத்தைக் கொடுத்தனன். என்னை விட மிகுந்த சக்தியையுடையவன். நான் தொண்டருக்கடியேன் என்பது தங்களுக்குத் தெரியாத விஷயமன்று. இந்த பக்தரின் ஆத்மா சரீரத்தைவிட்டு நீங்கவில்லை யாகையால் உடனே சிரசை பொருந்தும்படி செய்யுங்களென்றார். முனிவரும் சிரசையெடுத்துச் சென்று சரீரத்தோடு பொருந்தும் படி வைக்க, தலையும் ஒட்டிக் கொண்டது. யோகியும் முன்போல் தவஞ்செய்ய ஆரம்பித்தார்.

# கதாவிநோதமாலை.

முன் ஒருகாலத்தில் தேவபுரம் என்று ஒரு நகரம் இருந்தது. அதில் பங்கஜவர்மா என்றொரு பார்த்திபன் பரிபாலனம் செய்துகொண்டிருந்தான். அந்நகரத்தில் உயர்குலத்தில் உதித்த பங்கஜலோசனன் என்னும் ஒரு அந்தணன் வசித்துக்கொண்டிருந்தான். அவ்வந்தணனுக்கு அவனுக்கேற்ற நாணமும் நல்லொழுக்கமும் பொருந்தியவளும், மற்றொரு ஸரஸ்வதியென்றும், லட்சுமியென்றும், சொல்லத்தக்கவளுமான தேவமதியென்னும் ஒரு மனைவியிருந்தாள். தேவமதி வயிற்றில் ஸர்வ லக்ஷண ஸம்பன்னனான ஒரு புத்திரன் பிறந்தான். அவன் பிறந்தகாலத்தில் ஆகாசவாணி "பங்கஜலோசன! உனது புதல்வனுக்கு பூபாலன் என்று பெயர் இடு: அவன் அரசனாகிப் பூமியை ஆளுவான். உனக்கு அதனால் நிச்சயமாய்ச் சுகமுண்டாகும்" என்று கூறினாள்.

பங்கஜலோசனன் புத்திரன் பிறந்ததை மிகச் சிறப்பாகக் கொண்டாடி ஆகாசவாணி கூறியபடி அவனுக்குப் பூபாலன் எனப் பெயர் வைத்தான். பின் அப்புத்திரன் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து சகல கலைகளும் கற்று அஸ்திர சஸ்திரப் பயிற்சியில் மிகுந்த வல்லமையைப் பெற்றான்.

இதற்கு மத்தியில் பங்கஜலோசனன் பத்தினியாகிய தேவமதி, ஸர்வாங்க சுந்தரியான ஒரு பெண்ணைப் பெற்றான். அவள் லாவண்யத்தைக் கண்டு திலோத்தமையும் பொறாமை கொண்டாள். அவளுக்குப் பங்கஜவதனை எனப் பெயரிடப்பட்டது.

பூபாலனும் பங்கஜவதனையும் தமது தகப்பன் வீட்டில் வளர்ந்து வந்தனர்.

இவ்வாறு சில வருஷங்கள் சென்றபின் அந்நாட்டில் மழையில்லாமையால் சூரியகிரணங்களால் பயிர்கள் யாவும் தகிக்கப்பட்டுப் போயின; நாடு முழுவதும் நீலநிறம் பரவியது; அப்பஞ்சத்தின் கொடுமையால் அரசன் தரும மார்க்கத்தை விட்டுத் தன் குடிகளிடமிருந்து பணம் பறிக்கவும், அவர்கள் பொருளைக் கொள்ளையிடவும் ஆரம்பித்தான். அப்பொழுது தேவமதி தன் பர்த்தா பங்கஜலோசனனைப் பார்த்து "பிராணநாதா! நாம் இங்கேயே இருந்துகொண்டிருந்தால் நமது குழந்தைகள் பசியால் இறந்து போனால் என்னசெய்வது? ஆதலால் நாமெல்லோரும் எனது பிறந்த அகத்துக்குப் போவோம்" என்றாள். பங்கஜலோசனன் அதனைக்கேட்டுத் தன் நாயகியை நோக்கி, "இவ்வித பஞ்சத்தில் பெரிய வீட்டிலிருந்து வெளியிற் புறப்பட்டுப் போதலும், அதைக் காலி செய்வதும், மிகவும் தவறு. ஆதலால் நான் இவ்விரண்டு குழந்தைகளையும் அழைத்துக் கொண்டுபோய் உனது தகப்பனார் வீட்டில் விட்டுவிட்டு வருகிறேன் நீ இங்கேயே இரு; நான் வெகு சீக்கிரமாக வருகிறேன்" என்றான். இவ்விசம் சொன்னவுடன் தேவமதி, அப்படியே சரி என்று சொன்னாள்.

பின் பங்கஜலோசனன் தன் மனைவியைத் தன் வீட்டில் வைத்துவிட்டு தன் குமாரன் பூபாலனையும் குமாரி பங்கஜவதனையையும் அழைத்துக் கொண்டு ஊரைவிட்டுப் புறப்பட்டுத் தன் மாமனார் ஊரை நோக்கிச்சென்றான். இம்மூவரும் மூன்று நாள் இப்படி நடந்து ஒரு பெரிய ஆரண்யத்தை யடைந்தனர். அவ்வாரண்யத்தில் பெருமணல் நிறைந்த, மைதானங்கள் இருந்தன. அம்மணல் வெயிலில் காய்ந்து கொதித்துக் கொண்டிருந்தது. சுற்றியிருந்த மரங்கள் பல பட்டுப்போனவை போகப் பாக்கியிருந்தவை இலைகள் உதிர்ந்து பசுமையின்றி வதங்கிப்போயிருந்தன. இவ்வாறு பயங்கரமான பாழும் பிரதேசத்தில் அவ்விரு பாலகர்களுக்கும் பொறுக்கமுடியாத தாகம் உண்டாயிற்று. பங்கஜலோசனன் அவ்விரு பாலர்களையும் அங்கு ஓரிடத்தில் உட்காரவைத்து நீரைத் தேடிக்கொண்டு நெடுந்தூரம் சென்றான். அவ்வமயம் பில்லர்கள் (Bhils) என்னும் வேடர்களின் அரசனாகிய கேஸரிதம்ஷ்டிரன் (சிங்கப்பல்லன்) என்பவன் ஏதோ ஒரு காரியமாகச் சென்று பரிவாரங்களுடன் திரும்பி வரும்பொழுது, தற்செயலாய்ப் பங்கஜலோசனனைப் பார்த்து, "ஆ! எதைத் தேடிக்கொண்டு இவ்வாறு திரிகின்றீர்" என்று கேட்க, பங்கஜலோசனன் "ஜலத்தைத் தேடிக்கொண்டு திரிகின்றேன்" என்றான். அப்பொழுது அப்பில்லராஜன், தன் பரிவாரங்களுக்கு ஜாடை காட்டி "இவ்வந்தணனை அழைத்துப்போய் ஜலமிருக்குமிடத்தில்விடுங்கள்" என்றான். அவர்கள் அதைக் கேட்டு, அவன் எண்ணத்தை அறிந்துகொண்டு நிர்த்தோஷியான பங்கஜலோசனனைச் சிறைபிடித்துத் தங்கள் ஊருக்குக் கொண்டுபோனார்கள். பின் பங்கஜலோசனன் காளிதேவிக்குத் தன்னைப் பலிகொடுக்க அழைத்துப் போகிறார்கள் என்பதை யறிந்து, வனத்தில் தான் விட்டுவந்த இரண்டு குழந்தைகளையும் நினைத்துத் துக்கித்தான், "ஐயோ குழந்தாய்! பூபாலா! பெண்ணே! பங்கஜவதனே! உங்களிருவரையும் நிராதரவாய்கானகத்தில் விட்டுவந்தேனே புலி கரடிகளுக்கு இரையாக்கினேனே! என்னை இங்கே கள்வர் கொன்றுவிடப் போகிறார்களே? எனக்கு ஒருவரும் கதியில்லையே? அந்தோ தெய்வமே! என்ன செய்வேன்" என்று புலம்பி விண்மீதுறும் சுடரைப் பார்த்தான். பார்த்ததும், விசனத்தை விட்டு அதிக ஆனந்தமடைந்து, நாம் சூரியனைச் சரணமடைந்தால் எவ்வாற்றானும் நம்மைக் காப்பார். என்று எண்ணி, "ஓ ஆதித்தா! சூரிய நாராயணா! நான் உம்மை நமஸ்கரிக்கின்றேன். நீர் பஹிராகாசத்திலும் அந்தகாராகாசத்திலும் சஞ்சரிக்கின்றீர்! நீர் தேஜோரூபியாயிருக்கிறீர். வெளியிருட்டு உள்ளிருட்டு இரண்டையும் நாசமாக்குகிறீர். நீர் மஹா விஷ்ணு ரூபியா யிருக்கிறீர், நீரே சிவபெருமான்! நீர் மூவுலகத்திலும் வியாபித்திருக்கிறீர். நீர் கலியாணத்திற்கு இருப்பிடமா யிருக்கிறீர். உறக்க நிலையிலிருக்கும் உலகை யெழுப்புகிறீர் தாமே பிரஜாபதியா யிருக்கிறீர்! இரவில் சந்திரனையும் அக்னியையும் பிரகாசிக்கச்செய்ய அவைகளிடம் அன்பு கூர்ந்து தாம் தமது தேஜஸை விட்டு மறைந்துவிடுகிறீர்? ஓ! சூரிய பகவானே; பின் நீர் உதித்தவுடன் அரக்கர்கள் ஓடிப்போகிறார்கள்; திருடர்கள் வல்லமை சித்திப்பதில்லை; குணவான்கள் களிக்கிறார்கள். மூவுலகொளியே! நான் தம்மைத் தஞ்சமென்றடைகின்றேன். எனது இன்னலென்னும் இருளை நீக்கி என்மீது கிருபை செய்யவேண்டும்." என்று வேண்டிக் கொண்டான். இவ்விதம் பங்கஜலோசனன் பூரண பக்தியுடன் கதிரவனை துதிக்க, ஆகாசவாணியானவள் "பங்கஜலோசன? எனக்கு உன்னிடம் சந்தோஷமுண்டா யிருக்கிறது. உனக்குத் தீங்கொன்றும் நேரிடாது. எனது கிருபையால் நீ உனது மனைவி மக்களுடன் மீண்டும் சேருவாய்" என்று சொன்னாள். இதனைக் கேட்ட பங்கஜலோசனன் மனவிசா

ரம் நீங்கி, ஸ்வஸ்த சித்தனாயிருந்தான் பின்னர் பில்லர்கள் அவனுக்கு ஸ்நானஞ்செய்வித்துப் போஜனமும் செய்வித்தார்கள்.

இஃது இவ்வாறிருக்க, வனத்தில் என்ன நடந்ததென்பதைக் கவனிப்போம். வனத்திலுட்கார்ந்த சகோதர சகோதரிக ளிருவரும் வெகுநேரம் வரையில் தப்பனார் வழியைப் பார்த்துக்கொண் டிருந்து, அவர் வாராதல் ஏதோ கேடு நேரிட்டதென்று அழத் தொடங்கினர். அப்பொழுது அவ்வழியாய்ப் போய்க்கொண்டிருந்த வியாபாரிகளின் தலைவனை சூடாதான் என்னும் வாணிபன், அக்குழந்தைகள் அருகே வந்து "இங்கே ஏன் நீங்கள் ஒண்டியாயிருக்கிறீர்கள்" என்று கேட்டான். குழந்தைகள் நடந்ததையெல்லாம் சொல்ல, வாணிபன் கருணைகூர்ந்து அண்ணன் தங்கையிருவரையும் தன்னூரில் தன் வீட்டுக்கு அழைத்துக் கொண்டுபோய், அச்சிறுவர்களைத்தன் மக்களைப்போல் வளர்த்து வந்தான். பூபாலன் அவ்வைசியன் வீட்டி லிருந்துகொண்டு இளவயதிலேயே அக்கினியில் ஹோமம் செய்தல் முதலிய அக்கினி காரியங்கள் செய்யத் தொடங்கினான். ஒருநாள் தேவபுரத்து அரசனாகிய தேவதர்மன் என்பவனுடைய மந்திரி அரசன் காரியமாக அவ்வழியாய்ப் போகையில் அவ்வியாபாரி வீட்டுக்கு வந்தான். அம் மந்திரி உயர்குலத்து உதித்த பிராமணன். அவனுக்கு ஆதிசேஷன் என்று பெயர். அவன் இந்த வியாபாரிக்கு வேண்டியவன் ஆதலால், யானை, குதிரை காலாட்படையோடு இவ் வியாபாரி வீட்டில் இறங்கினான். அங்கு பூரண தேஜஸோடு கூடியவனும், ஜபத்தில் வைசுவதேவத்திலும் ஆழ்ந்தமனதையுடையவனுமான பூபாலனைப் பார்த்து: "நீயார்என்று வினவி, அவ்வண்ணன் தங்கை யிருவரும் தன்னினத்தைச் சேர்ந்தவர்களென்று அறிந்து, தனக்குக் குழந்தைகளில்லாமையால் அச்சிறுவன் சிறுமி இருவரையும் அவ்வர்த்தகனிடம் கேட்டுத் தன்னூருக்கு அழைத்துக்கொண்டுபோய், கல்வி கேள்விகளாலும் செல்வத்தாலும் விளங்கும் தன் மாளிகையில் பூபாலனைத் தனது புத்திரனாக வைத்துவளர்க்கத் தொடங்கினான்.

கானவர்களால் சிறைபிடிக்கப்பட்டு விடுதலை பெறுமாறு கதிரவனை வணங்கிக் கொண்டிருந்த பங்கஜலோசனன்கதி என்ன ஆயிற்றென்று பார்ப்போம். அவன் சிறையிலிடப்பட்டுச் சிலநாள் சென்றபின், கேஸரிதம்ஷ்டிரன் பங்கயலோசனனிடம் சென்று 'ஓ? இருபிறப்பாளா? சூரியதேவன் என் கனவில் வந்து பிராமணனைக் கொல்லாதே; அவனுக்கு வேண்டிய உபசாரஞ்செய் என்று கட்டளையிட்டிருக்கிறார். ஆகையால் எழுந்திருந்து உமக்கு இஷ்டமான இடத்திற்குச் செல்லலாம்" என்று சொல்லி அவனைச் சிறையிலிருந்து விடுவித்து, அவனுக்கு மரியாதை செய்து, முத்து கஸ்தூரி, இவைகளைக் கொடுத்து, முன் அவ்வந்தணன் அகப்பட்ட காட்டில் கொண்டுபோய் விடும்படி இரண்டு பில்லர்களை அனுப்பினான்: இவ்வாறு சங்கடத்திலிருந்து விடுதலை பெற்ற பங்கஜலோசனன் அவ்வனத்தில் தன் பிள்ளைகளைத் தேடத்தொடங்கினான். எங்குதேடியும் அவர்கள் அடையாளம், கிடையாமையால் இன்னும் அதிகமாய் அலையத் தொடங்கினான். அலைந்து அலைந்து அவ்வந்தணன் கடற்கரையிலுள்ள கமலபுரம் என்னும் நகரத்தை அடைந்தான். அந்நகரில் ஒரு பிராமணன் வீட்டில் அதிதியாக இறங்கிப் போஜனமான பின் பேசிக்கொண்டிருக்கையில் பங்கஜலோசனன் தன் கதையைக் கூறினான். அப்பொழுது அவ்வீட்டு எஜமானன் "ஐயா, சில நாளுக்கு முன் இந்த ஊரில் சூடாதான் என்னும் ஒரு வியாபாரி வந்

திருந்தான். அவன் தனக்குக் காட்டில் கிடைத்ததென்று ஒரு பிராமண சிறுவனையும், அவன் தங்கையையும் அழைத்துக்கொண்டு வந்திருந்தான். அவர்கள் மிகவும் அழகாயிருந்தார்கள் அவன் இவ்விடமிருந்து நாரிகேள தீவுக்குச் சென்றான். அச்சிறுவன் பெயர் என்னிடம் சொல்லவில்லை என்றான். அதைக் கேட்டு அவர் அவ்விருவரும் தனது குழந்தைகள் தானென்று நிச்சயித்து, அவ்விரவைக் கமலபுரத்திலேயே போக்கி மறுநாட் காலையில் நாரிகேள தீவுக்குச் செல்பவனாகி விஷ்ணுவர்மா என்னும் அவ்வியாபாரியைத் தேடிப்பிடித்து, அவனைச் சிநேகஞ்செய்து புத்திரவாஞ்சையால் அவனுடன் கப்பலேறி நாரிகேள் தீவுக்குச்சென்று அங்கேயிருக்கும் வாணிபர்களைச் சூடாதரன் இங்கே வந்திருக்கிறானா?" என்று விசாரிக்க, அதற்கு அவர்கள் "அவன் இங்கே வந்திருந்ததுண்டு அவனுக்கு இரண்டு சிறுவர் அகப்பட்டிருக்கிறார்கள். ஆனால் இப்பொழுது அவன் அவ்விருவரையும் அழைத்துக்கொண்டு கடாகத் தீவுக்குப் போயிருக்கிறான்" என்றார்கள். அதைக்கேட்ட அந்தணன் கடாகத்தீவிற்குச் செல்வோனாகிய கிருஷ்ண வர்மாவிடம் சிநேகஞ்செய்து கொண்டு அவனுடன் கப்பலேறிக் கடாகத்தீவிற்குச் சென்றான். அவ்விடம் விசாரித்தபொழுது அவன் கர்ப்பூரத்தீவிற்குச் சென்றிருப்பதாகத் தெரிந்தது. இப்படி அதிலிருந்து ஸ்வர்ணத் தீவுக்கும் அதிலிருந்து சிங்களத்தீவிற்கும் அவ்விடமிருந்து அவனது இருப்பிடமாகிய சித்திரகூடம் சென்று விட்டதாகக் கேள்விப்பட்டு அவ்விடமிருந்து அபூர்தசாபியென்னும் தன் சொந்தக் கப்பலில் சித்திர கூடத்திற்குச் செல்லும் கோடீஸ்வரன் என்னும் வர்த்தகனோடு சித்திரகூடம் சென்றான். குழந்தைகளைத் தேடிப் பிடிப்பதில் பிடிவாதத்தோடு கூடிய அப்பிராமணன் அவ்வூரில் போய்ச்சேர்ந்து சூடாதரனிடம் சகல விருத்தாந்தத்தையும் சொல்லச் சூடாதரன், அவ்வந்தணன் வார்த்தையைக் கேட்டுப் பிராமணனது துக்கத்தையறிந்து, தனக்குக் கிடைத்த சிறுவர் இருவருக்குப் பதிலாக வேறு இரு சிறுவரைக் காட்டினான். ஆனால் அந்தணன் ஆசைக்கு அஸ்தமனம் ஏற்பட்டுவிட்டது. பங்கஜலோசனன் அவ்விரு பாலர்களையும் பார்க்கும்பொழுது அவர்கள் அன்னியர் குழந்தைகள் என்று தெரிந்தது. இதைப் பார்த்துப் பிராமணன் சோகமேலிட்டு "ஐயோ! தெய்வமே! என்விதியே! நான் அலையாத இடமெல்லாம் அலைந்தேனே, மிகுந்த கஷ்டத்தைப் பொறுத்தேனே! பசிதாகத்தைப் பார்க்கவில்லையே! எனக்கு எனது மகனும் அகப்படவில்லையே! மகளும் அகப்படவில்லையே! அயோக்கியனான அரசன் முன்பு ஆசைகாட்டிப் பின்பு அதை ஈடேற்றாமல் விட்டுவிடுவது போல என் பிராரப்தமானது, எனக்கு ஆசை காட்டி என்னை மோசஞ் செய்துவிட்டது போக்கிரியான ஒரு பிரபு வீணாக ஒரு மனிதனை இங்குமங்கும் அலைக்கழிப்பதுபோல என் துரதிருஷ்டமானது என்னை இங்குமங்கும் இழுத்தடித்து என்னை வெகுதூரம் அலையவைத்துவிட்டது" என்றான்.

இவ்வாறு பிராமணன் துயரப்படுவதைப் பார்த்துத் தனவானாகிய சூடாதரன் சமாதானம் சொன்னான். அதைக்கேட்டுப் பங்கஜலோசனன் வியாபாரியைப் பார்த்து: வியாபாரியே நான் என்ன செய்வேன்! புத்திரனைக் காணாமல் எனது மனம் எங்கும்செல்லவில்லையே! என் மனதில் குழந்தை எங்கேபோனானோ என்று அநேகவிதமான எண்ணங்கள் உண்டாகின்றன. இப்படி நான் எப்பொழுதும் விசாரப்பட்டுக்கொண்டிருக்கிறேன். எனக்கு எப்படித் தைரியமுண்டாகப் போகிறது; ஆனால் அதிருஷ்டத்தின் மஹிமை அதிசயகரமானது என்பது என

க்குத்தெரியும். நான் ஒரு வருஷமாக இப்பூமண்டலத்தில் அலைந்து திரிந்து குழந்தைகளைத் தேடுகிறேன். அவர்கள் எனக்குக் கிடைக்காவிட்டால் நான் கங்காநதி தீரத்தில் தவம்செய்து பிராணனை விட்டுவிடுகிறேன் என்று சொன்னான். இப்படிச் சொல்லவே அங்கே உட்கார்ந்திருந்த ஒரு ஞானி "ஓ அந்தணரே! நீர் நாராயணி தேவியின் அருளால் உமது மக்களை மீண்டும் காணப்போகிறீர்" என்றார். இதைக்கேட்டதும் பங்கஜலோசனனுக்குச் சூரியனுடைய அநுக்கிரகம் நினைவு வந்து திரும்ப மனதில் ஆசை முளைக்கவே அவன் மனது சமாதானம் அடைந்தது. சூடாதான் அவனுக்கு அதிதி உபசாரம் செய்ய அதை ஏற்றுக்கொண்டு அந்தணன் அவ்வூரைக்கடந்து அப்புறம் போனான்.

அப்பால் பங்கஜலோசனன், கிராமங்கள், பட்டணங்கள், தேசங்கள் இவைகளில் தன் மக்களைத் தேடிக்கொண்டு திரிந்து ஒருநாள் சாயங்காலத்தில், கதிரவன் மேற்றிசையில் மறையும்பொழுது, விருக்ஷங்கள் ஓங்கி அடர்ந்து வளர்ந்து நிறைந்திருக்கும் ஒரு வனத்தை யடைந்து அவ்வனத்திலேயே இரவில் வாஸஞ்செய்வதாகக் கனிகளைப் புசித்து, நீருந்தி, சிங்கம் முதலிய கொடிய விலங்குகளுக்கஞ்சி ஒரு மாத்தின்மேலேறி உட்கார்ந்தான். இரவில் அவனுக்கு தூக்கம் வரவில்லை. ஆதலின் விழித்துக்கொண்டேயிருந்தான். பாதிராத்திரியில் அவன் உட்கார்ந்திருந்த மரத்தின் கீழே தேவிகள் அநேகர் கூடினார்கள். இத்தேவிக் கூட்டத்தில் நாராயணி முக்கிய தேவியாயிருந்தாள். அத்தேவிகள் தங்கள் தங்களுக்கு ஏற்றவைகளாய்க் கிடைத்த காணிக்கைகளை ஒன்றாய்ச்சேர்த்துத் தேவநாதனாகிய பைரவன் வரும் வழியைப் பார்த்துக்கொண்டிருந்தனர். சிறிது நேரத்திற்கெல்லாம் பைரவநாதன் வந்துசேர்ந்தார். தேவிகள் யாவரும் பைரவனைப் பூசித்துத் தங்களுக்குக் கிடைத்த காணிக்கைகளை அர்ப்பணம் செய்து உபசரித்தனர். பின் பைரவநாதர் சிறிதுநேரம் நர்த்தனம் செய்து உல்லாசமாய் இருக்கத்தொடங்கினார். இவற்றையெல்லாம் மரத்தின்மேலிருந்த பங்கஜலோசனன் பார்த்துக்கொண்டிருந்தான். இப்படி யிருக்கும் பொழுது நாராயணியின் தாதி பங்கஜலோசனனைப் பார்த்தாள். பார்த்தவுடன் அவளுக்கு அவனிடம் மோகமுண்டாயிற்று. நாரயணிதேவி இதையறிந்து அதை மனத்தில் மறைத்து வைத்துக்கொண்டு, மரத்திலிருக்கும் பங்கஜலோசனனைக் கூப்பிட்டாள், அவன் இறங்கி நாராயணியிடம் வந்தான்; நாராயணி இருவரையும் கூப்பிட்டு "உங்கள் இருவருக்குள் ஒருவரிடத்தில் ஒருவருக்கு ஆசையுண்டாயிருக்கிறதல்லவா" என்று கேட்க, அவ்விருவரும், "தாயே ஒருவரிடத்தில் ஒருவருக்கு அநுராகம் உண்டாயிருப்பது உண்மைதான்" என்றனர்.

அதைக்கேட்ட நாராயணி கோபந்தணிந்து நீங்கள் உண்மை பேசியதால் நான் உங்களிடம் சந்தோஷமடைகிறேன். ஆனதால் உங்களைச் சபிக்கவில்லை என்று கூறிப் பங்கஜலோசனனை நோக்கி உனக்கு இந்தத் தாசியைக் கொடுக்கிறேன். நீங்கள் இருவரும் சுகமா யிருங்கள் என்றாள். அதனைக் கேட்டு பங்கஜலோசனன் தாசியை நோக்கி:—

"இந்த வுடலுனம் ஐம்பொறி யின்னுயிர் யாவுமணஞ் செய்யும், அந்நன் ஞளிலென்னில் லவட்சன்போடளித்தனன் யான்பொதுப், பைந்தொடியே யுனைச் சேர்ந்திடப்பாரிலெனக் குடல் வேறிலை, சீவனும் வேறிலை செல்லுவையே.',

நான் பரஸ்திரீயை நினைக்காமல் என் மனதை அடக்க வேண்டியது தான் எனது கடமைகளில் முதன்மை பற்றியதாகும். நான் உன்னை ஸ்பரிசிக்கமாட்டேன் என்றான். இவ்

வாறு அந்தணன் கூறியதைக் கேட்டு நாராயணிதேவி உன்பேரில்சந்தோஷமுண்டாயிருக்கிறது. உனக்கு சீக்கிரம் உனது குழந்தைகள் அகப்படுவார்கள். விஷ முதலியவைகளைப் பரிகாரஞ் செய்யும் நீலோற்பல மலரை உனக்குக் கொடுக்கிறேன் இதை வாங்கிக்கொள். இது ஒருநாளும் வாடாது என்று சொல்லி, பங்கஜலோசனனுக்கு ஒரு கருநெய்தல் மலரைக் கொடுத்துத் தாசியுடன் மறைந்துவிட்டனள்.

அவ்வந்தணன் தேவியிடமிருந்து கருநெய்தல் மலரைப் பெற்றுக் கொண்டு இரவில் மீந்த பொழுதை அங்கேயே போக்கி உதயமானதும் பிரயாணஞ் செய்யப் புறப்பட்டான். வெகு தூரம் நடந்து தன் குமாரன் பூபாலனும் குமாரி பங்கஜவதனையும் இருக்கும் தேவபுரத்துக்கு வந்து சேர்ந்து, அங்கே ஆதிசேஷன் அதிதிகளை ஆதரிப்பவர் என்று தெரிந்து கொண்டு அவர் வீட்டு வாசலில் வேதபாராயணம் செய்துகொண்டிருந்தார். பிராமணன் வந்திருக்கும் செய்தியை அறிவித்த வாசற்காப்போன் மூலமாய் உள்ளே வரும்படி மந்திரி செய்த உத்தரவை யறிந்து உள்ளே போகவே மந்திரியால் போஜனம் செய்ய வேண்டுமென்று அழைக்கப்பட்டார். பின்பு அவர் அவ்வூரில் அனந்தன் மடுவென்று ஒரு புண்ணிய தீர்த்த மிருப்பதாகக் கேள்விப்பட்டு அங்கே ஸ்நானம் செய்யச் சென்றார். தீர்த்தமாடித் திரும்புகையில் ஊர் முழுவதும் "ஐயோ! ஐயோ! குடி முழுகிப்போயிற்றே?" என்று ஜனங்கள் அலறுவதைக் கேட்டு அஃதென்னவென்று விசாரித்தார். அதற்கு ஜனங்கள் "இந்த ஊரில் பூபாலனென்று ஒரு பிராமண வாலிபனிருக்கிறான். அவனையும் அவன் தங்கையையும் கூடார்தான் என்னும் வாணிபன் வனத்தி லிருந்துகொண்டு வந்திருக்தான். அமைச்சனாகிய ஆதிசேஷன் அவ்வைசியனைக் கேட்டு அழைத்துக் கொண்டு வந்து தனக்கு புத்திரபாக்கியம் கிடையாததால் அச்சிறுவனைத் தன் மகனாக வைத்து வளர்த்துவந்தான். அந்த நல்ல ஒப்பயன் மஹாராஜா தாரவர்மாவிற்கும் இராஜ்ய முழுமைக்குமே பிரிய புத்திரனானான். அவனை இன்று ஒரு கருநாகம் கடித்துவிட்டது. அதனால் ஊர் முழுவதும் இப்படித் தத்தளிக்கிறது" என்றனர். அதனைக்கேட்டு அவன் அவ்விருவரும் தனது மக்கள்தானென்று அறிந்து பங்கஜலோசனன் பறந்துகொண்டு, மந்திரியகம் வந்து சேர்ந்தான். வந்து பார்க்கையில் அப் பையனைச் சுற்றி யாவரும் உட்காந்திருந்தனர். பத்மலோசனன் அப் பையனைப் பார்த்து தனது தனயன்தானென்று தெரிந்துகொண்டு நாராயணி தேவி தனக்குக் கொடுத்திருந்த கருநெய்தல் மலரை நாசித் துவாரத்தில் பிடிக்கவே, அம்மலரின் வாசனையால் விஷம் இறங்கிவிட்டது. அவ்வாலிபன் தூங்கி எழுந்திருந்தாற்போல் எழுந்திருந்து உட்கார்ந்தான். இப்படி அவன் எழுந்துட்கார்ந்ததைக் கண்டு அரசனும் அந்நகரத்தாரும் அன்றைய தினத்தை ஒரு உற்சவமாகக் கொண்டாடினர். ஆதிசேஷனும் அரசனும் பிரஜைகளும்பங்கஜலோசனனை தேவரம்சமென்று நினைத்து அவருக்கும் மகா உபசாரஞ் செய்தனர். இவ்வாறு புகழடைந்த பங்கஜலோசனன் தன் மகனையும் மகளையும் பார்த்துக் களிப்புற்று மந்திரி மாளிகையிலேயே இருந்தான். இம்மூவரும் ஒருவரை யொருவர் அடையாளங் கண்டுகொண்டாலும், அந்த சமாச்சாரத்தை வெளியிடாது மௌனமாய் இருந்தார்கள். ஏனெனில் தங்கள் காரியத்தை நிறைவேற்றிக் கொள்ளவேண்டு மென்ற உத்தேசத்தை யுடைய மதியூகிகள், சமயத்தில் தவிர மற்றைய காலத்தில் தங்கள் சுய ரூபத்தைக்கூட காட்ட மாட்டார்கள்.

அங்கரத்தாசனாகிய தாரவர்மா பூபாலன் குணத்தைக் கண்டு மகிழ்ந்து தனக்கு ஒரே குழந்தையாகிய ரூபாவதியை அவனுக்கு விவாகஞ் செய்து கொடுத்து தன் ராஜ்யத்தில் பாதியை அவனுக்கு சீராக் கொடுத்து முழு ராஜ்யத்தின் விசாரணையையும் அவனிடமே ஒப்புவித்தான். மஹீபாலன் இவ்வாறு இராஜ்யத்தைப் பெற்ற பிறகு பத்மலோசனன் தன் விருத்தாந்தத்தை வெளியிட்டு தன் பெண்ணுக்குத் தகுந்த விடத்தில் மணஞ் செய்வித்தான்.

ஒரு நாள் பத்மலோசனன் தன் தனயனை நோக்கி: குழந்தாய்! இப்பொழுது நாம் உன் தாயாரைப் பார்க்க ஊருக்குப் போக வேண்டும். உன் அன்னை உன்னையும் என்னையும் விட்டுப் பிரிந்து நெடுநாளாய் துக்கப்படுகிறாள். அவளுக்கு உனக்கு இராஜ்ஜியம் கிடைத்திருக்கும் சமாசாரம் தெரிந்தால் அவள் ஒருவேளை "என் மகன் மறந்துபோய்விட்டானல்லவா" என்று நினைத்துக் கோபித்து, உன்னைச் சபித்தால் நாம் என்ன செய்வது, பெற்றோர்கள் எந்தப் பிள்ளைகளைச் சபிக்கிறார்களோ, அவர்கள் முன்னுக்கு வருவதில்லை" என்று சொல்லிப் பெற்றோர்களைச் சேவித்தால் அச்சேவை, காமதேனுவைப் போலவும், கற்பக விருக்ஷத்தைப் போலவும், சிந்தாமணியைப் போலவும், மனோரதத்தை யீடேற்று மென்றும் சொல்லி அதற்கு உதாரணமாக தர்ம வியாசர் கதையைச் சொல்லவே, பூபாலன் தன் தாயைத் தேற்ற ஊருக்குப்போகச் சம்மதித்து, தன் தர்ம பிதாவாகிய ஆதிசேஷனிடம் தன் ஜனன தேசத்திற்குச் செல்ல வேண்டிய அவசியத்தைச் சொல்லி அவனி[illegible]வித்து விடை பெற்றுக் கொண்டு தன் தகப்பனாருடன் இரவில் புறப்பட்டு ஊர்வந்து சேர்ந்தான். வஸந்த காலமானது எப்படி தர்சனம் கொடுத்து குயில்களுக்கு ஆனந்த முண்டாகுகிறதோ, நாயகன் தன் தரிசனத்தைக்கொடுத்து நாயகிக்கு எப்படிச் சந்தோஷத்தை உண்டு டண்ணுகிறானோ, நல்ல அரசன் பஞ்சகாலத்தில் தரிசனம் கொடுத்து ஜனங்களுக்கு உணவளித்து எப்படி களிக்கச் செய்கிறானோ, அ[illegible]ப் போலத் தன் தாயாருக்குத் தரிசனம் கொடுத்து ஆனந்த முண்டாக்கினான். பத்மலோசனன் நடந்த விருத்தாந்தத்தை ஆதியோடந்தமாய்ச் சொல்ல இஷ்டமித்திரர்கள் யாவரும் கேட்டுச் சந்தோஷித்து பூபாலனைப் பெரிதும் புகழ்ந்து கொண்டாடினார்கள். பின் பூபாலன் தன் தாயாருடன் சிறிது காலம் வசித்திருந்தான்.

இவ்வாறு சில நாட் சென்றபின் பூபாலன் தன் பெற்றோர்களை அழைத்துக்கொண்டு தன் மாமனார் ஊராகிய தேவபுரம் வந்து சேர்ந்தான். பூர்ண சந்திரன் தன் தரிசனத்தால் சமுத்திரத்திலுள்ள ஜல லக்ஷ்மியை எவ்வாறு களிக்கச் செய்கின்றானோ, தாமரைப் பூக்களையும், சக்கரவாகப் பறவைகளையும், கதிரவன் எவ்வாறு களிக்கச் செய்கின்றானோ, சகோராக்ஷியை சந்திரன் எவ்வாறு சந்தோஷிக்கச் செய்கிறானோ, அவ்வாறு பூபாலன் ஜனங்களுக்கு தரிசனம் கொடுத்து களிக்கச் செய்து பெற்றோர்களும் தன்னுடன் வாழ, ரூபாவதியுடன் இன்பமாய் வாழ்ந்து கொண்டு இராஜ்ஜியத்தை நீதிவழுவாமல் பல்லாயிரமாண்டு பரிபாலனஞ் செய்து கொண்டிருந்தான். சுபமஸ்து முற்றும்.—பாரதி.

முற்றிற்று.

160925
சென்னை-600 008.
O31m21',N
(1'51)